# சரீரத்திற்கான யுத்தம்

**சர்வதேச அறுவடைநேர நிறுவனம்**

இப்பாடமானது **சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின்** செயல்திட்டங்களில் ஒரு பகுதியாக இருக்கின்றது. இத்திட்டம் விசுவாசிகள் தாக்கமுள்ள ஆவிக்குரிய அறுவடையை செய்யும்படியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள், வரிவசூலிப்பவர்கள் போன்றோருக்கு இயேசு கற்பித்து, அவர்களை மீள உருவாக்கும் கிறிஸ்தவர்களாக்கி, அவர்கள் வாழ்ந்த உலகத்தை சுவிஷேசத்தை ஆளுமையின் வல்லமையால் மாற்றியமைத்ததைப்போன்று உங்களுக்கும் கற்பிப்பதே இப்பயிற்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

பாடத்திட்டத்திலுள்ள பல பாடங்களில் இக்கையேடும் ஒன்றாகும். சுவிஷேச மயமாகுக்கும் இலக்கை நிறைவேற்ற, விசுவாசிகள் பெருக, பிரதிநிதிகளாக செயல்பட, ஆயத்தம் செய்யப்படவும் இப்பாடம் உதவும்.

© Harvestime International Institute

# பொருளடக்கம்


குழுவாக கற்பதற்கான ஆலோசனைகள் . . . . . . . 04
அறிமுகம் . . . . . . . . . . . 05
பாடத்தின் நோக்கங்கள் . . . . . . . . . . 08

**பகுதி ஒன்று: சரீரத்திற்கான யுத்தம்**

1. இராஜ்ஜியங்களிலுள்ள போராட்டம் . . . . . . . 10
2. போரிடுவதற்கான அழைப்பு . . . . . . . 23
3. யுத்தத்திற்கு முன்னர் . . . . . . . 30

**பகுதி இரண்டு: தாக்குதல்**

4. வியாதியிற்கான ஆதாரம் . . . . . . . . 39
5. வியாதியிற்கான காரணங்கள் . . . . . . . 47
6. வியாதியின் வகைகள் . . . . . . . . 55
7. வியாதியின் இறுதி நிலை . . . . . . . . 60

**பகுதி மூன்று: எதிர்தாக்குதல்**

8. வேதாகமத்தின் அடிப்படை குணமாக்குதல் . . . . 66
9. குணமாக்குதலின் நோக்கங்கள் . . . . . . . 99
10. குணமாக்குதலின் வரங்கள் . . . . . . . . 105

**பகுதி நான்கு: சவால்களை கைப்பற்றுதல்**

11. மனிதனின் பாரம்பரியங்கள் . . . . . . . . 114
12. மாம்சத்திலுள்ள முள் . . . . . . . . 127
13. பதிலளிக்கப்படாத கேள்விகள் . . . . . . . 134

**பகுதி ஐந்து: குணமாக்குதலுக்கான உபாயங்கள்**

15. குணமாக்குதலின் ஊழியம் . . . . . . . . 163
16. தொடர் குணமாக்கும் ஊழியம் . . . . . . . 172
17. எல்லையற்ற குணமாக்குதல் . . . . . . . 180

**பகுதி ஆறு: விடுதலைக்கான உபாயங்கள்**

17. சாத்தான் யாரை கட்டுவித்துள்ளான் . . . . . . 180
18. விடுதலைக்கான ஊழியம் . . . . . . . . 196
19. தொடர் விடுதலைக்கான ஊழியம். . . . . . . 209

**பகுதி ஏழு: இராஜ்ஜியத்தின் ஜீவியம்**

20. நல்ல போராட்ட வீரர்கள் . . . . . . . . 215

முடிவுரை . . . . . . . . . . 231

பிற்சேர்க்கை அ: ஓர் கண்டறியலுக்கான பகுப்பாய்வு . . . . . 233

பிற்சேர்க்கை ஆ: குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான வேதாகம அடிப்படை 238

பிற்சேர்க்கை இ: பகுப்பாய்வுக்கான அட்டவணை . . . . 269

சுய பரீட்சைக்கான விடைகள் . . . . . . . 271

# குழுவாக கற்பதற்கான ஆலோசனைகள்

## முதல் கூடுகையில்

**ஆரம்பம்:** ஜெபத்தோடும் அறிமுகத்தோடும் ஆரம்பியுங்கள். நன்கு அறிமுகமாகி மாணவர்களை பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தொடர்ந்து செயலாற்றகூடிய குழுவை நியமியுங்கள்:** கூட்டத்தை வழிநடத்துவது யார், நேரம், இடம், திகதி என்பற்றை முடிவு செய்யுங்கள்.

**துதியும் ஆராதனையும்:** உங்கள் பயிற்சியின் வேளையில் பரிசுத்த ஆவியானவர் பிரசன்னமாயிருக்க அவரை அழையுங்கள்.

**கையேடுகளை மாணவருக்கு பகிர்ந்தளித்தல்:** கையேட்டின் தலைப்பையும், முதல் நான்கைந்து பக்கங்களிலுள்ள குறிக்கோள்களையும் அறிமுகப்படுத்துங்கள்.

**முதலாவது ஒப்படை:** மாணவர்கள் இப்பாடத்தை ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட முறையில் வாசிக்கவும், அடுத்த கூடுகைக்கு முன்னால் சுயமாக பரீட்சை செய்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழு கூடுகையின் போது அதிகாரங்களை முடிக்கும் எண்ணிக்கையானது அதிகாரத்தின் நீளத்திலும், உள்ளடக்கத்திலும், குழுவின் இயலுமையிலும் தங்கியிருக்கும்.

## இரண்டாவதும் தொடரும் கூட்டங்களும்

**ஆரம்பம்:** ஜெபியுங்கள். வரவேற்ற பின்னர் புதிதாக வந்த மாணவர்களை பதிவு செய்த பின் கையேட்டை வழங்குங்கள். வரவை பதிவு செய்யுங்கள். துதி ஆராதனையை நடத்துங்கள்.

**மீட்டல்:** கடந்த வகுப்பில் கற்றவற்றை சுருக்கமாக முன் வையுங்கள்.

**பாடம்:** அதிகாரத்திலுள்ள **தடித்த எழுத்துகளிலுள்ள தலைப்புகளின்** சகல பகுதிகளையும் கலந்து உரையாடுங்கள். மாணவருக்கு தாங்கள் கற்றுக்கொண்ட பகுதிகளில் கேள்விகள் அல்லது விமர்சனங்கள் இருப்பின் கூறச் சொல்லவும். ஜீவியத்திலும், ஊழியத்திலும் கற்றவற்றை பிரயோகிக்கும்படி மாணவரை கேட்டுக் கொள்ளுங்கள்.

**சுயபரீட்சை:** சுய பரீட்சையை செய்திருப்பின் மீட்டல் செய்யுங்கள். (சுய பரீட்சைக்கான பதில்கள் கையேட்டில் இருக்க வேண்டியதில்லை என நீங்கள் தீர்மானித்தால் கடைசி பக்கங்களிலுள்ள அவற்றை அகற்றிவிடலாம்)

**மேலதிக படிப்பினைக்கு:** இத்திட்டத்தை குழுவாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ செய்யலாம்.

**இறுதிப்பரீட்சை:** உங்கள் குழுவினர் மதிப்பெண்களை பெறுவதற்காக கற்பார்களாயின், இப்பாடத் திற்கான கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம். அதை பிரதிபண்ணி, மாணவரிடம் பரீட்சை எழுத கொடுத்து கண்காணிக்கவும்.

# அறிமுகம்

ஆரம்ப கால சபையானது போராட்டத்தின் விதிமுறையை அதன் ஆவிக்குரிய அனுபவத்திற்கூடாக காட்டியது. இராணுவ பதங்கள் புதிய ஏற்பாட்டினூடாக உபயோகிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய கவசம் பாதுகாப்பினூடாக பார்க்கப்பட்டது. தேவனுடைய வசனமானது பட்டயத்தினுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. சாத்தானுடைய தாக்குதல் உக்கிரமான தாக்குதல் என்று அழைக்கப்படுகின்றது. விசுவாசமே “நல்ல போராட்டம்” என்பதோடு, “நல்ல போராட்டம் போராடும்படியாக” விசுவாசிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. இவைகள் கடுமையான ஆவிக்குரிய போராட்டத்துடன் சம்பந்தப்பட்டவை என ஆதி சபைகள் அறிந்திருந்தன.

அறிவு இல்லாத காரணத்தினால் தேவனுடைய மக்கள் அழிக்கப்பட்டார்கள் என வேதாகமம் குறிப்பிடுகின்றது. (ஓசியா 4:6). இந்த காட்புலனாக போராட்டத்தில் ஓர் பகுதியாக அறிவு இன்மையாலே விசுவாசிகள் தோற்கடிக்கப்பட்டார்கள். இன்றைய உலகத்தில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இது தேசங்கள், ஜாதிகள் அல்லது அரசாங்க தலைவர்களுக்கான மோதல் அல்ல. இது கிளர்ச்சியோ அல்லது ஆட்சி கவிழ்ப்போ அல்ல. இது ஆவிக்குரிய உலகத்தில் காட்புலனாக முக்கியமான போராட்டமாகும்.

யுத்தமே கிறிஸ்தவர்களின் வாழ்க்கையாகும். எவ்வளவு சீக்கிரமாக நாம் அறிந்து, அதற்கு ஆயத்தப் படுகின்றோமோ, அவ்வளவு சீக்கிரம் நாம் வெற்றியை அனுபவிப்போம். இந்த காட்புலனாக யுத்தத்தின் முக்கிய அம்சம் மனிதனின் ஆவி ஆத்துமாவில் குறிவைக்கின்றது. சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பாடமான “ஆவிக்குரிய போர்வியூகங்கள்: ஆவிக்குரிய போராட்டத்திற்கான கையேடு” இந்த காட்புலனாக யுத்தத்தின் பகுதியில் கவனம் செலுத்தும்.

ஆனால் இந்த போராட்டமானது பௌதீக ரீதியில் இன்னொரு பகுதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நாம் அதை இந்த பாடத்தில் “சரீரத்திற்கான யுத்தம்” என அழைக்கின்றோம். சாத்தான் விசுவாசிகளின் பௌதீக உடல்களை குறி வைக்கின்றான், ஏனென்றால் பலவீனமான அல்லது பலமற்ற வீரர்களால் அவனுடைய ராஜ்ஜியத்திற்கு எதிராக வல்லமையாக யுத்தம் செய்ய முடியாது என அவன் அறிந்துள்ளான்.

“அன்றியும் ஒரு ராஜா மற்றொரு ராஜாவோடே யுத்தஞ்செய்யப் போகிறபோது, தன்மேல் இருபதினாயிரம் சேவகரோடே வருகிற அவனைத் தான் பதினாயிரம் சேவகரைக்கொண்டு எதிர்க்கக்கூடுமோ கூடாதோ என்று முன்பு உட்கார்ந்து ஆலோசனைபண்ணாமலிருப்பானோ?” என லூக்கா 14:31 கூறுகின்றது. யாரும் தன்னுடைய வளங்களை கவனமாக பரீட்சைசெய்யாமலும், யுத்த உபாயங்களை விருத்தி செய்யாமலும் போராட்டத்திற்குள் பிரவேசிக்கலாகாது.

நாம் இந்த பாடத்தில் உங்கள் சரீரத்திற்கான போராட்டமான சாத்தானுக்கெதிரான யுத்தத்தில் வெல்ல தேவையான உபாயங்களை கவனமாக கணக்கிடுதல் செய்கின்றோம். நீங்கள் உங்களுடைய பௌதீக உடலுக்காக யுத்தம் செய்வதற்கும், தேவனுடைய சேனையில் காயம்பட்ட மற்ற வீரர்களுக்கு இந்த உண்மையை குறித்து ஊழியம் செய்யவும் கற்பீர்கள்.

# கையேடு

இந்த கையேடானது ஏழு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன:

**பகுதி ஒன்று: சரீரத்திற்கான யுத்தமானது** தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும், சாத்தானுடைய இராஜ்ஜியத்திற்கும் இடையிலான காட்புலனாக யுத்தத்தை குறித்து கலந்துரையாடும். இது போராட்டத்திற்கான ஓர் அழைப்பையும், போராட்டத்தின் ஆரம்பகட்ட ஆயத்தத்தை உருவாக்கலையும் கொண்டிருக்கும்.

**பகுதி இரண்டு: தாக்குதலானது** ஆதாரம், காரணம், வகைகள், வியாதியின் இறுதி விளைவுகள் பற்றி கலந்துரையாடும்.

**பகுதி மூன்று: எதிர்தாக்குதலானது** வேதாகமத்தின் அடிப்படை குணமாக்குதலையும், குணமாக்குதலின் குறிக்கோளையும், குணமாக்குதலின் வரங்களையும் நீங்கள் எதிரியை தோற் கடிக்க விளங்கிப்பெறும் உபாயங்களை கொண்டிருக்கும்.

**பகுதி நான்கு: சவால்களை கைப்பற்றுதலானது** பதிலளிக்கப்படாத கேள்விகளுக்கும், பவுலின் சரீரத்திலிருந்த முள்ளிற்கும், மனிதனின் பாரம்பரியங்களை உள்ளடக்கிய விடுதலையின் ஊழியத்திற் கும், குணமாக்குதலின் கடினமான சவால்களிற்கும் சம்பந்தப்படும்.

**பகுதி ஐந்து: குணமாக்குதலுக்கான உபாயங்களானது** இவை எல்லையற்ற குணமாக்குதல், தொடர் குணமாக்குதல் ஊழியம், குணமாக்குதலின் ஊழிய உபாயங்கள் என்பவற்றோடு உங்களை சம்பந்-தப்படும்.

**பகுதி ஆறு: விடுதலைக்கான உபாயங்களானது** "சாத்தான் யாரை கட்டுவித்துள்ளான்", "விடுதலையின் ஊழியங்கள்", "தொடர் விடுதலையின் ஊழியம்" ஆகிய பாடத்திலுள்ள விடுதலை ஊழியத்தை குறித்து கவனம் செலுத்தும்.

**பகுதி ஏழு: இராஜ்ஜியத்தின் ஜீவியமானது** சரீரத்திலும், ஆத்துமாவிலும், ஆவியிலும் பூரணப்பட்ட போராட்டத்திற்கு ஆயத்தமாகி, நல்ல போராட்டவீரராகி தேவனுடைய வார்த்தையினால் தடுத்தல் மற்றும் குணமாக்குவதற்கான இரண்டையும் செய்வதை கொண்டிருக்கும்.

**பிற்சேர்க்கையானது** இந்த கையேட்டின் மேலதிக வேதாகம குணமாக்கலின் படிப்பினையும், விடுதலை ஊழியத்தையும் வேதாகம பாடத்தின் மேலதிக பாடத்தை செயல்படுத்துவதற்கான ஆய்வு அட்டவணையும் கொண்டிருக்கும். நீங்கள் எதிர்பார்க்கும்போது அல்லது குணமாக்கல் ஊழியத்தின் போது உபயோகிப்பதற்கான கண்டறியும் மதிப்பாய்வினையும் இது கொண்டிருக்கும்.

# பாடங்கள்

இந்த கையேட்டிலுள்ள ஒவ்வொரு பாடங்களும் கீழ்கண்டவாறு அமையப்பெற்றிருக்கும்:

**குறிக்கோள்கள்:** நீங்கள் பாடங்களை கற்பதன் மூலம் அடையும் குறிக்கோள்கள் இவைகளாகும்.

**குணமாக்குதலின் வாக்குத்தத்ததை உரிமைபெறல்:** இது தேவனுடைய வார்த்தையை நீங்கள் மனனஞ் செய்து உங்கள் வாழ்வில் அதை உரிமைபெறும் விசேட குணமாக்குதலின் வாக்குத்தத்தமாகும்.

**அறிமுகம்:** அறிமுகமானது பாடத்தின் உள்ளடக்கத்தின் மேலோட்டத்தை கொண்டிருக்கும்.

**பாடம்:** பாடத்தை விபரிக்கும் பகுதி இதுவாகும். விபரித்தல் என்பது ஓர் வல்லமையான போர் யுத்தத்தை செய்ய தேவையான தகவல்களை முன் அறிவித்தலின் மூலம் வழங்கும் ஓர் நேரமாகும்.

**சுய-பரீட்சை:** சுய-பரீட்சை வினா விடைகள் பாடத்தின் முக்கிய கொள்கைகளை கொண்டிருக்கும்.

**பிரயாசயத்தை நடப்பித்தல்:** “அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்” (பிலிப்பியர் 2:12) என வேதாகமம் கூறுகின்றது. இந்த பாடத்தில் நீங்கள் கற்கும் விதமாய், குணமாக்குதல் என்பது இயேசு கிறிஸ்துவினுடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாய் உண்டாகும் இரட்சிப்பின் ஒரு பகுதியாகும். விசுவாசமும் கிரியைகளும் இணைந்து செயற்படல் வேண்டும். விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் செத்ததாயிருக்கும், கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது (யாக்கோபு 2:17-26).

“பிரயாசயத்தை நடப்பித்தல்” என்னும் பகுதியில், பாடத்தில் போதிக்கப்பட்ட கருவை நீங்கள் எடுத்து, உங்களில் தனிப்பட்ட ரீதியில் பிரயோகிப்பீர்கள். பாடத்தின் முக்கியமான பகுதி இதுவாகும். நீங்கள் வியாதியாயிருந்தால், நீங்கள் குணமாக்குதல் பெறுவதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. நீங்கள் வியாதியஸ்தர் ஒருவரோடு ஊழியம் செய்யும்போது, முதலாவது பாடத்தின் உள்ளடக்கத்தை அவர்களோடு பகிர்ந்து, பிற்பாடு “பிரயாசயத்தை நடப்பித்தலை” அவர்கள் குணமாக்குதலை பெற்றுக் கொண்டு உதவுவதற்காக அவர்களோடு நடப்பியுங்கள்.

## நீங்கள் ஆயத்தமா?

தேவனுடைய வார்த்தையின் மிகப்பெரிதான வெளிப்படுத்தல் ஒன்று எதிரியையும் அவனுடைய உபாயங்களையும் வெளிப்படுத்துவதாகும். இந்த கையேடானது குணமாக்குதல் மற்றும் விடுதலை ஆகியவற்றின் படிப்பு என இல்லாவிட்டாலும், இது ஆழமான வேதாகம ஆய்வாக இருக்கின்றது. இயற்கையான போராட்டத்தில், சரீரத்திற்கான போராட்டத்தின் தன்மையானது விருத்தியடைவதோடு, போராட்டத்தின் எல்லைக்குட் பிரவேசித்து, போராட்டத்தை தொடங்க விருத்திசெய்யும்.

# பாடத்தின் நோக்கங்கள்

இந்த பாடத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ இயற்கையான மற்றும் ஆவிக்குரிய பகுதிகளை விளங்கி மெய்ப்பித்து காட்டவும்,
- ☐ "ஆவிக்குரிய போராட்டத்தை" வரையறுக்கவும்,
- ☐ காட்புலனாகா யுத்தத்தின் காரணத்தை இணங்காணவும்,
- ☐ ஆவிக்குரிய போராட்டத்தை விளங்குவதற்கான அடிப்படை கோட்பாடுகளை குறிப்பிடவும்,
- ☐ "தெய்வீக குணமாக்குதலை" வரையறுக்கவும்,
- ☐ குணமாக்குதல் மற்றும் விடுதலை ஆகியவற்றை வேறுப்படுத்தவும்,
- ☐ உலகத்தை குணமாக்குதலின் மற்றும் விடுவித்தலின் சுவிசேஷத்தால் அடைவதற்கு அர்ப் பணிப்பின் தொடர்பை விபரிக்கவும்,
- ☐ வியாதியின் ஆதாரத்தை இணங்காணவும்,
- ☐ வியாதியின் காரணத்தை விபரிக்கவும்,
- ☐ வியாதியின் வகைகளை அடையாளம் காணவும்,
- ☐ வியாதியின் இறுதி விளைவை பட்டியலிடவும்,
- ☐ வேதாகமத்தின் அடிப்படை குணமாக்குதலை சுருக்கமாக்கவும்,
- ☐ குணமாக்குதலின் நோக்கங்களை பட்டியலிடவும்,
- ☐ குணமாக்குதலின் வரங்களை விளங்கி உபயோகிக்கவும்,
- ☐ குணமாக்குதல் சம்பந்தமாக மனிதர்களுடைய பாரம்பரியங்களுக்கு பதிலளிக்கவும்,
- ☐ குணமாக்குதல் சம்பந்தமாக பதிலளிக்கப்படாத கேள்விகளோடு சம்பந்தப்படவும்,
- ☐ ஊழியம் செய்து குணமாக்குதலை பெற்றுக்கொள்ளவும்,
- ☐ ஊழியம் செய்து விடுதலையை பெற்றுக்கொள்ளவும்,
- ☐ எல்லையற்ற குணமாக்குதலுக்கு மக்களை ஆயத்தம்செய்யவும்,
- ☐ குணமாக்குதலுக்கும் விடுதலைக்கும் தொடர் ஊழியங்களை மேற்கொள்ளவும்,
- ☐ நல்ல போராட்டத்தின் ஜீவியம் என்றவகையில் வழிகாட்டல்களை சுருக்கமாக்கவும்,
- ☐ சரீரத்திற்கான யுத்தத்தில் வல்லமையான போராட்டத்தின் விளைவையும் காண முடியும்.

# பகுதி ஒன்று

## சரீரத்திற்கான யுத்தம்

ஆவிக்குரிய உலகில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது சரீரத்திற்கும் ஆவியிற்கும் இடையிலான தனிப்பட்ட யுத்தமாகும். இது உலகத்தில் தீய சேனைகளினால் நடை பெறும் யுத்தமாகும். இது தீய இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளுடனான ஆவிக்குரிய யுத்தமாகும். இது பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாகிய உங்களுடைய சரீரத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதலான ஓர் பௌதீக யுத்தமும் கூட...

பழைய ஏற்பாட்டு காலங்களில் தேவனுடைய ஜனங்களை யுத்தம் செய்யும்படி அழைக்கும்படியாக எக்காளம் பயன்படுத்தப்பட்டது. இன்று, உலகிலுள்ள ஜாதிகள் அனைவருக்கும் ஆவிக்குரிய எக்காளம் மூலம் அழைப்பு விடுவிக்கப்படுகின்றது. இது காட்புலனாகாத யுத்தத்தின் சத்தமாகும். இது ஓர் சேனையிற்கான அழைப்பாகும்.

## அதிகாரம் ஒன்று

# இராஜ்ஜியங்களிலுள்ள போராட்டம்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ பௌதீக மற்றும் ஆவிக்குரிய பகுதிகளை விளங்கி மெய்ப்பித்து காட்டவும்,
- ☐ “இராஜா” என்னும் வார்த்தையை வரையறுக்கவும்,
- ☐ “இராஜ்ஜியம்” என்னும் வார்த்தையை வரையறுக்கவும்,
- ☐ இரண்டு ஆவிக்குரிய இராஜ்ஜியங்களை அடையாளம் காணவும்,
- ☐ நீங்கள் எந்த இராஜ்ஜியத்திற்கு உரியவர்கள் என்பதை தெரிந்துகொள்ளவும்,
- ☐ நல்ல ஆவிக்குரிய சேனைகளை அடையாளம் காணவும்,
- ☐ தீய ஆவிக்குரிய சேனைகளை அடையாளம் காணவும்,
- ☐ “ஆவிக்குரிய போராட்டம்” என்பதின் அர்த்தம் என்ன என்பதை விபரிக்கவும்,
- ☐ காட்புலனாகாத யுத்தத்தின் காரணங்களை அடையாளம் காணவும்,
- ☐ ஆவிக்குரிய யுத்தத்தின் அடிப்படை கொள்கைகளை விளங்கி குறிப்பிடவும் முடியும்.

## பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

> **நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன், நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார். (யாத்திராகமம் 15:26)**

## அறிமுகம்

இன்றைய உலகில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது தேசங்கள், ஜாதிகள் அல்லது அரசாங்க தலைவர்களுக்கிடையிலான மோதல் அல்ல. இது கிளர்ச்சியோ அல்லது ஆட்சி கவிழ்ப்போ அல்ல. இது ஆவிக்குரிய உலகத்தில் முன்னெடுக்கப்படும் காட்புலனாகாத முக்கியமான போராட்டமாகும். இந்த அதிகாரம் ஒவ்வொரு விசுவாசிகளோடும் சம்பந்தப்பட்ட காட்புலனாகாத யுத்தத்தை அறிமுகம் செய்யும். இது யாரும் சீருடைகளை அணியாத யுத்தமாகும், ஆனால் ஒவ்வொருவரும் குறி வைக்கப்பட்டுள்ளனர். இந்த யுத்தத்தின் வரலாற்று மற்றும் தீர்க்கதரிசன பதிவுகள் வேதாகமாகிய தேவனுடைய வார்த்தையில் அடங்கியுள்ளது.

## பௌதீக மற்றும் ஆவிக்குரிய பகுதிகள்

நீங்கள் இந்த காட்புலனாகா யுத்தத்தை விளங்கிக்கொள்ளுதற்கு, முதலாவது பௌதீக மற்றும் ஆவிக்குரிய உலகத்தை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். மனிதன் இரு உலகங்களில் காணப் படுகின்றான்: பௌதீக உலகம் மற்றும் ஆவிக்குரிய உலகம். இயற்கையான உலகில் பார்த்து, விளங்கி, தொட்டுணர்ந்து, கேட்டு, ருசித்து உணரலாம். இது தெளிவானதும், காட்புலனானதும் ஆகும்.

நீங்கள் வசிக்கும் நாடு, ஜாதி அல்லது கிராமம் பௌதீக உலகின் ஒரு பகுதியாகும். உலகின் காணக்கூடிய ஓர் கண்டத்தில் அமைந்த பௌதீக இராஜ்ஜியத்தில் நீங்கள் வசிக்கின்றீர்கள். உங்கள் சுற்றுச்சூழலில் நீங்கள் மக்களை பார்க்க முடியும். நீங்கள் அவர்களோடு தொடர்புகொள்ள முடியும். நீங்கள் உங்களை சுற்றி காட்சிகளை, சத்தங்களை, சுவாசங்களை அனுபவிக்க முடியும்.

ஆனால் நீங்கள் வாழுமிடத்தில் இன்னொரு உலகம் உண்டு. அந்த உலகம் ஆவிக்குரிய உலகமாகும். நீங்கள் அதை உங்கள் பௌதீக கண்களால் காண முடியாது, ஆனால் நீங்கள் வசிக்கும் பௌதீக உலகத்தில் அது ஓர் நிச்சயமான உண்மையாகும். 1 கொரிந்தியர் 15:40ல், பவுல் பௌதீக மற்றும் ஆவிக்குரிய பிரிவுகளை பற்றி பேசுகின்றார். அவர் பௌதீக சரீரங்களும் (பூமிக்குரிய), ஆவிக்குரிய சரீரங்களும் (வானத்துக்குரிய) உண்டு என கூறுகின்றார்.

பௌதீக உலகில் வாழும் ஒவ்வொரு மனிதர்களுக்கும் பௌதீக சரீரங்கள் உண்டு, ஆனால் மனிதன் நித்திய ஆவியையும், ஆத்துமாவையும் கொண்ட ஓர் ஜீவனும் கூட. மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரம் உடையவன். பௌதீக உலகளில் உங்கள் பௌதீக சரீரம் ஒரு பகுதியை போல, உங்கள் ஆவிக்குரிய ஜீவன் (ஆவி, ஆத்துமா) ஆவிக்குரிய உலகில் ஓர் பகுதியாகும்.

## ஆவிக்குரிய பகுத்துணர்வு

ஆவிக்குரிய போராட்டம் இருப்பதின் காரணமாக -- ஆவியிற்கு ரீதியானவை -- ஆவிக்குரிய நிலையில் விளங்கிக் கொள்ளப்படல் வேண்டும். எமது பௌதீக நிலையில், அதாவது பாவமுள்ள நிலையில் நாம் ஆவிக்குரிய காரியங்களை விளங்கிக்கொள்ள முடியாது:

> **ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான், அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். (1கொரிந்தியர் 2:14)**

ஆவிக்குரிய காரியங்களை விளங்குவதற்கு ஆவிக்குரிய பகுத்துணர்வை உபயோகித்தல் அவசியமாகும்.

2 இராஜாக்கள் 6ம் அதிகாரத்தில் பௌதீக மற்றும் ஆவிக்குரிய பகுத்துணர்வின் நல்ல ஓர் உதாரணம் பதியப்பட்டுள்ளது. இது தீர்க்கதரிசியான எலிசா தங்கியிருந்த தோத்தான் என்னும் சிறு நகரத்தில் எதிரி நாடாகிய சிரிய இராணுவம் சுற்றிய இயற்கையான யுத்தத்தின் ஓர் கதையாகும்.

எலிசாவினுடைய வேலைக்காரனாகிய கேயாசி, எதிரி நாட்டு இராணுவத்தை பார்த்தவுடன் பயமடைந்தான். எலிசா தம்மை பாதுகாத்து, தம்மை சுற்றியுள்ள தேவதூதர்களை பார்க்கும்படியாக கேயாசியினுடைய ஆவிக்குரிய கண்களை திறக்கும்படியாக வேண்டினான். இந்த நேரத்தில் யுத்தத்திற்காக தேவனால் அமையப்பட்ட விசேட சேனையை பார்த்து அறியும்படியாக தேவன் கேயாசியினுடைய ஆவிக்குரிய கண்களை திறந்தார்.

தோத்தானில் நடைபெற்ற யுத்தத்தின் இந்த கதை இன்றைய ஆவிக்குரிய சபைகளின் நிலைகளுக்கு ஒத்தது. எலிசாவைப்போன்று இன்று சிலர், ஆவிக்குரிய பகுத்துணர்வில் தெளிவாக காணப்படுகின்றனர். அவர்கள் ஓர் எதிரியை அறிந்திருந்து, ஓர் யுத்தம் நடைபெறுவதை அறிந்திருக்கின்றதோடு, தேவனுடைய மாபெரும் சேனையின் வெற்றியை உணர்ந்திருக்கின்றனர்.

ஆனால் கேயாசியைப்போன்று வேறு மற்றவர்கள், ஒரு சிறு உற்சாகத்தினால், அவர்களுடைய ஆவிக்குரிய கண்கனை திறந்து, எதிரியினால் தோற்கடிக்கப்படாதபடி ஒருபோதும் பயப்படாமல் இருக்கின்றனர். ஆனால் துக்ககரமாக, பலர் தோத்தான் பட்டணத்தில் இருந்த அநேக மக்களைப் போன்று ஆவியில் உறக்குகின்றனர். அவர்கள் எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளோம் என்பதையும், தாக்குதல் உண்டாயிற்று என்பதையும் கூட அறியவில்லை.

## இரண்டு ஆவிக்குரிய இராஜ்ஜியங்கள்

பௌதீக மற்றும் ஆவிக்குரிய பகுதிகளை நாம் பேசிக்கொண்டிருக்கும்போது, பௌதீக மற்றும் ஆவிக்குரிய தலைவர்களால் ஆளப்படும் இரண்டு தனியான இராஜ்ஜியங்கள் காணப்படுகின்றன.

### பௌதீக இராஜ்ஜியங்கள்:

இந்த உலகில் ஒவ்வொரு மனிதர்களும் பௌதீக இராஜ்ஜியத்தில் வாழுகின்றனர். அவர்கள் தேசத்தின் ஒரு பகுதியாகிய கிராமம் அல்லது நகரத்தில் வாழுகின்றனர். தேசம் உலகத்தின் இராஜ்ஜியமாகும். பௌதீக இராஜ்ஜியம் என்பது வரையறுக்கப்பட்ட பிரதேசம் அல்லது அரசியல் தலைவர்கள் ஆளும் பிரதேசம் அல்லது ஓர் மக்களுக்கு மேலாக இராஜா காணப்படுதல் ஆகும். வேதாகமம் இந்த பௌதீக இராஜ்ஜியங்களை "உலகத்தின் இராஜ்ஜியங்கள்" என அழைக்கின்றது. உலகத்தின் இராஜ்ஜியமானது சாத்தானின் வல்லமையிற்குள்ளும், செல்வாக்குக்குள்ளும் வந்துவிட்டது:

> **மறுபடியும், பிசாசு அவரை (இயேசு) மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து:**
>
> **நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். (மத்தேயு 4:8-9)**

எமக்கு யோவான் 5:19 "அனைத்து உலகமும் தீமையான ஒன்றின் கீழ் கட்டுப்பாடாக உள்ளது" என சோகமாக நினைவூட்டுகின்றது.

### ஆவிக்குரிய இராஜ்ஜியங்கள்:

இந்த உலகின் இயற்கையான இராஜ்ஜியங்களில் இரண்டு ஆவிக்குரிய இராஜ்ஜியங்கள் காணப்படுகின்றன: அவை சாத்தானுடைய இராஜ்ஜியம் மற்றும் தேவனுடைய இராஜ்ஜியம் ஆகும். உயிருள்ள ஒவ்வொரு மனிதர்களும் இந்த இரு இராஜ்ஜியங்களின் ஒன்றில் வசிக்கின்றனர்.

சாத்தானுடைய இராஜ்ஜியமானது பிசாசுகள் என்று அழைக்கப்படும் ஆவிக்குரிய ஜீவன்களால் அமையப்பட்டுள்ளது. அத்தோடு அனைத்து மனிதர்களும் பாவத்தில் வாழ்ந்து தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக கலகம் செய்வர். இது இன்றைய உலகில் கிரியை செய்யும் ஆவிக்குரிய தீமையின் சேனையாகிய உலகத்தையும் மாம்சத்தையும் உள்ளடக்கும்.

தேவனுடைய இராஜ்ஜியமானது தேவனாகிய பிதா, இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர், தேவ தூதர்கள் என அழைக்கப்படும் ஆவிக்குரிய ஜீவன்கள், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்த அனைத்து நீதிமான்கள் ஆகியோரால் அமையப்பட்டுள்ளது. இவர்களே நல்ல ஆவிக்குரிய சேனைகள்.

தேவனுடைய இராஜ்ஜியமானது பிரிவுகள் அல்ல. பிரிவுகளானது மனிதர்களால் மற்றும் சபை குழுக்களாகிய அமைப்புக்களால் உருவாக்கப்பட்டுள்ளது. அவைகள் அமைப்புக்களுக்காகவும், நிர்வாகத்திற்காகவும், நடைமுறை குறிக்கோள்களுக்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. பப்டிஸ்த சபை, மக்கள் தேவ சபை, மெதடிஸ்ட், லூத்தரன் ஆகியவை பிரதான சபை அமைப்புக்களின் பிரிவுகள் ஆகும். வேதாகமம் கூறும் உண்மையான சபையானது பிரிவுகளோ அல்லது சபை அமைப்புக்களோ அல்ல. ஓர் உண்மையான சபையானது அனைத்து தேவனுடைய இராஜ்ஜியத்தின் குடிமக்களால் ஆனவை ஆகும்.

பௌதீக உலகின் தற்காலத்தில், இயேசு ராஜாவை தமது வாழ்வில் ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு மனிதர்களால் தேவனுடைய இராஜ்ஜியம் காணப்படுகின்றது. இந்த சபை தேவனுக்கேற்ற பூமியின் மாதிரியாக மக்களால் உலகத்தில் பொதுவாக காணப்படுகின்றது.

## காட்புலனாகா யுத்தம்

அனைத்து மனிதர்களும் காட்புலனாகாத ஆவிக்குரிய யுத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். ஏனென்றால் சாத்தானுடைய இராஜ்ஜியமானது ஆவிக்குரிய இராஜ்ஜியமாகும்...

> **ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்ட லங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர் 6:12)**

ஆவிக்குரிய யுத்தமானது மாம்சத்திற்கும் இரத்தத்திற்கும் இடையில் நடைபெறும் இயற்கையான யுத்தம் அல்ல. அது மனிதனுக்கும் மனிதனுக்கும் நடைபெறும் யுத்தமல்ல. அது காட்புலனாகும் யுத்தமும் அல்ல. இது ஆவிக்குரிய உலகில் காட்புலனாகாத போராட்டமாகும். அது மனிதனுக்குள்ளும் சுற்றியும் உள்ள போராட்டமாகும். அது காட்புலனாகாத யுத்தமல்ல ஏனென்றால் ஆவிகள் இதில் சம்பந்தப்படுகின்றன, அத்தோடு ஆவிகளுக்கு சரீரங்களும், மாம்சங்களும் இல்லை என லூக்கா 24:39ல் நாம் கற்றுள்ளோம்.

ஆவிக்குரிய போராட்டம் "பல்பரிமாணமானது," இதன் அர்த்தமானது இது பல்வேறு வடிவங்களில் போராடப்படும் என அர்த்தப்படும். இது:

1. உலகம் மற்றும் விசுவாசிகளுக்கான இடையிலான சமூக யுத்தம்: யோவான் 15:18-27.
2. சரீரத்திற்கும் ஆவியிற்கும் இடையிலான தனிப்பட்ட யுத்தம்: கலாத்தியர் 5:16-26.
3. விசுவாசிகளுக்கும், தீய இயற்கை வல்லமைகளுக்கும் இடையிலான இயற்கையான போராட்டம்: எபேசியர் 6:10-27.
4. உங்களுக்கு சரீரத்திற்கு எதிராக சுகயீன தாக்குதல்களை மேற்கொள்ளும் சாத்தானின் பௌதீக யுத்தம்: யோபு 1-2 ஆகும்.

ஒவ்வொரு நபரும் அறிந்தாலும், அறியாவிட்டாலும் இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்டுள்ளார். இங்கு ஓர் சமநிலை தன்மை இல்லை. அவிசுவாசிகள் தீமையான கட்டுக்குள் இருந்து, எதிரிகளுடைய சேனைகளினால் பிடிக்கப்பட்டுள்ளனர். போராட்டத்தில் அவர்களே குற்றவாளிகள். விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவின் மூலம் எதிரிகளிடமிருந்து தப்பி வெற்றி பெறுவர், ஆனாலும் சேனைகள் என்ற ரீதியில் போராட்டத்தில் ஈடுபடுவர்.

நாம் (அனைத்து விசுவாசிகளும்) தீமையான ஆவிக்குரிய சேனைக்கு எதிராக போராடுகின்றோம் என எபேசியர் 6:12 குறிப்பிடுகின்றது. போராட்டம் அருகிலான தனிப்பட்ட தொடர்போடு சம்பந்தப்படுகின்றது. தூரத்தில் இருந்து யாராலும் அதை காண இயலாது. நீங்கள் ஏற்றுக்கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் போராட்டத்திற்கு நடுவில் நீங்கள் இருக்கின்றீர்கள். நீங்கள் தவறாக இருந்தாலும், இதை விசுவாசித்தால் மேன்மை அடைவீர்கள். கிறிஸ்தவ போராட்டம் ஒருபோதும் நீக்கப்படாது.

## தீவிரமாக போராட்டம் நடக்கும் இடம்

இந்த காட்புலனாகா யுத்தம் பூமியில் நடைபெறுகின்றது:

> **திருடன் (சாத்தான்) திருடவும் கொல்லவும் அழிக்கவும் (பூமிக்கு) வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். (யோவான் 10:10)**

சாத்தான் உலகத்தின் இராஜ்ஜியத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு போராடுகின்றான். அவன் அவர்களை தேவனுடைய அதிகாரத்திற்குள் வர விரும்பான். இந்த போராட்டமானது மனிதனுடைய இருதயங்கள், சிந்தனைகள், ஆத்துமாக்களிற்குள் நடைபெறுகின்றது.

சாத்தான் விசுவாசிகளுடைய மனங்களை குருடாக்கி, விசுவாசிகளுடைய துதிகள், வார்த்தைகள், அவர்களுடைய தின நடத்தைகள், அவர்களுடைய தேவனுக்கான வேலைகளை தாக்குகின்றான். இந்த யுத்தமானது உங்களுடைய பௌதீக சரீரங்களிலும் வியாதி மற்றும் நோய்களால் சாத்தான் தாக்குகின்றான்.

## போராட்டம் எவ்வாறு ஆரம்பமானது

தேவனுடைய இராஜ்ஜியத்தில் தேவனால் அழகாக முழுமையாக படைக்கப்பட்ட லூசிபர் என்னும் பெயருடைய தேவதூதனானால் காட்புலனாகா யுத்தம் பரலோகத்தில் ஆரம்பமானது. தேவனுடைய இராஜ்ஜியத்தை எடுக்க வேண்டும் என லூசிபர் தீர்மானித்தான். நீங்கள் அவனுடைய கலகத்தை குறித்து ஏசாயா 14:12-17 மற்றும் எசேக்கியேல் 28:12-19 வரை வாசிக்கலாம். இந்த கலகத்தில் ஒரு குழு தேவ தூதர்கள் (இப்போது சாத்தான் என அழைக்கப்படுபவர்கள்) சேர்ந்தார்கள். லூசிபரும் அவனுடைய கலக தேவதூதர்களையும் தேவன் பரலோகத்திலிருந்து விரட்டினார். அவர்கள் பூலோகத்தில் தம்முடைய சொந்த இராஜ்ஜியத்தை நிறுவினர்:

> **வானத்திலே யுத்தமுண்டாயிற்று. மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே (சாத்தான்) யுத்தம்பண்ணினார்கள். வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. (வெளிப்படுத்தல் 12:7)**

> **உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது. அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். (வெளிப்படுத்தல் 12:9)**

லூசிபர் சாத்தான் என்று அறியப்பட்டான், அவனை பின்பற்றி கலகம் செய்த தூதர்கள் பிசாசுகள் எனப்பட்டனர். பிசாசுகள் சாத்தானுடைய இராஜ்ஜியத்தில் சேர்ந்த மனிதர்களுக்குள் புகுந்து,

அலைக்கழித்து, கட்டுப்படுத்தி அவர்களை உபயோகிக்க முடியும். அவைகள் மனிதர்கள் செய்யும் தீமையான காரியங்களை ஊக்குவிக்கின்றன. சாத்தான் தனது பிசாசுகளை தீய நடத்தைகளை செய்யும்படியாக வழிநடத்துகின்றான். அவன் இந்த வல்லமையான சேனைகளை உலகில் மேற் கொள்ள வைத்து, அனைத்து மனிதர்களோடும் மாம்சத்தோடு போராடும்படி செய்கின்றான்.

## போராட்டத்தின் பின்புலமான காரணங்கள்

மனிதன் தேவனுடைய சாயலாகவும், தேவனுடைய மகிமைக்காகவும் படைக்கப்பட்டுள்ளான் (ஆதியாகமம் 2ம் அதிகாரம்). இந்த காட்புலனாகாத யுத்தம் ஏதேன் தோட்டத்தில் முதலாவது சோதனையாக மனிதர்களுக்கு எதிராக தொடங்கப்பட்டது (ஆதியாகமம் 3ம் அதிகாரம்). இதன் விளைவானது அனைத்து மனிதர்களும் அடிப்படை பாவ சுபாவத்தில் உள்ளாக்கப்பட்டு, இயற்கையின்படி ஒவ்வொருவரையும் பாவத்தை செய்யும்படி செய்கின்றது:

> **ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று. (ரோமர் 5:12)**

இது தீய சேனைக்கும் மனிதனுக்கும் இடையில் காட்புலனாகாத யுத்தத்திற்கான விளைவை ஏற்படுத்தியது:

> **உனக்கும் (சாத்தான்) ஸ்திரீக்கும் (மனித இனம்), உன் வித்துக்கும் (தீய சேனை) அவள் வித்துக்கும் (தேவனாகிய இயேசு கிறிஸ்துவினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் நல்ல சேனையிற்கும்) பகை உண்டாக்குவேன்... (ஆதியாகம் 3:15)**

பாவத்தின் காரணமாக, மனிதன் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு மரணத்திற்கு ஏதுவானான். இந்த மரணம் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படும் ஆவிக்குரிய மரணம் ஆகும். இது பௌதீக மரணமும் கூட, ஏனென்றால் மனிதன் பாவம் செய்யும் போது சாத்தான் உட்புகுந்து சுகவீனம் அல்லது வியாதி போன்ற சாபங்களை கொண்டு வருகின்றான். ஆனால் தேவன் மனிதனை மிகவும் நேசித்தார், அதனால் அவனை பாவத்திலிருந்து மீட்க அவர் விசேட திட்டம் ஒன்றை ஏற்படுத்தினார்:

> **தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.**
>
> **உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். (யோவான் 3:16-17)**

இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தின் மூலம், பாவத்திற்கான அறிக்கையிடுதலையும் மனந்திரும்புதலையும் பெற்று, மனிதர்கள் சாத்தானுடைய வல்லமையிலிருந்து விடுபட முடியும். இயேசுவினுடைய மரணமும் உயிர்த்தெழுதலும் பாவத்திலிருந்தான இரட்சிப்பை கொண்டுவருவதோடு மாத்திரமின்றி, எதிரியான சாத்தானை தோற்கடிக்கவும் செய்கின்றது:

**பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்... (1யோவான் 3:8)**

சாத்தான் தோல்வியுற்றாலும், இன்னும் ஏன் யுத்தம் நடைபெறுகின்றது? உலகில் எம்மை சுற்றிலும் தீமைகளை ஏன் நாம் காண்கின்றோம்? நாம் ஏன் பாவத்தினால் சோதிக்கப்பட்டு, சுகவீனங்களால் தாக்கமுறுகின்றோம்?

இந்த பௌதீக உலகில் நடைபெறும் ஒவ்வொரு போராட்டங்களும் எதிரியினுடைய வசிப்பிடத்திற்கு காரணமாக அமைகின்றது. இவைகள் அழுத்தங்களை பிரயோகித்து ஒரு போதும் விட்டுக்கொடுக்காத கலக சேனைகள் ஆகும். இயேசு சாத்தானை தோல்வியுறச்செய்தாலும், நாம் வாழும் பிரதேசமானது இன்னும் எதிரிகளுடைய சேனைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆவிக்குரிய போராட்டத்தின் உபாயங்களை விளங்குதல் தீமையான வல்லமையோடு சம்பந்தப்படுவதற்கான இயலுமைகளை தரும்.

சாத்தான் மனிதர்களை பாவத்திற்குள் வைத்திருக்க முயற்சிக்கின்றான். ஏமாற்றுவதின் முறைகளுக்கூடாக பாவமான ஜீவியம் செய்ய மனிதர்களை வசீகரிக்கின்றான். அவன் தேவனுக்கே உரிய உண்மையாக ஆவியையும், ஆத்துமாவையும் தாக்கும்படி குறிவைக்கின்றான். அவன் சரீரத்தையும் பலவீனம் நோய்களால் அழிக்கும்படி குறி வைக்கின்றான்:

**திருடன் (சாத்தான்) திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். (யோவான் 10:10)**

சாத்தான் சிறந்த ஆளுகை செய்ய ஆசைப்படுகின்றான். அவன் மனிதர்களின் ஆவி, ஆத்துமா, சரீரங்களுக்கான உள்ளான போராட்டத்தை ஏற்படுத்துகின்றான். அவனுடைய உபாயங்களானது தேவனால் அவருடைய திட்டத்தின்படி, அவருடைய மக்களுக்கு வழிநடத்தப்படுகின்றது.

## ஆவிக்குரிய போராட்டத்தின் அர்த்தம்

காட்புலனாகாத ஆவிக்குரிய யுத்தத்தின் உள்ளக வெளியக இயங்கு சம்பந்தப்படுதலின் ஆய்வே ஆவிக்குரிய போராட்டமாகும். நல்ல தீய சேனைகளின் எதிர்நிலையையும், சாத்தானுடைய உபாயங்களையும், எதிரிகளை மேற்கொள்ளும் ஆவிக்குரிய உபாயங்களையும் போன்ற பாடங்களை இது உள்ளடங்கும்.

ஆவிக்குரிய போராட்டத்தின் ஆய்வைவிட ஒருபடி மேலானது ஆவிக்குரிய போராட்டமாகும். வாழ்க்கை யிலும் ஊழியத்திலும் இந்த உபாயங்களை பிரயோகிப்பதற்கான போராட்டத்தை செயல்படுத்தி பங்கு பற்றுவதை இது உள்ளடங்கும். விசுவாசிகளை அறிவில்லாமல் வைத்திருப்பதே சாத்தானின் ஓர் முக்கியமான கருவியின் வல்லமையான உபாயமாகும். பவுல் சாத்தானுடைய உபாயங்களை அறிந்திருப்பது முக்கியமானது என கூறுகின்றார்....

**சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு, அப்படிச் செய்தேன். அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே. (2 கொரிந்தியர் 2:11)**

சாத்தானுடைய தாக்குதலின் உபாயங்கள் பற்றி எம்மால் இயன்றவரை அனைத்தையும் நாம் கற்க வேண்டும். தீமையான சேனைகளுக்கும், சாத்தானுக்கும் மேலான வெற்றியின் ஆவிக்குரிய அடிப்படைகளை நாம் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். நாம் அறிவுபூர்வமாக போராடும்படி அழைக்கப்பட்டுள்ளோம்.

ஆவிக்குரிய போராட்டத்தை விளங்குவதற்கான அடிப்படை திறவுகோல் கொள்கை இதுவாகும்:

> *பௌதீக, ஆவிக்குரிய, உணர்வு, மன, மற்றும் நிதி ரீதியிலான வாழ்க்கையின் அனைத்து யுத்தங்களும் அல்லது ஆவிக்குரிய நிலை, மனித குணாதிசயங்களின் வெளியக நிலையை மாத்திரமே வெளிப்படுத்துகின்றது என நீங்கள் உணர வேண்டும்.*

பௌதீக உலகில் நடைமுறை வாழ்க்கையில் பிரச்சினைகள் காணப்பட்டாலும், இந்த அடிப்படை பௌதீக யுத்தமானது ஆவிக்குரிய உலகில் உள்ளது. இந்த கொள்கைளை உறுதிப்படுத்தும் யோபுவினுடைய கதையை வாசியுங்கள் (யோபு அதிகாரம் 1-2).

இந்த உலகத்தின் தீமைகளை மருந்து, கல்வி, சட்டம் மற்றும் முன்னேறிய சூழலிற்கூடாக மாற்ற நாம் முயற்சிக்கின்றோம். அது கிரியை செய்யப்படாது ஏனென்றால் ஆவிக்குரிய நிலையிற்கு ஏற்பவே உலகில் உள்ள தீய சக்திகளின் விளைவு காணப்படும். அவைகளை இயற்கையான அர்த்தங்களினால் மாற்ற முடியாது.

## உங்களுக்கு சொந்தமான இராஜ்ஜியம் என்ன?

பௌதீக உலகில் ஒரு இராஜ்ஜியத்தை ஆளுபவர் இராஜா ஆவார். இராஜ்ஜியத்திலுள்ள அனைத்து மக்களும் பகுதிகளும் அவருக்கு உரியது. அவருக்குள்ளான காரியத்தில் ஜீவனுக்கும் மரணத்துக்கும் ஏதுவான காரியம் உண்டு. ஆவிக்குரிய உலகிலும் இதே காரணங்கள் உண்மையாகும். நீங்கள் ஒன்று தேவனுடைய இராஜ்ஜியத்திலோ அல்லது சாத்தானுடைய இராஜ்ஜியத்திலோ பகுதிகளாய் இருக்கின்றீர்கள். தேவனோ அல்லது சாத்தானோ உங்களுடைய வாழ்க்கையில் அதிகாரமாய் இருக்கின்றார்.

இயேசுவால் சொல்லப்பட்ட உவமைகளில் ஒன்று அனைத்து மனிதர்களும் தேவனுடைய இராஜ்ஜியத்திலோ அல்லது சாத்தானுடைய இராஜ்ஜியத்திலோ ஒரு பகுதியாக இருக்கின்றார்கள் என்பதை காட்டுகின்றது. இயேசு உலகத்தை வயல்நிலங்களுக்கு ஒப்பிட்டார். வயல்நிலங்களிலுள்ள நல்ல விதைகள் தேவனுடைய இராஜ்ஜியத்தின் பிள்ளைகளாவர். தீய விதைகள் களைகளின் மூலம் உண்டான துன்மார்க்கர்களுடைய பிள்ளைகளாவர்:

> **நிலம் உலகம். நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர். களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர். (மத்தேயு 13:38)**

மக்கள் இயற்கையான பிறப்பின் மூலம் சாத்தானுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கின்றனர். வேதாகமம் அனைத்து மனிதர்களும் பாவத்திற்குள் பிறக்கின்றார்கள் என போதிக்கின்றது. இதன் அர்த்தமானது அவர்களிடம் அடிப்படையான பாவ சுபாவம் காணப்படுகிறது அல்லது பாவத்தின் "விதை" காணப்படுகின்றது. அவர்களுடைய இயற்கையான சுபாவம் தீமை செய்வதாகும்:

> **இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள். (சங்கீதம் 51:5)**

**இப்படியாக, ஒரே மனுஷனாலே (ஆதாம்) பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று. (ரோமர் 5:12)**

**எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி... (ரோமர் 3:23)**

நாங்கள் அடிப்படையான பாவ சுபாவத்தில் பிறந்தபடியினால், நாம் அனைவரும் ஒரு தடவை சாத்தானுடைய இராஜ்ஜியத்தில் இருந்தோம். மிகுதியாக உள்ள அனைத்து பாவிகளும் சாத்தானுடைய இராஜ்ஜியத்தின் பகுதிகளாக மீந்திருக்கின்றார்கள். தேவனால் எழுதப்பட்ட முழுமையான செய்தியை கொண்ட வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமம் சாத்தானுடைய தீமையான இராஜ்ஜியத்திலிருந்து தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு மனிதர்களை கொண்டு செல்வது ஆகும். மனிதர்கள் சாத்தானுடைய இராஜ்ஜியத்திற்குள் இயற்கையான பிறப்பின் மூலம் பிறந்துள்ளார்கள். அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் ஆவிக்குரிய பிறப்பின் மூலம் பிறத்தல் வேண்டும். யோவான் 3ம் அதிகாரத்தில் விபரிக்கப்பட்டுள்ளபடி புதிய பிறத்தலின் மூலம் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிறத்தல் வேண்டும்.

காட்புலனாகாத யுத்தத்தில் இரண்டு பிரிவுகள் மாத்திரமே காணப்படுகின்றது. இயேசு கூறினார், “என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்” (லூக்கா 11:23). இந்த யுத்தத்தில் நீங்கள் நடுநிலை வகிக்க முடியாது. நீங்கள் இந்த பக்கம் அல்லது அந்த பக்கம் இருக்க வேண்டும். சில விசுவாசிகள், எதிரியோடு தாக்குதல் நடத்தும் தம்முடைய பயத்தினால், போராட்டம் மேற்கொள்வதை தவிர்த்து, எதிரியோடு தற்காலிக சமாதானத்தை ஏற்படுத்துகின்றனர். சாத்தானை தவிர்த்தால், அவன் அவர்களை குறித்து கவனிக்க மாட்டான் என எண்ணுகின்றனர். இது சாத்தானின் முக்கியமான ஓர் உபாயமாகும். அவன் தனது தந்திரமான உபாயங்களின் மூலம் தேவனுடைய சேனைகளின் உறுப்பினர்களை அசைவற்றவர்களாக்க முயற்சிக்கின்றான்.

ஆனால் இந்த யுத்தத்தில் சமநிலை இல்லை. நீங்கள் குற்றவாளியாகவோ அல்லது வெற்றியாளராகவோ இருக்கலாம். நீங்கள் ஆவி மற்றும் ஆத்துமாவில் வெற்றியாளராக இருக்கலாம் அல்லது நீங்கள் தோல்வியுற்று, அவநம்பிக்கையுற்று, விரக்கியடைந்திருக்கலாம். உங்களது பௌதீக உடலில் வெற்றி அடைந்து இருக்கலாம் அல்லது பலவீனமுற்று வியாதியடைந்திருக்கலாம். இதில் எது உங்களிடம் காணப்படுகின்றது?

சேனைகளாக ஆவிக்குரிய போருக்கு அழைக்கப்பட்டுள்ளோம். நீங்கள் நல்ல அல்லது தீமையான பக்கத்தில் இருக்கின்றீர்களா? நீங்கள் சாத்தானுடைய இராஜ்ஜியத்திலா அல்லது தேவனுடைய இராஜ்ஜியத்திலா பகுதிகளாக இருக்கின்றீர்கள்? எந்த இராஜ்ஜியத்தில் நீங்கள் இருக்கின்றீர்கள்? நீங்கள் காட்புலனாக யுத்தத்தில் குற்றவாளியாகவா அல்லது வெற்றியாளராகவா இருக்கின்றீர்கள்?

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

.................................................................................................................................................

.................................................................................................................................................

2. 1 கொரிந்தியர் 15:44-49லுள்ள ஏற்படுத்தப்பட்டுள்ள இரண்டு பிரிவுகள் எவை?

.................................................................................................................................................

.................................................................................................................................................

3. இன்று உலகிலுள்ள இரண்டு காட்புலனாகாத இராஜ்ஜியங்கள் எவை?

.................................................................................................................................................

.................................................................................................................................................

4. தீய சேனைகளின் ஆவிகளை பட்டியலிடுக.

.................................................................................................................................................

.................................................................................................................................................

5. நல்ல சேனைகளின் ஆவிகளை பட்டியலிடுக.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

6. “ராஜா” என்னும் வார்த்தையை வரையறுக்க.

.................................................................................................................................................

.................................................................................................................................................

7. “இராஜ்ஜியம்” என்னும் வார்த்தையை வரையறுக்க.

.....................................................................................................................................................

8. “ஆவிக்குரிய போராட்டம்” என்ற பதத்தின் அர்த்தம் என்ன?

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

9. இந்த மாபெரும் ஆவிக்குரிய போராட்டத்தின் பின்புலமான காரணம் என்ன?

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

10. ஆவிக்குரிய போராட்டத்தை விளங்கிக்கொள்ளுவதற்கான அடிப்படை கொள்கை என்ன?

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப்பிரயாசப்படுங்கள்" (பிலிப்பியர் 2:12) என வேதாகமம் கூறுகின்றது. இரட்சிப்பின் பகுதியான குணப்படுத்தலானது இயேசு கிறிஸ்துவினுடைய இறப்பு மற்றும் உயிர்த்தெழுதலுக்கூடாக கொடுக்கப்படுகின்றது. "கிரியை மூலம் கொடுக்கப்படுமாயின், எவ்வாறு நீங்களும் கூட பிரயாசப்படலாம்?" என நீங்கள் கேட்கலாம்.

   விசுவாசமும் கிரியையும் ஒன்றோடொன்று செல்லப்படுதல் வேண்டும். விசுவாசம் இல்லாத கிரியை செத்தது, அதேப்போல் விசுவாசமில்லாமல் நடைபெறும் கிரியை பிரயோஜனம் அற்றது (யாக்கோபு 2:17-26). நீங்கள் வார்த்தையை கேட்பது மாத்திரம் அன்றி, செயல்படுத்த வேண்டும்.

   நீங்கள் இந்த பாடத்தின் குணமாக்குதலின் வாக்குத்தத்ததமானது பௌதீக ஆரோக்கிய பகுதிகளில் தேவனோடு ஒத்துழைத்து கிரியை செய்ய வேண்டும் என வெளிப்படுத்துகின்றது:

   **நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன், நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார். (யாத்திராகமம் 15:26)**

   இந்த கையேட்டின் ஒவ்வொரு பாடத்திலுமுள்ள, "மேலதிக படிப்பினையிற்கு" பகுதியானது போதிக்கப்பட்ட கொள்கையை எடுத்து உங்களுடைய விசுவாசத்தை தனிப்பட்ட பிரயோகத்தினால் பயிற்சியளிக்கும் சந்தர்ப்பத்தை உங்களுக்கு கொடுக்கின்றது. இது வசனத்தை கேட்பதாக மட்டுமல்ல, வசனத்தை செய்பவராக மாற்ற உங்களை உதவுகின்றது.

   இது இந்த பாடத்தின் முக்கியமான பகுதியாகும். நீங்கள் நோயுற்றிருந்தால், உங்கள் குணமாக்குதலை பகுதி பகுதியாக பெற வடிவமைக்கப்பட்டுள்ளது. நீங்கள் நோயுற்ற யாராவதொருவருக்கு ஊழியம் செய்வீர்களாயின், முதலாவது அவர்களோடு பாடத்தின் உள்ளடக்கத்தை பகிர்ந்துகொள்ளுங்கள், பின் இப்பகுதியை அவர்கள் குணம் பெற்றுக் கொள்ளும் படிக்கு பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

2. இயேசு மற்றும் சீரோபேனிக்கியா பெண்ணை குறித்தான கதையை மாற்கு 7:24-30ல் வாசியுங்கள். இந்த பகுதியானது குணமாக்குதலானது "பிள்ளைகளின் அப்பம்" என வெளிப்படுத்துகின்றது. இதன் அர்த்தமானது தேவனுடைய இராஜ்ஜியத்தின் பிள்ளைகளுக்கே குணமாக்குதல் சொந்தமானது ஆகும். தேவன் அவிசுவாசிகள் மேல் இரக்கம் செய்து இரட்சிப்பிற்குள் இழுப்பதற்கு குணமாக்கின்றார், ஆனால் குணமாக்குதல் தேவனுடைய பிள்ளைகளுக்கே சொந்தமானது.

   நீங்கள் குணமாக்குதலை பெறவேண்டுமாயின், முதலாவது படிமுறை தேவனுடைய பிள்ளையாக மாறுவதே ஆகும். நீங்கள் உங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராகவும், குணமாக்குபவராகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் இன்னும் அதை செய்யவில்லை என்றால் இந்த ஜெபத்தை செய்யுங்கள்:

*அன்புள்ள ஆண்டவரே, நான் பாவி என்று அறிவேன், நான் அதை ஏற்றுக்கொண்டு, எனது பாவத்திலிருந்து மனந்திருப்புகின்றேன். ஒரே உண்மையான ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் இயேசு கிறிஸ்துவே என நான் விசுவாசிக்கின்றேன், அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமானவர். இயேசுவினுடைய தியாகத்தை நான் ஏற்று, அவர் எனக்காக சிலுவையில் மரித்தார் என்பதை ஏற்றுக்கொள்ளுகின்றேன். என்னை மன்னித்து, என் பாவங்களிலிருந்து என்னை கழுவும். இயேசுவின் நாமத்தில், ஆமேன்.*

3. சிறந்த ஆவிக்குரிய போராட்டத்தை வெற்றிக்கு நல்ல ஆவிக்குரிய அஸ்திபாரம் அவசியமாகும். நீங்கள் புதிய விசுவாசியானால், சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் பாடமான *"விசுவாசத்தின் அஸ்திபாரம்"* என்றும் பாடத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.

4. நீங்கள் காட்புலனாக யுத்தத்தில் ஓர் குற்றவாளி என உணருகின்றீர்களா? உங்களுடைய வாழ்க்கையில் எந்த பகுதியில் அல்லது ஊழியத்தில் நீங்கள் போராட்டத்தில் தோற்கின்றீர்கள்? நீங்கள் கீழ்கண்ட போராட்டங்கில் தோல்வியடைகின்றீர்களா?

 ----- ஆவிக்குரிய உலகில்
 ----- உணர்ச்சிக்குரிய உலகில்
 ----- பௌதீக உலகில்
 ----- மனநிலை சார்ந்த உலகில்

 இந்த கையேட்டில் படித்த விதத்தில், இப்பகுதியில் உங்களுக்கு உதவும் உபாயங்களை கற்று கொள்ளுவீர்கள்.

5. இந்த பாடத்தில் கலந்துரையாடப்பட்ட 2 இராஜாக்கள் 6ல் உள்ள கதையை மீளாய்வு செய்க. கேயாசியை போன்ற அல்லது தோத்தான் நகரத்தில் கவலையற்றவர்களை போன்ற அல்லது தமது பௌதீக சரீரங்களில் பிசாசின் தாக்குதல்களுக்கு பயந்த மக்களை நீங்கள் அறிவீர்களா? நீங்கள் எவ்வாறு அவர்களுக்கு உதவுவீர்கள்?

..........................................................................................................................................

..........................................................................................................................................

6. ஆவிக்குரிய போராட்டத்திற்கு பல கோணங்கள் இருப்பினும், நீங்கள் பாவத்திற்கு எதிராக தனிப்பட்ட ரீதியில், உலகத்தின் தீமைக்கு எதிராக சமூக ரீதியில், குணமாக்குதல் மற்றும் விடுதலையின் மிகப்பெரிதான ரீதியில் போராட வேண்டும். இந்த ஆவிக்குரிய யுத்தத்தில் உங்கள் பகுதியை குறித்து ஜெபம் பண்ண தொடங்குங்கள். ஆவிக்குரிய போராட்டத்தில் உங்களுக்கு பழக்கம் இல்லையெனில், சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் பாடம் ஒன்றான *"ஆவிக்குரிய போர்வியூகங்கள்: ஆவிக்குரிய போராட்டத்திற்கான கையேடு"*யை மேலதிகமாக கற்க.

7. ஆவிக்குரிய போராட்டத்தின் கையேடாக வேதாகமம் முழுவதையும் கற்க. இது கடந்தகால போராட்டங்களை தோல்வியுறச்செய்து, வெற்றிகளுக்கு அழைக்கும் ஆவிக்குரிய போராட்டத்தின் வரலாற்று பதிவாகும், இறுதி மோதலின் நேரம் வரையான எதிர்கால வெளிப்படுத்தல்களை இது கொண்டுள்ளது.

# அதிகாரம் இரண்டு

# போரிடுவதற்கான அழைப்பு

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ குணமாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட பலதரப்பட்ட பதங்களை விளங்கிக்கொள்ளவும்,
- ☐ தெய்வீக குணமாக்குதலை வரையறுக்கவும்,
- ☐ குணமாக்குதல் மற்றும் விடுதலை என்பவற்றை வேறுப்படுத்தவும்,
- ☐ குணமாக்குதல் மற்றும் விடுதலையானது உலகத்திற்கு சுவிசேஷத்தை எவ்வாறு கொண்டு செல்லும் என்பதற்கான அர்ப்பணிப்பை விபரிக்க முடியும்.

## பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

**உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள். அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன். (யாத்திராகமம் 23:25)**

## அறிமுகம்

பழைய ஏற்பாட்டு காலங்களில் தேவனுடைய ஜனங்களை யுத்தம் செய்ய அழைக்கும்படியாக எக்காளம் பயன்படுத்தப்பட்டது. இன்று, உலகிலுள்ள ஜாதிகள் அனைத்திற்கும் ஆவிக்குரிய எக்காளம் மூலம் அழைப்பு விடுக்கப்படுகின்றது. இது காட்புலனாகாத யுத்தத்தின் சத்தமாகும். இது ஓர் சேனையிற்கான அழைப்பாகும். வாழ்க்கையின் தோல்வி மற்றும் கட்டிலிருந்து இயேசு கிறிஸ்து விற்குள் விடுதலை மற்றும் வாழ்கையின் வெற்றிக்கு செல்லும்படியாக இந்த பாடம் உங்களை அழைக்கின்றது.

## பதங்களில் வரைவிலக்கணங்கள்

குணமாகுதல் என்னும் வார்த்தைக்கு பல வித்தியாசமான பதங்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன.

**மன ரீதியான குணமாக்குதல்:** ஓர் காரியத்திற்கு மேலான மனதின் நிலை, ஆவியின் நிலை, மாந்திரீகம், சாமானிசம், வேதாகமத்திற்கு சம்பந்தப்படாத குணமாக்குதல் போன்ற பதங்களை உபயோகித்தலை இது குறிக்கும்.

**இயற்கை சக்தியிலான குணமாக்குதல்:** தேவனால் அல்லாத இயற்கை சக்தியிலான குணமாக்குதலுக்கு ஆதாரங்கள் உள்ளன, ஆனால் இந்த பதங்களை நாம் படிக்க மாட்டோம். சாத்தானால் இயற்கை சக்திகளிலான கிரியைகளை செய்ய முடியும் (யாத்திராகமம் 7:8-13).

**மருந்தின் குணமாக்குதல்:** இந்த மாதிரியான குணமாக்குதலானது மருத்துவர்கள், தாதிகள், மருத்துவமனைகள் மற்றும் மருந்துகளினால் குணமாக்கப்படுகின்றது. நாம் படிக்கும் விதமாக, முறையான மருத்துவ குணமாக்குதலானது தேவனுடைய வார்த்தையோடு அல்லது தெய்வீக குணமாக்குதலோடு போராடாது, இது அவருடைய நன்மையின் நீடிப்பாகும்.

**இயற்கையான குணமாக்குதல்:** தேவனுடைய சாதாரண கிரியையின் செயற்பாட்டினால் இயற்கையான சரீர செயற்பாட்டின் மூலம் நடைபெறும் குணமாக்குதலாகும். மனித சரீரத்தில் நடைபெறும் இயற்கையான சரீர செயற்பாடானது தேவனுடைய இயற்கையையும், அவருடைய மிகப்பெரிதான கரத்தின் கிரியையையும் காட்டுகின்றது. "இயற்கையான குணமாக்குதலானது" இயற்கை முறையில் சரியான உணவருந்தல், இயற்கை விட்டமீன்கள் மற்றும் தாதுப்பொருட்கள், போதுமான ஓய்வு போன்றவற்றை பயன்படுத்துவதை உள்ளடக்குகின்றது.

**விசுவாசம் மூலம் குணப்படுதல்:** இந்த பதம் தேவனுடைய குணமாக்குதலுக்கு கூட உபயோகிக்கலாம். நாம் அதை உபயோகப்படுத்துவதில்லை, ஏனென்றால் அது ஊழியம் செய்யும் ஒருவரது விசுவாசத்தினால் அல்லது ஊழியம் பெற்ற ஒருவரின் மேல் சார்ந்திருக்கும்.

**தெய்வீக குணப்படுத்தல்:** "தெய்வீகம்" என்னும் பதம் தேவனை நோக்கி மையப்படுத்தும், மனிதனுடைய விசுவாச பிரதியுத்தரவு அல்ல. மன நடத்தை மற்றும் இயற்கை சக்திகளிலான குணமாக்குதலிலிருந்து இது கூட வேறுப்படுத்தும். "தெய்வீகம்" ஒரே மெய்யான தேவனையும் அவரது இயற்கையையும் வெளிப்படுத்தும் பரிசுத்த வேதாகமமாகிய அவருடைய வார்த்தையை குறிப்பிடும்.

"குணமாக்குதல்" சுகப்படுத்தல் அல்லது பூரணப்படுத்தலை குறிக்கும். குணமாக்குதல் என்பது ஆவிக்குரிய, பௌதீக, உணர்வுபூர்வ, மனரீதியான, தீய சக்திகளின் நிலைகளிலிந்து விடுபடுதலை உள்ளடங்கும். இது நோய் எதிர்ப்பு சக்தியல்ல. எமது சரீரமானது "அழிந்து செல்லும் தன்மை"யில் உள்ளது, அத்தோடு உலகத்தில் இருக்கும் நாள் வரைக்கும் சாத்தானின் தாக்குதலுக்காக திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இந்த பாடத்தில் நாம் "தெய்வீக குணமாக்குதல்" என்னும் பதத்தை உபயோகித்து இதை கற்போம். ஒரே உண்மையான இறைவன் தனது கிரியைகளை வெளிப்படுத்தி, அவரது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி, இயேசு கிறிஸ்துவின் பரிகாரத்தினால் அவர் மேலுள்ள தரிசனத்திற்காக கிரியை செய்து, அவரை சரீரம், ஆத்துமா, ஆவியினால் முழுமையாக உருவாக்குதல் ஆகும்.

தெய்வீக குணமாக்குதலானது அதிசயமாகவும், செயற்பாடாகவும் காணலாம். அதிசயமான குணமாக்குதலானாது தேவனுடைய வல்லமையையும், தெய்வீக சமூகத்தையும் முழுமையாக அதிகம் மெய்பித்து காட்டுகின்றது, தெய்வீக குணமாக்குதலானது அதிசயமான குணமாக்குதலிலும் குறைவற்ற ஒரு செயற்பாட்டு ரீதியின் படியிலாக நடைபெறுகின்றது (மாற்கு 8:22-25ஐ பார்க்க). மருத்துவ மற்றும் இயற்கையிலான குணமாக்கல் தெய்வீக புலனாக இருந்தாலும் கூட, உண்மையிலேயே தேவனே குணமாக்கலை மேற்கொள்கின்றார்.

## குணமாக்குதல் மற்றும் விடுதலை

"குணமாக்குதல்" மற்றும் "விடுதலை" ஆகிய பதங்களை இந்த பாடத்தில் நாம் மாறி மாறி பயன்படுத்துவோம்.

குணமாக்குதலனாது பௌதீக, உணர்வுபூர்வமான, மனநிலை சுகயீனத்திற்கு ஊழியம் செய்யும் அதேவேளை விடுதலையானது மனநிலை மற்றும் பௌதீக நிலையிற்கு தெய்வீகத்தோடு சம்பந்தத்திலான விடுதலையோடு தொடர்புபடுகின்றது.

மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரத்தால் ஆனபடியால், மனநிலையில் ஏற்படும் பாதிப்புக்கள் பௌதீக சுகயீனத்திற்கு வழிவகுக்கும் என இப்பாடத்தின் பின்பகுதிகளில் நீங்கள் கற்பீர்கள். பௌதீக சுகவீனமானது பிசாசு பிடித்த மனநிலையிற்கு கொண்டு செல்லலாம். ஆகவே குணமாக்குதலும், விடுதலையும் வித்தியாசமாயிருந்தாலும், மனிதனுடைய திரித்துவ நிலை காரணமாக அவைகள் தொடர்பாயிருக்கின்றது.

## போரிடுவதற்கான அழைப்பு

ஆதிகால சபைகள் அவர்களுடைய ஆவிக்குரிய அனுபவத்தை போராட்டம் என்னும் பதத்தினூடாக காண்பித்தனர். இராணுவ பதம் புதிய ஏற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவனுடைய கவசம் பாதுகாப்பாகும். தேவனுடைய வசனமானது பட்டயத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. சாத்தானுடைய தாக்குதலானது அக்கினிமயமான கணைகள் என அழைக்கப்படுகின்றது. விசுவாசமே நல்ல போராட்டம் என்பதோடு விசுவாசிகள் நல்ல போராட்டத்தை போராடும்படி அழைக்கப்பட்டுள்ளனர்.

இன்று கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கை போராட்டமாகவே உள்ளது. சாத்தான் தொடர்ந்தும் மனினுடைய ஆவி, ஆத்துமாவோடு யுத்தம் செய்கின்றான். அவன் பௌதீக சரீரத்தை சுகவீனம், வியாதி, கட்டு ஆகியவற்றால் தொடர்ந்தும் தாக்குகின்றான். தேவன் தமது மக்களை ஞானமுள்ள யுத்தத்திற்காக அழைத்துள்ளார். இந்த சந்ததியில் குணமாக்குதலையும், விடுதலையையும் பெறுவதற்கும், தேவனுடைய வார்த்தையினால் தம்மைத்தாமே போரிடுதவற்கான விசுவாசிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டு சுவிசேஷத்திலே, இயேசு ஊழியம் அறிவிக்கும்போது ஒருவரையும் ஒருபோதும் குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான ஊழியம் கட்டளையிட்டதோடு அல்லாமல் அர்ப்பணிக்கவில்லை. “போகையில், வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்” (மத்தேயு 10:1,7-8) என அவர் அவர்களுக்கு கூறினார்.

புறஜாதிகளிடத்தில் குணமாக்குதலும், விடுதலையும் வந்தபோது, ஆவிக்குரிய அறுவடை பெருகியதால், புதிய வேலையாட்கள் உடனடியாக தேவைப்பட்டனர். உபதேசித்து, போதித்து, குணமாக்கி, விடுதலை செய்ய அனுப்புவதற்கு 70ற்கும் மேலதிகமான சீஷர்கள் மாத்திரம் தேவைப்படவில்லை.

சுவிசேஷத்தை பரப்பி அதில் பங்கு கொள்ளுவதற்கு அதிகமான புதிய முறைகள் காணப்படுகின்றன. அச்சு, கணிணி, இணையம், வானொலி, சீடிக்கள் மற்றும் டீவீடிக்கள் ஆகிய பொருட்களும் அவைகளில் உள்ளடங்குகின்றன. புதிய போக்குவரத்து முறைகளும் சுவிசேஷத்தை வேகமாக பரப்ப மக்களுக்கு உதவுகின்றது. இந்த புதிய தொழில்நுட்பங்களின் உபயோகமானது, உண்மையான சுவிசேஷத்தின் வல்லமையிற்கு இன்னும் அதாரமாக உள்ளானது. இதனால் சுவிசேஷத்தின் வல்லமை உள்ளது என நாம் அறிகிறோம். இதையே புளித்தமாவின் உவமை கூறுகின்றது:

> **மேலும் அவர்: தேவனுடைய ராஜ்யத்தை நான் எதற்கு ஒப்பிடுவேன்? அது புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு ஸ்திரீ எடுத்து முழுவதும் புளிக்கும்வரைக்கும் மூன்று படிமாவிலே அடக்கிவைத்தாள் என்றார். (லூக்கா 13:21)**

அதிகமான சத்தத்தினாலும், பகிரங்கத்தினாலும் தேவனுடைய காரியமானது செயற்படாது என இந்த பகுதி வெளிப்படுத்துகின்றது. போராட்ட வீரர்களை பெருக்கி, கண்டங்களை கைப்பற்றுவதின் மூலம் இராஜ்ஜியத்தை வெளியரங்கமாக பரப்பலாம் என நீங்கள் எண்ணலாம். மாவிலுள்ள கொஞ்சமான புளி பரவுவதை போல தேவனுடைய இராஜ்ஜியம் விரிவாக்கப்படுன்றது. புளியானது கொஞ்சமாகவும், காணப்படாமலும் இருக்கலாம், ஆனால் அதற்கு எல்லையற்ற செயற்பாடு காணப்படுகின்றது. அதே போல், தேவனுடைய இராஜ்ஜியத்தின் வல்லமையானது வெளியரங்கமானது அல்ல, அது உள்ளகமானது. தேவனுடைய இராஜ்ஜியத்தின் சுவிசேஷமானது உலகத்தின் “எல்லை” வரை பரவும், ஏனென்றால் இராஜ்ஜியத்தின் உள்ளான வல்லமையானது மாவிலுள்ள புளியைப்போன்றதாகும்.

இயேசு சுவிசேஷத்தின் உள்ளான வல்லமையானது கடுகு விதையின் வளர்ச்சிக்கு ஒப்பிட்டுள்ளார்:

> **உங்கள் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யம் எதற்கொப்பாயிருக்கிறது. அதை எதற்கு ஒப்பிடுவேன்?**
>
> **அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் தோட்டத்திலே போட்டான். அது வளர்ந்து, பெரிய மரமாயிற்று. ஆகாயத்துப் பறவைகள் வந்து, அதின் கிளைகளில் அடைந்தது என்றார். (லூக்கா 13:18-19)**

மாவிலுள்ள புளித்தல் பரவுவதை போல, சிறு கடுகுவிதையானது மாபெரும் மரமாக மாறுகின்றது. தேவனுடைய இராஜ்ஜியத்தின் மேன்மையானது, அமைதியாயிருப்பினும், இன்னும் வல்லமையான தாக்கமுள்ளாயிருக்கின்றது என இந்த உதாரணம் காட்டுகின்றது.

இன்னொரு உவமையில், கடுகு அளவான சிறிய விசுவாசத்தினாலும் கூட ஆகாத காரியம் ஒன்றுமில்லை என இயேசு கூறினார். நவீன தொழில்நுட்பங்கள் இல்லாத மக்களிடத்திலும் கூட சுவிசேஷத்தின் பரவுதல் மட்டுப்படுத்தப்பட்டதல்ல என்று இது அர்த்தப்படுகின்றது. சிறு அளவிலான விசுவாசத்தினாலும் கூட இராஜ்ஜியம் மேன்மையடையும். சபை வரலாற்றில் மாபெரும் ஆவிக்குரிய அறுவடையானது சேர்க்கப்பட வேண்டியுள்ளது. புதிய ஏற்பாட்டு காலங்களில் குணமாக்குதல் மற்றும் விடுதலை என்னும் தேவனுடைய வல்லமையின் மெய்ப்பித்தலுக்கூடாக இந்த அறுவடை செய்யப்படுகின்றது. இதனாலேயே அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்றார்:

> **உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,**
>
> **என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது. (1கொரிந்தியர் 2:4-5)**

இயேசு பரலோகத்திற்கு திரும்பும் போது, விசுவாசிகளுக்கு உலக ஜாதிகளுக்கு சுவிசேஷம் பரவுவதற்கான மாபெரும் பொறுப்பை ஒப்படைத்தார்:

> **நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். (மாற்கு 16:15)**

நீங்கள் பொறுப்பை அதிகாரம் இல்லாமல் நிறைவேற்ற முடியாது. இயேசு அவருடைய சீஷர்களுக்கு

பொறுப்பை நிறைவேற்ற அதிகாரத்தை கொடுத்தார். எதிரியினுடைய அனைத்து வல்லமையையும் மேற்கொள்ளும் வல்லமையையும் இந்த அதிகாரம் உள்ளடங்கும்:

> **விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். (மாற் 16:17-18)**

சுகவீனம், வியாதி, கட்டு ஆகியவற்றிலிருந்து இயேசு கிறிஸ்துவின் வெற்றியான வாழ்க்கைக்கு நகரவும், போராட்டத்திற்கான அழைப்பிற்கு பதிலளிக்கவும் நீங்கள் ஆயத்தமா? இயேசுவினுடைய வல்லமையை மெய்ப்பித்து காட்டும் ஊழியம் செய்ய நீங்கள் ஆயத்தமா? பௌதீக உடலோடு யுத்தம் செய்ய நீங்கள் ஆயத்தமா? வியாதியஸ்தர்கள் சுகமாவதை காணவும், பிசாசின் கட்டிலிருந்தவர்கள் விடுவிக்கப்படுவதையும் நீங்கள் பார்க்க வேண்டுமா? இது குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான ஊழியம். இது மதத்தலைவர்களுக்கானது மட்டுமல்ல அல்லது இது போதகர்களுக்கும் அல்லது சுற்றிதிரியும் சுவிசேஷர்களுக்கானது மாத்திரமல்ல, “அவர்கள் விசுவாசிக்கும் போது யாவருக்கும் இந்த அடையாளம் தொடரும்.”

நீங்கள் விசுவாசியா? அப்படியாயின், நீங்களும் கூட, இந்த ஆவிக்குரிய போராட்டத்திற்கான அழைப்பிற்கு பதிலளிக்க வேண்டும்.

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

.................................................................................................................................................

2. குணமாக்குதலுக்கு உபயோகப்படும் கீழ்வரும் பதங்களை வரையறுக்க:

பௌதீக குணமாக்குதல்:

.................................................................................................................................................

இயற்கை சக்தியிலான குணமாக்குதல்:

.................................................................................................................................................

மருத்துவ குணமாக்குதல்:

.................................................................................................................................................

இயற்கையான குணமாக்குதல்:

.................................................................................................................................................

விசுவாசத்தினால் குணமாக்குதல்:

.................................................................................................................................................

3. தெய்வீக குணமாக்குதல் என்பதை வரையறுக்க.

.................................................................................................................................................

4. குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கு இடையிலான வித்தியாசம் என்ன?

.................................................................................................................................................

5. குணமாக்குதல் மற்றும் விடுதலையானது சுவிசேஷம் உலகத்தை அடைவதற்கான அர்ப்ப-ணிப்பிற்கு எவ்வாறு தொடர்புபடுகின்றது?

.................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. **விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். (மாற்கு 16:17-18)**

   நீங்கள் விசுவாசியா?........................................................................................................

   அப்படியாயின், அடையாளங்கள் உங்களை தொடருக்கின்றதா? வியாதியஸ்தர்கள் குணமடைந்து, பிசாசின் தாக்கமுள்ளவர்கள் விடுதலையாகின்றார்களா?................................

   இல்லையாயின், இந்த பாடத்தை கற்றுக்கொள்ளும்போதே உங்களுக்கே உரித்தான விடுதலை மற்றும் குணமாக்குதலுக்கான இந்த ஊழியத்தை பெற உங்கள் இருதயத்தை திறக்கும்படியாக ஜெபியுங்கள்.

2. நீங்கள் போதகராய், சுவிசேஷகராய், ஆசிரியராய் இருந்தால், பவுலுடைய இந்த வார்த்தையை கவனத்தில் கொள்ளுங்கள்:

   **உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது. (1 கொரிந்தியர் 2:5)**

   வல்லமையில்லாத போதனையும் உபதேசமும் “மனித ஞானத்தின் வார்த்தையால் இணங்க வைப்பதோடு” தேவனை விட மனிதனால் விசுவாசத்தை ஊக்குவிப்பதற்கான விளைவை தரும். பவுல் தனது செய்திகளில் நகைச்சுவையான காரியங்ளை சுட்டிக்காட்டி ஆய்வு செய்வதை பற்றி நீங்கள் யோசித்து பார்க்கின்றீர்களா? அத்தேனே மற்றும் கொரிந்துவில் நடைபெற்ற நகைச்சுவையான காரியங்களை தனது ஊழிய நேரங்களில் கூறி செலவிடுவதை குறித்து நீங்கள் யோசித்து பார்க்கின்றீர்களா? அவர் வியத்தகு திட்டம் ஒன்றை தீட்டுவதை நீங்கள் கற்பனை செய்கின்றீர்களா? அது கவர்ச்சிகரமான வார்த்தை அல்ல என்றும், மனித ஞானத்தினாலோ அல்லது தேவனால் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட பொழுதுபோக்கோ அல்ல என்றும் பவுலுக்கு தெரியும். அது ஆவியையும் வல்லமையும் நிரூபித்து காட்டுதலாகும். உங்களுடைய ஊழியம் எவ்வாறு அளவிடப்படுகின்றது?

3. உங்களுக்கு குணமாக்குதலும் விடுதலையும் வேண்டுமா? குணமாக்குதலின் வரைவிலக்கணத்தை மீண்டும் படியுங்கள்:

   *“ஒரே உண்மையான இறைவன் தனது கிரியைகளை வெளிப்படுத்தி, அவரது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி, இயேசு கிறிஸ்துவின் பரிகாரத்தினால் அவர் மேலுள்ள தரிசனத்திற்காக கிரியை செய்து, அவனை சரீரம், ஆத்துமா, ஆவியினால் முழுமையாக உருவாக்குதல் ஆகும்.”*

   எம்முடைய ஜெபமானது இந்த பாடத்தை நீங்கள் படித்து முடிப்பதற்கு முன்னர், தேவன் அவரது இயற்கையை வெளிப்படுத்தி, அவருடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி, கிறிஸ்துவின் பாவ நிவர்த்தியை வழங்குவதின் மூலம் நீங்கள் சரீரம், ஆத்துமா, ஆவியினால் பூரணப்படுவதே ஆகும்.

## அதிகாரம் மூன்று

# யுத்தத்திற்கு முன்னர்

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான நான்கு பொதுவான உத்தரவுகளை பட்டியல் படுத்தவும்,
- ☐ குணமாக்குதலை ஊழியத்தில் பயன்படுத்தாத தலைவர்களுக்கு தரப்பட்ட எச்சரிக்கைகளை சுருக்கமாக தரவும்,
- ☐ குணமாக்குதல் மற்றும் விடுதலையோடு சம்பந்தப்பட்ட சரியான போதனையின் தேவையை விளக்கவும் முடியும்.

### பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

**உங்கள என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி, என் வசனங்களுக்கு உன் செவி யைச் சாய். அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக, அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள். அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம். எல்லாக் காலலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும். (நீதிமொழிகள் 4:23)**

### அறிமுகம்

குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான பாடத்தை நீங்கள் தொடங்குவதற்கு முன்னர் இந்த ஊழியத்தின் பகுதியில் நீங்கள் முகங்கொடுக்க ஆரம்பிக்கும் தற்போதைய குறிக்கோள்களின் சிலவற்றை விளங்கிக் கொள்ளுதல் உங்களுக்கு உதவி புரியும். குணமாக்குதல் மற்றும் விடுதலை சம்பந்தமாக அநேக விசுவாசிகள் செய்கின்றவை.....

### அதை புறக்கணிக்கின்றார்கள்:

ஓர் இறையியலாளர் நூலகத்தில் சுவிசேஷத்தின் சுருக்கங்களை கொண்ட சில 87,125 பக்கமுடைய இறையியல் கருத்துக்ளை மீளாய்வு செய்தார். இந்த மொத்த பக்கங்களில், 71 பக்கம் மாத்திரமே குணமாக்குதலின் தியானத்திற்கான ஒதுக்கப்பட்டிருந்தது: 131 பக்கம் அற்புதங்களுக்காக ஒதுக்கப் பட்டிருந்தது: 85 பக்கம் அதிசயங்கள் மற்றும் அடையாளங்களுக்கான ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த காரியத்திற்காக புதிய ஏற்பாட்டில் அதிகளவான வசனங்கள் தியானிக்கப்பட்டுள்ள நிலையில் இதே தலைப்பை நவீன இறையியலில் ஒப்பிடும்போது குறைந்த அளவிலான பக்கங்களே எழுதப்பட்டுள்ளது, நாம் அநேக நவீன சுவிசேஷ வட்டங்களில் இக்காரியம் புறக்கணிக்கும் போக்கை காண்கின்றோம்.

வேதாகமத்தின் தவறான அற்புதங்களின் எச்சரிக்கையால் சிலர் குணமாக்குதலை புறக்கணிக்கிறார்கள். அவர்கள் இதை அனைத்து அற்புதங்களிற்கான எச்சரிக்கையாக எண்ணுகின்றார்கள் (மாற்கு 13:22-23). சிலர் குணமாக்குதலை கோட்பாடாக ஏற்றுக்கொள்ளுகின்றார்கள், ஆனால் நடைமுறையில் அதை

மறுக்கின்றார்கள். சுகவீனம் மற்றும் துன்பப்படுதல் ஆகியவற்றின் சம்பந்தமான அனைத்து கேள்விகளுக்கான பதிலை வழங்க முடியாத காரணத்தினால் சிலர் இதை மறுக்கின்றார்கள். பயத்தின் தோல்வி காரணமாக சிலர் குணமாக்குதலை தவிர்க்கின்றார்கள். இரு நிலைகளை நாம் காண்கின்றோம். சிலர் நிதி, ஞானம், பாதுகாப்பு ஆகியவற்றிற்கு நம்பிக்கையுடன் ஜெபிக்கின்றனர், ஆனால் நாம் குணமாக்குதலுக்காக ஜெபிக்க பயப்படுகின்றோம். சிலர் பகுத்தறிவு, நிச்சயித்தல் போன்றவை அவர்களை தாக்கியுள்ளதால் அதை உணரார்கள். சிலர் கண்டிப்பாக "பார்த்து விசுவாசிக்க வேண்டும்" என்பதால் இயற்கை மற்றும் பொருள்சார் உலகத்தினால் பெற்றுக்கொள்ளுகின்றார்கள்.

## அதை மறுக்கின்றார்கள்:

சில மக்கள் குணமாக்குதலையும் விடுதலையையும் இன்று மறுக்கின்றார்கள், ஏனென்றால் அவர்களிடம் இறையியல், மாதிரிகள், பயிற்சிகள் மற்றும் அனுபவங்கள் அதனோடு இன்மையினால் ஆகும்.

புதிய ஏற்பாட்டு சுவிசேஷமானது பௌதீக குணமாக்குதலை குறித்து 26 காரியங்களை கொண்டுள்ளது. அப்போஸ்தலருடைய புஸ்தகம் 5 காரியங்களை கொண்டுள்ளது. பௌதீக குணமாகுதல் 1 கொரிந்தியர் 12:8-11 மற்றும் 28-30 ஆகிய காரியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. யாக்கோபு 5:13-16 சுகவீனத்திற்காக எவ்விதமாக ஜெபிக்க வேண்டும் என விசேட ஆலோசனைகளை தருகின்றது. குணமாக்குதலை போதிக்கும் சுவிசேஷங்கள் நிருபங்களில் இல்லை. நிருபங்கள் எழுதப்படும் வேளைகளில் சுகவீனமானவர்களுக்கான ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன, அத்தோடு ஆதிகால சபைகளில் தர்க்கத்திற்கு இடமளிக்கின்ற தெய்வீக குணப்படுத்தலானது மறைவாயிருக்கவில்லை.

## அதை சிக்கலாக்குகின்றனர்:

குணமாக்குதல் மற்றும் விடுதலையை அநேக மக்கள் மனிதனுடைய கலாச்சாரத்திற்கு எதிர்மாறாக தேவனுடைய வார்த்தைகளினால் சிக்கலாக்குகின்றார்கள். நீங்கள் இந்த சில கலாச்சாரத்தை குறித்து அதிகாரம் 11ல் கற்பீர்கள். மற்றவர்கள் இதை அனுபவத்தோடு சிக்கலாக்குகின்றார்கள். அவர்கள் குணமாக்குதலுக்காக ஜெபித்தும் கூட அதை பெற்றுக்கொள்ளாதிருக்கின்றார்கள். ஆனால் நீங்கள் உங்களுடைய நம்பிக்கையை அனுபவத்திற்கு இல்லாமல், தேவனுடைய வார்த்தையின் அடிப்படையிலேயே வைத்திருக்க வேண்டும் (அனுபவத்திற்கு சார்பாக பேசும் வசனங்களை தவிர). தவறு முறைகளிலான குணமாக்குதலும் இந்த காரியத்தை சிக்கலாக்குகின்றது. மக்கள் தனிப்பட்ட ரீதியில் துர்உபதேசம், பணத்திற்காக குணமாக்குதல், ஏமாற்றுதல் ஆகியவற்றை காண்பதோடு, முழுமையாக குணமாக்குதலுக்கன்றி அதிகமான கவனத்தை பௌதீக குணப்படுத்தலுக்கு செலுத்துகின்றார்கள். குணமாக்குதல் மற்றும் விடுதலையானது ஏற்றத்தாழ்வுகளோடு இருப்பதும் கூட இதை சிக்கலாக்குகின்றது. எந்த உண்மையாயினும், எவ்விதத்திலும் செல்லுபடியானாலும், மற்ற உண்மைகளை விலக்குவதற்கான வலியுறுத்துவதில் நடைமுறை தவறாகும்.

## அதை தாமதமாக்குகின்றனர்:

சில மக்கள் குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான ஊழியத்தை தாமாதப்படுத்துகின்றனர், ஏனென்றால் அனைத்துக்குமான பதில் அவர்களிடம் இல்லாதிருப்பதின் காரணம் ஆகும். அவர்கள் சிலர் ஏன் குணமடைந்து மற்றவர்கள் ஏன் குணமடையாதிக்கின்றார்கள் என விளங்காதிருக்கின்றார்கள். (நீங்கள் இதை குறித்து அதிகாரம் 13ல் கற்பீர்கள்). ஊழியம் செய்வதற்கு குணமாக்குதலை குறித்து

அனைத்தையும் விளங்கிக்கொண்டிருக்க வேண்டியது அவசியமில்லை அல்லது நீங்கள் மீட்கப்பட்டு மற்றவர்களுக்கு சாட்சியாயிருக்கும்போது நீங்கள் இரட்சிப்பின் பற்றி எல்லாவற்றையும் விளங்கிக் கொண்டதை விட அதை பெற வேண்டியதில்லை.

தேவனுடைய குணமாக்குதலின் வல்லமையை அனுபவித்து ஊழியம் செய்யும் போது சில பதில்கள் வரும். மற்ற கேள்விகளுக்கு ஒருபோதும் விடையளிக்கப்படமாட்டாது. “ஏன்” மற்றும் “எவ்வாறு” என அனைத்திற்கும் நீங்கள் அறிந்திருந்தால், பின் உங்களுக்கு தேவன் அவசியம் இல்லை. வேதாகமம் கூறுகின்றது “நாம் ஒரு பகுதியையே அறிந்துள்ளோம்”. சுகவீனம் மற்றும் துன்பப்படுதலோடு சம்பந்தப்படும் குணமாக்குதல் எப்பொழுதும் இரகசியமாகவே இருக்கும், ஏனென்றால் இரகசியத்தின் அக்கிரமம் இப்பொழுதே கிரியை செய்கின்றது (2 தெசலோனிக்கேயர் 2:7).

## சரியான போதனைக்கான தேவை

குணமாக்குதல் மற்றும் விடுதலையோடுள்ள தற்போதுள்ள குறிக்கோளின் இந்த மீளாய்வு, இந்த காரியத்தில் சரியான போதனையை நமக்கு ஏன் தேவை என காட்டுகின்றது. அநேகர் பௌதீக ரீதியிலும், ஆவிக்குரிய ரீதியிலும் அழிக்கப்பட்டுள்ளனர், ஏனென்றால் குணமாக்குதல் சம்பந்தமான தேவனுடைய போதனை பற்றி அவர்கள் அறியாதிருக்கின்றார்கள்:

> **என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள். (ஓசியா 4:6)**

குணமாக்குதல் (பூரணப்படுதல்) இராஜ்ஜயத்தின் சுவிசேஷத்தில் ஒரு பகுதியாயிருப்பதோடு, பரவுவதற்காகவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது (லூக்கா 15:16-18). இயேசு போதித்து, உபதேசித்து, குணமாகிக்கி, விடுதலை செய்ய அழைத்துள்ளார். குணமாக்குதலையும் விடுதலையையும் விட்டுவிட முடியாது, ஆனால் அவர்கள் சுவிசேஷத்தை போதித்து உபதேசிக்கும்போது இதை விலக்கும்படியாக வலியுறுத்தலாகாது. எமது சபையானது குணமாக்குதலின் நிலையமாக இருக்க வேண்டும் என வேதாகமம் வெளிப்படுத்துகின்றது (லூக்கா 14:16-24). மனிதர்கள் மாறுவதை விட குணமாக்கவே நாம் பார்க்கின்றோம்:

> **முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள். (எபிரெயர் 12:13)**

விசுவாசிகள் என்ற வகையில், காணாமல் போய் மரிக்கும் உலகத்தில் குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான நல்ல செய்தியை நாம் பகிராது இருந்தால் அது பாவமாகும். வேதாகமம் கூறுகின்றது:

> **ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும். (யாக்கோபு 4:17)**

இந்த வார்த்தையை குணமாக்குதலுக்கு பிரயோகிப்பதற்கான அர்த்தமானது, நாம் குணமாக்குதலின் ஊழியத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளோம் என்பதை அறிந்திருத்தலாகும் -- ஆனால் இன்னும் செய்யா விட்டால் -- அது பாவமாகும். தேவன் ஊழியத்தில் குணமாக்குதலை பயன்படுத்தாத தலைவர்களுக்கு கடுமையான எச்சரிக்கைகளை கொடுக்கின்றார்:

**மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரை... நீங்கள் பலவீனமானவைகளைப் பலப்படுத்தாமலும், நசல்கொண்டவைகளைக் குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டாமலும், துரத்துண்டவைகளைத் திருப்பிக்கொண்டு வராமலும், காணாமற் போனவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கடூரமுமாய் அவைகளை ஆண்டீர்கள். நான் காணாமற்போனதைத்தேடி, துரத்துண்டதைத் திரும்பக் கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல்கொண்டதைத் திடப்படுத்துவேன். நியாயத்துக்குத்தக்கதாய் அவைகளை மேய்த்து, புஷ்டியும் பெலமுமுள்ளவைகளை அழிப்பேன். (எசேக்கியேல் 34:2,4,16)**

## சரியான குறிக்கோளோடு தொடங்குதல்

நீங்கள் குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான பகுதியை அணுகும்போது, நீங்கள் சரியான குறிக்கோளோடு செய்ய வேண்டியது அவசியமாகும். பௌதீக குணப்படுத்தலை எதிர்பார்த்தலும், ஊழியம் செய்தலும் இயேசு கிறிஸ்துவின் மிகப்பெரிதான குணமாக்கும் அற்புதத்தின் மூலமான இரண்டாம்தர ஆவிக்குரிய சமரசம் என எப்பொழுதும் நினைவிற் கொள்ளுங்கள்.

நீங்கள் இந்த பாடத்தை அணுகும்போது கடந்த கால அனுபவத்தையும், நீங்கள் எண்ணிய கலாச்சாரத்தையும் எண்ணாமல் இருத்தல் அவசியமாகும். நீங்கள் கற்பிக்கப்பட வேண்டியவர்களாகும். பரத்திலிருந்து வரும் ஞானத்தின் ஓர் குறிப்பானது அது ஓர் திறந்த காரணமாகும் (யாக்கோபு 3:17). நீங்கள் கற்பிக்கப்படாதிருக்கும்போது ஆவிக்குரிய ரீதியில் நீங்கள் ஆபத்திலிருக்கின்றீர்கள். உங்களுடைய சிறிய “எண்ணத்திற்குள்” கடவுளை வைத்து அனுமானித்தல் பாவம் என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். யோபுவினுடைய நண்பன் இந்த வழியிலேயே பாவம் செய்தனர். தனிப்பட்டவரது அனுபவத்தை உலகளாவிய ரீதியில் பயன்படுத்தல் தவறாகும்.

மனிதனுடைய பாரம்பரிய போதனையை கேட்டிறாத ரீதியில் அல்லது உங்களுடைய மதிப்பீட்டின்படி இந்த பாடத்தை படிக்க தொடங்குகள். தேவனுடைய வார்த்தை சொல்லுவதை ஏற்றுக் கொள்ளுங்கள். அது நீங்கள் குணமாகின்றீர்கள் என்று சொல்லுமாயின், அதை நம்புங்கள். அது சுகயீனம் அற்றவர்கள் மேல் கையை வைக்கும்படி சொன்னால் அதை செய்யுங்கள்.

சூத்திரங்களை எதிர்பார்த்தோ, குணமாக்குதலை பெறுதல் அல்லது ஊழியம் செய்யும் முறைகளை வைத்து இந்த பாடத்திற்குள் நுழைய வேண்டாம். வேதாகமம் எவ்வித சூத்திரங்களையும் வழங்கவில்லை யென்றாலும் பலதரப்பட்ட கொள்கைகளை வெளிப்படுத்துகின்றது, இவைகளோடு நாம் உடன்படு-வோம். சூத்திரங்களை எதிர்பார்த்தலை விட, குணமாக்குபவர் உங்களோடு இருக்கின்றார் என்பதை விளங்கிக் கொள்ளுங்கள். உங்களுடைய ஞானத்தை உயர்த்துவதோடு, அவரோடான தொடர்பை நெருக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

இயேசுவும் பரிசுத்த ஆவியானவரும் உங்களோடிருக்கின்றார்கள். குணமாக்குதல் என்பது வெளிப் புறமாக நீங்கள் பெறலாம் என எண்ணும் காரியம் அல்ல, ஆனால் உற்புறமாக வெளிப்படும் காரியம் என்பதை நீங்கள் கற்பீர்கள். உங்களோடுள்ள வல்லமையின் வெளிப்படுத்தும் கொள்கையை மாத்திரம் நீங்கள் எதிர்பாருங்கள்.

## குணமாக்குதலின் ஊழியம்

குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான ஊழியத்தை நீங்கள் தொடங்கும் முன் இயேசுவின் குணமாக்குதலின் ஊழியத்தின் உதாரணத்தை நீங்கள் உண்மையிலேயே பின்தொடருவீர்களாயின், நீங்கள் அறிந்திருக்க வேண்டியது, நீங்கள்:

-தேவனுடைய ஊழியக்காரனாயிருங்கள்: மாற்கு 10:44

-களைப்புறுங்கள், ஓய்வுருங்கள்: மாற்கு 6:31; யோவான் 4:6; அப்போஸ்தலர் 3:6

-மற்றவர்களுடைய அவிசுவாசத்தை எதிர்கொள்ளுங்கள்: மாற்கு 5:38-42

-சமய தலைவர்களின் உபத்திரவங்களை அனுபவப்படுங்கள். அவர்களில் சிலர் பரிசேயர்-களை போல இருக்கின்றார்கள்-- வாழ்க்கையை விட அதிகளவு பிரமாணங்களிலும், பாரம் பரியத்திலும் கவனம் செலுத்துகின்றார்கள்: லூக்கா 6:6-9

-உங்களில் அருகிலிருந்தோரிடமிந்து உபத்திரவங்களை அனுபவியுங்கள்: மாற்கு 6:4; மத்தேயு 13:58

-பகிரங்கப்படுத்தலை எதிர்பார்ப்பதைவிட புறக்கணியுங்கள்: மாற்கு 5:43; 8:26; மத்தேயு 8:4

-தேவனுடைய வல்லமையின் மூலம் வரும் பொருள்களையோ, எந்தவித தனிப்பட்ட ஆதாயங்களையோ தவிருங்கள்: அப்போஸ்தலர் 8:18-24

-தனிப்பட்ட மகிமையை புறக்கணியுங்கள்: அப்போஸ்தலர் 14:8-18

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

2. குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான பொதுவான பிரதியுத்தரவு நான்கை பட்டியலிடுக.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

3. குணமாக்குதலின் ஊழியத்தை செய்யாத தலைவர்களுக்கு கொடுக்கபட்ட எச்சரிப்புக்களை சுருக்கமாக்குக.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

4. குணமாக்குதல் மற்றும் விடுதலை சம்பந்தமாக சரியான போதனை ஏன் அவசியமாகும்?

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. குணமாக்குதல் சம்பந்தமாக உங்களுடைய சொந்த குறிக்கோளை பரீட்சிக்க. பிரயோகிக்க கூடியவற்றை பரீட்சிக்க. நீங்கள்:

 ....அதை புறக்கணித்தீர்களா?
 ....அதை மறுத்தீர்களா?
 ....பாரம்பரியங்கள், அனுபவங்கள், தவறான சித்தரிப்புக்கள், சமமின்மையால் சிக்கலாக்கி -னீர்களா?
 ....அதை தாமதம்பண்ணீர்களா?

2. உங்களுடைய குறிக்கோளில் நீங்கள் சரிப்படுத்திய திட்டத்தை எழுதுங்கள்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

3. நீங்கள் ஆவிக்குரிய தலைவராயின், நீங்கள் தொடர்ந்தும் உபதேசித்து, போதனைசெய்து, குணமாக்குதலின் ஊழியத்தை செய்கின்றீர்களா? இல்லையாயின், இதை சரிப்படுத்த உங்க-ளுடைய திட்டத்தை எழுதுங்கள்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

4. நீங்கள் ஏற்கனவே குணமாக்குதலின் ஊழியத்தை செய்வீர்களாயின், இயேசுவோடு எவ்வாறு உங்களுடைய ஊழியத்தை தொடர்புபடுத்த கீழ்வரும் பதங்களோடு ஒப்பிடுவீர்கள்:

 -தேவனுடைய ஊழியக்காரனாயிருங்கள்: மாற்கு 10:44
 -களைப்புறுங்கள், ஓய்வுருங்கள்: மாற்கு 6:31; யோவான் 4:6; அப்போஸ்தலர் 3:6
 -மற்றவர்களுடைய அவிசுவாசத்தை எதிர்கொள்ளுங்கள்: மாற்கு 13:58
 -சமய தலைவர்களின் உபத்திரவங்களை அனுபவப்படுங்கள்: லூக்கா 6:6-9
 -உங்களில் அயலவரிடமிருந்து உபத்திரவங்களை அனுபவியுங்கள்: மாற்கு 6:4; மத்தேயு13:58

-பகிரங்கப்படுத்தலை எதிர்பார்ப்பதைவிட புறக்கணியுங்கள்: மாற்கு 17:36; 8:26; மத்தேயு 8:4
-தேவனுடைய வல்லமையின் மூலம் வரும் பொருள்களையோ, எந்தவித தனிப்பட்ட ஆதாயங்களையோ தவிருங்கள்: அப்போஸ்தலர் 8:18-24
-தனிப்பட்ட மகிமையை புறக்கணியுங்கள்: அப்போஸ்தலர் 14:8-18

5. இந்த பாடத்திற்கான குணமாக்கும் வாக்குத்தத்ததை படியுங்கள்:

**என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி. என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய். அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக. அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள். அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம். எல்லாக் காலலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும். (நீதிமொழிகள் 4:23)**

நீங்கள் செய்ய வேண்டியததை குறித்துக்கொள்ளுங்கள்:
-தேவனுடைய வார்த்தையை சந்தியுங்கள்.
-தேவனுடைய வார்த்தையை உங்கள் காதுகளில் செவிசாயுங்கள்.
-உங்கள் கண் முன்னால் அவருடைய வார்த்தைகளை வையுங்கள்.
-உங்களுடைய இருதயத்தில் அவைகளை வையுங்கள்.
-உங்களுடைய இருதயத்தில் ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்ளுங்கள்.

தேவனுடைய வார்த்தை ஆரோக்கியத்தோடு ஒப்பிடப்பட்டுள்ளது. அவருடைய கட்டளையா-னது:
-அவரை கண்டுபிடிப்போருக்கு ஜீவனை கொடுக்கின்றது.
-அவர்களுடைய மாம்சத்திற்கு ஆரோக்கியத்தை கொடுக்கின்றது.

வாழ்க்கையோடு தொடர்புபட்ட உங்கள் இருதயத்திலுள்ள நிலைக்கான தொடர்பின் வசனம் 23ஐ குறித்துக்கொள்ளுங்கள். (உங்களுடைய பௌதீக சரீரத்தின் வாழ்க்கை செயற்பாடு)

6. புதிய கால அமைப்பின் எழுச்சி என அழைக்கப்படுவதின் முக்கியமானது உண்மையான தெய்வீக குணப்படுத்தலின் ஆதாரம் இயேசு கிறிஸ்து என ஏற்றுக்கொள்ளுவதாகும். இந்த இயக்கம் மனிதநேய நுட்பங்களை பயன்படுத்துவதோடு, தேவனல்லாத ஆவிக்குரிய வல்லமை களிலிருந்து உதவிகளை எதிர்பார்க்கின்றனர். புதிய கால அமைப்பினர் ஆவிகளின் உதவி-களை, வழிகாட்டிகளை, படிகங்களை, மூலிகைகளை மற்றும் வேறு ஆவிக்குரியதற்ற உபா-யங்களை பௌதீக குணப்படுத்தலை தாக்குவதற்காக பயன்படுத்துகின்றனர். தேவனுடைய வார்த்தையை துஷ்பிரயோகம் செய்தால் அவ்விதமான குணப்படுத்தல்கள் புறக்கணிப்படுதல் வேண்டும்.

# பகுதி இரண்டு

## தாக்குதல்

ஒரு தாக்குதலானது வல்லமையானதோடு, வன்முறையான தாக்குதலாகின்றது. மனிதனுடைய ஆவியிலும், ஆத்துமாவிலும் பாவமே பிசாசின் தாக்குதலாக இருக்கின்றது. பௌதீக உலகில் அவனுடைய தாக்குதலானது வியாதியாகும்.

உங்களுடைய பௌதீக சரீரத்தின் சாத்தானுக்கான தாக்குதலுக்கு எதிரான உங்கள் வல்லமையான யுத்தத்திற்கு, நீங்கள் முதலில் வியாதி குறித்து விளங்கிக்கொண்டிருத்தல் வேண்டும். இந்த பகுதியில் நீங்கள் கற்கும் காரியங்களாவன:

வியாதியிற்கான ஆதாரம்

வியாதியிற்கான காரணங்கள்

வியாதியின் வகைகள்

வியாதியின் இறுதி விளைவுகள்

## அதிகாரம் நான்கு

# வியாதியிற்கான ஆதாரம்

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- எவ்வாறு உலகத்திற்குள் வியாதியும் மரணமும் வந்தது என்பதை விபரிக்கவும்,
- வியாதியிற்கான ஆதாரத்தை இணங்காணவும்,
- வியாதியினால் அழியும் கூறுகளை இணங்காணவும்,
- வியாதியை தேவன் எவ்வாறு காண்கின்றார் என்பதை விபரிக்கவும்,
- வியாதி மற்றும் மரணத்தின் சாபத்திலிருந்து எவ்வாறு நீங்கள் விடுதலை பெற முடியும் என்பதை விளக்கவும் முடியும்.

### பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

> **மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார். (கலாத்தியர் 3:13)**

### அறிமுகம்

வியாதியிற்கு ஒரு ஆதாரம் இருக்கின்றது, எவ்வாறாயினும் ஒரு நபர் வியாதி அடையவதற்கு பற்பல காரணங்கள் இருக்கின்றது. பவுல் இதை கூறுவதிலிருந்து உறுதிப்படுத்துகின்றார்... “இதினிமித்தம், உங்களில் அநேகர் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்;” (1கொரிந்தியர் 11:30) இந்த அதிகாரம் வியாதியிற்கான ஆதாரத்தில் அக்கறை செலுத்துவதோடு அதிகாரம் ஐந்து வியாதியிற்கான காரணங்களை பரீட்சிக்கும்.

### எவ்வாறு உலகத்திற்குள் வியாதியும் மரணமும் வந்தது

ஆதியாகமம் 1 மற்றும் 2 அதிகாரம் வேதாகமமானது மனிதனுடைய சிருஷ்டிப்பின் கதையை பதிவு செய்கின்றது. தேவன் மனிதனை தமது சாயலில் படைத்தார், அவனுக்குள் ஜீவனை ஊதினார், அவன் ஜீவாத்துவமானான். மனிதனானவன் ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய திருத்துவ நிலையில் படைக்கப்பட்டுள்ளான். சரீரம் மனிதனுடைய பௌதீக பகுதியாகும். ஆவிக்குரிய பகுதியான ஆவியும் ஆத்துமாவும் அவனில் கிரியை செய்ய, நினைக்க, உணர, உணர்வுபூர்வமாக பிரயுத்தரவு செய்ய, தேவனுக்கு ஆவியில் பதிலளிக்க அனுமதிக்கின்றது. உண்மையிலேயே இந்த திரித்துவத்தின் ஒரு பகுதி மற்ற இரு பகுதிகளோடு இசைவாக இருந்தது, அத்தோடு மனிதனின் முழு திரித்துவ பகுதிகளும் தேவனோடு இசைவாக இருந்தது. மனிதன் பாவமற்றவனாயிருந்ததோடு ஆவி, ஆத்துமா, சரீரம் ஆரோக்கியமாயிருந்தது.

ஆதியாகமம் 3ம் அதிகாரம் முதன் மனிதர்களான ஆதாமும், ஏவாளும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் அவருக்கெதிராக பாவம் செய்ததை பதிவு செய்துள்ளது. அவர்களுடைய பாவம் பாவத்தின் சாபத்தையும் அனைத்து மனிதர்களுக்கும் மேலான மரணத்தையும் கொண்டுவந்தது:

**ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று. (ரோமர் 5:12)**

இந்த மரணத்தின் சாபமானது மனிதனுக்கும் தேவனுக்கும் இடையிலான ஆவிக்குரிய வேறுபாட்டை ஏற்படுத்தியதோடு மனித வாழ்கையை முடிவுறுத்தும் பௌதீக மரணத்தை ஏற்படுத்தியது. ஆதியாகமம் பதிவு செய்த இந்த சாபத்தின் உடனடியான விளைவை நாம் காணலாம். ஆதாமும் ஏவாளும் பாவத்தினால் ஆவிக்குரிய வியாதியடைந்ததால் தேவனிடமிருந்து ஒளிந்துகொண்டார்கள். ஆதாம் ஏவாளை குற்றம் சாட்டினான், இது முதல்முறையாக உறவுமுறைகளை சிதைக்கும் விளைவை கொண்ட உணர்வுபூர்வமான வியாதியை ஆரம்பித்தது. காயீன் ஆபேலை கொன்றது சமூக வியாதியிற்கான உதாரணமாகும். சாராளுடைய மலட்டுத்தன்மையும், அபிமெலேக்குடைய வாதையுமான பதிவிற் கூடாக பௌதீக வியாதி வந்தது.

## சாத்தானே ஆதாரம்

மனிதனுடைய மேலாக மரணத்தின் சாபம் வந்தபோது, சாத்தான் மனிதனுடைய மரபுசார் சரீரத்திற்குள் நுழைந்து அவனுடைய தாக்கும் பணியினை ஆரம்பித்தான். வேதாகமமானது உலகத்தின் தீமைக்கு சாத்தானே ஆதாரம் என உறுதிப்படுத்துகின்றது. இயேசு அவனை கள்ளன் என்று கூறுகின்றார்...

**திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். (யோவான் 10:10)**

பாவம் ஆத்துமாவை அழிப்பதுபோல வியாதி சரீரத்தை அழிக்கின்றது. வியாதி ஆரோக்கியம், மகிழ்ச்சி, பணம், நேரம், முயற்சி மற்றும் பலத்தை இல்லாமல் செய்கின்றது. அது உண்மையிலேயே கொன்று அழிக்கின்றது. "விபத்து" ஏற்பட்டு உங்களுடைய சரீரம் அழிதல் கூட சாத்தானே முகவராய் இருக்கின்றான். வியாதியிற்கான ஆதாரம் சாத்தான் என்பதால் நீங்கள் சோதிக்கப்படும்போதும், பாவம் செய்ய வைக்கப்படும்போதும் தடுக்க வேண்டும். நீங்கள் சோதனையையும் பாவத்தையும் தடுக்கும்போது, உங்கள் ஆவியிற்கும் ஆத்துமாவிற்கும் எதிரான சாத்தானுடைய தாக்குதல்களை எதிர்த்து ஆவிக்குரிய யுத்தம் செய்கின்றீர்கள். நீங்கள் வியாதியிற்கு எதிராக தடுக்கும்போது, உங்கள் பௌதீக உடலை அவனுடைய தாக்குதல்களிற்கு எதிராக ஆவிக்குரிய யுத்தம் செய்கின்றீர்கள்.

## வியாதியினால் அழிவுறும் கூறு

ஒவ்வொரு வியாதிகளும் வாழ்கையில் நுண்ணுயிர்களால் வருகின்றது. உங்களுடைய ஆவி உங்கள் சரீரத்திற்கு ஜீவனை கொடுப்பதைபோல, சாத்தான் வியாதியிற்கான அழிவுறும் கூறை உண்டாக்குகின்றான். பௌதீக உலகில், தேவன் நல்ல கலங்களை எடுத்து, ஜீவனை கொண்டுவரும்படியாக அதை பெருக்கும்போது, புதிய குழந்தை பிறக்கின்றது. சாத்தான் இந்த நேர்மறையான செயற்பாட்டை போலியாக தன்னுடைய சொந்தமாக எதிர்மறையாக செய்கின்றான். அவன் உயிருள்ள கலத்தை எடுத்து (கிருமி, புற்றுநோய் ஆகியவை) அதை பெருக்கி மரணத்தை கொண்டுவர செய்கின்றான். இதுவே நீங்கள் வியாதியடைந்திருக்கும்போது உங்கள் சரீரத்தில் கிரியைசெய்யும் "பலவீனத்தின் ஆவி" ஆகும். பலவீனத்தின் ஆவி துரத்தப்படும்போது, உங்கள் சரீரத்திலுள்ள வியாதி செத்துவிடும்.

நுண்ணுயிர் உங்கள் சரீரத்தில் இருக்கும்போது, வியாதியானது தொடர்ந்து இருந்து, அதன் அழிக்கும் வேலையை செய்யும்.

எவ்வாறாயினும் அனைத்து வியாதிகளும் தீய ஆவிகளின் நேரடி தாக்குதலுக்கு அற்றது, சாத்தானாலேயே வியாதியின் கூறு உலகத்தில் காணப்படுகின்றது. உதாரணத்திற்கு, உங்களுக்கு ஜலதோஷம் பிடிக்குமாயின் நீங்கள் வெறுங்காலுடன் குளிர்மையான காலநிலையில் நடந்திருப்பீர்கள். இது தீய சக்திகளின் நேரடியான தாக்குதலினால் அல்ல, ஆனால் உலகிலுள்ள சாத்தானுடைய வியாதியின் கூறுகளின் விளைவானது ஜலதோஷமாகும். (நீங்கள் உங்களுடைய பொது அறிவையும் உபயோ-கிக்க வேண்டும்! அதைபற்றி மேலதிகமாக அதிகாரம் இருபதில் காணப்படுகின்றது).

## தேவன் எவ்வாறு வியாதியை காண்கின்றார்

தேவன் எவ்வாறு வியாதியை காண்கின்றார் என்று நீங்கள் விளங்கினால் நீங்கள் ஒருபோதும் மீண்டும் அதன் ஆதாரத்தில் சந்தேகம் கொள்ளமாட்டீர்கள். தேவன் வியாதியை சிறையிருப்பு என அழைக்கின்றார்:

> **கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார்... (யோபு 42:10)**

இயேசு சிறையிருப்பிலிருந்து விடுதலைக்காக உபதேசிக்க வந்தார்:

> **கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்.. (லூக்கா 4:18)**

இயேசு வியாதியை கட்டு என அழைத்தார்:

> **இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக்கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டியதில்லையா என்றார். (லூக்கா 13:16)**

இயேசு மக்களை உண்மையின் மூலமாக விடுவிக்க வந்தார்:

> **சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார். (யோவான் 8:32)**

உண்மையில் இயேசு வியாதியை அடக்குமுறையாகவும், குணமானவர்களை ஒடுக்கப்பட்டவர்களா-கவும் இணங்காட்டினார்:

> **நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். (அப்போஸ்தலர் 10:38)**

வேதாகமம் மரணத்தை சத்துருவாக இணங்காண்கின்றது:

**பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம். (1கொரிந்தியர் 15:26)**

வியாதி எரிபந்தம் என அழைக்கப்படுகின்றது:

**என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது. என் மாம்சத்தில் ஆரோக்கியம்இல்லை. (சங்கீதம் 38:7)**

அது தீரா வியாதி என நோக்கப்படுகின்றது:

**தீராவியாதி அவனைப் பிடித்துக் கொண்டது. (சங்கீதம் 41:8)**

தேவன் வாதைகளையும் அல்லது வியாதிகளையும் அனுப்புவதை குறிக்கும் வேதாகம வசனங்கள் காணப்படுகின்றது. ஆனால் உலகத்தில் இந்த வியாதிகளுக்கான உண்மையான ஆதாரம் தேவன் அல்ல, அவர் சிலவேளைகளில் எதிரிகளின் மேல் நியாயத்தீர்ப்பை நிறைவேற்றி அவருடைய குறிக்கோள்களை நிறைவேற்ற அவைகளை உபயோகிக்கின்றார்.

## சாபத்திலிருந்து மீட்பு

வியாதியும் மரணமும் பாவத்தினால் உண்டான சாபத்தின் ஒரு பகுதி என இந்த பாடத்தில் நீங்கள் கற்றீர்கள், ஆனால் கலாத்தியர் 3:13 அறிவிக்கின்றது, “கிறிஸ்து எம்மை நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு மீட்டுக்கொண்டார்.” இயேசு சிலுவையில் மரித்த வேளையில், அவர் பாவத்தின் சாபத்தை தமக்குத்தாமே எடுத்து மரித்தார் அத்தோடு....

**ஆகையால் ஒரே மீறுதலினாலே (ஆதாம்) எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரேநீதியினாலே (இயேசு கிறிஸ்து) எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று.**

**அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள். (ரோமர் 5:19)**

இரட்சிப்பும் குணமாக்குதலும் கல்வாரி சிலுவையில் இயேசு செய்த பாவநிவர்த்தியின் பலனாயிருக்கின்றது. அவருடைய மரணம் மற்றும் நியாயத்தீர்ப்பிற்கூடாக, இயேசு பாவத்தின், வியாதியின், மரணத்தின் உங்கள் நிலையை எடுத்துகொண்டார். உங்களுடைய பாவத்தின் பலனை அவர் சுமந்தபடியினால், நீங்கள் அதை சுமக்க அவசியம் இல்லை. அவர் உங்களுடைய வியாதியை சுமந்தபடியினால், நீங்கள் அதை சுமக்க அவசியம் இல்லை. அவர் வாழ்க்கையில் உயிருடன் எழுந்தபடியினால், நீங்களும் எழுந்துள்ளீர்கள்! சாத்தான் கொல்லவும், திருடவும், அழிக்கவும் வருகின்றான், ஆனால் இயேசு கூறினார்...

**நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். (யோவான் 10:10)**

நீங்கள் இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்பொழுது, பாவத்தின் சாபம் உடைக்கப்படுகின்றது. பாவமும் சுகவீனமும் ஆகிய இரண்டும் தாக்கக்ககூடிய கொல்லப்படக் கூடிய சரீரத்தில் நீங்கள் வாழ்ந்தாலும், நீங்கள் ஒருபோதும் சாபத்தினால் தீர்ப்பளிக்கப்படவில்லை. நியாயப்பிரணமானத்தின் சாபத்திலிருந்து இயேசு உங்களை மீட்டிருக்கின்றார்! உங்கள் வாழ்க்கையில் வரும் சுகவீனத்தின் ஆதாரத்தை பற்றி நீங்கள் கேள்வி கேட்கும்போது, “அது சாகுதலுக்கு, திருடுவதற்கு அல்லது அழிக்க வருகின்றதா?” என கேளுங்கள், அவ்வாறாயின் அதின் ஆதாரம் சாத்தானாகும். “அது உங்கள் வாழ்க்கையை ஏராளமாக வாழ வழிவகுக்கின்றதா?” அவ்வாறாயின் அதின் ஆதாரம் தேவன் ஆகும். அவ்வாறே ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்....

> **நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. (யாக்கோபு 1:17)**

உங்களில் நீங்களே கேளுங்கள்: “இந்த துன்பம் சிறந்த பரிசும், நல்லதும் தானா?” உங்களால் “ஆம்” என்று பதில் அளிக்க முடியாவிட்டால், வார்த்தை சொல்லுபவற்றை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்: சுகவீனம் தேவனிடம் இருந்து வருவதல்ல!

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

2. மரணமும், வியாதியும் உலகத்திற்குள் எவ்வாறு வந்தது?

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

3. சுகவீனத்தின் ஆதாரம் யார்?

.....................................................................................................................................................

4. தேவன் எவ்வாறு வியாதியை காண்கின்றார்?

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

5. வியாதியினால் அழிவுறும் கூறு பற்றி இந்த பாடத்தில் நீங்கள் கற்றது என்ன?

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

6. வியாதி மற்றும் மரணத்தின் சாபத்திலிருந்து நீங்கள் எவ்வாறு தப்ப முடியும்?

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. சுகவீனம் பற்றிய தேவனுடைய கருத்தோடு உங்கள் கருத்தை ஒன்றிற்கு கொண்டுவரும் போது, சுகவீனத்தை நீங்கள் எவ்வாறு காணுவீர்கள்?

.......................................................................................................................................

.......................................................................................................................................

2. தேவன் மரணத்தின் ஆதாரம் அல்ல ஆனால் அவர் தமது குறிக்கோளை நிறைவேற்றும்படி அதை பயன்படுத்துகின்றார். இதை காட்டும் கீழ்கண்ட உதாரணங்களை படியுங்கள்:

| | |
|---|---|
| -எகிப்தின் வாதை: | யாத்திராகமம் 7-11 |
| -மிரியாமின் குஷ்டரோகம்: | எண்ணாகமம் 12:10 |
| -யோராம் ராஜாவின் வியாதி: | 2 நாளாகமம் 21:18 |
| -கேயாசியின் குஷ்டரோகம்: | 2 ராஜாக்கள் 5:27 |
| -தாவீதின் மகனின் மரணம்: | 2 சாமுவேல் 21:18 |
| -ஏலியின் குமாரன்களின் மரணம்: | 1 சாமுவேல் 2:34 |
| -யோபுவின் துன்பங்கள்: | யோபுவின் புஸ்தகம் |
| -யோசேப்பின் துரதிஷ்டம்: | ஆதியாகமம் 45:5-7 |
| -இயேசுவினுடைய சிலுவை பலி: | மாற்கு 14:35-36 மற்றும் ரோமர் 5:6-12 |
| -பவுலினுடைய சிறையடைப்பு: | பிலிப்பியர் 1:12,19 |
| -பவுலுடைய சரீரத்திலிருந்த முள்: | 2 கொரிந்தியர் 12:7 |

3. நீங்கள் துன்பத்தை அனுபவிக்கும் சந்தர்ப்பங்களை நினையுங்கள். ஆண்டவர் எவ்வாறு அவருடைய மகிமைக்காக அதை உபயோகிக்கின்றார்?

.......................................................................................................................................

.......................................................................................................................................

4. தற்போதுள்ள துன்பத்திற்கு காரணம் தேவன் அல்ல, ஆனால் அவருடைய மகிமைக்காக அவர் பயன்படுத்துவதை குறித்து நீங்கள் எவ்வாறு எண்ணுகின்றீர்கள்? இதற்காக ஜெபியுங்கள்.

.......................................................................................................................................

.......................................................................................................................................

5. துன்புறும் ஒருவருக்கு உற்சாகத்தை வழங்கும்படிக்கு இந்த பாடத்தில் நீங்கள் கற்றது என்ன? மற்ற பாடத்தை படிக்கும் முன்னர் அதை அவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

.......................................................................................................................................

6. நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவரிடத்தில் உங்களுடைய சுகவீனம் காரணமாக கீழ்வரும் கேள்விகளை கேளுங்கள்:

-அது சாகடிக்கின்றதா? திருடுகின்றதா அல்லது அழிக்கின்றதா? அப்படியானால் அதன் ஆதாரம் சாத்தானாகும். (யோவான் 10:10)
-உங்களுடைய வாழ்க்கையை ஏராளமாக்க அது அனுமதிக்கின்றதா? அப்படியானால் அதன் ஆதாரம் இயேசுவாகும். (யோவான் 10:10)
-அது நல்ல அல்லது சிறந்த பரிசா? இல்லையாயின், அது தேவனில் இருந்து வந்தது அல்ல. (யாக்கோபு 1:17)

7. நீங்கள் மரணம் மற்றும் வியாதியின் சாபத்திலிருந்து விடுபட்டீர்கள் என்று எண்ணுகின்றீர்களா? இல்லையாயின், இந்த அதிகாரத்தை மறுபடியும் மீளாய்வு செய்து கொள்ளுங்கள்.

## அதிகாரம் ஐந்து

# வியாதியிற்கான காரணங்கள்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ வியாதியிற்கான ஐந்து காரணங்களை அடையாளம் காணவும்,
- ☐ ஆவிக்குரிய பிரமாணங்களை துஷ்பிரயோகப்படுத்துவதின் மூலம் வியாதியின் விளைவுகள் என்ன என்பதை விபரிக்கவும்,
- ☐ சாத்தானுடைய நடவடிக்கையிலிருந்தான வியாதியின் விளைவுகள் என்ன என்பதை விபரிக்கவும்,
- ☐ தேவனுடைய இயற்கையிலான பிரமாணங்களை துஷ்பிரயோகப்படுத்துவதின் மூலம் வியாதியின் விளைவுகள் என்ன என்பதை விபரிக்கவும்,
- ☐ தெளிவில்லாத புத்தியின்மை கிறிஸ்துவின் சரீரத்திற்கு எவ்வாறு வியாதியின் விளைவை கொண்டு வரும் என்பதை விபரிக்கவும்,
- ☐ அழிக்கக்கூடிய சரீரத்திலிருந்து ஆவியை பாதுகாப்பதற்கான வேதாகமத்தின் நேரடி அழைப்பை கலந்துரையாடவும் முடியும்.

## பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

> **நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பி நடந்தேன். இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன். நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது. அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன். நான் ஒருபோதும் உம்முடைய கட்டளைகளை மறக்கமாட்டேன். அவைகளால் நீர் என்னை உயிர்ப்பித்தீர். (சங்கீதம் 119:67,71,93)**

## அறிமுகம்

வியாதியிற்கு ஓர் ஆதாரம் காணப்படுகின்றது, அது சாத்தான் ஆகும், ஆனால் வியாதியானது உங்களுக்கு வருவதற்கு பல காரணங்கள் உண்டு. வியாதியிற்கான சில காரணங்கள் இங்குள்ளன:

## ஆவிக்குரிய பிரமாணங்களை துஷ்பிரயோகப்படுத்துதல்

மனிதன் பாவம் செய்தபோது, சரீரத்தை சீர்கெடுக்க மரணம் தனது கிரியையை ஆரம்பித்தது:

> **இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று. (ரோமர் 5:12)**

> **பாவத்தின் சம்பளம் மரணம். (ரோமர் 6:23)**

பாவத்தின் ஆதாரம் வியாதியாகும், ஆனால் ஒரு நபரின் வியாதியானது அவர்களுடைய சொந்த தனிப்பட்ட பாவத்தின் காரணமாக இருக்க வேண்டியது அவசியம் இல்லை. இயேசு பிறவியிலேயே

குருடனாயிருந்த மனிதனுடைய உதாரணத்தின் மூலம் இதை தெளிவுப்படுத்தினார். (யோவான் 9:1-3). தேவன் பாவத்தை வியாதியினால் தண்டித்தாரானால், உலகத்திலிருக்கும் ஒவ்வொரு பாவியும், பாவம் செய்யும் கிறிஸ்தவனும் வியாதியாயிருத்தல் வேண்டும். பாவமும் வியாதியும் தொடர் பாயிருப்பது உண்மையாகும், ஆனால் இதை நீங்கள் தனிப்பட்ட வழியில் பிரயோகிக்கும் போது கவனமாயிருத்தல் வேண்டும். உங்களுடைய சொந்த இயலாமையை கணக்கிடவும், வியாதியை அசட்டைப்பண்ணவும் இது இலகுவான வழியில் பயன்படலாம்.

தனிப்பட்ட மனிதனின் பாவம் அல்லது விசுவாசமின்மையின் விளைவே வியாதி என வசனமானது மிக மோசமான ஒரு முறையில் விளக்கப்பட்டுள்ளது. நீங்கள் தேவனுடைய பிரமாணத்தை உடைத்தால், துன்பப்படுவீர்கள் என்பது உண்மையானது. இது உங்கள் சொந்த பாவத்தின் கிரியைக்கான துன்பமாகும். பாவிகளுக்கு இது நியாயத்தீர்ப்பாகும். விசுவாசிகளுக்கு இது தண்டனையாகும். நீங்கள் தேவனுடைய பிரமாணத்தை வைத்திருந்தாலும், பாவமான உலகில் நீங்கள் வாழுகின்றபடியால் இன்னும் துன்பப்படலாம். உலகத்தில் பாவம் இருக்கின்றபடியால், நீதிமான் பாவிகளை விட துன்புறுவான்.

தனிப்பட்ட பாவத்தின் துன்புறுத்தலுக்கு உதாரணமானது, எயிட்ஸ் எனப்படும் வியாதியை ஒருவர் பெறுவதாகும், இது அவரது சொந்த பாவத்தின் செயலாகும். இந்த வியாதியை ஒருவர் இரத்த மாற்றுதல் மூலம் பெறுவாறாயின் பாவமான உலகத்தில் இருக்கின்றபாடியினால் உண்டாகும் துன்பப்படுதலின் உதாரணமாகும்.

வேதாகமத்தின் பல வசனங்கள் வியாதியானது தனிப்பட்ட பாவத்தோடு தொடர்புபட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றது. ரோமர் 6:19ம் வசனம் பலவீனம் அசுத்தத்தினால் (பாவம்) வருகின்றது என்பதை உறுதிப்படுத்துகின்றது. ஆவிக்குரிய பிரமாணங்களை நீங்கள் எப்பொழுது துஷ்பிரயோகப் படுத்துகின்றீர்களோ, அப்பொழுது உபாகமம் 28ம் அதிகாரத்தில் விபரிக்கப்பட்டுள்ள பாவத்திற்கு கீழ் நீங்கள் நடக்கின்றீர்கள். (மாற்கு 2:1-12; யோவான் 5:1-11,14; யாக்கோபு 5:14-16; சங்கீதம் 38:3,7 ஆகியவற்றையும் பார்க்கவும்) வஞ்சகமான பாவத்தோடும் வியாதியானது தொடர்புபட்டுள்ளது (அப்போஸ்தலர் 5:1-11 மற்றும் 1 கொரிந்தியர் 11:27-32 ஆகியவற்றையும் பார்க்கவும்).

பாவத்திற்கு திரும்புதலானது குணமாக்குதலை இல்லாமற்செய்துவிடும்:

> **அதற்குப்பின்பு இயேசு அவனைத் தேவாலயத்திலே கண்டு: இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார். (யோவான் 5:14)**

## பௌதீக பிரமாணங்களை துஷ்பிரயோகம் செய்தல்

பௌதீக பிரமாணங்களை நீங்கள் துஷ்பிரயோகம் செய்தல் சில வியாதிகளை கொண்டுவரும். இங்கு சில உதாரணங்கள் காணப்படுகின்றன:

-சரியான உணவின்மை (நிறை அதிகரிப்பு, நிறை குறைவு).
-அதிகப்படியான வேலை, மிதமிஞ்சிய வேலை.
-சரியான ஓய்வின்மை.

-சுய கட்டுப்பாடு இன்மையால் கொடூர உணர்வுகளான கோபம், கசப்புத்தன்மை போன்றவை விளைவாக்கப்படுதல்.

-மற்றவர்களோடு நேர்மையான தொடர்பு இன்மை (பகை, மன்னிப்பின்மை ஆகியவை).

-பயிற்சி செய்தல் (மிக அதிகம் அல்லது மிக குறைவு).

-போதை மற்றும் மதுவினால் துஷ்பிரயோகப்படுத்தல்: போதைப்பொருட்களை உடலிற்குள் ஏற்றுதல்.

-இயற்கையான விதிகளை போன்ற ஈர்ப்பு விதியை துஷ்பிரயோகப்படுத்தல்.

(உதாரணத்திற்கு கட்டடத்திலிருந்து நீங்கள் குதித்தால், நீங்கள் துன்பப்படுத்தப்படுவீர்கள்!)

-பயங்கரமான செயல்களின் மூலம் உங்களை நீங்களே ஆபத்திற்குட்படுத்தி, பாதுகாப்பான கருவிகளை உபயோகிக்க மறுத்தல் (உதாரணத்திற்கு காரில் உள்ள பட்டி, ஆய்வுகூடத்தில் கண்ணாடி, கட்டடம் கட்டுமிடத்தில் தலைகவசம் அணியாதிருத்தல் ஆகியவை).

## சாத்தானுடைய தாக்குதல்கள்

சில சமயங்களில் வியாதிகளானது சாத்தானுடைய நேரடி தாக்குதலினால் வருகின்றது. இதற்கு யோபு ஓர் சிறந்த உதாரணம் ஆவார் (யோபு 1 மற்றும் 2ஐ வாசியுங்கள்). யோபு சாத்தானுடைய நேரடி தாக்குதலால் பௌதீக, ஞானப்பிரமான, உணர்வுரீதியான வியாதிகளை அனுபவித்தார். அவர் தன்னுடைய சொந்த பாவத்தின் காரணமாக துன்பப்படவில்லை. யோபு நீதிமானாகிய மனிதர் என்று தேவனே சாட்சி பகர்ந்தார்.

ஆவிக்குரிய மனிதனை சாத்தான் பாவத்தின் மூலம் தாக்குகின்றான். வியாதியே பௌதீக மனிதனுக்குரிய அவனது தாக்குதலாகும். புதிய ஏற்பாட்டிலும், நவீன காலத்திலும், சாத்தானுடைய தாக்குதலினால் அநேக நீதிமான்கள் துன்பப்படுகின்றனர், ஏனென்றால் நாம் எந்நேரமும் சாத்தானுடைய தாக்குதலுக்குட் படலாம் என்பதோடு எந்த தாக்குதலினாலும் ஆபத்து உண்டு.

உங்கள் ஆவியையும் ஆத்துமாவையும் செய்வது போல் சாத்தான் உங்கள் சரீரத்தை தாக்குகின்றான். உங்களுடைய மனம், சரீரம், மாம்சம் (கண்கள் மற்றும் மாம்சத்தின் இச்சை, வாழ்க்கை, உலகம், உங்கள் உணர்வுகளின் பெருமை) ஆகியவைகளே தாக்குதலுக்கு இலக்காகும் காரணிகள். ஆவிக்குரிய ரீதியில் தாக்குவதை போல பௌதீக ரீதியிலும் கூட சாத்தான் தாக்குகின்றான், உங்களுடைய ஆவி ஆத்துமா என்பவற்றிற்கு மேலாக உங்களுடைய சரீரத்தில் மேலதிகமாக இருக்க அவனுக்கு அதிகாரம் இல்லை. விசுவாசிகளின் சரீரத்தில் சாத்தான் தாக்கும் நடவடிக்கையை கெரில்லா தாக்குதலோடு ஒப்பிடுவர். அவர்களுக்கு குறித்த பகுதியில் எவ்விதத்திலும் அதிகாரம் கிடையாது ஆனால் எவ்வாறாயினும் தாக்குதல் நடத்த அவர்கள் எதிர்பார்ப்பர். இந்த உலகத்தில் பாவம் எவ்வளவுக்கு இருக்கின்றதோ அந்தளவுக்கு வியாதிகள் இருக்கும், ஆனால் ஆவிக்குரிய யுத்தத்தில் பாவத்திற்கெதிராக நீங்கள் யுத்தம் பண்ணுவதைபோல வியாயிற்கு எதிராக யுத்தம் பண்ணலாம்.

## கர்த்தருடைய சரீரத்தை சரியான நிதானிக்காதிருத்தல்

பலர் கிறிஸ்துவினடைய சரீரத்தை சரியாக நிதானிக்காதிருத்தலும், அவருடைய பாத்திரத்தை அபாத்திரமாய் பானம்பண்ணுவதினாலும் பலவீனரும், வியாதியடைந்திருப்பதாகவும் பவுல் கூறுகின்றார். பானப்பாத்திமாகிய அப்பமும் இரசமும் உட்கொள்ளுதலானது இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்கும் இரத்திற்கும் அடையாளமாயிருக்கின்றது. பவுல் எச்சரிக்கின்றார்:

**இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்.**

**எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்.**

**என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்.**

**இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். (1கொரிந்தியர் 11:27-30)**

நீங்கள் மூன்று வழிகளில் கிறிஸ்துவின் சரீரத்தை நிதானிக்காது இருக்க தவறலாம்:

## இரத்தம் மற்றும் மாம்சத்திற்கான அர்த்தம்:

அப்பம் மற்றும் திராட்சை கனி ஆகியவற்றின் அர்த்தத்தை நீங்கள் அறியாதபோது கிறிஸ்துவின் சரீரத்தைப் பற்றி நிதானிக்க தவறுகின்றீர்கள். இந்த இயற்கையின் காரியங்கள் இயேசுவின் மாம்சம் மற்றும் இரத்தம் ஆகிய ஆவிக்குரியவற்றிற்கு அடையாளமாயிருக்கின்றது. அநேக மக்கள் கிறிஸ்துவின் சரீரம் பாவத்தை திருப்புதல் என்று விளங்கிக்கொண்டிருந்தாலும், கிறிஸ்துவின் சரீரத்தை குறித்து உண்மையான அர்த்தத்தை விளங்கிக்கொள்ளாமல் இருக்கின்றனர். உங்களுடைய குணமாக்குதலுக்காக கிறிஸ்துவின் சரீரம் உடைக்கப்பட்டது. (யோவான் 6:48-58 மற்றும் லூக்கா 6:48-51ஐ பார்க்க).

## சரீரத்தின் பிரிவுகள்:

கிறிஸ்துவிற்குள் எமது சகோதரர்கள் மற்றும் சகோதரிகளோடு நாம் கொண்டுள்ள உண்மையான நெருக்கத்தை விளங்கிக்கொள்ளாதிருத்தல் கிறிஸ்துவின் சரீரத்தை நாம் சிலசமயங்களில் நிதானிக்க தவறுகின்றோம். சபைகளில் பிரிவுகள் ஏற்படும்போது, நாம் கிறிஸ்துவின் சரீரத்தை பற்றி சரியாக நிதானிக்காதிருக்கின்றோம். கிறிஸ்துவிற்குள் எமது சகோதரர்கள் மற்றும் சகோதரிகளோடு ஆவிக்குரிய இணைவை பற்றி சரியாக விளங்கிக்கொள்ளாதிருக்கும்போது நாம் பானத்தை பிரயோஜனமற்று புசித்து குடிக்கின்றோம். பவுல் 1 கொரிந்தியர் 3:1-13ல் விபரிக்கின்றார் மாம்சத்திற்குரிய கிறிஸ்தவர்கள் மாம்சத்திற்குரியவர்களாக இருக்கின்றபடியால், தேவவார்த்தையிற்கு உள்ளாக முடியாது.

## அபாத்திரமாய் புசித்தல்:

பரீட்சிக்கப்படாத வாழ்க்கையில் இராப்போஜனத்தை நாம் அபாத்திரமாய் புசிக்கின்றோம். இதை செய்வதின் விளைவு பலவீனமும் வியாதியுமாகும். இதனாலேயே பவுல் இதை எடுப்பதற்கு முன் உங்களை நீங்களே ஆவிக்குரிய ரீதியில் சோதித்து மனந்திரும்ப கூறுகின்றார்.

## ஆவியை காப்பாற்றும் மாம்சத்திற்குரிய அழிவு

தேவன் சீஷத்துவ காரணங்களுக்காக சாத்தானுக்கு மாம்சத்தை அழித்து திரும்பும்படியான அனுமதிக்கின்றார். தேவன் வியாதியை நபருக்கு அளிப்பதில்லை, மாறாக அவர் அதை அனுமதிக்கின்றார். நீங்கள் இந்த செயற்பாட்டை 1 கொரிந்தியர் 5:1-7ல் வாசிக்கலாம். இந்த பகுதியில் வேதாகமம் வெளிப்படுத்துகின்றது:

**அதை எவ்வாறு செய்ய வேண்டும்:** அது செய்யப்பட வேண்டியது...

-ஒற்றுமையில்,
-தேவனுடைய ஆவியிலும் வல்லமையிலும்,
-தேவனுடைய பெயரில்.

**ஏன் அது செய்யப்படவேண்டும்:** அது செய்யப்பட வேண்டும்...

-விபச்சாரம்,
-உலகத்திலும் பார்க்க கீழ்த்தரமான செயற்பாடு (புறஜாதி),
-பெருமை,
-மனந்திரும்புதல் இன்மை,
-தேவனுடைய மக்கள் மத்தியிலுள்ள தீமை.

**அதன் குறிக்கோள்கள்:** தனிப்பட்ட ரீதியில்: மாம்சமானது தாக்குதலுக்கு உட்பட்டாலும் ஆவியானது காப்பாற்றப்படலாம். ஒத்துழைப்பு: மற்றவர்களை தாக்கு முன்னர் தீய ஆவியை வெளியேற்றுங்கள்.

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

2. இந்த பாடத்தில் கலந்துரையாடப்பட்ட வியாதியிற்கான காரணங்கள் ஐந்து என்ன?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

3. ஆவிக்குரிய பிரமாணங்களை துஷ்பிரயோகப்படுத்துவதின் மூலம் வரும் வியாதியின் விளைவுகள் என்ன?

.......................................................................................................................................................

4. சாத்தானுடைய நடவடிக்கைகளால் வரும் வியாதியின் விளைவு என்ன?

.......................................................................................................................................................

5. தேவனுடைய பௌதீக பிரமாணங்களை துஷ்பிரயோகப்படுத்துவதால் வரும் வியாதியின் விளைவு என்ன?

.......................................................................................................................................................

6. கிறிஸ்துவினுடைய சரீரத்தை சரியாக நிதானிக்காமையால் வரும் வியாதியின் விளைவு என்ன?

.......................................................................................................................................................

7. ஆவியானது காப்பாற்றும்படி பொருட்டு மாம்சத்திற்குரிய அழிவிற்கு நேரடியாக அழைக்கும் வேதாகமத்தை விளக்குக.

அது எவ்வாறு செய்யப்படவேண்டும்?.........................................................................

ஏன் அது செயயப்படவேண்டும்?.............................................................

அதன் குறிக்கோள்கள் என்ன?......................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. நீங்கள் ஊழியம் செய்யும் யாராவது ஒருவருக்கு அல்லது உங்களுக்கு உள்ள வியாதியின் காரணத்தை குறித்து எண்ணுங்கள். அது கீழ்கண்டவற்றில் இருக்கலாமா?
   -ஆவிக்குரிய பிரமாணங்களை துஷ்பிரயோகம் செய்தல்?
   -தேவனுடைய இயற்கை பிரமாணங்களை துஷ்பிரயோகம் செய்தல்?
   -சாத்தானுடைய தாக்குதல்கள்?
   -கிறிஸ்துவினுடைய சரீரத்தை சரியாக நிதானிக்காமை?
   -ஆவியை காப்பாற்றும்பொருட்டான சரீரத்தின் அழிவு?

2. நீங்கள் சிட்சையின் காரணமாக வியாதியாயிருக்கின்றீர்கள் என நினைக்கின்றீர்களா? யாக்கோபு 5:14-16 அடிப்படையில் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

..............................................................................................................................................

..............................................................................................................................................

3. நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவருக்கு அல்லது உங்களுக்கு உள்ள வியாதி தேவனுடைய பௌதீக பிரமாணத்தை உடைக்கும் விளைவு ஆயின், இதை திருத்துவதற்கு என்ன செய்யலாம்?

..............................................................................................................................................

..............................................................................................................................................

4. நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவருக்கு அல்லது உங்களுக்கு உள்ள வியாதி ஆவிக்குரிய பிரமாணத்தை உடைக்கும் விளைவு ஆயின், உங்கள் பாவத்தை அறிக்கையிட்டு மனந்திரும்புங்கள். 1 யோவான் 1:8-9 வாசியுங்கள் அல்லது இதை கடைப்பிடிக்க அவர்களை கூறுங்கள்.

..............................................................................................................................................

..............................................................................................................................................

5. நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவருக்கு அல்லது உங்களுக்கு கிறிஸ்துவினுடைய சரீரத்தை நிதானிக்காதிருக்கின்றோம் என எண்ணுகின்றீர்களா? அப்படியாயின், மனந்திரும்பி தேவனுடைய மன்னிப்பை பெற்றுக்கொள்ளுங்கள், பின் பௌதீக நிலைக்கான குணமாக்குதலுக்காக ஜெபியுங்கள்.

..............................................................................................................................................

..............................................................................................................................................

6. நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவருக்கு அல்லது உங்களுக்கு உள்ள வியாதி பிசாசினுடைய விளைவு ஆயின், பிசாசினுடைய ஆவியை ஜெபித்தினால் கட்டி, பரிசுத்த ஆவியின் குணமாக்குதலின் வல்லமையை பெற்றுக்கொள்ளுங்கள்.

..................................................................................................................................................

..................................................................................................................................................

7. இந்த பாடத்தின் குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை படியுங்கள்:

**நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பி நடந்தேன். இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன். நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது. அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன். நான் ஒருபோதும் உம்முடைய கட்டளைகளை மறக்கமாட்டேன். அவைகளால் நீர் என்னை உயிர்ப்பித்தீர். (சங்கீதம் 119:67,71,93)**

இந்த பந்தியானது தாவீது ஆவிக்குரிய பிரமாணங்களை துஷ்பிரயோகம் செய்ததால் அனுபவித்த துன்பத்தை வெளிப்படுத்துகின்றது. இந்த அனுபவத்திலிருந்து அவன் கற்றது என்ன? அவனை குணமாக்குதலுக்கான நிலைக்கு எது கொண்டு வந்தது? தாவீது கற்றவற்றை உங்களது சொந்த வாழ்வில் நீங்கள் எவ்வாறு பிரயோகிக்க முடியும்?

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

### அதிகாரம் ஆறு

# வியாதியின் வகைகள்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ வியாதியின் ஐந்து வகைகளை பட்டியலிடவும்,
- ☐ ஆவிக்குரிய வியாதியை வரையறுக்கவும்,
- ☐ பௌதீக வியாதியை வரையறுக்கவும்,
- ☐ மனம் ரீதியான வியாதியை வரையறுக்கவும்,
- ☐ உணர்வு ரீதியான வியாதியை வரையறுக்கவும்,
- ☐ சாத்தானால் ஏற்பட்ட நிலைகளை வரையறுக்கவும் முடியும்.

## பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

> **என்மேல் இரக்கமாயிரும் கர்த்தாவே, நான் பெலனற்றுப்போனேன். என்னைக் குணமாக்கும் கர்த்தாவே, என் எலும்புகள் நடுங்குகிறது. என் ஆத்துமா மிகவும் வியாகுலப்படுகிறது. கர்த்தாவே, எதுவரைக்கும் இரங்காதிருப்பீர். கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார். கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளுவார். (சங்கீதம் 6:2-3,9)**

### அறிமுகம்

நாம் "பலவீனம் மற்றும் வியாதி" பற்றி பேசும்போது, தேவனால் சரியாக உண்டாக்கப்படாத ஆவிக்குரிய, மனரீதியான, உணர்வுரீதியான அல்லது பௌதீகரீதியான ஏதாவதொன்றை அர்த்தப்படுத்துகின்றோம். ஐந்து வகையான வியாதிகள் காணப்படுகின்றது. அவையாவன:

## ஆவிக்குரிய வியாதி:

ஆவிக்குரிய வியாதி என்பது பாவமாகும். இதனோடு சம்பந்தம் செய்யாவிட்டால், ஆவிக்குரிய பேசுதலின் முடிவு நிலையே பாவமாகும். இந்த நிலையிற்கு மருத்துவ விஞ்ஞானம் அல்லது இயற்கை குணப்படுத்தலானது ஒன்றும் செய்ய இயலாது. அனைவரும் பாவம் செய்திருப்பதால், அனைவரும் ஆவிக்குரிய வியாதியால் தாக்கப்பட்டிருக்கின்றனர். ஆவிக்குரிய வியாதிக்கான குணப்படுத்தலானது மனந்திரும்புதல், பாவமன்னிப்பை பெறுதல், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுதலால் வருகின்றது.

## பௌதீக வியாதி:

பௌதீக வியாதியானது உடல் சார்ந்த வியாதிகளால் வருகின்றது. இந்த பிரச்சினைகளை மருத்துவர்கள் விளங்கிக்கொண்டு அவதானிக்க முடியும். உடல் சார்ந்த வியாதிகளில் சரியான

கட்டமைப்பு அல்லது சரீரத்திலுள்ள இழையங்கள் ஏதாவது ஒரு வழியில் பாதிக்கப்படலாம். சரீரத்தின் ஒரு பகுதி அல்லது ஒரு உறுப்பின் கோளாறு காரணத்தின் விளைவாக செயற்பாட்டு வியாதிகள் ஏற்பட்டு பௌதீக வியாதியானது வருகின்றது. ஒரு பகுதியில் ஏற்படும் வியாதி முழு சரீரத்திற்கும் பாதிப்பை ஏற்பாடுத்தக்கூடியவாறு செயற்பாட்டு வியாதிகளானது பல நிலைகளை கொண்டிருக்கும். இருதய நோய், உயர் இரத்த அழுத்தம், நீரழிவு, சமிபாட்டு தொகுதி, ஒவ்வாமை ஆகியவை அதிகம் பொதுவானவையாகும். மனிதனுடைய இயற்கையின் ஒருங்கிணைக்கப்பட்ட நிலையால், ஒரு பகுதி முழு சரீரத்தையும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதன் அர்த்தமானது செயற்பாட்டு வியாதியை தொடர்ந்த கவனியாது விடுதல் அங்க வியாதிகளை ஏற்படுத்தலாம்.

### உணர்வுரீதியான வியாதி:

கோபம், வெறுப்பு, கசப்பு போன்ற தீமையான உணர்வுகளின் மூலம் உணர்வுரீதியான வியாதிகள் ஏற்படுகின்றது. நேர் மற்றும் கிடையான மன்னிப்பின் மூலம் குணமாக்குதல் வருகின்றது. உங்களுடைய பாவமான உணர்வுக்கு நீங்கள் தேவனிடம் மன்னிப்பு கேட்கும் நேரத்தில் கிடையான மன்னிப்பு கிடைக்கின்றது. நீங்கள் மனந்திரும்பும் போது, தேவன் உள்ளான வியாதிகளை குணமாக்குகின்றார். உங்களை கஷ்டப்படுத்தியவர்களை நீங்கள் மன்னிக்கும்போது நேரான மன்னிப்பும் குணமாக்குதலும் கிடைக்கின்றது. சிலர் இதை “உள்ளான குணப்படுத்தல்” என்று அழைக்கின்றார்கள், ஆனாலும் இப்பதமானது சில சமயங்களில் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்படுவதோடு, வேதாகம போதிக்காத அனுபவங்களுக்கு உள்ளடங்குவதற்காக விரிவுப்படுகின்றது.

### மன வியாதி:

சாத்தானுடைய தாக்குதலுக்கு நேரடியாக ஏற்படாத மறதி, மனநிலை பாதிப்பு, வியாதி, விபத்து, செயழிழப்பு, பிறப்பு குறைபாடுகள் மற்றும் உளவியல் நிலைகள் ஆகியவை மோசமான மன ஆரோக்கியத்தால் ஏற்படும் மன வியாதிகளாகும்.

## சாத்தானுடைய நிலைகள்

சாத்தானால் ஏற்படும் நிலைகளானது சுவாதீனம், அடக்குமுறை, ஆவேசம் என்பவற்றை உள்ளடக்குவதோடு, மன மற்றும் பௌதீக நிலைகளால் ஏற்படுகின்றது. சாத்தானிய நிலைகளிலிருந்து குணமாக தேவைப்படும் விசேட வகை குணப்படுத்தல் விடுதலை என அழைக்கப்படுகின்றது. விடுதலை மற்றும் குணப்படுத்தல் ஆகிய இரண்டும் தொடர்புபட்டது, ஆனால் வசனமானது இவைகளுக்கிடையிலான வித்தியாசத்தை காட்டுகின்றது:

> **அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து, தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார். (லூக்கா 9:2)**

சாத்தானால் ஏற்படும் நிலைகள் பற்றி மேலதிமாக இந்த பாடத்தின் பகுதி ஆறில் நீங்கள் கற்பீர்கள்.

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

2. வியாதியின் அடிப்படை வகைகள் ஐந்து என்ன?

.......................................................... ..........................................................

.......................................................... ..........................................................

..........................................................

3. ஆவிக்குரிய வியாதி என்றால் என்ன?

.......................................................................................................................................................

4. பௌதீக வியாதி என்றால் என்ன?

.......................................................................................................................................................

5. உணர்வுரீதியான வியாதி என்றால் என்ன?

.......................................................................................................................................................

6. மன வியாதி என்றால் என்ன?

.......................................................................................................................................................

7. சாத்தானால் ஏற்படும் நிலைகள் என்றால் என்ன?

.......................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவருக்கு அல்லது உங்களுடைய சொந்த வியாதியிற்கு ஜெபத்துடன் ஆய்வு செய்யுங்கள். நீங்கள் எந்த வகையான வியாதியுடன் தொடர்பு-பட்டுள்ளீர்கள்? அவை
    - -ஆவிக்குரியவைகளா?
    - -பௌதீகத்திற்குரியவைகளா?
    - -மனரீதியானவைகளா?
    - -உணர்வுரீதியானவைகளா?
    - -சாத்தானால் ஏற்பட்டவையா?

2. நீங்கள் விசுவாசிக்கும் காரணத்தை எழுதுங்கள்....

    ஆவிக்குரிய வியாதி:

    ..................................................................................................................................

    ..................................................................................................................................

    பௌதீக வியாதி:

    ..................................................................................................................................

    ..................................................................................................................................

    மன வியாதி:

    ..................................................................................................................................

    ..................................................................................................................................

    உணர்வுரீதியான வியாதி:

    ..................................................................................................................................

    ..................................................................................................................................

    சாத்தானால் ஏற்படும் நிலைகள்:

    ..................................................................................................................................

    ..................................................................................................................................

3. மனிதருடைய ஒருங்கிணைந்த இயற்கையின் தன்மையால், ஒரு பகுதி சரீரத்தில் ஏற்படும் நோயின் தாக்கம் முழு சரீரத்தையும் பாதிக்கின்றது. இந்த உண்மை உங்கள் சொந்த நோயில் அல்லது நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவருக்கு எவ்வளவு உண்மை என காண் கின்றீர்களா?

பௌதீக நிலை எவ்வாறு ஆவி, உணர்வு, மனநிலையை பாதிக்கின்றது?

.................................................................................................................................

ஆவிக்குரிய நிலை எவ்வாறு ஆவி, உணர்வு, மனநிலையை பாதிக்கின்றது?

.................................................................................................................................

உணர்வு ரீதியான நிலை எவ்வாறு ஆவி, உணர்வு, மனநிலையை பாதிக்கின்றது?

.................................................................................................................................

மன ரீதியான நிலை எவ்வாறு ஆவி, உணர்வு, மனநிலையை பாதிக்கின்றது?

.................................................................................................................................

4. சங்கீதம் 6ல் காணப்படும் இந்த பாடத்திற்கான குணமாக்கும் வசனத்தை படியுங்கள்:

**என்மேல் இரக்கமாயிரும் கர்த்தாவே, நான் பெலனற்றுப்போனேன். என்னைக் குணமாக்கும் கர்த்தாவே, என் எலும்புகள் நடுங்குகிறது. (வசனம் 2). என் ஆத்துமா மிகவும் வியாகுலப்படுகிறது. கர்த்தாவே, எதுவரைக்கும் இரங்காதிருப்பீர். (வசனம் 3) கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார். கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளுவார். (வசனம் 9)**

**வசனம் 2** பௌதீக நிலையை சுட்டி காட்டுகின்றது: "என் எலும்புகள் நடுங்குகிறது." **வசனம் 3** ஆவிக்குரிய நிலையை சுட்டி காட்டுகின்றது: "என் ஆத்துமா மிகவும் வியாகுலப்படுகிறது." **வசனம் 3** சங்கீதக்காரன் குணமாக்குதலுக்கான காத்திருக்க வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுகின்றது: "கர்த்தாவே, எதுவரைக்கும் இரங்காதிருப்பீர்." (குணமாக்குதல் சம்பந்தமாக இந்த கேள்வியை நீங்கள் எப்போதாவது கேட்டதுண்டா?) **வசனம் 9** தேவனில் அவன் வைத்திருக்கும் விசுவாசத்தை காட்டுகின்றது: "கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளுவார்" ("ஏற்றுக் கொள்ளுவார்" என்பது எதிர்காலமாகும்) அவனுடைய குணமாக்குதலுக்கான ஜெபத்தின் வெளிப்பாடு எதிர்காலமாயிருந்தாலும் கூட, தற்போது அந்த ஜெபம் கேட்கப்பட்டுள்ளது.

## அதிகாரம் ஏழு

# வியாதியின் இறுதி நிலை

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ வியாதியின் இரண்டு இறுதி நிலையை இணங்காணவும்,
- ☐ மரணத்தின் இரண்டு வகைகளை இணங்காணவும் முடியும்.

### பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

> **நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே. (எரேமியா 29:11)**

### அறிமுகம்

வியாதியிற்கான இறுதி சாத்தியமான நிலைகள் இரண்டே காணப்படுகின்றன. ஒன்று தேவனுடைய மகிமைக்காக காணப்படும் அல்லது மரணத்திற்கான வியாதியாக காணப்படும். தேவன் வாக்களித்-துள்ளார்:

> **நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே. (எரேமியா 29:11)**

### தேவனுடைய மகிமைக்கான வியாதி:

தேவனுடைய மகிமைக்கான வியாதி என்பது ஒருவர் சாட்சி, வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் மூலம் தேவனுக்கு மகிமை செலுத்துவதாகும். யோவான் ஒன்பதாம் அதிகாரத்தில் பிறந்தது முதல் குருடராயிருந்த மனிதருடைய கதையை நீங்கள் வாசிக்கலாம். இந்த குருடரான மனிதரை குறித்து இயேசு கூறினார்:

> **அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான். (யோவான் 9:3)**

அந்த குருடரான மனிதன் குணமாகும்போது, அவனுடைய சாட்சியிற்கூடாக தேவன் மகிமையடைந்தார். அனைத்து நீதியான குணமாக்குதலுக்கும் தேவன் எப்போதும் மகிமையை பெற வேண்டும். ("நீதியான" என்பதற்கு நாம் அர்த்தப்படுத்துவது சாத்தானுடைய சம்பந்தப்படுதல் அல்லாமல் என்ப-தாகும்.)

### இயற்கைான குணமாக்குதல்:

தெய்வீக குணமாக்குதலை தேவன் ஏறத்தாழ தந்தாலும், சரீரத்தில் அதனுடைய சொந்த செயற்பாட்டிற்கூடாக நடைபெறும் இயற்கையான குணமாக்குதலுக்கான மகிமையும் அவருக்கு கொடுக்கப்படல் வேண்டும். தேவன் சரீரத்தை படைத்து, அவருடைய கிரியையை அதில் வெளிப்படுத்தி இயற்கைகான சரீரத்தின் செயற்பாட்டிற்கூடாக அவரது மகத்துவமான வல்லமையை காட்டுகின்றார்.

### மருத்துவ குணமாக்குதல்:

மருத்துவங்களால் வரும் குணமாக்குதல்களுக்கான துதிகளும் தேவனிடத்தில் செல்ல வேண்டும். ஒவ்வொரு நல்ல ஈவுகளும் தேவனிடத்திலிருந்து வருகின்றது என வேதாகமம் கூறுகின்றது (யாக்கோபு 1:17). நீங்கள் பௌதீகமாக நன்மைகளை பெறும் மருந்துகள், விட்டமின்கள் மற்றும் வேறு பொருட்களையும் இது உள்ளடக்கும். பல மருத்துக்கள் தாவரங்கள் மற்றும் தேவனால் படைக்கப்பட்ட முதல்தரமான காரியங்களுக்கூடாகவும் வருகின்றது.

### உடனடியாக மற்றும் தமதமாகும் குணப்படுத்தல்:

சில சந்தர்ப்பங்களில் நபர்கள் உடனடியாக குணமாக்குதலை பெறுவார்கள், ஆனால் மற்ற சமயங்களில் குணமாக்குதல் தாமதமடையும் அல்லது அந்நபர் பிற்பாடு அல்லது படிப்படியாக குணமாக்கப்படுவார். இந்த உதாரணங்களில் கவனம் செலுத்துங்கள்:

-யோவானுடைய பிறப்பு வரைக்கும் சகரியா தீர்க்கதரிசி குணமாக்கப்படவில்லை:
லூக்கா 1:20

-தேவனுடைய சரியான நேரம் வரைக்கும் அன்னாள் பிள்ளை பெற முடியவில்லை:
1 சாமுவேல் 1:5-19

-ஆபிரகாமிற்கு நம்பிக்கை இருந்தாலும் கூட, தேவனுடைய சரியான நேரம் வரைக்கும் ஆபிரகாமிற்கும், சாராளுக்கும் பிள்ளை பெற முடியவில்லை: எபிரெயர் 11:11

உடனடியாகவோ அல்லது படிப்படியாகவோ பெறும் குணமாக்குதலுக்கு, தேவனே மகிமையை பெற வேண்டும்.

## மரணத்திற்கு ஏதுவான வியாதி

லாசருவின் மரணமானது சாவுக்கேதுவான ஒன்று அல்ல என யோவான் 11:4ல் இயேசு கூறுகின்றார். இதன் அர்த்தமானது மரணத்திற்கு ஏதுவான வியாதி ஒன்று காணப்படுகின்றது என்பதாகும். குணமாக்குதலுக்கான இலக்கானது அழியாமைக்கானது அல்ல. மருத்துவத்தால் செய்வதை விட தெய்வீக குணப்படுத்தல் இதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது. லாசரு உட்பட, இயேசுவினால் உயிரோடு எழுப்பட்ட அனைவரும் சாதாரணமாக மரித்தவர்களே.

வேதாகமத்தில் இரண்டு விதமான மரணங்கள் காணப்படுகின்றன. சரீரத்தின் அழிவிலிருந்து மேற்

கொள்ளப்படும் போது அகால மரணமானது ஒரு நபருக்கு ஏற்படுகின்றது, அப்போது அகால மரணமடைந்து ஆவியானது காத்துக்கொள்ளப்படுகின்றது (1 கொரிந்தியர் 5:4-5). நீங்கள் இதை குறித்து அதிகாரம் ஐந்தில் கற்றீர்கள்.

வேதாகமத்தில் குறிக்கப்பட்டுள்ள இரண்டாம் வகை மரணமானது சாவிற்கேற்ற மரணமாகும். ஒவ்வொரு மனிதனும் மரணிப்பதற்கு ஒரு நேரம் வைக்கப்பட்டுள்ளது. (எபிரெயர் 9:2; பிரசங்கி 3:2). தேவனுடைய மாபெரும் தீர்க்கதரிசியும், அநேக குணமாக்குதலின் அற்புதங்களை செய்த எலிசாவும் கூட, "அவன் சாவிற்கேதுவான வியாதியில்" சிக்கினார். (2 இராஜாக்கள் 13:14). வியாதியடைந்து மரிப்பதை விட, சுவாசம் நின்று மரிப்பதே நீங்கள் மரணிப்பதற்கான குறிக்கப்பட்ட நேரமாகும்:

> **நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள, அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும். (சங் 104:29)**

வயதுசென்ற மோசேயிற்கு வயதினால் எந்த தாக்கமும் வரவில்லை. யோசுவா "வயது சென்றும் பலமாய் இருந்தார்". தேவன் ஒருவரை விசேடமாக வைத்திருக்கும்போது, மற்றவர்கள் வயதிற்கான அடையாளங்களை விளைவாக பெறுகின்றனர். அவர்களுடைய ஆவிக்குரிய நிலைமை இதில் ஒன்றும் செய்ய மாட்டாது. இருவரும் மாபெரும் ஆவிக்குரிய தலைவர்கள். உங்களுடைய சரீரம் இயற்கையான வயதடையும் செயற்பாட்டை அனுபவிக்கும்போதோ அல்லது வியாதியினால் மரணமாகும்போதோ அல்லது விசேடமான நிலையில் வைத்திருக்கும்போதோ தேவன் உங்களை தாங்குகின்றார்.

நித்தியத்திற்கான நாம் வாழாது நேரத்திற்கான கட்டில் வாழும் தவறை நாம் கூட செய்கின்றோம். விசுவாசி என்ற ரீதியில், நீங்கள் வாழ்க்கையில் இந்த பக்கமாகவோ அல்லது மரணத்தில் மறு பக்கத்திலோ நித்திய வாழ்க்கையிற்கு நீங்கள் ஏற்கனவே வாழுகின்றீர்கள். ஒரு விசுவாசி சாகும்போது, அது நித்தியத்திற்கு உட்படும் எல்லையற்ற குணமாக்குதல் ஆகும்.

ஞாபகத்திற் கொள்க: நீங்கள் குணமாக்குதலை அனுபவிப்பீர்கள். சிலருக்கு இது மரணத்திற்கு இப்பகுதியான அனுபவத்தை ஏற்படுத்தும். நீங்கள் தேவனை உயர்த்தி உங்களுடைய சாட்சி, ஜீவியம், ஊழியத்திற்கூடாக அவரை மகிமைப்படுத்துவீர்கள்.

மற்றவர்கள் மரணத்திற்கூடாக கடந்து சரீரம், ஆத்துமா மற்றும் ஆவியோடு முழுமையாக தேவனுடைய சமூகத்தில் வெற்றிகரமாக பிரவேசிக்கும்போது எல்லையற்ற குணமாக்குதலை பெறுகின்றார்கள்.

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

2. வியாதியின் இரண்டு இறுதி விளைவுகள் என்ன?

..........................................................................................................................................

..........................................................................................................................................

3. வேதாகமத்தில் இனங்காணப்பட்டிருக்கும் இரண்டு வகையான மரணங்கள் என்ன?

..........................................................................................................................................

..........................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவருக்கு அல்லது உங்களுடைய சொந்த வியாதி இறுதியானது எனில், தேவன் அது "சாவிற்கேற்ற வியாதியா" அல்லது "தேவனுடைய மகிமைக்கானதா" என்று வெளிப்படுத்த முடியும். சாவிற்கேற்ற வியாதி என்று தேவன் வெளிப்படுத்தும் வரை, தேவனுடைய சித்தத்தின் படி குணமாக்குதலுக்கான தொடர்ந்து ஜெபியுங்கள்.

2. தெய்வீக குணப்படுத்தலைப்போல மருத்துவ மற்றும் இயற்கை குணமாக்குதல் தேவனிடமிருந்து வருகின்றது. அனைத்து குணமாக்குதலும் தேவனிடமிருந்து வருகின்றது என்பதற்கு பதிலாக மருந்திற்கும், மருத்துவருக்கும் மக்கள் முக்கியத்துவம் அளிக்கும்போது பிரச்சினைகள் உருவாகின்றது. தேவன் இஸ்ரவேலை குறித்து கூறினார்:

   **நான் தங்களைக் குணமாக்குகிறவரென்று அறியாமற்போனார்கள்.... (ஓசியா 11:3)**

   இராஜாவாகிய ஆசா மருத்துவ பரிகாரத்தை மட்டுமே தேடியதினால் இறந்துபோனான். அவன் ஆவிக்குரிய நிலையை அசட்டைபண்ணி, அவனுடைய தேவையான சந்தர்ப்பத்தில் தேவனிடம் திரும்பவில்லை. (2 நாளாகமம் 16:12).

3. உங்களுக்கு ஒரு வியாதியின் குணமாகும் அனுபவமானது மருந்து, மருத்துவர் அல்லது இயற்கையான சரீர செயற்பாட்டினால் குணமாகின்றதென்று ஞாபகம் உள்ளதா? அந்த குணமாக்குதலுக்காக தேவனிடம் நன்றி செலுத்தினீர்களா?..... இல்லையாயின் இப்பொழுது செய்க.

4. உங்களுக்கு அல்லது நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவருக்கு குணமாகும்போது, இந்த குணமாக்குதலை தேவனுடைய மகிமைக்காக எவ்வாறு உபயோகிக்கின்றீர்கள்?

5. உங்களுக்குரிய வியாதி சாவிற்கேற்ற வியாதியானதோடு, பௌதீக ரீதியில் மரணிப்பதற்கான நேரமாயின், நீங்கள் ஏற்கனவே நித்தியமான ரீதியில் வாழ்ந்துகொண்டிருக்கின்றீர்கள் என்பதை ஞாபகத்திற்கொள்ளுங்கள். நீங்கள் குணமாவீர்கள். நீங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தின் சமூகத்தில் பூரண சுகத்தோடு பிரவேசிப்பீர்கள்!

# பகுதி மூன்று

# எதிர்தாக்குதல்

பௌதீக சரீரத்திற்குரிய எதிரியினுடைய தாக்குதலுக்கு ஆதாரம், காரணங்கள், வகைகள், வியாதியின் இறுதி நிலை குறித்து கடைசி பாகத்தில் நீங்கள் கற்றீர்கள்.

இந்த பகுதியில் சாத்தானுக்கு எதிரான எதிர்தாக்குதலின் கட்டம் எவ்வாறானது என்றும் பௌதீக சரீரத்திற்கான யுத்தத்தை குறித்தும் நீங்கள் கற்பீர்கள். எதிர்தாக்குதலின் பகுதியானது சாத்தானுடைய தாக்குதலை மேற்கொண்டு தோற்கடிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

பௌதீக சரீரத்தில் சாத்தானுடைய தாக்குதலுக்கு பிரதியுத்தரவு அளிப்பதற்கு நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டியவை:

- வேதாகமத்தின் அடிப்படை குணமாக்குதல்
- குணமாக்குதலின் நோக்கங்கள்
- குணமாக்குதலின் வரங்கள்

இவைகளே இந்த பாடத்தின் பகுதிகளாகும்.

## அதிகாரம் எட்டு

# வேதாகமத்தின் அடிப்படை குணமாக்குதல்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ குணமாக்குதலுக்கு சம்பந்தமாகவுள்ள புதிய ஏற்பாட்டின் விதைத்தலின் உவமையை விபரிக்கவும்,
- ☐ குணமாக்குதலோடு சம்பந்தமாகவுள்ள பழைய ஏற்பாட்டின் போதனையை சுருக்கமாக்கவும்,
- ☐ இயேசுவையும் முதலாவது சபையையும் உதாரணமாக பயன்படுத்தி குணமாக்குதலோடு சம்பந்தமாகவுள்ள புதிய ஏற்பாட்டின் போதனையை சுருக்கமாக்கவும்,
- ☐ இயேசு கிறிஸ்துவின் பிராயச்சித்தத்தின் பலனாக குணமாக்குதலை அடையாளம் காணவும்,
- ☐ குணமாக்குதல் மற்றும் விடுதலையோடு சம்பந்தமாகவுள்ள மிகப்பெரிதான அர்ப்பணிப்பை சுருக்கமாக்கவும்,
- ☐ குணமாக்குதல் மற்றும் விடுதலை ஊழியத்தோடு அனைத்து விசுவாசிகளும் சம்பந்தப்பட வேண்டியதை உறுதிப்படுத்தும் வேதாகம வசனங்களை பட்டியலிடவும்,
- ☐ குணமாக்குதலோடு சம்பந்தமாகவுள்ள இராஜ்ஜியத்தின் மூன்று திறவுகோல்களை இணங்காணவும் முடியும்.

## பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

> **நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். (ஏசாயா 53:5)**

## அறிமுகம்

இந்த பாடத்தை விசுவாசத்தின் பயணம், குணமாக்குதல் மற்றும் விடுதலையோடு நீங்கள் ஆரம்பிக்கின்றீர்கள். உங்களுடைய பயணத்திற்கான கடவுச்சீட்டு உங்கள் வேதாகமம் ஆகும். இயற்கையான உலகத்தில், கடவுச்சீட்டானது உங்களது குடியுரிமையை உறுதிப்படுத்துவதோடு, உங்களது தேசத்தினால் உங்களுக்கு கொடுக்கப்படும் உரிமைகளை உறுதிப்படுத்துகின்றது.

ஆவிக்குரிய கடவுச்சீட்டு என்றவகையில், தேவனுடைய இராஜ்ஜியத்தில் உங்களுடைய குடியுரிமையை தேவனுடைய வசனம் உறுதிப்படுத்துகின்றது. இது மறுபடியும் பிறந்த விசுவாசியான நீங்கள் தெய்வீக குணப்படுத்தல் மற்றும் விடுதலையின் உரிமையின் உள்ளடக்கத்தோடு, இந்த குடியுரிமையின்படி உரிமைக்கான தகுதியை பெற்றுள்ளீர்கள் என உறுதிப்படுத்துகின்றது.

## தேவனுடைய வசனமும் குணமாக்குதலும்

விதைத்தலின் உவமையை மத்தேயு 13:3-8, 18-23; மாற்கு 4:3-8, 14-20; லூக்கா 8:5-8, 10-15 ஆகியவற்றில் வாசிக்கவும். இந்த உவமையில், இயேசு “விதையை” தேவனுடைய வார்த்தையாக விபரித்துள்ளார். இந்த இயற்கையான உலகத்தில் விதையிற்கு தனக்குள்ளே ஜீவனை கொண்டு-

வரும் தராதரம் இருக்கின்றது, ஆனால் அது விதைக்கப்பட்டு உரம் செலுத்தப்படும் வரைக்கும் வல்லமை அதற்கு இல்லை.

ஆவிக்குரிய உலகிலும் இதே உண்மையே காணப்படுகின்றது. தேவனுடைய வசனமாகிய விதை ஆவிக்குரிய வாழ்க்கையை கொண்டுவருவதற்கான தகுதியை கொண்டுள்ளது. குணமாக்குதலை கொண்டுள்ள தேவனுடைய வசனமாகிய விதை விடுதலையை கொண்டுவருவதற்கான வல்லமையை கொண்டுள்ளது. குணமாக்குதலின் வசனம் உங்களுடைய வாழ்க்கையில் விதைக்கப்படும் வரையில், நீங்கள் விதைக்காமல் அறுவடை செய்ய முயற்சிக்கலாம். நீங்கள் விதைக்காமல் அறுவடை செய்ய முடியாது. இதனாலேயே வேதாகமத்தின் அடிப்படை குணமாக்குதல் மற்றும் விடுதலையை நீங்கள் கற்க வேண்டும். அறுவடைக்கான ஓர் விதியானது, அறுவடை செய்ய நீங்கள் விதைக்க வேண்டும்.

அறுவடைக்கான இன்னொறு விதியானது நீங்கள் விதைத்த அதே காலத்தில் அறுவடை செய்ய முடியாது, ஆனால் அதற்கான காலத்தில் நீங்கள் அறுவடை செய்ய முடியும். தேவனுடைய வசனத்தை உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் விதைக்கும்போது, நீங்கள் உடனடியாக குணமாக்குதலை அனுபவிக்கவோ அல்லது நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவருக்கான விளைவை பார்க்கவோ மாட்டீர்கள். ஆனால் குணமாக்குதலின் வசனத்தை நீங்கள் தொடர்ந்தும் விதைத்துக்கொண்டு வந்தால், நீங்கள் சரியான சமயத்தில் அறுவடை செய்வீர்கள் -- இதுவே தேவ அறுவடைக்கான விதியாகும்.

குணமாக்குதல் தொடர்பான வேதாகம போதனையை நீங்கள் கற்க தொடங்கும்போது நீங்கள் எந்த காரியத்தை குறித்து கவனமாயிருக்க வேண்டும் என்னும் சில எச்சரிக்கைகளை விதைத்தலின் உவமையானது கொண்டுள்ளது. தேவனுடைய வார்த்தையின் விதையை விதைக்கும்போது சாத்தானுடைய எதிர்ப்பு எப்போதும் இருக்கும்.

உங்களுடைய வாழ்க்கையின் “வழியருகே” விழும் விதைகளை துன்மார்க்கன் உங்களிடமிருந்து திருடிவிடுவான். குணமாக்குதலின் தேவனுடைய வசனத்தை கேட்பீர்கள், ஆனாலும் கலாச்சாரம், சந்தேகம், விமர்சனம் மற்றும் அவிசுவாசனத்தினால் நீங்கள் அதை கடந்துப்போக பண்ணுகின்றீர்கள்.

சில விதைகள் “கற்பாறை நிலத்தில்” விழுகின்றது, ஆனால் உங்களுடைய இருதயத்தில் ஆழமாய் செல்ல நீங்கள் அனுமதிக்கவில்லை. கற்பாறையான நிலமானது தேவனுடைய வசனத்தின் உண்மையை திறக்க முடியாத கடின இருதயத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. தேவனுடைய வசனத்தை சந்தோஷத்தோடு பெற்றுக்கொள்ளுகின்றீர்கள், ஆனால் துன்பம் வரும்போது (பௌதீக தாக்குதலின் வடிவத்தில்) அல்லது துன்புறுத்தலின் வடிவத்தில் (தெய்வீக குணமாக்குதலை விசுவாசியாதவர்களால்) வசனமானது வாடி, நீங்கள் வெறுப்படைகின்றீர்கள். தேவனுடைய குணப்படுத்தலின் விசுவாசமான விதை உங்கள் வாழ்க்கையின் “முற்களால்” அடைப்படுகின்றது. உலகம், ஐசுவரியம், சுகபோகம், ஆடம்பரம் ஆகியவற்றின் கவனம் அதனுடைய வளர்ச்சியை அடக்குகின்றது.

மனிதனானவன் ஆவி, ஆத்துமா, சரீரத்தை கொண்ட இயற்கை திரித்துவத்தால் ஆக்கப்பட்டுள்ளான். மனிதனுடைய பௌதீக பகுதி சரீரமாகும். ஆவிக்குரிய பகுதிகளான ஆவியும் ஆத்துமாவும் அவன் கிரியை செய்ய இயலுமை அளிப்பதோடு. நினைத்து, உணர்ந்து, உணர்வுகளுக்கு பிரதியுத்தரவு செய்து, தேவனோடு ஆவிக்குரிய ரீதியில் பிரதியுத்தரவு செய்ய உதவுகின்றது.

ஆவிக்குரிய உண்மைகளை விதைக்கவும் அறுக்கவும் இவைகள் அனைத்தும் உள்ளடக்குகின்றன. கேட்டல், பார்த்தல் ஆகியவற்றின் சரீர புலன்களுக்கூடாக தேவனுடைய வார்த்தையாகிய பெருகுதலின்

விதையை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும். நீங்கள் வாசித்து அல்லது கேட்கும் போது வசனமானது உங்கள் ஆவியிற்குள் பிரவேசிக்கின்றது. ஆனால் உங்கள் வாழ்க்கையில் பெருகுவதற்கு, விதையானது உங்கள் ஆத்துமாவிற்குள் செல்லுதல் வேண்டும். இதன் செயற்பாடானது இயற்கையான உலகில் விஞ்ஞான ரீதியான பெருகுதலை போன்றது. மனிதர்கள் பெருகுவதற்கு ஆணும் பெண்ணும் இருத்தல் அவசியமாகும், அத்தோடு விஞ்ஞானரீதியான வித்தானது அவர்களுடைய உறவின் மூலம் பரிமாறப்படுகின்றது.

இதை ஆவிக்குரிய ரீதியில் பிரயோகிப்பதானது, தேவனுடைய வார்த்தையே விதையாகும். ஆவிக்குரிய ரீதியில் ஆவியே "ஆண்" பகுதியாகும், ஆத்துமா "பெண்" பகுதியாகும். (ஆவிக்குரிய ரீதியில் ஆத்துமாவே பெண் பகுதி என நாம் அறிவோம், ஏனென்றால் தாவீது கூறுகின்றார் "கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும்" சங்கீதம் 34:2). பெருகுவதற்கு விதையானது ஆவியிற்குள் (ஆண்) பிரவேசித்தல் வேண்டும், பிற்பாடு ஆத்துமாவிற்குள் (பெண்) பரிமாறப்படல் வேண்டும்.

தேவனுடைய வார்த்தை எமது வாழ்வின் மாற்றத்திற்கு பாதிப்பு ஏற்படாததற்கு காரணம் எமது ஆவியிற்குள் அதை செல்லுவதற்கு அனுமதிக்க வேண்டும். நாம் மனம், சித்தம், உணர்வு ஆகிய ஆத்ம இயற்கையின் ஆழமான இடங்களுக்கு அதை ஊடுருவிச்செல்ல நாம் உண்மையில் ஒரு போதும் இடமளிப்பதில்லை.

இயற்கையான உலகத்தில், ஒரு ஆணும் பெண்ணும் இணையும்போது, விஞ்ஞான ரீதியான வித்து உற்பத்தியாகின்றது, அதனுடைய விளைவு வெளியரங்கமானது. புதிய உயிர்களின் அணுக்கள் உற்பத்தியாக்கப்பட்டு சிறு குழந்தை பிறக்கின்றது. ஆவிக்குரிய உலகிலும் இதுவே உண்மையானது. குணமாக்குதல் சம்பந்தமான தேவனுடைய வார்த்தையானது பௌதீக பகுதிகளான உங்கள் கண் மற்றும் காதின் வழியாக ஆவியிற்கு பரிமாறப்படும்போது பிற்பாடு உங்கள் ஆத்துமாவில் விதைக்கப்படுகின்றது, அதனுடைய விளைவை வெளிப்படையான உங்கள் பௌதீக உடலினால் காண முடியும்.

## பழைய ஏற்பாட்டு பதிவு

பழைய ஏற்பாட்டு பதிவுகளிலிருந்து குணமாக்குதல் மற்றும் விடுதலை குறித்தான எமது அடிப்படை வேதாகம பாடம் தொடங்குகின்றது. (இந்த பாடத்தில் பல்வேறுப்பட்ட வசனங்களில் குறிப்பிட்டுள்ளப்படி, உங்களுடைய வேதாகமத்தில் அவற்றை வாசிக்க நேரத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.)

உண்மையில், ஆரோக்கியமான சரீரம், ஆவி, ஆத்துமாவோடு பாவமில்லாத மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான். முதன் மனிதனுடைய பாவத்தின் விளைவாக உலகத்திற்கு மரணம் பிரவேசித்தது என அதிகாரம் நான்கில் நீங்கள் ஏற்கனவே கற்றீர்கள் (ஆதியாகமம் 3). மனிதனுக்கு மேல் மரணத்தின் சாபம் வந்ததால், சாத்தான் மனிதனுடய உயிர் தொகுதியினுள் நுழைந்து, சுகவீனம், வியாதி, கட்டுக்கள் மற்றும் மரணம் போன்ற தன்னுடைய அழிக்கும் இலட்சியத்தை தொடங்கிவிட்டான் என நீங்கள் கற்றீர்கள்.

ஆனால் இந்த சரித்திரத்தின் இருண்ட பகுதியில், முதலாவது ஆவிக்குரிய மற்றும் பௌதீக குணமாக்குதல் கொடுக்கப்பட்டது. ஆதியாகமம் 3:15ல் பெண்ணினுடைய வித்து சாத்தானுடைய தலையை நசுக்கும் என தேவன் கூறினார். இந்த "வித்தானது" இயேசு கிறிஸ்துவை குறித்தான, அவருடைய பூலோக ஊழியத்திற்கூடான மரணம், உயிர்த்தெழுதல் மூலமான சாத்தானை தோற்கடிக்கும் வாக்குத்தத்ததின் தீர்க்கதரிசனமாகும்.

ஆதியாகமம் இரண்டு வகையான தெய்வீக குணமாக்குதலை கொண்டதான பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆதியாகமம் 17:18-19ல் தேவன் சாராளுடைய மலட்டை குணமாக்குவதாக வாக்களித்தார். ஆதியாகம் 21:1-7ல் இது நிறைவேற்றப்பட்டது. ஆதியாகமம் 20:17ல் அபிமெலேக்கு குணமாக்குதலை குறித்து பதிவுசெய்யப்பட்டடுள்ளது.

யாத்திராகம புத்தகத்தில், வியாதி மற்றும் தெய்வீக குணப்படுத்தலானது வேதாகம பதிவுகளில் மிக தெளிவாக உள்ளடக்கியுள்ளது. எகிப்திலிருந்து இஸ்ரவேலருடைய விடுதலைக்குப்பின், மக்கள் தண்ணீரை காணாமல் பல நாட்கள் நடந்தனர். அவர்கள் இறுதியில் மாராவிலே வந்தபோது, தண்ணீர் கசப்பாயிருந்தபடியால் அவர்களால் தண்ணீரை குடிக்க முடியவில்லை.

தண்ணீருக்குள் செலுத்தினால் அதை நல்ல தண்ணீராகும் மரத்தை தேவன் மோசேக்கு காண்பித்தார். இதைதொடர்ந்து தேவன் தமது மக்களுக்கு குணமாக்குபவராக தம்மை வெளிப்படுத்தினார். அவர் கூறினார்:

> **நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன். நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார். (யாத்திராகமம் 15:26)**

இதனுடைய அதிகமான சரியான மொழிப்பெயர்ப்பானது "நானே உன் வைத்தியராகிய கர்த்தர்" என்பதாகும். இது அடிக்கடி, தொடர்ச்சியான நடைபெறுவதை காட்டுகின்றது.

இந்த வாக்குத்தத்தம் முதலாவது இஸ்ரவேலருக்கு விசேஷித்த நிலையில் கொடுக்கப்பட்டுள்ளபடியால், சிலர் இதை அவர்களுக்கு மட்டும் பிரயோகிப்பதோடு, கிறிஸ்தவர்கள் இதில் உரிமை கோர முடியாது என்று கூறுகின்றார்கள். எவ்வாறாயினும் நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டியது, அந்த தேவனுடைய பெயர்களானது அவருடைய இயற்கை மற்றும் குணாதிசயங்களை வெளிப்படுத்துபவை ஆகும், அத்தோடு தேவன் மாறாதவராவார். அவர் இயல்பிலேயே வைத்தியர் அல்லது குணமாக்குபவராக இருந்தால், அவர் இன்றும் மாறாதவர் ஆவார். வேறு சிலர் குணமாக்கும் வசனங்களை யாத்திராகமத்திலுள்ள மோசேயினுடைய குஷ்டரோகம் குணமாகும் கையை குறிப்பிடுவார்கள் (யாத்திராகமம் 4:1-7) அத்தோடு தேவன் அவருடைய மக்களிலிருந்து வியாதிகளை நீக்க வாக்களித்துள்ளார் (யாத்திரா-கமம் 23:25).

லேவியராகமம் புத்தகத்தை வேதாகமத்தின் "குணமாக்குதலை கவனிக்கும் கையேடு" என அழைக்கலாம். தேவன் வியாதிகளின் சிகிச்சை சம்பந்தமான நடைமுறைகளை வெளிப்படுத்துகின்றார் (உதாரணத்திற்கு வேலியராகமம் 13:1-46; 14:1-32 பார்க்க) அத்தோடு சுகமாக வாழ்வதற்கான சம்பந்தமான வழிகாட்டு-தல்களை தருகின்றார் (வேவியராகமம் 15:1-33ஐ உதாரணமாக பார்க்க).

எண்ணாகம புஸ்தகம் மிரியாம் மற்றும் ஆரோனுடைய குஷ்டரோகம் குணமாகுதலையும் (எண்ணாகமம் 12:1-15) இஸ்ரவேலை தாக்கிய வாதையை குணமாக்குதலையும் பதிவுசெய்துள்ளது. (எண்ணாகமம் 16:41-50 மற்றும் 21:5-9).

உபாகமம் 28 குணமாக்குதல் தொடர்பான மிக முக்கியமான அதிகாரமாகும். அது பௌதீக குணமாக்குதலுக்கான கீழ்ப்படிதலின் தொடர்பை விபரிக்கின்றது. உபாகமத்திலுள்ள மற்ற பகுதிகள் இந்த உண்மையை காட்டுகின்றது 7:15; 29:22; 30:20.

நியாயாதிபதிகள் 13:2-24ல் மலடியான மனோவாவின் மனைவி குணமாக்கப்பட்டாள். 1 இராஜாக்களின் புஸ்தகத்தில் குணமாக்குதலை குறித்த பல பதிவுகள் காணப்படுகின்றது. 1 இராஜாக்கள் 13:4-6ல் முடங்காக கையையுடைய மனிதனுடைய கையைப்பற்றியும், 1 இராஜாக்கள் 17:17-24ல் மரித்த பிள்ளை உயிர்த்தெழுந்ததை பற்றிய கதையும் காணப்படுகின்றது. 2 இராஜாக்களானது எலிசாவினால் ஓர் பிள்ளை குணமாக்குதலை 2 இராஜாக்கள் 4:8-37 தொடர்ந்து பதிவு செய்வதோடு 2 இராஜாக்கள் 5:1-14ல் நாகமானுடைய குணமாக்குதல் காணப்படுகின்றது. அசரியா இராஜாவை குறித்தும் 2 இராஜாக்கள் 15:1-12ல் கற்க.

2 இராஜாக்கள் 20:1-11ல் எசேக்கியா குணமாக்குதலிலிருந்து தேவன் உள்ளார்ந்த வியாதியை குணமாக்கி எமது வாழ்க்கையின் வருடங்களை கூட்டுகின்றார் என நாம் கற்கின்றோம் (2 நாளாகமம் 32:24-26 மற்றும் ஏசாயா 38:1-12,16 ஆகியவற்றையும் காண்க). 2 இராஜாக்கள் 13:14 மற்றும் 21ல் குணமாக்குதலின் ஊழியத்தை செய்பவர்களோடும் கூட, அனைத்து மனிதர்களுக்கும் மரணம் வருகின்றது என்று நாம் கற்கின்றோம்.

குணமாக்குதலோடு தொடர்புடைய மாபெரும் மனந்திரும்புதலின் ஜெபம் 2 நாளாகமம் 6:26-31ல் பதியப்பட்டுள்ளது. 2 நாளாகமம் 20:9 ஆனது வியாதியின் தாக்குதலால் நாம் அழும்போது தேவன் கேட்கின்றார் என்று வாக்குறுதியளிக்கின்றது. 2 நாளாகமம் 16ல் தேவனிடமிருந்தான குணமாக்குதலை பெற தேடாததால் மரித்துப்போன ஆசாவினுடைய கதையை நீங்கள் வாசிக்கலாம். தேவனையும் அவருடைய குணமாக்குதலின் வல்லமையையும் தவிர, அவனுடைய பாவங்கள் மருத்துவ தாதிகளுக்கு செல்லாது, 2 நாளாகமம் 26ல் நீங்கள் உசியாவின் குஷ்டரோகத்தையும், அத்தோடு 2 நாளாகமம் 30:20ல் எசேக்கியாவின் ஜெபத்தின் மூலம் மக்கள் குணமாகுதலையும் குறித்து வாசிக்கலாம்.

யோபின் புஸ்தகத்தில் முக்கியமாக அதிகாரம் 1 மற்றும் 2ல், யோபுவினுடைய வியாதியின் உள்ளடங்கலோடு, அவனுடைய பிரச்சினைகளின் ஆதாரங்களை இனங்காண்பதற்கான காட்சிகளின் பின்புலன்களை பார்க்க எமக்கு அனுமதிக்கின்றது. யோபுவினுடைய வியாதியின் நேரத்தில் அவனுடைய பிரதியுத்-தரவு, அவனுடைய நண்பர்களுடைய பிரதியுத்தரவு மற்றும் தேவன் அவனை எவ்வாறு குணமாக்கி விடுதலை செய்தார் என்பதை கற்றுக்கொள்ள யோபுவினுடைய புஸ்தகத்தை படியுங்கள்.

சங்கீத புஸ்தகத்தில் குணமாக்குதலை தொடர்பான அநேக வாக்குறுதிகள், வெளிப்பாடுகள் மற்றும் ஜெபங்கள் ஆகியவற்றை கொண்டுள்ளது. கீழ்வரும் வசனங்கள் படியுங்கள்:

6:2-3: “என்னைக் குணமாக்கும் கர்த்தாவே.”

27:1: “கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர்.”

30:2: “உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், என்னை நீர் குணமாக்கினீர்.”

32:3-5: “குணமாக்குதலின் பாவத்தின் விளைவை ஏற்றுக்கொள்ளுகின்றது.”

34:19-20: “நீதியினிமித்தம் அநேகருக்கு துன்பங்கள் வரும், ஆனால் கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவர்களை விடுவிப்பார்.”

38:3,7: கோபமும் பாவங்களும் உங்களுடைய ஆரோக்கியத்தை பாதித்து வியாதிகளை கொண்டு-வரும்.

41:1-8: “என் ஆத்துமாவிற்கு விரோதமாக பாவம் செய்வதற்றை குணமாக்கும்.” இவ்வியாதி தீமை என்று அழைக்கப்படுகின்றது.

42:11; 43:5: எமது ஆரோக்கியத்திற்கான ஆதாரம் தேவனே.

42:1-5: உற்சாகமிழந்த ஆவியிற்கான குணமாக்குதல்.

55:1-2: ஜெபம் மற்றும் குணமாக்குதலிற்கான விடாமுயற்சி.

67:2: “பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய்..”

72:13: நாம் பலவீனமுள்ளவர்களுக்கு இரக்கம் காட்ட வேண்டும்.

91:9,10: “வாதை உன் கூடாரத்தை அணுகாது.”

103:1-5: “அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே… உன் நோய்களையெல்லாம் குணமாக்கி..” இந்த பகுதியில் தேவன் எமது பாவங்கள் அனைத்தையும் மன்னித்து, அனைத்து நோய்களுக்கும் மருத்துவராயிருக்கின்றார்.

105:37: இஸ்ரவேலர் நாற்திசைகளிலிருந்தும் அவர்களுள் ஒருவரும் கூட பலவீனராய் இல்லாமல் வந்தார்கள். மூன்று மில்லியன் மக்கள் அனைவரும் சுகமாய், பலமாய் இருந்தார்கள்.

107:17-20: “அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி..”

119:25-28: நாம் வசனத்தினால் பலமுள்ளவர்களாக்கப்பட்டுள்ளோம்.

119:67: “நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பி நடந்தேன்.”

147:3: “அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்” இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார்.

105:37: “அவர்களை புறப்படப்பண்ணினார்; அவர்கள் பலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை.”

நீதிமொழிகளின் புஸ்தகம் ஆரோக்கியமான வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட அறிவை கொண்டிருக்கின்றது. நீதிமொழிகள் 3:7-8 எவ்வாறு ஆரோக்கியமாய் இருத்தல் வேண்டும் என்பதை விபரிக்கின்றது. நீதிமொழிகள் 4:20-23ஆனது வாழ்க்கையின் நிலைகளானது இருதயத்தின் குறிக்கேள்களால் தாக்கமுறுகின்றது

என்பதையும், தேவனுடைய வாக்குத்தத்தமானது வாழ்க்கையையும், ஆரோக்கியத்தையும் கொண்டு-வருகின்றது என்பதையும் வெளிப்படுத்துகின்றது.

நீதிமொழிகள் 15:4 மற்றும் 30 ஆனது கலந்துரையாடுதல் குணமாக்குதலின் விளைவை கொண்டு-வரும் என்பதை உறுதிப்படுத்துகின்றது, நீதிமொழிகள் 16:24 தேவனுடைய வசனம் குணமாக்குதலை கொண்டுவருவதை காட்டுகின்றது. நீதிமொழிகள் 16:24 எலும்புகளுக்கு ஆரோக்கியத்தை கொண்டு வருவதாக சுட்டிக்காட்டுகின்றது. நீதிமொழிகள் 17:22 ஆவிக்குரிய பிரச்சினைகளுக்கு பௌதீகம் தாக்குகின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது.

பிரசங்கி 3:3 குணமாக்குதலுக்கு ஒரு நேரம் குறிக்கப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது. பிரசங்கி 5:17 துக்கமும் கோபமும் எவ்வாறு வியாதியிற்கு சம்பந்தப்படுகின்றது என்பதை காட்டுகின்றது.

ஏசாயா 6:10 ஆவிக்குரிய ரீதியாக விளங்குதல், சம்பாஷனை மற்றும் குணமாக்குதல் ஆகியவற்றிற் கிடையிலான தொடர்பை விளக்குகின்றது. ஏசாயா 16:22 தேவன் எமக்குள் உட்பிரவேசிக்கும்போது அவர் குணமாக்குகின்றார் என உறுதிப்படுத்துகின்றது ("உட்பிரவேசித்தல்" என்பது "மரியாதையாக கேட்டலும், தொடர்ச்சியாக கேட்டலையும் குறிக்கின்றது.")

ஏசாயா 32:3-4 தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாக குணமாக்குதல் மாபெரும் தீர்க்கதரிசன வாக்குத்தத்தமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏசாயா 33:24 மற்றும் 35:5-6 ஆயிரம் வருட அரசாட்சியில் உள்ள குணமாக்குதலையும் எவ்வாறு குடிகள் "நான் வியாதியஸ்தன் அல்ல" என கூறுவார்கள் என்பதையும் சொல்லுகின்றது.

ஏசாயா 53:5ல் பாவநிவர்த்திக்கூடாக குணமாக்குதலும், விடுதலையும் எமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஏசாயா 57:18-19 குணமாக்குதல் சமீபம் என்று எம்மை உற்சாகப்படுத்துகின்றது அத்தோடு ஏசாயா 58:8 "சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்" என்பதை உறுதிப்படுத்துகின்றது.

ஏசாயா 61:1 இயேசுவானவர் இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்ட அனுப்பப்பட்டார் என நாம் படிக்கின்றோம். இது உள்ளான, உணர்வுரீதியான குணமாக்குதலை பேசுகின்றது.

எரேமியா 8:14-15; 20-22 பௌதீக வியாதியை எவ்வாறு பாவத்தின் கசப்பு கட்டுகின்றது எனவும், எரேமியா 15:18 குணமாக்க முடியாத காயத்தோடு எவ்வாறு சம்பந்தப்பட வேண்டும் என்பதையும் விபரிக்கின்றது. எரேமியா 17:14; 30:12-17 மற்றும் 33:5 தேவனே குணமாக்குதலின் ஆதாரம் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

புலம்பல் 3:33 "தேவன் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சஞ்சலப்படுத்துகிறதில்லை" என உறுதிப் படுத்துகின்றது. எசேக்கியேல் 17:14; 30:17 மற்றும் 33:6 தேவன் குணமாக்கி, ஆரோக்கியத்தை மீளளிப்பார் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

எசேக்கியேல் 30:12-13 ஆனது குணப்படுத்த முடியாத காயங்கள் மருந்துக்களால் குணமாக்க முடியாது என கூறுகின்றது. எசேக்கியேல் 34:4,16,21 மற்றும் சகரியா 11:16 ஆடுகளுக்கு (மக்கள்) குணமளிக்க மறுக்கும் மேய்ப்பர்களுக்கு (சமயத் தலைவர்கள்) எச்சரிக்கையை கொண்டிருக்கின்றது.

தானியேல் அதிகாரம் 4 நேபுகாத்நேச்சாரின் வியாதி மற்றும் குணமாக்குதலை பதிவு செய்துள்ளது.

ஓசியா 5:13 குணமாக்குதலுக்கு வேறு இடத்திற்கு செல்லும்போதான ஆபத்தை எச்சரிக்கின்றது அத்தோடு ஓசியா 6:1 மற்றும் 7:1 பௌதீக மற்றும் ஆவிக்குரிய இரண்டு நிலைகளையும் தேவனால் குணமாக்க முடியும் என்று உறுதிப்படுத்துகின்றது. ஓசியா 11:3ல் இஸ்ரவேலை குறித்தான தேவனுடைய சோக வார்த்தையை பதிவு செய்துள்ளது: "நான் தங்களைக் குணமாக்குகிறவரென்று அறியாமற்போனார்கள்". பழைய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள குணமாக்குதலானது, மல்கியா 4:2ல் கூறப்பட்டுள்ள இயேசு-வானவரின் "செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்" என்பதோடு நெருங்கி காணப்படுகின்றது.

## புதிய ஏற்பாட்டு பதிவு

குணமாக்குதல் மற்றும் விடுதலையானது இயேசு மற்றும் முதலாவது சபை ஆகிய உதாரணங்களின் மூலம் புதிய ஏற்பாட்டில் புதிய நிலைகளில் விரிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இயேசுவினுடைய உதாரணம்:

புதிய ஏற்பாட்டில், விசுவாசம் மற்றும் கிரியைகளின் மாதிரியாக இயேசுவே இருக்கின்றார். அவருடைய குணமாக்குதல் மற்றும் விடுதலை ஊழியத்தின் மாதிரியையே நீங்கள் உங்களுடைய சொந்த ஊழியத்தில் பின்பற்ற வேண்டிய மாதிரி ஆகும். புதிய ஏற்பாட்டு நான்கு சுவிசேஷங்களிலுள்ள 3,774 வசனங்களில், 484 வசனங்களானது பௌதீக மற்றும் மனநிலை வியாதிகளுக்காகவும், மரணங்களின் உயிர்த்தெழுதலுக்காகவும் விசேடமாக தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. மாற்குவில் 666 வசனங்களில் 209 இயேசுவினுடைய அற்புதங்களோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. சுவிசேஷங்களில் உள்ள 1,257 வரலாற்று வசனங்களில் 484 (38.5 வீதம்) குணமாக்குதலின் அற்புதங்களில் விபரித்தலோடு தியானிக்கப்பட்டுள்ளது.

இயேசு அவருடைய ஊழியத்தில் தேவனுடைய வார்த்தையை பேசினார்:

> **நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள். (யோவான் 8:28)**

இயேசு தேவனுடைய சித்தத்தையும் வேலையையும் செய்தார்:

> **என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன். (யோவான் 6:38)**

> **பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும். ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது. (யோவான் 9:4)**

> **நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது. (யோவான் 4:34)**

இயேசுவினுடைய குறிக்கோளானது பாவம், வியாதி, கட்டு ஆகியவற்றை உள்ளடங்களோடு எதிரியினுடைய கிரியைகளை அழிப்பதே இயேசுவினுடைய குறிக்கோளாயிருந்தது:

> **பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். (1யோவான் 3:8)**

பிதாவுக்குப் பிரியமானவைகளை இயேசு செய்தார்:

**பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால்... (யோவான் 8:29)**

இதன் அர்த்தமானது இயேசு செய்த குணமாக்குதல் மற்றும் விடுதலை ஊழியத்தை நீங்கள் செய்யும் போது, நீங்கள் பிதாவை பிரியப்படுத்தி, அவருடைய வார்த்தைகளை பேசி, அவருடைய சித்தத்தை செய்து, எதிரியினுடைய கிரியைகளை அழிக்கின்றீர்கள்.

இயேசுவிடம் சமூகமளித்த எல்லாரையும் குணமாக்கினார் என்பதற்கான பல வசனங்கள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன:

-அப்போஸ்தலர் 10:38
-லூக்கா 4:40; 6:17-19; 9-11
-மத்தேயு 4:23-25; 9:6,35; 10:1; 12:15; 14:14,34-36

பல வகையான வியாதிகளை இயேசு குணமாக்கினார்:

-மனநிலை பாதிப்பு
-வீக்கம்
-ஊமை மற்றும் செவிடு
-பக்கவாதம்
-இரத்த கசிவு
-சாத்தானிய கட்டு
-பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்ட கை
-குருடு
-ஜுரம்
-வெட்டப்பட்ட காதை மீளமைத்தல்
-மரணத்திலிருந்து உயிர்த்தெழுதல்
-உறுப்புகள் துண்டிக்கப்படல் (மாற்கு 9:43ல் உபயோகிக்கப்பட்டுள்ளப்படி, மூட்டு இன்மையையே இது தெளிவாக குறிப்பிடுகின்றது)

இயேசுவின் குணமாக்கும் ஊழியத்தை இயக்குகின்ற உணர்வு இரக்கமேயாகும். (உதாரணத்திற்கு மத்தேயு 9:36; 12:9-13; 14:14; 18:27; 20:29-34; 29:34; மாற்கு 1:41; 3:1-5; 5:19; லூக்கா 6:6-10; 7:12-15; 10:33; 14:1-6; யோவான் 11:38-44). குணமாக்கும் ஊழியத்தில் இயேசு வெளிப்படுத்திய வேறு உணர்வுகள் துக்கம், கோபம், பெருமூச்சு மற்றும் அழுகை ஆகும்.

குணமாக்குதலுக்கு இயேசு வேறுபட்ட முறைகளை உபயோகித்தார். சில சமயங்களில் இயேசு வியாதியஸ்தவர்களை அழைத்தார் (மாற்கு 3:1-6). மற்ற நேரங்களில் அவர்கள் அவரை அழைத்தார்கள் (மத்தேயு 8:5-13; லூக்கா 7:1-10ல் கீழ்ப்பட்டிருக்கின்ற சேவகர்கள் குறித்தான கதையையும், மத்தேயு 9:18-19; 23-26ல் தலைவனுடைய மகளை குறித்தான கதையையும் பார்க்கவும்)

இயேசு பௌதீக நிலையினால் மாத்திரம் அல்ல, முழு மனிதனுடைய நிலைகளிலும் அக்கறை கொண்டார். அவர் பாவத்தை மன்னிப்பதை குறித்தும், குணமாக்குதலை குறித்தும் போதித்தார். சிலசமயங்களில் அவர் முதலில் குணமாக்கி, பிற்பாடு மன்னிப்பு அளித்தார் (லூக்கா 17:9 மற்றும்

யோவான் 5:14ஐ பார்க்க). மற்ற சமயங்களில் அவர் பாவத்தை மன்னித்து, பிற்பாடு குணமாக்கினார் (மாற்கு 2:1-12ஐ பார்க்க).

வியாதியஸ்த நபரின் குணமாக்கும் பகுதியில் விசுவாசம் இல்லாமல் சில சமயங்களில் குணமாக்குதல் நடைபெற்றது (இது குறைந்தபட்சம் குறிப்பிடப்படவும் இல்லை):

-லாசரு: யோவான் 11:1-44
-வேலைக்காரனுடைய காது: லூக்கா 22:50-51
-கதரேனரிலுள்ள அசுத்த ஆவி: மாற்கு 5:1-20
-கொன்னைவாயுடைய செவிடன்: மாற்கு 7:32-35
-சீமோனுடைய மாமி: லூக்கா 4:38-39
-விதவையுடைய மகன்: லூக்கா 7:12-15
-சூம்பின கையுடைய மனிதர்: மாற்கு 3:1-5
-பிறவிக் குருடன்: யோவான் 9:1-7
-ஆபிரகாமின் குமாரத்தி: லூக்கா 13:10-13
-ராஜாவின் குமாரன்: யோவான் 4:46-50
-நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன்: மத்தேயு 8:5-13
-கானானிய ஸ்திரியின் மகள்: மத்தேயு 15:21-28
-ஜெபஆலயத்தலைவனுடைய மகள்: மாற்கு 5:35-43

சில நேரங்களில் வியாதியஸ்த நபரின் விசுவாசத்தின் ஒரு பகுதியின் காரணமாக குணமாக்குதல் நடைபெற்றது:

-இரண்டு குருடர்கள்: மத்தேயு 9:27-31
-குஷ்டரோகி: மத்தேயு 8:2-4; 20:29-34; மாற்கு 1:40-44
-பத்து குஷ்டரோகிகள்: லூக்கா 17:11-19
-இரண்டு குருடர்கள்: மத்தேயு 20:29-34
-குருடன் பர்திமேயு: மாற்கு 10:46-52; லூக்கா 18:35-43
-பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ: மத்தேயு 9:20-22; மாற்கு 5:25-34; லூக்கா 8:43-48

மற்றவர்களுடைய விசுவாசத்தின் காரணமாக குணமாக்குதல் நடைபெற்றது:

-நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன்: மத்தேயு 8:5-13
-ராஜாவின் குமாரன்: யோவான் 4:46-53
-திமிர்வாதக்காரனை கொண்டுவந்த நான்குபேர்: மத்தேயு 9:1-8; மாற்கு 2:1-12; லூக்கா 5:17-26
-கானானிய ஸ்திரியின் மகள்: மத்தேயு 15:21-28
-பிசாசு பிடித்த ஊமையன்: மத்தேயு 9:32-33
-பிசாசு பிடித்த குருடு மற்றும் ஊமையன்: மத்தேயு 12:22-23
-ஜெபஆலயத்தலைவனுடைய மகள்: மாற்கு 5:35-43
-கொன்னைவாயுடைய செவிடன்: மாற்கு 7:32
-குருடனான மனிதன்: மாற்கு 8:22-26

இயேசு குணமாக்குதலின் போது வித்தியாசமான பேச்சுமொழிகளை உபயோகித்தார். சில சமயங்களில் வார்த்தைகளின் உச்சரிப்பைமாத்திரம் அவர் பேசினார்:

-ஆபிரகாமின் குமாரத்தி: லூக்கா 13:10-13
-ராஜாவின் குமாரன்: யோவான் 4:46-53
-குருடன் பர்திமேயு: மாற்கு 10:46-52
-இரண்டு குருடர்கள்: மத்தேயு 9:27-31
-நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன்: மத்தேயு 8:5-13

சிலநேரங்களில் அவர் கட்டளையிடும் வார்த்தைகளை பேசினார்:

-திமிர்வாதக்காரன்: லூக்கா 5:17-26
-ஜெபஆலயத்தலைவனுடைய மகள்: மாற்கு 5:22-24, 35-43

சிலசமயங்களில் இயேசு கட்டளையுடன் தொடுகையையும் இணைத்தார்:

-குஷ்டரோகி: மத்தேயு 8:2-4
-இரண்டு குருடர்கள்: மத்தேயு 9:27-31
-சீமோனுடைய மாமி: லூக்கா 1:38-39
-ஊமையும் செவிடுமான மனிதன்: லூக்கா 7:32-35
-விதவையினுடைய மகன்: லூக்கா 7:12-15
-ஆபிரகாமுடைய குமாரத்தி: லூக்கா 13:10-13

சிலசமயங்களில் இயேசு ஜெபித்தார்

-சீமோனுடைய மாமி: லூக்கா 4:38-39
-ஊமையும் செவிடுமான மனிதன்: லூக்கா 7:32-35
-விதவையினுடைய மகன்: லூக்கா 7:12-15
-லாசரு: யோவான் 11:38-44
-சூம்பின கையுடைய மனிதன்: மாற்கு 3:1-5

இயேசுவிற்கு வியாதியை குணமாக்குவதற்கு பௌதீக ரீதியாக அருகில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர் தூரத்திலிருந்தே குணமாக்கினார்:
-நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன்: மத்தேயு 8:5-13
-ராஜாவின் குமாரன்: யோவான் 4:46-53
-கானானிய ஸ்திரியின் மகள்: மத்தேயு 15:21-28

குணமாக்குதலின் செயற்பாட்டின் ஒரு பகுதியாக வியாதியஸ்தருக்கு சிலதை செய்யும்படியாக இயேசு கட்டளையிட்டார்:

-சூம்பின வலதுகையையுடைய மனுஷனுக்கு "உன் கையை நீட்டு"ம்படியாக கூறப்பட்டது: லூக்கா 6:6-11

-பெதஸ்தாவில் வியாதியஸ்தனுக்கு "எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட" என கூறப்பட்டது: யோவான் 5:1-9

-வியாதியஸ்தவனாயிருந்த ராஜாவின் குமாரனுக்கு கூறப்பட்டது “நீ போகலாம்”: யோவான் 4:46-53
-பத்து குஷ்டரோகிகளுக்கு ஆசாரியருக்கு காண்பிக்கும்படியாக கூறப்பட்டது: லூக்கா 17:11-19
-சீலோவாம் குளத்தில் கழுவும்படியாக குருடனான மனிதனுக்கு கூறப்பட்டது: யோவான் 9:7

இயேசு குணமாக்குதலின் ஊழியத்தை வெளியரங்கமாகவும் (குழுக்கள் மற்றும் கூட்டங்கள்) இரகசியமாகவும் (வீடுகள் மற்றும் தனிப்பட்ட அழைப்புக்கள்) செய்தார்:

இயேசு வித்தியாசமான “பொருட்களை” உபயோகித்தார்:

-உமிழ்நீர்
-சேறு
-காதில் கைகளை வைத்து
-துணியினுடைய ஓரம்
-நீரில் கழுவுதல்

சிலசமயங்களில் வியாதியஸ்தர்கள் அவரை தொட்டார்கள்:

-ஜெபஆலயத்தலைவனுடைய மகள்: மாற்கு 5:23-24
-திரளான ஜனங்கள்: லூக்கா 6:17-19
-திரளான ஜனங்கள்: மாற்கு 3:10
-அவரை தொட்டவர்கள்: மாற்கு 6:56

சிலசமயங்களில் அவர் வியாதியஸ்தர்களை தொட்டார்:

-இரண்டு குருடர்கள்: மத்தேயு 9:27-31
-பல்வேறு வியாதிகளையுடைய மக்கள்: லூக்கா 4:40
-குஷ்டரோகி: லூக்கா 5:13
-பலவீனப்படுத்தும் ஆவியையுடைய ஸ்திரி: லூக்கா 13:10-13

கீழ்வரும் குணமாக்குதல்களுக்கு இயேசுவால் கொடுக்கப்பட்ட ஆலோசனைகள் பல்வேறுப்பட்டவைகள். உதாரணத்திற்கு, சீமோனுடைய மாமியை படுக்கையிலிருந்து எழுப்புதல், வீட்டில் சுற்றியிருந்தோருக்கு ஊழியம் செய்தல். ஜெபஆலயத்தலைவனுடைய மகளுக்கு உணவளிக்கும்படி அழைத்தல்:

இயேசுவினுடைய குணமாக்குதல் பல்வேறுப்பட்ட இடங்களில் நடைபெற்றது:
-வீட்டிற்கு உள்ளேயும், வெளியேயும்
-திறந்த கூட்டங்கள்: வீதிகள், குளங்கள், மலைகள், படகுகள்
-மரண சடங்குகள்
-மயானங்கள்
-ஆலயம்
-உணவு உண்ணும் சமயங்களில் கூடும்போது
-மற்ற இடங்களுக்கு செல்லும் வழிகளில்
-தோட்டங்களில்

அற்புதங்கள் மற்றும் குணமாக்குதல்களுக்கு பல்வேறுப்பட்ட பிரதியுத்தரவுகள் கிடைத்தன:

-ஆச்சரியங்கள்
-தேவனுடைய பயம்
-விவாதங்கள்
-குடும்பம் மற்றும் சமய தலைவர்களால் நிராகரிப்பு
-கதறும் ஆவிகள்
-கோபம்
-பிரபலம்
-தேவனை மகிமைப்படுத்துதல்
-“இது என்ன” என கேள்வி கேட்டல்
-கலந்தாலோசனைகள் (அறிவித்தலும் பிரஸ்தாபமும்)
-வீட்டுடனான இரட்சிப்பு

சுருக்கமாக, எம்முடைய சொந்த ஊழியத்தின் உதாரணமாக இயேசுவினுடைய ஊழியத்தை கருத்தில் கொள்ளும்போது, இயேசு அவருடைய பூலோக ஊழியத்தில் தேவனுடைய வார்த்தையை பேசினார் என்றும், தேவனுடைய காரியங்களை செய்தார் எனவும் அறிகின்றோம். குணமாக்குதலும் விடுதலையும் அவருடைய பிரசங்கம் மற்றும் வேலைகளின் ஒரு பகுதியாக இருந்தது.

சிலநேரங்களில் எல்லோரும் சமூகமளித்திருக்கும்போது இயேசு குணமாக்கினார். மற்ற நேரங்களில், அவர் தனிப்பட்ட நபர்களை குணமாக்கினார். அவர் பல்வேறு வகையான வியாதிகளை குணமாக்கியதோடு, பல்வேறு விதமான ஊழியங்களை உபயோகித்தார். சிலசமயங்களில் குணமாக்குதலானது வியாதியஸ்தனுக்கு விசுவாசம் என்னும் பகுதியில்லாமல் நடைபெற்றது. சில சமயங்களில் வியாதியஸ்தருடைய விசுவாசம் அல்லது அவர்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களினால் நடைபெற்றது. அவர் சென்ற இடமெல்லாம் குணமாக்கும் ஊழியத்தை செய்ததோடு, அவருடைய ஊழியமானது இரக்கத்தினால் அடையாளப்படுத்தப்பட்டது. அவருடைய ஊழியத்திற்கு மக்களாலும், சமய மற்றும் அரசியல் தலைவர்களாலும் பல்வேறுப்பட்ட பிரதிபலிப்புக்கள் கிடைக்கப்பெற்றன.

இன்று இந்த அதே இயேசு எம்மை மீட்டு குணமாக்குதவதற்கு எம்மில் அசைவாடுகின்றார். “அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும் படியானதோடு..” (யோவான் 1:12-13) “அவரைத் தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்” (மாற்கு 6:56) என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள்.

## ஆரம்பகால சபைகளுக்கான உதாரணம்:

ஆரம்பகால சபைகளுக்கான உதாரணமானது எமது குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான ஊழியத்தின் மாதிரியை கொண்டுள்ளது. சீஷர்கள் அர்ப்பணிப்புள்ளவர்களாக்கப்பட்டு குணமாக்கும் ஊழியத்தில் இயேசுவால் அனுப்பப்பட்டார்கள். சீஷர்கள் அவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டதை செய்தார்கள், அத்தோடு இயேசு அவர்களுக்கு வாக்குப்பண்ணியதை எதிர்பார்த்தார்கள் (உதாரணத்திற்கு அப்போஸ்தலர் 3:4-7; 8:4-8; 28:3-6ஐ பார்க்கவும்).

சீஷர்கள் குணமாக்குதலுக்கான வல்லமையும் அதிகாரமும் அவர்களிடமில்லையெனவும், இயேசுவால்

ஆனதெனவும் விளங்கியிருந்தார்கள் (அப்போஸ்தலர் 3:4-7; 9:17-18). அவர்களுடைய குணமாக்கும் ஊழியத்தின் பகுதி ஜெபமேயாகும் (அப்போஸ்தலர் 4:23-31; 9:40-41; 28:8 மற்றும் யாக்கோபு 5:16). குணமாக்குதலுக்கான ஜெபங்களில் பரிந்துபேசுதல் மற்றும் தர்மம் ஆகிய இரண்டும் உள்ளன (அப்போஸ்தலர் 3:4-7 மற்றும் யாக்கோபு 5:14-16).

நேரம் தாமதமாகும் குணமாக்குதலை சீஷர்கள் உணர்ந்தார்கள். எப்பாப்பிரோதீத்துவினுடைய உதாணத்தை பிலிப்பியர் 2:25-30லும், தீமோத்துவை 1 தீமோத்தேயு 5:23லும் படிக்கவும்; துரோப்பீமை 2 கொரிந்தியர் 8:18-22லும் கற்க.

இயேசுவைப்போல் சீஷர்களும் அவர்களுடைய குணமாக்குதலின் ஊழியத்தால் உபத்திரவத்தை அனுபவித்தார்கள் (அப்போஸ்தலர் 4:3,29; 5:17-18; 6:9-15; 7:1-60).

அப்போஸ்தலரில் பதிவுசெய்யப்பட்ட பல்வேறுப்பட்ட குணமாக்குதலில் உள்ளடக்கப்படுவது:

-கரங்களை வைத்தல்: 5:12; 14:3; 19:11; 28:8

-வார்த்தைகளோடு கரங்களை வைத்தல்: சப்பாணி மனிதன், 3:1-10

-வார்த்தைகளோடு கரங்களினால் தூக்கி விடுதல்: சப்பாணி மனிதன், 3:1-42; பவுலினுடைய கண்கள், 9:36-43

-வார்த்தைகளை பிரசங்கித்தல் (அதிகாரத்தின் கட்டளை): அடிமை பெண், 16:18; லிஸ்திரா முடவன், 14:10

-ஜெபம்: பவுலினுடைய கண்கள், 9:36-43; புபிலியுவினுடைய தகப்பன், 28:8-9

-ஜெப வஸ்திரங்கள்: 19:11-12

-நிழல்: 5:12-16

-உறுமால்களும் கச்சைகளும்: 19:12

-சுற்றுப்புறம்: 14:19-20

-ஒரு மதிரியும் இல்லை: 14:19-20

-வசனங்களும், கட்டளைகளுக்கு கிரியை செய்தலும்: ஐனேயா 9:33-34; சப்பாணி மனிதன், அதிகாரம் 3.

சிலசந்தர்ப்பங்களில் குணமாக்குதலின் விளைவுகள் ஏற்பட்டது ஏனென்றால்:

-வியாதியஸ்தன் ஆரம்பித்து வைத்தான்: தேவாலய வாசலண்டையிலே சப்பாணியான மனிதன், அப்போஸ்தலன் 3:3

-நண்பர்கள் ஆரம்பித்து வைத்தார்கள்: தபீத்தாள், அப்போஸ்தலர் 9:38

-அப்போஸ்தலர்கள் ஆரம்பித்து வைத்தார்கள்:

| | | |
|---|---|---|
| -பேதுரு: | லித்தாவில் ஐனேயா: | அப்போஸ்தலர் 9:34 |
| -பவுல்: | லீஸ்திராவிலே முடவன்: | அப்போஸ்தலர் 14:9 |
| -பவுல்: | பிலிப்பிய அடிமை பெண்: | அப்போஸ்தலர் 16:18 |
| -பவுல்: | ஐத்திகு: | அப்போஸ்தலர் 20:10 |
| -பவுல்: | புபிலியுவினுடைய தகப்பன்: | அப்போஸ்தலர் 28:8 |

அப்போஸ்தலர்கள் தனிப்பட்டவர்களுக்கு ஊழியம் செய்தார்கள்: கீழ்வரும் அட்டவணையை படிக்கவும்:

**சீஷர்களால் குணமாக்கப்பட்ட தனிப்பட்டவர்கள்**

| **சம்பவங்கள்** | **அப்போஸ்தலர்** | **வகை** |
|---|---|---|
| சப்பாணிய பிச்சைகாரனை குணமாக்குதல் | 3:1-4:22 | பௌதீகம் |
| பவுலினுடைய கண்கள் | 9:10-19; 22:10-21 | பௌதீகம் |
| ஐனேயாவை பேருது குணமாக்குதல் | 9:32-35 | பௌதீகம் |
| பேதுரு தொற்காளை குணமாக்குதல் (தபீத்தாள்) | 9:36-43 | மரணத்திலிருந்து எழுப்புதல் |
| லீஸ்திராவில் சப்பாணிய மனிதன் | 14:8-18 | பௌதீகம் |
| லீஸ்திராவில் பவுல் எழுப்புதல் | 14:19-20 | பௌதீகம் |
| பிலிப்பிய அடிமை பெண் | 16:16-40 | சாத்தானிய ஆவி |
| ஐத்திகு | 20:7-12 | மரணத்திலிருந்து எழுப்புதல் |
| சர்ப்பம் பவுலை கடித்தல் | 28:3-6 | பௌதீகம் |
| புபிலியுவினுடைய தகப்பன் | 28:8-9 | பௌதீகம் |

சீஷர்கள் குழுக்களுக்கு ஊழியம் செய்தார்கள். கீழ்வரும் அட்டவணையை படிக்கவும்:

**சீஷர்களால் குணமாக்கப்பட்ட சம்பவங்கள்**

| | **அப்போஸ்தலர்** |
|---|---|
| அநேக அற்புதங்களும் அடையாளங்களும் | 2:42-47 |
| நம்பிக்கையான ஜெபங்களும், குணமாக்கும் அடையாளங்களும் | 4:23-31 |
| ஜெருசலேமின் அநேகர் குணமாகுதல் | 5:12-16 |
| அநேக அற்புதங்களை நடத்திய ஸ்தேவான் | 6:8-15 |
| சமாரியாவில் அநேகரை குணப்படுத்திய பிலிப்பு | 8:5-25 |
| பவுல் மற்றும் பர்னபாவினுடைய அற்புதமும் அடையாளமுமான வேலைகள் | 14:3 |
| எபேசுவில் பவுல் வியாதியஸ்தரை குணமாக்குதல் | 19:11-12 |
| மால்டாவில் வியாதியஸ்த மக்கள் குணமாகுதல் | 28:8-9 |

அநேக வகையான நோய்கள் குணமாக்கப்பட்டன. கீழ்வரும் அட்டவணையை படிக்கவும்:

**குணமாக்கப்பட்ட நோய்களின் வகைகள்**

| | | அப்போஸ்தலர் |
|---|---|---|
| ஜுரம் மற்றும் இரத்தபேதி | புபிலியுவினுடைய தகப்பன் | 28:8 |
| குருடு | பவுல் | 9:8 |
| தலை வியாதி (மரணம்) | ஐத்திகு | 20:9 |
| பௌதீக வியாதி | தபீத்தாள் | 9:37 |
| திமிர்வாதம் | ஐனேயா | 9:33 |
| சப்பாணி | சப்பாணி | 3:2; 8:7; 14:8 |
| சாத்தானிய செயற்பாடு | பிலிப்பு | 16:16-40 |
| பாம்பு கடி | பவுல் | 28:3-6 |

(கூட்டத்தில் கணடுக்கொள்ளமுடியாத அநேக வியாதிகளும் குணமாக்கப்பட்டன.)

குணமாக்குதலானது சிலசமயங்களில் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு இணங்க செயற்பட்டது:

-சப்பாணிய மனிதன் அப்போஸ்தலர் 3:2
-நண்பர்கள் (தபீத்தாள்) அப்போஸ்தலர் 9:38

தேவைக்கு ஏற்ப குணமாக்குதலின் விளைவு செயற்பட்டது:

-திமிர்வாதகாரனான ஐனேயா அப்போஸ்தலர் 9:33
-ஐத்திகு அப்போஸ்தலர் 20:10
-புபிலியுவினுடைய தகப்பன் அப்போஸ்தலர் 28:8
-மால்டாவின் வியாதி அப்போஸ்தலர் 28:9

விசுவாசித்தினால் குணமாக்குதலின் விளைவு செயற்பட்டது:
-லீஸ்திராவிலே முடவன் அப்போஸ்தலர் 14:9

அலைக்கலித்தலின் விளைவினால் குணமாக்குதலின் விளைவு செயற்பட்டது:
-பிலிப்பிய அடிமைப்பெண் அப்போஸ்தலர் 16:18

சீஷர்களுடைய உதாரணங்களின் மூலம் அவர்கள் அர்ப்பணிப்புள்ளவர்களாகவும், இயேசுவால் குண-மாக்கும் ஊழியத்திற்கு அனுப்பபட்டவர்கள் என நாம் கற்கின்றோம். அவர்களுடைய அதிகாரமும், வல்லமையும் கிறிஸ்துவிடமேயிருந்து வந்ததென அவர்கள் விளங்கியிருந்தார்கள். அவர்களுடைய குணமாக்குதலின் ஊழியத்தில் ஜெபமே பகுதியாயிருந்தது, அத்தோடு அவர்கள் தாமதத்தையும், உடனடியான விளைவுகளையும் அனுபவித்தார்கள்.

இயேசுவைப்போலவே அவர்களுடைய குணமாக்குதலின் ஊழியத்தில் உபத்திரவத்தை அனுபவித்தார்கள்.

அவர்கள் பல்வேறுப்பட்ட குணமாக்குதலின் மாதிரியை உபயோகித்தார்கள் மற்றும் பல்வேறுப்பட்ட வியாதியஸ்தர்களோடு அனுபவப்பட்டார்கள். சிலசமயங்களில் வியாதியஸ்தர் ஆரம்பித்தல், நண்பர்கள் ஆரம்பித்தல் அல்லது அப்போஸ்தலர்கள் ஆரம்பித்தல் ஆகியவையால் வியாதிகளின் குணமாக்குதல் விளைவாகின. குழுக்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு சீஷர்கள் ஊழியம் செய்தார்கள்.

புதிய ஏற்பாட்டின் பதிவின்படி, இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தோடு அற்புதங்கள், குணமாக்குதல் மற்றும் விடுதலை ஆகியவையின் முடிவல்ல என்பது தெளிவாகும். "அவர்கள் விசுவாசித்தார்கள்" என்னும் அடையாளம் தொடர்கின்றது.

## குணமாக்குதலும் பரிகாரமும்

குணமாக்குதலுக்கான மிகவும் முக்கியமான வேதாகம வசனங்களை விரிவாக நாம் கவனம் செலுத்த வேண்டும்:

> **மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.**
>
> **நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். (ஏசாயா 53:4-5)**

இயேசு கிறிஸ்துவை தீர்க்கதரிசனமாக காட்டும் அதிகாரம் ஏசாயா 53 ஆகும். நான்காம் மற்றும் ஐந்தாம் வசனங்களானது கண்டிப்பாக குணமாக்குதலோடும், இயேசுவினால் அவருடைய சிலுவை மரணத்தின் பரிகாரத்தோடும் தொடர்புபட்டுள்ளது. இந்த அதிகாரத்திலுள்ள "மெய்யாகவே" என்னும் வார்த்தையின் ஒரே உபயோகம், சொல்லழுத்தம், எமது இரட்சிப்பு மற்றும் குணமாக்குதலுக்கான இந்த முன்னிருத்தலை அளிக்கின்றது.

பாவமும், வியாதியும் சாத்தானுடைய இரு தீமைகளாகும். இரட்சிப்பும் குணமாக்குதலும் தேவனுடைய விடுதலைக்கான இரு முன்னிருத்தலுமாகும். கல்வாரியிற்கு முன்னர் மக்கள் விசுவாசத்தின் மூலம் முன்னோக்கி பார்த்தலினூடாக மீட்கப்பட்டு குணமானார்கள். பிற்பாடு, இரட்சிப்பும், குணமாக்குதலும் விசுவாசத்தின் மூலம் பின்னோக்கி பார்த்தலினூடாக கிடைக்கின்றது.

வியாதியும், மரணமும் பாவத்தினால் நுழைந்தது, அத்தோடு அநீதிக்கு தண்டனை ஏற்பட்டது, ஆகவே இதற்கான தீர்வானது கிறிஸ்துவின் பரிகாரத்தினால் காணப்படுகின்றது. இயேசு ஒரே சமயங்களில் உங்களுடைய வியாதிகளையும், நோய்களையும் ஏற்றுக்கொண்டார். இதேபோலவே அவர் உங்களுடைய பாவத்தையும் சுமக்கின்றார்.

> **அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. (மத்தேயு 8:17)**

தேவன் பாவத்தையும், வியாதியையும் ஒரே பரிகாரமாக இயேசுவின் மேல் வைத்தார். இரட்சிப்பையும், குணமாக்குதலையும் அடைவதற்கான காரணியை பேருது பேசுகின்றார்:

> **நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். (1 பேதுரு 2:24)**

இயேசு உங்கள் பாவத்தை ஏற்றுக்கொண்டபின், உங்களை மீட்கும்படியாக அவரிடம் வருவது அவருடைய சித்தமாகும். உங்களுடைய அனைத்து பாவங்களையும் ஏற்றுக்கொண்டபின், உங்களை குணப்படுத்தும் படியாக அவரிடம் வருவது அவருடைய சித்தமாகும். உங்கள் அனைத்து பாவங்களையும் மன்னிக்கும் அதே தேவனே, உங்களுடைய அனைத்து வியாதிகளையும் குணமாக்கின்றார்.

> **என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி... (சங்கீதம் 103:2-3)**

“ஜெகோவா-சிட்கேனு” என்னும் மீட்பின் பெயரானது உங்களுடைய ஆத்துமாவின் தேவனுடைய மீட்சியின் முன்னிருத்தலை வெளிப்படுத்துகின்றது. “ஜெகோவா-ராப்பா” என்னும் மீட்பின் பெயரானது உங்களுடைய சரீரத்திற்கான தேவனுடைய மீட்சியின் முன்னிருத்தலை வெளிப்படுத்துகின்றது.

ரோமர் 10:9ல் உள்ள “இரட்சிக்கப்படுதல்” என்னும் அதே வார்த்தையே மாற்கு, “அவரைத் தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்” என்று சொல்லுவதிலிருந்து உபயோகிக்கின்றார். இந்த பந்தியில் கிரேக்க வார்த்யையான “சோசோ” உபயோகிக்கப்படுவதின் அர்த்தமானது பாவத்திற்கும், அதன் தண்டனைக்கும் இருந்தான இரட்சிப்பாகும். வியாதி தண்டனையின் ஒரு பகுதியாகும், ஆகவே பாவத்தின் பரிகாரத்திற்கான ஒரு பகுதி இரட்சிப்பு ஆகும்.

விசுவாசிகளினுடைய இறுதி பூரணப்படுதலை கிறிஸ்துவினுடைய பரிகாரம் உத்தரவாதப்படுத்தியிருக்கும் போது, பௌதீக மற்றும் ஆவிக்குரிய மனிதனுடைய குறைபாடுகள் தொடரும். விசுவாசி தொடர்ந்தும் பாவம் மற்றும் வியாதியிற்கான தாக்குதலிலிருந்து துன்புறுவர். கிறிஸ்துவினுடைய பரிகாரத்தின் எல்லையற்ற பலனானது வெளிப்பட உள்ளது:

> **கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. (1 பேதுரு 1:5)**

நித்தியத்தில் பௌதீக மற்றும் ஆவிக்குரிய பூரணப்படுத்தலை பெற்றவர்களிடம் இரட்சிப்பின் நன்மைகளானது வெளிப்படும்.

இயேசு சிலுவையில் மரித்ததும் உங்களுடைய பாவம் அனைத்தையும் எடுத்துவிட்டாரா? நீங்கள் விசுவாசிகள் என்ற வகையில் இன்னும் பாவத்திற்கு எதிராக போராடுகின்றீர்களா? வியாதியிற்கான உண்மையும் இதுவே தான். இயேசு உங்களுடைய வியாதியிற்காக மரித்துவிட்டார், ஆனால் நீங்கள் நிலையற்ற உலகில் எவ்வளவு நீண்ட நாட்கள் இருக்கின்றீர்களோ, சாத்தான் கட்டப்படவில்லையோ, நீங்கள் வியாதியிற்கு எதிராக போராடியாக வேண்டும்.

இரட்சிப்பிற்கு இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் உண்டு:

-இறந்தகாலம்: இறந்தகாலத்தில் விலைகிரயம் செலுத்தப்பட்டதால் பாவத்தின் தண்டனையிலிருந்து நீங்கள் காக்கப்பட்டிருக்கின்றீர்கள்.

-நிகழ்காலம்: நிகழ்காலத்தில் பாவத்தின் வல்லமையிலிருந்து நீங்கள் காக்கப்பட்டிருக்கின்றீர்கள்.

-எதிர்காலம்: எதிர்காலத்தில் பாவத்திற்குரிய நிலைகளிலிருந்து நீங்கள் காக்கப்பட்டிருக்கின்றீர்கள்.

குணமாக்குதலிலும் இதுவே உண்மையாகும். உங்களுடைய பாவத்தின் வியாதியிற்கான தண்டனை-யிலிருந்து நீங்கள் காக்கப்பட்டிருக்கின்றீர்கள். நீங்கள் தற்காலத்தில் வியாதியின் வல்லமையை மேற்கொள்ளலாம் அத்தோடு எதிர்காலத்தின் நித்திய வியாதியிற்கான பிரசன்னத்திலிருந்து காக்கப் படலாம்.

பரிகாரத்தினுடைய நன்மையானது குணமாக்குதலாயிருந்தாலும், நீங்கள் இயேசுவை இரட்சகராக மட்டும் ஏற்றுக்கொள்ள கூடாது, குணமாக்குபவராகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் அவரை ஒருபோதும் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாவிடத்து, அவர் எவ்வாறு உங்களை பாவத்திலிருந்து நீக்கி வைத்திருக்க முடியும்? நீங்கள் அவரை ஒருபோதும் குணமாக்குபவராக ஏற்றுக்கொள்ளாவிடத்து, அவர் எவ்வாறு உங்களை வியாதியிலிருந்து நீக்கி வைத்திருக்க முடியும்?

## குணமாக்குதலிற்கான அர்ப்பணிப்பு

தேவனுடைய இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை போதித்து, பிரசங்கிக்கும்படி தம்முடைய சீஷர்களுக்கு இயேசு அர்ப்பணித்து, குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான அதன் வல்லமையை நிருபிக்கும்படி கொடுத்தார். கீழ்வரும் அட்டவணையை படித்து, உங்களுடைய வேதாகமத்தில் ஒவ்வொரு வசனங்களையும் பார்க்க:

| | **மத்தேயு** | **மாற்கு** | **லூக்கா** | **அப்போஸ்-தலர்** |
|---|---|---|---|---|
| 12 பேரை அனுப்புதல் | 10:1-42 | | 6:7-13 9:1-6 | |
| 70 பேரை அனுப்புதல் | | | 10:1-24 | |
| கட்டுவதும் கட்டவிழ்ப்பதற்குமான வல்லமை | 16:17-19 | | | |
| இறுதி அர்ப்பணிப்பு | 28:16-20 | 16:14-20 | 24:44-53 | 1:1-11 |

இங்கு மத்தேயு 10:1-42; மாற்கு 6:7-13; மற்றும் லூக்கா 9:1-6ன் பிரகாரம், முதலாவது அர்ப்பணிக்கப்பட்ட பன்னிரெண்டு சீஷர்களுக்கு கொடுக்கப்பட்ட அனைத்து அறிவுறுத்தல்கள் பட்டியலாக தரப்பட்டுள்ளன:

-இருவராக செல்லுதல்
-இஸ்ரவேலுக்கு செல்லுதல்
-மனந்திரும்புதல் உள்ளடங்குதலாக, இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை போதித்தல்
-வியாதியஸ்தர்களை குணமாக்கி, எல்லாவகையான வியாதிகளையும் குணமாக்குதல்
-வியாதியஸ்தரை எழுப்புதல்
-குஷ்டரோகிகளை சுத்தமாக்குதல்

-பிசாசுகளை துரத்துதல்
-ஆடைகளையும், பணத்தையும் செல்லுவதற்கு ஆயத்தம் பண்ணாதிருத்தல்
-இலவசமாக பெற்றதை, இலவசமாக கொடுத்தல்
-தீய ஆவிகள் மற்றும் சாத்தானுக்கு மேல் வல்லமையையும் அதிகாரத்தையும் கொடுக்கப் பட்டிருத்தல்

லூக்கா 9:6 மற்றும் மாற்கு 6:12-13 அவர்களுடைய ஊழியத்தின் விளைவுகளை பதிவுசெய்துள்ளது.

லூக்கா 10:1-24ல், 70 சீஷர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளதை நாம் வாசிக்கின்றோம். கொடுக்கப்பட்ட ஆலோசனைகளானது:

-உங்களுடைய வழியில் செல்லுங்கள்: அவர்களுடைய ஊழியம் இஸ்ரவேலில் மாத்திரம் இல்லை. அவர்கள் வரும் எல்லா நகரத்திற்கும் அவர்கள் செல்லுதல் வேண்டும்.

-இராஜ்ஜியத்தின் செய்தியை போதித்தல்.

-வியாதியஸ்தரை குணமாக்குதல்.

-ஆடைகளையும், பணத்தையும் செல்லுவதற்கு ஆயத்தம் பண்ணாதிருத்தல்.

-அவர்களுக்கு சர்ப்பங்களுக்கு மேலான வல்லமை கொடுக்கப்பட்டுள்ளது, அனைத்து எதிரிகளின் மேலான வல்லமை கொடுக்கப்பட்டுள்ளது ஆனால் அவைகள் ஒன்றும் மேற்கொள்ளாது.

லூக்கா 10:17ல் அவர்களுடைய ஊழியத்தின் விளைவுகளும், லூக்கா 10:18-20ல் இயேசுவினுடைய பிரதியுத்தரவு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கொடுத்த இறுதி உத்தரவு மத்தேயு 28:18-20, மாற்கு 16:16-20 (மாபெரும் அர்ப்பணிப்பு) மற்றும் லூக்கா 24:44-53ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அர்ப்பணிப்பானது அனைத்து விசுவாசிகளினாலும் நிறைவேற்றப்படவேண்டும். காட்டப்பட்ட வசனங்களிலிருந்து, அறிவுறுத்தல்களின் சுருக்கமானது இங்கே தரப்பட்டுள்ளன:

-உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்: அனைத்து உலகிற்கும்; எருசலேமிலிருந்து ஆரம்பித்து அனைத்து தேசங்களுக்கும், அனைத்து ஜீவன்களுக்கும்.

-அவருடைய நாமத்தில் பாவத்திற்கான மனந்திரும்புதலையும், மறுகுறிக்கோளையும் பிரசங்கித்தல்

-சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள், பிற்பாடு இயேசு கட்டளையிட்ட அனைத்து எல்லா காரியங்களும் மாற்றத்திற்குள்ளாக்கும் போதனைகள் மாற்றத்திற்குள்ளாக்கும்படி போதிக்கும்.

-குறிக்கோளுக்கான எல்லையானது வாக்குப்பண்ணப்பட்டதாகும். இந்த அடையாளங்கள் யாவும் விசுவாசிப்பவர்களை பின்தொடரும்: பிசாசுகளை துரத்துதல், நவமான பாஷைகளை பேசுதல், ஒரு தீங்கும் ஏற்படாதவாறு சர்ப்பங்களை எடுத்தல், ஒரு தீங்கும் ஏற்படாதவாறு விஷங்களை குடித்தல், வியாதியஸ்தர்களின் மேல் கைகளை வைத்தலும், அவர்கள் குணமாகுதலும்.

-இந்த அர்ப்பணிப்பை நிறைவேற்றுபவர்களோடு இயேசு கூட இருப்பார்.

அனைத்து உண்மையான மறுபடியும் பிறந்த விசுவாசிகள், அனைத்து உலகமும் இரட்சிப்பு, குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான இந்த அர்ப்பணிப்பை நிறைவேற்றும்படியாக இதனோடு சம்பந்தப்பட வேண்டும். குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான ஊழியமானது சபைக்கான சந்தர்ப்பம் அல்ல. இது மாபெரும் அர்ப்பணிப்பிற்கான இன்றியமையான பகுதியாகும்.

## இராஜ்ஜியத்திற்கான திறவுகோல்கள்

புதிய ஏற்பாட்டின் போதனைகளில், இயேசு பல உண்மைகளை அல்லது தேவனுடைய இராஜ்ஜியத்தை விளங்கும்படியான "திறவுகோல்களை" கூறினார். இம்மூன்றும் ஊழியத்திலும், குணமாக்குதல் பெறுவ திற்கும் இன்றியமையாததாகும். **முதலாவதானது** பிரதான கவனம் தேவனுடைய இராஜ்ஜியமாகும், மற்ற தேவையான அனைத்தும் (குணமாக்குதல் உள்ளடங்களாக) கூட கொடுக்கப்படும்:

> **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். (மத்தேயு 6:33)**

**இரண்டாவது** பெறுவதற்காக நீங்கள் கொடுக்கவேண்டியது:

> **கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். (லூக்கா 6:38)**

நீங்கள் குணமாக்கப்பட வேண்டுமானால், குணமாக்கும் ஊழியத்தை ஆரம்பியுங்கள். நீங்கள் கொடுக்கும் போது பெறுவீர்கள். அபிமலேக்கினுடைய மலடியான மனைவியிற்காக ஆபிரகாம் ஜெபித்தபோது அவள் குணமடைந்தாள், ஆனால் அவளுடைய சொந்த மனைவியான சாராவோ இன்னும் மலடியாயிருந்தாள். பின்னர், சாரா ஈசாக்கை கர்ப்பந்தரித்து பெற்றாள்.

**மூன்றாவதான** முக்கியமான கொள்கையானது தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை:

> **அதற்கு அவர்: மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும் என்றார். (லூக்கா 18:27)**

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

................................................................................................................................................

................................................................................................................................................

2. குணமாக்குதல் தொடர்பான பழைய ஏற்பாட்டின் போதனையை சுருக்கமாக தருக?

................................................................................................................................................

................................................................................................................................................

3. முதலாவது சபை மற்றும் இயேசுவின் உதாரணம் ஆகியவற்றை உபயோகித்து, குணமாக் குதல் தொடர்பான புதிய ஏற்பாட்டின் போதனையை சுருக்கமாக தருக?

................................................................................................................................................

................................................................................................................................................

4. இயேசு கிறிஸ்துவினுடைய பரிகாரத்தின் நன்மையானது குணமாக்குதலே என வசனங்க-ளில் இருந்து நிரூபிக்க?

................................................................................................................................................

5. குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான தொடர்பின் மாபெரும் அர்ப்பணிப்பை சுருக்க மாக்குக.

................................................................................................................................................

6. இந்த பாடத்தில் கலந்தாலோசிக்கப்பட்ட குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கு அனைத்து விசுவாசிகளும் உள்ளடக்கப்படவேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் வேதாகம வசனங்களை பட்டியல்படுத்துங்கள்.

................................................................................................................................................

7. இந்த பாடத்தில் கலந்தாலோசிக்கப்பட்ட குணமாக்குதலோடு சம்பந்தப்பட்ட "இராஜ்ஜயத் திற்கான திறவுகோல்கள்" மூன்று என்ன?

................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. வேதாகமத்தின் அடிப்படை குணமாக்குதலுக்கான உங்களுடைய படிப்பை தொடருவதற்கு இந்த கையேட்டின் குறிக்கோள் பகுதியை பயன்படுத்துங்கள். குறிக்கோள் பகுதியிலுள்ள குறிப்புக்களை நீங்கள் ஆராய்ந்து முடித்ததும், இந்த பாடத்தை மேலும் விரிவாக்கும்படியாக உங்களுடைய சொந்த குறிப்புக்களை குறிக்கோள் பகுதியில் சேருங்கள்.

2. குணமாக்குதலின் ஊழியத்தோடு சம்பந்தப்பட்டுள்ளோர்களின் காணக்கூடிய தோல்விகளின் பதிவுகளை கவனம் செலுத்தாது, எம்முடைய வேதாகம குணமாக்குதலின் அடிப்படைகளை கவனம் செலுத்துதல் முற்றுப்பெறாது. எப்பொழுதும் ஞாபகத்தில் கொள்ளுங்கள், இந்த சூழ்நிலைகளோடு சம்பந்தம்பெறும்போது, வசனத்தின் அர்த்தமானது அதின் வாக்குத்தத்தம் மற்றும் உபதேசங்களின் மேல் இருப்பதேயல்லாமல், அனுபவத்தினால் அல்ல. சில சந்தர்ப்பங்களில் மனிதனுடைய பகுதிகளில் தோல்வி காணப்படுமேயொழிய, ஒருபோதும் தேவனுடைய பகுதிகளில் அல்ல.

   எப்பாப்பிரோதீத்து (பிலிப்பியர் 2:25-27) அவனுடைய துன்புறுத்தல்களினிமித்தம் மரணத்திற் கேதுவாக வந்தான். பவுல் அவனிடம் ஊழியம் செய்திருந்தும் கூட, அவன் உடனடியாக குணமாக் குதலின் அனுபவத்தை பெறவில்லை. எப்பாப்பிரோதீத்து எவ்வாறாயினும் பிற்பாடு குணமாகினார். அனைத்து ஒழுங்குமுறையான குணமாக்குதலும் தேவனிடமிருந்தே வருகின்றது என ஞாபகத்தில் கொள்ளுங்கள். இது உடனடியாகவே, படிப்படியாகவோ அல்லது இயற்கையின் செயற்பாட்டின் மூலம் இருக்கலாம். நீங்கள் தோற்றவர் அல்ல, ஏனென்றால் உடனடியான தெய்வீக குணமாக்குதல் ஆதாரம் அற்றது.

   2 தீமோத்தேயு 4:20 துரோப்பீமு என்னும் வியாதியுடைய மனிதனை விட்டுவந்ததாக கூறுகின்றது. அவருடைய நிலையிலிருந்து இதை பெறுவது சற்று அதிகம் தான். பவுல் அவனை வியாதியஸ்தவனாக விட்டு வந்தான், ஆனால் அவன் பிற்திகதிகளில் குணமாகினா-னா என்று எமக்கு சொல்லப்படவில்லை.

   சாத்தானிய வல்லமையால் கட்டுண்ட இளம் சிறுவனை விடுதலையாக்கும்படியான சீஷர்களுடைய ஊழியத்தின் தோல்வியை மத்தேயு 17:14-21; மாற்கு 9:14-29; லூக்கா 9:37-45 பதிவு செய்துள்ளது. மூன்று வேதாகம பகுதிகளிலும் சிறுவனுடைய முழுமையான விபரித்தல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாவது அவன்:

   - புத்தி சுவாதீனமற்றவன்.
   - கொப்பளங்கள் உள்ளவன்.
   - தீயிலும், நீரிலும் விழுபவன்.
   - ஆவியினால் நசுக்கப்பட்டு, காயப்படுத்தப்பட்டவன்.
   - ஊமை.
   - ஆவியினால் அலைக்கழிக்கப்படுபவன்.
   - அவனுடைய பற்களை கடிப்பவன்.
   - சிறுவயதிலிருந்தே பாதிக்கப்பட்டவன்.

   இயேசுவின்படி, இச்சந்தர்ப்பத்தில் சீஷர்கள் தோல்வியடைந்தமை அவர்களுடைய

விசுவாசமின்மையே ஆகும். அத்தோடு அந்த குறிப்பிட்ட சாத்தானிய வல்லமையானது ஜெபத்தி-னாலும், உபவாசத்தினாலும் மாத்திரமல்லாது வெளியே வராது. அந்த சந்தர்ப்பத்தில் சீஷர்கள் அங்கு சுற்றியிருந்த சமயத்தலைவர்களுடனான விவாதமானது, விசுவாசமில்லாத சூழ்நிலைக்கான காரணியாக இருந்தது. இந்த கதையானது இங்கு வித்தியாசமான சத்தானிய வல்லமைகள் காணப்படுவதோடு, ஒரு சேனை மற்ற சேனையுடன் வல்லமையானது என காட்டுகின்றது. அத்தோடு இந்த சாத்தானிய வல்லமைகளோடு சம்பந்தப்படுவதற்கு விசேஷ ஆவிக்குரிய ஆயத்தங்களை செய்ய வேண்டும் என உறுதிப்படுத்துகின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் இயேசு இவ்வாறே அனுகினார். அவர் தகப்பனை நோக்கி, “இவ்விதம் எவ்வளவு காலம் இருந்தது?” என வினவினார். அவனுடைய தகப்பன் பிரதியுத்தரமாக சிறு வயதிலிருந்தே தாக்கப்பட்டிருப்பதாக கூறினார். இயேசு தீய ஆவியை கடிந்து, அதை வெளியே வருமாறும், இனி உட்புக கூடாது எனவும் கட்டளையிட்டார். தீய ஆவி இளம் சிறுவனை அலை கழித்தது, அவன் நிலத்தில் விழுந்து, உருண்டு, நுரை தள்ளினான். இயேசு அந்த அழுக்கான, செவிடும், ஊமையுமான ஆவியை அழைத்தார். சிலர் சிறுவன் மரித்தான் என எண்ணினர், ஆனால் இயேசு அவனை தமது கரத்தினால் மேலே தூக்கினார். அந்த ஆவி வெளியேறியது, பிற்பாடு சில மணித்தியாலங்களில் அவன் குணமாகினான்.

இந்த சம்பவத்திலுள்ள ஓர் அபாயம்: எல்லா செவிடர் மற்றும் ஊமையர்களை அல்லது சாத்தானுடைய தாக்குதலால் வலிப்பு நோயுடையவர்களை பிரிக்காதிருப்பதற்கு கவனமாயிருத்தல் வேண்டும். அனைத்து செவிடர் மற்றும் ஊமையர்களும் சாத்தானுடைய தாக்குதலால் அல்ல. அவர்களுடைய நிலையின் பிரகாரம் அவர்களுக்கு வியாதி அல்லது நோய்களினால் துன்புறலாம்.

“வலிப்பு” என்னும் ஓர் நிலையும் காணப்படுகின்றது, அது சாத்தானுடைய செயற்பாடு அல்ல. வலிப்பினுடைய அடையாளத்திற்கு ஒத்தது (கீழ்வரும் அட்டவணையை பார்க்க). வலிப்பு என்பது மூளையிலுள்ள நரம்பு அணுக்களின் திடீர் சக்தியின் துண்டிப்பின் விளைவே ஆகும். அதற்கு அதிகம் காரணங்கள் இருக்கலாம். சில வகையான வலிப்பிற்கான காரணங்களை கண்டுபிடித்து, (அதாவது மூளையிள் ஏற்படும் கட்டி) மருத்துவத்தால் சரிப்படுத்தலாம். வேறுவகையில், அதன் காரணம் தெரியாது:

| **வலிப்பு ஏற்படுதல்** | **சிறுவனுடைய வலிப்பு** |
|---|---|
| சிறுவயதிலிருந்து ஏற்படலாம் | சிறுவயதிலிருந்து ஏற்படலாம் |
| திடீரென ஏற்படும் | திடீரென ஏற்படும் |
| சுயஉணர்வு இழத்தல் | சிறுவன் உணர்வை இழந்தான் |
| வியாதிகள் சாதாரணமானது | தீயிலும், நீரிலும் வியாதி ஏற்பட்டது |
| விழுந்து சோர்வு நிலையில் இருத்தல் | விழுந்து சோர்வுடன் இருந்தான்<br>சிலர் மரித்தான் என எண்ணினர் |

3. குணமாக்குதல் பௌதீக நிலையில் மாத்திரம் இல்லை. வேதாகம பகுதிகளில் நாம் பார்க்கின்றோம்:

-இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார்: சங்கீதம் 147:3
-பாவமுள்ள ஆத்துமாவைக் குணமாக்குகிறார்: சங்கீதம் 41:4
-சீர்கேடுகளைக் குணமாக்குகின்றார்: எரேமியா 3:22; ஓசியா 14:4
-நீர்களை குணமாக்குகின்றார்: 2 இராஜாக்கள் 2:21:22; எசேக்கியேல் 47:8,9
-இஸ்ரவேல் மக்களையும், எருசலேம் நகரத்தையும் குணமாக்குகின்றார்: 2 நாளாகமம் 7:14; 30:20; ஏசாயா 30:26; 57:18; ஓசியா 11:3
-எகிப்தையும், புறஜாதிகளையும் குணமாக்குவதற்கான வாக்குறுதி: ஏசாயா 19:22; 57:19

4. இந்த பாடத்தில் மனிதனுடைய இயற்கை திரித்துவமாகிய உடல், ஆவி, ஆத்துமாவை குறித்து விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இந்த பாடத்தை குறித்து மேலும் கற்க வேண்டுமாயின் “சரீரம், ஆவி, ஆத்துமா” ஆகிய வசனங்களை வேதாகமத்தில் படியுங்கள். குணமாக்குதலை பெற்று ஊழியத்தை செய்ய நீங்கள் எதிர்பார்ப்பீர்களாயின் உங்களுடைய சரீரம், ஆவி, ஆத்துமா மற்றும் அவற்றின் செயற்பாடுகளை விளங்கிக்கொள்ளுதல் மிக முக்கியமானதாகும்.

5. குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான முக்கியமான சில வசனங்கள் இங்கு பட்டியலிடப்பட்டுள்ளன:

**பழைய ஏற்பாட்டு வசனங்கள்**

ஆதியாகமம் 17:18-19: சாராளுடைய மலடை குணமாக்கும்படியாக தேவன் வாக்குறுதியளித்தார்

ஆதியாகமம் 21:1-7: சாராளினுடைய மலடு குணமாக்கப்பட்டது.

ஆதியாகமம் 20:17: தேவன் அபிமலேக்கை குணமாக்கினார்.

யாத்திராகமம் 4:1-18: மோசேயினுடைய கையின் குஷ்டம்.

யாத்திராகமம் 15:25-26: தேவன் தம்முடைய பெயரை “ஜெகோவா-ராப்பா” என வெளிப்படுத்துகின்றார், இதன் அர்த்தமானது, “தேவனே குணமாக்குபவர்.” எகிப்தில் வந்த வாதை ஒன்றும் இஸ்ரவேல் மேல் வருவதில்லை என தேவன் வாக்குறுதியளித்தார்.

யாத்திராகமம் 23:25; அவருடைய மக்களின் மேலுள்ள வியாதியை நீக்குவதாக தேவன் வாக்கு பண்ணினார்.

லேவியராகமம் 13:1-46; 14:1-32; குஷ்டரோகம் குறித்தான வரையரைகள்.

லேவியராகமம் 15:1-33; ஆரோக்கியத்திற்கான வரையரைகள்.

லேவியராகமம் 16:29-30: பாவத்தை குணமாக்குதல்.

எண்ணாகமம் 12:1-15: மிரியாம் மற்றும் ஆரோனின் குஷ்டரோகம்.

எண்ணாகமம் 16:41-50: இஸ்ரவேலை தாக்கிய வாதை.

எண்ணாகமம் 21:4-9: வெண்கல அடையாள சர்ப்பதினூடான குணமாக்குதல்.

உபாகமம் 7:15: தேவனுடனான கீழ்ப்படிதல் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும்.

உபாகமம் 28:1-68: தேவனுடைய நியாயப்பிரமாணங்களை நாம் பின்பற்றாவிட்டால் வரும் வியாதியின் விளைவு.

உபாகமம் 29:22: தேவன் தேசத்திற்கு வியாதிகளை கொண்டுவருகின்றார்.

உபாகமம் 30:20: தேவனே ஜீவியத்திற்கும் நாட்களுக்கும் காரணமாயிருக்கின்றார்.

உபாகமம் 32:39: தேவனே காயப்படுத்துகின்றவரும், உயிர்பிக்கின்வருமாயிருக்கின்றார்.

உபாகமம் 7:15; 28:60; எகிப்துவின் வாதை.

யோசுவா 5:8: விருத்தசேதனத்தின் காயங்களுக்கான இயற்கையான குணமாக்குதல்.

நியாயாதிபதிகள் 13:2-24: மனோவாவினுடைய மனைவி “தேவனுடைய மனிதரால் குணமானாள்.”

1 சாமுவேல் 6:3: குற்றநிவாரண காணிக்கை குணமாக்குதலை கொண்டுவரும்.

1 சாமுவேல் 16:14-23: ஒரு தீய ஆவி சவுலை அலைக்கழித்தது.

1 இராஜாக்கள் 5:23; 2 நாளாகமம் 16:12: கால்களிலுள்ள வியாதி.

1 இராஜாக்கள் 8:37-40: தேசத்திலுள்ள வாதை.

1 இராஜாக்கள் 13:4-6: மரத்துப்போன கைகளையுடைய மனிதன்.

1 இராஜாக்கள் 17:17-24: எலியா சிறுவனை மரணத்திலிருந்து எழுப்புதல். (தூதுவரும் செய்தியும் குணமாக்குதலினால் நிரூபிக்கப்பட்டது.)

2 இராஜாக்கள் 1:2; 8:8-9: இந்த வியாதியிலிருந்து நான் விடுபடுவேனா?

2 இராஜாக்கள் 2:19-22: எலிசாவினால் நீர் குணமாகுதல்.

2 இராஜாக்கள் 4:8-37: சூனேமியரின் மகனை எழுப்புதல்.

2 இராஜாக்கள் 5:1-14: நாமானை குணமாக்குதல்.

2 இராஜாக்கள் 13:14,21: எலிசா சாவிற்கேதுவான வியாதியில் விழுதல்.

2 இராஜாக்கள் 20:1-11: எசேக்கியாவினுடைய வியாதி. (ஏசாயா 38:1-8 பார்க்க).

2 நாளாகமம் 6:26-31: மனந்திரும்புதல் மற்றும் குணமாக்குதலுக்கான ஜெபம்.

2 நாளாகமம் 7:14: "நான் அவர்களுடைய தேசத்தை குணமாக்குவேன்."

2 நாளாகமம் 16:12: தேவனை தேடாத வியாதிபிடித்த மனிதன்.

2 நாளாகமம் 20:9: நாம் வியாதிகளால் அவதிப்படும்போது தேவன் கேட்கின்றார்.

2 நாளாகமம் 21:12-30: குடல்களில் உண்டான தீராத நோய்.

2 நாளாகமம் 24:25: மகா வேதனை.

2 நாளாகமம் 26:19: உசியாவின் குஷ்டரோகம்.

2 நாளாகமம் 30:20: சகரியாவினுடைய ஜெபத்தினால் மக்கள் குணமாகுதல்.

2 நாளாகமம் 32:24-26: எசேக்கியாவினுடைய வியாதி.

யோபு 1-2: இந்த அதிகாரம் யோபுவினுடைய பிரச்சினைகள், அவனுடைய வியாதியிற்கான காரணங்களை வெளிப்படுத்துகின்றது.

யோபு 5:18; 30:18: யோபு அவனுடைய வியாதியை குறித்து பேசுகின்றார்.

சங்கீதம் 6:2-3: "என்னைக் குணமாக்கும் கர்த்தாவே."

சங்கீதம் 27:1: "கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர்."

சங்கீதம் 30:2: "உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், என்னை நீர் குணமாக்கினீர்."

சங்கீதம் 32:3-5: அறிக்கையிடப்பட்ட பாவம் குணமாக்குதலை கொண்டுவரும்.

சங்கீதம் 34:19-20: "நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைக ளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்."

சங்கீதம் 38:3,7; கோபமும், பாவமும் உங்களுடைய ஆரோக்கியத்தை கெடுக்கின்றது. இது அருவருக்கத்தக்க வியாதி என அழைக்கப்படுகின்றது.

சங்கீதம் 41:1-8: "உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன், என் ஆத்துமாவைக் குணமாக்கும்"; இந்த வியாதி தீமை என அழைக்கப்படுகின்றது.

சங்கீதம் 42:11; 43:5: தேவன் எமது ஆரோக்கியத்தின் இரட்சிப்புமானவர்.

சங்கீதம் 42:1-5: தீய ஆவியிற்கான குணமாக்குதல்.

சங்கீதம் 55:1-2: ஜெபத்தையும், குணமாக்குதலையும் ஏற்படுத்துகின்றது.

சங்கீதம் 60:2: “பூமியின் வெடிப்புகளைப் பொருந்தப்பண்ணுகிறார்.”

சங்கீதம் 67:2: “தேவனே, பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய்...”

சங்கீதம் 72:13: “எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார்.”

சங்கீதம் 91:9,10: “வாதை உன் கூடாரத்தை அணுகாது.”

சங்கீதம் 103:1-5: “அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. உன் நோய்களையெல்லாம் குணமாக்கி...”

சங்கீதம் 105:37: நாற்புறங்களிலிருந்தும் வந்த இஸ்ரவேலர்களில் ஒருவனும் பலவீனப்பட்டவன் இல்லை. மூன்று மில்லியன் மக்கள் நன்றாகவும், பலமுள்ளவர்களாகவும் இருந்தார்கள்.

சங்கீதம் 107:17-20: “அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி..”

சங்கீதம் 119:25-28: நாம் வசனத்தினால் பலமுள்ளவர்களாக்கப்பட்டுள்ளோம்.

சங்கீதம் 119:67: “நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பி நடந்தேன்.”

சங்கீதம் 147:3: “இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார்.”

சங்கீதம் 105:37: “அப்பொழுது அவர்களை வெள்ளியோடும் பொன்னோடும் புறப்படப் பண்ணினார்; அவர்கள் கோத்திரங்களில் பலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை.”

நீதிமொழிகள் 3:7-8: ஆரோக்கியமாய் இருப்பது எவ்வாறு?

நீதிமொழிகள் 4:20-23: இருதயத்தின் குறிக்கோளால் வாழ்க்கையின் நடத்தை பாதிக்கப்படுகின்றது. தேவனுடைய வாக்குத்தத்தமானது அவரை தேடி கண்டடைபவர்களுக்கு ஜீவனும், அவர்களுடைய அனைத்து சரீரத்திற்குமான ஆரோக்கியமும் ஆகும்.

நீதிமொழிகள் 12:18: ஞானிகளுடைய நாவு ஆரோக்கியத்தை கொண்டுவரும்.

நீதிமொழிகள் 13:17: ”உண்மையுள்ள ஸ்தானாபதியோ ஔஷதம்.”

நீதிமொழிகள் 15:4,30: “ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்; நற்செய்தி எலும்புகளைப் புஷ்டியாக்கும்.”

நீதிமொழிகள் 16:24: “இனிய சொற்கள் தேன்கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஔஷதமுமாகும்.”

நீதிமொழிகள் 17:22: “முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்.”

பிரசங்கி 3:3: குணமாக்க ஒரு காலமுண்டு;

பிரசங்கி 5:17: நோயும் துன்பமும் வியாதியோடு தொடர்புபடுகின்றது.

ஏசாயா 6:10: விளங்கிக்கொள்ளுதல் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும்.

ஏசாயா 19:22: தேவன் அடித்துக் குணமாக்குவார்;

ஏசாயா 32:3-4: குணமாக்குதல் தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாயிருக்கின்றது.

ஏசாயா 33:24: “வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை.”

ஏசாயா 35:5-6: ஆயிரம் வருட அரசாட்சியில் குணப்படுத்தல்.

ஏசாயா 38:1-12,16: எசேக்கியாவினுடைய வியாதியும் அவன் குணப்படுத்தலும்.

ஏசாயா 53:5: நாம் பரிகாரத்தினூடாக குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கு வாக்குறுதியளிக்கப் பட்டுள்ளோம்.

ஏசாயா 57:18-19: அவர்களைக் குணமாக்குவேன்.

ஏசாயா 58:8: “உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து..”

ஏசாயா 61:1: இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்ட தேவன் அனுப்பப்பட்டார்.

ஏசாயா 58:8: “உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து..”

எரேமியா 3:22: நாம் கர்த்தரிடம் திரும்பும்போது அவர் எமது சீர்கேடுகளைக் குணமாக்குவார்.

எரேமியா 8:14-15; 20-22: குணப்படுத்தலின் நேரம். பௌதீக ஆரோக்கியத்தின் கட்டு பாவத்தின் கசப்பாகும்.

எரேமியா 15:18: குணபடுத்த முடியா காயத்தை எவ்வாறு அனுசரிப்பது?

எரேமியா 14:19: எமக்கு குணப்படுத்தலானது இல்லையா?

எரேமியா 17:14: “என்னைக் குணமாக்கும், அப்பொழுது குணமாவேன்.”

எரேமியா 30:12-17: தேவன் ஆரோக்கியத்தை மீள் தருகின்றார்.

எரேமியா 33:6: “அவர்களைக் குணமாக்கி..”

எரேமியா 46:11: “உனக்கு ஆரோக்கியமுண்டாகாது.”

எரேமியா 51:8-9: பாபிலோனின் குணப்படுத்தல்..

புலம்பல் 2:13: “உன்னைக் குணமாக்குகிறவன் யார்?”

புலம்பல் 3:33: “மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை.”

எசேக்கியேல் 14:19: “எமக்கான குணப்படுத்துதல் இல்லையா?”

எசேக்கியேல் 17:14: “என்னைக் குணமாக்கும், அப்பொழுது குணமாவேன்.”

எசேக்கியேல் 30:17: தேவன் ஆரோக்கியத்தை மீள் தருகின்றார்.

எசேக்கியேல் 30:12-13: குணப்படாத காயங்களை மருந்து குணப்படுத்தாது.

எசேக்கியேல் 30:21: தேவன் உடைப்பவற்றை குணமாக்க முடியாது.

எசேக்கியேல் 33:6: “நான் அவர்களை குணமாக்குவேன்.”

எசேக்கியேல் 34:4, 16, 21: குணப்படுத்தப்படாத மேய்ப்பர்களுக்கான எச்சரிப்பு

எசேக்கியேல் 46:11: “அவர்கள் குணப்பட மாட்டர்கள்.”

எசேக்கியேல் 47:8-12: நீர்களை குணமாக்குதல்.

தானியேல் 4:34,36: நேபுகாத்நேச்சாரின் குணமாக்குதல்.

ஓசியா 5:13: குணமாக்குதலுக்கு எங்காவது செல்லுதல். தேவனால் உண்டாக்கப்பட்ட காயத்தை மனிதனால் குணமாக்க முடியாது.

ஓசியா 6:1: “நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார்.”

ஓசியா 7:1: இஸ்ரவேலுக்கான குணப்படுத்தல்.

ஓசியா 11:3: “நான் தங்களைக் குணமாக்குகிறவரென்று அறியாமற்போனார்கள்.”

ஓசியா 14:4: “நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்.”

நாகூம் 3:19: ஓர் வித்தியாசமான சூழ்நிலை.

சகரியா 11:16: குணப்படுத்தமுடியாத மேய்ப்பர்களுக்கான ஓர் எச்சரிக்கை.

மல்கியா 4:2: அவருடைய சிறகுகளில் குணமாக்குதல்.

**புதிய ஏற்பாட்டு வசனங்கள்**

மத்தேயு 8:13: அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்.

மத்தேயு 8:17: எமது வியாதிகளை இயேசு சுமந்தார்.

மத்தேயு 10:1: வியாதிகள் மற்றும் சாத்தானுக்கு மேலான வல்லமை சீஷர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

மத்தேயு 18:19-21: இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தால், அது அவர்களுக்கு உண்டாகும்.

மாற்கு 2:17: பாவிகளை குணமாக்க கிறிஸ்து வந்தார்.

மாற்கு 3:15-17: வியாதிகளை குணமாக்க கிறிஸ்து வல்லமையை தருகின்றார்.

மாற்கு 4:18-19: அபிஷேகத்தின் ஒரு பகுதி குணமாக்குதலாகும். இயேசு குணமாக்க அனுப்பப் பட்டார்.

மாற்கு 11:24: நீங்கள் ஜெபத்தில் விசுவாசிக்கும்பொழுது, நீங்கள் பெற்றுக்கொள்ளுகின்றீர்கள். (பெற்றுக்கொண்டதின் பின்னர் அல்ல)

மாற்கு 16:18: இயேசுவின் நாமத்தில் விசுவாசிகள் நோய்களை குணமாக்கி,சாத்தானை துரத்துவார்கள்.

லூக்கா 5:31: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டும்.

லூக்கா 7:6: தகுதியின்மை இயேசுவால் விசுவாசமாக பார்க்கப்பட்டது.

லூக்கா 7:22-23: அதிகமாக நம்பப்படும் விவாசமானது அனுபவித்தலாகும்.

லூக்கா 17:6: சிறு விசுவாசம் பெரிதான விளைவுகளை கொண்டுவரும்.

லூக்கா 18:7-8: உங்களுக்கு உத்தரவு வரும்வரை விட்டுக்கொடுக்க வேண்டாம். (பழைய ஏற்பாட்டில் இருக்கும் தானியேலுடைய கதையானது ஜெபத்தின் முக்கியத்துவத்தை காட்டுகின்றது. தேவன் தானியேலிடமிருந்து முதலாவதாக செவிசாய்தார், ஆனால் சாத்தான் அதை 21 நாட்கள் மறைத்தான்).

யோவான் 6:53-58: இயேசுவினுடைய சரீரமும், இரத்தமும் ஜீவனை கொண்டுவரும்.

யோவான் 10:10: இயேசு வந்தபடியால் எம்மிடம் ஜீவன் இருக்கின்றது. சாத்தான் சாவுக் கொள்ள, களவாட மற்றும் அழிக்க வந்தான்.

யோவான் 11:1-45: தற்போது குணமாகாத வியாதி மிகப்பெரிதான அற்புதத்திற்கு கொண்டு செல்லும்.

யோவான் 14:12-13: இயேசு செய்த காரியத்தை நாம் செய்ய வேண்டும்.

யோவான் 15:7: கிறிஸ்துவின் நிலைத்திருக்கின்ற உறவின் முக்கியத்துவம் கேட்டலும், பெறுதலும் ஆகும்.

யோவான் 16:24: அவருடைய நாமத்தினால் கேட்டால் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

ரோமர் 2:4: தேவனுடைய சித்தம் மனந்திரும்புதலுக்கு நடத்தும். (கவனிக்க வியாதி மனந் திரும்புதலுக்கு நேராக நடத்தாது, தேவனுடைய சித்தமே நடத்தும்).

ரோமர் 8:19-23: முழு உலகமும் அழிவிற்குள்ளாகும் செயற்பாட்டில் இருக்கின்றது.

2 கொரிந்தியர் 4:16: எமது வெளிப்பு சரீரம் அழியக்கூடியது, ஆனால் உட்புறம் புதுப்பிக்க கூடியது.

எபேசியர் 3:20-21: நாம் கேட்பதிலும், நினைப்பதிலும் அதிகமாக தேவனுக்கு கிரியை செய்ய வல்லமை உண்டு.

பிலிப்பியர் 2:25-27: எப்பாப்பிரோதீத்துவினுடைய வியாதி.

கொலோசெயர் 4:14: வைத்தியரான லூக்கா, பவுலுடைய தூதுவ குழுவில் ஓர் அங்கத்தினர்.

2 தீமோத்தேயு 4:20: துரோப்பீமுவின் வியாதி.

எபிரேயர் 4:15: அவர் எமது பலவீனங்களை அறிந்திருக்கின்றார்.

எபிரேயர் 11:1: பார்க்கக்கூடாத காரியங்களின் ஆதாரம் விசுவாசம் ஆகும்.

யாக்கோபு 1:8: நாம் விசுவாசத்தில் கேட்க வேண்டும், நிச்சயமின்றி அல்ல.

யாக்கோபு 1:17: எல்லா நல்ல வரங்களும் தேவனிடமிருந்தே ஆகும்.

யாக்கோபு 5:14-15: எண்ணெய்யினால் அபிஷேகம் பண்ணவும், விசுவாசத்தினால் ஜெபிக்கவும், குணமாக்குதல் மற்றும் மன்னிப்பிற்காக மூப்பர்களை அழைத்தல்.

1 பேதுரு 2:24: அவருடைய தழும்புகளால் நாம் குணமாகின்றோம்.

1 யோவான் 3:22: நாம் கீழ்ப்படிவோமாயின் நாம் கேட்டுக்கொள்ளுகின்றதை பெற்றுக்-கொள்வோம்.

3 யோவான் 1:2: உங்கள் ஆத்துமாவின் நிலையிலேயே ஆரோக்கியம் தொடர்பு பட்டிருக்கின்றது.

மாற்கு 7:36, 8:26; மத்தேயு 8:4: குணமாக்குதலில் உணர்ச்சிவசப்பட கூடாது.

வெளிப்படுத்தல் 20:2-3: சாத்தான் கட்டப்படும்போது, வியாதியும் மரணமும் இல்லை.

வெளிப்படுத்தல் 21:4: இறுதியான குணப்படுத்தல்: வியாதியும் மரணமும் இல்லை.

6. தேவன் குணமாக்குதலையும், விடுதலையையும் வாக்குப்பண்ணியுள்ளார். இங்கு தேவனால் வாக்குப்பண்ணப்பட்டதின் தொடர்புறும் சில வசனங்கள் காணப்படுகின்றன: ரோமர் 1:16; 1 இராஜாக்கள் 8:56; நீதிமொழிகள் 4:22; 2 கொரிந்தியர் 1:20

## அதிகாரம் ஒன்பது

# குணமாக்குதலின் நோக்கங்கள்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ குணமாக்குதலின் ஒன்பது குறிக்கோள்களை இனங்காணவும் முடியும்.

### பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

> **அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார். அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. (மத்தேயு 8:16-17)**

## அறிமுகம்

வியாதியஸ்தவனை நலமடைய செய்வதே குணமாக்குதலின் மிகத்தெளிவான குறிக்கோள் ஆகும். ஆனால் குணமாக்குதலும் விடுதலையும் மனிதனை பூரணப்படுத்துவதை விட குறிக்கோள்களை வழங்குகின்றது. குணமாக்குதல் கூட....:

## தேவனுடைய குணாதிசயத்தை காட்டுகின்றது

குணமாக்குதல் தேவன் கிருபையுள்ளவர், நல்லவர், இரக்கமுள்ளவர் மற்றும் கருணையுள்ளவர் என காட்டுகின்றது.

> **கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர். அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின் மேலுமுள்ளது. (சங்கீதம் 145:8-9)**

> **இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். (மாற்கு 1:41)**

## தேவனை மகிமைப்படுத்துதல்

குணமாக்குதலின் விளைவு தேவனை மகிமைப்படுத்தலும் துதித்தலும் ஆகும்:

> **அப்பொழுது, சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர் முதலிய அநேகரை, திரளான**

**ஜனங்கள் கூட்டிக்கொண்டு இயேசுவினிடத்தில் வந்து, அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள். அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார்.**

**ஊமையர் பேசுகிறதையும், ஊனர்சொஸ்தமடைகிறதையும், சப்பாணிகள் நடக்கிறதையும், குருடர் பார்க்கிறதையும் ஜனங்கள் கண்டு, ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள். (மத்தேயு 15:30-31)**

**நடந்த சங்கதிகளைக்குறித்து எல்லாரும் தேவனை மகிமைப்படுத்தினபடியால்... (அப்போஸ்தலர் 4:21)**

## இயேசுவே மேசியா எனவும் இரட்சகர் எனவும் உறுதிப்படுத்துகின்றது

உங்களுடைய வேதாகமத்தில் மத்தேயு 8:14-17ஐ வாசியுங்கள். இங்கு பதிவுசெய்யப்பட்ட குணமாக்குதலானது இயேசுவை குறித்தான தீர்க்கதரிசியின் வார்த்தைகளை உறுதிப்படுத்துகின்றது...

**அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார். (மத்தேயு 8:17)**

குணமாக்குதலும் விடுதலையும் இயேசுவை இரட்சகராக உறுதிப்படுத்துகின்றது. சப்பாணி மனிதனை குணமாக்கி, அவன் பாவத்தை மன்னித்தலானது இயேசுவை இரட்சகரோடு குணமாக்குபவராகவும் உறுதிப்படுத்துகின்றது. (லூக்கா 5:18-26).

**என் பிதாவின் கிரியைகளை நான் செய்யாதிருந்தால், நீங்கள் என்னை விசுவாசிக்க வேண்டியதில்லை. செய்தேனேயானால், நீங்கள் என்னை விசுவாசியாதிருந்தாலும், பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படி அந்தக் கிரியைகளை விசுவாசியுங்கள் என்றார். (யோவான் 10:37-38)**

**இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. (யோவான் 20:30-31)**

## வார்த்தையையும் தூதுவரையும் உறுதிப்படுத்துகின்றது

1 இராஜாக்கள் 17ல் இளம் மனிதனை குணமாக்கும் கதையை வாசியுங்கள். இந்த சிறுவன் குணமானதும், அவனுடைய தாய் எலியாவை பார்த்து கூறியது:

**நீர் தேவனுடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும், இதினால் இப்போது அறிந்திருக்கிறேன் என்றாள். (1 இராஜாக்கள் 17:24)**

குணமாக்குதலானது வார்த்தையையும் தூதுவரையும் உறுதிப்படுத்துகின்றது.

**அவர்கள் அங்கே அநேகநாள் சஞ்சரித்துக் கர்த்தரை முன்னிட்டுத் தைரியமுள்ளவர்களாய்ப் போதகம்பண்ணினார்கள். அவர் தமது கிருபையுள்ள வசனத்திற்குச் சாட்சியாக அடையாளங்களும்அற்புதங்களும் அவர்கள் கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகம் பண்ணினார். (அப்போஸ்தலர் 14:3)**

இதற்கு பிற்பாடு வேதாகமமானது ஆவிக்குரிய அரசியல் தலைவரின் மாபெரும் குணமாக்குதல் அற்புதத்தை பதிவுசெய்துள்ளது....

**பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு அவர்கள் படிப்பறியா தவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்று அறிந்து கொண்டார்கள். (அப்போஸ்தலர் 4:13)**

## சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள உற்சாகமளிக்கின்றது

குணமாகியதன் பிற்பாடு சுவிசேஷத்தை மக்களுக்கு அறிவிப்பதானது இலகுவானது. அப்போஸ்தலர் புஸ்தகத்தில் இதைகுறித்தான பல உண்மைகள் காணப்படுகின்றன. குணமாக்குதலானது இரட்சிப்பிற்கான செய்தியின் கதவைதிறந்து, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு சபையின் வளர்ச்சிக்கு உதவுகின்றது. (உதாரணத்திற்கு அப்போஸ்தலர் 2:42-47 மற்றும் 5:14ஐ பார்க்கவும்).

குணமாக்குதலானது சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள உற்சாகமளித்தாலும், எப்பொழுதும் நினைவிற் கொள்ளுங்கள்: அது இரட்சிப்பின் சுவிசேஷத்தை போதிப்பதற்கான இடத்தை மாற்றீடு கொள்ளாது. தேவனுடனான சரியான தொடர்பை மக்களுக்கு கொண்டுவருவதற்கு வல்லமையை மெய்ப்பித்து காட்டுவதோடு, வார்த்தைகளும் தனியாக போதிக்கப்படல் வேண்டும். இந்த வார்த்தையே இரட்சிப்பிற்கான விசுவாசத்தையும், குணமாக்குதலையும், விடுதலையையும் உருவாக்கும். சுவிசேஷத்திற்கான வல்லமையான கருவி குணமாக்குதலாகும். குணமாக்குதலுக்கான வார்த்தைகளின் பதிவானது:

1. சுவிசேஷ கட்டமைப்பான பதினேழு சம்பவங்களில் குணமாக்குதல் செயற்படுத்தப்பட்டுள்ளது:
   - மத்தேயு 4:24; 8:16; 9:2-8; 9:32-33
   - மாற்கு 1:23-28; 9:14-27; 10:46-52
   - லூக்கா 8:42-48; 13:10-13,16; 14:1-4; 17:11-19
   - யோவான் 4:28-30; 5:1-9,14; 9:1-7
   - அப்போஸ்தலர் 3:1-10; 8:5-8; 14:8-10

2. பதினாறு சம்பவங்களில், குணமாக்குதலானது சுவிசேஷ விளைவை கொண்டுள்ளது:
   - மத்தேயு 9:2-8; 9:32-33; 12:9-13
   - மாற்கு 1:23-28; 5:1-13,18-20; 7:32-37; 9:14-27
   - லூக்கா 5:12-14; 13:10-13,16; 17:11-19
   - யோவான் 4:28-30; 9:1-7
   - அப்போஸ்தலர் 3:1-8; 8:5-8; 9:32-35; 14:8-10

3. 26 குணமாக்குதல்களில் 21 ஆனது, சுவிசேஷ கட்டமைப்பு அல்லது விளைவை கொண்டிருக்கும்.

## தேவனுடைய இராஜ்ஜியத்தை நிறுவுதல்

இயேசுவாலும் அவருடைய சீஷர்களாலம் செய்யப்பட்ட குணமாக்குதலும், விடுதலையுமே தேவனுடைய இராஜ்ஜியத்தை நிறுவுவதற்கான முதலாவது செயற்பாடாகும்:

> **அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள். (லூக்கா 10:9)**

> **நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. (மத்தேயு 12:28)**

நீங்கள் குணமாக்குதலை மேற்கொள்ளும்போது, இராஜ்ஜியமானது இன்னும் முழுமையடையவில்லை என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். இராஜ்ஜியத்தின் முழுமையில் வியாதி மற்றும் மரணம் முற்றும் இராது. சரீரம், மற்றும் ஆத்துமாவானது, இப்போது விடுதலையாக்கப்படாவிட்டாலும், இராஜ்ஜியத்தின் முழுமையில் விடுதலையாக்கப்படும். நீங்கள் இறந்த காலத்திற்கான பாவத்தின் தண்டனையிலிருந்து மீட்கப்பட்டதோடு, தற்கால பாவத்திலிருந்தும் காக்கப்படுகின்றீர்கள். எதிர்காலத்தில், பாவத்தின் பிரசன்னத்திலிருந்து காத்துக்கொள்ளப்படுவீர்கள். வியாதியிலும் உண்மை நிலை இதுவாகும். கடந்த கால பாவத்தின் தண்டனை வியாதி அல்ல. தற்காலத்தில் அதன் வல்லமையிலிருந்து நீங்கள் விடுவிக்கப்படலாம், ஆனால் நித்தியம் வரைக்கும் அதன் பிரசன்னத்தில் இருந்து விடுவிக்கப் படவில்லை.

## எதிரிகளின் நியாயத்தீர்ப்பை உறுதிப்படுத்துகின்றது

நீங்கள் வியாதியஸ்தர்களின் மேல் கைகளை வைக்கும்போது இவ்வுலகத்தின் இளவரசன் நியாயத்தீர்க் கப்படுகின்றான் எனவும், நோய்களின் வல்லமையும், வியாதிகளும் அழிக்கப்படுகின்றது எனவும் பிரகடனம் செய்கின்றீர்கள் (யோவான் 16:11). வியாதியின் வல்லமை அழிக்கப்படுகின்றதே ஒழிய அதின் பிரசன்னம் அல்ல என்பதை ஞாபகத்திற் கொள்ளுங்கள். நீங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தின் முழுமையில் வந்த பிற்பாட்டின் மாத்திரமே அதன் பிரசன்னத்திலிருந்து நீங்கள் விடுவிக்கப்படுகின்றீர்கள்.

## ஆவிக்குரிய தலைவர்களை எழுப்பும்

மாபெரும்தலைவர்களை எழுப்புவதற்கு குணமாகுதல் பயன்படுகின்றது. பவுல் அவனுடைய குணமாகுதலின் நேரத்தில் சுவிசேஷத்தின் அப்போஸ்தலர் என அழைக்கப்பட்டார் (அப்போஸ்தலர் 9).

## மாபெரும் சந்தோஷத்தின் விளைவு

அப்போஸ்தலர் 8:5-25லானது குணமாக்குதலுக்கான மற்றும் விடுதலைக்கான ஊழியம் செய்யப்படும் போது தனிப்பட்டவர்களும், குழுக்களும் எவ்வாறு சந்தோஷமடைகின்றார்கள் என்பதை விபரிக்கின்றது.

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

2. பௌதீகமாக முற்றுப்பெற, இந்த பாடத்தில் கலந்துரையாடப்பட்ட மற்ற குணமாக்குதலின் குறிக்கோள்கள் என்ன?

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. பௌதீக முழுமைக்கு பின்னால் உங்களுடைய குணமாக்குதலில் தேவன் வேறு குறிக்கோள்களை கொண்டுள்ளார். இந்த குறிக்கோள்களை விளங்கும்போது இது தேவனுடைய சித்தம் தான் என அறிந்து, நம்பிக்கையுடன் குணமாக்குதலுக்கு வேண்டுவதற்கு உங்களுக்கு உதவும். உங்களுடைய குணமாக்குதல் எவ்வாறானது என சிந்தியுங்கள்....

தேவனுடைய குணாதிசயத்தை மெய்ப்பித்து காட்டுகின்றது:

...........................................................................................................................................

தேவனை மகிமைப்படுத்துகின்றது:

...........................................................................................................................................

இயேசுவை இரட்சகராகவும், மேசியாவாகவும் உறுதிப்படுத்துகின்றது:

...........................................................................................................................................

நீங்கள் தூதுவர் எனவும் செய்தியாளர் எனவும் போதிக்கும் போது உங்களை உறுதிப்படுத்துகின்றது:

...........................................................................................................................................

சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள உற்சாகமளிக்கின்றது:

...........................................................................................................................................

தேவனுடைய இராஜ்ஜியத்தை நிறுவுகின்றது:

...........................................................................................................................................

எதிரிகளுடைய நியாயத்தீர்ப்பை உறுதிப்படுத்துகின்றது:

...........................................................................................................................................

மாபெரும் சந்தோஷத்தை விளைவை கொடுக்கின்றது:

...........................................................................................................................................

## அதிகாரம் பத்து

# குணமாக்குதலின் வரங்கள்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ தேவனுடைய திரித்துவத்தில் ஒரு பகுதி பரிசுத்த ஆவியானவரே என்பதை இனம்காணவும்,
- ☐ பரிசுத்த ஆவியானவருடைய ஊழியத்தை சுருக்கமாக தரவும்,
- ☐ "ஆவிக்குரிய வரங்களை" வரையறுக்கவும்,
- ☐ "குணமாக்குதலின் வரங்களை" வரையறுக்கவும்,
- ☐ குணமாக்கும் வரத்தை பூர்த்தியாக்கும் குறிப்பிட்ட ஆவிக்குரிய வரங்களை பட்டியலிடவும்,
- ☐ குணமாக்கும் ஊழியத்தில் யார் பங்குபற்றவேண்டும் என்பதை இனங்காணவும் முடியும்.

**பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:**

> **ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப் பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்.... (1 கொரிந்தியர் 12:7-9)**

## அறிமுகம்

அனைத்து விசுவாசிகளும் குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான ஊழியத்தில் பங்குபற்றவேண்டும் என வேதாகமம் கூறுகின்றது, ஆனால் வசனமானது பரிசுத்த ஆவியானவரினால் விசேட குணமாக்கும் வரங்களானது சில விசுவாசிகளுக்கே கொடுக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றது. இந்த பாடமானது பரிசுத்த ஆவியானவர் திரித்துவ தேவனில் ஒரு பகுதி எனவும், அவருடைய ஊழியத்தை சுருக்கமாகவும், ஆவிக்குரிய வரங்களை வரையறுத்தும், குணமாக்கும் விசேட வரங்களையும், அதனுடன் தொடர்புறும் ஆவிக்குரிய வரங்களையும் நோக்கி அறிமுகம் செய்கின்றது.

## பரிசுத்த ஆவியானவர்

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என அமைக்கப்பெற்ற திரித்துவ தேவனின் ஒரு பகுதியே பரிசுத்த ஆவியானவர் ஆவார். திரித்துவ தேவனுடைய தன்மைகள் கீழ்வரும் பந்திகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மத்தேயு 3:16-17; யோவான் 15:26; ரோமர் 8:2-3; 2 கொரிந்தியர் 13:14; எபேசியர் 2:18; 1 பேதுரு 4:14 மற்றும் அப்போஸ்தலர் 2:33. பரிசுத்த ஆவியானவர் சர்வ வியாபி ஆவார், இதன் அர்த்தமானது அவர் எங்கும் இருக்கின்றார் (சங்கீதம் 139:7). அவர் சர்வ ஞானமுள்ளவர், இதன் அர்த்தமானது அவர் எல்லா காரியங்களையும் அறிந்தவர் (1 கொரிந்தியர் 2:10-11). அவர் சர்வ வல்லவர், இதன் அர்த்தமானது அவர் மிகுந்த வல்லமையுள்ளவர் (சங்கீதம் 62:11). அவர் நித்தியமானவர், இதன் அர்த்தமானது அவர் சதாகாலங்களிலும் வாழ்பவர் (எபிரேயர் 9:14).

## பரிசுத்த ஆவியானவரின் ஊழியம்

பரிசுத்த ஆவியானவருக்கு பல ஊழியங்கள் உள்ளன. வேதாகமம் அவரை குறித்து கூறும் பங்கு என்ன என்பதை குறித்து இங்கு சுருக்கமாக தரப்பட்டுள்ளது.

**சிருஷ்டிப்பு:** அவர் உலகத்தை சிருஷ்டிக்கும் போது அதில் பங்குபற்றினார்.

**வசனங்கள்:** அவர் உண்மையிலேயே வெளிப்படுத்துதலினூடாக ஊழியம் செய்து, வசனத்தில் ஊக்கமளித்து, வசனத்தை விளங்கிக்கொள்ளும்படியாக எமது இருதயத்தை ஓளியூட்டுவதினூடாக தொடர்ந்து ஊழியம் செய்கின்றார்.

**இஸ்ரவேல்:** இஸ்ரவேல் தலைவர்களுக்கு மேல் வந்த பரிசுத்த ஆவியானவர், வாக்குத்தத்த பிரதேசத்திற்கு அவர்களை வழிநடத்தி, அவர்களுடைய இடத்தை துதியினால் நிரப்பினார். அவர் எதிர்காலத்தில் உபத்திரவ காலத்திலும், ஆயிர வருட அரசாட்சியிலும் அவர்கள் மேல் வருவார்.

**இயேசு:** இயேசுவானவர் பரிசுத்த ஆவியானவரால் பிறந்து, அபிஷேகம்பண்ணப்பட்டு, முத்திரிக்கப் பட்டு, வழிநடத்தப்பட்டு, வல்லமையாக்கப்பட்டு, நிரப்பப்பட்டு, மரிக்கப்பட்டு, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார்.

**பாவிகள்:** பாவிகள் பாவத்தினால் கண்டிக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரினால் சுவிசேஷத்தினால் இழுத்துக்கொள்ளப்படுவார்கள்.

**சத்தான்:** சாத்தானுடைய வல்லமையானது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் பின்னாக்கப் படும்.

**சபை:** பரிசுத்த ஆவியானவர் சபைகளை அமைத்து, ஆராதனைகளை ஊக்கப்படுத்தி, ஊழிய காரியங்களை வழிநடத்தி, ஊழியர்களை தெரிந்தெடுத்து, அதின் போதகர்களை அபிஷேகித்து, அதின் வழிகளில் நடத்தி, வல்லமையினால் அபிஷேகிப்பார்.

**விசுவாசிகள்:** பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுடைய பாவங்களை எச்சரித்து, பரிசுத்தப்படுத்தி, வல்லமையால் அபிஷேகித்து, வாசம் பண்ணி, பலமூட்டி, ஐக்கியப்படுத்தி, பரிந்துபேசி, வழிநடத்தி, அன்பை நிரூபித்து, கிறிஸ்துவின் சாயலை உறுதிப்படுத்தி, உண்மைகளை வெளிப்படுத்தி, போதித்து, இரட்சிப்பின் நிச்சயத்தை கொடுத்து, சுதந்திரத்தை கொடுத்து, தேற்றி, ஊக்கமளித்து, அவருக்கூடாக பேசி, தேவனுடைய வல்லமையை உறுதிப்படுத்தி, ஆராதனையை ஊக்கப்படுத்தி, சாட்சியாயிருக்க வல்லமையை கொடுத்து, ஆவிக்குரிய கனிகளை விருத்தி செய்து ஆவிக்குரிய வரங்களை அளிப்பார். சபையிலும், விசுவாசிகளின் வாழ்க்கையிலும் பரிசுத்த ஆவியானவரின் முக்கியமான செயற்பாடுகளானது ஆவிக்குரிய வரங்களை தரும் குணமாக்குதல் மற்றும் விடுதலையோடு தொடர்பாயிருக்கின்றது.

## பரிசுத்த ஆவியானவரின் வரங்கள்

ஆவிக்குரிய வரங்களானது கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு பகுதி என்ற வகையில் விசுவாசிகள் ஊழியம் செய்தவற்கு பரிசுத்த ஆவியானவரினால் தரப்படும் விசேட இயலுமைகளாகும். பரிசுத்த

ஆவியானவரின் “வரம்” என்பதற்கும், பரிசுத்த ஆவியானவரின் “வரங்கள்” என்பதற்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. பரிசுத்த ஆவியானவரின் வரமானது அப்போஸ்தலர் 2ல் பதிவுசெய்யப்பட்டுள்ளப்படி பெந்தேகொஸ்தே நாளில் கொடுக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவரின் “வரங்கள்” பரிசுத்த ஆவியாவனரின் வரம் பெற்றவர்களுக்கு கொடுக்கப்படும் விசேட இயலுமைகள் ஆகும். இந்த வரங்கள் விசுவாசிகளுக்கு கிறிஸ்துவின் சரீரத்திலிருப்போருக்கும், அவிசுவாசிகளுக்கும் இடையில் வல்லமையாக ஊழியம் செய்ய இயலுமையளிக்கின்றது.

ஆவிக்குரிய வரம் என்பது இயற்கையான தாலந்து அல்லது இயலுமைகள் அல்ல. இது பரிசுத்த ஆவியானவரினால் தரப்படும் விசேட இயலுமைகள் ஆகும். ஒரு நபரால் ஆவிக்குரிய வரங்களை தனக்குத்தானே இயற்றி, விருத்திசெய்ய முடியாது. இந்த வரங்களானது பரிசுத்த ஆவியானவரால் அவனுக்கூடாக செயற்பட்டு அவனுக்கு கொடுக்கப்படும் விசேட இயலுமைகள் ஆகும். ஆவிக்குரிய வரங்களை குறித்து கீழ்வரும் பந்திகளில் வாசிக்கலாம்:

-ரோமர் 12:1-8
-1 கொரிந்தியர் 12:1-31
-எபேசியர் 4:1-16
-1 பேதுரு 4:7-11

சபைக்கு கொடுக்கப்பட்ட அநேக ஆவிக்குரிய வரங்களை இந்த வசனங்களில் நீங்கள் கண்டுப்பிடிப்பீர்கள். எமது தற்கால படிப்பின் நோக்கமானது குணமாக்கும் வரமேயாகும்.

## குணமாக்கும் வரங்கள்

ஆவியானவருடைய வெளிப்படுத்தலானது ஒவ்வொரு மனிதனுக்குமுரிய பிரயோஜனத்தின் அளவிற்கேற்ப கொடுக்கப்பட்டுள்ளது.

> **ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய.... அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும்... (1 கொரிந்தியர் 12:7-9)**

ஓர் குணமாக்கும் வரம் பெற்ற விசுவாசி இயற்கையான மாதிரிகளின் உபயோகத்திற்க அப்பாற்பட்டு தேவனுடைய வல்லமையை அவனுக்கூடாக ஊற்றுவதினூடாக ஆரோக்கியத்தை மீள்கட்ட முடியும். எல்லா விசுவாசிகளும் வியாதியிற்கு ஜெபிப்பதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளார்களாயினும், இந்த பகுதியிலான ஊழியத்தில் தேவனால் விசேடமாகவும் தொடர்ந்தும் குணமாக்கும் வரம்பெற்ற ஊழியர் ஒருவரே உபயோகிக்கப்படுவார்.

குணமாக்கும் வரங்கள் அநேக வகைகளில் காணப்படுகின்றன, ஏனென்றால் “வரங்கள்” என்பது பன்மை ஆகும். பல்வேறு வகைகளில் குணமாக்குதலானது வருவதோடு, வரங்கள் பல்வேறு வழிமுறைகளில் உபயோகப்படுகின்றது. தேவன் ஒரு நபரை இரட்சிப்பிற்கு கொண்டுவருவதற்கான தேவனுடைய பல்வேறு வழிகளை எண்ணுங்கள். குணமாக்குதலை பல்வேறு வழிகளில் கொண்டு வருவதற்கு அவர் கூட கிரியை செய்யவில்லையா? அவர்களுக்குள்ள முறைகளும் வரங்களும் அவர்கள் இரட்சிக்கப்பட்டதைவிட குணமாக்கவில்லையா? அவர்களே தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தும் ஒரே கருவிகளாகும்.

வேதாகமத்தில் குணமாக்கும் வரங்களின் வெளிப்படுத்தலானது:

1. ஊழியர் வியாதியஸ்தனை தொடுதலின் மூலம்.
2. மக்கள் ஊழியரை தொடுதலின் மூலம்.
3. தூரத்திலிருந்து குணமாக்கும் வசனத்தை பேசுதல்.
4. நோயாளியின் பிரசன்னத்திலிருந்து குணமாக்கும் வசனத்தை பேசுதல்.
5. நபரோடு நேரடியாக பேசுதல்.
6. மற்றவர்களுடைய பரிந்துபேசுதலால் குணமாகுதல்.
7. ஜெபித்தல்.
8. வியாதியுடைய நபரின் விசுவாசத்தின் கிரியையிற்கூடாக குணமாகுதல் ஏற்படுதல்.
9. பல்வேறு வகைப்பட்ட விசுவாசம்:
    - -ஊழியம் செய்பவர் ஒருவரின் விசுவாசம்.
    - -குணமாக்குதலை எதிர்பார்க்கும் ஒருவரின் விசுவாசம்.
    - -நண்பர்களுடைய விசுவாசம்.
    - -உறவினர்களுடைய விசுவாசம்.
10. குணமாக்குதலுக்கான பல்வேறுப்பட்ட காரணிகள். இவைகளில் ஒன்றும் புனிதமானவை அல்ல, ஆனால் அவைகள் ஒரு தொடர்பாடலுக்கான காரணிகளாக உபயோகப்பட்டன.
    - -உமிழ்நீர்
    - -சேறு
    - -ஜெப துணி
    - -அத்தி மரம்
    - -ஊழியரின் சால்வையின் தொங்கள்
    - -ஊழியரின் நிழல்
    - -எண்ணை
    - -காதில் வைக்கப்படும் விரல்கள்
    - -நீர்
11. விசேட அற்புதங்கள்: தேவன் சில மக்களை விசேட குணமாக்குதலுக்கான விசுவாசத்தால் அபிஷேகித்தார். உதாரணத்திற்கு, தேவன் சில மக்களை விசேடமாக புற்றுநோய் வியாதியுள்ளவர்களுக்காக ஊழியம் செய்ய உபயோகித்தார். இது நீங்கள் குணமாக்கும் அனைத்து பகுதிகளிலும் ஊழியம் செய்ய கூடாது என அர்த்தப்படுத்துவதில்லை, பொதுவாக நோயாளியை குணமாக்கும் கட்டளையை கொண்டதாகும். ஆனால் பரிசுத்த ஆவியானவர் குறிப்பிட்ட வியாதியிற்காக உங்களுக்கூடாக தொடர்ந்து ஊழியம் செய்வார்.

## ஆவிக்குரிய வரங்களின் தொடர்புகள்

கிறிஸ்துவின் சரீரத்திற்கு அனைத்து ஆவிக்குரிய வரங்களும் முக்கியமானதும், தேவையானதும் ஆகும், ஆனால் இங்கு ஆவிக்குரிய வரங்களின் சில பட்டியல்கள் முக்கியமாக குணமாக்கும் வரங்களை பூரணப்படுத்தும் பட்டியல்கள் கொடுக்கப்பட்டுள்ளன:

**போதித்தலும் புத்தி கூறுதலும்:** வசனத்தின் அடிப்படையில், அவைகள் குணமாக்குதலுக்கான விசுவாசத்தை அதிகரிக்கின்றது.

**தீர்க்கதரிசனம், அந்நியபாஷை, மொழிபெயர்ப்பு:** நோய் அல்லது குணப்படுத்தல் சம்பந்தமாக தேவனுடைய வார்த்தையை நேரடியாக கொண்டுவரும்.

**ஆவிகளை பகுத்துணர்தல்:** குணமாக்குதல் அல்லது விடுதலை தேவையா என்பதை விளங்குவ-தற்கும், ஆவிகளிற்கான செயற்பாட்டின் ஞானத்தையும் அடிப்படையாக கொண்டுள்ளது.

**விசுவாசத்தின் வரம்:** விசுவாசத்தின் ஜெபத்தை ஜெபிக்கவும், பகுத்தறிவினால் கொடுக்கப்பட்ட ஞானத்தின்படி விசேட நம்பிக்கையால் கிரியைசெய்யும்படி தெரிவிக்கின்றது.

**ஞானத்தின் வசனம்:** வியாதியின் தோற்றத்திற்கான ஞானத்தை கொடுக்கின்றது. இது முக்கியமான உணர்வுபூர்வமான ஊழியத்திற்கு அல்லது சாத்தானிய பிரச்சினைகளுடன் தொடர்புபடும் பௌதீக வியாதிகளுக்கு உதவி செய்கின்றது. அறிக்கையிடுதலின் தேவை, சாத்தானிய சேனைகளின் தொடர்பு, குணமாக்களை தடை செய்யும் குறிக்கோள்கள் குறித்தான பின்புலத்தின் பாவத்தை இது தரலாம்.

**அறிவின் வசனம்:** இது நீங்கள் வியாதியஸ்த நபருக்கு தேவன் தரும் “அறிவின் வசனங்களை” உபயோகப்படுத்துவதற்கான ஞானத்தை ஏற்படுத்துகின்றது.

**அற்புதங்களின் வரம்:** தொடர்ச்சியான மற்றும் நிச்சயமான குணமாக்குதல்கள் அதாவது கால் பகுதி வளருதல் ஆகியவை. அவைகள் இயற்கையின் விபரித்தல்களால் கொடுக்கமுடியாத சம்பவங்களாகும், அல்லது இயற்கையின் காரணங்களால் ஏற்பட முடியாத சில வழிகள் ஆகும். நீங்கள் இந்த வரங்கள் குறித்து மேலதிகமானவற்றை சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பாடமான *“பரிசுத்த ஆவியானவரின் ஊழிங்கள்”* என்னும் பாடத்தில் கற்கலாம்.

## ஆவிக்குரிய வரங்களை எதிர்பார்த்தல்

வேதாகமமானது ஒவ்வொரு விசுவாசிகளும் குறைந்தபட்சம் ஒரு ஆவிக்குரிய வரங்களாயாவது கொண்டிருப்பர் என போதிக்கின்றது:

> **அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். (1 பேதுரு 4:10)**
>
> **ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கி றது. இவைகளையெல்லாம் அந்த ஒரே அவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார். (1 கொரிந்தியர் 12:7,11)**

ஒவ்வொரு விசுவாசிகளும் குறைந்தபட்சம் ஒரு ஆவிக்குரிய வரங்களை கொண்டிருக்கின்றபடியால், நாம் ஒவ்வொருவரும் அதை கண்டுபிடித்து, அந்த வரத்தை உபயோகிக்கும் பொறுப்பு உள்ளது. ஆவிக்குரிய வரங்களை நாம் நட வேண்டும் என வேதாகமம் போதிக்கின்றது:

> **இப்படியிருக்க, முக்கியமான வரங்களை நாடுங்கள். (1 கொரிந்தியர் 12:31)**

நீங்கள் குணமாக்கும் வரத்திற்காக ஜெபிக்கும்போது, அனைத்து விசுவாசிகளுக்கும் நோயாளி குணமாகுவதற்காக கைகளை வைக்கும் உரிமை மற்றும் அதிகாரம் இருப்பதைபோல, உங்களிடம் ஏற்கனவே இருக்கும் அந்த வரத்தை விருத்தி செய்யும்படி தேவனிடம் கேட்கின்றீர்கள். இயேசு அவருக்கு கொடுக்கப்பட்ட வரத்தை அதிகரித்தார் (லூக்கா 5:22) மற்றும் தீமோத்தேயுவிற்கு அவனிடமுள்ள வரத்தை அனல்மூட்டி எழும்பிவிடும்படியாக கூறப்பட்டது (2 தீமோத்தேயு 1:6).

## சபையின் ஊழியம்

தேவன் குணமாக்கும் விசேட வரங்களை பெற்றவர்களுக்கூடாக அசைவாடினாலும், எல்லா ஊழியர்களும் வியாதிகளை குணப்படுத்தும்படியாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளார்கள், எல்லா ஊழியர்களும் குணமாக்கும் ஊழியத்தில் பங்குப்பெறுதல் வேண்டும். குணமாக்கும் ஊழியத்தில் பங்குபெறும்படிய வேதாகமம் கூறும் பட்டியல்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| -போதகர்களும் மேய்ப்பர்களும் (ஆவிக்குரிய தலைவர்கள்): | எசேக்கியேல் 34 |
| -மூப்பர்கள் அல்லது கீழ் அதிகாரிகள்: | யாக்கோபு 5:14 |
| -சாதாரண விசுவாசிகள்: | லூக்கா 16:15-18; யாக்கோபு 5:16 |
| -குணமாக்கும் விசேட வரங்களை கொண்டவர்கள்: | 1 கொரிந்தியர் 12:9 |
| -முழு சபையும்--குணமாக்கும் மையமாக இருத்தல் வேண்டும்: | லூக்கா 14:16-24 |

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

2. பரிசுத்த ஆவி எனப்படுபவர் யார்?

.....................................................................................................................................................

3. இப் பாடத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் குறித்து நீங்கள் கற்றதை சுருக்க மாக்குக.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

4. ஆவிக்குரிய வரம் என்பது என்ன?

.....................................................................................................................................................

5. "குணமாக்கும் வரங்கள்" என்பதை வரையறுக்க.

.....................................................................................................................................................

6. குணமாக்கும் வரங்களை முக்கியமாக பூரணப்படுத்தும் குறிப்பிட்ட ஆவிக்குரிய வரங்கள் என்ன?

.....................................................................................................................................................

7. குணமாக்கும் ஊழியத்தில் பங்குபற்றுவோர் யார்?

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. உங்களுடைய சொந்த பௌதீக நிலையில் அல்லது நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவரின் குணமாக்குதலை விசுவாசிக்க கடினமாக உள்ளதா? தேவன் ஓர் இயற்கையான செயற்பாட்டி-லேயே படைத்தார், ஆனால் அவர் அதற்கு கட்டுப்படவில்லை. இயற்கையான காரியங்களில் தேவன் அபரிதமாக அசைவாடும்போதே அற்புதங்கள் நடைபெறுகின்றன. உண்மையிலேயே, சாதாரண மீளமைப்பே அற்புதமான சுகமாக்குதலாகும். இந்த நோய் மற்றும் சாத்தானின் செயற்பாடு இயற்கைக்கு மாறானது, அத்தோடு தேவனுடைய உண்மையான நியாயப் பிரமாணங்களுக்கு எதிரிடையாக உள்ளது. ஆகவே அற்புத குணமாக்குதல் மற்றும் விடுதலை ஆகியவை சாதாரண நிலையிற்கு திரும்பிவிடும். உண்மையில் அவைகள் அற்புதங்கள் அல்ல, அவைகள் சாதாரணமானவைகள், ஆனால் எமது ஊழியத்தில் அவைகள் இல்லை.

2. அப்போஸ்தல புஸ்தகத்தில், குணமாக்கும் வரத்தில் தேவன் உபயோகித்த வித்தியாசமான மக்களை கவனியுங்கள்:

| | |
|---|---|
| -அப்போஸ்தலர் 3:1-11: | பேதுரு மற்றும் யோவான் (அப்போஸ்தலர்) |
| -அப்போஸ்தலர் 5:15 9:32-34: | பேதுரு (அப்போஸ்தலர்) |
| -அப்போஸ்தலர் 8:5-7: | பிலிப்பு (சுவிசேஷகர், மூப்பர்) |
| -அப்போஸ்தலர் 9:17-18: | அனனியா (அறியப்படாத விசுவாசி) |
| -அப்போஸ்தலர் 14:8-10 28:7-9: | பவுல் (அப்போஸ்தலர்) |

3. ஆவிக்குரிய வரங்களை தருபவர் பரிசுத்த ஆவியானவரே பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தை எவ்வாறு பெற்றுக்கொள்ளுவது என இங்கு உள்ளது:

-மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுதல்: அப்போஸ்தலர் 2:38
-இது உங்களுக்கானது என விசுவாசிக்க வேண்டும்: அப்போஸ்தலர் 2:39
-அதை வாஞ்சியுங்கள்: யோவான் 7:37-39
-வரமாக அதை ஏற்றுக்கொள்ளுங்கள் அப்போஸ்தலர் 2:38
-தேவனுக்காக கொடுங்கள்: ஏசாயா 28:11, அப்போஸ்தலர் 2:4
-மற்ற விசுவாசிகளிடமிருந்து ஜெப விண்ணப்பங்களை பெறுங்கள்: அப்போஸ்தலர் 2,4,10

4. ஆவிக்குரிய வரங்களுக்கான பந்தியை மீளாய்வு செய்க:

-ரோமர் 12:1-8 -1 கொரிந்தியர் 12:1-31 -எபேசியர் 4:1-16 -1 பேதுரு 4:7-11

உங்களுடைய சொந்த ஆவிக்குரிய வரங்களை கண்டுப்பிடித்துள்ளீர்களா?......... அவ்வா-றாயின், மற்றவர்களுக்கான ஊழியத்தில் அதை பயன்படுத்துகின்றீர்களா?............ நீங்கள் உங்களுடைய வரத்தை பயன்படுத்தாவிடத்து, அதை பயன்படுத்த எவ்வாறு தொடங்கலாம்?

..........................................................................................................................................

5. பரிசுத்த ஆவியானவர் மற்றும் ஆவிக்குரிய வரங்கள் பற்றிய மேலதிக படிப்பிற்கு, சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பயிற்சி புத்தகமாகிய *"பரிசுத்த ஆவியானவரின் ஊழியங்கள்"* பாடத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.

# பகுதி நான்கு

# சவால்களை கைப்பற்றுதல்

பௌதீக போராட்டத்தில் நீங்கள் சரீரத்திற்கு எதிராக யுத்தம் செய்யும்போது, தேவனுடைய முழுமையான கருத்தின் நிலையில், நீங்கள் சந்திக்கவேண்டிய முக்கியமான சவால்களை உள்ளடக்குபவை:

மனிதனின் பாரம்பரியங்கள்

மாம்சத்திலுள்ள முள்

பதிலளிக்கப்படாத கேள்விகள்

இந்த பகுதியில் நீங்கள் இந்த சவால்களை கைப்பற்றி தேவனுடைய வசனத்தின் மூலம் நீங்களாகவே தாக்குதல் செய்வீர்கள்.

## அதிகாரம் பதினொன்று

# மனிதனுடைய பாரம்பரியங்கள்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ குணமாக்குதல் தொடர்பான கீழ்வரும் மனிதனின் பாரம்பரியங்களுக்கு கரிசனை பண்ணவும்,
- ☐ குணமாக்குதலும், அற்புதங்களும் இன்று இல்லை.
- ☐ மரித்த அனைவர்களும் ஏன் எழும்பவில்லை?
- ☐ கிறிஸ்தவர்கள் ஏன் மரிக்கிறார்கள்?
- ☐ நவீன மருத்துவம் தெய்வீக குணமாக்குதலை தேவையற்றதாக்குகின்றது.
- ☐ தெய்வீக குணப்படுத்தலானது தவறான உபதேசங்களால் போதிக்கப்பட்டுள்ளது.
- ☐ ஆத்துமாவை விட சரீரமே முக்கியமானது.
- ☐ உங்களுடைய பாவத்தினால் நீங்கள் வியாதியடைந்துள்ளீர்கள்.
- ☐ நீங்கள் வியாதியடைவது தேவனுடைய சித்தம் ஆகும்.
- ☐ நீதிமான்களுக்கு துன்பங்கள் உண்டு.
- ☐ தெய்வீக குணப்படுத்தல் குறைவானது.
- ☐ உங்களுடைய சிலுவையே உங்களுடைய வியாதி போன்றவற்றை அறிய முடியும்.

## பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

> **என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது. உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும். என் வழிகளை நான் உமக்கு விவரித்துக் காட்டினபோது எனக்குச் செவி கொடுத்தீர். உமது பிரமாணங்களை எனக்குப் போதியும். உமது கட்டளைகளின் வழியை எனக்கு உணர்த்தியருளும். அப்பொழுது உமது அதிசயங்களைத் தியானிப்பேன். சஞ்சலத்தால் என் ஆத்துமா கரைந்துபோகிறது. உமது வசனத்தின்படி என்னை எடுத்து நிறுத்தும். (சங்கீதம் 119:25-28)**

## அறிமுகம்

மனிதர்களுடைய பாரம்பரியங்களான நம்பிக்கைகள், நீதிகள் மற்றும் கொள்கைகள் தேவனுடைய வசனத்தின் கிரியையை மறைத்து வைக்கின்றது. இயேசு அவருடைய நேரத்தில் சமய தலைவர்களிடம் கூறினார்:

> **உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள். (மத்தேயு 15:6)**

தேவனுடைய வசனத்தை கேட்பதிலிருந்து விசுவாசம் வருமாயின், விசுவாசத்தை அழிக்கக்கூடிய மனிதனுடைய பாரம்பரியங்களை கேட்பதினூடாகவும், ஏற்றுக்கொள்ளுவதினூடாகவும் அது சென்றுவிடும்.

இந்த அதிகாரமானது குணமாக்குதல் தொடர்பான மனிதனுடைய பொதுவான பாரம்பரியங்களை குறித்து கலந்துரையாடுகின்றது. தற்காலத்தின் ஒவ்வொரு பாரம்பரியத்தின் வேதாகம பிரதியுத்தரவானது, தவறுகளுக்கு எதிராக சிறந்த தீர்வாகிய அமைதியில்லாவிட்டாலும், தேவனுடைய வசனத்தின் உண்மைகளை அறிவிக்கின்றது. குணமாக்குதல் சம்பந்தமான பாரம்பரியங்களையும், எதிர்ப்புக்களையும் நாம் நீக்கும்போது, தெய்வீக குணமாக்குதல் நடைபெறுபவற்றை தடுக்கும் இடையூற்றை நீக்குகின்றோம்.

சங்கீதக்காரனாகிய தாவீது ஏற்கனவே தனது சொந்த வழிகளில் நடந்தாலும் தற்போது தேவனுடைய வழிகளை கற்பதற்கு வாஞ்சையாயிருப்பதாக சுட்டிக்காட்டுகின்றார்:

> **என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது. உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும். என் வழிகளை நான் உமக்கு விவரித்துக் காட்டினபோது எனக்குச் செவி கொடுத்தீர். உமது பிரமாணங்களை எனக்குப் போதியும். உமது கட்டளைகளின் வழியை எனக்கு உணர்த்தியருளும். அப்பொழுது உமது அதிசயங்களைத் தியானிப்பேன். சஞ்சலத்தால் என் ஆத்துமா கரைந்துபோகிறது. உமது வசனத்தின்படி என்னை எடுத்து நிறுத்தும். (சங்கீதம் 119:25-28)**

தாவீது பாரம்பரியத்தை தேவனுடைய வார்த்தைக்கு மாற்றீடாக வைத்தார், இவ்வாறு செய்யும்போது, அவனுடைய ஆத்துமா குணமாக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டது.

குணமாக்குதல் தொடர்பான மனிதனுடைய சில பாரம்பரியங்கள் இங்கு தரப்பட்டுள்ளன:

### "குணமாக்குதலும், அற்புதங்களும் இன்று இல்லை."

சில மக்கள் குணமாக்குதலான வேதாகம காலத்தில் மட்டும் தான் எனவும் அல்லது இயேசுவினுடைய எதிர்கால வருகையின் போதானது தான் எனவும் கூறுவர்.

## எமது பிரதியுத்தரவு:

தேவன் கூறுகின்றார்:

> **நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்... (யாத்திராகமம் 15:26)**

"நானே" என்பது நிகழ்காலமாகும். "நானே" என்பதை நாம் எவ்வாறு இறந்த காலத்திற்கு மாற்றலாம் அல்லது "நானே" என்பதை எவ்வாறு எதிர்காலத்திற்கு மாற்றலாம்? தேவன் மாறாதவர் என வேதாகமம் கூறுகின்றது:

> **நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. (யாக்கோபு 1:17)**

> **நான் கர்த்தர், நான் மாறாதவர். (மல்கியா 3:6)**

தேவன் ஆரம்பத்திலிருந்து மாறவில்லை:

> **இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். (எபிரேயர் 13:8)**

அற்புதங்களின் காலம் இறந்தகாலம் எனின், இரட்சிப்பின் காலத்தில், இரட்சிப்பை விட பெரிதான அற்புதம் எதுவும் இல்லை. குணமாக்குதல் எதிர்காலத்திற்குரியதாயின் இயேசு இப்பூவுலகிற்கு வந்து, அப்பொழுது ஊழிய ஆசிரியர்களும், போதகர்களும், மற்றைய தலைவர்களும் எதிர்கால நேரத்திலும் இருக்க வேண்டும் ஏனென்றால் குணமாக்கும் வரமானது இந்த ஊழியர்களின் ஆவிக்குரிய வரமாகும்.

அற்புதங்களானது இன்று இல்லை என அதிகப்படியான அறிவுறுத்தும் விவாதமானது அனுபவத்தை பதிவுசெய்ய பதிவேடு என உரிமைகோருகின்றது. எழு வகையான "காலங்களில்" தேவன் மனிதனோடு விசேட வழிகளில் தொடர்புகொள்ளுகின்றார். அவைகள்

| | |
|---|---|
| -பாவமற்ற காலம்: | ஆதியாகமம் 1:28 |
| -மனசாட்சியின் காலம்: | ஆதியாகமம் 3:23 |
| -மனித ஆளுகையின் காலம்: | ஆதியாகமம் 8:20 |
| -வாக்குத்தத்தத்தின் காலம்: | ஆதியாகமம் 12:1 |
| -நியாயப்பிரமாணத்தின் காலம்: | ஆதியாகமம் 19:8 |
| -கிருபையின் காலம்: | யோவான் 1:17 |
| -இராஜ்ஜயத்தின் காலம்: | எபேசியர் 1:10 |

இயேசு கிறிஸ்துவினுடைய வருகை இறுதி இராஜ்ஜியத்தின் காலத்தை குறிக்கும். இந்த காலத்தின் ஆரம்பத்தில், இயேசு அற்புதங்களையும், குணமாக்குதலையும் செய்வார்:

> **இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் போய், கண்டவைகளையும் கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள். குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. (லூக்கா 7:22)**

அப்போஸ்தல புஸ்தகமானது அற்புதங்களும், குணமாக்குதல்களும் ஆரம்பகால சபைகளிலிருந்து, இராஜ்ஜியத்தின் காலம் வரை தொடருகின்றது என பதிவுசெய்துள்ளது. நவீன சபை சரித்திரம் பதிவுகள் கூட அநேக குணமாக்குதல்களையும், அற்புதங்களையும் உறுதிப்படுத்துகின்றது.

## "மரித்த அனைவர்களும் ஏன் எழும்பவில்லை?"

சில மக்கள் கேட்கின்றனர், "இன்று குணமாக்குதல் காணப்படுமாயின், ஏன் விசுவாசிகள் அனைத்து வியாதிப்பட்டு மரித்தவர்களை எழும்பும்படியாக செல்லக்கூடாது?"

### எமது பிரதியுத்தரவு:

சபையிற்கு கொடுக்கப்பட்ட மாபெரும் அர்ப்பணிப்பின் ஒரு பகுதி மரித்தவர்களை எழுப்புதல் அல்ல. இராஜ்ஜியத்தை அறிவிக்கும்படியாக முதன்முதலாக அனுப்பப்பட்ட சீஷர்களுக்கு இது கட்டளையிடப் பட்டது. மரித்தோரிலிருந்து எழும்புதல் என்பது இயேசுவின் உயிர்தெழுதலின் "முதலாவது கனி"யாகும், இது வரப்படவேண்டியது.

விசேட அற்புதம் மற்றும் உறுதியான அற்புதம் என்பதற்கு இடையில் வித்தியாசம் உள்ளது. விசேட அற்புதங்கள் என்பது விசேட அடையாள சூழ்நிலைகளில் நடைபெறுகின்றது, இது நீரை திராட்சை ரசமாக மாற்றுதல், கடலில் நடத்தல், அப்பத்தையும் மீன்களையும் பரிமாறுதல், சிவந்த சமுத்திரத்தை பிரித்தல் என்பதை கூறலாம்.

குணமாக்குதல் பழைய ஏற்பாட்டின் உறுதியான அற்புதமாகும், இது விசேட அற்புதம் அல்ல. கடவுள் இன்றும் மரித்தவர்களை எழுப்புகின்றார், ஆனால் இது அவருடைய ஆளுகையின்கீழ் உள்ளது அத்தோடு குணமாக்குதலின் எமது அர்ப்பணிப்பில் இது ஒரு பகுதி அல்ல.

## "கிறிஸ்தவர்கள் ஏன் மரிக்கிறார்கள்?"

மரணம் குறித்தான காரியங்களை நாம் பார்த்துக்கொண்டிருக்கும்போது, சில நாத்தீகர்கள் தெய்வீக குணமாக்குதலானது எப்பொழுதும் நடைபெறுமாயின், எந்த கிறிஸ்தவர்களும் ஒருபோதும் சாக மாட்டார்கள் என உரிமை கோருகின்றனர்.

### எமது பிரதியுத்தரவு:

வசனத்தின்படியான உரிமைகோரல் எங்கும் இல்லை. தெய்வீக குணப்படுத்தலானது சாதாரண வாழ்க்கை வட்டத்திற்கு மாத்திரமே வேதாகமம் கொடுக்கின்றது. மரணத்திலிருந்தான நித்திய மீட்பை கிறிஸ்துவின் பரிகாரம் கொடுத்திருந்தாலும், இயேசு கிறிஸ்துவின் முதலாவது வருகை மற்றும் இரகசிய வருகை தவிர இந்த பார்க்ககூடிய சரீரமானது சாகும். மனித வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரமே குணமாக்குதல் உள்ளதென இதே வேதாகமம் போதிக்கின்றது:

> **எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம்... (சங்கீதம் 90:10)**
>
> **அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே... (எபிரேயர் 9:27)**

## "நவீன மருத்துவம் தெய்வீக குணமாக்குதலை தேவையற்றதாக்குகின்றது."

பாரம்பரியம் கூறுகின்றது: "இயேசுவின் காலத்தில் தகுந்த மருத்துவ உதவிகள் இல்லை. தற்போது அந்த உதவிகள் இருக்கின்றது, குணமாக்குவதற்காக தேவனிடம் ஜெபிப்பதைவிட அதை உபயோகிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்."

### எமது பிரதியுத்தரவு:

கி.மு 400 வருடங்களில், குணமாக்கும் மருத்துவ விஞ்ஞானம் காணப்பட்டது. ஹிப்போகிரேட்ஸ் (கி. மு 460-370) என்றும் மனிதன், மருத்துவத்தின் தந்தை, உயர்ந்த தரத்திற்கு தொடர்பான மருத்துவ விஞ்ஞானத்தை விருத்தி செய்தார். இன்றும் அவருடைய தொழில்நுட்பம் சில பயன்படுகின்றது. இயேசுவின் காலத்தில் கிரேக்கம், எகிப்து, ரோம் ஆகிய நாடுகள் பல தகுதியான செயற்பாடுகளை கொண்டிருந்தனர்.

தெய்வீக குணப்படுத்தலானது மருத்துவ விஞ்ஞானத்துடன் தகுதியான அல்லது தகுதியற்ற ஒரு செயற்பாட்டையும் செய்யப்போவதில்லை. எல்லா நல்ல வரங்களும் தேவனிடமிருந்து வருகின்றது,

ஆகவே நாம் முறையான மருத்துவ வளங்களை உபயோகிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளோம். எவ்வாறாயினும் ஞாபகத்தில் கொள்ளுங்கள், இந்த மருந்துகள் வாக்குத்தத்த குணமாக்குதல் உறுதிமொழிக்கு மாற்றீடு ஆகாது.

மருந்துகள் நன்மைகள் இருப்பினும் இன்னும் குணமாக்கமுடியாத வியாதிகள் உள்ளன, ஆகவே தெய்வீக குணமாக்குதலானது இன்னும் அவசியமாக உள்ளது. இன்னும் பல மக்கள் மருத்துவ உதவிகளுக்கு அப்பாலே தான் உள்ளார்கள்.

### "தெய்வீக குணப்படுத்தலானது தவறான உபதேசங்களால் போதிக்கப்பட்டுள்ளது"

பாரம்பரியம் கூறுகின்றது: "தெய்வீக குணப்படுத்தனாலது தவறான உபதேசங்களால் மட்டுமே போதிக்கப்பட்டுள்ளது"

### எமது பிரதியுத்தரவு:

வெஸ்லி, லூதர், சின்சென்டொர்ப், மெதடிஸ்த சபை தலைவர்கள், லூத்தரன், மொராவியன் சபைகள் பொதுவாக அனைவரும் தெய்வீக குணமாக்குதலை போதிக்கின்றனர். இன்று இதை போதிப்போர், குணமாக்கும் இயேசு இரத்தத்தின் வல்லமையாலும், கிறிஸ்துவின் தெய்வீகத்தினாலும், இந்த தலைவர்களை விட மரபுவழியில் இல்லை.

சில துர்உபதேச குழுக்கள் குணமாக்குதலை குறித்து போதிப்பர், ஆனால் உண்மையான வேதாகம குணமாக்குதலை அல்ல. இது இயேசு கிறிஸ்துவிற்கூடாக தேவனை விட வேறு ஆதாரங்களிலிருந்து வரும் குணமாக்குதல் "பௌதீக" அல்லது "மனதிற்கும் விட மேலான" என்பர். சாத்தான் ஒரு ஏமாற்றுகின்றவனும், அவனை பின்பற்றவும் செய்கின்றவன். தீய வல்லமைகளினால் குணமாக்கி அவன் ஏமாற்றினாலும் தெய்வீக குணமாக்குதலை நாம் தள்ள கூடாது.

இந்தியாவிலுள்ள கங்கை நதியில் கழுவுவதால் அவர்களுடைய பாவம் கழுவப்படுகின்றது என சாத்தான் அநேகரை நம்பவைத்து ஏமாற்றியுள்ளான். அதை பின்பற்ற சாத்தான் செய்வதால் நாம் இரட்சிப்பை போதிப்பதை நிறுத்த வேண்டுமா? சில வைத்தியர்கள் ஏமாற்றுகின்றதால் மருத்துவ தொழிலை நம்புவதை நீங்கள் விட்டுவிடுவீர்களா? உண்மையான குணமாக்குதலின் மற்றொரு அடையாளமே தெய்வீக குணமாக்குதல் என பின்பற்றும்படி சாத்தான் ஏமாற்றியுள்ளான் என்பதே உண்மையாகும்.

### "ஆத்துமாவை விட சரீரமே முக்கியமானது"

பாரம்பரியம் கூறுகின்றது: "தெய்வீக குணமாக்குதலானது ஆத்துமாவை விட சரீரத்திற்கே அதிக முக்கியத்துவத்தை கொடுக்கின்றது."

### எமது பிரதியுத்தரவு:

குணமாக்குதலின் ஊழியத்தில் சில விசுவாசிகள் இந்த முக்கியத்துவத்தில் வீழ்ந்துள்ளார்கள், ஆனால் இது வேதாகமத்தின் படியான குணமாக்குதுல் அல்ல. தெய்வீக குணமாக்குதலானது முழு மனிதனான சரீரம், ஆத்துமா மற்றும் ஆவியில் கொண்டுள்ளது.

குணமாக்குதல் தனக்குத்தானேயான சுவிசேஷம் அல்ல, இது கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கான ஒரேயொரு அம்சமாயிருக்கின்றது. பாவமுள்ள மனிதனின் ஆத்துமாவின் இரட்சிப்பின் செய்தியிற்கு அப்பால் இது ஒருபோதும் போதிக்கப்படலாகாது. ஆவி மற்றும் சரீரத்தின் மருத்துவத்திற்கான ஈடுபாடு ஆகிய இரண்டிற்கான சபையின் அவதானமானது வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள முழு மனித-னின் கருத்தை தவிர்க்க விடப்பட்டுள்ளது.

### “உங்களுடைய பாவத்தினால் நீங்கள் வியாதியடைந்துள்ளீர்கள்.”

ஒருவர் கூறியதை கேட்டேன் அவர் “நீங்கள் வியாதியடைந்தது உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் பாவம் செய்தீர்கள் அல்லது பாவியாயிருந்தீர்கள்.”

### எமது பிரதியுத்தரவு:

வியாதியிற்கான ஆதாரம் மற்றும் காரணங்களை கலந்துரையாடல்களை நாம் ஏற்கனவே நான்காம் மற்றும் ஐந்தாம் அதிகாரங்களில் பூர்த்தியடைந்துள்ளோம். இவ்வுலகத்திலிருக்கும் அனைத்து வியாதிகளும் பாவத்தினாலேயே என நீங்கள் அழைக்கப்படும்போது, தனிநபருடைய வியாதி தனிப்பட்ட பாவத்தி-னாலல்ல என்பது அவசியமற்றதாகின்றது.

### “நீங்கள் வியாதியடைவது தேவனுடைய சித்தம் ஆகும்”

“நீங்கள் வியாதியடைவது தேவனுடைய சித்தம் ஆகும். இது அவருடைய மகிமையிற்காகவே.” இந்த உரிமையை நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்டதுண்டா?

### எமது பிரதியுத்தரவு:

தேவனுடைய சித்தமா என்பதைவிட, அவர் குணாமாக்குவாரா அல்லது இல்லையா என அநேகர் கேள்வி கேட்கமாட்டார்கள். தேவனுடைய சித்தத்தை நாம் விளங்காவிட்டால் நாம் ஞானமற்றவர்கள் என வேதாகமம் குறிப்பிடுகின்றது:

> **ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். (எபேசியர் 5:17)**

வியாதியை குறித்தான தேவனுடைய சித்தத்தை அறிவது நிலத்தில் விசுவாசத்தை வளர்க்கும் உரத்தை கொடுப்பதாகும். வியாதியிற்கு வல்லமையான குணமாக்குதலை கொண்டுவருவதற்கான ஒரே ஜெபம் விசுவாசத்தின் ஜெபம் ஆகும். தேவன் குணப்படுத்துவார் என நீங்கள் ஆச்சரியப்படுவ-தற்கு அது நீண்ட ஜெபமாக இருக்க முடியாது.

உங்களுடைய வியாதி தேவனுடைய சித்தம் என நீங்கள் விசுவாசித்தால், உங்களுடைய குணமாக்குதலுக்காக யாரிடமாவது ஜெபிக்க கேட்பது தவறாகும். விசுவாசியினுடைய வியாதி தேவனாயின், வைத்தியர்கள் பிசாசுகளே ஏனென்றால் அவர்கள் வியாதியை எடுப்பதற்கு முயற்சிக்கின்றார்கள். வைத்தியசாலைகள் தவறாக உள்ளன ஏனென்றால் தேவனுடைய சித்தத்திற்கு எதிராக கலகம்செய்து வியாதியை நீக்குவதற்கு முற்படுவதினாலாகும். தாதிமார்கள் தேவனை மறுத்து துன்பப்படுவதிலிருந்து விடுபட ஒவ்வொரு முயற்சிகளையும் செய்கின்றார்கள்.

வியாதி தேவனுடைய சித்தமே என விசுவாசிக்கும் ஒவ்வொருவரும் அதிலிருந்து விடுபட மருத்துவ சிகிச்சைகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது. தேவனுடைய சித்தத்தை அவர்களுடைய உடலிலிருந்து

எடுப்பதற்கு வைத்தியர்களுக்கு அவர்கள் அனுமதிக்கக்கூடாது. விசுவாசி என்ற நிலையில் வியாதி தேவனுடைய சித்தமே என முழுமையாக நீங்கள் நம்பினால், நீங்கள் ஏன் மருந்துக்களை சாப்பிட்டு வைத்தியர்களை பார்க்கின்றீர்கள்?

ஆனால் வியாதியிற்கான ஆதாரம் சாத்தான் என நாம் அறிந்துள்ளபோதிலும், தேவனுடைய நன்மைக்கான விரிவாக்கமானது சட்டப்பூர்வமான வைத்தியர்கள், மருந்துக்கள், வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ விஞ்ஞானமாக இருத்தல் வேண்டும். சாத்தானே வியாதியிற்காக இருக்கும்போது, ஒவ்வொரு சட்டப்பூர்வபடியான துன்பத்திலிருந்து விடுவித்தல் தேவனே ஆகும். (சட்டப்பூர்வம் என்பதற்கு நாம் அர்த்தப்படுத்துவது சாத்தானிய முறைமைகளுக்கோ அல்லது தேவனுடைய வார்த்தையை துஷ்பிரயோகம் செய்யும் முறைமைகளுக்கோ உள்ளடக்கப்படுவது அல்ல.)

நீங்கள் வியாதியால் அல்லது நலமாய் இருந்தாலும், உங்களுடைய சரீரம் பெறுமதியை கொண்டுள்ளது எனவும், அதற்கூடாக தேவனை மகிமைப்படுத்துகின்றீர்கள் என்பதும் உண்மையாகும். ஆனால் வேதாகம பதிவுகளில், மக்கள் குணமடையும்போது தேவன் மகிமையடைந்தார். வியாதி தேவனை மகிமைப்படுத்துமாயின், கிறிஸ்து வியாதியை குணமாக்குவதினூடாக தேவனுடைய தேவனுடைய மகிமையை நீக்குகின்றார். வியாதி தேவனை மகிமைப்படுத்துமாயின், நாமனைவரும் வியாதியிற்காக ஜெபிக்க வேண்டும். ஆவியினாலான பாவத்தின் வியாதியை விட சரீரத்தின் வியாதியினால் ஒரு போதும் தேவன் மகிமையடைய மாட்டார்.

சிலசமயங்களில் தேவன் விசுவாசிகளுக்கு வியாதியை வர அனுமதிக்கின்றார், ஆனால் சாத்தானே ஆதாரம் என எப்போதும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். யோபுவினுடைய உதாணம் இதை பிரதிபலிக்கின்றது (யோபு அதிகாரம் 1-2)...

விசுவாசிகளுடைய வியாதியிற்கு தேவன் சித்தமானவர் அல்ல. சாத்தானின் தாக்குதலை குறித்தான அறிவு அவருக்கு உண்டு என்பதோடு, அவர் அனைத்து காரியங்களையும் (தீமையானவை கூட) உங்கள் நன்மைக்காக கிரியை செய்ய உபயோகிக்கின்றார். இதனாலேயே வியாதியுள்ள நிலையிலும் கூட நீங்கள் அவருக்கண்டையில் அருகில் செல்ல முடியும். தேவன் எப்பொழுதும் தீமையிலிருந்து நன்மையிற்கே கொண்டுவர எதிர்பார்க்கின்றார். பாவத்தின் தாக்கத்திற்கான பரிகாரமாக இயேசுவினுடைய மரணத்தை அவர் உபயோகிக்கின்றார். விசுவாசிகளினுடைய வாழ்க்கையில் வியாதியிற்கான ஆதாரம் தேவன் அல்ல, ஆனால் சிலவேளைகளில் சாத்தான் உங்களுக்குள் தீமை மற்றும் கிரியைகளை செய்ய முயற்சிக்கும்போது அந்த தாக்குதல்களுக்கூடாக நீங்கள் சென்று ஆவிக்குரிய வெற்றியை அடைந்துகொள்ளுவதற்காக தேவன் ஏற்படுத்துகின்றார்.

வியாதியினால் உண்டான காலமாற்ற அட்டவணையின் காரணமாக பவுல் முதலாவதாக கலாத்தியாவில் பிரசங்கித்தான் (கலாத்தியர் 4:13-15). துரோப்பீமுவின் வியாதி பவுலோடு ரோமுவிற்கு செல்லும் காரியத்தை தடை செய்ததோடு, துன்பத்தையும் ஏற்படுத்தியது (2 தீமோத்தேயு 4:20). ஆதியாகமம் 12 மற்றும் 20ல் வியாதி பாவத்தை தடுப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. ஆனாலும் இந்த உதாரணங்கள் தேவன் அதை எவ்வாறு பாவிக்கின்றார் என்பதை காட்டுகின்றது, ஞாபகத்தில் கொள்ளுங்கள்...

> **அவர் மனப்பூர்வமாய் மனுபுத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை. (புலம்பல் 3:33)**

வியாதி தேவர்களை மகிமைப்படுத்தும் புனிதர்களை மாத்திரம் உருவாக்குவதில்லை. இது கசப்பான, முறுமுறுக்கின்ற அவிசுவாசி மக்களையும் உருவாக்கும். இது புனிதப்படுத்தி, வளர்ச்சியை உருவாக்கும் வசனமாகும் (யோவான் 17:17). வியாதியஸ்தராய் நீங்கள் இருக்கும்போது வசனத்தை இன்னும் தியானிக் கின்றீர்கள் என்பது உண்மையாகும், ஆனால் ஆவியிற்குள் வளருவதற்கு வியாதி அவசியம் இல்லை.

இதை ஞாபகத்தில் கொள்ளுதல் நன்மையை தரும்: குணாதிசயத்தில் கிறிஸ்துவை போல் ஆவதே தேவனுடைய சித்தமாகும். வியாதி மற்றும் ஆரோக்கியம் உட்பட, இந்த தெய்வீக இலக்கின் தொடர்பின் இதன் முக்கியத்துவத்தை எல்லாவற்றையும் விட பெறுதல் ஆகும்.

அவிசுவாசிகள் என்ற ரீதியில், வியாதி பாவத்தினால் வருவதோடு இது தேவனுடைய நியாயத்தீர்ப்பின் இயல்பாகும். குணமாக்குதல் மற்றும் விடுதலையின் ஊழியத்தில், இரட்சிப்பின் விளைவாக, தேவன் இதை நன்மைக்காகவும் பாவிக்கவும் முடியும். குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான பல வாக்குத்தத்தங்களை அவருடைய வார்த்தையில் தேவன் கொடுத்துள்ளார். வியாதியஸ்தராய் நீங்கள் இருப்பது அவருடைய சித்தமாயின், அவருடைய வசனத்தில் தேவன் ஏன் இவைகளை கொடுத்துள்ளார்? விசுவாசியொருவர், “தேவனுக்கு என்னை குணமாக்குவதின் சித்தத்தை நான் அறி-யேன்” என கூறுவாராயின், “அவருடைய வாக்குத்தத்தங்களை அவர் சித்தமாக கொண்டுள்ளார்” என கூறுங்கள்.

இயேசு கூறினார், “என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்.” அவர் தேவனுடைய சித்தத்தை செய்து, அவருடைய கிரியையை செய்ததால் இதை கூறினார் (யோவான் 14:9). தேவன் குணமாக்குவாரா இல்லையா என்பதை குறித்து நீங்கள் எப்போதாவது ஆச்சரியப்படும்போது, நீங்கள் தேவனுடைய கிரியையை மட்டுமே பார்க்க வேண்டும்.

குணமாக்குதலுக்காக நீங்கள் ஜெபிக்கும்போது, “செய்யப்படுவதுபோல்” அல்லது “சித்தத்தின்படி” என ஜெபியுங்கள். குணமாக்குதல் மற்றும் விடுதலைக்காக நீங்கள் ஜெபிக்கும்போது “சித்தமிருந்தால்” என ஜெபிக்காதீர்கள். “தேவனே, உமக்கு சித்தமிருந்தால் என்னை குணமாக்கும்” என பாவிகள் ஜெபிக்க மாட்டார்கள். இரட்சிப்பைப்போல குணமாக்குதலும் பிராயச்சித்தத்தின் ஒரு பகுதியாகும்.

தேவன் உங்களை பூரணப்படுத்துவார் என்பதின் சந்தேகத்தை “இருந்தால்” வெளிப்படுத்துகின்றது. “சித்தத்தின்படி” என்பது நம்பிக்கையான விசுவாசத்தை குறிப்பதோடு, இந்த முறை கைவிடப்படும்போது, நேரத்தின் அளவு அதிகரிக்கப்படுகின்றது. மரணத்திற்குநேரான வியாதியஸ்ராய் இருக்கும்போது கூட, குணமாக்குதலுக்காக “சித்தமிருந்தால்” அல்லாமல், “சித்தத்தின்படி” என ஜெபியுங்கள். “சித்தமிருந்தால்” என்பது தேவனுடைய நிபந்தனைக்கும் காலத்திற்கும் விட்டுவிடும். விசுவாசிகளுக்கு, நித்தியமான வியாதியிற்கான தற்போதைய நிலையிலிருந்து மரணத்திற்கூடாய நித்திய குணமாக்குதலை அவர் தேர்ந்தெடுக்கலாம்.

“பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலும் செய்யப்படுவதாக” என ஜெபிக்கும்படியாக தேவன் எமக்கு போதித்தார். பரலோகத்தில் வியாதிகள் இல்லை, ஆகவே இது பூலோகத்தில் அவருடைய சித்தமல்ல என்பதை அதற்கு எதிராக கண்டிப்புடன் ஜெபம் செய்யலாம். இயேசு “தேவனே உமக்கு சித்தமிருந்தால் குணமாக்கும்” என ஒருபோதும் ஜெபிக்கவில்லை. ஒரேயொருமுறை “உமக்கு சித்தமிருந்தால்” என அவர் ஜெபித்தார், இது அவருடைய வாழ்க்கையில் தேவனுடைய திட்டத்தின் அவருடைய சொந்த சமர்ப்பித்தலின் உறவை காட்டுவதேயல்லாமல் குணமாக்குதலை

அல்ல. "உமது சித்தமாயின்" என்பது விசுவாசத்தை அழித்துவிடும். கிறிஸ்துவின் குணமாக்குதலின் சித்தத்தை அறியாத தீண்டத்தகாத குஷ்டரோகியின் சம்பவத்திலிருந்து, குஷ்டரோகியின் நிச்சயமற்ற தன்மையை "எனக்கு சித்தமுண்டு" என திருத்துகின்றார். தேவனுடைய கொள்கைளை ஒருபோதும் நம்பிக்கைக்காகவோ அல்லது கேள்விக்காகவோ மாற்றிக்கொள்ள வேண்டாம். அதன் உண்மைத் தன்மைக்கு கிரியைசெய்யுங்கள் அப்பொழுது அதை நீங்கள் வல்லமையாக கண்டுக்கொள்ளுவீர்கள்.

ஒருவர் உடனடியாக குணமாகவில்லையாயின் அல்லது "மரணத்திற்கேதுவான வியாதியிலிருந்து" ஒருவர் மரிப்பாராயின், அவரை குணமாக்குவது தேவனுடைய சித்தம் அல்ல என அர்த்தமாகாது. நாங்கள் காலத்திற்கு ஏதுவாக அவைகளை காண்கின்றோம், ஆனால் தேவன் நித்தியத்திற்கு ஏதுவான நிலைகளில் அவைகளை காண்கின்றார். நீங்கள் காலதாமதமான குணமாக்குதல்களை குறித்து ஞாபகத்தில் கொள்ள வேண்டும். சில:

**சாவிற்கேதுவான சமயங்களின் தாமதம்:** சாராளினுடைய மலடு உடனடியாக குணமாகவில்லை. யோபு உடனடியாக குணமாகவில்லை. குறிப்பிட்ட நேரம்வரைக்கும் யோவான் ஞானஸ்நானகனின் தகப்பனின் செவிடு குணமாகவில்லை. முதல் தடவையில் பகுதியளவே குணமாக்குதலை பெற்ற ஓர் குருடனுக்கு இயேசு இருதடவைகள் ஜெபித்தார். குணமாக்குதல் சிலசமயங்களில் தேவனுக்கான மகிமையை தாமதமாகவே கொண்டுவந்தன. உயிர்த்தெழுந்த லாசருவின் கதை இதற்கான சிறந்த நல்ல உதாரணம் ஆகும்.

**நித்தியத்திற்கான தாமதம்:** மரணம் என்பது விசுவாசியினுடைய வாழ்க்கையின் நித்தியத்திற்கான உண்மையின் சம்பவம் ஆகும். "மரணத்திற்கேதுவான வியாதி" கூட வெற்றியினால் மேற்கொள்ளப்படும், ஏனென்றால் விசுவாசியினுடைய மரணம் நித்திய குணமாக்குதலாகும். நீங்கள் தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிக்கும்போது, நீங்கள் பூரணமாகி பாவத்திலிந்தோ, வியாதியிலிருந்தோ நீண்ட காலத்திற்கு துன்பப்படுவதில்லை. மரணத்தை குறித்து பவுல் பேசும்போது, இந்த நோக்கத்திற்காகவே நீங்கள் ஆயத்தப்படுகின்றீர்கள் என கூறுகின்றார்: "இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும்..." (2 கொரிந்தியர் 5:6-9).

குணமாக்குதல் அனைவருக்குமானது என்பதை நீங்கள் விசுவாசிக்காதபோது, குணமாக்குதல் தேவனுடைய சித்தமா அல்லது இல்லையா என ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், குணமாக்குதல் நேரடியான வெளிப்பாட்டின் மூலம் ஆளப்படுகின்றது என நீங்கள் விசுவாசிக்க வேண்டும். அப்பொழுது நீங்கள் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தைகளைவிட மனிதனுடைய நேரடியான வெளிப்படுத்தல்களில் சாய்கின்றீர்கள். வியாதியஸ்தரே குணமாக்குவதற்கான "முக்கியமான ஒருவர்" என ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் விசேட வெளிப்படுத்தலை நீங்கள் பெறும்வரையில் உங்களிடம் அடிப்படை விசுவாசம் இல்லை.

## "நீதிமான்களுக்கு துன்பங்கள் உண்டு"

சில மக்கள் கூறுகின்றார்கள்: "நீதிமான்களுக்கு அநேக துன்பங்கள் உண்டு. நீங்கள் நீதிமானாக இருக்கின்றபடியால் இந்த துன்பங்களை பெற வேண்டும்."

### எமது பிரதியுத்தரவு:

சங்கீதம் 34:19ல் உபயோகிக்கப்பட்டுள்ள "துன்பங்கள்" எனும் வார்த்தையின் அர்த்தமானது,

பாரம்பரியங்களிலிருந்து உருவாக்கப்பட்டதேயொழிய, வியாதியிற்கு அடிப்படையிலானது அல்ல. இது சோதனைகள், கஷ்டங்கள், துன்புறுத்தல்கள், சோதிப்பு அகியவை அர்த்தப்படுத்தும். இது வியாதியையே அர்த்தப்படுத்துகின்றது என கொண்டாலும், இறுதியான வசனமானது தேவன் உங்களை விடுவிக்க விரும்புகின்றார் என்பதையே காட்டுகின்றது.

யாக்கோபு 5:13-16ல் துன்புறுத்தலுக்கும், வியாதியிற்கும் இடையில் சிறு வேறுபாடு அறியப்பட்டுள்ளது. நீங்கள் சோதனைகள், துன்புறுத்தல்கள், சோதிப்பு ஆகியவைகளால் மேற்கொள்ளப்படும்போது, நீங்கள் உங்களுக்காகவே ஜெபிக்க வேண்டும் (யாக்கோபு 5:13). நீங்கள் உங்களோடு ஜெபிக்கும்படியாக மற்றவர்களையும் அழைக்கலாம், ஆனால் உங்களுடைய பிரச்சினைகள் விலகும்படியாக அனைவரும் அழைக்கப்படவில்லை. துன்பங்கள் மற்றும் சோதனைக்கூடான ஜெபித்தலுக்கூடாக அதை மேற் கொள்ளுவதற்கு நீங்கள் கற்றுக்கொள்ளுவதற்காக நீங்கள் துன்புறும்போது ஜெபிக்கும்படியாக வசனம் உங்களை அறிவுறுத்துகின்றது. வியாதியஸ்தராயிருக்கும்போது எவ்வாறாயினும், மூப்பர்கள் ஜெபிக்கும் படியாக அழைக்கப்படவேண்டும் (யாக்கோது 5:14). வியாதியஸ்தர் காக்கப்படவேண்டும் (அவர்களுடைய பௌதீக வியாதியிலிருந்து), எழுப்பப்பட வேண்டும் (பலத்தை பெறுவதற்கு), பாவத்திலிருந்து மன்னிக்கப்பட வேண்டும் (ஆவிக்குரிய குணமாக்குதல்).

## "தெய்வீக குணமாக்குதல் குறைவானது"

தெய்வீக குணமாக்குதலின் சில பொருள்களுக்கு குறைவாக்குதல் குறைவானது என கூறுகின்றார்கள். அவர்கள் கூறுகின்றார்கள், "ஏன் மக்கள் ஏமாற்றமடையும்போது மட்டும் நம்பிக்கையை பெறுகின்றார்கள்?"

### எமது பிரதியுத்தரவு:

தெய்வீக குணமாக்குதலானது குறைவானது அல்ல. புதிய ஏற்பாட்டின் பக்கங்களானது குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான கதைகளால் நிரப்பப்பட்டுள்ளது. சபை வரலாறுகளும் தெய்வீக குணமாக்குதலுக்கான அநேக மருத்துவ சான்றுகளை பதிவு செய்துள்ளது.

## "உங்களுடைய சிலுவையே உங்களுடைய வியாதி"

"உங்களுடைய சிலுவையே உங்களுடைய வியாதி ஆகும். நீங்கள் அதனோடு வாழ்வதற்கு கற்று கொள்ள வேண்டும்." இந்த கூற்றை நீங்கள் எங்காவது கேட்டது உண்டா?

### எமது பிரதியுத்தரவு:

உங்களுடைய "சிலுவை" எனறும் வியாதியின் உரிமையை இலகுவாக கையாளலாம். உங்கள் மேல் வரும் உங்களுடைய சொந்த தெரிவு அல்லாமல் துன்புறுத்தலும், வியாதியும் "சிலுவை" எனும் பிரச்சினை அல்ல. "சிலுவையை எடுத்தல்" ஊழியத்தின் பணி என இயேசு தெளிவாக குறிப்பிட்டுள்ளார், இது உங்களுடைய தெரிவு இன்மையால் நீங்கள் ஏற்றுக்கொள்ள கூடிய ஒன்று அல்ல. தேவனால் அனுப்பப்பட்ட சிலுவையாக தேவன் ஒருபோதும் வியாதியையும் மரணத்தையும் அணுகவில்லை. அதை எதிரியாகவே அணுகினார். நீங்கள் வியாதியை உங்களுடைய சிலுவையாக கருதினால், பின் மருத்துவ உதவியை அதை நீக்கும்படியாக ஏன் அணுகுகின்றீர்கள்?

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

.................................................................................................................................................

2. மனிதனுடைய கீழ்வரும் பாரம்பரியங்களை குறித்த உங்களுடைய பிரதியுத்தரவை எழு-தவும்?

குணமாக்குதலும், அற்புதங்களும் இன்று இல்லை.

.................................................................................................................................................

மரித்த அனைவர்களும் ஏன் எழும்பவில்லை?

.................................................................................................................................................

தெய்வீக குணமாக்குதல் எப்பொழுதும் கிரியைசெய்யுமாயின், கிறிஸ்தவர்கள் ஏன் மரிக்கிறார்கள்?

.................................................................................................................................................

நவீன மருத்துவம் தெய்வீக குணமாக்குதலை தேவையற்றதாக்குகின்றது.

.................................................................................................................................................

தெய்வீக குணப்படுத்தலானது தவறான உபதேசங்களால் போதிக்கப்பட்டுள்ளது.

.................................................................................................................................................

தெய்வீக குணமாக்குதலில், ஆத்துமாவை விட சரீரமே முக்கியமானது:

.................................................................................................................................................

உங்களுடைய பாவத்தினால் நீங்கள் வியாதியடைந்துள்ளீர்கள்.

.................................................................................................................................................

நீங்கள் வியாதியடைவது தேவனுடைய சித்தம் ஆகும்.

.................................................................................................................................................

நீதிமான்களுக்கு துன்பங்கள் உண்டு.

.................................................................................................................................................

தெய்வீக குணப்படுத்தல் குறைவானது.

................................................................................................................................................

உங்களுடைய சிலுவையே உங்களுடைய வியாதி.

................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

நீங்கள் ஊழியம் செய்த யாராவது ஒருவருக்கு அல்லது உங்களுடைய சொந்த வியாதியை குறித்தான வெளிப்படுத்தல்களின்போது நீங்கள் கேட்ட கீழ்வரும் பாரம்பரியங்கள் என்ன?

பிரயோகிக்கக்கூடியவற்றை குறித்துக்கொள்ளுங்கள்:

............ குணமாக்குதலும், அற்புதங்களும் இன்று இல்லை.
............ மரித்த அனைவர்களும் ஏன் எழும்பவில்லை?
............ தெய்வீக குணமாக்குதல் கிரியை செய்யுமாயின், கிறிஸ்தவர்கள் ஏன் மரிக்கிறார்கள்?
............ நவீன மருத்துவம் தெய்வீக குணமாக்குதலை தேவையற்றதாக்குகின்றது.
............ தெய்வீக குணப்படுத்தலானது தவறான உபதேசங்களால் போதிக்கப்பட்டுள்ளது.
............ ஆத்துமாவை விட சரீரமே முக்கியமானது.
............ உங்களுடைய பாவத்தினால் நீங்கள் வியாதியடைந்துள்ளீர்கள்.
............ நீங்கள் வியாதியடைவது தேவனுடைய சித்தம் ஆகும்.
............ நீதிமான்களுக்கு துன்பங்கள் உண்டு.
............ தெய்வீக குணப்படுத்தல் குறைவானது.
............ உங்களுடைய சிலுவையே உங்களுடைய வியாதி.

எதிர்கால கூட்டங்களில் மீண்டும் வெளிப்படுத்தப்படும் இந்த சவால்களின் போது நீங்கள் உபயோகிக்கும் பிரதியுத்தரவை எழுதுங்கள்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

# அதிகாரம் பதின்ரெண்டு

# மாம்சத்திலுள்ள முள்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ பவுலின் மாம்சத்திலுள்ள முள் உருவாக யார் காரணம் என்பதை இனங்காணவும்,
- ☐ முள்ளைகுறித்து வேதாகமம் குறிப்பிடுவது என்ன என்பதை அடையாளம் காணவும்,
- ☐ இது ஏன் அனுமதிக்கப்பட்டது என்பரை விபரிக்கவும்,
- ☐ அது என்ன செய்தது என்பதை விபரிக்கவும்,
- ☐ அது எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டது என்பதை சுருக்கவும்.
- ☐ பவுலின் சரீரத்திலிருந்த முள்ளின் விளைவை விபரிக்கவும் முடியும்.

## பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

> **கர்த்தர் எகிப்தியரை வாதையினால் அடிப்பார். அடித்துக் குணமாக்குவார். (ஏசாயா 19:22)**

### அறிமுகம்

விசுவாசிகள் குணமாக்குதல் மற்றும் விடுதலையை எதிர்பார்க்கும்போது மனிதர்களால் உருவாக்கப்பட்ட சில பாரம்பரியங்களின் பிரச்சினைகளைகுறித்து கடைசி பாடத்தில் நீங்கள் கற்றீர்கள். இந்த பாடமானது 2 கொரிந்தியர் 12ல் விபரிக்கப்பட்டுள்ள பவுலின் மாம்சத்திலிருந்த முள்ளை மையப்படுத்தியதான பாரம்பரியத்தை குறித்து கவனம் செலுத்தும். இது மிகவும் விவாதத்திற்குரியதும், குணமாக்குதலில் மிகவும் விமர்சனத்தையும் உடையதாக இருப்பதால், இந்த பாடம் முழுவதையும் அதற்கே அர்ப்பணித்துள்ளோம்.

அநேக மக்கள் பவுலில் இருந்த முள் ஓர் வியாதி எனவும், அவர் விளைவுகள் ஏதுமின்றி வெளியேறும் படியாக ஜெபம் செய்தபோதுகூட, அவைகள் வியாதியாய் “மாம்சத்தில் முள்ளாய்” இருக்கும்படியாக விதிக்கப்பட்டது என போதிக்கின்றனர். பாரம்பரியம் கூறுகின்றது, “உங்களுடைய வியாதி பவுலின் மாம்சத்திலிருந்த முள்ளை போன்றது, அத்தோடு அதனோடு வாழும்படியாக நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.”

“மாம்சத்திலுள்ள முள்” எனும் கலாச்சாரமானது அநேகர் குணமாக்குதலை பெற்றுக்கொள்ளுவதற்கு பிரதான தடையாக உள்ளது. எமக்கு வல்லமையில்லை என்பதற்காகவும், மக்கள் ஏன் காட்புலனாககூடிய குணமாக்குதலை பெற்றுக்கொள்ளுவதில்லை என்பதை விபரிப்பதற்காக இதை தவறாக பயன்படுத்த முயற்சிக்கின்றனர். இந்த பாடத்தை தொடரும்போது, இந்த காரியத்தை குறித்தான மனிதர்களின் அனைத்து உபதேசங்களையும் ஒருபுறம் வைத்துவிட்டு, வசனம் உண்மையில் எதை போதிக்கின்றது என்பதை குறித்து நாம் பரீட்சித்துபார்ப்போம்.

# பவுலின் மாம்சத்திலுள்ள முள்

பவுலின் மாம்சத்திலுள்ள முள்ளை குறித்து வேதாகமம் என்ன போதிக்கின்றது என்பது இங்கே தரப்பட்டுள்ளது.

## இது என்ன?

பவுலினுடைய முள் ஓர் தூதன் என வேதாகமம் கூறுகின்றது. “தூதன்” என்னும் கிரேக்க சொல் புதிய ஏற்பாட்டில் ஏழு தடவைகள் தோன்றுகின்றது. இது “தூதன்” என்று 181 தடவைகள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. அனைத்து 188 தடவைகளும் நபரை குறித்தே பேசுகின்றதேயொழிய, வியாதியையும் வேதனைகளையும் அல்ல. தூதன் என்பது ஒரு நபராகும்.

“முள்” என்று சொல்லப்படும் பழைய ஏற்பாட்டு வசன உபயோகமும் இதை ஆதரிக்கின்றது. எண்ணாகமம் 33:55 மற்றும் யோசுவா 23:13 ல் பயன்படுத்தப்பட்டுள்ள முள் கானான் தேசத்திலுள்ள குடிகளை குறிப்பிடுகின்றது. இந்த இரு சந்தர்ப்பங்களிலும் எதிரிகளினுடைய துரத்துதலையற்றலாமல் இது பௌதீக துன்புறுத்தலை குறிப்பிடவில்லை,

## இது யாரிடமிருந்து வருகின்றது:

இது சாத்தான் என்னும் தூதனிடமிருந்தென்று என வேதாகமம் கூறுகின்றது. “இது கொடுக்கப் பட்டது...” என பவுல் கூறுகின்றார், ஆனால் இது தேவனிடமிருந்து என்று அவர் கூறவில்லை!

## இது ஏன் அனுமதிக்கப்பட்டது:

முள்ளானது மூன்று பிரதான காரணங்களுக்காக அனுமதிக்கப்பட்டது:

### 1. அது பாவத்தை தவிர்க்கின்றது:

பரிபூரணமான வெளிப்படுத்தல்களை பெறுதலின் மூலமும், தனது பெருமையான போக்கினாலும் முள் அனுமதிக்கப்பட்டது என பவுல் கூறுகின்றார். ஒருவர் மாம்சத்தில் முள் உள்ளது என உரிமைகோரும் முன் அவர் எத்தனை தரிசனங்களையும், வெளிப்படுத்தல்களையும் பெற்றார் என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும். அவர் முள்ளிற்கு தகுதியானவரா? மாம்சத்தில் முள் உள்ள அநேக மக்கள் அவர்களிடம் எவ்விதமான வெளிப்பாடுகளும் தரிசனங்களும் இல்லை என எண்ணுகின்றார்கள்.

### 2. அது தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுகின்றது:

முள் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுகின்றது. பவுல் மாற்றமடைந்தபோது தேவன் கூறினார்:

> **அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார். (அப்போஸ்தலர் 9:16)**

### 3. அது பலத்தை உண்டாக்குகின்றது:

தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தும்படியான சந்தர்ப்பத்தை கொடுக்கும்படியாக “முள்” என்னும் பிரச்சினை கொடுக்கப்படுகின்றது.

## அது என்ன செய்கின்றது:

அது பவுலை வேதனைப்படுத்தியது. “வேதனை” என்பதின் அர்த்தம் “மீண்டும், மீண்டும், மீண்டுமான தாக்குதல்களை தொடர்ச்சியாக கொடுத்தல்” ஆகும். “வேதனை” என்னும் வார்த்தை நிரந்திரமான வியாதியை குறிப்பதாய் அல்ல, ஆனால் தொடர்ச்சியான தாக்குதல்கள் ஆகும். தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதை நிறுத்துவதற்கு முயற்சியாக பவுலுக்கு வேதனை என்னும் தூதன் அனுப்பப்பட்டான்.

## அது எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது:

இந்த முள் பவுலினுடைய துன்பத்திற்கு எதிராக தூண்டப்பட்ட பல்வேறு வழிகளின் உதாரணங்களில் சில இங்கு தரப்பட்டுள்ளது.

1. பவுலினுடைய உபதேசத்திற்கு பின் அவரை கொல்லும்படியாக யூதர்கள் கலந்தாலோசித்தார்கள்: அப்போஸ்தலர் 9:23
2. விசுவாசிகள் இணைக்கப்படும்போது பவுல் துன்பப்படுத்தப்படுகின்றார்: அப்போஸ்தலர் 9:26-29
3. அவர் சாத்தானால் எதிர்க்கப்பட்டான்: அப்போஸ்தலர் 13:6-12
4. அவர் யூத குழுவினால் எதிர்க்கப்பட்டான்: அப்போஸ்தலர் 13:44-49
5. அவர் பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவுக்கு வெளியே துரத்தப்பட்டார்: அப்போஸ்தலர் 13:50
6. அவர் முற்றுகையிடப்பட்டு இக்கோணியாவிலிருந்து வெளியேற்றப்பட்டார்: அப்போஸ்தலர் 14:1-5
7. அவர் கல்லெறியப்பட்டு மரணத்தருவாயிலிருக்கும்போது, லிஸ்திராவிற்கும் தெர்பைக்கும் தப்பி-னார்: அப்போஸ்தலர் 14:6-19
8. தவறான நபர்கள் அவரோடு தொடர்ந்து வழக்காடினார்கள்: அப்போஸ்தலர் 19:8
9. அவர் பிலிப்பியில் அடிக்கப்பட்டு, சிறைவைக்கப்பட்டார்: அப்போஸ்தலர் 16:12-40
10. அவர் முற்றுகையிடப்பட்டு தெசலோனிக்கேயாவிலிருந்து வெளியேற்றப்பட்டார்: அப்போஸ்தலர் 17:1-10
11. அவர் முற்றுகையிடப்பட்டு பெரோயாவிலிருந்து வெளியேற்றப்பட்டார்: அப்போஸ்தலர் 17:10-14
12. அவர் கொரிந்துவில் முற்றுகையிடப்பட்டார்: அப்போஸ்தலர் 18:1-23
13. அவர் எபேசுவில் முற்றுகையிடப்பட்டார்: அப்போஸ்தலர் 19:23-31
14. யூதர்களின் மூலம் அவரது வாழ்க்கைக்கு எதிராக ஒரு சதி இருந்தது: அப்போஸ்தலர் 20:3
15. அவர் யூதர்களால் சூழப்பட்டார், முற்றிகையிடப்பட்டார், ஐந்து முறை நீதிமன்றத்திற்குள்ளாக முயற்சிக்கப்பட்டார், அத்தோடு மற்றவர்களின் வேதனைகளோடு துன்பப்பட்டார்: 2 கொரிந்தியா 11:23-33

பவுல் துன்பப்படும்போது வியாதியை தாக்குதலாக அவருடைய எழுத்துக்களில் ஒரு தடவைகூட எழுதவில்லை. 1 கொரிந்தியர் 4:11ல், தன்மீதான தாக்குதலானது நிரந்திரமான வியாதியல்ல என காட்டுகின்றார். “இந்நேரம்வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம்” என அவர் கூறுகின்றார்.

கலாத்தியர் 4:13-16ல் காட்டப்பட்டுள்ளப்படி பவுல் வியாதியை அனுமதித்தார், ஆனால் அது நிரந்திர-மான நிலை அல்லாததினால், இது அவருடைய முள் அல்ல. “முதலில்” மாத்திரமே அது காணப்பட்டது என அவர் கூறினார். சிலர் பவுலுடைய முள் குறைபாடுள்ள கண்கள் என விசுவாசிக்கின்றார்கள், ஆனால் அவருடைய கண்கள் குருட்டுத்தன்மையிலிருந்து குணமாக்கப்பட்டது (அப்போஸ்தலர் 9:18).

தொடர்ந்தும் அவருடைய கண்களில் குறைப்பாடுள்ளது என விசுவாசித்தால் அது தேவனுடைய குணமாக்கும் வல்லமையை தாழ்துவதாகும். கண்ணின் குறைப்பாடு தேவனுடை மகிமையை காணா-மல் சாத்தானின் தூதுவனை பார்த்ததுபோல் கூட அழைக்க முடியுமா? எபேசுவுக்கு எழுதிய நிருபத்தில், பவுல் 60 வருடங்களில் தனக்கு கூறுகின்றார், மாம்சத்தில் முள் ஏற்பட காரணம் “ஏறத்தாழ 14 வருடங்களுக்கு முன்” தனக்கு “மாபெரும் வெளிப்படுத்தல்” கிடைக்கப்பெற்றதினாலாகும். அது அவருடைய தேவனுடைய மகிமையை கண்ட மனமாற்றத்தின் அனுபவத்தின் 12 வருடங்களின் பின் ஆகும்.

கலாத்தியர் 4:15ல் பவுல் உபயோகித்த பந்தியில் “உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக்கூடுமானால்...” இது எபிரேய வடிவில் அவருடைய பேச்சாகும். இது உள்ளான சித்தத்தை காட்டுவதற்காக சில இடங்களில் உபயோகித்த பந்திகளை போல் ஒத்ததாகும். உதாரணத்திற்கு “எனது வலது கையை நான் தருகின்றேன்...” சிலர் உரிமை கொள்வது போல் பவுலின் கண்க-ளில் வியாதி இருந்து, அவருடைய கண்களில் இருந்து சீல் வடியுமானால், இது மக்களை கவர்ந்து விசேட அற்புதங்களில் விசுவாசம் வைப்பதற்கு மிகுந்த புதுமையாக காரியமாகும்.

### அதன் விளைவு:

பவுல் தன்னுடைய “பலவீனத்தை” பேசும்போது அதன் அர்த்தமானது “பலத்தை வேண்டுதல், பலவீனம், அவருடைய சொந்த இயற்கையான இயலுமைகளுக்கூடாக உருவாக்கக்கூடிய இயலாமைகளாகும். இந்த பலவீனத்திற்கூடாக, தேவனுடைய வல்லமையும், பலமும் வெளிப் படுகின்றது.

## முடிவுரை

பவுலின் முள்ளைக்குறித்த முடிவுரையில் சரியாக முள் என்ன என்பதை எம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை, நீங்கள் அதை வியாதி என கற்பிக்கப்பட்டிருந்தால் கீழ்வருவற்றை ஞாபகத்தில் கொள்ளுங்கள்:

பவுலுடைய முள்ளானது அவருடைய வாழ்வில் தேவனுடைய வல்லமைக்கு வித்திட்டது. சில மக்கள் “மாம்சத்திலுள்ள முள்ளின்” வியாதியை சாக்குப்போக்கு செய்கின்றனர். எழுதுதல், பிரசங்கித்தல், அவருடைய பங்காளர்களோடு ஊழியத்தில் பயணித்தல் ஆகியவைகளோடு, மாம்சத்திலுள்ள முள்ளை குறித்தான வேதாகம உதாரணத்தில் அவர்கள் ஞாபகத்தில் கொள்ளல் வேண்டும் அந்த முள் இராஜ்ஜியத்தை குறித்தான வல்லமையான சேவையையும், அவருக்குள் இருந்த தேவனுடைய வல்லமையின் வெளிப்படுத்தலையும் மறைத்துவைக்கவில்லை.

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

2. பவுலினுடைய மாம்சத்திலிருந்த முள் யார்?

..........................................................................................................................................

3. வேதாகமத்தின்படி, பவுலின் மாம்சத்திலிருந்த முள் என்ன?

..........................................................................................................................................

4. இந்த மாம்சத்தின் முள் ஏன் அனுமதிக்கப்பட்டது?

..........................................................................................................................................

5. இந்த முள் பவுலை என்ன செய்தது?

..........................................................................................................................................

6. பவுலின் மாம்சத்திலுள்ள முள் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டது?

..........................................................................................................................................

..........................................................................................................................................

7. பவுலின் மாம்சத்திலுள்ள முள்ளின் விளைவு என்ன?

..........................................................................................................................................

..........................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. இந்த பாடத்தில் நீங்கள் கற்றவைகளிலிருந்து, தமது "மாம்சத்திலுள்ள முள்ளின்" வியாதி தேவனிடமே இருந்தென உரிமைகோரும் நபருக்கு நீங்கள் எவ்வாறு பிரதியுத்தரவு செய்வீர்கள்?

........................................................................................................................................

........................................................................................................................................

2. குணமாக்கும் வாக்குத்தத்தை படியுங்கள்:

**கர்த்தர் எகிப்தியரை வாதையினால் அடிப்பார். அடித்துக் குணமாக்குவார். (ஏசாயா 19:22)**

"அடித்தல்" என்பது உருக்கமாய் மற்றும் அழுத்தமாய் கோருவதாகும். தேவன் அடித்தவர்களை குணமாக்குவார் என அவர் வாக்குத்தத்தம் செய்கின்றார்.

3. பவுலினுடைய முள் வியாதி அல்ல என்றாலும், வெளியான தாக்குதல்கள் மற்றும் முழுமையான சுகத்தை பெறுவதற்கான பௌதீக பலவீனங்களில், தேவன் அவருக்கு கொடுத்த அதே வல்லமையை தரும்படியாக நீங்கள் கேட்கலாம். தேவன் பவுலிடம் கூறினார்:

**என் கிருபை உனக்குப்போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். (2 கொரிந்தியர் 12:9)**

பவுலினுடைய பிரதிபலிப்பானது....

**கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன். (2 கொரிந்தியர் 12:9-10)**

3. குணமாக்கும் ஊழியத்தை நீங்கள் செய்யும் ஒருவருக்கு அல்லது உங்களுடைய சொந்த பௌதீக நிலைகளை எண்ணுங்கள்:

உங்களுடைய தற்போதைய பலவீனம் என்ன?

........................................................................................................................................

இந்த பலவீனங்களில் தேவனுடைய வல்லமை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

........................................................................................................................................

..........................................................................................................................................

குணமாக்குதலுக்கு காத்திருக்கும்போது, தேவனுடைய மகிமையை கொண்டுவருவதற்கு என்ன செய்யலாம்? (கட்டிலில் இருக்கும்போதோ அல்லது தள்ளுவண்டியில் இருக்கும் போதோகூட ஏதாவது செய்யலாம். உதாரணத்திற்கு, அவர்கள் ஜெபத்தில் இடைநடுவராக பங்குபற்றலாம்.)

..........................................................................................................................................

..........................................................................................................................................

5. உங்களுடைய பௌதீக பிரச்சினைகளுக்கு மேலாக சாத்தானிலிருந்து வெளியரங்கமான தாக்குதல்களை அனுபவிக்கின்றீர்களா?

நீங்கள் தற்போது என்ன பிரச்சனைகளை அனுபவிக்கின்றீர்கள்?

..........................................................................................................................................

..........................................................................................................................................

இந்த நிலைகளில் தேவனுடைய மகிமை எவ்வாறு வெளிப்படுத்தப்படலாம்?

..........................................................................................................................................

..........................................................................................................................................

(முடிவுரையில் கொடுக்கப்பட்ட பரீட்சைக்கான பதில்கள் இந்த கையேட்டின் கடைசி அதிகாரத்தில் தரப்பட்டுள்ளது)

## அதிகாரம் பதின்மூன்று

# பதிலளிக்கப்படாத கேள்விகள்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ "ஸ்திரமின்மையை" விபரிக்கவும்,
- ☐ குணமாக்குதலை தாக்குறச்செய்யும் கீழ்வரும் ஸ்திரமின்மைகளை கலந்தாலோசிக்கவும் முடியும்.
  - போதனை இன்மை
  - நம்பிக்கையின்மை
  - விசுவாசமின்மை
  - வல்லமையின்மை
  - தனிப்பட்ட அறிக்கையிடப்பாடாத பாவங்கள்
  - பூரணப்பட மறுக்கப்படல்
  - தீர்மானங்களும், திட்டங்களும் இன்மை
  - விண்ணப்பித்தல்களிலுள்ள பிரச்சனைகள்
  - விடாமுயற்சி இன்மை
  - குணமாக்குதலின் செயற்பாட்டில் கீழ்ப்படிவின்மை
  - கிறிஸ்துவினுடைய சரீரத்தை குறித்த பூரண அறிவின்மை
  - துரத்தப்படமுடியாத தீய வல்லமை
  - தேவனுடைய கிரியைகளுக்கு எதிரிடையாக இருத்தல்
  - இயற்கையான வளங்களை துஷ்பிரயோகம் செய்தல்
  - சாவுதலுக்கான குறித்த நேரம்
- ☐ இந்த ஸ்திரமின்மைகளுக்கு பிரதியுத்தரவு செய்தல்.

**பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:**

> **மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள். வெளிப்படுத்தப் பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்.**
> **(உபாகமம் 29:29)**

### அறிமுகம்

ஏன் அநேக மக்கள் குணமாக மறுக்கின்றனர்? சிலர் குணமாக்கப்பட்டு ஏன் மற்றவர்கள் குணமாகுவதில்லை? உலக கிறிஸ்தவர்கள் குணமாக்கப்பட்டு, ஏன் அநேக ஆர்வமுள்ள மற்றும் அர்ப்பணித்துள்ள மக்கள் இன்னும் குணமாகாமல் சில சமயங்களில் ஏன் பூரணபடாதிருப்பதோடு இருக்கின்றார்கள்?

நீங்கள் குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான ஊழியத்தை ஆரம்பிக்கும்போது நீங்கள் முகங் கொடுக்கும் சில கேள்விகள் தான் இவை. இந்த பாடம் குணமாக்குதலை தாக்கும் ஸ்திரமின்மைகளை கவனம்செலுத்தும். மாறுப்பட்ட நிலைகளை அல்லது வித்தியாசமான விளைவுகளை "ஸ்திரமின்மை" என்னும் காரணி ஏற்படுத்தும்.

தேவன் அவருடைய வசனத்தில் குணமாக்குதலை வாக்குப்பண்ணியுள்ளார். எவ்வாறாயினும் மனிதனுடைய

பிரதியுத்தரவுக்கு அமைய தேவனுடைய எல்லா வாக்குத்தத்தங்களும் நிபந்தனையானவை என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். இதன் காரணமாகவே குணமாக்குதலை தாக்கமுறச்செய்யும் ஸ்திரமின்மைகளை விளங்கிக்கொள்ளுவது முக்கியமானதாகும்.

## ஸ்திரமின்மைகளை விளங்கிக்கொள்ளுதலும் பிரதியுத்தரவு செய்தலும்

சில மக்கள் குணமாக்கப்பட்டு மற்றவர்கள் குணமாக்கப்படாதிருப்பதற்கு குணமாக்குதல் ஊழியத்தில் காணப்படும் ஸ்திரமின்மைகளே காரணம் ஆகும். இந்த பாடத்தை நீங்கள் கற்பதற்கு முன்னர், குணமாக்குதல் மற்றும் விடுதலைக்குறித்து நீங்கள் சம்பந்தப்படும் பிரச்சினைகள் மற்றும் அனைத்து கேள்விகளுக்கும் ஒருபோதும் பதில்கள் இல்லை என்பதை நீங்கள் ஞாபகத்தில் கொள்ளல் வேண்டும் என்பது முக்கியமானதாகும்.

எமது இயற்கையான சுபாவம் வேண்டுவது சகலவற்றையும் விளங்குவதாகும். ஏவாளுக்கு சாத்தானின் முதலாவது சோதனை இதனை மையப்படுத்தியே இருந்தது. சகலவற்றையும் அறிதல் வேண்டும் என்பதே பதிலளிக்கப்பட முடியாத கேள்விக்கு மேலான கலகத்தின் காரணமாகும். இந்த மனித சுபாவத்தின் பிரச்சினையே குணமாக்கும் மற்றும் விடுதலைக்கான ஊழியத்தை வல்லமையாக செய்யும்போது நீங்கள் ஒருவரை கட்டுப்பட செய்கின்றீர்கள்.

குணமாக்குதல் மற்றும் விடுதலையை தாக்குறச்செய்யும் சில ஸ்திரமின்மைகளை வேதாகமம் வெளிப் படுத்துகின்றது, ஆனால் இந்த பகுதியில் எல்லா கேள்விகளுக்கும் உங்களுக்கு ஒருபோதும் பதில் இல்லை. உங்களுக்கு கிடைத்தால், விசுவாசம் என்பது அவசியம் இல்லை. சில காரியங்கள் நமக்கு வெளிப்படுத்தப்பட்டு, சில வெளிப்படுத்தப்படவில்லை என வேதாகமம் தெளிவாக கூறுகின்றது:

> **மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள். வெளிப்படுத்தப் பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்.**
> **(உபாகமம் 29:29)**

குணமாக்குதல் மற்றும் விடுதலை ஊழியத்தில், பதிலளிக்கப்படாத கேள்விகளை ஒருபுறம் வைத்து விட்டு, மறைமுகமான காரியங்களை தேவனிடத்தில் விட கற்றுக்கொள்ளல் வேண்டும்.

இரட்சிப்பைப்போன்று சுவிசேஷத்தின் ஒரு பகுதியே குணமாக்குதல் மற்றும் விடுதலையின் ஊழியமாகும். நீங்கள் ஒருவருக்கு குணமாக்குதல் மற்றும் விடுதலையின் ஊழியத்தை செய்யும்போது, சிலர் பெறாவிட்டால், நீங்கள் மேல்நோக்கி செல்லுவதற்கு சோதனைக்குட்படுவீர்கள். ஆனால் இதை கவனத்திற் கொள்ளுங்கள்: வசனத்தை கேட்கும் அனைவரும் இரட்சிப்படையாத காரணத்தினால் நீங்கள் இரட்சிப்பை போதிப்பதை நிறுத்தியுள்ளீர்களா?

அனைவரும் குணமாக்குதல் பெறாத காரணத்தினால் நீங்கள் குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான ஊழியத்தை ஏன் சீக்கிரத்தில் நிறுத்தியுள்ளீர்கள்? குணமாக்குதல் மற்றும் விடுதலை ஊழியத்தில் அநேக விதமாக, பெருமை புகுந்துவிடும். வியாதியுள்ள நபருக்காக நீங்கள் ஜெபித்து அவர் குணமாகாவிட்டால் நீங்கள் சங்கடப்படுகின்றீர்கள். இது வெளியரங்கமான காரியமானதால் மற்றவர்கள் பார்க்கின்றார்கள். சிலர் இரட்சிப்பிற்கு பிரதியுத்தரவு செய்யப்பட்டு, இரட்சிக்கப்படாமல் போனால் அது மக்களுக்கு தெரியாது, ஏனெனில் அது உள்ளரங்கமான காரியமாகும். மக்கள் வெளியரங்கமாக காணுபவற்றை உங்களுடைய பெருமை தாக்கமுறச்செய்யும்.

இரட்சிப்பின் பிரதியுத்தரவுக்கு தாக்கமுறச்செய்யும் காரணிகளின் சித்தத்திற்குமேல், குணமாக்குதலை தாக்கமுறச்செய்யும் அனைத்து ஸ்திரமின்மைக்கும் உங்களுக்கு ஒரு போதும் பதில் கிடையாது. சிலர் இரட்சிக்கப்பட்டு, சிலர் இரட்சிக்கப்படுவதில்லை. சிலர் குணமாக்கப்பட்டு, சிலர் குணமாகுவ-தில்லை. எவ்வாறாயினும், குணமாக்குதல் மற்றும் விடுதலையை தாக்கமுறச்செய்யும் சில ஸ்திர-மின்மைகளை வேதாகமம் வெளிப்படுத்துகின்றது. மற்றவர்கள் குணமாக்குதலை பெறுவதற்காக நீங்கள் கிரியை செய்து உதவும்படியாக இவைகளை நீங்கள் விளங்கிக்கொள்ளுதல் முக்கியமான-தாகும்.

இங்கு சில முக்கியமான பொதுவான ஸ்திரமின்மைகள் காட்டப்பட்டுள்ளது:

## போதனை இன்மை

குணமாக்குதலை குறித்தான அறிவின்மை, அதன் கொள்கைகள், ஆதாரங்கள், விசுவாசத்தை எவ்வாறு அணுகுதல் மற்றும் அதை பெறுதல் ஆகியவை குணமாக்குதலை தாக்கும். தேவன் கூறி-னார்:

> **என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள். (ஓசியா 4:6)**

இயேசு கூறினார்:

> **நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள். (மத்தேயு 22:29)**

சில மக்கள் தேவனுடைய வசனத்தையும் அவருடைய வல்லமையையும் விளங்கிக்கொள்ளாத காரணத்தினால் குணமாக்குதலை பெறுவதில்லை.

குணமாக்குதல் சம்பந்தமாக தேவனுடைய வார்த்தையை கேட்பதால் விசுவாசத்தினூடாக குணமாக்குதல் வருகின்றது (ரோமர் 10:17). வேதாகமம் தேவனுடைய வார்த்தையை விதையாக அழைக்கின்றது. சில மக்கள் குணமாக்குதலின் வசனத்தை தங்கள் இதயத்தில் விதையாமல், குணமாக்குதல் என்னும் அறுவடையை செய்ய முற்படுகின்றது. விதை உங்களிலிருக்கும்வரை அதனால் கிரியை செய்ய முடியாது. “நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்” என கூறுவதற்கு முன், “நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு...” என தேவன் முதலில் கூறினார். வசனம் குணமாக்குதலை மேற்கொள்ளுகின்றது.

இரட்சிப்பின் வசனத்தை குறித்து கேட்காத எத்தனை மக்கள் இரட்சிப்பை பெறுவார்கள்? இரட்சிப்பை குறித்து செய்தியின் முக்கிய காரியங்கள் இவைகளாக இருக்குமாயின் எத்தனைபேர் இரட்சிப்படைவார்கள்?

-நீங்கள் இரட்சிப்பு அடைவது தேவனுடைய சித்தம் அல்ல.
-உங்களுடைய பாவம் தேவனுடைய மகிமைக்காகவே.
-இரட்சிப்பின் காலம் கடந்த காலத்திற்கானது.

குணமாக்குதலை குறித்து இந்த காரியங்களை நாம் இன்னும் கேட்கலாம்:

-நீங்கள் இரட்சிப்பு அடைவது தேவனுடைய சித்தம் அல்ல.
-உங்களுடைய பாவம் தேவனுடைய மகிமைக்காகவே.
-இரட்சிப்பின் காலம் கடந்த காலத்திற்கானது.

இரட்சிப்பை குறித்து போதிக்கப்பட்டதைப்போல மக்கள் குணமாக்குதலையும் குறித்தான தேவனுடைய வசனம் போதிக்கப்படல் வேண்டும். நாற்திசைகளிலும் அறுவடையை கொண்டுவரும் குணமாக்குதலை குறித்த வசனத்தின் விதை இதுவே.

## விசுவாசமின்மை

விசுவாசமின்மைக்கான விளைவுகளானது...

-தேவன் குணமாக்குபவர் அல்ல என எண்ணுதல்.
-தேவன் குணமாக்குபவர், ஆனால் என்னை குணமாக்கும்படி தேர்ந்தெடுக்கவில்லை என எண்ணுதல்
-தேவன் குணமாக்குபவர், என்னை குணமாக்கலாம், ஆனால் இப்போது அல்ல.
-குணமாக்குதலை தடுக்கும் விசுவாசமில்லாத சூழ்நிலைகள்.

விசுவாசமின்மை தேவனுடைய கிரியைகளை எவ்வாறு தடுத்தது என பல வேதாகம உதாரணங்கள் காணப்படுகின்றன. நாசரேத்து நகரத்தில் இயேசு....

> **அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை. (மத்தேயு 13:58)**

மக்களுடைய அவிசுவாசத்தின்நிமித்தம் இயேசு ஆச்சரியப்பட்டார்:

> **அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு... (மாற்கு 6:6)**

வேதாகமம் கூறுகின்றது:

> **ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன். சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கி-றான்.**
>
> **அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக.**
>
> **இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான். (யாக்கோபு 1:6-8)**

ஜெபஆலயத்தலைவனுடைய மகளுடைய குணமாக்குதலை குறித்து மாற்கு 5:35-40ல் வாசிக்க. இயேசுவின் குணமாக்குதலின் ஊழியத்தின் போது விசுவாசமற்ற சூழ்நிலைகளைகளையுடையவர்கள் அறைகளை விட்டு வெளியேற்றப்பட்டதை நீங்கள் கண்டுக்கொள்ளலாம்.

எமது சபைகளில் விடுதலை மற்றும் குணமாக்கலை பார்க்காமை தேவனுடைய கிரியைகளில் சாதாரண விசுவாசமின்மையே முக்கிய காரணம் ஆகும். நாம் ஒவ்வொருவருக்கொருவர் அங்கத்தவராயிருக்கின்றோம். எமது ஆவிக்குரிய சரீரத்தின் ஒருபகுதி குணமாக்குதலை விசுவாசியாவிட்டால், எமது உள்ளத்தின் நடுவே ஊற்றப்படுபவற்றை இந்த விசுவாசம் தடுத்துவிடும்.

வேதாகமம் கூறுகின்றது, “விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன...” இந்த வசனம் விசுவாசிகளை (சபை) குறித்து பேசுகின்றது. தனி நபரை குறிப்பதாக “அவரை விசுவாசித்தால்” என வேதாகமம் கூறவில்லை. அப்போஸ்தல புஸ்தகத்தின் பதிவின் குணமாக்குதலின் விளைவானது ஒன்றோ அல்லது இரண்டோ சுவிசேஷகர்களின் விசுவாசத்தினால் அல்ல. இது சபையின் பூரணமாக நிரப்பப்பட்ட விசுவாசத்தின் ஆவியினாலாகும்.

நாசரேத்தில் இயேசு அவர்களுடைய (பொதுவான) விசுவாசமின்மையால் பெரிதான கிரியைகளை செய்யவில்லை, எம்முடைய பொதுவான விசுவாசமின்மையும் குணமாக்குதலை தடுக்கும் என்பது உண்மை அல்லவா? ஆரம்ப கால சபை ஜெபத்தில் தரித்திருந்தமைக்கு எதிராக இன்றைய அநேக சபைகள் காணப்படுகின்றன. வியாதிக்கேற்ற வேதாகமத்தின் குறிக்கோளை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. குணமாக்குதலை குறித்தான தேவனுடைய வார்த்தை அவர்களுக்கு போதிக்கப் படவில்லை.

இன்னும், குணமாக்குதல் ஊழியத்தில் குணமாக்குதலை பெற முயற்சித்து தோல்வியுற்றவர்களின் மேல் குற்றச்சாட்டின் கைகளை நீட்டுகின்றனர். ஆனால் இது பெரிதான பிரதியுத்தரவின் பொதுவான தோல்வி ஆகும்.

அடிப்படை சபைகளில் நாம் அநேக இரட்சிப்பை காண்கின்றோம், ஏனெனில் இரட்சிப்பை குறித்தான உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாலாகும். ஆனால் நாம் குணமாக்கலை காண முடிவதில்லை, ஏனெனில் ஊழியத்தில் பாரம்பரியம், புறக்கணிப்பு, விசுவாசமின்மை ஆகியவற்றின் பொதுவான காணப்படுதலாகும்.

குணமாக்குதல் மற்றும் விடுதலையின் இரட்சிப்பின் முழு சுவிசேஷத்தை போதித்தவர்கள் கூட “நாசரேத்தில்” அவிசுவாசத்தினால் ஊழியம் செய்ய தடைப்பட்டார்கள். தேவனுடைய மக்கள் என்ற வகையில், இயேசுவிடம் வந்த வியாதியஸ்த மனிதனைப்போல், நாம் “விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்...” (மாற்கு 9:24) நாம் கதறியழ வேண்டும். பொதுவான அவிசுவாசம் குணமாக்கும் ஊழியத்தின் ஊற்றை தாக்கமுறச்செய்யாவிடின், நாசரேத்தில் ஏன் இயேசு முழுமையான ஊழியத்தை செய்யவில்லை?

## நம்பிக்கையின்மை

தேவனால் ஒரு காரியத்தை செய்யமுடியாத அல்லது சித்தமில்லாததின் குறிக்கோள் நம்பிக்கையின்மை ஆகும். விசுவாசமின்மை உங்களுக்கு விசுவாசமுள்ளது என அவசியமாக அர்த்தப்படுத்துவது அல்ல. உதாரணத்திற்கு, நாஸ்தீகன் தேவனை நம்புவதில்லை. இது யதார்த்தவாதியின் நடுநிலை. இந்த யதார்த்தவாதியின் விசுவாசமின்மையின் பகுதி அவன் தேவனை விசுவாசிக்கின்றான் என அர்த்தம் இல்லை.

நீங்கள் அவிசுவாசத்தை தேவனிலுள்ளான விசுவாசமாக மாற்ற வேண்டும், ஏனெனில் வியாதியஸ்தனை எழுப்பும் விசுவாசத்தின் ஜெபம் இதுவாகும் (யாக்கோபு 5:15). நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகி, விசுவாசத்தின் வார்த்தைகளை பேசி, விசுவாசத்தின்படி கிரியை செய்தல் வேண்டும். நீங்கள் பார்வைக்கு அல்லாமல், விசுவாசமுள்ளவர்களாய் நடத்தல் வேண்டும். "பார்வைக்குள்ளாக நடத்தல்" என்பது உங்களுடைய சரீரத்தை அல்லது அடையாளங்களின் நிலைகளை பார்த்தல் ஆகும். சாத்தான் உங்களுடைய அடையாளங்களையும், மற்றவர்கள் குணமாக்கப்பட்டதாக உரிமை கோரி குணமா-காதவர்களையும் பார்ப்பதற்கூடாக உங்களுடைய குணமாக்குதலை தடுப்பதற்கு முற்படுகின்றான்.

உங்களுடைய விசுவாசத்தினாலுள்ள விசுவாசத்தினாலும் அல்லது மற்றவர்களிலுள்ள விசுவாசத்தினா லுள்ள விசுவாசத்தினாலும் அல்ல. விசுவாசம் குணமாக்கலை செய்யாது. தேவனே குணமாக்குபவர் ஆவார். பவுல் சப்பாணியின் விசுவாசத்தினால் தேவனால் குணமாக்க முடியும் என உணரப்பட்டார் (அப்போஸ்தலர் 14:8-10). குணமாகுவதற்கு "மாபெரும்" விசுவாசம் அவசியம் அல்ல. கடுகளவான விசுவாசம் மிகவும் வல்லமையுள்ளது என இயேசு கூறினார். இயேசு அவரவருக்குள்ள விசுவாச மட்டமுள்ள மக்களை சந்தித்தார். அவருடைய சரீரத்தின் பிரசன்னம் எங்கெங்கு தேவையென விசுவாசித்தார்களோ, அங்கு அவர் சென்றார். இது அவசியமல்ல என்று எங்கு விசுவாசித்தார்களோ, அங்கு அவர் தூரத்திலிருந்து வசனத்தை பேசினார், அப்போது குணமாக்குதல் நடைபெற்றது.

வியாதியஸ்தர் குணமாகாத போது, மக்கள் விசுவாசமின்மையே பொதுவான காரணம் என பொதுவாக கூறினர். ஆனால் இந்த பாடத்தில் நீங்கள் படித்த பிரகாரம், இதற்கு பல்வேறுப்பட்ட காரணிகள் இருந்தன. விசுவாசமில்லாமல் குணமாக்கலை எதிர்பார்த்த மக்களை இயேசு ஒருபோதும் கண்டிக்கவில்லை. வேதாகம பதிவின்படி, சில சமயங்களில் விசுவாசமே குணமாக்குதலின் காரணி என்பதோடு, வேறு சில சமயங்களில் விசுவாசம் காரணியாக அமையவில்லை.

## வல்லமை இன்மை

பரிசுத்த ஆவியின் வல்லமை வரும்வரை அவர்கள் எருசலேமின் தரித்திருக்கவேண்டும் என இயேசு தமது சீஷர்களுக்கு கட்டளையிட்டார். ஊழியத்தில் வல்லமையில்லாத காரணத்தினால் குணமாக்குதல் நடைபெறவில்லை. அப்போஸ்தலர் 4ல் விபரிக்கப்பட்டுள்ளப்படி பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ் நானத்தின் வல்லமையை கூட அவர்கள் பெறவில்லை. வல்லமையான இடத்தில் வியாதியஸ்தரிடம் அன்பையும், அனுதாபத்தையும் கூட பரிமாறினர். குணமாக்குதலின் ஜெபத்தைவிட தைரியமூட்டும் ஜெபத்தை அவர்கள் ஜெபித்தனர். கொள்கையின் தவறுகள் அல்லது பாரம்பரியத்தின் விளைவு வல்லமையின்மைக்காக இருக்கலாம்.

## தனிப்பட்ட அறிக்கையிடப்பாடாத பாவங்கள்

சில சயமங்களில் தனிப்பட்ட பாவங்கள் மற்றும் வியாதி ஆகியவற்றிற்கிடையான நேரடி தொடர்புகள் காரணிகள் என வேதாகமம் உறுதிப்படுத்துகின்றது:

> **நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கை யிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும்பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக்கோபு 5:16)**

"என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்" என தாவீது கூறுகின்றார்.

ஒரு நபர் சாத்தானுடைய கிரியைகளை தமது ஆத்துமாவில் பற்றிக்கொண்டிருப்பாராயின், சரீரத்தில் சாத்தானுடைய கிரியைகளை அழிக்க தேவன் வாக்குறுதியளிக்கவில்லை. வியாதியஸ்த ஒருவரின் இருதயத்தில் அக்கிரமம் காணப்படுமாயின், அவர் குணமடைவதில்லை. ஊழியம் செய்யும் ஒருவரின் இருதயத்தில் அக்கிரமம் காணப்படுமாயின், தேவன் அவனுடைய ஜெபத்தை கேட்காத காரணத்தி-னால் குணமாக்குதல் நடைபெறுவதில்லை.

மன்னிப்பு கொடுக்காத ஆத்துமா அல்லது காழ்ப்புணர்ச்சி வைத்திருத்தல் குணமாக்குதலை மறைக்கும். இயேசு கூறினார் "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்." நீங்கள் மற்றவர்களை மன்னியாதிருக்கும் போது, தேவன் உங்களை மன்னியார், அப்போது அவரால் முழுமையாக உங்களை குணமாக்க முடியாது, ஏனெனில் குணமாக்குதலுக்கு ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்தின் முழுமை அவசியமாகும்.

## பூரணப்பட மறுக்கப்படல்

பெதஸ்தா குளத்தினருகே இருந்த மனிதனிடம் இயேசு கேட்டார்:

**சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா?' (யோவான் 5:6)**

நாம் குணமாக்குதலையும், விடுதலையையும் மட்டுமே எதிர்பார்க்கின்றோம். தேவன் முழு மனிதனிலும் சம்பந்தப்பட்டு, சரீரம், ஆவி, ஆத்துமாவை குணமாக்க விரும்புகின்றார்.

மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரத்தினால் ஆக்கப்பட்டுள்ளப்படியால், முழுமையாகுதலின் கொள்கையானது இவ்வனைத்தோடும் தொடர்புபடுவதாக அமையும். இரட்சிப்பிற்கூடாக குணமாக்காவிட்டால், ஆவி, ஆத்துமாவிற்கூடான பௌதீக குணமாக்குதலை நாம் வலியுறுத்த முடியாது. தேவன் ஆவியாய் இருக்கின்றார். உங்களுடைய ஆவியிற்கூடாக அவர் உங்களை தொடர்புறுகிறார். உங்களுடைய ஆவி உங்களுடைய பௌதீக, மனரீதியான, ஆவிக்குரிய, உணர்வுபூர்வமான வாழ்க்கையை ஆளுகின்றது. நீங்கள் ஆவிக்குரிய ரீதியில் தொடங்கப்பட்டுள்ளதால், சரீரத்தின் குணமாக்குதல் ஆவியிலிருந்தே ஆரம்பிக்கும்.

தேவன் மனிதனை படைத்தபோது, பூமியிலே அவனுடைய வாழ்க்கையை ஆளுவதற்கான வல்லமை மனிதனுடைய ஆவியே ஆகும். இது அவர்களின் மனம் மற்றும் உடல் மீதான ஆதிக்கத்தை கொண்டு, தேவன் வாழுவதற்கான முழு மனிதனை ஒன்றுப்பட அவர்களை கொண்டு வருவதாகும். உண்மையில், ஏதேன் தோட்டத்தில், மனிதன் தேவனுடன் நெருங்கிய ஆவிக்குரிய தொடர்பில் இருந்தான்.

ஏதேனில் ஞானத்தை அறியத்தக்க விருட்சத்தை தடைசெய்வதற்கு, தேவன் பௌதீக மாற்றும் அறிவார்ந்த ஞானத்தின் மட்டத்தோடு மனிதன் வாழுவதற்காக கொடுத்தார். மனிதன் பாவம் செய்த போது, அவனுடைய ஆவி குறைவானதாக்கப்பட்டு, அவனுடைய அறிவாற்றலின்படி தேர்தெடுத்து வாழ அனுமதிக்கப்பட்டது. அவனுடைய மனம் ஆவியிற்கு மேலாக உயர்த்தப்பட்டு மேற் கொள்ளும்போது, மனிதனுடைய ஆவியின்பகுதி இறந்தது. (அல்லது வாழ்க்கைக்கும் தேவனுடைய பிரதியுத்தரவிற்கு ஆதாரமாக இயங்குவதற்கு). அந்த நேரத்திலிருந்து, ஆவி, ஆத்துமா, சரீரத்திற்கு பிரிவு ஏற்பட்டதோடு, இது மனிதன், அவனுடைய சூழ்நிலை, அவனுடைய சிருஷ்டிகர் ஆகியவற்றிற் கிடையிலான நல்லுறவின்மையை கொண்டுவந்தது.

குணமாகுதல் வியாதியின்மையை விட அதிகமான காரியமாகும். இது சுக சரீரத்தை விட அதிகப்படியானதாகும். இது சிருஷ்டிகர், சூழ்நிலைகள், மற்றும் ஏனைய அனைத்து பகுதிகளின் நல்லுறவோடு அனைத்து பகுதிகளிலும் (சரீரம், ஆத்துமா, ஆவி, மனம், மற்றும் உணர்வுகள் ஆகியவை) நன்றாக செயல்பட திரும்புதலாகும்.

## தீர்மானங்களும், திட்டங்களும் இன்மை

பெதஸ்தா குளத்தினருகே இருந்த மனிதனிடம் இயேசு கேட்டார்:

> **'சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா?' (யோவான் 5:6)**

இந்த சமயத்தில் சப்பாணி ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டி இருந்தது. விசுவாசிப்பதா அல்லது இல்லையா, சில மனிதர்கள் குணமாகுவதற்கு தேவைப்படவில்லை. அவர்கள் வியாதியஸ்தராய் இருப்பதால் அனுதாபம், இரக்கம் மற்றும் கவனத்தை பெற விரும்புகின்றனர். சிலர் ஓய்வூதியங்கள் மூலம் மருத்துவ உதவிகளை அல்லது சட்ட அங்கிகாரங்களை பெறுகின்றனர், அதை இழப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை. சிலர் தேவனுடைய சித்தத்திற்கூடாக செல்ல ஆவலாயிருக்கின்றார்கள், ஆனால் குணமாகுவதற்கு அல்ல. சில மக்கள் வேலை செய்வதை தவிர்ப்பதற்கு ஒரு காரணியா-கவும், மற்றவர்களை கையாளுவதற்காகவும் வியாதியை உபயோகிக்கின்றனர்.

இந்த நிலைகளை இரக்கத்துடன் கையாளுதல் வேண்டும். இந்த உணர்வுகள் இருப்பதால் மக்களை குற்றவாளியாக தீர்க்காதிருங்கள். அவர்கள் நல்ல வாழ்நிலைக்கு வரும் வரை அவர்களுடைய வியாதி உணர்வுபூர்வமாக செல்வதற்கு அனுமதியளிக்கும்.

## விண்ணப்பித்தல்களிலுள்ள பிரச்சனைகள்

குணமாக்குதலுக்காக விண்ணப்பிப்பதில் சிலசமயங்களில் உள்ள பிரச்சனைகள் அதன் வெளிப் படுத்தலுக்கு தடையாக காணப்படலாம்.

### கேட்காதிருத்தல்:

முதலாவதும், முக்கிய அடிப்படையானதும், குணமாகுவதற்கு நாம் சில சமயங்களில் கேட்காதிருப்பதாகும். நாம் மருத்துவ உதவிகளுக்கோ அல்லது நண்பர்களுடைய தேற்றுதலுக்கோ திரும்புகின்றோம்.

> **நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை. (யாக்கோபு 4:2)**

### குறிப்பிட்டு கேட்காதிருத்தல்:

சில சமயங்களில் ஜெபங்கள் மறைக்கப்பட்டிருக்கும், ஏனென்றால் அவைகள் குறிப்பிட்டவைகள் அல்ல:

> **நீங்கள் விண்ணப்பம்பண்ணியும்... (யாக்கோபு 4:3)**

நீங்கள் "தகாதவிதமாய்" என்பது உங்களுடைய ஜெபங்களில் குறிப்பிடும்படியாக அல்ல. நீங்கள் குறித்த நிலையை மறைக்க கூடாது.

## தவறான குறிக்கோளோடு கேட்டல்:

சிலசமயங்களில் நாம் தவறான குறிக்கோளோடு கேட்கின்றோம்:

> **நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள். (யாக்கோபு 4:3)**

சில மக்கள் குணமாக்கப்பட வேண்டுகின்றனர், ஆனால் அவர்களுடைய பாவமான, உலகப்பிரகாரமான மற்றும் அர்ப்பணிக்கப்படாத வாழ்க்கை வழிகளிலிருந்து மாறுவதற்கு விரும்புவதில்லை. அவர்கள் குணமாகி மீண்டும் அவர்களுடைய வேலையை செய்வதற்கு வாஞ்சிக்கின்றனர்.

மக்கள் இந்த கேள்விகளுக்கு கவனம் செலுத்துகின்றனர்: நீங்கள் குணமடைவதற்கு உங்களுக்கு வேண்டிய இலக்கு என்ன? குணமாகினால் நீங்கள் சுய வாழ்க்கைக்குள் திரும்ப முடியுமா? தேவன் உங்களுக்கான விசேட குறிக்கோள்களை அடைவதற்கு விட நல்ல காரியங்களை மட்டும் செய்வதற்கு நீங்கள் முற்படுகின்றீர்களா?

## உங்களுடைய ஜெபங்கள் மறைக்கப்பட்டிருத்தல்:

உங்களுடைய ஜெபங்களிற்கு பதில்கள் வழங்கப்படாமல் மறைக்கப்பட்டிருப்பதற்கு பல்வேறுப்பட்ட வேறு காரணிகளை வேதாகமம் குறிப்பிடுகின்றது:

-ஏதாவது வகையான பாவங்கள்: சங்கீதம் 66:18; நீதிமொழிகள் 28:9; ஏசாயா 1:15; 59:1-2
-இருதயத்தின் விக்கிரகங்கள்: எசேக்கியேல் 14:1-3
-மன்னிப்பை கொடாத ஆவி: மாற்கு 11:25; மத்தேயு 5:23
-சுயநலம், தவறான குறிக்கோள்கள்: நீதிமொழிகள் 21:13; யாக்கோபு 4:3
-வல்லமைக்கான பசி, சாதகமான ஜெபங்கள்: யாக்கோபு 4:2-3
-திருமண துணைவர்களோடான தவறான அணுகுமுறைகள்: 1பேதுரு 3:7
-சுய-நீதி: லூக்கா 18:10-14
-விசுவாசமின்மை: யாக்கோபு 1:6-7
-கிறிஸ்துவிலும் அவருடைய வழியிலும் நடவாதிருத்தல்: யோவான் 15:7
-அர்ப்பணிப்பு இன்மை: நீதிமொழிகள் 21:13
-பாசாங்கு, பெருமை, அர்த்தமற்றவற்றை திரும்பசொல்லுதல்: மத்தேயு 6:5; யோபு 35:12-13
-தேவனுடைய சித்தத்திற்கு ஏற்ப கேட்காதிருத்தல்: யாக்கோபு 4:3
-இயேசுவினுடைய நாமத்தினால் கேட்காதிருத்தல்: யோவான் 16:24
-சாத்தானுடைய தடைகள்: தானியேல் 10:10-13; எபேசியர் 6:12
-இராஜ்ஜியத்தை முதலாவது பார்க்காதிருத்தல்: மத்தேயு 6:33

## விடாமுயற்சி இன்மை

சில சமயங்களில் நாம் ஜெபத்தில் நீண்ட நேரம் நிலைத்திருப்பதில்லை. பவுல் தனக்கு நோய் இருந்த போதிலும் (கலாத்தியர் 4:13-14) பிரசங்கிக்க வேண்டி இருந்தது. இந்நோய் பிற்பாடு குணமாக்கப்பட்டது. ஏற்கனவே மரிக்கப்பெற்ற எப்பாப்பிரோதீத்துவிற்கான ஜெபத்திற்கு உடனடியாக பதில் இல்லை

(பிலிப்பியர் 2:27) அத்தோடு துரோப்பீமும் வியாதியஸ்தவராய் விடப்பட்டு வந்தார் (2 தீமோத்தேயு 4:20). அவர்கள் இருவரும் சுகமடைந்தனர். (பவுல் வியாதியஸ்தவர்க்காய் தொடர்ந்து ஜெபித்த போதும் உடனடியாக குணமாக்குதல் நடைபெறவில்லை என்பதை குறித்துக்கொள்ளுங்கள்).

சில மக்கள் குணமாக்குதலுக்கு ஒரு தடவைக்கு மேல் கேட்டால் அது விசுவாசமின்மை என எண்ணு-கின்றார்கள். தொடர்ச்சியான ஜெபம் விசுவாசமின்மையை காட்டும் என இயேசு போதிக்கவில்லை. அவர் தொடர்ச்சியான ஜெபத்தை ஆதரித்தார். லூக்கா 11:1-13ல் சிநேகிதனுடைய உவமையில் தொடர்ச்சியான ஜெபத்தின் முக்கியத்துவத்தை குறித்து போதிக்கின்றது (5-8) மற்றும் விதவை மற்றும் நியாயாதிபதி (1-8). தானியேலுடைய உதாரணமும் தொடர்ச்சியான ஜெபத்தை ஆதரிக்கின்றது. அவன் ஜெபித்த முதலாவது ஜெபத்தை தேவன் கேட்டார், ஆனால் உத்தரவோடு சென்ற தூதனை சாத்தான் தடுத்தான்.

எலியா தீர்க்கதரிசி பரலோகத்திலிருந்து அக்கினி இறங்குவதற்காக ஒரு தடவை ஜெபித்தார், ஆனால் மழை பெய்யும்படியாக ஏழு தடவைகள் ஜெபம் செய்தார். நீங்கள் குணமாக்குதலுக்கு முதல் தடவை செய்யும் ஜெபத்திற்கு பதிலளிக்கப்படாவிட்டால் சோர்ந்து போக வேண்டாம். ஜெப மட்டங்களில் "கேட்டல், தேடுதல், தட்டுதல்" ஆகிய மட்டங்கள் உண்டென்பதை மறக்க வேண்டாம். சில வேளைகளில் நீங்கள் கேட்கும்போது உடனடியாக பதிலளிக்கப்படும். மற்ற சமயங்களில் பதில் கிடைப்பதற்கு தேடி, தொடர்ந்து தட்டுதல் வேண்டும்.

பௌதீக உலகில், மக்கள் வைத்தியர்களையும், வைத்திய நிலையங்களையும் அவர்களுடைய பௌதீக பிரச்சனை தீர்க்கும்வரை பல தடவைகள் செல்வார்கள். ஏன் தெய்வீக சுகத்தை தொடர்ந்து தேடுவதற்கு ஊக்கம் இல்லாதிருக்கின்றார்கள்?

ஞாபகத்தில் கொள்ளுங்கள்: பௌதீக ரீதியான வெளிப்படுத்தப்பட்ட ஆவிக்குரிய யுத்தமானது சரீரத்திற்கான யுத்தமாகும். உங்களுடைய விண்ணப்பங்கள் கேட்கும்வரை ஜெபத்தில் விடாமுயற்சியாக தொடருங்கள். உங்களுடைய ஆவியில் அந்த உறுதியை அறிந்தால், இறுதி விளைவை காணா விட்டாலும் தேவனை துதிக்க தொடங்குங்கள்:

-யோசபாத்தும் இஸ்ரவேலின் குமாரர்களும் அவர்களுடைய ஜெபத்திற்கான பதிலை காணும் முன்னரே தேவனை பாரிய சத்தத்துடன் புகழ ஆரம்பித்தார்கள்.

-லாசரு எழுப்பப்பட முன்னரே இயேசு தேவனுக்கு நன்றி செலுத்தினார்.

-ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தத்தின் குமாரன் அறிவிக்கப்பட்டது, அவன் ஜெபத்தில் தொடர்ந்து இருக்கவில்லை. அவன் விசுவாசித்து தேவனை மகிமைப்படுத்தினார்.

## குணமாக்குதலின் செயற்பாட்டில் கீழ்ப்படிவின்மை

குணமாக்கும் செயற்பாட்டில், சிலவேளைகளில் தேவன் கொடுக்கும் ஆலோசனைகள் இயற்கையான மனதிற்கு முட்டாள்தனமாக காணப்படலாம். உதாரணத்திற்கு, நாமான் குணமாகுவதற்கு சேற்று நதியில் கழுவும்படி தேவன் கூறினார் (2 ராஜாக்கள் 5:1-14). சிலவேளைகளில் சாதாரண கீழ்ப்படிவின் நடத்தை உங்களுக்கும், அற்புதத்திற்கும் இடையில் நடைபெறலாம்.

## கிறிஸ்துவினுடைய சரீரத்தை குறித்த பூரண அறிவின்மை

கிறிஸ்துவினுடைய சரீரத்தை குறித்த பூரண அறிவில்லாதிருந்தால் அதன் விளைவு பலவீனமும், வியா-தியுமாகும். "அறிவடைதல்" "பரீட்சித்தல், ஆராய்தல், பகுத்தறிதல் ஆகியவற்றை விளங்கி படித்தல் வேண்டும் (1 கொரிந்தியர் 11:27-30ஐ பார்க்க. மேலதிக பின்புலத்திற்கு லூக்கா 22:2-20; மத்தேயு 26:27-29 மற்றும் மாற்கு 14:22-25ஐ பார்க்க.) கிறிஸ்துவின் சரீரத்தை அறிவதின் தோல்வி 3 வழிகளில் வரலாம்.

### இரத்தம் மற்றும் மாம்சத்தின் அர்த்தம்:

அவருடைய மாம்சத்திற்கும் இரத்தத்திற்கும் அடையாளமான அப்பம் மற்றும் திராட்சை கனியின் அர்த்தங்களை விளங்காதிருக்கும்போது நாம் அறிவடைய தோல்வியுறுகிறோம். யோவான் 6:66ல் இயேசு முதலாவது போதனையை தரும்போது இதுவே நடைபெற்றது, அத்தோடு அவரை தொடருவதிலிருந்து அநேகர் பின்வாங்கினர். அவர் போதித்த ஆவிக்குரிய அர்த்தங்களை அவர்கள் விளங்கிக்கொள்ள வில்லை. பாவமன்னிப்புக்கென இரத்தம் என பலர் அறிந்தபோதும், சரீரத்தை குறித்த உண்மையான அர்த்தத்தை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. சரீரம் குணமாகுவதற்கேயாகும், ஆகவே அதை சாப்பிட்டு சுகமடையலாம் (யோவான் 6:48-58 மற்றும் லூக்கா 6:48-51ஐ பார்க்க).

### சரீரத்திலுள்ள பிரிவுகள்:

கிறிஸ்துவின் சரீரத்தின் பகுதியாயிருக்கின்ற எமது உறவுகளாகிய சகோதர, சகோதரிகளின் உறவை அறிவதற்கு நாம் சிலவேளைகளில் தோல்வியடைகின்றோம். நாம் கிறிஸ்துவிற்குள் எமது சகோதர, சகோதரிகளோடு ஐக்கியமில்லாதிருக்கும்போது நாம் பரிசுத்தமில்லாது புசித்து, குடிக்கின்றோம். 1 கொரிந்தியர் 3:1-13ல் பவுல் விபரிக்கின்றார் பூலோகத்தோடு சம்பந்தப்படும் இப்பிரிவிலுள்ளவர்கள், வசனத்தின் மாம்சத்தை புசிக்க முடியாது (மாம்சம், சரீரம்).

### அபாத்திரமாய் புசித்தல்:

பரிசுத்தமில்லாத வாழ்க்கையோடு இராப்போஜனத்தை நாம் அபாத்திரமாய் புசிக்கின்றோம். இதன் விளைவு பலவீனமும், வியாதியுமாகும். இதனாலேயே பவுல் இராப்போஜனத்தை எடுக்கும் முன் ஆவியில் உங்களை பரீட்சித்து மனந்திரும்பும்படி கூறுகின்றார்.

## துரத்தப்படமுடியாத தீய வல்லமை

சிலர் குணமாக்குதலை பெறுவதில்லை, ஏனெனில் அவர்களுடைய வியாதி துரத்தப்படவேண்டிய தீய ஆவியின் கிரியையினால் ஆகும். அவர்களின் குணமாகுதலுக்கு அதிகப்படியான ஜெபங்கள் தேவைப்படுகின்றது. தீய ஆவியில் வல்லமையினால் பிடிப்பட்டிருக்கும் நிலைகளில் வேதாகமம் பதிவு செய்யப்பட்டுள்ளதாவது குணமாக்கும் பொருட்டு எதிரியாளர் துரத்தப்படல் வேண்டும்.

## தேவனுடைய கிரியைகளுக்கு எதிரிடையாக இருத்தல்

நீங்கள் சுகமாக்குதலுக்காக ஜெபிக்கும்பொழுது, தீய காரியங்களுக்கு விருப்பமுள்ளவர்களாக இருந்தால், நீங்கள் தேவனுடைய கிரியைகளுக்கு எதிரிடையாக இருக்கலாம். உதாரணத்திற்கு கசப்பு மற்றும் கோப தன்மையோடு நீங்கள் தொடர்ந்தும் இருந்தால் அல்சர், உயர் குருதி அழுத்தம், நரம்பு தளர்ச்சி போன்றவை பௌதீக சம்பந்தமான குணமாக்குதலை அது தாக்கமுற செய்யலாம்.

## இயற்கையான வளங்களை துஷ்பிரயோகம் செய்தல்

“நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்” என்ற கூறிய அதே தேவன், அவருடைய மக்களுக்கு ஆரோக்கியம் மற்றும் சுத்தமாகுதலுக்கு அநேக இயற்கை நியாயப்பிரமாணங்களையும் கொடுக்கின்றார். சில மக்கள் இந்த இயற்றை வளங்களை துஷ்பிரயோகம் செய்வதால் குணமாக்குதலை பெற்றுக் கொள்ளுவதில்லை. உதாரணத்திற்கு, தொடர்ச்சியாக சாராயத்தை குடிக்கும் ஓர் நபர் அவர் ஏன் அவருடைய ஈரல் சம்பந்தமான பிரச்சனைகளிலிந்து குணமாகவில்லை என ஆச்சரியப்படுதல். அவர்கள் தொடர்ச்சியாக புகைத்தலை செய்து, ஏன் தேவன் அவர்களுடைய நுரையீரல் புற்று நோயை குணமாக்கவில்லை என ஆச்சரியப்படுதல்.

## சாவுதலுக்கான குறித்த நேரம்

சாவுதலுக்கு குறித்த காலம் நியமிக்கப்பட்டுள்ளது என வேதாகமம் உபதேசிக்கின்றது (பிரசங்கி 3:2 மற்றும் எபிரெயர் 9:27). குணமாகுதல் மற்றும் விடுதலைக்கான அநேக அற்புதங்களை செய்த மாபெரும் தீர்க்கதரிசியாகிய எலிசா கூட, "வியாதியஸ்தவனாகி மரித்தான்" (2 இராஜாக்கள் 13:14).

நீங்கள் அதிகாரம் 14ல் குணமாக்கும் ஊழியத்தின் தீராத வியாதியிற்கு ஊழியம் செய்ய கற்கும்போது ஆலோசனைகளில் ஒரு பகுதியாக இந்த மாறுதல்களோடு எவ்வாறு சம்பந்தப்படுதல் என நீங்கள் கற்பீர்கள்.

## இறுதியான ஞாபகப்படுத்தல்

நாம் பல கேள்விகளோடு இந்த பாடத்தை திறந்துள்ளோம்:

> எந்த மாறுதல்கள் குணமாக்குதலை தாக்குகின்றது? ஏன் அநேக மக்கள் குணமாக மறுக்கின்றனர்? சிலர் குணமாக்கப்பட்டு ஏன் மற்றவர்கள் குணமாகுவதில்லை? சில சமயங்களில் ஏன் பூரணபடாதிருப்பதோடு, உலக கிறிஸ்தவர்கள் குணமாக்கப்பட்டு, ஏன் அநேக ஆர்வமுள்ள மற்றும் அர்ப்பணித்துள்ள மக்கள் இன்னும் குணமாகாமல் இருக்கின்றார்கள்?

இந்த பாடத்தில் நீங்கள் கற்ற மாறுதல்கள் குணமாக்குதல் மற்றும் விடுதலையை தாக்கும் சில காரணிகள் ஆகும். எப்போதும் ஞாபகத்தில் கொள்ளுங்கள், எவ்வாறாயினும்....

> **மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள். வெளிப்படுத்தப் பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்.**
> **(உபாகமம் 29:29)**

விசுவாசத்திற்கு தேவையானவை அதுவே: விசுவாசம். உங்கள் அனைத்திற்கும் பதில் இருக்குமாயின் உங்களுக்கு விசுவாசம் அவசியம் இல்லை. பதில் கொடுக்கப்படாத இடங்களில் அவருடைய வசனத்தின்படியே விசுவாசத்தினால் கிரியை செய்வதையே தேவன் வேண்டுகின்றார். எலியாவின் காலத்தில் அநேக குஷ்டரோகிகள் காணப்பட்டாலும் ஒருவரே குணமாக்கப்பட்டார் என லூக்கா 4:27 பதிவு செய்கின்றது. இது ஏன் என்று எமக்கு சொல்லப்படவில்லை.

குணமாக்குதல் மற்றும் விடுதலையில் அநேக வருடம் ஊழியம் செய்த பிரபல ஊழியர் ரெவ். எப். எப். போஸ்வோர்த் கூறியபிரகாரம் எமது குறிக்கோள் இவ்வாறு இருத்தல் வேண்டும்:

> *"நான் வாழும் ஜீவிய காலத்தில் இரட்சிப்பையோ அல்லது குணமாக்குதலையோ மற்ற மனிதனிடம் காணாவிடத்து, நான் ஒருவன் மட்டுமே எல்லா சுவிசேஷத்தையும் போதிக்கின்றேன். நிகழ்வுகளின் மீது அல்லாமல் (அனுபவம்) என்னுடைய கொள்கையின் மாற்றமுடியாத தேவ-னுடைய வசனத்திற்கு மேலான அடிப்படையில் நான் தீர்மானிக்கின்றேன்."*

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

..............................................................................................................................................

..............................................................................................................................................

2. "ஸ்திரமின்மைகளை" வரையறுக்க?

..............................................................................................................................................

..............................................................................................................................................

3. ஒவ்வொரு தனிதனி தாள்களிலும் குணமாக்குதலை தாக்கமுறச்செய்யும் கீழ்வரும் மாறுதல்களை சுருக்கமாக்குக:

போதனை இன்மை:
நம்பிக்கையின்மை:
விசுவாசமின்மை:
வல்லமையின்மை:
தனிப்பட்ட அறிக்கையிடப்பாடாத பாவங்கள்:
பூரணப்பட மறுக்கப்படல்:
தீர்மானங்களும், திட்டங்களும் இன்மை:
விண்ணப்பித்தல்களிலுள்ள பிரச்சனைகள்:
விடாமுயற்சி இன்மை:
குணமாக்குதலின் செயற்பாட்டில் கீழ்ப்படிவின்மை:
கிறிஸ்துவினுடைய சரீரத்தை குறித்த பூரண அறிவின்மை:
துரத்தப்படமுடியாத தீய வல்லமை:
தேவனுடைய கிரியைகளுக்கு எதிரிடையாக இருத்தல்:
இயற்கையான வளங்களை துஷ்பிரயோகம் செய்தல்:
சாவுதலுக்கான குறித்த நேரம்:

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. குணமாக்குதலை குறித்த வேதாகம கொள்கைகளை குறித்து மேலதிகமாக படியுங்கள்:

-மனிதன் குணமாக்குதலை மட்டும் பெற முற்படும்போது, இயேசு முழு மனிதனிலும் சம்பந்தப்பட விரும்புகின்றார். பெதஸ்தாவிலிருந்த முடவனை நோக்கி இயேசு கேட்டார், “சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா?”: யோவான் 5:6

-முழுமையாகாத, உடைந்த, வியாதியுடைய, எதிர்பாளர்களுடன் இயேசு ஊழியம் செய்ய வந்தார்: மத்தேயு 9:12; மாற்கு 2:17; லூக்கா 5:31

-முழுமையாவதற்கான ஆதாரம் இயேசுவே ஆகும்: யோவான் 5:15; அப்போஸ்தலர் 9:34

-இயேசுவை தொட்ட அனைவரும் பூரணப்படுத்தப்பட்டார்கள்: மத்தேயு 9:21-22; 14:36; மாற்கு 5:28-34

-மரண படுக்கையில் இருந்த வேலைக்காரனை இயேசு முழு மனிதனாக்கினார்: லூக்கா 7:10

-அவர் முடவனை பூரணமாக்கினார்: யோவான் 5:9

-தேவனுடைய வல்லமையிற்கூடாக, சீஷர்கள் முடவனை பூரணப்படுத்தினார்கள்: அப்போஸ்தலர் 9:34

-இயேசு உடலுறுப்புக்களை இழந்தவனை பூரணப்படுத்தினார்: மத்தேயு 5:31

-அவர் கைகளை பூரணப்படுத்தினார்: மத்தேய 12:31; மாற்கு 3:5; லூக்கா 6:10

-மக்கள் என்ன வியாதியில் இருந்தார்களோ அதிலிருந்து அவர்களை பூரணப்படுத்தினார்: யோவான் 5:6

-அவர்கள் முற்றுமுழுதாக பூரணமாக்கப்பட்டார்கள்: யோவான் 7:23

-பூரணமாக்கப்படுதல் தொடர்பான மக்களின் விசுவாசத்தை இயேசு வரவேற்றார். “அவர்க-ளுடைய விசுவாசத்தினால் அவர்கள் பூரணமாக்கப்பட்டார்கள்”: மத்தேயு 9:22; மாற்கு 5:34; 10:52; லூக்கா 8:48-50; 17:19

2. “பூரணமாக்கல்” என்னும் அர்த்தத்தை கொடுக்கும் புதிய ஏற்பாட்டின் கிரேக்க சொல்லை படிக்க:

பெயரெச்சம்:
ஹொலோஸ்: எல்லாம், அனைத்தும், ஒவ்வொன்றும்.
பாஸ்: எல்லாம்.

ஹாபாஸ்: எல்லாம், பூரணமாக.
ஹொலோக்லெரஸ்: பூரணமாக, முற்றும்.
ஹுஜியஸ்: எமது கட்டளையினால் வியாதியஸ்தனை குணமாக்கல்: மத்தேயு 12:13; 15:31; மாற்கு 3:5; 5:34; லூக்கா 6:10; யோவான் 5:4,6,9,11,14,15; 7:23; அப்போஸ்தலர் 4:10
ஹொலோடிலஸ்: பூரணமாக, முழுவதும், முற்றும், ஊடாக: 1 தெசலோனிக்கேயர் 5:23. மனிதனின் ஒவ்வொரு பகுதியையும் விரிவாக்குதல்.

வினைச்சொல்:
ஹுகியய்னோ: நல்ல ஆரோக்கியத்தோடு இருத்தல்; அவர்கள் பூரணமாயிருத்தல்; பூரணம், சத்தம், ஆரோக்கியம்.
சோசோ: காக்கப்பட, பூரணப்பட.
லாவோமய்: குணமாக, பூரணமாக்கப்பட செய்தல்.
இஸ்சுவோ: பலவானாயிருத்தல்.
டியாசோசோ: மீட்கப்பட.

3. இந்த கேள்வியை அவதானியுங்கள்: சரீரம், மனம், ஆவியில் உங்களை பூரணப்படுத்துவது என்ன?

..............................................................................................................................................

4. நீங்கள் ஊழியம் செய்த ஒருவருக்கு அல்லது உங்களுடைய குணமாக்குதலை தாக்கப்படுத்திய கீழ்வரும் ஸ்திரமின்மைகள் ஏதாவதென்றை நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா?

......... போதனை இன்மை
......... நம்பிக்கையின்மை
......... விசுவாசமின்மை
......... வல்லமையின்மை
......... தனிப்பட்ட அறிக்கையிடப்பாடாத பாவங்கள்
......... பூரணப்பட மறுக்கப்படல்
......... தீர்மானங்களும், திட்டங்களும் இன்மை
......... விண்ணப்பித்தல்களிலுள்ள பிரச்சனைகள்
......... விடாமுயற்சி இன்மை
......... குணமாக்குதலின் செயற்பாட்டில் கீழ்ப்படிவின்மை
......... கிறிஸ்துவினுடைய சரீரத்தை குறித்த பூரண அறிவின்மை
......... துரத்தப்படமுடியாத தீய வல்லமை
......... தேவனுடைய கிரியைகளுக்கு எதிரிடையாக இருத்தல்
......... இயற்கையான வளங்களை துஷ்பிரயோகம் செய்தல்
......... சாவுதலுக்கான குறித்த நேரம்

5. இந்த பாடத்தில் நீங்கள் கற்ற பிரகாரம், 4வது கேள்வியிலுள்ள பட்டியலுக்கு சென்று நீங்கள் பரீட்சித்த ஒவ்வொரு ஸ்திரமின்மைகளுக்கும் உங்களுடைய பிரதியுத்தரவு என்ன என்பதை பதியுங்கள்.

6. குணமாக்குதல் மற்றும் விடுதலை குறித்து பதிலளிக்கப்படாத கேள்விகள் உங்களிடம் உள்ளனவா? இருந்தால் அவைகள் என்ன?



..............................................................................................................................................

நீங்கள் பிற்பாடு விளங்கிக்கொள்ளுவது எங்கே?.......... அவ்வாறாயின், உங்களுடைய கேள்விக்கு எவ்வாறு பதிலளிக்கப்பட்டது என்பதை விபரியுங்கள்:

.......................................................................................................................................

இல்லையெனில், உங்களுடைய தற்போதைய பௌதீக நிலையை குறித்தான எதாவது கேள்விகள் இருந்தால், இந்த பாடத்திலுள்ள வாக்குத்தத்தத்தை ஞாபகத்தில் கொள்ளுங்கள்:

**மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள். வெளிப்படுத்தப் பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள். (உபாகமம் 29:29)**

7. குணமாக்குதலுக்கு கீழ்வருவனவற்றில் ஏதாவதொன்று உங்களுடைய ஜெபத்தில் மறைக்கப்பட்டுள்ளதா? இதில் பிரயோகிக்கப்பட்டுள்ளவற்றை பரீட்சிக்க:

......... ஏதாவது வகையான பாவங்கள்
......... இருதயத்தின் விக்கிரகங்கள்
......... மன்னிப்பை கொடாத ஆவி
......... சுயநலம், தவறான குறிக்கோள்கள்
......... வல்லமைக்கான பசி, சாதகமான ஜெபங்கள்
......... திருமண துணைவர்களோடான தவறான அணுகுமுறைகள்
......... சுய-நீதி
......... விசுவாசமின்மை
......... கிறிஸ்துவிலும் அவருடைய வழியிலும் நடவாதிருத்தல்
......... அர்ப்பணிப்பு இன்மை
......... பாசாங்கு, பெருமை, அர்த்தமற்றவற்றை திரும்பசொல்லுதல்
......... தேவனுடைய சித்தத்திற்கு ஏற்ப கேட்காதிருத்தல்
......... இயேசுவினுடைய நாமத்தினால் கேட்காதிருத்தல்
......... சாத்தானுடைய தடைகள்
......... இராஜ்ஜியத்தை முதலாவது பார்க்காதிருத்தல்

இந்த பிரச்சனைகளை தீர்க்க நீங்கள் என்ன செய்யலாம்?

.......................................................................................................................................

.......................................................................................................................................

# பகுதி ஐந்து

## குணமாக்குவதற்கான உபாயங்கள்

குணமாக்குதல் பெறுதல் மற்றும் ஊழியம் செய்வதற்கான உபாயங்களை இந்த பகுதியில் நீங்கள் கற்பீர்கள். நீங்கள் கற்பீர்கள்:

- எவ்வாறு குணமாக்குதல் ஊழியத்தை செய்வது மற்றும் பெறுவது?
- குணமாக்குதலை தொடரும் ஊழியம்.
- எல்லையற்ற குணமாக்குதல்.

இந்த பாடத்தின் ஆரம்பத்தில் நீங்கள் கற்ற தேவனுடைய இராஜ்ஜியத்தின் பதிலளிக்கப்படாத கேள்விகளை ஞாபத்தில் கொள்ளுங்கள்: குணமாக்குதலின் ஊழியத்தை நீங்கள் தொடங்கும்போது, குணமாக்குதலின் ஊழியம் உங்களில் தொடங்கப்படும்.

## அதிகாரம் பதினான்கு

# குணமாக்குதலின் ஊழியம்

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ குணமாக்குதலின் ஊழியத்தின் ஆரம்ப ஆயத்தங்களை பற்றி கலந்துரையாடவும்,
- ☐ குணமாக்குதலை ஊழியத்தின் எல்லைகளை சுருக்கமாக்கவும் முடியும்.

### பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

> **போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள். வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள். இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள். (மத்தேயு 10:7-8)**

## அறிமுகம்

இந்த பாடத்தில், எவ்வாறு குணமாக்கும் ஊழியத்தை செய்வது என படிக்கும்போது சரீரத்திற்கான யுத்தம் கடுமையாக்கப்படும். விடுதலையின் ஊழியத்தை எவ்வாறு செய்வதென அதிகாரம் பதினெட்டில் கற்பீர்கள்.

## ஆரம்ப ஆயத்தங்கள்

குணமாக்குதலின் ஊழியத்தை ஆரம்பிக்கும்முன் சில முக்கியமான ஆயத்தங்கள் உள்ளது. தேவனுடைய குணமாக்குதலின் வல்லமையில் உங்களை ஆயத்தப்படுத்துவதிலும், குணமாக்குதலின் ஊழியத்தை செய்யப்போகும் நபரையும் இது உள்ளடக்கும்.

### உங்களில் நீங்கள் ஆயத்தப்படல்:

குணமாக்குதலை குறித்து தேவனுடைய வார்த்தையை கேட்பதினூடாக விசுவாசம் வரும். உங்களுடைய சொந்த விசுவாசத்தை வளர்ப்பதற்கு, குணமாக்குதல் தொடர்பான வேதாகமத்தின் ஒவ்வொன்றையும் கற்க. புதிய நோக்கத்தோடு புதிய ஏற்பாட்டை வாசிக்க. இயேசு தமது சீஷர்களுக்கு எவையெல்லாம் செய்ய சொன்னாரோ, அவைகளை நீங்கள் செய்ய தொடங்குங்கள். அவர் என்ன செய்வார் என அவர் கூறியுள்ளாரோ, அதை அவரை செய்ய எதிர்பாருங்கள்.

அவருடைய வல்லமையிற்கூடாக வியாதியஸ்தரை உங்களால் குணமாக்க முடியும் என அவர் கூறியிருந்தால், அவர்கள் குணமாகவேண்டுமென எதிர்பாருங்கள். அவர்கள் பிசாசுகளை துரத்தும்படி கூறியிருந்தால், அவருடைய நாமத்தை கொண்டு அதை செய்து, அவைகள் உங்களை கீழ்ப்படிய எதிர்பாருங்கள். உங்களிடம் இல்லாத தனிப்பட்ட அனுபவங்களையும், மனிதர்களுடைய அனைத்து

போதனைகளையும் தள்ளி வையுங்கள். புதிய ஏற்பாடு என்ன சொல்லுகின்றதோ அதையே ஏற்றுக் கொள்ளுங்கள். அதை உண்மையாக ஏற்றுக்கொண்டு, அதன்படி கிரியை செய்யுங்கள். நீங்கள் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாயிருக்கின்றீர்கள் (2 கொரிந்தியர் 5:20). ஒரு ஸ்தானாபதி ஒரு நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் போது அந்நாட்டின் வசனங்களைகுறித்து ஒருபோதும் சந்தேகிக்க மாட்டார்.

ஊழியத்திற்கு முன் ஜெபித்து உபவாசமிருங்கள். அப்போஸ்தலர் 28:8ல் பவுலினுடைய உதாரணத்தை பாருங்கள். வல்லமையும் குணமாக்கும் அதிகாரமும் தேவனிலிருந்தே வருகின்றது என்ற போதிலும், அதனோடு தொடர்பிலிருத்தல் அவசியமாகும்! சில சாத்தானிய கட்டுக்கள் ஜெபத்தினாலும், உபவாசத்தி-னாலும் மட்டுமே குணமடையும். ஏசாயா 58ம் அதிகாரமானது மற்றவர்களுடைய தேவைக்கான ஊழியத்தை குறித்து மேற்கொள்ளப்படும் உபவாசத்தை தேவன் கணப்படுத்துகின்றார் என போதிக்கின்றது.

தெய்வீக குணமாக்குதலை குறித்த அனைத்தையும் நீங்கள் விளங்காதிருந்தாலும் கூட வியாதியஸ் தவர்களுக்கான ஊழியத்தை ஆரம்பியுங்கள். உண்மையிலேயே நீங்கள் மீட்கப்பட்டதின்பின் சாட்சியா யிருக்க ஆரம்பியுங்கள், ஆனால் கிறிஸ்தவ வாழ்க்கையை குறிதது நீங்கள் அதிகம் கற்க வேண்டி இருக்கும். குணமாக்குதலை குறித்து நீங்கள் அறிந்த அடிப்படைகளை கொண்டு ஊழியத்தை ஆரம்பி யுங்கள். உங்களுக்கு கொடுக்கப்பட்ட வெளிச்சத்தில் நீங்கள் நடக்கும்போது, நீங்கள் இன்னும் அதி-கமான வெளிச்சத்தை பெறுகின்றீர்கள். ஒரு நம்பிக்கையும் இல்லா சூழ்நிலைகளில் குறிக்கோள்களை ஏற்படுத்துங்கள். அவர்களை குறித்து நம்பிக்கையில்லா மக்களும் கூட இருக்க முடியும்.

## மற்றவர்களுக்கான ஆரம்ப ஆயத்தங்கள்:

சரியான ஆலோசனைகள் இன்றி வியாதியஸ்தரை ஜெபிக்க ஊக்குவித்தால், பாவத்தை விளங்காது, இரட்சிப்பின் தேவையை அறியாது, இயேசுவை யாரொன்று அறியாத மீட்கப்படாத ஒருவரை, இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஊக்குவிப்பதை போன்றதாகும்.

சிலசமயங்களில் தேவன் அறிவுறுத்தல்கள் இன்றி குணமாக்குவார். ஆனால் ஞாபகத்தில் கொள்ளுங்கள்: குணமாக்குதலின் ஊழியத்தில், செய்யப்படும் கிரியைகளை பார்க்கும்பொருட்டு, தேவனுடைய வார்த்தை களின் ஒவ்வொரு நேரடி உத்தரவுகளையும் நீங்கள் உபயோகிக்க வேண்டும். விசுவாசம் தேவனுடைய குணமாக்குதலின் வல்லமையின் ஓர் அங்கமாகும், அத்தோடு அது தேவனுடைய வார்த்தையை கேட்பதினூடாக வருகின்றது, ஆகவே அறிவுறுத்தல்கள் என்பது முக்கியமானதாகும். இயேசு குண-மாக்குதலை போதனைகளோடு ஒன்றுசேர்த்து, அவருடைய சீஷர்களுக்கு அவற்றை செய்யும்படியாக அறிவுறுத்தினார்.

குணமாக்குதலை குறித்து தேவனுடைய வசனத்தை கேட்பதினூடாக விசுவாசம் வருகின்றது. போதனையானது தேவன் சொன்னவற்றின் அடிப்படையாக கொண்டது, அது பாரம்பரியத்திலும், அனுபவத்திலும் அல்ல. சாட்சியை கொடுப்பத்தினால் மாத்திரம் விசுவாசத்தை கட்ட முடியாது. சாட்சிகள் வசனத்தை உறுதிப்படுத்தி விசுவாசத்தை ஊக்குவிக்கும், ஆனால் வேதாகமமானது தேவனுடைய வசனத்தை கேட்பதினூடாக விசுவாசம் வருகின்றது என குறிப்பிடுகின்றது. (இயற்கையான ஓர் கூட்டத்தின் சத்தத்தை ஒரு செவிட்டு நபர் கேட்க முடியாது இருப்பினும், அதை செவிட்டான ஆவி கேட்கும்.) குணமாக்குதலின் ஆதாரங்கள், வியாதியின் ஆதாரங்கள் மற்றும் விளைவுகள், குணமாக்குதலின் வாக்குத்தத்தம், குணமாக்குதலை பெற்று அதை பேணுதல் தொடர்பான வேதாகமத்தின் அறிவுரைகள் ஆகியவற்றை குறித்தான தேவனுடைய வார்த்தைகள் சொல்லுபவற்றை குறித்து மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

விசுவாசிகளுக்கான குணமாக்கும் சேவைக்கு முன்னால், வியாதியஸ்தனுடைய உபவாசம் மற்றும் ஜெபம் உதவியாய் இருக்கும். இது குணமாக்குதலுக்கு அவசியம் அல்ல, ஆனால் ஞாபகத்தில் கொள்ளுங்கள்-- நாம் வேதாகமத்தின் அனைத்து முறைகளையும் பயன்படுத்துதல் வேண்டும். எமது விண்ணப்பத்தை தேவன் கவனிக்கின்றார். ஏசாயா 58:6-8 குணமாக்குதல் பெறுவதற்கு உபவாசம் மற்றும் ஜெபத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.

## ஊழியத்தின் நேரம்

வியாதியஸ்தனின் ஊழியத்திற்கான நேரத்தை குறித்தான சில காரியங்கள் இங்கே தரப்பட்டுள்ளன. இது சாதாரண அறிவுறுத்தல்களே என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியானவருடைய பல்வேறுப்பட்ட வழிகளுக்கு நீங்கள் திறந்தவர்களாய் இருத்தல் வேண்டும். அத்தோடு, இந்த சில அறிவுறுத்தல்கள் தனிப்பட்ட ஊழியத்தின் மட்டுமே பிரயோகிக்கப்பட முடியும் என்பதோடு, ஏனை-யவை பெரிதான குழுவின் ஊழியத்தில் உபயோகிக்கப்பட முடியும்:

### விசுவாசத்தின் சூழ்நிலைகளை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்:

குணமாக்குதலின் வசனத்தின் ஊழியத்தின் போது மக்களுடைய விசுவாசத்தை ஊக்கப்படுத்த நீங்கள் எப்போதோ தொடங்கிவிட்டீர்கள். ஆனால் விசுவாசத்தின் சூழ்நிலையை உருவாக்க மேலதிகமான படிமுறைகள் உங்களுக்கு தேவைப்படும். வியாதியஸ்தனை விசுவாசம் மற்றும் நம்பிக்கையுள்ள மக்களோடு சூழ்ந்து கொள்ளுங்கள். அவர்கள் குணமாக்கப்பட்டவர்களுடைய சாட்சிகளை கேட்-கட்டும். அவிசுவாசம் இயேசுவினுடைய ஊழியத்தை நாசரேத்தில் மறைத்தது என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள்.

ஒருவருடைய ஆராதனை மற்றும் துதியே விசுவாசத்தினுடைய சூழ்நிலையாகும். நாம் தேவனுடைய பிரசன்னத்திற்குள் (குணமாக்குதல் இருக்குமிடம்) ஆராதனை மற்றும் துதியினால் பிரவேசிக்கின்றோம். குணமாக்குதலின் ஜெபம் இல்லாவிட்டாலும் கூட, ஆராதனை மற்றும் துதியினால் குணமாக்குதல் வரலாம், ஏனென்றால் தேவன் அவருடைய மக்களின் துதியின் மத்தியில் வாசம் செய்கின்றார். நாம் துதிக்கும்போது, அவர் குணமாக்க வருகின்றார். இரட்சிப்பைபோல, குணமாக்குதல் தொடர்பாக குறித்த தீர்மானத்திற்கு மக்களை கொண்டுவாருங்கள். சப்பாணி மனிதனிடம் இயேசு கேட்டதை ஞாபகத்தில் கொள்ளுங்கள், “சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா?” (யோவான் 5:6)

குணமாக்குதல் தொடர்பான அவர்களுடைய விருப்பத்தை ஆளும்படியாக அந்த நபரிடம் கேளுங்கள். கூட்டமான இடத்தில் அவரை எழும்ப சொல்லியோ, முன்பாக வர சொல்லியோ, கைகளை உயர்த்தியோ, அவர்களுடைய சரீரத்தில் பாதிக்கப்பட்ட இடத்தில் கைகளை வைக்கச்சொல்லியோ செய்யலாம். குணமாக்குதலுக்கான அவர்களுடைய வாஞ்சையை வெளிப்படுத்த உதவுங்கள். இது அவர்களுக்கான விசுவாசத்தின் நடத்தை ஆகும், அத்தோடு ஊழியம் தேவைப்படுவோரை இனங்காணுவதற்கு இது உங்களுக்கு உதவும்.

### ஞானத்திற்காக ஜெபம் பண்ணுங்கள்:

குணமாக்குதலின் ஊழியத்தை தொடங்குவதற்கு முன்னர் ஞானத்திற்காகவும் புத்தியிற்காகவும் ஜெபியுங்கள். உங்களுக்கு கொடுக்கப்பட்ட தெய்வீக ஞானத்தை பகிர்ந்து கொள்ளுங்கள். தேவன் உங்களுக்கு வெளிப்படுத்த கூடும்:

**ஞானத்தின் வசனம்:** எவ்வாறு ஜெபித்தல் வேண்டும் என்பதற்கான ஒரு நபரின் குறித்த காரணி-களையும், நிலைகளையும் ஞானத்தின் வசனம் தரும். ஆழமாக அறிதல் அல்லது உங்களுடைய ஆவியின், எண்ணங்களில், வசனங்களின், உணர்வுகளின் கருத்துக்களை ஞானத்தின் வசனம் உள்ளடக்கும். ஞானத்தின் வசனமானது வியாதி என்ன என்பதையும் அல்லது நபருடைய இந்நிலைக்கான காரணத்தையும் வெளிப்படுத்தும்.

**வேத வசனம்:** தேவன் உங்களுக்கு "ரேமா" (குறிப்பிட்ட) தேவனுடைய வார்த்தைகளை அச்சூழ்நிலையில், வியாதியில், நபரில் அல்லது குழுவில் தரலாம்.

**தரிசனம்:** இது நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவரின் ஞான கண்களில் தோன்றும் படங்கள் ஆகும்.

**விசுவாசத்தின் வசனம்:** இவைகள் தனிப்பட்ட ஒருவருக்கு விசேட விசுவாசத்தின் மற்றும் விசேட ஊக்குவித்தலின் வசனம் ஆகும்.

**விசேட அபிஷேகம்:** தீடிரென வல்லமை ஊற்றப்படுதல், ஓர் கிளர்ச்சியான விழுகை, வெப்பம் அல்லது விசேட நம்பிக்கை. சில சமயங்களில் விசேட அபிஷேகங்கள் வரும், அவ்வாறாயின், அதனுடன் ஊற்றப்படுங்கள். ஆனால் வியாதியஸ்தனுக்கான ஜெபிக்க விசேட அபிஷேகத்திற்காக காத்திருக்க வேண்டாம். நீங்கள் உணர்ந்த அல்லது உணராத இயேசுவின் அறிவுறுத்-தல்களை பின்தொடருங்கள்.

**விசுவாசத்தின் விசேட கிரியை:** குணமாக்குதலின் விளைவின் பொருட்டு, சிலசமயங்களில் தேவன் நபருக்கு விசுவாசத்தின் விசேட கிரியைகளை செய்யும்படியாக உங்களை வழி நடத்துவார்.

## நேர்காணலை நடத்துங்கள்: (மேலதிகமான)

ஒரு நபரோடு தனிப்பட்ட விதத்தில் செயல்படும்போது, நீங்கள் ஒரு விரிவான நேர்காணலை நடத்த வேண்டும். தேவன் வியாதியை குறித்த விசேட ஞானத்தின் வசனத்தை உங்களுக்கு தருவார், அத்தோடு இதை செய்ய வேண்டியது அவசியம் இல்லை. ஆனால் தேவன் வியாதியை தெய்வீகமாக வெளிப்படுத்தாவிட்டால், நேர்காணலை நடத்துவதற்கு தயங்கவேண்டாம். குணமாக்கும் ஊழியத்திற்கு ஓர் நேர்காணல் அவசியம் இல்லை, ஆனால் இது ஓர் தகவலை உங்களுக்கு தர வழிவகுக்கும், அதனால் நீங்கள் குறிப்பிட்டு ஜெபம் செய்யலாம். இது ஜெபம் செய்வதற்கு முன்னால் குறித்த நபருக்கு மேலதிக அறிவுறுத்தல் தேவையா என்பதை அறிய உதவும். இயேசு நேர்காணல் முறையை பயன்படுத்தினார். இயேசு மக்களுக்கு ஊழியம் செய்யும்முன் அவர்களுக்கு தேவையானவை என்ன, அவர்களுடைய விசுவாசத்தை குறித்தான கேள்விகள், அவிசுவாசத்தையுடைய மறைசேனைகளோடு சம்பந்தப்படுதல் ஆகியவற்றை கேட்டார்.

"பிரச்சனை என்ன?" என்று நபர்களிடம் கேளுங்கள். இயேசு தன்னிடம் குணமாடைய வந்த அநேகரிடம் இதையொத்த கேள்விகளை கேட்டார். ஜெபத்திற்கான விண்ணப்பத்தை கேட்டல் வியாதியஸ்தனுக்கு முக்கியமானதாகும். குணமாக்குதலின் ஊழியம் செய்ய மூப்பர்களை வரவழைக்கும்படி வியாதியஸ்-தர்களுக்கு கூறப்பட்டுள்ளது. வேதாகமம் ஒரு வழியை காட்டுமாயின், அது ஓர் காணமாகவே

தான். குணமாக்குதலின் செயற்பாட்டின் பொருட்டு கேட்டல் ஓர் விசுவாசத்தின் நடத்தை ஆகும். (யாக்கோபு 5:14-15)

(ஒரு நபர் வேண்டுகோள் செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் இந்த பாடம் தவிர்க்கவேண்டியது ஆகின்றது. உதாரணத்திற்கு மரித்த பிள்ளையை இயேசு எழுப்புதல். அதன் பிற்பாடு கூட அவளுடைய உறவினர்கள் குணமாக்குதலின் ஊழியத்திற்காக இயேசுவிடம் விண்ணப்பித்தனர்.)

குறித்த வாக்கிற்காக கேளுங்கள். விண்ணப்பம் பொதுவாக இருக்குமாயின், நீங்கள் என்ன ஜெபிக்க வேண்டும் என்பது உங்களுக்கு தெரியாது அத்தோடு பாதிக்கப்பட்ட நபர் குணமாக்குதல் எப்பொழுது வரும் என்பதை அறியார். உங்களுக்கு விரிவான காரணி ஒன்றே தேவையாகும்: “எனது வயிற்றில் புற்றுநோய் உள்ளது.” உங்களுக்கு மருத்துவ வரலாறு தேவை இல்லை. உங்களுக்கு கொடுக்கப்பட்ட தகவல்களை ஆராய முற்பட வேண்டாம். ஜெபித்தலே உங்களுக்கான கிரியை ஆகும், ஆலோசனை கொடுத்தல் அல்ல. சில சமயங்களில் இரகசிய தன்மைகளும், ஆவிக்குரிய ஆலோசனையிற்கு அதிக நேரங்களும் அவசியம் ஆகும். இந்த நோக்கதிற்காக ஆலோசனையாளர்களை வைத்துக்கொள்ளுங்கள்.

ஜெபிக்கப்படவேண்டிய நபரிடம் கேளுங்கள், “இயேசுவால் குணமாக்க முடியும் என நம்புகின்றீர்களா?” அவர்களுடைய பதில் ஆம் என்று இருந்தால், “இயேசுவால் இப்பொழுது குணமாக்க முடியும் என நம்புகின்றீர்களா?” என கேளுங்கள். இந்த கேள்விகளுக்கு “இல்லை” என பதில் இருக்குமாயின், தேவனுடைய வசனத்தின் மேலதிக அறிவுறுத்தல்கள் அவசியமாகும்.

பெரிய கூட்டத்தில் நீங்கள் ஊழியம் செய்யும்போது, உங்களால் ஒவ்வொரு நபரிடமும் தனியாக பேச முடியாது. கூட்டத்தில் குறித்த நபர்களுடைய வியாதியை தேவன் வெளிப்படுத்தலாம் அல்லது குறித்த நோயிற்கான பொதுவான ஜெபத்தை செய்யும்படியாக வழிநடத்தப்படலாம், உதாரணம் செவிடு, குருடு போன்றவை. சில சமயங்களில் பொதுவான குணப்படுத்தலின் ஜெபத்தை செய்யும் படியான உணரப்படலாம் அல்லது கூட்டத்தின் மத்தியில் தனிநபர் விசுவாசிகளை வியாதியஸ்தர்களோடு ஊழியம்செய்யும்படியாக வைக்கலாம்.

உங்களிலேயே நீங்கள் அனைத்து ஊழியம் செய்வதை விட மற்ற விசுவாசிகளிடம் எவ்வாறு ஊழியம் செய்தல் என போதித்தல் நல்லது ஆகும். விசுவாசிப்பவர்களுக்கு இந்த அடையாளங்கள் தொடரும் என இயேசு உத்தரவிட்டுள்ளார். ஊழியத்தின் வேலையானது ஒன்று அல்லது இரண்டோ தனித்த ஊழியர்கள் அல்லாமல், அனைத்து முழு உடலினாலும் செய்யப்படல் வேண்டும்.

## பிரச்சினையை விளங்கிக்கொள்ளுதல்:

நேர்காணலில் கிடைக்கப்பெற்ற தகவல்களை மற்றும் தேவன் உங்களுக்கு கொடுத்த அறிவை கொண்டு பிரச்சனைகளை இனம்காணுங்கள்:

**ஆவிக்குரிய பகுதி:** இந்த பகுதி பாவத்திற்கு தொடர்பான பகுதியாகும், அத்தோடு அவைகளுக்கு ஆவிக்குரிய குணப்படுத்தலின் ஊழியம் அவசியமாகும் (இரட்சிப்பு, மனந்திரும்புதல் மற்றும் பாவத்தின் மன்னிப்பு)

வியாதியிற்கும், பாவத்திற்கும் தொடர்பு காணப்படுமாயின் (தொடர்புள்ளதென நாம் பார்த்தோம்), மன்னிப்பிற்கும், குணமாக்குதலுக்கும் தொடர்பு காணப்படுகின்றது. பாவத்திற்கான மன்னிப்பு கேட்கும் போது அநேகர் பௌதீக ரீதியாக குணப்படுகின்றார்கள்.

வியாதியை பாவத்துடன் சுமக்க விரைவுபட வேண்டாம். தனிப்பட்ட பாவத்தின் காரணமாக அனைத்து வியாதிகளும் அல்ல என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். அங்கு பாவம் காணப்படுமாயின், அதை தெரியப்படுத்துதல் பரிசுத்தாவியானவருடைய பொறுப்பு ஆகும், ஏனென்றால் அவருடைய பொறுப்பு கண்டித்து உணர்த்துதல் ஆகும்.

**பௌதீக பகுதி:** இது சரீர வியாதி, காயம் அல்லது நோய் ஆகும். பௌதீக குணமாக்குதலுக்காக ஜெபியுங்கள்.

**உணர்வு ரீதியான பகுதி:** பதற்றம், பயம், கோபம், கசப்பு, சீற்றம், குற்ற உணர்ச்சி, சந்தேகம், தோல்வி, பொறாமை, சுயநலம், குழப்பம், விரக்தி, மன்னிக்காமை, கடந்துபோன பிரச்சனைகளின் விளைவாலுள்ள உணர்ச்சி ஆகியவை இந்த பிரச்சனைகளில் உள்ளடங்குபவை ஆகும். இந்த மக்களுக்கு உணர்வு ரீதியான பகுதியில் குணமாக்குதல் வேண்டும். இது “உள்ளான குணமாகுதல்” என்றும் அழைக்கப்படலாம், ஆனால் சில மக்களால் இப்பகுதி துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டுள்ளது. உண்மையான உணர்வின் அனுபவத்திற்கும், அனைத்து காரணிகளையும் அறிய செல்லுதல் அவசியம் இல்லை. இந்த காயங்களிலிருந்து மீளப்பட வாரங்கள், மாதங்கள் மற்றும் வருடங்களை செலவழிக்க வேண்டியது அவசியம் இல்லை. நீங்கள் இவைகளை செய்தால், கிறிஸ்துவின் புதிய சிருஷ்டியாக மாறுவதற்கு உதவுவதற்கு பதிலாக, வயதான நபரையே குணமாக்க முயற்சிக்கின்றீர்கள். இயேசு அவருடைய ஊழியத்தில் இதை செய்தாரா? இல்லை!

ஒரு தனிநபரின் சமூக பகுதியில் உள்ள பிரச்சனைகள் பௌதீக பகுதிகளில் உள்ள பிரச்சனைகளோடு தொடர்புபடலாம். அவர்கள் குடும்பத்திலிருந்து, சமூக பிரச்சனைகளிலிருந்து தாக்கப் பட்டிருக்கலாம். மன்னிப்பு கேட்டல், சம்பந்தப்பட்ட மற்ற நபர்களை மன்னித்தல், பிரச்சனைகளை இனங்காணல் மூலம் குணமாக்குதல் வரலாம்.

உணர்வுபூர்வமான குணமாக்குதலுக்கான மிகச்சிறந்த தடுப்பு மன்னிப்பேயாகும், ஆகவே சமூக உறவுகளின் குணமாக்குதல், உணர்வுபூர்வமான குணமாக்குதலை உள்ளடக்கும். இணக்கத்துடனான ஊழியத்தை செய்ய நாம் அழைக்கப்பட்டுள்ளோம் (2 கொரிந்தியர் 5:18-21). மக்கள் தேவனுடனும் மனிதனுடனும் இணக்கமாக இருத்தல் வேண்டும், இதன்மூலமாகவே உணர்வுபூர்வமான, மனரீதியான, உள்ளான குணமாக்குதல் வருகின்றது. அனைத்தும் ஒரே மாதிரியான குணமாக்குதலின் ஒத்த கொள்கையாகும்.

உணர்வுபூர்வமான நிலைகளை கீழ்வரும் கேள்விகளை கேட்டலின் மூலம் இனம்காணலாம்:

-விசேட நினைவுகளை நீங்கள் நினைக்கும்போது இன்னும் மாபெரும் வலிகளை உண்டாக்குகின்றதா? அப்படியாயின், இந்த பயங்கரமான உணர்விலிருந்து நீங்கள் குணமாகுதல் வேண்டும்.

-நீங்கள் வெளியிடமுடியாத பாரபட்சங்களை கொண்டிருக்கின்றீர்களா? இது உணர்வுபூர்வமான வேதனைகளுக்கு வேராயிருக்கின்றது.

-சில காரியங்களை குறித்த உள்ளான பயம் உங்களிடம் உள்ளதா? உணர்வுரீதியான குணமாக்குதல் பயம்போன்ற பிரச்சனைகளை விடுவிக்கும்.

-இயலாமைக்கான மாபெரும் பகுதிகள் உங்களில் காணப்படுகின்றதா? குறைந்த மதிப்பிலான தோற்றம் அல்லது தோல்வியை போன்ற உணர்வு உங்களிடம் உள்ளதா? இது கடந்தகால உணர்வு ரீதியான துன்பத்தின் விளைவாக இருக்கலாம்.

-உங்களுக்கு அளவுக்கு மீறிய ஈர்ப்பு மற்றும் குறித்த பொருட்கள் அல்லது மக்களுக்கு விலக்காக உள்ளீர்களா? இந்த அசாதாரண எதிர்வினைகளுக்கு கடந்த கால அனுபவங்கள் கூட காரணமாக இருக்கலாம்.

மன்னிப்பை குறித்து மக்களிடம் நீங்கள் போதிக்க வேண்டும். மன்னிப்பு அல்லாதவை:

-உங்களுக்கு செய்யப்பட்ட ஒருவரின் தவறுகளை நியாயம் தீர்த்தல். (உதாரணத்திற்கு, "அவர்கள் கடும் அழுத்தத்திற்கு இருத்தல்" என கூறுதல்.")

-நீங்கள் முதல்தர இடத்தில் மறுக்கப்படுதல்.

-உங்களுக்கு செய்யப்பட்ட விலக்குதலை ஏற்றுக்கொள்ளுதல்

-துன்பத்தை குணமாக்குதவதற்கான நேரத்திற்கு காத்திருத்தல் (அது அவசியமல்ல).

உண்மையான மன்னிப்பு வருவதானது:

1. பாவமுள்ள உலகில் பாவமுள்ள மனிதனின் விளைவால், உங்களுக்கு செய்யப்பட்டது தவறு என உணருதல். உணர்வுரீதியான சம்பவத்திற்கு பின்சென்று அவைகளை விடுவிக்க அவசியம் இல்லை, ஆனால் அதை புறக்கணிப்பதின் மூலம் அதன் மூலம் சம்பந்தப்படலாம். நடைபெற்ற காரணம் என்ன என்பதையும், அது எவ்வாறு தாக்கம் செலுத்தியது என்பதையும் ஏற்றுக்கொள்ளுங்கள்.

2. தேவனை துன்புறுத்தியதிற்கு அறிக்கையிட்டு, உங்களுடைய பயங்கரமான உணர்வை குணமாக்கும்படி அவரிடம் கேளுங்கள். நீங்கள் ஒருபோதும் சம்பவத்தின் காரணியை மறக்க மாட்டீர்கள் ஆனால் அதனோடு தொடர்புபட்ட தவறான உணர்விற்கான குணமாக்குதலே உங்களுக்கு தேவையானது ஆகும்.

3. இதனோடு சம்பந்தப்பட்டவர்களை மன்னிப்பதற்கு உதவ தேவனிடம் கேளுங்கள், பிறகு தேவன் உங்களை மன்னித்தது போல அவர்களையும் மன்னியுங்கள். நீங்கள் மற்றவர்களை மன்னிக்கும் போது தேவன் உங்களுடைய மன்னிப்பை விரிவாக்குகின்றார் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்: "எங்கள் கடனாளிகளை நாங்கள் மன்னிக்கின்றது போல, எங்கள் பாவ கடன்களை மன்னியும்." நபர்கள் அவர்களுக்கு மன்னிப்பளித்தல் அவசியமாகும் (தங்கள் சொந்த குற்றங்களின் மேலுள்ள உணர்ச்சி) அத்தோடு உணர்வுபூர்வமான குணமாக்குதலுக்கான ஜெபம் நிச்சயம் அவசியமாகும். நீங்கள் உங்களை எவ்வாறு மன்னிப்பது என்று இங்கு தரப்பட்டுள்ளது:

-குற்றஉணர்ச்சி, பாவஉணர்ச்சி உண்டாக்கிய பாவத்தை ஏற்றுக்கொள்ளுங்கள், அதை தேவனுக்கு அறிக்கையிடுங்கள், மனந்திரும்புங்கள். உங்களுடைய உணர்வுகளை குணமாக்கும்படியும், செய்த பாவத்திற்கு அவரிடம் மன்னிப்பு கேளுங்கள்.

-தேவன் மன்னித்ததும் அதை அவர் மறந்தார் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள் (கிழக்கிலிருந்து மேற்கு என்பதை போல் எங்களுடைய பாவத்தை தூரத்திற்கு அவர் தள்ளி விட்டார்).

-1 யோவான் 1:8-9 மற்றும் ரோமர் 8:1ஐ உரிமை கோருங்கள்

-உங்களுடைய சொந்த சித்தத்தை செய்வதிலிருந்து, ஆக்கினையிலிருந்து உங்களை நீங்களே தப்பித்துக்கொள்ளுங்கள். "வீண் கற்பனைகள்" மற்றும் "பிற்காலத்தின் காரியங்களை மறத்தலின் மூலம்" எதிர்கால எண்ணங்களை துரத்தி கட்டுப்படுத்துங்கள்.

**மனரீதியான பகுதி:** எதிர்மறையான எண்ணங்கள் ஊற்றெடுத்தல், மனதில் சாத்தானுடைய தாக்குதல்கள், மனநிலை பாதிப்பு ஆகியவை இதன் பிரச்சனைகளாகும். குணமாக்குதலுக்கான ஜெபியுங்கள்.

**சாத்தானிய பகுதி:** சாத்தானிய உடமை காரணமாக சாத்தானுடைய நேரடி கிரியையினால் உண்டான நிலைகளே இவைகளாகும். இதனோடு எவ்வாறு சம்பந்தப்படுவது என்பதை குறித்து அடுத்த பாடமான விடுதலை ஊழியத்தில் நீங்கள் கற்பீர்கள். ஒரு பகுதியில் உள்ள பிரச்சனை முழு மனிதனையும் தாக்கும் என்பதை எப்பொழுதும் நினைவிற் கொள்ளுங்கள். நீங்கள் ஊழியம் செய்யும்போது, வியாதியில் மாத்திரமல்ல, இயேசு செய்ததைபோல் முழு மனிதனிலும் சம்பந்தப்படுகின்றீர்கள். மனிதன் சரீரம், ஆவி, ஆத்துமாவாய் இருக்கின்றான். முழுமை என்பது இவ்வனைத்தோடும் சம்பந்தப்படுவதை குறிக்கும்.

## குணமாக்கும் ஜெபத்தை செய்யுங்கள்:

நிலைமைகளை உணர்ந்தபின், நீங்கள் சாதாரணமான குணமாக்கும் ஜெபத்தை ஜெபியுங்கள். ஆனால் சிலவேளைகளில், நீங்கள் ஜெபிக்க கூடாதென்றால் அல்லது ஜெபத்தை தாமதிக்கும்படி தேவன் சொன்னால் ஆச்சரியப்படாதிருங்கள். உதாரணத்திற்கு, நேர்காணலின்போது நோயாளிகளுக்கான கொடுப்பனவு நிறுத்தப்படும் என்ற காரணத்தினால் நோயாளி குணமாகுவதற்கு தேவையற்றவராக இருக்கின்றார் என்பதை நீங்கள் அறிதல். (இது குணமாக்கும் ஊழியத்தில் சாதாரணமாக நடைபெறலாம்!)

தேவன் குறித்த நபர் பாவ பிரச்சனைகளோடு தொடர்புபடுகின்றார் அல்லது பௌதீக குணப்படுத்தலுக்கான ஜெபத்தை குறித்த அறிவுரைகள் வரை தாமதிக்கும்படி வழிநடத்தலாம். நீங்கள் ஜெபிக்கும்போது, குறித்த பிரச்சனைகளை மையப்படுத்தி, விசுவாசத்தின் ஜெபத்தை ஜெபியுங்கள். ஜெபத்தின் நீளத்தின் மூலமோ அல்லது சத்தத்தின் மூலமோ குணமாக்கும்படி தேவனை சம்மதிக்க வைக்க தேவையில்லை என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். இரட்சிப்பு ஏற்கனவே உண்டாக்கப்பட்டதுபோல, அதேநிலை குணமாக்குதலுக்கும் உண்மையானதாகும். விசுவாசத்தின் அடிப்படை நிலையில் இரட்சிப்பு இருப்பதுபோல், குணமாக்குதலுக்கும் இருக்கும். தேவன் மீட்பதை போல, அவருக்கும் குணமாக்குவது அவசியமாகும். ஒரு நபரை மீட்கும்படியாக தேவனிடம் கத்தவோ அல்லது ஒருவரை குணப்படுத்தும்படி அவரிடம் கத்தவோ தேவையில்லை.

தேவனுடைய வல்லமையானதுகூட சிலவேளைகளில் குணமாக்குவதற்கு விசேட வழியாய் இருப்பதை போல (லூக்கா 5:17), விசேட அபிஷேகம் இல்லாமல் குணமாக்குதலுக்காக நீங்கள் இன்னும் ஜெபிக்கலாம், ஏனென்றால் சுவிசேஷத்தை பரப்புவதற்கு அவர் உங்களுக்கு சொன்னதைபோல, இதையும் செய்யும்படி அவர் கூறுகின்றார்.

ஜெபம் பதிலளிக்கப்படுவதற்கான திறவுகோலானது தேவனுடைய சித்தத்தின்படி ஜெபித்தலாகும். "அது தேவனுடைய சித்தமாயின்" ஜெபம் செய்ய வேண்டாம். "உமக்கு சித்தமாயின் குணமாக்கும்" என இயேசு ஜெபம் செய்யவில்லை. "பரலோகத்தில் உமது சித்தம் செய்வதைபோல்" அல்லது "உமது சித்தப்படி" என நேரான தேவனுடைய ஜெபத்தை ஜெபியுங்கள். இது தேவனுடைய இறையாண்மையை இன்னும் ஏற்றுக்கொள்ளுகின்றது.

உங்களின் ஊழியத்தில் இயலுமாயின் மற்ற விசுவாசிகளை பயன்படுத்துங்கள். இது அநேக மக்கள் ஜெபிக்கும்போது அங்கு பெருப்பிக்கப்பட்ட ஆவிக்குரிய வல்லமை காணப்படும் (மத்தேயு 18:19). "சரீர ஊழியங்கள்" குணமாக்கும் வரங்களில் சித்திப்பெற்ற அனுபவமுடையவர்களையும், மகிமையை தனக்கு அல்லது மனிதர்களுக்கு கொடுக்கும் குணமாக்குதலை பெற்றவர்களையும், தனிப்பட்டவர்களை ஊக்கமிழக்க செய்யும். கிறிஸ்துவின் சரீரத்திலிருக்கும் ஒவ்வொரு நபர்களும் குறைந்தளவு ஒரு ஆவிக்குரிய வரத்தை கொண்டிருப்பர். அதிக வல்லமையான ஊழியமானது....

> **அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். (1 பேதுரு 4:10)**

உங்களுடைய குணமாக்குதலின் ஊழியத்தின் ஜெபமானது:

- -கருணை: மாற்கு 7:32-35
- -கட்டளை: லூக்கா 4:38-39; மாற்கு 7:32-35; யோவான் 5:8; அப்போஸ்தலர் 3:6; 9:40
- -மத்தியஸ்தம்: யாத்திராகமம் 32
- -கடிந்துகொள்ளுதலும், விரட்டுதலும்: மாற்கு 9:25 மாக இருக்கலாம்.

தேவன் வழிகாட்டியதைபோல, உங்களுடைய ஜெபமானது விசேட கிரியைகளை செய்யும்படி அறிவுறுத்தல்களை உள்ளடக்கியதாக இருக்கலாம் (பார்க்க யோவான் 9:1-7). (குறிப்பு: மருந்துக்களை எடுப்பதை நிறுத்தும்படி மக்களுக்கு ஒருபோதும் சொல்லாதீர்கள். இப்பகுதியில் தேவன் அவர்களை நடத்தட்டும்.) எப்பொழுதும் இயேசுவின் நாமத்தில் ஜெபம் செய்யுங்கள். அத்தோடு ஒருதடவைக்கு மேல் ஜெபித்தல் விசுவாசம் இல்லை என்பதாகாது என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். (விடாமுயற்சியான ஜெபத்தை குறித்து இயேசு போதித்ததை மீட்டு பாருங்கள்)

## பதிலுக்காக தேவனிடம் துதியுங்கள்:

குணமாக்குதலின் ஜெபத்தோடு தேவனுக்கான துதியின் ஜெபத்தையும் தொடருங்கள். இயேசு ஊழியம் செய்த பத்து குஷ்டரோகிகளின் போது, எல்லாரும் குணமாக்கப்பட்டார்கள், ஆனால் மீளத்திரும்பி துதி செலுத்திய ஒருவர் மட்டுமே பூரணமாக்கப்பட்டார் என்பதை ஞாபத்தில் கொள்ளுங்கள். பார்ப்பதினால் அல்லாமல் விசுவாசத்தினால் தேவனுக்கு துதியுங்கள். தேவனுடைய வசனம் செய்ய சொன்னவற்றை நீங்கள் செய்தீர்கள். அவர் சொன்னதை அவர் செய்தார், அவர் செய்வார் என விசுவாசித்து அவருக்கு நன்றி கூறுங்கள். லாசரு குகையிலிருந்து வெளியே வருவதற்கு முன் இயேசு தேவனுடைக்கு அவருடைய ஜெபம் கேட்கப்பட்டதாய் நன்றி கூறினார்.

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

2. குணமாக்குதலின் ஊழியத்தின் ஆரம்பத்தின் ஆயத்தத்தை கலந்துரையாடுங்கள்?

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

3. குணமாக்குதலின் ஊழியத்திற்கான அறிவுறுத்தல்களை சுருக்கமாக்குக.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. குணமாக்கும் ஊழியத்தின் முன் வியாதியஸ்தரோடு இயேசு செய்த நேர்காணலின் உதாரணங்களை படியுங்கள்:

    -மாற்கு 5:1-20: சாத்தானிய மனிதனிடம் இயேசு கேள்வி கேட்டார்.
    -மாற்கு 8:22-26: குருடரான மனிதனிடம் இயேசு கேள்வி கேட்டார்.
    -மாற்கு 9:14-27: தீய ஆவியுள்ள வாலிபன் குறித்து நேர்காணல் செய்தார்.
    -மாற்கு 10:46-52: குருடரான பத்திமேயுவிடம் கேள்வி கேட்டார்.

2. இயேசு குணமாக்கும் ஊழியத்தில் தமது சீஷர்களுக்கு பயிற்றுவித்தார் (மத்தேயு 10:18). இங்கு உங்களோடு குணமாக்கும் ஊழியத்தில் வேலையாள் குழுவை விருத்தி செய்தல் எவ்வாறு என தரப்பட்டுள்ளது:

    -வேலையாட்களின் குழுவை தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள். அங்கத்தவர்கள் போதிக்க கூடியவர்களாகவும், ஊழியம் செய்ய வாஞ்சையுள்ளவர்களாகவும், வழிகளை தேர்ந்தெடுக்கும் இயலுமை உள்ளவர்களாகவும், அன்பும் அர்ப்பணிப்பும் உள்ள மக்களாகவும், நல்ல ஆவிக்குரிய உணர்வுபூர்வமான ஜீவியத்தை உடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

    -இந்த பாடத்திலுள்ள படிப்பை உபயோகியுங்கள், அத்தோடு அவர்களை தேவனுடைய வார்த்தையால் நடத்தி, விசுவாசத்தை வளருங்கள்.

    -ஒன்றாக உபவாசத்தோடும் ஜெபத்தோடும் நேரத்தை செலவிடுங்கள்.

    -குணமாக்கும் கூட்டத்தில் யார் என்ன செய்வது என தீர்மானியுங்கள், ஆகவே குழுக்கள் ஒவ்வொவ்வொருவரோடு நல்லிணக்கத்தோடு ஊழியம் செய்யலாம். குழப்பத்தை தவிர்க்கும் பொருட்டு ஒருவர் இந்த கூட்டத்தை வழிநடத்த வேண்டும்.

    -குணமாக்கும் ஊழியத்தில் குழு அங்கத்தவர்களை மற்றவர்களுக்கு ஊக்கப்படுத்தும்படி உதவ உபயோகியுங்கள். குணமாக்கும் கூட்டத்தை சாதாரண ஊக்கப்படுத்தும் கூட்டம் போல் செய்யா-தீர்கள், இது கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள அனைவருக்கும் தேவனுடைய வல்லமை எவ்வாறு கிடைக்கும் எனவும் எவ்வாறு உபயோகிப்பது என்பது குறித்தும் மற்றவர்கள் கற்றுக்கொள்ளலாம்.

3. உங்களுடைய சபையில் குணமாக்கும் ஊழியத்தை எவ்வாறு அறிமுகம் செய்யலாம் என்பதற்கான சில குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன:

    **கற்றல்:** குணமாக்குதல் தொடர்பான செய்திகளை போதியுங்கள். ஞாயிறு பாடசாலைகளிலும், வேதாகம படிப்பிலும் குணமாக்குதலை போதியுங்கள். வெளியிலான பேச்சாளர்களை இந்த பாடத்தில் ஊழியம்செய்யும்படி அழையுங்கள். *"சரீரத்திற்கான யுத்தம்"* என்னும் இந்த பாடத்தை படிப்பின் வழிகாட்டியாக பயன்படுத்துங்கள்.

    **மாதிரி:** சாட்சிகளை பகிரக்கூடிய குணமாக்கப்பட்டவர்களை வைத்திருங்கள். காட்புலனாக

கூடிய மற்றும் காட்புலனாகாத குணமாக்குதலை அனுபவப்பட்டவர்கள், படிப்படியாக மற்றும் உடனடியாக குணமாக்கப்பட்டவர்கள், பயங்கரமான மற்றும் பொதுவான நோயிலிருந்து குணமானவர்கள் ஆகிய மக்களை வைத்திருங்கள்.

**ஊடுருவல்:** சபை வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் குணமாக்கும் ஊழியத்தை உள்ளடக்குங்கள். வைத்தியசாலைகளுக்கும், வீடுகளுக்கும் குணமாக்கும் ஊழிய குழுக்களை அனுப்புங்கள். குணமாக்கும் ஊழியத்தில் முதலாவது ஊழியர்களையும், தலைவர்களையும் உள்ளடக்குங்கள், பிற்பாடு முழு சபையிலும் உள்ளடக்கும்படி அவர்களை உபயோகியுங்கள்.

**காட்டுதல்:** தேவனுடைய வல்லமையை காட்டுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துங்கள். குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான ஊழிய கூட்டத்தை திட்டமிட்டு வழிநடத்துங்கள்.

4. உங்களுடைய குணமாக்கும் ஊழியத்தில் பயன்படுத்துவதற்காக இந்த பாடத்தின் கலந்தாய்வுகளிலிருந்து கீழ்வரும் பட்டியல்கள் உருவாக்கப்பட்டுள்ளது:

## ஆரம்ப ஆயத்தங்கள்:

**உங்களில்:**

குணமாக்குதலின் தேவனுடைய வசனத்தை படியுங்கள்.
ஆரம்பத்தில் உபவாசித்து ஜெபியுங்கள்.

**மற்றவர்களில்:**

குணமாக்குதல் தொடர்பான சரியான அறிவுறுத்தல்கள்
குணமாக்குதலின் தேவனுடைய வசனத்தை படியுங்கள்.
ஆரம்பத்தில் உபவாசித்து ஜெபியுங்கள்.

## ஊழியத்தின் நேரம்

விசுவாசத்தின் சூழ்நிலையை ஏற்படுத்துங்கள்
பகுத்தறிவிற்காக ஜெபியுங்கள். தேவன் தரலாம்:

- -ஞானத்தின் வசனம்
- -வேத வசனம்
- -ஒர் தரிசனம்
- -விசுவாசத்தின் வசனம்
- -விசேட அபிஷேகம்
- -விசுவாசத்தின் விசேட கிரியை

நேர்காணலை நடத்துங்கள் (மேலதிகமாக)
பிரச்சனைகளை அறிந்துகொள்ளுங்கள். பிரச்சினைகளானவை

- -ஆவிக்குரிய பகுதி
- -பௌதீக பகுதி
- -உணர்வுபூர்வ பகுதி
- -மனரீதியான பகுதி
- -சாத்தானிய பகுதி

குணமாக்குதலின் ஜெபத்தை செய்யுங்கள்.
பதிலுக்காக தேவனை துதியுங்கள்.

## அதிகாரம் பதினைந்து

# தொடர் குணமாக்கும் ஊழியம்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ குணமானவர்களிற்கான தொடர்ச்சியான கவனிப்பை குறித்து கலந்துரையாடவும்,
- ☐ குணமாகாதவர்களிற்கான தொடர்ச்சியான கவனிப்பை குறித்து கலந்துரையாடவும் முடியும்.

## பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

> **நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.**
>
> **ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (எபிரெயர் 4:15-16)**

## அறிமுகம்

குணமாக்கம் அடைந்தவர்கள் தொடர்ச்சியான ஊழியத்தை பெறுதல் மிகவும் முக்கியமானதாகும். குணமாக்குதலையும் விடுதலையையும் அனுபவித்தவர்களுக்கு இயேசு தொடர்ச்சியான அறிவுறுத்தல்களை கொடுத்தார்.

குஷ்டரோகத்திலிருந்து சுகமான மனிதனிடத்தில் அவர் கூறினார்:

> **நீ இதை ஒருவருக்கும் சொல்லாமல், போய், உன்னை ஆசாரியனுக்குச் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளையிட்டபடியே, அவர்களுக்குச் சாட்சியாகப் பலிசெலுத்து என்று கட்டளையிட்டார். (லூக்கா 5:14)**

பாவத்திலிருந்து குணமான ஒரு பெண்ணுக்கு அவர் கூறினார்:

> **நீ உன் வீட்டுக்குத் திரும்பிப்போய், தேவன் உனக்குச் செய்தவைகளையெல்லாம் அறிவி... (லூக்கா 8:39)**

பெதஸ்தா குளத்திலிருந்த ஒரு மனிதனுக்கு அவர் கூறினார்:

> **இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ் செய்யாதே. (யோவான் 5:14)**

விபச்சாரத்தில் பீடிக்கப்பட்டிருந்த பெண்மனிக்கு அவர் கூறினார்:

**நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே. (யோவான் 8:11)**

நீங்கள் தனிப்பட்ட ரீதியில் ஒருவருக்கு ஊழியம் செய்தால், நீங்கள் உங்களுக்கு தொடரும் அறிவுறுத்தல்களை கொடுக்க வேண்டும். நீங்கள் பெரிய கூட்டத்திற்கு ஊழியம் செய்தால், கூட்டத்திற்கு பிறகு அல்லது காலையிற்கு பிற்பாடு ஆலோசனைகளை வழங்குதல் வேண்டும். நீங்கள் உள்ளுர் சபைகளுக்கு ஊழியம் செய்தால், குணமாக்குதல் பெற்றவர்களை கவனிக்கும்பொருட்டு தொடரும் ஊழியத்தை போதகரிடம் கேளுங்கள்.

தொடரும் அறிவுறுத்தல்களானது பின்வருபவற்றை மையமாக கொண்டிருத்தல் வேண்டும்:

-குணமாக்குதலுக்குப்பின் என்ன செய்ய வேண்டும்.
-அவர்கள் குணமாக்கப்படாவிட்டால் என்ன செய்ய வேண்டும்.

## குணமாக்குதலுக்குப்பின் என்ன செய்ய வேண்டும்

குணமாக்கப்பட்டவர்களுக்கு போதியுங்கள்...

### சாத்தானுடைய தாக்குதல்களை அறிந்துகொள்ளுங்கள்:

மனந்திரும்பி மீற்கப்பட்ட அனைவரையும் சாத்தான் சோதிப்பதுபோல, குணமாக்கப்பட்ட அனைத்து நபர்களையும் சாத்தான் சோதிக்கின்றான். ஆவிக்குரிய வெற்றியை நீங்கள் இழப்பதுபோல, பௌதீக வெற்றியையும் நீங்கள் இழக்கலாம். ஆவிக்குரிய நடத்தையில் நீங்கள் எவ்வளவு தேவனை நம்பினாலும், இப்பகுதியில் நீங்கள் சோதிக்கப்படுவீர்கள். உங்களை சாத்தான் சோதிக்கும் விதமானது:

**அடையாளங்கள்:** சிலசமயங்களில் குணமாக்குதல் படிப்படியாக இருக்கலாம். உங்களுடைய அனைத்து அடையாளங்களும் உடனடியாக போய்விடாது. உங்கள் அடையாளங்கள் இன்னும் மேலும் மோசமடையலாம். உங்களுக்கு காய்ச்சல் இருக்குமாயின், இது குணமாக்கும் செயற்பாட்டின் ஒரு பகுதியாக நோயோடு போராடும் சரீரத்தின் ஒரு செயற்பாடு ஆகும். இயற்கையான சிந்தை அல்லாது, ஆவிக்குரிய சிந்தையுடன் நடவுங்கள். உங்களுடைய அடையாளங்களை தன்னார்வ அடிப்படையில் எடுத்து செல்லாதீர்கள், அவைகள் திரும்ப வந்துவிடும். மறுபக்கத்தில், அவைகளை குறித்து பொய் சொல்லாதிருங்கள். கேட்கப்பட்டால், பதிலானது, “ஆம், எனக்கு............. அடையாளங்கள் உள்ளன. ஆனால் அவருடைய காயங்களால் நான் குணமானேன்.” அடையாளங்கள் தேவனுடைய வசனத்திலிருந்து, அவருடைய பிரசன்னத்திலிருந்து, வாக்குத்தத்தத்திலிருந்து, வல்லமையிலிருந்து திசைதிருப்பி விடும். உங்களுடைய சரீரத்தை தாக்கும் இயலுமையுடைய சாத்தானை மகிமைப்படுத்தும் மறையான வார்த்தைகளை பேச வேண்டாம். உங்களை அதிகம் உற்சாகப்படுத்துபவை எவை: அடையாளங்கள் இன்மை அல்லது தேவனே உங்களை குணமாக்குபவர் என கூறும் தேவனுடைய வசனம்? உங்களுடைய குறி என்ன?

**மற்றவர்களை உங்களை பார்க்கும்படியாக வைத்தல்:** தாங்கள் குணமடைந்தோம் என எண்ணி, இப்போதும் மீண்டும் வியாதியுடையவர்களை சாத்தான் குறிவைக்கின்றான். தாங்கள் மீட்கப்பட்டோம் என உரிமை கோரி, இன்னும் பாவத்தில் வாழுபவர்கள் ஆகியோரை நீங்கள் பார்க்கவில்லையா? இரட்சிப்பின் உண்மையை மறுப்போரின் உதாரணமாக உபயோகிக்க முடியாதா?

**பயம்:** சாத்தான் உங்களுடைய வியாதி மீண்டும் வந்துவிடும் என பயத்தை உண்டாக்குகின்றான்.

**உங்களை சுற்றியுள்ள மறையான மக்கள்:** உங்களுடைய மனதில் சந்தேகத்தை விதைக்கும் அவிசுவாசத்தால் நிரப்பப்பட்டவர்கள்.

## சாத்தானுடைய தாக்குதல்களை எதிர்த்து நில்லுங்கள்:

குணமாக்குதலின் தேவனுடைய வசனத்தை தொடர்ந்து படிப்பதின் மூலம் விசுவாசத்தின் சூழ்நிலைகளை ஏற்படுத்தி கொள்ளுங்கள். உங்களுடைய குணமாக்குதலுக்காக தேவனை துதியுங்கள். உங்களை குணமாக்குபவரோடு ஜெபத்தில் தொடர்பை வைத்திருங்கள். மற்றவர்களுக்கு உங்களுடைய குணமாக்குதலை சாட்சி பகருங்கள், தேவனுக்க மகிமையை கொடுங்கள். சாத்தானை மேற்கொள்ளும் ஒரு வழிமுறை உங்களுடைய சாட்சியின் வசனத்தால் ஆகும். சாத்தானுடைய தாக்குதல்களை "ரேமா" என்னும் குணமாக்குதலை குறிக்கும் தேவனுடைய விசேட வசனத்தின் மூலம் எதிருங்கள். உங்களுடைய விசுவாசத்தில் தடுமாறாதீர்கள், தடுமாறும் மனிதர்கள் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளுவதில்லை (யாக்கோபு 1:6-8). உங்களுடைய குணமாக்குதலுக்காக விசுவாசத்தோடு ஊக்கமாய் (யுத்தம்) வழக்காடுங்கள் (ரோமர் 10:9).

சாத்தானுடைய தாக்குதல்களிலிருந்து எதிர்க்க உங்களுக்கு உதவுவோர் மற்றும் குணமாக்குதலுக்கு உங்களோடு தேவனிடம் தொடர்ச்சியாக துதி செய்வோர் ஆகியோரோடு உங்களைசுற்றி நேரான விசுவாசத்தின் சூழலை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். சபையின் அங்கத்துவத்தில் ஒரு பகுதியாக மாறுங்கள்.

உங்களுடைய ஆவிக்குரிய அதிகாரங்களை உபயோகிப்பதின் மூலம் சாத்தானுடைய தாக்குதல்களை நீங்கள் எதிர்க்க முடியும். அவைகள்:

-தேவனுடைய வசனம்.
-இயேசுவினுடைய இரத்தம்.
-உங்களுடைய சொந்த சாட்சியின் வசனம்.
-கட்டுவதற்கும் தளர்த்துவதற்குமான அதிகாரம்.
-ஜெபமும் துதியும்.
-எபேசியர் 6:10-18ல் பட்டியலிடப்பட்டுள்ள போர்க்களத்தின் ஆயுதங்கள்
-பரிசுத்த ஆவியானவரின் வல்லமையும், அதிகாரமும்.

(நீங்கள் பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தை பெற்ற அனுபவம் இல்லாவிட்டால், அதை எதிர்பாருங்கள். உங்களுடைய குணமாக்குதலில் தொடர்ந்து உதவுவதற்கு பரிசுத்த ஆவியானவர் வல்லமையை தருவார்.)

## உங்களுடைய வாழ்க்கை முறையை மாற்றுங்கள்:

பாவமுள்ள கிரியைகளுக்கு திரும்புதல் வியாதியிற்கு திரும்புதல் என அர்த்தப்படும் (யோவான் 8:11). தேவனுக்கும் அவருடைய வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிதலோடு நடவுங்கள். சித்தமுள்ள பாவங்கள் குணமாக்குதலை இழக்கின்றன (யோவான் 5:14). ஆரோக்கியமற்ற கிரியைகளுக்கு திரும்புதல் வியாதியிற்கு திரும்ப வைக்கின்றன. தேவனுடைய ஆலயத்தை தீட்டுப்படுத்திய வகையில் ஆரோக்கியமற்ற கிரியைகள் உண்மையிலேயே பாவங்களாகும்.

## ஆரோக்கியம் மற்றும் குணமாக்குதலுக்கு வேதாகம அறிவுறுத்தல்களை பின்பற்றுங்கள்:

இந்த அறிவுறுத்தல்களை இருபதாம் அதிகாரம் கொடுக்கின்றது.

## மருத்துவ சரிபார்ப்பிற்கு திரும்புங்கள்:

நீங்கள் மருத்துவ பராமரிப்பின்கீழ் இருந்தால், வைத்தியரிடம் சென்று உங்களுடைய குணமாக்குதலுக்கான சரிபார்த்தலுக்கு திரும்புங்கள். பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணத்தின் கீழ், ஆசாரியர்கள் வைத்தியர்களை போன்றவர்கள். அவர்கள் வியாதியை கண்டறிந்து, சிகிச்சைமுறையை அறிவிப்பர். இயேசு அவர் குணமாக்கிய குஷ்டரோகியிடம் கூறினார்:

> **நீ இதை ஒருவருக்கும் சொல்லாமல், போய், உன்னை ஆசாரியனுக்குச் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளையிட்டபடியே, அவர்களுக்குச் சாட்சியாகப் பலிசெலுத்து என்று கட்டளையிட்டார். (லூக்கா 5:14)**

## அவர்கள் குணமாக்கப்படாவிட்டால் என்ன செய்ய வேண்டும்

மக்கள் குணமடையாவிட்டால் ஊக்கத்தை கெடுக்கவோ அல்லது குற்றஉணர்வு படவோ அனுமதிக்க வேண்டாம். அவர்களுடைய குணமின்மைக்கான காரணத்தை கண்டுபிடிக்கும்படியான சோதனையை தவிருங்கள் (தேவன் விசேட வெளிப்படுத்தலின் காரணத்தை வெளிப்படுத்தும் வரை). அவர்கள் கூட்டத்தை விட்டு வெளியேறுவதற்கு முன், குணப்படுத்தலை காண முடியாததின் உண்மையான அர்த்தமானது அவர்கள் குணமாக்கப்படமாட்டார்கள் என்பதில்லை என எச்சரியுங்கள். குணமாக்குதல் ஆவியிலிருந்தே ஆரம்பிக்கின்றது. தாமதித்த குணமாக்குதல்கள் காணப்படுகின்றன, அதாவது வசனமானது பல வருடங்களுக்கு முன்னர் கொடுக்கப்பட்டால் கூட, ஆபிரகாம் மற்றும் சாராளின் கனிகொடா தன்மை.

நேரமும் இதனோடு சம்பந்தப்படுகின்றது. அப்போஸ்தலர் 5ல் தேவாலயத்திலிருந்த சப்பாணி மனிதனை கவனத்தில் கொள்ளுங்கள். இயேசுவானவர் வாசலில் நடந்து சென்றாலும் கூட, பல வருடங்களாக முடவனாயிருந்த மனிதனை அவர்கள் குணமாக்கவில்லை. அவன் பிற்பாடு பேதுருவாலும், யோவானாலும் குணமாக்கப்பட்டார் (அப்போஸ்தலர் 5:15-16). யோபு மற்றும் லாசருவின் விடுதலைக்கு ஓர் குறித்த காலம் இருந்தது.

இந்த கீழ்வரும் படிமுறைகளில் வியாதியுடைய நபரோடு தொடர்ந்து வேலைசெய்ய நீங்கள் யாராவது ஒருவரை ஏற்படுத்த வேண்டும்:

1. குணமாக்குதலுக்கான ஜெபத்தை தொடர்ந்து செய்யுங்கள். இயேசு தொடர்ச்சியான ஜெபத்தை போதித்தார். அவர் அதை ஊக்கமின்மைபடுத்தவில்லை. உங்கள் மேல் ஜெபிக்கும்படி சபை மூப்பர்களை அழையுங்கள்.

2. உங்களுடைய விசுவாசத்தை தொடர்ந்து கட்டியெழுப்புங்கள்: குணமாக்குதலில் தேவனுடைய வசனமாகிய “ரேமாவை” படிப்பதின் மூலம் இதை நீங்கள் செய்யுங்கள்.

3. தொடர்ந்து உங்களுடைய பாவங்களை அறிக்கையிடுங்கள்: உங்களுடைய பாவங்களை தினமும் அறிக்கையிடுங்கள், ஆகவே அவை உங்களுடைய பௌதீக நிலைகளை மோசமாக்காது. தேவனுடைய வசனத்தில் கீழ்ப்படிதலோடு நடந்து ஜீவியுங்கள்.

4. உங்களுடைய ஆவிக்குரிய வல்லமையை உபயோகியுங்கள்: அனைத்து விசுவாசிகளும் குணப்படுத்தல் மற்றும் விடுதலைக்கான அடிப்படை சுதந்திரம் உள்ளவர்கள். அவைகள்:

-தேவனுடைய வசனம்.
-இயேசுவினுடைய இரத்தம்.
-உங்களுடைய சொந்த சாட்சியின் வசனம்.
-கட்டுவதற்கும் தளர்த்துவதற்குமான அதிகாரம்.
-ஜெபமும் துதியும்.
-எபேசியர் 6:10-18ல் பட்டியலிடப்பட்டுள்ள போர்க்களத்தின் ஆயுதங்கள்.
-பரிசுத்த ஆவியானவரின் வல்லமையும், அதிகாரமும்.

5. எங்கு பிரயோகிக்க முடியுமோ, அங்கு உங்கள் வாழ்க்கைமுறையை மாற்றுங்கள்: பாவமுள்ள, ஆரோக்கியமற்ற கிரியைகளை நீக்குங்கள். தேவனுடைய வசனத்தின் கீழ்ப்படிதலினாலும், உங்களுடைய வாழ்க்கையினுடைய நல்லிணக்கத்தின் மூலமாகவும் குணமாக்குதல் வருகின்றது.

6. வாழ்க்கைக்கும் சுகாதாரத்திற்குமான வேதாகம வழிகாட்டலை பின்பற்றுங்கள்: இந்த பாடத்-தின் இருபதாம் அதிகாரத்தில் இவைகள் கொடுக்கப்பட்டுள்ளது.

7. விசுவாசத்தின் சூழ்நிலைகளை உருவாக்கிக்கொள்ளுங்கள்: விசுவாசிகளோடு ஐக்கியப் படுவதின் மூலம் விசுவாசத்தில் ஒரு பகுதியாகி உங்களை சுற்றி ஓர் சூழ்நிலையை உருவாக்குங்கள்.

8. தேவனில் முழு நம்பிக்கையாக நீங்களாகவே அர்ப்பணியுங்கள்: முழுமையான நம்பிக்கை என்பது வாழ்வோ அல்லது சாவோ, வியாதியோ அல்லது ஆரோக்கியமோ அவருடைய கரத்தில் நீங்கள் இருக்கின்றீர்கள் என்பதை அறிதல்: யோவான் 10:29; யோபு 13:15; 19:26

9. துன்பப்படும்போது நேராக கிரியை செய்யுங்கள்: நீங்கள் முழுவதுமான குணமாக்குதலுக்கு காத்திருக்கும்போது, மற்றவர்கள் நேரான வழியில் தாக்கம் பெறுவதற்காக உங்களுடைய துன்பத்தில் நேராக கிரியை செய்யுங்கள். இதை நீங்கள் இவ்வாறு செய்யலாம்:

-நன்றி செலுத்துதல்: 1 தெசலோனிக்கேயர் 5:16-18.
-பலவீனத்தில் தேவனிடம் அவருடைய வல்லமையில் செயற்பட அனுமதித்தல்: 2 கொரிந்தியர் 12:9-10
-காத்திருக்கும்போது பொறுமையை காட்டுங்கள். மக்கள் மருத்துவ பரீட்சையின் போது வைத்திய அலுவலகத்தில் பொருத்து இருப்பார்கள். நாம் மருந்து வேலை செய்ய பொருத்து இருப்போம். நாம் ஏன் தேவனுக்கு பொறுத்து இருக்க கூடாது? பொறுமையாயிருப்பவர்கள் வாக்குத்தத்தத்தை சுதந்தரிப்பார்கள். எபிரெயர் 6:12; 12:2-

3; யாக்கோபு 1:2-4; 5:10-11; சங்கீதம் 27:14; 37:34; ஏசாயா 40:31; ரோமர் 5:3-5

-குறிக்கோள் இல்லாமல் துன்பப்படுதல் இல்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். இதை குறிப்பிடும் துன்பப்பட்டடோர் குறித்தான வேதாகம பதிவுகளை படியுங்கள்.

10. தேவனுடைய வாக்குத்தத்தத்தை பற்றிக்கொள்ளுங்கள்: தேவன் உங்களை கைவிட்டார் என உணர்ந்தாலும் கூட, இந்த வாக்குத்தத்தங்களை தொடர்ந்து பற்றிக்கொண்டு, இந்த ஜெபங்களை ஜெபியுங்கள்: சங்கீதம் 5:1-3; 6:2-9; 13:1-6; 22:19; 27:7; 31:21-22; 42:9-11; 54:1-2; 55:1-2; 70:1; 71:9-21; 86:6-7; 94:19; 102:1-7; 2 கொரிந்தியர் 4:17-18

11. கொடுங்கள் அப்பொழுது நீங்கள் பெறுவீர்கள்: வேதாகமமானது நாம் கொடுக்கும்போது பெறுகின்றோம் என்னும் தேவனுடைய இராஜ்ஜியத்தின் கொள்கையின் திறவுகோலை போதிக்கின்றது. நீங்கள் விசுவாசியானால், மற்றவர்களுக்கு தேவனுடைய குணமாக்கும் வல்லமையின் ஊழியத்தை தொடங்குங்கள். நீங்கள் கொடுக்கும்போது நீங்கள் பெறுகின்றீர்கள்.

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

2. குணமாக்கப்பட்டவர்களின் தொடர்ச்சியான கவனிப்பைகுறித்து கலந்துரையாடுக?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

3. இன்னும் குணமாக்கப்பட்டாதவர்களின் தொடர்ச்சியான கவனிப்பைகுறித்து கலந்துரையாடுக?

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. நீங்கள் ஜெபிக்கும்போது அல்லது மற்றவர்களுக்காக ஜெபிக்கும்போது இன்னும் குணமாக்குதல் வெளிப்படவில்லையா? கீழ்வரும் ஒவ்வொரு படிமுறைகளுக்கும் உங்களுடைய திட்டங்களை எழுதுங்கள்:

குணமாக்குதலுக்கு தொடர்ச்சியாக தரித்திருத்தல்:

..............................................................................................................................................

உங்களுடைய விசுவாசத்தை தொடர்ச்சியாக கட்டியெழுப்புதல்:

..............................................................................................................................................

உங்களுடைய குணமாக்குதலுக்கு தொடர்ச்சியாக தரித்திருத்தல்:

..............................................................................................................................................

உங்களுடைய பாவத்தை தொடர்ச்சியாக அறிக்கையிடுதல்:

..............................................................................................................................................

உங்களுடைய ஆவிக்குரிய வல்லமையை உபயோகித்தல்:

..............................................................................................................................................

உங்களுடைய வாழ்க்கை முறையை மாற்றுதல்:

..............................................................................................................................................

ஆரோக்கியமான வசனத்தின் வழிகளை பின்பற்றுதல்:

..............................................................................................................................................

விசுவாசத்தின் சூழ்நிலைகளை உருவாக்குதல்:

..............................................................................................................................................

தேவனில் உங்கள் மொத்த நம்பிக்கையையும் அர்ப்பணித்தல்:

..............................................................................................................................................

துன்புறும்போது நேரானதாக கிரியை செய்தல்:

..........................................................................................................................................

தேவனுடைய வாக்குத்தத்தத்ததை உரிமைகோருதல்:

..........................................................................................................................................

கொடுங்கள் அப்பொழுது பெறுவீர்கள்:

..........................................................................................................................................

2. நீங்கள் இன்னும் உங்களுடைய குணமாக்குதலை பெறாவிட்டால், யோவான் 11ஐ படியுங்கள் லாசருவை உயிருடன் எழுப்பிய கதையில், தாமதப்படுத்தப்பட்ட குணமாக்குதல் கூட தேவனுடைய வல்லமையின் மாபெரும் உண்மையை வெளிப்படுத்துகின்ற சந்தர்ப்பமாக அமைகின்றது.

3. குணமாக்குதலை பெற்ற ஒருவருக்காக ஜெபித்தீர்களா? அல்லது குணமாக்குதலை பெற்றீர்களா? குணமாக்குதலை தொடர்ந்துவரும் உங்களுடைய இந்த ஒவ்வொரு படிமுறை திட்டங்களையும் எழுதுங்கள்:

சாத்தானுடைய தாக்குதலை அடையாளம் காணுதல்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

சாத்தானுடைய தாக்குதலை எதிர்த்து நிற்றல்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

## அதிகாரம் பதினாறு

# எல்லையற்ற குணமாக்குதல்

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ தீராத வியாதியுடையவருக்கு ஊழியம் செய்வதற்கான விசேட அறிவுரைகளை கொடுக்க முடியும்.

### பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

> **ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை, எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.**
>
> **மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.**
>
> **ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். (2 கொரிந்தியர் 4:16-18)**

## அறிமுகம்

ஒவ்வொரு நபர்களும் மரிப்பதற்கு குறித்த காலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என வேதாகமம் குறிப்பிடுகின்றது:

> **அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிறபடியே... (எபிரெயர் 9:27)**

நீங்கள் தீராத வியாதியாயிருந்தால் கீழ்வரும் மேலோட்டங்களை படியுங்கள் அல்லது நீங்கள் ஊழியம் செய்யுமொருவர் தீராத வியாதியாயிருந்தால் உங்களுக்கு உதவும்படி இவைகளை உபயோகியுங்கள்:

## தீராத நோயுள்ளோருக்கு ஊழியம் செய்தல்

1. மரணத்திற்கேதுவான வியாதி உண்டு: யோவான் 11:4ல் லாசருவினுடைய வியாதி மரணத்திற்கேதுவான வியாதி அன்று என இயேசு கூறுகின்றார். இது மரணத்திற்கேதுவான வியாதி உண்டென அர்த்தப்படுகின்றது.

2. இயற்கையான மரணங்களில் இரண்டு வகையான மரணங்கள் உள்ளன:

அ. அகால மரணம்: ஆவி மீட்கப்படும்பொருட்டு சரீரம் மாம்சம் அழிவிற்கு திரும்புதல் (1 கொரிந்தியர் 5:4-5).

ஆ. நியமிக்கப்பட்ட மரணம்: வாழ்க்கையினுடைய இயற்கையான செயற்பாட்டின் காரணம் (எபிரெயர் 9:27; பிரசங்கி 3:2; 2 இராஜாக்கள் 13:14; ஏசாயா 38; 2 இராஜாக்கள் 20)

3. குணமாக்குதலுக்கான குறிக்கோள் அழியாமை அல்ல:

அ. சாதாரணமாக மரித்தவர்களையும்கூட மரணத்தினின்று இயேசு எழுப்பினார்.

ஆ. சில மக்கள் மோசேயைப்போல் தெய்வீக முதுமையிலிருந்து வைக்கப்படுகின்றனர். மற்றவர்கள் யோசுவா செய்தது போல, இயற்கையான வயதாகுதலை பின்பற்றுகின்றனர்.

இ. வேதாகமமானது குணமாக்குதலின் உடன்படிக்கையாக இவ்வுலகில் ஒருபகுதியாக அழியாமையை வாக்குப்பண்ணவில்லை. தெய்வீக குணமாக்குதலின் ஊழியம் செய்து வியாதியாய் மரித்த கிறிஸ்தவர்களை ஒருபோதும் தொந்தரவு செய்ய வேண்டாம். இது எலிசாவிற்கு நடைபெற்றது, சில வருடங்களுக்கு பின்பும் அவனுடைய எலும்பு மரித்தநபர்களை எழுப்பும் வல்லமையுள்ளதாய் இருந்தது. இது அவர் விசுவாசம் இல்லாமல் மரிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது!

4. தேவன் ஞானத்தையும் பகுத்தறிவையும் தர முடியும்: இது மரிப்பதற்கான நியமன நேரமா அல்லது இல்லையா என தேவனால் ஞானத்தை தர முடியும்:

அ. குறித்த நபரின் நியமன நேரம் என தேவன் வெளிப்படுத்தினால், இயேசு சிலுவையில் கள்ளனுக்கு செய்ததைபோல, அவர்களை ஆயத்தப்படுத்த உதவுங்கள்:

1. அவர்கள் இயேசுவை இரட்சகராக அறிந்திருக்கின்றார்களா என குறிப்பிடுங்கள்.
2. அவர்கள் விசுவாசியாயின், அறிக்கைப்படாத பாவங்கள் இல்லை என உறுதிப்படுத்துங்கள்.
3. அவர்களுடைய வணிக விவகாரங்களை பொருட்டு அமைக்க அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.
4. அவர்களுக்கும் மற்ற மக்களுக்கும் இடையில் ஏதாவது பிரச்சினைகள் இருக்குமாயின், உத்தரவாதம் செய்வதற்கு அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.
5. மரணம் எல்லோருக்கும் வருகின்றது என்பதை விளங்கப்படுத்த உதவுங்கள். விசுவாசிகளுக்கு, மரணம் என்பது நித்திய வாழ்வின் வரையறைக்குள்ளான சாதாரண ஓர் நிகழ்வு. நாம் அதை குறித்தான குறிக்கோளை மாற்றிக் கொள்ள வேண்டும். நாம் மரணத்தை எதிர்பார்க்க கூடாது, நாம் நிகழ்காலத்தில் ஒருவர் மேற்கொள்ளும்படியாக தேவையற்ற முக்கியத்துவத்தை வைக்க

தேவையில்லை. சரீரத்திலிருந்து இல்லாமல் செய்வதாயின் தேவனோடு சேர்க்கப்படுகின்றோம் (2 கொரிந்தியர் 5:8). மரணம் ஓர் எதிரி, அத்தோடு அதுவே கடைசியாக அழிக்கப்படகூடிய ஓர் எதிரி (1 கொரிந்தியர் 15:26). இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே, மரணமானது மேற்கொள்ளப்பட்டது என காட்டுவதற்கான “முதலாவது கனி” ஆகும், அத்தோடு அது அழிக்கப்படாதது. விசுவாசியை நிராயுதபாணியாக்கும் பயங்கரமான எதிரி இதுவே (1கொரிந்தியர் 15:55). இது விசுவாசியின் மரணத்திற்கான நேராமாயின் கூட, இது பயம், துன்பம், வேதனையின் உள்ளடக்கத்தின் தேவை அல்ல. வாழ்வின் கிருபையை போல் சாவின் கிருபையை தேவன் தருவார்.

6. தேவன் ஆளுகின்றார் என அவர்கள் விளங்குவதற்கு உதவி செய்யுங்கள். அவர்கள் நீண்டு வாழ எந்தவேளையிலும் தேவன் தலையீடு செய்ய முடியும்.
7. உயிர்த்தெழுதல் மற்றும் நித்தியத்தை குறித்து அவர்களுடைய சிந்தையில் கவனம் செலுத்துங்கள். கீழ்வரும் வேத வசனங்களை உபயோகியுங்கள்: யோபு 19:25-27; யோவான் 11:5-6; ரோமர் 8:10-11, 17-18, 22-23; 10:11; 1 கொரிந்தியர் 15:42-44,54-58; 2 கொரிந்தியர் 4:16-18; 5:1; 1 தெசலோனிக்கேயர் 4:13-18

ஆ. இது நியமன நேரத்தின் சாவு என தேவனிடமிருந்து உங்களுக்கு ஞானம் வராவிட்டால்:

1. தேவனுடைய சித்தப்படியான குணமாக்குதலுக்கு தொடர்ந்து ஜெபியுங்கள். இது உங்களுடைய சித்தத்தை காட்டுவது அல்ல, அவர்களை எடுப்பதா அல்லது எழும்ப செய்வதா என்னும் அவருடைய சித்தத்தின்படி தேவனை விட்டுவிடுதல்.

2. ஆவியில் ஜெபியுங்கள், தேவனுடைய சித்தத்தை பரிசுத்த ஆவியானவர் அறிவார் அத்தோடு சரியாக மஸ்தியஸ்தம் செய்வார் (ரோமர் 8:26)

3. வியாதியஸ்தரை அவர்களுக்குள்ளாகவே தேவனில் முழு நம்பிக்கை வைத்து அர்ப்பணிக்கும்படி ஊக்கப்படுத்துங்கள், ஆகவே வாழ்ந்தாலும் மரித்தாலும், அவருடைய கரத்தில் அவர்கள் இருக்கின்றார்கள் என அவர்கள் அறிவார்கள்: யோபு 13:15; 19:16; யோவான் 10:29

4. பௌதீக குணப்படுத்தலைப்போல சாவின் ஊழிய ஆயத்தத்தில் கவனம் செலுத்துங்கள்.

5. மரணம் எல்லையற்ற குணமாக்குதலாகும்: விசுவாசிக்கு மரணம் எல்லையற்ற குணமாக்குதலாகும். தேவனுடைய முழுமையான பிரசன்னத்தில் நீங்கள் நுழையும்போது வியாதியோ, மரணமே அங்கு இல்லை. வியாதியும், பாவமும் ஒத்தவை: நாம் இயேசுவை இரட்சகராகவும், சுகமாக்குபவராகவும் ஏற்றுக்கொள்ளும்போது, பாவத்தின் (வியாதி) ஆக்கினையிலிருந்து நாம் மீட்கப்படுகின்றோம். விசுவாசி என்ற வகையில் நாம் அதன் வல்லமையிலிருந்து தொடர்ந்து மீட்கப்படுகின்றோம், ஆனால் எதிர்காலத்தில் மட்டுமே நாம் தேவனிடம் செல்லும்போது அதனுடைய பிரசன்னத்திலிருந்து நாம் மீட்கப்படுகின்றோம்.

சாத்தான் தீமைக்கு பயன்படுத்தும் காரியங்களை நல்ல வழியில் மாற்றி பயன்படுத்தும் வழிகளை தேவன் வைத்திருக்கின்றார். மரணம் பாவத்திற்கான ஆக்கினை ஆகும், கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் ஜீவன் வந்தது. இதனாலேயே மரணம் வெற்றியினால் விழுங்கப்பட்டது. மரணத்தில், தேவன் எல்லையற்ற குணமாக்குதலை செயற்படுத்துகின்றார். மரணம் வெற்றியினால் விழுங்கப்பட்டது ஏனென்றால் கிறிஸ்துவில் மரித்தவர்கள் மீண்டும் எழும்புவார்கள்:

**இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்தியரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப் படுவோம்.**

**அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.**

**மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? (1 கொரிந்தியர் 15:51-55)**

ஓர் விசுவாசி மரிக்கும்போது நாம் சந்தோஷப்பட வேண்டும், ஏனென்றால் விலைமதிப்பற்ற ஒன்று நடை பெற்றுள்ளது:

**கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது. (சங்கீதம் 116:15)**

விசுவாசிக்கு, உலகத்தின் பாவத்திலிருந்து விடும்படும் பொருட்டு மரணம் வருகின்றது:

**பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில், இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம். இந்தக் கூடாரத்திலிருக்கிற நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம். இந்தப் போர்வையைக் களைந்துபோடவேண்டுமென்று விரும்பாமல், மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுவதற்காகப் போர்வை தரித்தவர்களாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறோம். (2 கொரிந்தியர் 5:1-2,4)**

மரணத்தில் விசுவாசி தேவனுடைய பிரசன்னத்தில் பிரவேசிக்கின்றார்:

**நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம். (2 கொரிந்தியர் 5:8)**

ஆசிரியர் பிரிஸ்பானி என்னும் பெயருடைய மனிதர் விசுவாசியுடைய இறந்த வீடு குறித்தான படம் ஒன்றை வரைந்தார். அதில் கடுப்பு ஆடை அணிந்த கம்பளிப்பூச்சு கூட்டங்கள் அழுது கொண்டிருக்கின்றன, அவைகள் இறுதி ஓய்வான இடத்தான கூட்டில் வைத்து வியாகுலப்படுகின்றன. அவர்களுக்கு மேலாக மிகவும் அழகான வண்ணத்துப்பூச்சு படபடக்கின்றது.

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

2. இந்த பாடத்தில் தீராத வியாதியுடையவருக்கு ஊழியம் செய்ய கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை கலந்துரையாடுக.

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. இந்த அதிகாரத்தில் குணமாக்கும் வாக்குத்தத்தத்தை படியுங்கள்:

**ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை, எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகைள நோக்கியிருக்கிற நமக்கு, அதி சீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன-மகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். (2 கொரிந்தியர் 4:16-18)**

உங்களிடம் அல்லத தீராத வியாதியுள்ளவர் ஒருவரோடு நீங்கள் ஊழியம் செய்யும்போது, இந்த கேள்விகளை கேளுங்கள்:

இந்த நிலைகள் ஆவிக்குரிய குறைவை உங்களில் ஏற்படுத்துகின்றதா?

.....................................................................................................................................................

வெளியக மனிதனின் நிலையை விட, உங்களுடைய உள்ளக மனித நிலை தினம் புதுப்பிக் கப்படுகின்றதா?

.....................................................................................................................................................

உங்களுடைய உள்ளக மனிதனை நீங்கள் எவ்வாறு புதுப்பிக்கின்றீர்கள்?

.....................................................................................................................................................

உங்களுடைய உள்ளக நிலையிலா அல்லது வெளியக பெறுமதியிலா உங்கள் அவதானத்தை செலுத்துகின்றீர்கள்?

.....................................................................................................................................................

உள்ளகத்திலிருந்து வெளியத்திற்கு எவ்வாறு உங்கள் குறிக்கோளை மாற்றுகின்றீர்கள்?

.....................................................................................................................................................

2. தீராத வியாதியுள்ள ஒருவருக்கு நீங்கள் ஊழியம் செய்யும்போது, தேவன் இது அவர்களுடைய சாவிற்கான நியமன நேரம் என வெளிப்படுத்தினால், இந்த படிமுறைகளுக்கூடாக கிரியை செய்யுங்கள்: நீங்கள் இயேசுவை இரட்சகராக அறிந்துள்ளீர்களா?

.....................................................................................................................................................

நீங்கள் விசுவாசிகளாயின், உங்களிடம் அறிக்கையிடப்படாத பாவங்கள் உள்ளதா? கோபம், கசப்பு போன்ற அறிக்கையிடப்படாத பாவத்திற்காக ஜெபியுங்கள். அறிக்கையிட்டு மன்னிப்பை பெற்றுக் கொள்ளுங்கள் (1 யோவான் 1:8-9)

..........................................................................................................................................

உங்களுடைய வியாபார வணிகத்தை சரியாக அமைத்துள்ளீர்களா? இல்லையாயின், நீங்கள் செய்யவேண்டிய காரியத்தை குறித்து பட்டியல் செய்யுங்கள்:

..........................................................................................................................................

நீங்கள் யாருக்காவது இழப்பீடுகள், மன்னிப்பு கேட்டல், பிரச்சனைகளை தீர்த்தல் போன்றவை உள்ளதா? இருக்குமாயின், அவர்களுடைய பெயர்களை எழுதுங்கள்:

..........................................................................................................................................

3. சாவிற்கான நியமன நேரம் இதுவென உங்களுக்கு தேவனிடமிருந்து ஞானம் வராவிட்டால், இந்த படிமுறைகளை பின்பற்றுங்கள்:

   -தேவனுடைய சித்தப்படியான குணமாக்குதலுக்கு தொடர்ந்து ஜெபியுங்கள்.

   -ஆவியில் ஜெபியுங்கள், தேவனுடைய சித்தத்தை பரிசுத்த ஆவியானவர் அறிவார் அத்தோடு சரியாக மஸ்தியஸ்தம் செய்வார்.

   -வியாதியஸ்தரை அவர்களுக்குள்ளாகவே தேவனில் முழு நம்பிக்கை வைத்து அர்ப்பணிக்கும்படி ஊக்கப்படுத்துங்கள், ஆகவே வாழ்ந்தாலும் மரித்தாலும், அவருடைய கரத்தில் அவர்கள் இருக்கின்றார்கள் என அவர்கள் அறிவார்கள்:

4. உங்களில் அல்லது நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவர் தீராத வியாதியாயிருந்தால், இந்த வாக்குத்தத்தத்திற்கு உரிமை கோருங்கள்:

   **இயேசு, அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான்ளூ தேவனாலே எல்லாம் கூடும் என்றார். (மத்தேயு 19:26)**

5. தேவன் இறையாண்மையுள்ளவர் என்பதை எப்போதும் ஞாபகத்தில் கொள்ளுங்கள், ஒரு நபர் தீராத வியாதியாய் இருந்தாலும் கூட, அவரால் எந்த சந்தர்ப்பத்திலும் தலையீடு செய்வதோடு, அவர்களுடைய வாழ்க்கையை விரிவாக்க முடியும். ஏசாயா 37:1 - 38:22 வரை எசேக்கியா இராஜாவின் கதையை வாசியுங்கள். எசேக்கியா மரிக்கும்போது, அவன் தேவனிடம் திரும்பி குணமாக்குதலை பெற்றுக் கொண்டான். இந்த தருணத்தில் அவனுடைய குறிப்பை கவனியுங்கள்:

| | | | |
|---|---|---|---|
| -அவல நிலை: | ஏசாயா 38:1 | -ஜெபம்: | ஏசாயா 38:2-3 |
| -வாக்குத்தத்தம்: | ஏசாயா 38:4-6 | -துதி: | ஏசாயா 38:9-20 |

# பகுதி ஆறு

## விடுதலைக்கான உபாயங்கள்

விடுதலையை பெற்று ஊழியம் செய்வதற்கான உபாயங்களை இந்த பகுதியில் நீங்கள் கற்பீர்கள். நீங்கள் கற்பீர்கள்:

- சாத்தான் யாரை கட்டுவித்துள்ளான்
- விடுதலைக்கான ஊழியம்
- தொடர் விடுதலைக்கான ஊழியம்

## அதிகாரம் பதினேழு

# சாத்தான் யாரை கட்டுவித்துள்ளான்

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ மனிதனுடைய சரீரம், ஆவி, ஆத்துமா ஆகியவற்றின் சாத்தானின் பிரதான முன்று வகை தாக்குதல்களை அடையாளம் காணவும்,
- ☐ சாத்தானிய வல்லமையை கையாளும்பொழுது ஆவிகளை பகுத்தறியும் பெறுமதியான வரத்தை விபரிக்கவும்,
- ☐ சாத்தானால் ஒடுக்கப்படுதல் என்றால் என்ன என்னும் அர்த்தத்தை விபரிக்கவும்,
- ☐ சாத்தானால் ஒடுக்கப்பட்ட நபரின் குணாதிசயத்தை அடையாளம் காணவும்,
- ☐ சாத்தான் எவ்வாறு கட்டுப்பாட்டை அடைகின்றான் என்பதை விபரிக்கவும் முடியும்.

### பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

> **அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து... (லூக்கா 9:1)**

### அறிமுகம்

நீண்ட காலங்களுக்கு புறஜாதி கலாச்சாரங்களில் பல விநோக கிரியைகளின் மூலம் சாத்தானிய கிரியையானது மறுக்கப்பட்டிருக்கின்றது. வாழ்க்கை, வீடுகள், சபைகள் மற்றும் ஜாதிகளை தாக்கும் இவைகள் பிரச்சனையாக கொள்ளப்படவில்லை. ஆனால் உங்களை குறித்து வேதனை-யடைந்த, பாதிக்கப்பட்ட, அந்தகாரத்தின் வல்லமையால் சாத்தானியம் என்று அறியப்பட்டவர்களால் ஒடுக்கப்பட்டவர்களாக அநேக மக்கள் கூட இருக்கின்றார்கள். சாத்தானிய வல்லமைகளால் தாக்கப் பட்டவர்களுக்கு இயேசு ஊழியம் செய்தார் (அப்போஸ்தலர் 10:38). இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை பரப்பும்போது இதேப்போல் செய்யும்படி அவருடைய சீஷர்களுக்கு இயேசு நியமித்தார் (மத்தேயு 10:1)

சாத்தானிய வல்லமைகளினால் தாக்கப்பட்டவர்களுக்கு ஊழியம் செய்யும்படியான அறிவுறுத்-தல்களை இந்த அதிகாரம் தருகின்றது. சுவிசேஷத்தை பெறும்படிக்கு இந்த கட்டின் அகப்பட்டவர்கள் முதலாவது விடுதலை செய்யப்படவேண்டும். (சர்வதேச அறுவடை நேர நிறுவனம் *“ஆவிக்குரிய போர்வியூகங்கள்: ஆவிக்குரிய போராட்டத்திற்கான கையேடு”* என்று வழங்கும் பாடத்தில் சாத்தானிய கிரியைகளும், அவனுடைய சாத்தானிய சேனைகளும் பற்றி விரிவாக்கப்பட்டுள்ளது. ஆவிக்குரிய யுத்தத்தில் நீங்கள் தெரியாதிருந்தால், விடுதலைக்கான ஊழியத்தை செய்யும் முன்னர், இந்த பாடத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள்).

## இயேசுவும் சாத்தான்களும்

இயேசுவினுடைய ஊழியமும், போதனையும் சாத்தானிய ஆவிகள் உண்மையான தீய சேனைகள் என நிருபணம் செய்கின்றது. சாத்தான்களை குறித்து இயேசு என்ன போதித்தார் என்பதும், அவைகளோடு எவ்வாறு இடைப்பட்டார் என்பதும், சாத்தானிய உபாயங்கள் குறித்தும் பெறுமதியான தகவல்களை தருகின்றது.

சாத்தானிய கூட்டத்தில் சாத்தானே ஆளுகை செய்கின்றான் என்னும் கொள்கைளை இயேசு ஏற்றுக் கொண்டிருந்தார். தேவனுடைய இராஜ்ஜியம் வந்திருப்பதற்கான ஓர் அடையாளம் சாத்தான்களை துரத்துதலே என அவர் கூறினார். சாத்தானியத்தை குறித்து இயேசு போதித்த சுருக்கத்தை மத்தேயு 12:22-30, மாற்கு 3:22-27, லூக்கா 11:14-23 ல் வாசிக்கவும்.

இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் அநேக பகுதி சாத்தனியத்தை சம்பந்தப்படுதலோடு உள்ளடக்கி இருந்தது. இயேசு கிறிஸ்துவின் உதாரணமும், அவருடைய நாமத்தின் அதிகாரமும் சாத்தானிய வல்லமைகளோடு சம்பந்தப்படுதலோடான அடிப்படை வசனங்களை தருகின்றது. சாத்தானிய வல்லமைகளோடு வந்த அனைவருக்கும் இயேசு ஊழியம் செய்தார். பேதுரு இயேசுவை குறித்து கூறினார்:

> **நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார், தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார். (அப்போஸ்தலர் 10:38)**

## சாத்தானியம் எவ்வாறு செயற்படுகின்றது

தேவனை அவருடைய திட்டத்தை மற்றும் குறிக்கோளை, அவருடைய மக்களை எதிர்க்கும்படியாக சாத்தானியம் பிசாசுகளினால் உபயோகிக்கப்படுகின்றது. சுவிசேஷத்தின் உண்மைகளிலிருந்து தடுப்பதற்கு அவைகள் அவிசுவாசிகளோடும் போராட்டம் செய்கின்றன. தானியேல் 10:12-13ல் பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி பற்றி குறிப்பிடும் இடத்தில் சாத்தான் விசேட பிரதேசத்தை கட்டுப்படுத்துகின்றான் என அறிகிறோம். உலகத்தில் பிசானின் கிரியைகளை அடையும்பொருட்டு -- மனிதர்களுக்கூடாக -- சாத்தான் கிரியை செய்கின்றான்.

சாத்தானுடைய முக்கிய குறிக்கோள் தேவனுடைய சித்தத்தை எதிர்ப்பதே. “சாத்தான்” என்னும் வார்த்தையின் அர்த்தம் “எதிராளி” ஆகும். சாத்தானுடைய முதலாவது எதிரி தேவன் ஆகும் (யோபு 1:6; மத்தேயு 13:39). அவனுடைய இரண்டாவது எதிரி மனிதன் ஆகும் (சகரியா 3:1; 1 பேதுரு 5:8).

சாத்தானுக்கு பல இயல்புகள் உள்ளன. “பொய்யின் ஆவி” என 1 இராஜாக்கள் 22:23ல் ஒரு சாத்தான் தன்னில் அடையாளப்படுத்துகின்றான். “ஊமையும் செவிடுமான” ஆவி என மாற்கு 9:25ல் அடையாளப் படுத்தப்படுகின்றது. பலவீனத்தின் ஆவி, ஏமாற்றும் ஆவி, அசுத்த ஆவி என பல்வேறுப்பட்ட இயல்புகளில் பிசாசு இயங்குகின்றது. மனிதனுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்திற்கு எதிராக யுத்தம் செய்யும்படி சாத்தான் அவைகளை உபயோகிக்கின்றான்:

### பலவீனத்தின் ஆவிகள்:

அவிசுவாசிகள் மற்றும் விசுவாசிகளின் சரீரங்களை இந்த ஆவிகள் பிடிக்கின்றன. லூக்கா 13:10-17ஐ

வாசித்து பாருங்கள். இந்த பெண்மணி பலவீனத்தின் ஆவியால் பிடிக்கப்பட்டிருந்தாள். அவள் ஞாயிறு கூட்டத்தில் பங்குபற்றியிருந்தாள், இயேசு அவளை “ஆபிரகாமின் குமாரத்தி” என அழைத்தார். இந்த இரண்டு காரியங்களும் அவள் தேவனை பின்பற்றுகின்றவள் எனவும், சாத்தான் அவளுடைய சரீரத்தை 18 வருடங்கள் பிடித்திருந்தன எனவும் சுட்டிக்காட்டுகின்றன.

சரீரத்தை பிடிக்கும் சாத்தானிய வல்லமைக்கான மேலதிக உதாரணங்களை மத்தேயு 12:22; 17:15-18; அப்போஸ்தலர் 10:38; 2 கொரிந்தியர் 12:7ல் பார்க்க.

## ஏமாற்றும் ஆவிகள்:

இந்த ஆவிகள் மனிதனுடைய ஆவிகளை பிடித்து, பொய்யான போதனைகளை அவனை நம்பும்படி ஏமாற்றி, நித்திய தண்டனைக்குள்ளாக ஆக்கினைப்படுத்துகின்றான். அவை பிழையான உபதேசங்கள், புரட்டுக்கள், கள்ள கிறிஸ்துக்கள், கள்ள போதனையாட்களின் ஆவிகள் ஆகும்:

> **ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். (1 தீமோத்தேயு 4:1)**

இந்த ஏமாற்றும் ஆவிகள் ஏமாற்றுபவை ஆகும். இவைகள் நடப்பிக்கும் அற்புதங்கள் சில விசுவாசிகளை அவர்கள் தேவனாக செய்ய வழிவகுக்கும்.

> **அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள், அவைகள் பூலோக மெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது. (வெளிப்படுத்தல் 16:14)**
>
> **அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்,**
>
> **கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கி-கரியாமற்போனடியால் அப்படி நடக்கும். (2 தெசலோனிக்கேயர் 2:9-10)**

அப்போஸ்தலரில் குறிக்கப்பட்டுள்ள ஏமாற்றும் ஆவிகள் “குறி சொல்லும் ஆவிகளை” உள்ளடக்கும்:

> **நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள். (அப்போஸ்தலர் 16:16)**

குறி சொல்லும் ஆவிகள் அல்லது “இதையொத்த ஆவிகள்” அதிஷ்டம் கூறுபவர்கள், மந்திரவாதிகள், பனை, படிக பந்துக்கள், தேயிலை இலை வாக்கியம் போன்றவைகள் மூலம் இயங்குகின்றன. வேதமல்லாத முறைகளின் மூலம், இந்த குறிசொல்லும் ஆவிகள் எதிர்காலத்தையும், இயல்பாக தெரியப்படாத காரியங்களையும் கூறுகின்றன. லேவியராகமம் 19:31; 20:6; 20:27; உபாகமம் 5:9; 18:10; 1 சாமுவேல் 28:3ல் இதையொத்த ஆவிகளுக்கெதிரான எச்சரிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

ஏமாற்றும் ஆவிகள் மனச்சாட்சியை குன்ற செய்தல், ஏமாற்றுதல், வசீகரித்தல், சோதனைப்படுத்தல், மயக்குதல், ஆசை காட்டுதல், வசீயம், கிளர்ச்சி, தூண்டுதல், ஈர்த்தல் மற்றும் ஏமாற்றுதல் ஆகியவைகளை செய்கின்றன. ஏமாற்றும் ஆவிகள் “வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள்”களோடு செயல்படுகின்றன. ஒவ்வொரு துர் உபதேசங்களிலும், போதனைகளின் தவறுகள் இருக்கும் ஒவ்வொருவிடத்திலும் அவைகள் இருந்து இயங்குகின்றன. சாத்தான் துதிக்கு ஏங்குகின்றது எனவும், அதை பெற எவ்வழியிலும் பெறுவான் என்வும் ஞாபகத்தில் கொள்ளுங்கள். ஏமாற்றும் ஆவிகள் மனிதர்களை விக்கிரகத்தை வணங்கி, தன்னைத்தான் கூட வணங்க சிக்க வைக்கின்றான்.

### அசுத்த ஆவிகள்:

இந்த சாத்தானிய ஆவிகள் இயல்பான மனிதனின் ஆத்துமாவை பிடிக்கின்றன. முறையற்ற செயல்கள், அசுத்த எண்ணங்கள், சோதனைகள் மற்றும் மனிதர்களை கட்ட சாத்தான் பயன்படுத்தும் வேறு உபாயங்கள் ஆகியவற்றிற்கு இவைகளே பொறுப்பாகும். சாத்தான் தனிநபர்களை அசுத்த ஆவிகளால் கட்டுப்படுத்தும்போது, வீடுகளில், சபைகளில், தனிநபர்களால் பீடிக்கப்பட்டுள்ள இந்த குழுக்களின் தேசியத்திற்கூடாகவும் அவன் செயற்பட முடியும். சமூக கட்டமைப்பில் பல்வேறு மட்டங்களில் இவ்வாறே சாத்தான் கிரியை செய்கின்றான். அசுத்த ஆவிகளின் உதாரணத்திற்கு மத்தேயு 10:1; 12:43 மற்றும் மாற்கு 1:23-26ல் பார்க்க.

## அடக்குமுறை, அலைக்கழிப்பு, உடமை

தீய ஆவிகள் மக்களை அடக்க முடியும். அடக்கமுறை என்பது சுமத்துதல், எதிராக கொண்டுவரல் அல்லது வெளியகத்திலிருந்து கட்டுதல் என அர்த்தப்படும். இந்த அடக்குமுறைகள் தீய சேனைகளினால் பல்வேறுப்பட்ட வழிகளில் பூரணமாக்கப்படுகின்றது. அவைகள் மன அழுத்தத்தை கொண்டு வந்து, மறையான சூழ்நிலைகளை ஏற்படுத்தி, தற்கொலை, ஒழுக்கக்கேடு, அவிசுவாசம், பயம் போன்ற எண்ணங்களான பிழையான எண்ணங்களை மனதில் செலுத்துகின்றன. சாத்தான் பிசாசின் சூழ்நிலைகளை ஏற்படுத்தி, மனிதன் பாவம் செய்யும்படியான சோதனையான சூழ்நிலைகளை ஏற்படுத்துகின்றான்:

> **நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார், தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். (அப்போஸ்தலர் 10:38)**

சாத்தான் மனிதர்களையும் சுதந்தரிக்க முடியும். ஒன்றோ அல்லது இரண்டோ தீய ஆவிகள் மனித சரீரத்தில் வசித்து, முற்றுமுழுவதுமாக கட்டுப்பாட்டை ஏற்படுத்தி, அவர்களை பலியானவர்களாக ஆக்குவதின் இந்நிலைகளின் மூலம் சாத்தான் உடமையாக்குகின்றான். உடமை என்பதை விட “சாத்தானியவர்கள்” என்னும் வார்த்தையை சில மக்கள் உபயோகிக்கின்றனர், ஆனால் இந்த சொற்பதத்தை விட, உடமையாக்கப்பட்ட மனிதன் சாத்தானிய வசிப்பிடத்திற்கு வீடாகின்றார். “உடமை” என்பது ஒரு நபர் தன்னுடைய சொந்த பாவத்திற்கு தான் பொறுப்பல்ல என்னும் அர்த்தமாக அமையாது. அவனுடைய பொறுப்பு அவனுடைய நிலைமையை வழிவகுத்த காரணிகளை சாரும்.

உடமை சித்தத்தின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றது. ஆவிகளை தொடர்பு கொள்ளுதல், சாபத்தை உச்சரித்தல், மந்திரவாதி ஆகுதல், வேறு வல்லமையான சக்திகளை பாதுகாத்தல்

ஆகியவற்றால் ஒரு நபர் ஆவிகளின் வல்லமைகளை அடைவதற்கு சித்தமாகின்றார். உடமை சித்தம் இல்லாமையால் கூட ஏற்படலாம். ஒரு நபர் உடமையாக்கப்பட கொடாவிட்டாலும், பாவமான எண்ணங்கள், கிரியைகள், அமானுஷ்ய சக்திகளின் விளைவுகளோடு தொடர்பு கொள்ளுதல் ஆகியவற்றிற்கூடாக உடமைபடலாம்.

பெற்றோர்களில் செயற்படும் தீய சக்திகள் மற்றும் பெற்றோர்களின் பாவங்கள் அடுத்த சந்ததியையும் தாக்கம் செய்யலாம். (யாத்திராகமம் 20:5; 34:7; உபாகமம் 5:9; பார்க்க) இது சாத்தானிய உடமையின் நிலை அல்லது மாற்கு 7:24-30 மற்றும் 9:17-21ல் பதிவுசெய்யப்பட்டுள்ள பிசாசினால் பீடிக்கப்பட்ட குழந்தையின் நிலை ஆகும்.

பிசாசின் அலைக்கழிப்பு போன்ற ஓர் காரியமும் உண்டு. இது சாத்தான்களுடன் சேருதல் அல்லது விருப்பத்தினால் அலைக்கழிப்புக்கு உள்ளாகுதல் போன்ற நிலைகள் ஆகும். இது அமானுஷ்யம், சாத்தானியம் போன்றவற்றிலுள்ள இயல்புக்குமாறான விருப்பம், விருப்பங்களை கட்டுப்படுத்தும் சாத்தான் மற்றும் ஆணையிடுகின்ற முறையில் துரத்துதல் ஆகும். சாத்தானிய வல்லமைகளோடு அலைக்கழிக்கபடுத்தல் அவர்களை உடமையாக்க செய்யப்படலாம்.

## சாத்தான் விசுவாசிகளை தாக்க முடியுமா?

உண்மையான விசுவாசி சாத்தானால் உடமையாக்கப்பட முடியாது, ஏனென்றால் தீய ஆவியின் அதே ஆலயத்தில் பரிசுத்த ஆவியானவரால் வசிக்க முடியாது:

> **உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா?**
>
> **கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். (1 கொரிந்தியர் 6:19-20)**

நீங்கள் தேவனுக்கு உடையவர்களாகி பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருந்தால், ஒரே நேரத்தில் சாத்தானுடைய ஆவியினால் நிரப்பப்பட்டு, சாத்தானுக்கு உடையவர்களாக மாட்டீர்கள். பரிசுத்த ஆவியானவர் சாத்தானோடு ஒரே “ஆலயத்தில்” தங்கியிருக்க மாட்டார்.

ஆனால் இது விசுவாசிகள் சாத்தானிய வல்லமையினால் தாக்கப்பட மாட்டார்கள் என அர்த்தப்படாது. இது நாம் போராடும் எதிர் வல்லமையாகும். ஏற்கனவே கலந்துரையாடப்பட்ட அடையாளங்களின்படி, அடக்கு முறையின் மூலம் சாத்தான் வெளியிலிருந்து விசுவாசிகளை தாக்க பிசாசுகளை உபயோகிக்கின்றான். ஆனால் அவனால் உண்மையான விசுவாசியை அடைய முடியாது. “அடைதல்” என்பது உள்ளான ஆக்கிரமிப்பை குறிக்கும். “ஒடுக்குதல்” அல்லது கட்டுதல் வெளியகத்திலிருந்தான கட்டுப்படுத்தலை குறிக்கும். தீய ஆவிகளினால் மேற்கொள்ளப்படும் இந்த ஒடுக்குதலும் கட்டுதலும் சாத்தானை தீய நோக்கங்களுக்காக அவைகளை உபயோகிக்க அனுமதிக்கின்றது.

அனைத்து மனிதகுலத்தின் பாவத்திற்கு துன்பப்படும் இயேசுவை திசைதிருப்ப சாத்தானால் உபயோகிக்கப்பட்ட இயேசுவின் சீடனான பேதுருவுக்கும் இதுவே நடைபெற்றது. இயேசு துன்புறுத்-தலை விபரிக்கும்போது, அவர் பேருதுவின் வார்த்தையிற்கூடாக சென்றார்:

**ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை. (மத்தேயு 16:22)**

இயேசு பேதுருவிடம் கூறினார்:

**எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய். தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார். (மத்தேயு 16:23)**

பேதுரு உண்மையிலேயே சாத்தான் என இயேசு கூறவில்லை. இந்த தருணத்தில் பேதுரு சாத்தனை அவனுக்கூடாக இயங்குவதற்கு அனுமதித்துள்ளான் என அவர் அறிந்தார். அவன் சாத்தானிற்கு உடமையானவன் அல்ல, ஆனால் அவன் சாத்தானுடைய ஆவிகளை அவனில் செல்வாக்கு செலுத்த அனுமதித்திருந்தான். விசுவாசிகள் -- தமது சொந்த கிரியைகளினால் -- "இடம் கொடுக்க" முடியும் அல்லது சாத்தான் அவைகள் உபயோகிப்பதற்கு இடம் கொடுக்க முடியும் (எபேசியர் 4:27)

ஒரு நபர் மறுபடியும் பிறக்கும்போது, ஜீவ புஸ்தகம் என அழைக்கப்படும் பரலோகத்திலுள்ள விசேட புஸ்தகத்தில் அவனுடைய பெயர் எழுதப்படுகின்றது. இந்த புஸ்தகத்தில் உள்ள பெயர்களில் உள்ளவர்கள் மாத்திரமே நித்தியமாக பரலோகத்தை வசிப்பிடமாக கொள்ள முடியும்:

**ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான். (வெளிப்படுத்தல் 20:15)**

இந்த புஸ்தகத்தில் உங்களுடைய பெயரை எழுதுதல் முடியுமான காரியம் ஆகும், ஆனால் பாவமான வாழ்க்கைக்கு திரும்பினால், உங்கள் பெயர் துடைத்தொழிக்கப்படும்:

**ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும். ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். (வெளிப்படுத்தல் 3:5)**

அறிக்கைப்பண்ணப்படாத பாவத்தை ஒரு விசுவாசி தொடர்ந்து வைத்திருந்தால், கிறிஸ்தவராக இருக்கும் நிறுத்தத்தை அவர் கொண்டுள்ளார். அப்போஸ்தலனாகிய பவுல் மற்றவர்களுக்கு பிரசங்கித்த பின் தான் "தூக்கியெறியப்பட" முடியாது என அவருடைய சொந்த நிலையை வெளிப் படுத்துகிறார்.

**மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். (1 கொரிந்தியர் 9:27)**

பவுல் மற்றவர்களுக்கு பிரசங்கம் செய்தாலும் கூட, பாவத்தை குறித்து, குறிப்பாக மாம்சத்தில் அறிக்கைப்பண்ணப்படாத தொடர்ச்சியான பாவங்கள் தன்னுடைய சொந்த ஆத்துமாவை இழக்கும் என அறிந்திருந்தார்.

தொடர்ச்சியான பாவத்தில் வாழ்ந்தால் இறுதியில் பின்வாங்கும் நிலைக்கு நீங்கள் தள்ளப்படுவீர்கள், அத்தோடு நீங்கள் இயேசு கிறிஸ்துவின் உண்மையான பின்பற்றுபவராக தொடர்ந்து இருக்க முடியாது. நீங்கள் தொடர்ந்தும் அறிக்கையிடப்படாத பாவங்கள் அறிந்திருந்தால், எந்த தருணத்தில் நீங்கள் கிறிஸ்துவின் பின்பற்றுபவராக அறியப்படுவீர்கள் எனவும் எப்போது சாத்தானுடைய இராஜ்ஜியத்தின் பகுதியாளராக மாறுவீர்கள் எனவும் யாராலும் சொல்ல முடியாது. அந்த தருணத்தை தேவனே தீர்மானிக்கின்றார். ஆனால் இது நடக்கும்போது, சாத்தானின் உடமையிற்கான சந்தர்ப்பத்தின் உள்ளடக்கத்தோடு, எதிரிக்கு மாபெரும் தாக்குதலை நீங்கள் உங்களிலேயே திறக்கின்றீர்கள். இதனாலேயே நீங்கள் பாவம் செய்த உடனயே பாவத்தை அறிக்கையிட்டு, பாவத்திலிருந்து திரும்புதல் மிகவும் முக்கியமானதர்கும்.

> **நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவரா யிருக்கிறார்.**
>
> **நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர் களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது. (1 யோவான் 1:9-10)**

வேதாகமத்தில் பல இடங்களில் இயேசு தேவனுடைய வசனமாக அழைக்கப்பட்டார். தேவனுடைய வசனம் உங்களில் நிலைத்திருக்காவிட்டால், இயேசு உங்களில் நிலைத்திருக்க மாட்டார்.

## சாத்தான்கள் எவ்வாறு கட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றன

சாத்தான்கள் பல வழிகளில் கட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றன:

1. **பரம்பரையிற்கூடாக:** பெற்றோர்களுடைய ஒடுக்கம் மற்றும் உடமையின் காரணமாக ஒரு நபர் சாத்தானின் ஒடுக்கம் மற்றும் உடமைக்கு ஆளாகின்றார். இவைகள் பிள்ளைகளின் மேலான சாத்-தான் செல்வாக்கு ஆகும் (யாத்திராகமம் 20:5; 34:7; உபாகமம் 5:9).

2. **மனதிற்கூடாக:** சத்தானின் மிகப்பெரிதான யுத்தக்களம் மனதாகும். சாத்தான் உங்களுடைய எண்ணங்களை கட்டுப்படுத்தினால், உங்களுடைய கிரியைகளையும் கூட கட்டுப்படுத்துவான். மனதை கட்டுப்படுத்துதல் இன்மையாயின், சித்தத்தை உபயோகிக்கும் இன்மை விளைவாக ஏற்படுகின்றது. இது பாவமான கிரியையிற்கு வழிநடத்தும். தொடர்ச்சியாக பாவ எண்ணங்களையும், கிரியைகளையும் தொடர்ந்தால், ஒடுக்கத்திலிருந்து உடமையாக்கப்படுத்தலுக்கு நடத்தப்படுதலோடு, இறுதியில் ரோமர் 1ல் விபரிக்கப்பட்டுள்ள கொள்கையற்ற மனதிற்கு நடத்தும். பிற்பாடு மனம் தீய சிந்தைகளினால் கட்டுப்படுத்தப்படும்.

மனதின் மூலமாக சாத்தான் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வருகின்றான்- போதைபொருளின் மாற்றங்கள் சாத்தானை எதிர்க்கும் இயலுமைகளை குறைத்து, பெரிதான ஏற்றுக்கொள்ளுதலை அதிகரிக்கும். “மூளை சலவை” மற்றும் “மனதை கட்டுப்படுத்தல்” போதனைகள் கூட பிரவேசிக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றன.

3. **பாவமான கிரியைகளுக்கு ஊடாக:** பாவமான எண்ணங்கள் சீக்கிரத்தில் பாவமான கிரியைகளினால் நிறைவாக்கப்படுகின்றது. உதாரணத்திற்கு விபசார சிந்தனைகள், விபச்சார கிரியைகளை

செய்வதினூடாக நிறைவேற்றப்படுகின்றது. பாவம் கலகத்தை உண்டு பண்ணும், கலக எண்ணங்களும் கிரியைகளும், சாத்தானுடைய கிரியையிற்கு நுழைவாயிலை கொடுக்கின்றது.

ஒரு விசுவாசி பாவமுள்ள எண்ணங்களையும் அல்லது கிரியைகளையும் தொடருவாராயின் அவர்கள் சாத்தானுக்கு "இடத்தின் வழியை" கொடுக்கின்றார்கள் (எபேசியர் 4:27). எதிரி செயற்பட அநேக ஆவிக்குரிய அறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. பாவத்தின் உள்ளடக்கமான அமானுஷ்யம், பொருட்கள், இலக்கியம், ஆய்வுகள் என்னும் கிரியைகள் முக்கியமாக பயங்கரமானவைகளும், சாத்தானிய வல்லமைகளை கவருபவைகளாகவும் இருக்கின்றன.

பாவத்தில் வாழும் அவிசுவாசி சாத்தானிய வல்லமையின் ஒடுக்கத்திற்கு மாத்திரம் திறந்தவர் அன்றி, உடமையிற்கும் திறந்தவராவர். ஆவிக்குரிய யுத்தக்களத்தில் சமாந்திரமான நிலை என்பது இல்லை. நீங்கள் நன்மையான அல்லது தீமையான பக்கத்தில் இருக்கின்றீர்கள். நீங்கள் தேவனுக்கு அல்லது சாத்தானுக்கு உடமையாளராக இருக்கின்றீர்கள். நீங்கள் சாத்தானுக்கு உடமையாகி, இயேசு கிறிஸ்துவிற்குள் புதிய பிறப்பை அனுபவிக்காவிட்டால், நீங்கள் அவனில் உபயோகிக்கப்பட்டு, அவனுடைய சித்தப்படி ஒடுக்கம் அல்லது உடமையாக்கப்படுகின்றீர்கள்.

4. **விருப்பங்களுக்கு ஊடாக:** அமானுஷ்ய கிரியைகளை செய்யும்பொருட்டு சில மக்கள் சாத்தானிடம் சாத்தானிய வல்லமையை கேட்கின்றனர்.

5. **காலியான இல்லத்திற்கு ஊடாக:** ஒரு நபரின் சரீரத்தில் இருக்கும் சாத்தான் அவனுடைய சொந்த வீடுபோல அவைகள் வாசம் செய்கின்றன (மத்தேயு 12:44) சாத்தானிய வல்லமையிலிருந்து விடுவிக்கப்படும் ஒரு நபர் மறுப்பிறப்பினால் மாத்திரம் தன்னுடைய வீட்டை நிரப்பமாட்டார், பரிசுத்த ஆவியானவரின் மூலமாகவும் நிரப்பப்படுவர், பரிசுத்த ஆவியானவரின் மீள் பிரவேசம் நடைபெறலாம்.

6. **அனுமதிப்பதன் மூலம்:** விசேட குறிக்கோள்களை அடையும்பொருட்டு சாத்தானிய வல்லமைகளை சிலவேளைகளில் தேவன் அனுமதிக்கின்றார். இது ஓர் பரீட்சிப்பிற்காக செய்யப்படலாம் -- யோபுவினுடைய சம்பவத்தைப்போல -- அல்லது பாவத்திற்கான நியாயத்தீர்ப்பு -- சவுல் இராஜாவின் உதாரணத்தை போல.

## சாத்தானுடைய வல்லமைகளைளோடு யார் தொடர்புபடுகின்றனர்?

சாத்தானுடன் தொடர்புபடுதல் விசேட ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்ட ஏதோவொன்றோ அல்ல. எல்லா விசுவாசிக்கும் சாத்தானிய வல்லமையை மேற்கொள்ள முடியும் என இயேசு கூறினார்:

> **விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்... (மாற்கு 16:17)**

சாத்தானுடைய வல்லமைகளோடு சம்பந்தப்படும் இயலுமைகளை இயேசு தமது சீஷர்களுக்கு கொடுத்தார். அவர் முதலாவது சீஷர்களுக்கு வல்லமைகளை ஒப்படைத்தார்:

> **அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். (மத்தேயு 10:1)**

**அவர் பன்னிருவரையும் அழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்த அவர்களுக்கு அதிகாரங்கொடுத்து... (மாற்கு 6:7)**

அவர் அதே வல்லமைகளை அனைத்து விசுவாசிகளுக்கும் கொடுத்தார்:

**விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். (மாற்கு 16:17)**

**வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள். இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள். (மத்தேயு 10:8)**

விசுவாசத்திற்கு ஓர் அடிப்படை வேதாகமத்தில் இல்லை. தேவன் இந்த முக்கியமான ஊழியத்தை குறிப்பிட்ட மக்கள் குழுவிற்கு கட்டுப்படுத்தப்பட நோக்கம் கொண்டார். சமாரியாவில் அசுத்த ஆவியை விரட்டுவதற்கு தேவன் பிலிப்பு என்பவரை உபயோகித்தார் (அப்போஸ்தலர் 8). ஆனால் இது ஸ்கேவாவின் மகன் கண்டதைப்போல (அப்போஸ்தலர் 19) சரியான ஆயத்தங்கள் இல்லாமல் சாத்தானிய வல்லமைகளை விசுவாசிகள் அணுகுதல் வேண்டும் என்னும் அர்த்தம் அல்ல.

சாத்தானியத்திற்கு மேலான நிலைகளில் விசுவாசிகள் அடையக்கூடாது என்பது முக்கிமானதாகும். நாம் சாத்தான்களுக்கு அதிகமாயிருக்க அழைக்கப்படவில்லை. "சாத்தான்களை துரத்துவதற்கான" எந்த ஆவிக்குரிய வரங்களும் இல்லை. ஆனால் நீங்கள் சாத்தானிய வல்லமைகளுக்கு பயப்பட தேவையில்லை. சாத்தானின் தாக்குதலுக்குள்ளானோர் எதிர்கொண்டால், தேவனிடமிருந்தான விடுதலையை கொண்டுவர உங்களுக்கு வல்லமை இருக்க வேண்டும்.

## சாத்தானுடைய பிரசன்னத்தை அறிதல்

சாத்தானுடைய வல்லமைகளை மேற்கொள்ளுவதற்கு அவனுடைய பிரசன்னத்தையும், உபாயங்களையும் அறிந்திருத்தல் முக்கியமானதாகும். இந்த நோக்கத்திற்காக பரிசுத்த ஆவியானவர் விசேட ஆவிக்குரிய வரத்தை கொடுத்திருக்கின்றார். இந்த வரம் "ஆவிகளைப் பகுத்தறிதல்" என அழைக்கப்படுகின்றது. (1 கொரிந்தியர் 12:10).

பகுத்தறிதல் என்பது "கண்டுபிடித்தல், எடைபோடுதல், வேறுபாட்டை உண்டாக்குதல்" ஆகும். ஆவிகளை பகுத்தறியும் வரமானது மற்றவர்களில் செயற்படும் ஆவிகளை அறிய விசுவாசிகளுக்கு இயலுமை அளிக்கின்றது. இது அவனை கண்டுபிடித்து, எடைபோட்டு, தீய ஆவிகளை இனம்காண அனுமதிக்கின்றது.

சாத்தானிய வல்லமைகளோடு தொடர்புபடும்போது ஆவிகளை பகுத்தறியும் வரம் மிகவும் முக்கியமானது. இது ஒரு நபரில் தீய ஆவி அவருக்குள் அல்லது அவருக்கெதிராக இயங்குகின்றதா என்பதை உடனடியாக அறிய இது வழிவகுக்கின்றது. இது ஏமாற்றும் அல்லது பொய்யின் ஆவிகளின் வஞ்சகத்தை தவிர்க்கின்றது. தீய உபாயங்களையும், சாத்தானிய வல்லமைகளின் குறிக்கோள்களையும் இந்த வரங்களில் ஒன்று அறிந்து விடும்.

உதாரத்திற்கு, சில செவிடுகளும், ஊமைகளும் (வேதாகம பதிவுகளின் படி) ஆவிகளினால் ஏற்படுகின்றன. மற்ற செவிடுகளும், ஊமைகளும் விபத்து அல்லது நோயின் காரணங்களினால் ஏற்படுகின்றன. இந்நிலைகளுக்கு பின்னாலுள்ள காரியங்களை அவதானிக்க பகுத்தறிவு உதவுகின்றது.

அனைத்து விசுவாசிகளும் இந்த விசேட வரத்தை கொண்டிருப்பதில்லை. ஒரு விசுவாசிக்கு இந்த வரம் இல்லையென்றால் சாத்தானுடைய பிரசன்னத்தின் அடையாளங்களை அவதானிக்கலாம். ஓர் கானானிய ஸ்திரீ தனது மகளின் அசுத்த ஆவியை அவர் துரத்தும்படியான வேண்டுகோளோடு இயேசுவிடம் வந்தாள், அவள் கூறினாள் “என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள்” (மத்தேயு 15:22). அவள் எவ்வாறு இதை அறிந்திருந்தாள்? அவள் அடையாளங்களினால் அதை அறிந்திருந்தாள். ஒரு நபருக்கு சாத்தானிய ஆவி என்ன செய்கின்றது என்பதை சாதாரணமாக அவதானித்து கண்ட-றியலாம்.

சாத்தானுடைய கிரியைகளுக்கான சில அடையாளங்கள் இங்கே தரப்பட்டுள்ளன:

**சாத்தானிய அலைக்கழிப்பு** என்பது கட்டுப்படுத்தமுடியாது, சாத்தானின் அசாதாரணமான ஈடுபாடு, சாத்தான் மற்றும் அமானுஷ்யம் ஆகியவற்றால் அறியலாம். இந்த நபரானவர் அமானுஷ்ய நடைமுறை களினால் இயங்குதல், சாத்தானுக்கு அல்லது பிசாசுக்கு தொடர்ந்து எல்லாவற்றையும் செலுத்துதல் அல்லது சாத்தானிய மற்றும் பிசாசின் படிப்பின் மூலமான ஈடுபாடு ஆகியவற்றை கொண்டிருப்பார்

**சாத்தானுடைய ஓடுக்குதல்** கீழ்வரும் அடையாளங்களின் மூலம் அறியலாம்:

1. ஒரு பௌதீக கட்டு: இயேசு பௌதீக கட்டான பலவீனத்தின் ஆவியை “ஆபிரகாமின் குமாரத்தி”யிலிருந்து விடுவித்தார். லூக்கா 13:10-17யை பார்க்க. நாற்பட்ட வியாதி பிசாசின் ஒடுக்குதலாய் இருக்கலாம். எல்லா வியாதிகளும் சாத்தானிய வல்லமைகளால் ஏற்பட்டதல்ல. சரியாக சாப்பிடுதல் இன்மை அல்லது அசுத்தமான நீரை குடித்தல் போன்று இயற்கையின் வளங்களை துஷ்பிரயோகப்படுத்துவதால் சில நோய்கள் ஏற்படலாம். சில நோய்கள் வேதனைப்படுத்தலாம். வேதாகமத்தில் தேவனுக்கு மகிமையை செலுத்தாத ஒரு இராஜா குடல் புழுக்களால் வாதிக்கப்பட்டு இறந்தார்!

2. மனதாலான ஒடுக்கப்படுதல்: மன வேதனைகள், தடுமாற்றம், சந்தேகம், மறதி ஆகியவை மனதிற்கும் வாழ்க்கைக்கும் ஊடான தடைகள் ஆகும். அமைதியின்மை, காரணத்திலான இயலாமை அல்லது மற்றவர்களிடம் கேட்க இயலாமை, அசா-தாரண பேச்சுக்கள். எல்லா மன ரீதியான பிரச்சனைகளும் சாத்தானால் உண்டானது அல்ல. ஊக்கமின்மை, மன அழுத்தம், குறிப்பிட்ட உணவுகளினால் உருவாகும் ஒவ்வாமையினாலான குழப்ப நிலை அல்லது மூளையில் உருவாகும் சமமற்ற இரசாயனங்கள். மன ரீதியான பிரச்சனைகளையும் சாத்தானிய வல்லமைகளால் உருவாக்கப்படாத நோய்களையும், சாத்தானியத்தால் உருவாக்கப்படும் நிலைமைகளுக்கு விடுதலை தந்து தேவன் குணமாக்கின்றார். எல்லா நோய்களுக்கும், மன ரீதியான வியாதிகளுக்கும் சாத்தானே காரணம் என பாடம் நடத்துவதற்கு எச்சரிக்கையாய் இருங்கள். பௌதீக நிலைகளிலான பிரச்சனைகளுக்கு சில சமயங்களில் சாதாரண உணவு அல்லது வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்தினால் பிரச்சனைகளை வெளியேற்றலாம்.

3. உணர்விலான பிரச்சனைகள்: மனக்கசப்பு, வெறுப்பு, கோபம், பயம், நிராகரிப்பு, சுய-இரக்கம், பொறாமை, மன அழுத்தம், கவலை, பாதுகாப்பின்மை, தாழ்வு உட்பட நீடிக்கும் அல்லது மீண்டும் மீண்டும் நடக்கும் உணர்வு ரீதியிலான தடைகள்

4. ஆவிக்குரிய பிரச்சனைகள்: பாவமுள்ள பழக்கவழக்கம் உட்பட, பாவத்தை மேற்கொள்வதற்கான மாபெரும் கடினம். பிரச்சனைகளுக்கு ஆவிக்குரிய தீர்வுகளை புறக்கணித்தல். பொருட்களுக்கான கட்டுக்கள் மற்றும் துர் இலக்கியம் உட்பட ஏதாவது வகையான கொள்கை தவறுகள் அல்லது வஞ்சகம்.

5. சூழ்நிலைகள்: ஒடுக்கப்படுதலுக்கான கடின சூழ்நிலைகளை சாத்தான் ஏற்படுத்துகின்றான். இந்த சூழ்நிலைகள் பொதுவாக குழப்ப நிலைகளாய் இருப்பதோடு சாத்தானால் என உடனடியாக அறிந்து கொள்ளலாம், ஏனென்றால் குழப்பத்திற்கான ஆசிரியர் தேவன் அல்ல (1 கொரிந்தியர் 14:33; யாக்கோபு 3:16).

**சாத்தானுடைய உடமையாக்கப்படுதல்** கீழ்வரும் அடையாளங்களின் மூலம் அறியலாம்:

1. அசுத்த ஆவி வாசம் செய்தல்: ஒரு அடிப்படையான தார்மீக சுத்தம் இன்மை மற்றும் அசுத்தம் ஆகியவற்றினால் இவை நிருபணம் ஆகின்றன. ஆடையில்லாமல் செல்லுவதற்கான ஆசையையும் இது உள்ளடக்கும். உதாரணத்திற்கு மாற்கு 5:2 மற்றும் லூக்கா 8:27ஐ பார்க்க.

2. அசாதாரணமான பௌதீக பலம்: சாதாரண இயலுமைகளுக்கு அப்பாலே ஓர் நபர் பலத்தை காட்டுகின்றார். உதாரணத்திற்கு மாற்கு 5:3 மற்றும் லூக்கா 8:29ஐ பார்க்க.

3. வலிப்பு: வாயில் நுரை தள்ளுவதினூடாக வலிப்பு ஏற்படுகின்றது. மாற்கு 9:14-29; லூக்கா 8:26-39

4. ஆவிக்குரிய காரியங்களை எதிர்த்தல்: மாற்கு 6:7 மற்றும் 1:21-28ல் சாத்தான்கள் இயேசுவை உடனடியாக அறிந்து, அவர்களை தனித்திருக்கும்படி கேட்டன. இயேசுவின் நாமத்தின் பயம், ஜெபம், உலகம், தெய்வ நிந்தனை ஆகியவை சாத்தானுடைய உடமையாக்குதலிற்கான அனைத்து அடையாளமாகும். ஆவிக்குரிய காரியங்கள் மேற்கொள்ளப்படும்போது அபரிதமான தெய்வ நிந்தனை, பௌதீக காரணிகளை முறுகுதல் அல்லது சம்பந்தமில்லாத நடத்தை மாற்றங்கள் போன்றவை ஏற்படலாம்.

5. தனிநபரில் அல்லது சத்தத்தில் மாற்றம்: சாதாரணமாக வெட்கமாக உள்ள ஓர் நபர் ஆக்கரமிக்கும் அல்லது கொடூரனாக மாறலாம். தோற்றத்திலான கிரியைகள் தாக்கத்திற்குட்படலாம். சாதாரண நடத்தைகள் அல்லது அறிவில் மாற்றம் ஏற்படலாம். சத்தம் மாறலாம் (மாற்கு 5:9).

6. பெதீக பீடித்தலுக்கு துணை போகுதல்: பிசாசின் உடமையாக்கப்படும்போது, மனம் அல்லது நரம்பு தொகுதிகளில் இந்த பொதுவான பீடித்தலானது அதிகம் தோன்றலாம். (மத்தேயு 9:33; 12:22; மாற்கு 5:4-5). இது பொதுவாக அல்லது பௌதீகத்தை வீணாக்குவதை உள்ளடக்கலாம். (மாற்கு 9:14-29).

7. சுய தாக்குதலான பௌதீக காயம்: மத்தேயு 17:14-21 தன்னைத்தானே தீயிற்குள் விழும் ஒரு நபருடைய மகனின் கதை காணப்படுகின்றது. லூக்கா 8:26-39ல் இந்த சாத்தான் பௌதீக நோயை ஏற்படுமிடுத்துவதற்கான ஒரு மனிதனை கற்களை கொண்டு தன்னைத்தானே வெட்ட அனுமதிக்கின்றான்.

8. கொடூரமான வேதனை: லூக்கா 8:28ல் தன்னுடைய உடமையின் நிமித்தம் கொடூரமான உள்ளான வேதனையினால் அழும் மனிதனை குறித்து தொடர்புபடுத்-துகின்றது.

9. சாதாரணமாக ஜீவிப்பதற்கான இயலுமையின்மை: இந்த மனிதனால் சமூகத்தோடு வாழ முடியாது, ஆனால் கல்லறைகளிலுள்ள குகைகளில் வாழுகின்றான். (லூக்கா 8:27).

10. வேதமல்லாத முறைகளுக்கூடாக, எதிர்காலத்தை குறித்து சொல்லும் இயலுமை அல்லது தெரியாததொன்றை கண்டுபிடித்தல்: அப்போஸ்தலர் 16:16ல் உள்ள பெண் குறிசொல்லதலையுடைய ஆவியால் பீடிக்கப்பட்டிந்ததாக கூறப்படுகின்றது.

சாத்தானுடைய உடமையாகுதல், ஒடுக்கப்படுதல் மற்றும் அலைக்கழிப்பு கீழ்வருவனவற்றில் கூட உள்ளடக்கலாம்:

1. தீய படங்கள், விபச்சாரம், முறைகேடு, சுயஇன்பம், ஓரினச்சேர்கை மற்றும் வேறு பாலியல் பாவங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மன ஒழுக்கக்கேடு. கோளாறுகள், தற்கொலைகள், சுயத்தை அழித்தல், உடல் உறுப்புக்கள் இழத்தல், கொலைகள் போன்ற வலுவான நிர்ப்பந்தத்தை உள்ளடக்குதல்.

2. போதைப்பொருட்கள் மற்றும் சாராயத்திற்கான மேலதிக உள்ளடக்கம்

3. விழுதல், தரிசனங்கள் மற்றும் தியானங்கள் உண்மையான தேவனிடமிருந்து வராமை அல்லது நோக்கப்படாமை.

4. உணர்ச்சிகளின் கட்டுக்கள்: பயம், கவலை, மன அழுத்தம், வெறுப்பு, ஆத்திரம், பொறாமை, புறங்கூறுதல், பொறாமை, பெருமை, கசப்பு, மறுப்பு, விமர்சனம்

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

2. மனிதனுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்திற்கான சாத்தானின் பிரதான மூன்று வகை தாக்குதல்கள் என்ன?

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

3. சாத்தானின் வல்லமைகள் தொடர்பிலான பகுத்தறிவின் வரத்தின் பெறுமதி என்ன?

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

4. சாத்தானின் ஒடுத்தப்படுதல் என்பதின் அர்த்தம் என்ன?

......................................................................................................................................................

......................................................................................................................................................

......................................................................................................................................................

5. சாத்தானினால் ஒடுக்கப்பட்ட நபரில் சில குணாதிசயங்கள் என்ன?

......................................................................................................................................................

......................................................................................................................................................

6. சாத்தானின் அலைக்கழிப்பு என்பதின் அர்த்தம் என்ன?

....................................................................................................................................................

....................................................................................................................................................

7. சாத்தானினால் அலைக்கழிக்கப்பட்ட நபரில் சில குணாதிசயங்கள் என்ன?

....................................................................................................................................................

....................................................................................................................................................

....................................................................................................................................................

8. சாத்தானின் உடைமை என்பதின் அர்த்தம் என்ன?

....................................................................................................................................................

....................................................................................................................................................

....................................................................................................................................................

9. சாத்தானினால் உடைமையாக்கப்பட்ட நபரில் சில குணாதிசயங்கள் என்ன?

....................................................................................................................................................

....................................................................................................................................................

....................................................................................................................................................

10. சாத்தான் எவ்வாறு கட்டுப்பாட்டை அடைகின்றன என்பதை விளக்குக.

....................................................................................................................................................

....................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

உங்களுடைய நிலையை அல்லது நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவருடைய நிலையை ஜெபத்துடன் ஆய்வு செய்க:

1. கிரியை செய்யும்போது ஏமாற்றும் ஆவிகளுக்கான ஆதாரங்கள் உள்ளதா? ஏன் அவ்வாறு எண்ணுகின்றீர்கள்?

..........................................................................................................................................

..........................................................................................................................................

2. கிரியை செய்யும்போது குறிசொல்லும் ஆவிகளுக்கான ஆதாரங்கள் உள்ளதா? ஏன் அவ்வாறு எண்ணுகின்றீர்கள்?

..........................................................................................................................................

..........................................................................................................................................

3. கிரியை செய்யும்போது அசுத்த ஆவிகளுக்கான ஆதாரங்கள் உள்ளதா? ஏன் அவ்வாறு எண்ணுகின்றீர்கள்?

..........................................................................................................................................

..........................................................................................................................................

4. சாத்தானுடைய ஒடுக்குமுறைக்கான அடையாளங்கள் இங்கே தரப்பட்டுள்ளது:

   -பௌதீக கட்டுக்கள்.
   -மனரீதியான ஒடுக்குமுறைகள்.
   -உணர்வுரீதியான பிரச்சனைகள்.
   -ஆவிக்குரிய பிரச்சனைகள்.
   -சூழ்நிலைகள்.

   சாத்தானுடைய ஒடுக்குமுறைகளை காணக்கூடியதாக உள்ளதா? எது அவ்வாறு எண்ண தோன்ற வைக்கின்றது?

..........................................................................................................................................

..........................................................................................................................................

5. சாத்தானுடைய அலைக்கழிப்பானது அடையாளம் காணப்படுகின்றது:

   -கட்டுப்படுத்தமுடியாத மற்றும் சாத்தான்கள், பிசாசுகளோடான அசாதாரண சிந்தை அல்லது அமானுஷ்ய சிந்தனை.

-அமானுஷ்ய நடைமுறைகளில் ஈடுபடுதல்.
-சாத்தானுக்கு அல்லது பிசாசிற்கு தொடர்ச்சியாக எல்லாவற்றையும் கொடுத்தல்.
-சாத்தான் மற்றும் பிசாசு தொடர்பான அசாதாரண படிப்பு.

சாத்தானுடைய அலைக்கழிப்பை காணக்கூடியதாக உள்ளதா? எது அவ்வாறு எண்ண தோன்ற வைக்கின்றது?

........................................................................................................................................................

6. சாத்தானுடைய உடைமைக்கான அடையாளங்கள் இங்கே தரப்பட்டுள்ளது:

-அசுத்த ஆவி வாசம் செய்தல்
-அசாதாரணமான பௌதீக பலம்.
-வலிப்பு
-ஆவிக்குரிய காரியங்களை எதிர்த்தல்
-தனிநபரில் அல்லது சத்தத்தில் மாற்றம்
-பௌதீக பீடித்தலுக்கு துணை போகுதல்
-சுய தாக்குதலான பௌதீக காயம்
-கொடூரமான வேதனை
-சாதாரணமாக ஜீவிப்பதற்கான இயலுமையின்மை
-வேதமல்லாத முறைகளுக்கூடாக, எதிர்காலத்தை குறித்து சொல்லும் இயலுமை அல்லது தெரியாததொன்றை கண்டுபிடித்தல்

சாத்தானுடைய உடைமைகளை காணக்கூடியதாக உள்ளதா? எது அவ்வாறு எண்ண தோன்ற வைக்கின்றது?

........................................................................................................................................................

7. ஞாபகத்தில் கொள்ளுங்கள்: சாத்தானுடைய உடமையாகுதல், ஒடுக்கப்படுதல் மற்றும் அலைக்கழிப்பு கீழ்வருவனவற்றில் கூட உள்ளடக்கலாம்:

-தீய படங்கள், விபச்சாரம், முறைகேடு, சுயஇன்பம், ஓரினச்சேர்கை மற்றும் வேறு பாலியல் பாவங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மன ஒழுக்கக்கேடு. கோளாறுகள், தற்கொலைகள், சுயத்தை அழித்தல், உடல் உறுப்புக்கள் இழத்தல், கொலைகள் போன்ற வலுவான நிர்ப்பந்தத்தை உள்ளடக்குதல்.

-போதைப்பொருட்கள் மற்றும் சாராயத்திற்கான மேலதிக உள்ளடக்கம்

-விழுதல், தரிசனங்கள் மற்றும் தியானங்கள் உண்மையான தேவனிடமிருந்து வராமை அல்லது நோக்கப்படாமை.

-உணர்ச்சிகளின் கட்டுக்கள்: பயம், கவலை, மன அழுத்தம், வெறுப்பு, ஆத்திரம், பொறாமை, புறங்கூறுதல், பொறாமை, பெருமை, கசப்பு, மறுப்பு, விமர்சனம்

## அதிகாரம் பதினெட்டு

# விடுதலைக்கான ஊழியம்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ சாத்தானுடைய வல்லமையோடு சம்பந்தப்படுவோர் யார் என்பதை அடையாளம் காணவும்,
- ☐ விடுதலைக்கான ஊழியத்தில் ஆரம்ப ஆயத்தங்களை கலந்துரையாடவும்,
- ☐ விடுதலைக்கான ஊழியத்தின் அறிவுறுத்தல்களை சுருக்கவும் முடியும்.

## பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

> **அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். (மத்தேயு 10:1)**

## அறிமுகம்

சாத்தானால் நூற்றுக்கணக்கான மக்கள் கட்டப்பட்டுள்ளனர், இது வியாதிகளை தோற்றுவித்துள்ளது. வேறு நூற்றுக்கணக்கானவர்கள் எதிரியினுடைய கைகளினால் அடக்குமுறை, உடைமை, அலைக்கழிப்பால் துன்பப்படுகின்றனர். இந்த பாடத்தில் சாத்தானிய வல்லமைகளோடு யார் தொடர்புபடுகின்றனர், விடுதலைக்கான ஊழியத்தை எவ்வாறு ஆயத்தம் செய்தல், எவ்வாறு விடுதலையின் ஊழியத்தை செய்தல் என்பதை நீங்கள் கற்பீர்கள்.

## சாத்தானுடைய வல்லமைகளைளோடு யார் தொடர்புபடுகின்றனர்?

சாத்தானுடன் தொடர்புபடுதல் விசேட ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்ட ஏதோவொன்றோ அல்ல. எல்லா விசுவாசிக்கும் சாத்தானிய வல்லமையை மேற்கொள்ள முடியும் என இயேசு கூறினார்:

> **விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்... (மாற்கு 16:17)**

சாத்தானுடைய வல்லமைகளோடு சம்பந்தப்படும் இயலுமைகளை இயேசு தமது சீஷர்களுக்கு கொடுத்தார். அவர் முதலாவது சீஷர்களுக்கு வல்லமைகளை ஒப்படைத்தார்:

> **அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். (மத்தேயு 10:1)**

> **அவர் பன்னிருவரையும் அழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்த அவர்களுக்கு அதிகாரங்கொடுத்து... (மாற்கு 6:7)**

அவர் அதே வல்லமைகளை அனைத்து விசுவாசிகளுக்கும் கொடுத்தார்:

> **விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். (மாற்கு 16:17)**
>
> **வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள். இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள். (மத்தேயு 10:8)**

விசுவாசத்திற்கு ஓர் அடிப்படை வேதாகமத்தில் இல்லை. தேவன் இந்த முக்கியமான ஊழியத்தை குறிப்பிட்ட மக்கள் குழுவிற்கு கட்டுப்படுத்தப்பட நோக்கம் கொண்டார். சமாரியாவில் அசுத்த ஆவியை விரட்டுவதற்கு தேவன் பிலிப்பு என்பவரை உபயோகித்தார் (அப்போஸ்தலர் 8).

ஆனால் இது ஸ்கேவாவின் மகன் கண்டதைப்போல (அப்போஸ்தலர் 19) சரியான ஆயத்தங்கள் இல்லாமல் சாத்தானிய வல்லமைகளை விசுவாசிகள் அணுகுதல் வேண்டும் என்னும் அர்த்தம் அல்ல. சாத்தானின் மேலான நிலைகளில் விசுவாசிகள் அடையக்கூடாது என்பது முக்கிமானதாகும். நாம் சாத்தான்களுக்கு அதிகமாயிருக்க அழைக்கப்படவில்லை. "சாத்தான்களை துரத்துவதற்கான" எந்த ஆவிக்குரிய வரங்களும் இல்லை. ஆனால் நீங்கள் சாத்தானிய வல்லமைகளுக்கு பயப்பட தேவையில்லை. சாத்தானின் தாக்குதலுக்குள்ளானோர் எதிர்கொண்டால், தேவனிடமிருந்தான விடுதலையை கொண்டுவர உங்களுக்கு வல்லமை இருக்க வேண்டும்.

## விடுதலையின் ஊழியத்தை செய்தல்

சாத்தானின் வல்லமையால் தாக்கப்பட்டவர்களுக்கான விடுதலையின் ஊழியத்தின் அறிவுறுத்தல்கள் சில இங்கே தரப்பட்டுள்ளன.

### உங்களில் நீங்கள் செய்யவேண்டிய ஆரம்ப ஆயத்தங்கள்:

தேவனுடைய வார்த்தையை கேட்பதினூடாக விசுவாசம் வரும், குறிப்பாக "ரேமா" வசனம். புதிய ஏற்பாட்டை புதிய குறிக்கோளோடு வாசிப்பதினால் உங்களுடைய சொந்த இருதயத்தில் விசுவாசத்தை கட்ட தொடங்குங்கள்:

-இயேசு தமது சீஷர்களுக்கு எவையெல்லாம் செய்ய சொன்னாரோ, அவைகளை நீங்கள் செய்ய தொடங்குங்கள்.

-அவர் என்ன செய்வார் என அவர் கூறியுள்ளாரோ, அதை அவரை செய்ய எதிர்பாருங்கள்.

-அவருடைய வல்லமையிற்கூடாக சாத்தானால் தாக்கமுற்றோரை விடுவிக்க முடியும் என அவர் கூறியிருந்தால், அவர்கள் விடுவிக்கப்பட எதிர்பாருங்கள்.

-அவர்கள் பிசாசுகளை துரத்தும்படி கூறியிருந்தால், அவருடைய நாமத்தை கொண்டு அதை செய்து, அவைகள் உங்களை கீழ்ப்படிய எதிர்பாருங்கள்.

உங்களிடம் இல்லாத தனிப்பட்ட அனுபவங்களையும், மனிதர்களுடைய அனைத்து போதனைகளையும் தள்ளி வையுங்கள். புதிய ஏற்பாடு என்ன சொல்லுகின்றதோ அதையே ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாயிருக்கின்றீர்கள் (2 கொரிந்தியர் 5:20). ஒரு ஸ்தானாபதி ஒரு நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் போது அந்நாட்டின் வசனங்களைகுறித்து ஒரு போதும் சந்தேகிக்க மாட்டார்.

விடுதலைக்கான ஊழியத்தை செய்யும் முன்னர் உபவாசமிருந்து ஜெபியுங்கள். வல்லமையும் அதிகாரமும் தேவனிலிருந்தே வருகின்றது என்ற போதிலும், அதனோடு தொடர்பிலிருத்தல் அவசியமாகும்! சில சாத்தான்கள் ஜெபத்தினாலும், உபவாசத்தினாலும் மட்டுமே வெளியே வரும். ஏசாயா 58ம் அதிகாரமானது மற்றவர்களுடைய தேவைக்கான ஊழியத்தை குறித்து மேற்கொள்ளப்படும் உபவாசத்தை தேவன் கணப்படுத்துகின்றார் என போதிக்கின்றது.

## மற்றவர்களுக்கான ஆரம்ப ஆயத்தங்கள்:

சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது சத்தானை கட்டி துரத்த உதவும் விசுவாச குழுக்களை உபயோகியுங்கள். இந்த ஊழியத்திற்காக இயேசு தமது சீஷர்களை இவ்விருவராக அனுப்பினார்:

> **அவர் பன்னிருவரையும் அழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்த அவர்களுக்கு அதிகாரங்கொடுத்து.. (மாற்கு 6:7)**

இது சாத்தானுடைய தாக்கத்திற்குட்பட்ட நபரை நீங்கள் சந்திக்கும்போது தனிமையாக ஊழியம் செய்ய முடியாது என அர்த்தம் ஆகாது, ஆனால் இன்னொரு விசவாசியோடு ஜெபத்தில் ஐக்கியமாயிருக்கும் போது வல்லமை அதிகம் காணப்படும். வல்லமையானது ஐக்கியத்தில் வரும்போது, உங்களுடைய விடுதலையின் ஊழியத்தோடு சேருபவர்கள் பொதுவாக ஜெபத்தோடும், உபவாசத்தோடும் ஆயத்தமாகி இருக்கவேண்டும்.

அடக்குமுறை மற்றும் அலைக்கழிப்பின்போது (மன அழுத்தம், சாத்தானால் உண்டாக்கப்பட்ட வியாதி ஆகியவை) ஊழியத்தை பெறும் நபரை ஆயத்தப்படுத்துங்கள். அவர்கள் விடுதலையை குறித்தான தேவனுடைய வசனமாகிய “ரேமா”விற்கூடாக விசுவாசத்தை கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும். (இது உடைமையின்போது அவசியம் அல்ல). சாத்தானால் தாக்கப்பட்ட நபரை அவர்களுடைய பாவம் மற்றும் இரட்சிப்பின் தேவைகளை அறிந்து, ஜெபிக்கும்படியாக சரியான அறிவுறுத்தல்கள் இன்றி ஊக்கப் படுத்துவீர்களாயின், இயேசுவை அறியாத ஒருவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ளுவதற்கு ஊக்கப் படுத்துவதை போலாகும். சுவிசேஷத்தை பகிரும்போது அறிவுள்ள ஆத்துமாவானது உடனடியான தீர்மானம் எடுக்கும்படியான வெற்றியாளர் ஆகமாட்டார். அங்கு ஆரம்ப ஊழியம் செய்யப்பட-வேண்டும். சரியான அறிவுறுத்தல்கள் கொடுக்கப்படவேண்டும்.

விடுதலையிலும் இதுவே உண்மையாகும். சிலவேளைகளில், சில அறிவுறுத்தல்கள் இன்றி தேவன் விடுவிக்கின்றார். ஆனால் விடுதலையின் ஊழியத்தில் தேவனால் பரிந்துரைக்கப்பட்ட வார்த்தைகள் கிரியை செய்யும்பொருட்டு ஒவ்வொரு முறைகளையும் சரியானபடி நீங்கள் பயன்படுத்த வேண்டும். தேவனுடைய வல்லமையின் விடுதலைக்கான ஓர் முறை விசுவாசம் ஆகும், அது தேவனுடைய வார்த்தையை கேட்கும்போது வருகின்றது, ஆகவே அறிவுறுத்தல்கள் முக்கியமானதாகும். இயேசு குணமாக்குதல் மற்றும் விடுதலையின்போது போதனையையும், உபதேசத்தை இணைத்தார், இவர் தம்முடைய சீஷர்களுக்கு இதை செய்யும்படிக்கும் அறிவுறுத்தினார்.

## ஊழியத்திற்கான இடம்:

சாத்தானுடைய வல்லமைகளால் தாக்கப்பட்டோருக்கான ஊழியம் சபை கூட்டங்களில் பொதுவான நேர பகுதிகளில் செய்யப்படலாம். இந்த ஊழியங்கள் தனிப்பட்ட நேரங்களில் மாத்திரம் செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லை. இது சபையின் பெறுமதியான ஊழியம் ஆகும்.

இயேசு சபை கூட்டத்தின் பொதுவான நேரத்தில் சாத்தான் பீடிக்கப்பட்டோருக்கு ஊழியம் செய்தார் (மாற்கு 1:21-25). எவ்வாறாயினும், சாத்தானிய வல்லமைகளோடு சம்பந்தப்படுவதற்கான ஞாயிறு கூட்டத்திற்கு காத்திருக்க வேண்டியது அவசியம் இல்லை. எப்பொழுதும் எந்நேரத்திலும் எதிர் கொள்ள தேவையோ இயேசு விடுதலையை கொண்டு வந்தார்.

## ஊழியத்திற்கான நேரம்:

நீங்கள் விடுதலைக்கான ஊழியத்திற்கு ஆயத்தமாகும்போது....

### 1. துதி மற்றும் ஆராதனையோடு ஆரம்பியுங்கள்:

நாம் அவருடைய பிரசன்னத்திற்குள் (விடுதலையும் குணமாக்குதலும் இருக்கும் இடம்) துதியுடனும் ஆராதனையுடனும் பிரவேசிக்கின்றோம். ஜெப ஊழியம் இன்றி கூட விடுதலையானது ஆராதனை மற்றும் துதியினால் வரலாம், ஏனென்றால் அவருடைய மக்களின் துதியில் தேவன் வாசம் செய்கின்றார். நாம் துதிக்கும்போது, அவர் குணப்படுத்தி விடுதலையாக்க வந்திருக்கின்றார்.

### 2. விசுவாசத்தின் சூழலை உருவாக்குங்கள்:

விசுவாசத்திற்கான வசனத்தின் ஊழியத்தை செய்யும்போதே நீங்கள் இதை தொடங்கி விட்டீர்கள், ஆனால் விசுவாசத்தின் சூழலை உருவாக்க நீங்கள் மேலதிக படிமுறைகளை செய்ய வேண்டியது அவசியமாகும்.

நாசரேத்தில் விசுவாசமின்மை இயேசுவினுடைய ஊழியத்தை மறைத்தது. சிலவேளைகளில் இயேசு ஊழியம் செய்யும்போது, அவிசுவாசிகளை வெளியே அனுப்பிவிடுவார் (மாற்கு 5:35-40). மற்ற சமயங்களில் அவர்களுடைய கிராமத்திலிருந்து மக்களை வெளியே (அவிசுவாசத்தின் சூழ்நிலை) அவர்களிடம் ஊழியம் செய்யும்பொருட்டு அனுப்பிவிடுவார் (மாற்கு 8:23). தேவன் வழிநடத்தும் சந்தர்ப்பங்களில் அவிசுவாசம், பயம் போன்ற தளம்புதல் ஆகியவை நீங்கும்படி நீங்கள் கேட்க வேண்டும்.

### 3. முதலாவது ஜெபியுங்கள்:

விடுதலை ஊழியத்தை செய்வதற்கு முன்னர் விசுவாசத்திற்காகவும், பகுத்தறிவிற்கும் ஜெபியுங்கள். ஜெபத்தின்போது, தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்...

> -ஞானத்தின் வசனம்: எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்பதை நீங்கள் அறிவதற்கு, ஒரு நபர் அல்லது நிலையை குறித்தான விசேட கொள்கை அல்லது தகவல்கள். ஞா-னத்தின் வசனமானது ஒரு காரியத்தை ஆழமாக அறிதல் அல்லது உங்களுடைய

ஆவி, எண்ணங்கள், வசனங்கள் அல்லது உணர்வுகளில் உள்ள அபிப்பிராயம் ஆகியவற்றை உள்ளடக்கலாம். ஞானத்தின் வசனமானது என்ன வியாதி உள்ளது என்பதையும் அல்லது இந்நிலையை ஏன் குறித்த நபர் கொண்டிருக்கின்றார் என்பதையும் வெளிப்படுத்தும்.

-ஓர் வேதாகம வசனம்: சூழ்நிலை, நிலைகள், நபர்கள் அல்லது குழுக்களுக்கான ரேமா வசனம்.

-ஓர் தரிசனம்: நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவருக்கான மனக்கண்களில் தோன்றும் படம்.

-விசுவாசத்தின் வசனம்: தனிநபருக்கான விசேட விசுவாச மற்றும் ஊக்குவித்தலுக்கான விசேட வசனம்.

-விசேட அபிஷேகம்: ஓர் திடீரான வல்லமையின் பிரன்னம், திடீரென கீழே விழுதல், வெப்பம் அல்லது விசேட இயற்கையான நம்பிக்கைகள்

-விசேட விசுவாசத்தின் கிரியை, குறித்த நபர் காட்டினால், விடுவிக்கப்படுவார்.

**4. விரிவான நேர்காணலை நடத்துங்கள்:**

இது அவசியமல்ல. இது மேலதிகமானது அத்தோடு தேவனுடைய வழிநடத்துதலின் கீழ் நடத்தப்படல் வேண்டும். தேவன் உங்களுக்கு குறித்த நபரின் நிலையை குறித்த விசேட அறிவின் ஞானத்தை தருவார், அத்தோடு நீங்கள் நேர்காணலை நடத்த வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் தேவன் உங்களுக்கு சிலதை இயற்கைக்கு அப்பால் வெளிப்படுத்தாவிட்டால், நேர் காணலை உபயோகிக்க தள்ளிப்போட வேண்டாம். இயேசு இயற்கை மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட முறைகளை உபயோகித்தார். சில சமயங்களில் அவர் பரிசுத்த ஆவியானவரின் மூலம் மக்களுடைய நிலையை அறிந்தார். மற்ற சமயங்களில் அவர் அவர்களுக்கு என்ன வேண்டும் என்பதையும், எவ்வளவு காலம் அவர்கள் பீடிக்கப்பட்டிருந்தார்கள் என்பதையும் அவர்களிடம் கேட்டார்.

நேர்காணலானது தகவல்களை பெற உதவுகின்றது, ஆகவே நீங்கள் விசேடமாக அதிகம் ஜெபிக்கலாம். நீங்கள் ஜெபிக்க முன்னர் மேலதிக அறிவுறுத்தல்கள் குறித்த நபருக்கு அவசியமா என அறிய இது உங்களுக்கு உதவும். இயேசு இதையே செய்தார். அவர்கள் மக்களிடம் அவர்களுடைய விசுவாசத்தை குறித்து கேள்விகள் கேட்டார் பின் ஊழியத்திற்கு முன்னர் அவிசுவாசம் குறித்தான நேர்மறையான சேனைகளோடு சம்பந்தப்பட்டார். கீழ்வரும் உதாரணங்களை படியுங்கள்:

-மாற்கு 5:1-20: பிசாசுபிடித்த நபரை கேள்வி கேட்டல்.
-மாற்கு 8:22-26: குருடனான மனிதனிடம் கேள்வி கேட்டல்.
-மாற்கு 9:14-27: தீய ஆவியை கொண்ட பையனின் தகப்பனிடம் கேள்வி கேட்டல்.
-மாற்கு 10:46-52: குருடனான பத்திமேயுவிடம் கேள்வி கேட்டல்.

நபரிடம் கேளுங்கள், “பிரச்சனை என்ன?” ஜெபத்தின் விண்ணப்பத்திற்காக பேசுதல் முக்கியமானது. இயேசு அவரிடம் வந்த அநேகரை அவர்கள் தேவைகளை அறிந்து விடுவித்தார். விண்ணப்பித்தல் விடுதலையின் செயற்பாட்டை செய்வதற்கான விசுவாசத்தின் கிரியைகளை உள்ளடக்கியது

(யாக்கோபு 5:14-15). விசேட வாக்கிற்கு கேளுங்கள். உங்களுக்கு விரிவான காரியமே தேவை. உங்களுக்கு முழுமையான வரலாறு அல்லது வாழ்க்கையின் கதை தேவையல்ல.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட தகவல்களை ஆராய முற்பட வேண்டாம். உங்களுடைய செயற்பாடு விடுதலைக்கான ஊழியமே. சில சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட ரகசியங்கள் மற்றும் விசேட ஆலோசகர் மூலம் ஆலோசனைக்கு அதிக நேரம் எடுக்கலாம். இந்த நோக்கத்திற்காக கிறிஸ்தவ ஆலோசகர்-களை வைத்துக்கொள்ளுங்கள்.

ஜெபிக்க வேண்டிய நபரிடம் கேளுங்கள், "இயேசு உங்களை விடுவிக்க முடியும் என விசுவாசிக்கின்றீர்களா?" பதில் சாதகமான இருந்தால், பின் கேளுங்கள், "இயேசு இப்போது செய்வார் என நம்புகின்றீர்களா?" இந்த இரு கேள்விகளுக்கும் பதில் "இல்லை" என இருக்குமாயின், தேவனுடைய வசனத்தின் மேலதிக ஆலோசனைகள் அவசியமாகும்.

பெரிய கூட்டத்திற்கு நீங்கள் ஊழியம் செய்யும்போது, ஒவ்வொரு நபரோடும் உங்களால் பேச முடியாது. கூட்டத்தில் மக்களில் விசேட சாத்தானால் தாக்கப்பட்ட நிலைமைகளை உடையோரை தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தவார் அல்லது தனிப்பட்டவர்களுக்காக விசேட ஜெபத்தை ஜெபிக்கும்படி உங்களை வழிநடத்துவார்.

விடுதலை ஊழியத்தை கூட்டத்தின் மத்தியில் நடத்தினால், ஊழியம் அனைத்தையும் நீங்களே செய்வதை விட, மற்றவர்களையும் உங்களோடு ஊழியம் செய்யும்படி பயிற்றுவித்தல் நன்மை பயக்கும். அவர்கள் விசுவாசித்தால் இந்த அடையாளங்கள் தொடரும் என இயேசு அர்ப்பணித்தார். ஒன்றோ அல்லது இரண்டோ தனியான ஊழியர்களாலோ அல்லாமல், சரீரத்திற்கூடாகவே ஊழியத்தின் கிரியை இருத்தல் வேண்டும்.

**5. விசேட பிரச்சனைகளை இனம்காணுங்கள்:**

நேர்காணலில் கிடைத்த தகவல்களை பயன்படுத்துங்கள் அல்லது பிரச்சனைகள் இதுவா என தேவன் தரும் ஞானத்தை கொண்டு அறியுங்கள்:

**ஆவிக்குரிய பகுதி:** பாவத்திற்கு தொடர்பான பிரச்சனை. இதற்கு குணமாக்குதலின் ஆவிக்குரிய ஊழியம் அவசியம். (இரட்சிப்பு, மனந்திரும்புதல் மற்றும் பாவத்தை மன்னித்தல்)

**பௌதீக பகுதி:** பலவீனமான சாத்தானிய ஆவிகளால் சரீரத்தின் வியாதி ஏற்படுகின்றது.

**உணர்வுரீதியான பகுதி:** பதற்றம், பயம், கோபம், கசப்பு, சீற்றம், குற்றவுணர்வு, சந்தேகம், தோல்வி, பொறாமை, சுயநலம், குழப்பம், விரக்தி, மாம்சத்தின் பரிபூரண வல்லமை, மன்னியாமை, கடந்த கால சூழ்நிலைகள் தொடர்பான பிரச்சனைகள்.

**மனரீதியிலான பகுதி:** மறையான சிந்தனைகளால் விளைந்த பிரச்சனைகள், மனதில் சாத்தானுடைய தாக்குதல்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள். ஞாபகத்தில் கொள்ளுங்கள்: மனிதன் திருத்துவமாக இருக்கின்றபடியால், ஒரு பகுதியிலான தாக்குதல்களில் பிரச்சினைகள் முழு நபரையும் தாக்கும். நீங்கள் ஊழியம் செய்யும்போது, ஒரு பகுதியில் அல்லாமல் முழு பகுதியிலும் சம்பந்தப்படுகின்றீர்கள். மனிதன் சரீரம், ஆத்துமா, ஆவியை கொண்டுள்ளான். முழுமை என்பது இவ்வனைத்தையும் வெளிப் படுத்தும்.

**6. இது ஜெபித்தலுக்கான நேரமா என அறிந்துகொள்ளுங்கள்:**

விடுதலைக்கான ஜெபத்தின் ஜெப நேரமா அல்லது இல்லையா என அறிந்துகொள்ளுங்கள். அதிகம் நீங்கள் ஜெபிக்கும்போது, சில சந்தர்ப்பங்களில் தேவன் உங்களை ஜெபிக்க வேண்டாம் என வழி நடத்தினால் அல்லது தாமதித்து ஜெபிக்கும்படி கூறினால் ஆச்சரியப்படாதிருங்கள்.

கானானிய ஸ்திரியின் மகள் மற்றும் லாசருவின் கதையில் இயேசு குணமாக்குதலை தாமதப்படுத்தினார். அவிசுவாசத்தின் காரணமாக அவர் அநேக கிரியைகளை நாசரேத்தில் செய்யவில்லை. மேலதிக அறிவுறுத்தல்கள் தரும்வரை தேவன் தாமதப்படுத்தும்படி உங்களை வழிநடத்தலாம். குறித்த நபர் பாவத்தின் பிரச்சனையோடு சம்பந்தப்படதேவையில்லை, விடுதலையின் அறிவுறுத்தல்கள் அதிகம் அவசியப்படலாம்.

**7. விடுதலைக்கான ஜெபம் செய்யுங்கள்:**

நீங்கள் அடையாளம் கண்டுக்கொண்ட சாத்தானின் செல்வாக்கு குறித்த விசேட பிரச்சனையை மையப்படுத்தி விடுதலையின் ஜெபத்தை ஜெபியுங்கள். உங்களுடைய ஜெபத்தின் மூலம் தேவனை நம்பச் செய்தல் அவசியம் அல்ல. இரட்சிப்பு ஏற்கனவே கிடைக்கப்பெற்றதைப்போல, விடுதலையிலும் இதுவே உண்மையாகும். விசுவாசத்தின் நிலையின் அடிப்படையில் இரட்சிப்பு இருப்பதைப்போல, விடுதலையிலும் உள்ளது. தேவன் உங்களை காப்பது போல, அவருக்கு உங்களை விடுவிக்க விரும்புகிறார்.

விடுதலைக்கு விசேட வழிகளில் சில சமயங்களில் தேவனுடைய வல்லமை காணப்படுவதை போல (லூக்கா 5:17), நீங்கள் விசேட அபிஷேகம் இல்லாமல் இன்னும் ஜெபம் செய்யலாம் ஏனென்றால் சுவிசேஷத்தை பரப்புவதற்கு உங்களுக்கு சொன்னதைப்போல் இதை செய்யும்படியும் கட்டளையிடுகின்றார்.

குழுவாக நீங்கள் ஊழியம் செய்யும்போது மற்றவர்களையும் உபயோகியுங்கள். அநேக மக்கள் ஜெபம் செய்யும்போது ஆவிக்குரிய வல்லமையானது பன்மடங்காக காணப்படும் (மத்தேயு 18:19). விடுதலையை வெற்றிகரமாக அனுபவித்தவர்களையும், மனிதனுக்கு மகிமையை கொடுக்கும்படி அதை பெற்றவர்களையும் தனிப்பட்டவர்களை சரீர ஊழியம் ஊக்குவிக்காது.

இயேசு முதலில் உங்களுஜடய எதிரியை கட்டும்படியாக போதித்தார், பிற்பாடு உங்களுடைய வல்லமையை அவன் மேல் செலுத்தலாம்:

> **அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழியப் பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம். (மத்தேயு 12:29)**

சாத்தானின் வல்லமையானது ஒடுக்குதல் மூலம் வெளியகத்திலிருந்து கட்டப்பட வேண்டுமாயின், அவைகளுடைய கட்டுக்களும், அவைகளுடைய வல்லமைகளும் இலகுவாகும்படிய ஜெபியுங்கள். உதாரணத்திற்கு இயேசு, ஜெப ஆலயத்தில் பலவீனமான ஆவியையுடைய பெண்ணை விடுவித்தார். அவள் உடமையாக்கப்படவில்லை, ஒடுக்கப்பட்டிருந்தாள். துரத்துதல் இங்கு அவசியமல்ல.

சாத்தானால் உடமையாக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், இயேசுவின் நாமத்தினால் சாத்தானை வெளி-யேற்றும்படியான அதிகாரம் உங்களுக்கு உள்ளது. இது உங்களுடைய சொந்த வல்லமை மற்றும் இயலுமையிலான அதிகாரம் அல்ல, ஆனால் அவருடைய வல்லமையினால் ஆகும். பிசாசுளை நீங்கள் துரத்தும் போது, ஜெபத்தில் இயேசுவினுடைய நாமத்தை பயன்படுத்துதல் முக்கியமானதா-கும்.

பிசாசுகளை துரத்துவதற்கு விசுவாசம், உபவாசம், ஜெபம் அவசியமாகும். (மத்தேயு 17:14-21 ஆகியவற்றை வாசியுங்கள்). இதன் காரணமாகவே இப்பகுதியில் ஆரம்ப ஆயத்தங்கள் ஊக்குவிக் கப்படுகின்றன). தேவனுடைய வசனம் (எபேசியர் 5:17; எபிரெயர் 4:12); இயேசுவினுடைய இரத்தம் (வெளிப்படுத்தல் 12:11); பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிரப்பப்படுதல் (அப்போஸ்தலர் 1:8; 2:38) ஆகியவைகள் தேவன் உங்களுக்கு தந்த விடுதலையின் கருவிகளாகும்.

சத்தானிடம் கூச்சல் மற்றும் கூப்பாடுகள் போட அவசியமில்லை. ஜெபத்தின் போது உங்களுடைய சத்தத்தின் அளவில் அல்ல, இயேசுவின் நாமத்தினால் அவைகளை வெளியேற்றும் அதிகாரம் உங்கள் உள்ளது. எப்பொழுதும் சாத்தான் நுழைவதற்கு தடை விதியுங்கள். இது விடுதலையின் ஜெபத்தில் முக்கியமானதொரு பகுதியாகும்:

> **அப்பொழுது ஜனங்கள் கூட்டமாகய் ஓடிவருகிறதை இயேசு கண்டு, அந்த அசுத்த ஆவியை நோக்கி: ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டுப் புறப்பட்டுப்போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அதட்டினார். (மாற்கு 9:25)**

சாத்தானோடு பேசுவதற்கு நேரத்தை செலவிட வேண்டாம், பேசும் வசனங்களின் மூலம் அது தன்னைத்-தான் வெளிப்படுத்தட்டும். இயேசு பிசாசுகளை கடிந்துகொண்டு அவைகளை அமைதியாய் இருக்கும்படி கூறினார் (லூக்கா 4:34-35). சாத்தானுடைய எந்த பேச்சுக்களும் பயங்கரமானவை என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள் ஏனென்றால் அவைகள் பொய்யின் ஆவிகள்.

விடுதலையின் ஜெபத்தில் பரிசுத்த ஆவியானவர் உங்களை வழிநடத்துவார், ஆனால் இந்த ஊழியத்தில் நீங்கள் புதியவரானால், நீங்கள் படிக்க வேண்டிய ஜெபத்தின் மாதிரி இங்கு தரப்பட்டுள்ளது:

*“இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால், அவருடைய வல்லமை, அவருடைய வசனம், அவருடைய இரத்தம், பரிசுத்த ஆவியானவரின் அதிகாரத்தினால்....”*

**....இது விடுதலைக்கான அடிப்படை வல்லமையை உருவாக்குகின்றது....**

*“...நான் உன்னை கட்டுகின்றேன்...”*

**...இயேசு பலமுள்ள மனிதனை துரத்துவதற்கு முன்னர் அவனை கட்டும்படி போதித்தார்...**

*“...நான் உனக்கு கட்டளையிடுகின்றேன்...”*

**...விடுதலையின் ஊழியம் ஓர் அதிகாரத்தின் ஜெபமாகும், அது மன்றாடுதல் அல்ல. நீங்கள் சத்தமில்லாமல் பேசலாம், ஆனால் இயேசுவின் நாமத்தினால் தீய சேனைகளின் மேல் அதிகாரத்தை நீங்கள் எடுத்தல் வேண்டும். நீங்கள் பேசும் நபரின் கண்களை நேரடியாக பாருங்கள்.**

*“................... ஆவியே” அல்லது “...நீ பிசானின் அசுத்த ஆவி...”*

**... இயற்கையான பகுத்தறிவின் மூலம் அல்லது ஆவியின் மூலம் ஆவியானது அடையாளம் காணப்பட்டால், அதை பெயர் சொல்லி குறிப்பிடுங்கள். அல்லாவிட்டால், பொதுவாக குறிப்பிடுங்கள்.**

*“...வெளியேறும்படி...”*

**...இது துரத்துவதற்கான செயன்முறை...**

*“...தீங்கு ஏற்படாதவாறு................ (விடுதலையாக்கப்படவேண்டிய நபரின் பெயர்), அல்லது வீட்டில் இருக்கும் ஒருவர், சத்தம் போடாதவாறு அல்லது இடையூறு ஏற்படாதவாறு”*

**...சிலசமயங்களில் பிசாசு நபரை தீங்குப்படுத்தவோ அல்லது இடையூறு ஏற்படுத்தவோ முற்படுவான்.**

*“நான் இந்த நபரின் மீண்டும் நுழையாதவாறு கட்டளையிடுகின்றேன்...”*

**...இந்த கட்டளையை இயேசு உபயோகப்படுத்தினார்...**

*“...இந்த நபர் மீது பரிசுத்த ஆவியானவரின் சுத்தப்படுத்தலில் நிறப்பும்படியாகவும், இயேசுவின் இரத்தத்திலான விடுதலையின் வல்லமையினாலும் கட்டளையிடுகின்றேன்.”*

**...நாங்கள் விடுவிக்கும்படிக்கும், கட்டுவதற்கும் கூறப்பட்டுள்ளோம். கிரியை செய்யும்போது விசேட ஆவியை நீங்கள் இனம்கண்டால், எதிரான ஆவியை விடுவியுங்கள். உதாரணத்திற்கு, பெருமையின் ஆவியை கட்டி, அடக்கத்தின் ஆவியை விடுவியுங்கள்.**

இந்த ஊழியத்தை காட்டவோ மற்றும் இதை வைத்து கூட்டத்தை கவருவதற்கோ முயற்சிக்க வேண்டாம். சாத்தானுடைய கிரியைகள் கூட்டத்தை கவருவதை இயேசு கண்டபொழுது, அவர் உடனடியாக தீய ஆவிகளின் வெளியே விரட்டும் கிரியை செய்வதை நிறுத்தினார்:

> **அப்பொழுது ஜனங்கள் கூட்டமாகய் ஓடிவருகிறதை இயேசு கண்டு, அந்த அசுத்த ஆவியை நோக்கி: ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டுப் புறப்பட்டுப்போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அதட்டினார். (மாற்கு 9:25)**

சாத்தானை நரகத்திற்கு அனுப்புவதற்கு முற்பட வேண்டாம். இயேசுவும் அவருடைய சீஷர்களும் இதை செய்யவில்லை. அவைகளை கட்டி, இலகுவாக்கி, துரத்துவதற்கு மட்டுமே எமக்கு அதிகாரம் உள்ளது. எதிர்-காலத்தில் சாத்தான்களுக்கு இறுதி நியாயத்தீர்ப்பாக குறித்த நேரம் கொடுக்கப்பட்டுள்ளது. இயேசுவுக்கு சாத்தான்கள் கூறின:

> **அவர்கள் அவரை நோக்கி: இயேசுவே, தேவனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ என்று கூப்பிட்டார்கள். (மத்தேயு 8:29)**

சாத்தானால் தாக்கப்பட்டவர்களுக்க கைகளை வைத்தோ அல்லது வைக்காமலோ ஜெபிக்கலாம். லூக்கா 13:11-13ல் பலவீனத்தின் ஆவியால் பீடிக்கப்பட்டிருந்த பெண்ணை இயேசு அவருடைய ஊழியத்தின் போது கைகளை வைத்து உபயோகித்தார். மற்ற சந்தர்ப்பங்களில், அவர் கைகளை வைக்கவில்லை, ஆனால் சாதாரணமாக பிசாசுகளோடு பேசினார் (லூக்கா 9:42).

### 8. பதிலுக்காக தேவனிடம் துதியுங்கள்:

விடுதலைக்கான தேவனை துதித்து ஜெபத்தில் தொடருங்கள். பத்து குஷ்டரோகிகளின் வேதாகம உதாரணத்தை ஞாபகத்தில் கொள்ளுங்கள், எல்லோரும் குணமாக்கப்பட்டார்கள் ஆனால் துதித்து வந்து திரும்பிய ஒருவரே முழுமையாக்கப்பட்டார். விசுவாத்தினால் துதியுங்கள், பார்த்தலினால் அல்ல. தேவனுடைய வசனம் செய்ய சொன்னதை நீங்கள் செய்தீர்கள். அவர் செய்வார் என்று சொன்னதை செய்ததாக விசுவாசியுங்கள். அதற்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

## விடுதலையின் அடையாளங்களை விளங்கிக்கொள்ளுங்கள்:

சாத்தானுடைய உடமையின்போது, சில சமயங்களில் சாத்தான் கஷ்டப்படுதலினூடாக வெளியே வரலாம், இது அழுகையாகவோ அல்லது நபரை தரையில் தள்ளுதல் மூலமாகவோ இருக்கலாம். சாத்தான் வெளியேறியவுடன் (உடமை அல்லது ஒடுக்குதல்) சந்தோஷத்தின் உணர்வு, பாரத்தை தூக்குவதை போலான உணர்வு வெளிப்படும்.

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

2. வசனத்தின்படி, யார் சாத்தானிய வல்லமைகளோடு தொடர்புபடுகின்றனர்?

..........................................................................................................................................

3. விடுதலையின் ஊழியத்தில் உங்களை ஆயத்தம்செய்வதற்கான அறிவுறுத்தல்களை சுருக்கமாக்குக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

4. விடுதலையின் ஊழியத்தில் மற்றவர்களை ஆயத்தம்செய்வதற்கான அறிவுறுத்தல்களை சுருக்கமாக்குக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

5. இந்த பாடத்தில் விடுதலையின் ஊழியத்தில் பகிரப்பட்ட அறிவுறுத்தல்களை சுருக்கமாக்குக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. சாத்தானுடைய செல்வாக்கிலுள்ளோர்களின் நிலையில் இயேசுவினுடைய ஊழியத்தின் பதிவுகளை வேதாகமத்தில் படியுங்கள்:

   -ஊனமுற்ற பெண்: லூக்கா 13:10-17
   -ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவியை கொண்டிருந்த மனிதன்: மாற்கு 1:23-28; லூக்கா 4:31-37
   -கதரேனவிலுள்ள பிசாசு: மத்தேயு 8:28-32; மாற்கு 5:1-13; லூக்கா 8:26-33
   -இரத்தம் சம்பந்தமான நோயுள்ள பெண்: மத்தேயு 9:20-23; மாற்கு 5:25-34; லூக்கா 8:43-48
   -சீரோபேனிக்கிய ஸ்திரியின் மகள்: மத்தேயு 15:21-28; மாற்கு 7:24-30
   -தீய ஆவியையுடைய சிறுவன்: மத்தேயு 17:14-21; மாற்கு 9:14-29; லூக்கா 9:37-45
   -செவிட்டின் ஆவி: மத்தேயு 9:32-33
   -செவிடும் குருடுமான ஆவி: மத்தேயு 12:22-30; மாற்கு 3:22-27; லூக்கா 11:14-26

   வேறு சம்பவங்கள்: இயேசுவின் இந்த குறிப்பிட்ட சந்திப்புக்களை விட கூடுதலாக, சாத்தானுடைய வல்லமையினால் தாக்கப்பட்டவர்களின் அவருடைய ஊழியத்தின் பொதுவான குறிப்புக்களை வேதாகமம் தருகின்றது:

   -கீழ்வரும் வேதாகம வசனங்களிலுள்ள பதம் "குணமாகுதல்" என்பது இயேசு சாத்தான்களை எவ்வாறு சம்பந்தப்படுத்தினார் என்பதை விபரிப்பதற்கு பயன்படுகின்றது: மத்தேயு 4:24; லூக்கா 6:18

   -கீழ்வரும் வேதாகம வசனங்களிலுள்ள பதம் "துரத்துதல்" என்பது அவருடைய உபாயத்தை விபரிக்க பயன்படுகின்றது: மாற்கு 1:32-34,39; 6:13

   -லூக்கா 4:41 பிசாசு சாதாரணமாக "வெளியே" வந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. லூக்கா 7:21 அவர் அவர்களை "குணப்படுத்தியதாக" குறிப்பிடுகின்றது. மத்தேயு 8:16ல் அவர் "அவருடைய வசனத்தினால் அவைகளை துரத்தியதாக" பதிவு செய்துள்ளது. மாற்கு 16:9 மற்றும் லூக்கா 8:2-3 மகதலேனா மரியாளுடைய ஏழு பிசாசுககளை இயேசு துரத்தியதாக குறிப்பிட்டுள்ளது. பெரிய கூட்டத்தில், சாத்தான்களை பேசும்படி இயேசு அனுமதிக்க வில்லை: மாற்கு 1:32-34

2. உங்களுடைய நிலையிலோ அல்லது நீங்கள் ஊழியம் செய்யும் ஒருவரின் சாத்தானின் பிடியிலிருப்பிலான நிலையிலோ பற்றி கடைசி பாடத்தில் நீங்கள் அறிந்தீர்கள். இந்த பாடத்தில் நீங்கள் கற்றதின் அடிப்படையில், விடுதலையின் ஊழியத்தை நீங்கள் எவ்வாறு செயற்படுத்த வேண்டும்?

..........................................................................................................................................

..........................................................................................................................................

3. விடுதலையின் ஊழியத்தில் நீங்கள் பயன்படுத்துவதற்கு இந்த பாடத்திலிருந்து கீழ்வரும் பட்டியல்கள் தயார் செய்யப்பட்டுள்ளன:

## ஆரம்ப ஆயத்தங்கள்:

**உங்களில்:**

........... விடுதலையில் தேவனுடைய வார்த்தையை படியுங்கள்.
........... ஆரம்பத்தில் உபவாசம் மற்றும் ஜெபம் செய்யுங்கள்.

**மற்றவர்களில்:**

சாத்தானுடைய தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட நபர் அனுமதித்தால், இந்த படிமுறைகளை செய்க:

........... விடுதலையை குறித்தான சரியான அறிவுறுத்தல்கள்.
........... விடுதலையில் தேவனுடைய வார்த்தையை படியுங்கள்.
........... ஆரம்பத்தில் உபவாசம் மற்றும் ஜெபம் செய்யுங்கள்.

## ஊழியத்தின் நேரம்

........... விசுவாசத்தின் சூழலை உருவாக்கிக்கொள்ளுங்கள்.
........... பகுத்தறிவிற்காக ஜெபியுங்கள். தேவன் உங்களுக்கு தரலாம்:
-ஞானத்தின் வசனம்
-வேதாகமத்தின் வசனம்
-தரிசனம்
-விசுவாசத்தின் வசனம்
-விசேட அபிஷேகம்
-விசுவாசத்தின் விசேட கிரியை
........... விரிவான நேர்காணலை நடத்துங்கள்
........... பிரச்சனைகளை இனம்காணுங்கள். பிரச்சனைகளானவை...
........... ஆவிக்குரிய பகுதி
........... பௌதீக பகுதி
........... உணர்வுபூர்வுமான பகுதி
........... மனரீதியான பகுதி
........... ஜெபத்திற்கான நேரம் இதுவா அல்லது இல்லையா என அறியுங்கள்.
........... விடுதலைக்கான ஜெபத்தை ஜெபியுங்கள்.
........... பதிலுக்கான தேவனிடம் ஜெபியுங்கள்.
........... விடுதலைக்கான அடையாளங்களை அறியுங்கள்.

## அதிகாரம் பத்தொன்பது

# தொடர் விடுதலைக்கான ஊழியம்

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ விடுதலை பெற்றவர்களுக்கான தொடர்ந்து வரும் கவனிப்பின் அறிவுறுத்தல்களை சுருக்கமாக்கவும்,
- ☐ சாத்தானுடைய வல்லமையிலிருந்தான பாதுகாப்பின் அறிவுறுத்தல்களை சுருக்கமாக்கவும் முடியும்.

### பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

> **வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள். இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள். (மத்தேயு 10:8)**

### அறிமுகம்

சாத்தானுடைய செல்வாக்கினால் விடுதலையானவர்களுக்கு தொடர் கவனிப்பின் முக்கியத்துவத்தை குறித்து இயேசு தெளிவாக குறிப்பிட்டார். அவர் கூறினார்:

> **அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்:**
>
> **நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லி, அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக்கண்டு,**
>
> **திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக் கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும். அப்பொழுது, அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிககேடுள்ளதாயிருக்கும், அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும் என்றார். (மத்தேயு 12:43-45)**

ஓர் தீய ஆவி வெளியேற்றப்பட்டவுடன், அதன் விளைவு ஓர் ஆவிக்குரிய வெற்றிடமாகும். அந்த வெற்றிடம் நிரப்பப்படாமல், சரியான தொடர் கவனிப்பு கொடுக்கப்படாவிடத்து, சாத்தானுடைய வல்லமை திரும்புதலானது பலமானதாக வெளிப்படும்.

## தொடர்ந்துவரும் கவனிப்பு

விடுதலையை அனுபவித்தோரின் தொடர்ந்துவரும் கவனிப்பின் முக்கியமான படிமுறைகள் இங்கு தரப்பட்டு உள்ளன:

### 1. கைவிடுதலுக்கான ஜெபத்தை ஜெபித்தல்:

விடுதலையிற்கு பின், சாத்தானால் பீடிக்கப்பட்டிருந்தவர்கள் அறிக்கையிடுதலின் ஜெபம், மனந்திரும்புதல், எதாவது பாவங்களை கைவிடுதல் அல்லது சாத்தானுடைய செயற்பாடுகளில் தொடர்புறும் ஈடுபாடை கைவிடுதல் போன்றவற்றை செய்தல் வேண்டும்.

### 2. அமானுஷ்ய பொருட்களை அழித்தல்:

குறித்த நபர் அமானுஷ்ய பொருட்களை வைத்திருந்தால் (விக்கிரகம், பில்லிசூனிய பொருட்கள், மாந்திரீக உபகரணங்கள் போன்றவை) அவைகள் அழிக்கப்படல் வேண்டும்.

### 3. ஆவிக்குரிய வெற்றிடத்தை நிரப்புதல்:

சாத்தான் துரத்தப்பட்ட பின், அவன் செயற்படும்பொருட்டாக இன்னொரு சரீரத்தை தேடுவான். சாத்தான்கள் மனித உடலில் வெளியிலிருந்தால் அமைதியற்றும், அதிருப்தியும் உள்ளவனாயிருப்பான். மனித வாழ்வில் வாசம் செய்து கட்டுப்படுத்தலுக்கூடாக மட்டுமே சாத்தானானவன் பிசாசின் தீய குறிக்கோள்களை நிறைவேற்ற அவனால் முடியும்.

சாத்தானின் முன்னாள் பாதிக்கப்பட்டவனுடைய மீள் தீய ஆவிகளினூடான வருகையின் பயங்கரத்தின் காரணமாக, ஆவிக்குரிய வெற்றிடமானது நிரப்பப்படல் வேண்டும். ஓர் நபர் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு பரிசுத்த ஆவியானவரால் நிறப்பப்பட்டிருக்க வேண்டும். அவன் தொடர்ந்து ஜெபத்திலும் வேத வசனத்திலும் நிலைத்திருந்து விசுவாசியின் குழுவில் பகுதியாளராக வேண்டும்.

### 4. உங்களுடைய சாட்சிகளை கொடுங்கள்:

சாத்தானுடைய வல்லமையிலிருந்து விடுதலைப்பெற்ற அனுபவமுடையவர்கள் அவர்களுடைய விடுதலையை குறித்து சாட்சி கொடுக்க வேண்டும். கதரேனாவிலிருந்த பிசாசு பிடித்தவனுக்கு இயேசு கூறினார்:

> **இயேசு அவனுக்கு உத்தரவுகொடாமல்: நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப் போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்.**
>
> **அந்தப்படி அவன் போய், இயேசு தனக்குச் செய்தவைகளையெல்லாம் தெக்கப்போலி என்னும் நாட்டில் பிரசித்தம் பண்ணத்தொடங்கினான், எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். (மாற்கு 5:19-20)**

எமது சாட்சியின் வசனத்தினால் சாத்தானுடைய வல்லமைகளை மேற்கொள்ளுகின்றோம் என வெளிப்படுத்தல் 12:11 உறுதிப்படுத்துகின்றது.

## 5. சாத்தானுடைய வல்லமைகளிலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்:

சாத்தானுடைய வல்லமையின் கிரியைகளிலிருந்து உங்களை காத்துக்கொள்ள வேண்டிய விசேட வழிகள் இங்கு தரப்பட்டுள்ளன:

-மிகவும் முக்கயமான பாதுகாப்பு இயேசு கிறிஸ்துவை இரட்சகராக பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும், ஏனென்றால் மறுபடியும் பிறந்த விசுவாசியை சாத்தான் பீடிக்க முடியாது. நீங்கள் காக்கப்பட்ட பிறகு, பாவத்திலிருந்து விலகி இருங்கள், பாவத்தின் மூலமாக "சாத்தானுக்கு இடம் கொடுக்கின்றீர்கள்" அல்லது உங்களை பிடிக்கும்படியாக அவனுக்கு சந்தர்ப்பத்தை கொடுக்கின்றீர்கள்.

-பரித்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு இருங்கள். ஒரே ஆவிக்குரிய பாத்திரத்தில் சாத்தானுடைய ஆவியும், தேவனுடைய ஆவியும் வாசம் செய்ய முடியாது.

-சாத்தானுடைய துன்புறுத்தலை விரும்புவதை தவிருங்கள். அவைகளை குறித்தான தேவ-னுடைய வசனத்தை அல்லது தேவனுடைய வசனத்திற்கு அடிப்படையான இதுபோன்ற ஓர் பாடத்தை படித்தல் தவறு அல்ல, ஆனால் சாத்தான்களை குறித்து அதிகம் படிப்பதற்கு மத சார்பற்ற புத்தகங்களையோ, தீய ஆவிகளின் புத்தங்களையோ படிப்பதை தவிறுங்கள்.

-அமானுஷ்ய சக்திகளின் ஏதாவது தொடர்புகளை தவிருங்கள். மந்திரவாதிகள், மத குருக்கள், ஜோதிடர்கள், ஜோதிட அட்டை, பனை, தேயிலை இலை வாசகம் ஆகியவற்றோடு கலந்தாய்வு செய்ய வேண்டாம். தவறான தேவர்களை பின்பற்றாதிருங்கள் அல்லது உங்களுடைய வீட்டிற்கு விக்கிரகங்களை அனுமதிக்காதிருங்கள்.

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

2. விடுதலையை பெற்றவர்களுக்கான தொடர் வரும் கவனிப்பின் அறிவுறுத்தல்களை சுருக்கமாக்குக.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

3. சாத்தானினின் வல்லமைகளிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான அறிவுறுத்தல்களை சுருக்கமாக்குக.

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

நீங்கள் அல்லது நீங்கள் ஊழியம் செய்த ஒருவர் விடுதலையின் அனுபவத்தை அடைந்திருந்தால், நீங்கள் விசேடமாக எவ்வாறு செய்வீர்கள் என எழுதுங்கள்....

கைவிடுதலுக்கான ஜெபத்தை ஜெபித்தல்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

அமானுஷ்ய பொருட்களை அழித்தல்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

ஆவிக்குரிய வெற்றிடத்தை நிரப்புதல்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

உங்களுடைய சாட்சிகளை கொடுத்தல்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

சாத்தானுடைய வல்லமைகளிலிருந்து உங்களை பாதுகாத்தல்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

# பகுதி ஏழு

# இராஜ்ஜியத்தின் ஜீவியம்

இந்த பாடத்தின் ஆரம்பத்தில் ஆவிக்குரிய ஆத்துமா மற்றும் ஆவியின் பகுதியிலும், பௌதீக சரீரத்திற்கான இயற்கையான பகுதிகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும், சாத்தானுடைய இராஜ்ஜியத்திற்கும் இடையிலான மாபெரும் ஆவிக்குரிய யுத்தத்தை பற்றி கற்றீர்கள்.

சரீரத்தின் வியாதியிற்கூடாக எதிரியினுடைய தாக்குதல்களை குறித்தும், இயேசு கிறிஸ்துவின் பிராயச்சித்தத்திற்கூடான தெய்வீக குணமாக்குதலினால் கொடுக்கப்படும் எதிர்தாக்குதல்களை பற்றியும் நீங்கள் கற்றீர்கள். ஊழியம் செய்வதற்கான உபாயங்களையும், குணமாக்குதலையும் விடுதலை-யையும் பெறுதலைபற்றியும் நீங்கள் கற்றீர்கள்.

இந்த இறுதி பகுதியில், போர் வீரன் என்ற வகையில் தேவனுடைய இராஜ்ஜியத்தில் எவ்வாறு வாழ்வது என நீங்கள் கற்பீர்கள்.

## அதிகாரம் இருபது

# நல்ல போராட்ட வீரர்கள்

### நோக்கங்கள்:

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- குணமாக்குதலின் வாக்குத்தத்த வசனத்தை மனனமாக எழுதவும்,
- தெய்வீக குணமாக்குதலின் நடத்தல் தொடர்பான வேதாகம அறிவுறுத்தல்களை சுருக்கமாக் கவும்,
- நல்ல போராட்ட வீரர்கள் என்ற வகையில் தெய்வீக குணமாக்குதலின் நடக்கவும் முடியும்.

### பெறவேண்டிய குணமாக்குதலின் வாக்குத்தத்தம்:

**கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு. அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு. அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். (சங்கீதம் 37:4-5)**

### அறிமுகம்

நீங்கள் வியாதி, பலவீனம், பௌதீக காயத்துடன் இருக்கும்போது, சாத்தானுக்கும் அவனுடைய தீய சேனைகளுக்கும் எதிராக ஆவிக்குரிய யுத்தம் செய்தல் கடினமானதாகும். இதனாலேயே சாத்தான் உங்களுடைய பௌதீக சரீரத்திற்கு எதிராக தாக்குதல்களை தொடுக்கின்றான். நீங்கள் வியாதியஸ்தவராய் இருக்கும்போது ஆவிக்குரிய யுத்தத்தை வல்லமையாக செய்யமுடியாது என அவன் அறிவான்.

குணமாக்குதலை பெறுவதற்காகவும், ஊழியம் செய்வதற்குமான உபாயத்தை நீங்கள் கற்றீர்கள், ஆனால் சாத்தானுடைய தாக்குதல்களிலிருந்து உங்களுடைய சரீரத்தை எவ்வாறு பாதுகாத்தல் என வேதாகமம் அதிகமான கரிசனையுடன் கூறுகின்றது. தேவனுடைய இராஜ்ஜியத்தில் பௌதீக ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் வாழ்வதற்கான கொள்கைகளை வேதாகமம் போதிக்கின்றது.

இயற்கையான உலகத்தில் மருத்துவத்தினால் தடுக்கும் மற்றும் குணமாக்கும் மருந்து இருப்பதை போல, வேதாகம வசனத்தில் தடுக்கும் மற்றும் குணமாக்கும் அளவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. “தடுப்பு” முறை நோயை தடுக்க உதவுகின்றது. “குணமாக்கும்” முறை வியாதி ஏற்பட்டால் குண-மாக்குதலை தர உதவுகின்றது.

கீழ்வரும் வேதாகம வழிகாட்டல்கள் குணமாக்குதலை பெறுவதற்கும், நல்ல ஆரோக்கிய வாழ்விற்குமான கொள்கைகளை கொண்டுள்ளது. அவைகள் தடுக்கும் மற்றும் குணமாக்கும் முறைகளாகும். இந்த கொள்கைகளை நீங்கள் அறிந்திருத்தல் முக்கியமானதாகும், ஆகவே நீங்கள் இதை மற்றவர்களிடம் பகிரலாம். அத்தோடு சரீரத்தின் ஆரோக்கியம் மற்றும் குணப்படுத்தலான தேவனுடைய காரியத்தில் ஞானப்பூர்வமாக ஒத்துழைக்கலாம். தேவனுக்கு நல்ல போராட்ட வீரர்களே தேவையாகும்!

## இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள்:

நீங்கள் இதை செய்யும்போது, நீங்கள் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களாகி, தேவனுடைய பிள்ளையாகின்றீர்கள். சீரோபேனிக்கியா பெண்ணின் கதையின் மூலமாக குணமாக்குதலானது "பிள்ளைகளின் அப்பம்" என வேதாகமம் போதிக்கின்றது, அதாவது, இது தேவனுடைய பிள்ளைகளுக்கு சொந்தமாகின்றது (மாற்கு 7:24-30).

தேவன் அவிசுவாசிகளை கிருபையினால் குணமாக்கின்றார், பின் இரட்சிப்பிற்குள் அவர்களை வழிநடத்தி உபயோகிக்கின்றார், ஆனால் உண்மையில் குணமாக்குதல் "பிள்ளைகளின் அப்பம்" ஆகும். இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளுவதின் மூலம், பௌதீக குணமாக்குதலை பெறுவதற்கு ஆவிக்குரிய தகுதியை நீங்கள் உங்களினுள் செலுத்துகின்றீர்கள்.

நீங்கள் ஏற்கனவே ஒரு விசுவாசியாயின், பாவம் செய்திருந்தால், உங்களுக்கு கிடைக்கவேண்டிய சலுகைகளை கேட்டு, மன்னிப்பை பெற்றுக்கொள்ளுங்கள் (1 யோவான் 1:8-9). உங்களை தொடர்ந்து சுத்தமாக வைத்திருத்தலின் மூலம், உங்களுடைய சொந்த பாவத்தின் மூலமாக வரும் வியாதியை நீங்கள் தடுக்கின்றீர்கள்.

## தேவனுக்கு அவருடைய ஆலயத்தை திரும்பி கொடுங்கள்:

உங்களுடைய சரீரம் தேவனுடைய ஆலயமாகும். தேவனுக்கு அவருடைய நோக்கத்திற்காக உங்களுடைய சரீரத்தை கொடுங்கள்: 1 கொரிந்தியர் 6:13, 19-20; ரோமர் 12:1

## தேவனுடைய இராஜ்ஜியத்தை முதலாவது தேடுங்கள்:

தேவனுடைய இராஜ்ஜியத்தை நீங்கள் முதலாவது தேடினால், மற்ற ஏனைய காரியங்களும் உங்களுக்கு கொடுக்கப்படும் (ஆரோக்கியம் உட்பட): மத்தேயு 6:33

## பரிசுத்த ஆவியானவரினால் நிரப்பப்பட்டிருங்கள்:

இயேசு பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டிருக்கும்வரை குணமாக்குதலை ஒருபோதும் செய்யவில்லை. ஆரம்பகால சபைகள் பரிசுத்த ஆவியானவர் அவர்களில் வந்ததின் பின் பலமடைந்தனர் என வேதாகமம் போதிக்கின்றது. பரிசுத்த ஆவியானவர் உங்களில் வாசம் செய்தால், உயிர்த்தெழுதலிலும் தற்போதும் சாவிற்கேதுவான உங்களுடைய சரீரம் அழியாமையை அடையும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் ஒரு பகுதி குணமாக்குதலின் வல்லமையாகும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் நிரப்பப்பட்டிருத்தல் உங்களை ஆரோக்கியமாக நடக்கவும், உங்களுடைய குணமாக்குதலை பாதுகாக்கவும் உதவும். வசனத்தின் ஆவியான இது உங்களுக்கு வாழ்க்கையை தந்து உயிர் பிக்கும்: சங்கீதம் 119:25,50. ஆவிகளின் உயிர்ப்பித்தல் தொடர்பான 11 தடவைகள் குறிப்பிடும் சங்கீதம் 11ஐ படியுங்கள்.

## தேவனுக்கு பயப்படுங்கள்:

தேவனுக்கு பயப்படுகிறவர்களுக்கு ஆரோக்கியம் உள்ளதென் வேதாகமம் வாக்குப்பண்ணியுள்ளது: மல்கியா 4:2; ரோமர் 8:15.

## தேவனோடு நெருக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்:

“அவருடைய செட்டைகளின்” கீழ் குணமாக்குதல் இருந்தாலும், நீங்கள் எதிர்பார்க்கும்போது அல்லது குணமாக்குதிலின் ஊழியத்தில், அவைகளுக்கு கீழ் நீங்கள் இருத்தல் வேண்டும் (மல்கியா 4:2). தேவனுக்கு “கீழ்” இருத்தல் என்பது ஒரு கொடியில் ஒரு கிளை இருப்பதைப்போல், ஒரு நெருக்கமான உறவு ஆகும். இது உங்களை கொடியில் இணைத்து வாழ்க்கையின் “தொடர்பு” படுத்தி, குணமாக்குதலை ஊற்றும்.

## உங்களுடைய வாழ்க்கையில் வசனத்திற்கு முன்னுரிமை கொடுங்கள்:

நீதிமொழிகள் 4:20-23ஐ படியுங்கள். மனம், காது, கண், மற்றும் இருதயத்தின் மூலம் தேவனுடைய வார்த்தையை அணுகும்போது அதற்கு நீங்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டும். முழுமையான சரீரம் தாக்கத்திற்குட்படும்.

**‘வசனத்தில் கவனம் செலுத்துங்கள்’**: வசனத்திற்கு பிரிக்கமுடியாத கவனத்தை செலுத்துதலை குறிக்கும்.

**‘என்னுடைய வசனங்களுக்கு செவிசாயுங்கள்’**: பாரம்பரியங்களுக்கூடாகவும், தேவனுடைய வசனங்களை குறித்து மற்ற மனிதர்கள் என்ன கூறுகின்றார்கள் என்னும் அடிப்படையில் கேட்க வேண்டாம். உங்களுடைய சொந்த காதால் கேளுங்கள்.

**‘அவைகள் என் கண்களை விட்டு பிரியாதிருப்பதாக’**: தேவனுடைய வசனத்தின் பயிற்சியில் உங்கள் கண்களை செலுத்துங்கள். முரணான சூழ்நிலைகளை பார்க்காதிருங்கள். மாம்ச சிந்தையுடன் பார்க்க வேண்டாம். மாம்சம் உங்கள் ஆவியுடன் போராடும்போது, உங்களுடைய ஆவிக்குரிய சிந்தையில் கவனம் செய்க.

**‘உங்கள் இருதயத்தில் அவைகளை வையுங்கள்’**: தேவனுடைய வார்த்தைகளை உயிருடன் உங்கள் இருதயத்தில் வையுங்கள். உங்களுடைய பௌதீக சரீரத்தை போஷிப்பதுபோல, உங்களுடைய ஆவிக்குரிய சரீரத்தைதயும் போஷியுங்கள்.

**‘அவைகளை கண்டுபிடிக்கின்றவனுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் மாம்சத்திற்கு ஆரோக்கியமானவைக-ளுமாகும்’**: தேவனுடை வசனம் மருந்தை போன்றது. அது குணமாக்குதலை (சங்கீதம் 107:17-20) பலத்தை (சங்கீதம் 119:25-28) கொண்டு வருகின்றது. ஆரோக்கியத்தில் தேவனுடைய வசனத்தை தாக்கத்தை நீதிமொழிகள் 3ல் பார்க்க.

ஒரு மருத்துவ வைத்தியர் மருந்தை பரிந்துரைக்கும்போது, குணமாகுவதற்கு ஒரு நாளில் பல தடவைகள் எடுக்கும்படி கூறுவார். அவர் அதை உட்கொள்ளும்படி கூறியிருக்கும்போது, அதை நெஞ்சில் தடவீர்களாயின், அதில் ஒரு பெறுமதியும் இல்லை. நீங்கள் குணமடைய அவருடைய அறிவுறுத்தல்களை பின்தொடர வேண்டும். இதுவே தேவனுடைய பரிந்துரைத்தலுமாகும்: தடுத்தலுக்கும், சுகமாக்குதலுக்குமான, ஜீவனுக்கும், ஆரோக்கியத்திற்குமான அவருடைய மருந்து அவருடைய வசனமே. நீங்கள் அதை சரியாக உபயோகித்து, பிரயோகிக்க வேண்டும்.

ஒரு வைத்தியர் உங்களிடம் நீங்கள் தீவிர நிலையில் இருக்கின்றீர்கள், உங்களுக்கு அறுவை சிகிச்சை அவசியம் என கூறினால் “இந்த அறுவை சிகிச்சைக்கு எனக்கு நேரமில்லை” என கூற மாட்டீர்கள். உங்களுடைய வேலையை நீங்கள் இழந்தாலும் கூட நீங்கள் நேரத்தை ஒதுக்குவீர்கள். உங்களுடைய அட்டவனையை மீள் அமைப்பீர்கள். தேவனுடைய வார்த்தையாகிய மருந்திற்கு நீங்கள் ஊக்கமுள்ளவர்களாக இருந்தால், உங்களுடைய சரீரத்திற்கு அது குணமாக்குதலை கொண்டுவரும். நீங்கள் கடினத்தை உணர்ந்தால், வேதாகம வாசித்தலை இரட்டிப்பாக்குங்கள். அவருடைய வசனம் ஆவியும் ஜீவனுமாகும். அவைகள் குணமாக்குதலை கொண்டு வருகின்றன.

## வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நடவுங்கள்:

நீங்கள் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நடந்தால், நீங்கள் பாவத்தில் வாழ மாட்டீர்கள், அத்தோடு தனிப்பட்ட பாவத்தினால் வந்த வியாதியை இது நீக்கி விடும். தாவீதின் தனிப்பட்ட பாவத்தினால் உருவான மனது, பௌதீக, ஆவிக்குரிய, உணர்வுரீதியான நிலைகளை சங்கீதம் 38 பதிவு செய்கின்றது.

தேவன் கீழ்ப்படிதலின் அடிப்படையில் பிரதியுத்தரவு பண்ணுகின்றார் (1 யோவான் 3:24). உங்களுடைய தனிப்பட்ட சொந்த பாவத்தின் காரணமாக கொண்டுவந்த வியாதியை நீக்க நீதியான வாழ்வு உதவுகின்றது. தேவனுடைய வார்த்தையின்படி வாழுதல் கூட, பாலியல் மூலமாக பரவும் நோய்கள் போன்ற சில நோய்களிலிருந்து விடுதலையை தருகின்றது.

வசனத்திற்கு கீழ்ப்படிதல் என்பது ஜெபம், படிப்பு, வசனத்தை பிரயோகித்தலை உள்ளடக்கும். வசனத்தில் கீழ்ப்படிந்து வாழ்பவர்களுக்கான பௌதீக ஆரோக்கியத்தின் வாக்குத்தத்தங்களை சங்கீதம் 128, உபாகமம் 28, யாத்திராகமம் 15:26ல் உதாரணமாக பார்க்க.

## உங்களுடைய இருதயத்தையும் ஆவியையும் பாதுகாருங்கள்:

ஆத்துமாவிற்கும், ஆரோக்கியத்திற்கும் இடையில் தொடர்பு காணப்படுகின்றது (3 யோவான் 2). இருதயத்திலிருந்து ஊற்றும் ஜீவனின் வல்லமை குணமாக்கும் வல்லமையை கொண்டு வருகின்றது. ஜீவனின் வல்லமை உங்களின் ஆவியிலிருந்து வரும். உங்களுக்கு கசப்பு, கோபத்தின் ஆவி இருந்தால், உங்கள் பௌதீகத்தை அது தாக்கும். அநேக பதற்றமும், விரக்தியும் எதிர்கால வாழ்க்கையில் வரலாம். குற்ற உணர்வு மற்றும் அதிருப்தி கடந்தகால வாழ்க்கையிலிருந்து வரலாம். தேவன் பின்னணி என்ன என்பதை மறக்க அத்தோடு எதிர்காலத்தை குறித்து கவலைப்பட வேண்டாம் என கூறுகின்றார்.

இதனாலேயே ஜெபிக்கும்போது இயேசு எமக்கு கூறுகின்றார், எங்களுக்கு வேண்டியதை “அன்றன்று எங்களுக்கு தாரும்.” தேவன் பிரபஞ்சத்தின் ஓட்டத்தின் ஒரு நாளின் அமைப்பை கட்டமைத்திருக்கின்றார். எமது இருதயத்தில் அந்த அமைப்பை நாம் உடைத்தால், கடந்த கால மற்றும் எதிர்காலத்தில் ஆவியினால் வாழ்ந்தால், உணர்வுகளானது வியாதியிற்கு நேராக வழிநடத்தும்.

உள்ளான மனித ஆவியானது, மனித சரீரத்திற்கு வாழ்க்கை மற்றும் பெலத்தை தருகின்றது. ஆவியானது சரீரத்தை விட்டு போகும் பட்சத்தில், பலமுள்ள சரீரமானது வாழ்வதிலிருந்து நிறுத்தப்பட்டு அழுக தொடங்கும். ஆவி சரீரத்தில் உட்புகும்போது ஜீவன் உயிரடையும். இதனால் ஆவியில் ஒரு பிளவு இருந்தால், வியாதி உட்பட, சாத்தானின் வல்லமை பிரவேசிக்க வழிவகுக்கும். கசப்பு, கோபம், கவலை, சண்டை, ஆகியவை மாம்சத்தின் அனைத்து கிரியைகளும் ஆகும். (கலாத்தியர்5:19-21).

நீதிமொழிகள் 18:14 காயம்பட்ட ஆவி பௌதீக சரீரத்தை தாக்குகின்றது என குறிப்பிடுகின்றது. நீதிமொழிகள் 17:22 உடைந்த ஆவி பௌதீக சரீரத்தை தாக்குகின்றது என குறிப்பிடுகின்றது. சங்கீதம் 38 பாவமானது எவ்வாறு பௌதீக மற்றும் உணர்வுரீதியான நிலைகளுக்கு தொடர்புபடுகின்றது என காட்டுகின்றது. நீதிமொழிகள் 16:24 மற்றும் 12:18 உங்களுடைய தொடர்பாடுதல் உங்களுடைய பௌதீக உடலை தாக்குகின்றது என குறிப்பிடுகின்றது. பரிசுத்த ஆவியாவனவரின் கீழ் உங்களுடைய உணர்வின் கட்டுப்பாட்டை கொண்டு வாருங்கள். இது உங்களில் பரிசுத்த ஆவியானவருடைய கனியை விருத்தி செய்யும்பொருட்டு தேவனை அனுமதித்தல் மூலம் நடைபெறுகின்றது. குணமாக்குதல் ஆவியில் தொடங்கப்பட்டாலும் கூட, பரிசுத்த ஆவியானவடைய கனியும் குணமாக்குதலை கொண்டு வரும் (கலாத்தியர் 5:22-25; ரோமர் 8:26).

## ஆரோக்கியத்தின் இயற்கையான விதிகளை பின்பற்றுங்கள்:

ஆரோக்கியமற்ற வாழ்க்கைமுறை மூலம் 60வீதமான நோய்கள் வருவதாக வைத்தியர்கள் கணக்கிடு கின்றனர். ஆரோக்கியத்தின் இயற்கையான விதிகளை பின்பற்றுவதற்கான உதாரணங்களால் வேதாகமம் நிரப்பப்பட்டுள்ளன. “நானே உனது பரிகாரியாகிய கர்த்தர்” என்று சொன்ன அதே தேவன், பழைய ஏற் பாட்டின் விதிமுறைகளின் ஒரு பகுதியாக ஆரோக்கியம் கடைப்பிடித்தலுக்கான வழிமுறைகளை தந்துள்ளார். பவுல் கப்பலில் இருந்தோர்களிடம் ஆரோக்கியத்திற்காக சாப்பிடும்படி கூறினார் (அப்போஸ்தலர் 27:34). அவர் அசுத்த நீருக்கு பதிலாக திராட்சைரசத்தை குடிக்கும்படி தீமோத்தேயுவிற்கு கூறினார். (1 தீமோத்தேயு 5:23).

சரீரம், ஆவியும் கூட மிகவும் புனிதமானது, ஏனென்றால் அது தேவனுடைய ஆலயமாகும். சரியான ஓய்வு, பயிற்சி, உணவு ஆகியவை தெய்வீக ஆரோக்கியத்தில் உங்களை வழிநடத்தும் ஏனென்றால் நீங்கள் தேவனுடைய இயற்கையின் விதிகளோடு ஒத்துப்போகின்றீர்கள். உங்களுடைய சரீரம் தேவனுடைய ஆலயமாயிருப்பதினால் சாராயம், சிகரட் மற்றும் போதைபொருட்கள் போன்ற எந்த வொரு நச்சுப் பொருட்களையும் எடுக்க வேண்டாம்.

## கிறிஸ்துவின் சரீரத்தை சரியாக அறிந்துகொள்ளுங்கள்:

இராப்போஜனத்தில் கிறிஸ்துவின் சரீரத்தை சரியாக அறிந்துகொள்ளுவதின் முக்கியத்துவத்தை நீங்கள் ஏற்கனவே கற்றீர்கள். இவைகள் செய்யாதபடியால் அநேகர் வியாதியாகவும், பலவீனராகவும் இருப்பதாக வேதாகமம் கூறுகின்றது.

## நீங்கள் வியாதியாயிருக்கும்போது, தேவன் உங்களை குணமாக்க விரும்புகின்றார் என விசுவாசியுங்கள்:

தேவன் உங்களை குணமாக்க விரும்புகின்றார் என இதன் அனுபவம் உங்களில் இல்லாவிட்டாலும் கூட விசுவாசியுங்கள். ஏற்பாடு மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவை வித்தியாசமானவை. இரட்சிப்பிற்கான ஏற்பாடு நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளுவதற்கு நூறு வருடத்திற்கு முன்றே ஏற்படுத்தப்பட்டது, அது இப்பொழுது உங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (குணமாக்குதலின) வெளிப்படுத்தல் இன்னும் அனுபவியா விட்டாலும், விசுவாசத்தின் நம்பிக்கையான ஏற்பாடு இருத்தல் வேண்டும். உரிமை கோருவதைவிட விசுவாசித்தல் வித்தியாசமானதாகும். தாங்கள் நலமுடன் இருப்பதாக மக்கள் உரிமைகோரினாலும், இன்னும் வித்தியாசமான அடையாளங்களை உணருதல், இது தெய்வீக குணப்படுத்தலுக்கு அப்பால் பலர் திரும்புதினாலான நிலை ஆகும்.

தேவனுடைய வார்த்தையை "நம்புதல்", இயற்கையானதையும், காட்புலனாகும் அடையாளங்களையும் மறுப்பதாக அமையாது. உங்களுடைய அடையாளங்களை பொதுவாக பேசும்படியும், உங்களுடைய சரீரத்தில் சாத்தானுடைய தாக்குதல்களை மகிமைப்படுத்தவும் செல்ல வேண்டாம், ஆனால் நீங்கள் கேட்கப்பட்டால், எப்பொழுதும் உண்மையை பேசுங்கள். "எனக்கு இருதயத்தின் பிரச்சனையான அடையாளம் உள்ளது" அல்லது "வைத்தியர் இருதயத்தின் பிரச்சினையை அறிந்து விட்டார்." பிறகு தேவனுடைய வசனத்தோடு பதிலை வேண்டிக்கொள்ளுங்கள் -- "அவருடைய தழும்புகளால் நான் குணமானேன்."

உண்மையை புறக்கணியாதோர் அல்லது மறுக்காதோரை இந்த இயேசுவினுடைய உதாரணம் தொடரும், இயேசு தெளிவாக கூறினார், "லாசரு இறந்துவிட்டார்... ஆனால் நான் அவனை எழுப்பப் போகின்றேன்." இது விசுவாசத்தோடு சமநிலையாக்கப்பட்ட சிக்கலான விடயத்தின் உண்மையாகும்.

## இயேசுவிற்கூடாக குணமாக்குபவராக தேவனை ஏற்றுக்கொள்ளுங்கள்:

பாவமும், வியாதியும் சாத்தானுடைய இரட்டை ஆவிகள். இரட்சிப்பும், குணமாக்குதலும் தேவனுடைய ஏற்பா-டாகும். கல்வாரியிற்கு முன்னர், விசுவாசத்தின் முன்நோக்கிய பார்வையிற்கூடாக குணமாக்குதலையும் மீட்பையும் மக்கள் பெற்றார்கள். பிற்பாடு, விசுவாசம் பின்நோக்கியதாக மாற்றப்பட்டது. நீங்கள் இயேசுவை இரட்சகராக மட்டுமே ஏற்றுக்கொண்டீர்களா, அல்லது அவரை குணமாக்குபவராக கூட ஏற்றுக் கொண்டீர்களா? நீங்கள் அவரை ஒருபோதும் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாவிடத்து அவர் எவ்வாறு உங்களை பாவத்திலிருந்து விலக்கி வைக்க முடியும்? நீங்கள் அவரை ஒருபோதும் குணமாக்குபவராக ஏற்றுக்கொள்ளாவிடத்து அவர் எவ்வாறு உங்களை வியாதியிலிருந்து விலக்கி வைக்க முடியும்?

இயேசு உங்களுடைய பாவத்தை சுமந்தது போல, ஒரே மாதிரியாகவும், ஒரே தடவையும் உங்களுடைய நோய்களையும், வியாதிகளையும் சுமந்தார் (மத்தேயு 8:17). நாம் அவருடைய நன்மைகளை, குணமாக்குதல் உட்பட மறக்க கூடாது (சங்கீதம் 103:1-3). இயேசுவினுடைய பரி-காரத்தின்போது பாவம் மற்றும் வியாதி ஆகிய இரண்டையும் தேவன் அவர்மேல் வைத்தார். நாம் எவ்வாறு அதில் ஒரு பகுதி எமக்கு சொந்தமானது எனவும், மற்றையவை சொந்தமல்ல எனவும் கூறலாம்?

ரோமர் 10:9ல், "இரட்சிப்பு" என்னும் அதே வார்த்தையை தான் மாற்கு "அவரைத் தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்" என்று கூறும்போது உபயோகிக்கின்றார். இரட்சிப்பு என்பது பாவத்திற்கும் அதனுடைய ஆக்கினைக்கும் இருந்தான விடுதலை என கூறுகின்றது. வியாதி என்பது ஆக்கினையின் ஒரு பகுதி ஆகும். கிரேக்க வார்த்தையான "சோசோ" பௌதீக மற்றும் ஆவிக்குரிய குணப்படுத்தலை அர்த்-தப்படுத்துகின்றது. ஏசாயா அதிகாரத்திலுள்ள (அதிகாரம் 53) "நிச்சயமாக" மட்டும் (அழுத்தமான வார்த்தை) எமது குணமாக்குதலுக்கான அவருடைய ஏற்பாட்டை கூறுகின்றது.

பாவத்தின் கட்டுக்களிலிருந்தும், வியாதியிலிருந்தும் நீங்கள் விடுவிக்கப்படலாம். அவர் உங்களுடைய அக்கிரமங்களை மன்னித்து உங்களுடைய அனைத்து நோய்களையும் குணமாக்குகின்றார் (சங்கீதம் 103:3). இதனாலேலே இயேசு கூறினார், "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வதோ, அல்லது குணமாகுவதோ, எது எளிது?" (மாற்கு 2:9).

## குணமாக்குதலுக்கான உங்களுடைய விசுவாசத்தை அதிகரியுங்கள்:

விசுவாசமின்மை குணமாக்குதலை மறைக்கின்றது, ஆகவே குணமாக்குதலுக்கு நீங்கள் விசுவாசத்தை அதிகரிக்க வேண்டும். இதற்கு மாபெரும் விசுவாசமுள்ள நபராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை, மாபெரும் தேவனுக்கு சிறு விசுவாசமுள்ள நபராயிருந்தால் போதும். விசுவாசம் என்பது தேவன் உங்களை குணமாக்குவார் என நம்புதலாகும், அவரால் குணமாக்க முடியும் என்பதல்ல. சாத்தான் தேவனால் குணமாக்க முடியும் என நம்புகின்றான், ஆனால் குணமாக்குவார் என்னும் உண்மையிலிருந்து உங்களை விலக்கி வைக்க அவன் விரும்புகின்றான்.

குணமாக்குதலுக்கு உங்களுடைய சொந்த விசுவாசமே முற்றும் தேவை என்பதல்ல. அது தீர்மானிக்கப்பட முடியாதது, ஆனால் ஒவ்வொரு குணமாக்குதலின் சந்தர்ப்பத்திலும் நிபந்தை செய்யலாகாது. இயேசு குணமாக்குதலின் ஊழியத்தை செய்யும்போது, விசுவாசம் இல்லாத அநேகர் கூட குணமாக்கப்பட்டார்கள். சிலர் மரித்தார்கள். நண்பருடைய விசுவாசத்தினால் அல்லது இயேசுவிடம் கொண்டுவந்த உறவினர்களுடைய விசுவாசத்தினால் சிலர் குணமானார்கள்.

உங்களுடைய விசுவாசம் குணப்படுத்தலின் ஒரு வழியாக இருக்கின்றது, ஆனால் இந்த வழியை தேவன் உபயோகிப்பதால், அதை வளர்ப்பது முக்கியமானது.

-இல்லாத குணமாக்கும் விசுவாசம்:
- -நீங்கள் இரட்சிக்கப்பட்டதினாலான விசுவாசம்.
- -“எமது தகப்பனாரின் விசுவாசம்.”
- -உங்களுடைய சொந்த விசுவாசத்தினுடைய விசுவாசம், உங்களுடைய விசுவாசத்திற்கான பிரதியுத்தரவு ஆகியவை.,
- -“நான் என்னுடைய பகுதியை செய்கின்றேன், இப்பொழுது நீங்கள் உங்களுடையதை செய்யுங்கள்.”

-குணமாக்கும் விசுவாசமானது:
- -ஓர் நம்பிக்கையான காரியம் மற்றும் பார்க்காத காரியத்தின் நிச்சயம்.
- -தேவன் வாக்குத்தத்தம் பண்ணியதை எதிர்பார்த்தல்.

-குணமாக்கும் விசுவாசமானது:
- -ஜெபிக்கும் ஒருவரது விசுவாசம்.
- -குணமாக்குதலை எதிர்பார்க்கும் ஒருவரது விசுவாசம்.
- -நண்பருடைய விசுவாசம்.
- -உறவினர்களுடைய விசுவாசம்.

குணமாக்குதல் குறித்தான தேவனுடைய வசனங்களை கேட்பதின் மூலம் விசுவாசத்தினால் குணமாக்குதல் வருகின்றது. இதையொத்த அனுபவங்கள் உங்களுடைய விசுவாசத்தை ஊக்குவிக்கும், ஆனால் தேவனுடைய வார்த்தையை கேட்டல் மட்டுமே உங்களுடைய விசுவாசத்தை அதிகரிக்கும். ஏசாயா இரட்சிப்பின் அதிகாரத்தை “எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?” என ஆரம்பிக்கின்றார். கேள்விப்பட்டதை விசுவாசிப்பதற்கு, நாம் எதை கேட்க வேண்டும். ரோமர் 10:17 கூறுகின்றது, விசுவாசம் தேவனுடைய வசனத்தினாலே வருகின்றது. இந்த வசனத்திலுள்ள “வசனம்” என்பதின் அர்த்தமானது “தேவனால் சொல்லப்பட்ட விசேட காரியங்கள்” எவைகள் -- ஆரோக்கியத்தின் நிலையில் -- குணமாக்குதல் தொடர்பிலான வசனங்களினால் ஆகும்.

இயேசு மக்களுடைய விசுவாச மட்டங்களின் அளவால் அவர்களை கண்டிக்கவில்லை. அவர் வசனத்தினால் அதை ஊக்கப்படுத்தி, அதை அதிகரித்தார். நீங்கள் ஜெபம்பண்ணும்போது விசுவாசியுங்கள் (லூக்கா 11:24). பலர் அவர்களுடைய ஜெபத்திற்கான பதிலை பெறுவதில்லை, ஏனென்றால் அவர்களுக்கு விசுவாத்திற்கு பதிலாக நம்பிக்கையே காணப்படும். விசுவாசம் என்பது நிகழ்காலத்தை குறிக்கும். உங்களுடைய ஜெப நேரத்திற்கும், உங்களுடைய பௌதீக சரீரத்தின் வெளிப்படுத்தலுக்கும் இடையில், தேவனை பாருங்கள், அடையாளங்களை அல்ல.

## விசுவாசத்தில் கிரியை செய்யுங்கள்:

உங்களுடைய விசுவாசத்தை காண்பிக்கும்பொருட்டு தேவனுடைய வார்தையின்படி கிரியை செய்யுங்கள். நம்பிக்கை செயலற்ற நிலை ஆகும். விசுவாசம் செயல்படும் நிலை ஆகும். கிரியை யில்லாத விசுவாசம் செத்தது. விசுவாசம் ஓர் பெயர் சொல். நம்பிக்கை ஓர் வினைச்சொல். நம்பிக்கையை விசுவாசத்தோடு தொடர்புபடுத்தி, விசுவாசத்தில் கிரியை செய்ய தொடங்குங்கள். மனிதன் விசுவாசத்தில் செயல்படும் போது, தேவன் எப்பொழுதும் கிரியை செய்கின்றார்:

-நோவா பேழையை கட்டினான்: தேவன் வெள்ளத்தை அனுப்பினார்.
-மோசே கோலை நீட்டினான்: தேவன் நீரை பிரித்தார்.
-யோசுவா எரிகோவை சுற்றி நடந்தான்: மதில்கள் இடிந்து விழுந்தன.
-எலியா தண்ணீரை அடித்தான்: தேவன் தண்ணீரை பிரித்தார்.
-எலிசா தடியை ஆற்றில் எறிந்தான்: தேவன் இரும்பை மிதக்கப்பண்ணினார்.
-நாமான் ஏழு தடவை ஆற்றில் மூழ்கினான்: தேவன் அவன் குஷ்டரோகத்தை குணமாக்கினார்.

தேவனுடைய வார்த்தையை நீங்கள் உண்மை என ஏற்றுக்கொண்டு, அதன்படி கிரியைசெய்தால், அது இலகுவாக்கப்படும். விசவாசத்தின் அடிப்படையில் குணமாக்குதல் என ஏற்று முதலில் கிரியை செய்ய வேண்டும். அநேக விசுவாசிகள் தேவனோடு கூட அதிகம் நடந்தாலும்கூட, ஜெபத்தின் அடிப்படையிலும், மற்றவர்களுடைய விசுவாசத்தின் அடிப்படையிலும் தங்கள் ஜீவியத்தை செல வழிக்கின்றனர். காக்கப்படுவதற்கு, நீங்கள் உங்களுடைய சொந்த மனந்திரும்புதல், விசுவாசம், அறிக்கையிடுதல், ஏற்றுக்கொள்ளுதல், பெறுதல் ஆகியவை செய்தல் வேண்டும். கேட்டல், விசுவாசித்தல், குணமாக்குதல் பெறுதல் ஆகியவை செய்ய உங்களுக்கு உரிமை உண்டு. மற்றவர்கள் உங்களுக்காக ஜெபிக்கலாம், ஆனால் உங்களுடைய சொந்த கேட்டலுக்கு மற்றவர்களுடைய ஜெபங்களை ஒரு போதும் பிரதியீடாக வைக்க வேண்டாம், ஏனென்றால் கேட்கும் அனைவரும் பெறுவர் என இயேசு கூறினார். விசுவாசத்தில் உங்களில் அறிக்கையிடுங்கள் (சங்கீதம் 6:2-3)

விசுவாசத்துடன் கேட்டதின் பின், விசுவாசத்தோடு குணமாக்குதலை பெற்றுக்கொள்ளுங்கள்: மரியாள் கூறினாள்: “உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது”. நீங்கள் நலமாக இருக்கின்றீர்கள் என்னும் நிலை இல்லாதபோது, ஜெபிக்கும்போது குணமாக்குதலை பெறுவீர்கள் என விசுவா சியுங்கள். இரட்சிப்பை செய்ததைபோல் அதை பெற்றுக்கொள்ளுங்கள்: விசுவாசத்தினால். சில சமயங்களில் நீங்கள் இரட்சிக்கப்பட்டதைப்போல உணருவீர்கள், சில சமயங்களில் அல்ல, ஆனால் இன்னும் விசுவாசத்தினால் இரட்சிப்பை பெறுவீர்கள். குணமாக்குதலிலும் இதுவே உண்மையாகும்.

நீங்கள் மற்றவர்கள் விசுவாசிக்கும் வரை இரட்சிப்பை கொண்டுவர முடியாது. குணமாக்குதலிலும் இதுவே உண்மையாகும். குணமாக்குதலை நிரூபிப்பதற்காக தேவன் யாரையும் குணமாக்க மாட்டார் ஆனால் இரட்சிப்பை நிரூபிக்கும்படி சிலரை அவர் இரட்சிப்பார்.

குணப்படுத்தல் உடனடியாகவோ அல்லது படிப்படியாகவோ இருக்கலாம். இயேசுவால் குணப்படுத்தப்பட்ட குருடரும் குஷ்டரோகியும் பொதுவாக படிப்படியான குணமாக்குதலாகும். இயேசு ஒரு நாள் அத்திமரத்தை சபித்தார், அதனுடைய வேர்கள் மரித்தன, ஆனால் அதின் மரணம் மறுநாள்வரை காணப்படவில்லை. அதனுடைய வேர்கள் மரித்தது, ஆனால் கிளைகள் விழுந்து காணும்படியாக அல்ல. குணமாக்குதலிலுதம் இதே கொள்கை உண்மையானதாகும்.

நீங்கள் குணமாகிவிட்டீர்களா என உங்கள் சரீரத்தை பார்க்க ஆரம்பித்தல் தவறானதாகும். குணமாக்குதல் ஆவியிலிருந்தே தொடங்குகின்றது. தேவன் உங்களுடைய ஆவியிற்கூடாக குணமாக்குகின்றார். அவருடைய வசனங்கள் "ஆவியும், ஜீவனுமாய்" இருந்தபோதிலும், நாம் ஆவியில் அவரை துதிக்க வேண்டும். இதனாலேயே சாத்தான் உங்களுடைய ஆவியிற்கு எதிராக யுத்தம் செய்கின்றான் (ஆவிக்குரிய யுத்தம்).

தேவனிடம் நீங்கள் அறிக்கையிட்ட பின், விசுவாசத்தினால் உங்களுடைய குணமாக்குதலை பெற்றுக்கொண்டு, தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி விசுவாசத்தின் கிரியை செய்யுங்கள். தேவனுடைய வசனத்தின்படி விசுவாசம் கிரியைசெய்து நகர்கின்றது. கலங்குதல், உற்சாகப்படுதல், உணர்ச்சிவசப்படுதல் காரணங்களாகும். காரணம் வாதாடும்போது, விசுவாசம் உறுதிப்பாடாய் நிற்கின்றது.

விசுவாசம் வாதாடாது, தேவனுடைய வார்த்தையின்படி விண்ணப்பத்தை வைக்கும்போது, கிரியை நிறைவுபெற்று காட்புலனாகாது தெரிவதற்கு முன்னர் கூட விசுவாசிக்கும். விசுவாசம் எதிர்பார்க்கபட்ட விளைவுகளின் வெளிச்சத்தில் ஜீவிக்கும். அது தற்போதைய சூழ்நிலைகளின் கட்டுக்களுக்கு பின் வாங்கிப் போகாது. இஸ்ரேல் மக்கள் வாக்குத்தத்தத்தின் நிலத்தை எடுத்ததைப்போல, "நிலத்தில்" எந்தளவிற்கு நீங்கள் நிற்கின்றீர்கள், நடக்கின்றீர்கள், உரிமைகோருகின்றீர்கள் என்பதை பொறுத்து உங்களுடைய சுதந்திரத்தின் அளவு தீர்மானிக்கப்படுகின்றது.

விசுவாசத்தின் வார்த்தையை பேச ஆரம்பியுங்கள். எமது அறிக்கையின் வசனம் தேவன் சொல்லுபவற்றை சொல்லும் (எபிரெயர் 3:1). அறிக்கையிடுதல் தேவன் சொன்னவற்றை சொல்லும் அத்தோடு நீங்கள் நம்பும் ஒன்றை உறுதிப்படுத்தும், தேவன் அவருடைய வார்த்தையில் சொன்ன காரியங்களை உங்கள் இருதயத்திலிருந்து உங்கள் உதடு திரும்பதிரும்ப சொல்லும். இயேசு உங்களுக்கு செய்தவற்றை மற்றும் அவருடைய கிரியையின் நிறைவால் வேதாகமம் என்ன வாக்குப் பண்ணியுள்ளதோ அதை அறிக்கையிடுங்கள்.

அறிக்கையிடுதல் வேதாகமத்தில் எழுதப்பட்ட காரணிகளை குறிப்பிடும். எமது அறிக்கையிடுதலில் இயேசுவே மேலான ஆசாரியர். எமது அறிக்கையிடுதலுக்கு ஏற்ப அவர் கிரியை செய்கின்றார். இது "மனதிற்கு மேலான காரியம்" அல்லது நெறிதவறிய "பெயரிட்டு உரிமைகோருதல்" உபாயம் அல்ல. விசுவாசம் நம்புவதற்காக காத்திருக்காது, ஏனென்றால் விசுவாசம் கேட்டலினூடாக வரும், பார்த்தலினால் அல்ல. லாசருவின் கல்லறைக்கு முன்பாக அவர் நின்ற போது, அவர் ஜெபித்தார், "நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்". படியினால் என்பது இறந்தகாலம். லாசரு இன்னும் மரித்த நிலையில் இருக்கும்போது கூட அவர் இதை கூறினார்.

அறிக்கையிடுதல் உண்மையை ஒருபோதும் மறுக்காது, ஆனால் தேவனுடைய வார்த்தையின் உறுதியை முதன்மையாக சேர்க்கும். விசுவாசம் பகுத்தறிவற்ற கிரியை அல்ல. இது அதிகமாக உல-

கத்தின் பகுத்தறிவான கிரியை ஆகும். இது தேவனுடைய வசனத்தின் அடிப்படையில் உள்ளது, உயர்தரமான இயலுமைக்கான ஆதாரம் பொருட்களை பார்த்தல் அல்ல -- பொருட்கள் -- வேதாகம வசனத்தின் அடிப்படையில் “பரலோகத்தில் எப்பொழுதும் வைக்கப்பட்டவை”.

மாறான உணர்வுகள் இருந்தாலும் தேவனுடைய வார்த்தையை அறிக்கையிடுங்கள். அறிக்கையிடுதல் உணர்வு இருந்தாலும், இல்லாவிட்டாலும் இரட்சிப்புக்காக ஏற்படுத்தப்பட்டது. குணமாக்குதலிலும் இதுவே உண்மையாகும். முதலில் அறிக்கையிடுங்கள், பின் இயேசு உங்கள் அறிக்கையில் கிரியை செய்வார். நீங்கள் உங்களுடைய சாட்சியின் வசனத்தின் மூலமும், இயேசுவினுடைய இரத்தத்தின் மூலமும் மேற்கொள்வீர்கள் (வெளிப்படுத்தல் 12:11).

நீங்கள் குணமாக்குதலுக்காக அனுதாபப்பட தேவையில்லை, ஆனால் பதிலீடு தேவை, இது இயேசு-வால் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது. மறையான அறிக்கையிடுதல் சாத்தானை மகிமைப்படுத்தும். நீங்கள் ஒரு பிரச்சனைகளை சொல்லும்போது, அப்பிரச்சனைக்கு கொண்டு சென்ற சாத்தானின் இயலுமை குறித்து சாட்சி கொடுக்கின்றீர்கள். நீங்கள் உங்கள் வாயின் வார்த்தைகளால் கண்ணி வைக்கின்றீர்கள் (நீதிமொழிகள் 6:2). உங்களுடைய அறிக்கையிடுதல் தேவனுடைய வசனங்களா அல்லது அடையாளங்களா? வசனம் குணமாக்குதலை அறிவிக்கின்றது. அடையாளங்கள் நோய்களை அறிவிக்கின்றது. நீங்கள் அறிக்கையிடுவது என்ன?

விசுவாசத்தின் அறிக்கையின் ஒரு பகுதியாக, குணமாக்குதலுக்கான தேவனுக்கு துதி செலுத்த தொடங்குங்கள். திமிங்கிலத்தின் வயிற்றில் இருந்த போதிலும்கூட தேவனுடைய விடுதலைக்காக யோனா துதித்தார். எபிரெயர் 13:15 “பலியின் துதி” யைக்குறித்து பேசுகின்றது. எமது விண்ணப் பங்களோடு மட்டும் அல்லது அவருடைய வாசல்களில் நாம் துதியோடு பிரவேசிக்க வேண்டும்.

சங்கீதம் 50:14-15 இரட்சிப்பின் சுவரின் வாசல் துதி என குறிப்பிடுகின்றது. துதித்தலினூடாக உங்க-ளுடைய சொந்த வாயிலை அமைத்து, அதற்கூடாக நடந்துசென்று இரட்சிப்பின் நன்மைகளுக்காக உரிமை கோரலாம். இயேசுவை உங்களுடைய தேவனாக அறிக்கையிட்டு, அவிசுவாசியை போல கிரியை செய்ய அவசியம் இல்லை. அவரை உங்களுடைய குணமாக்குவராக அறிக்கையிட்டு, அவிசுவாசியை போல கிரியை செய்ய வேண்டாம்.

தேவனுடைய வார்த்தையில் வல்லமையில்லாத ஒன்றும் இல்லை. பேதுருவுக்கு வலைகளை போடும்படியாக கூறப்பட்டதும், அவர் வாதாடவில்லை. இரவு முழுவதும் மீன் பிடித்தும் ஒன்றும் அகப்படவில்லை என்பதை அவன் மறக்கவில்லை, ஆனால் அவன் மேற்கொண்டு சென்று, தேவ-னுடைய வார்ததையின் படி கிரியை செய்தான். நீங்கள் விசுவாசத்தில் கிரியைசெய்யும்போது, உங்களுடைய உணர்வின் அடிப்படையில் இருக்க தேவையில்லை. நீங்கள் ஜெபத்தில் கேட்பதைப் போல உணர மாட்டீர்கள். நீங்கள் ஜெபித்த எதற்கும் நீங்கள் அடைய மாட்டீர்கள். நீங்கள் முதலில் எவ்விதத்திலும் நன்றாக உணர மாட்டீர்கள்.

உங்களுக்கு குணமாக்குதலா அல்லது உணர்வா தேவை? குணமாக்குதல் உணர்வை விட நல்லது. நீங்கள் குணமாகலாம், ஆனால் எதையும் உணர முடியாது. தேவனுடைய வசனத்தில் உங்களுடைய விசுவாசத்தை வையுங்கள், உணர்வுகளில் அல்ல. விசுவாசம் காணப்படாதவைகளின் நிச்சயமுமா யிருக்கிறது (எபிரெயர் 11:1). நீங்கள் ஏற்கனவே குணமாக்குதலை உணர்ந்தால் விசுவாசம் அவசியம் அல்ல.

ஆவிக்குரிய நபர் நடத்தப்படும்படியே தேவனுடைய வார்த்தையும் விசுவாசமும் இருக்கின்றது. இயற்கையான மனிதன் இயற்கையின் சுபாவப்படி நடக்கின்றான். ஆவிக்குரிய மனிதன் ஆவிக்குரிய சுபாவப்படி நடக்கின்றான். இயற்கையான காரியங்கள் தேவனுடைய வார்தைகளோடு முரண்படும் போது, ஆவியின் படி நடவுங்கள். உங்களுடைய இயற்கையான சுபாவங்கள் உறுதிப்படுததலாம், ஆனால் தேவனுடைய வசனங்கள் அவற்றிலிருந்து வித்தியாசமாக இருக்கும்போது, வசனத்தில் கிரியை செய்யுங்கள்.

ஆபிரகாமுடைய பௌதீக சுபாவம் அவன் குமாரனை பெறமுடியாது என கூறியது. ஆனால் ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். தேவன் சொன்னவை நடந்ததுபோல் அவன் கிரியை செய்தான். ஆபிரகாம் "தன்னுடைய சரீரத்தை மாத்திரம் சார்ந்திருக்கவில்லை" (ரோமர் 4:19). உங்களுடைய சரீரத்தின் நிலையில் சார்ந்திருக்க வேண்டாம். மேலும் "அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவில் சார்ந்திருங்கள்" (எபிரெயர் 3:1).

உங்களுடைய சரீரத்தை மாத்திரம் சார்ந்திருத்தல் போதாது. தேவன் உங்களை எடுக்கும்படி கூறினால், அதை வைக்கும்படியாகவும் உங்களுக்கு சொல்லுகின்றார். பிசாசுகளை துரத்தும்படி அவர் உங்களுக்கு சொல்லும்போது, வெற்றிடமானது நிரப்பப்படவேண்டும். நீங்கள் கட்டும்போது, நீங்கள் கட்டவிழ்க்கவும் வேண்டும். ஒரே மாதிரியே இங்கு பிரயோகிக்கப்படுகின்றது: நீங்கள் உங்கள் சரீரத்திற்கான அடையாளங்களை "சார்ந்திராத போது", நீங்கள் அவரில் உங்கள் அவதானத்தை வைக்கின்றீர்கள், "அவரில் சார்ந்திருக்கின்றீர்கள்".

நோய் மற்றும் நம்பிக்கைக்கான வல்லமையை மக்கள் விசுவாசித்தார்கள். வைத்தியர்கள் சொல்லும் தாக்கங்களை அவர்கள் விசுவாசிப்பார்கள், அவர்கள் அனுபவியாததற்கு முன்னரே அதனை அனுபவிப்பார்கள். ஆனால் இது குணப்படுத்தலுக்கு வரும்போது, நாம் சொல்லுகின்றோம், "நான் அதை காணும் வரை அதை நான் நம்ப மாட்டேன்." விசுவாசம் கூறும், "நீ அதை நம்பும்வரை அதை நீ காணமாட்டாய்." விசுவாசம் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. (எபிரெயர் 11:1). தாவீது கூறுகிறார், "காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால்" (சங்கீதம் 27:13). "நான் விசுவாசிப்பதற்கு நான் பார்க்க வேண்டும்" என்று அவர் சொல்லவில்லை. ஓர் காரியத்தை காணும் முன் அவர் விசுவாசத்தினால் கிரியை செய்தார். விசுவாசத்தினால் நீங்கள் நடப்பதை வசனம் ஏற்கும். உணர்வினால் நீங்கள் நடப்பதை புலன்கள் ஏற்கும். காணும் பொருட்களின் உண்மையை நீங்கள் மறுக்க தேவையில்லை (அடையாளங்கள்) ஆனால் காணாத பொருட்களின்மேல் உங்கள் கவனத்தை வையுங்கள் (2 கொரிந்தியர் 4:16-18; 5:1).

விசுவாசத்தோடு அவிசுவாசியின் சோதனையில் சந்தியுங்கள். சாத்தான் ஒவ்வொரு மறுபடியும் பிறந்த விசுவாசிகளை பாவத்தினால் சோதிக்கின்றான். அடையாளங்களினால் குணமடைந்த ஒவ்வொருவரையும் அவன் சோதிப்பான். அவன் வியாதி உங்களுக்கு மீண்டும் வரும் என பயத்தால் சோதிப்பான். மற்றவர்கள் குணமாக்குதலை இழப்பதை நீங்கள் பார்க்கும்போது உங்களை ஊக்கமிக்க செய்வான். நீங்கள் குணமானீர்கள் என்னும் சந்தேகத்தினால் அவன் உங்களை நிரப்புவான்.

தேவன் என்ன கூறினார் என்று அர்த்தம் அல்ல, ஆனால் தேவனை விசுவாசித்தினால் முதல் மனிதனுடைய பாவம் ஏற்பட்டது என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள்! பாவத்தின் சோதனைகளை நீங்கள் சந்திப்பது போல அதே வழியிலான சோதனைகளை சந்தியுங்கள்: இயேசு செய்ததைபோல், தேவனுடைய வசனத்தால் அவைகளுக்கு பதில் கொடுங்கள்.

## ஆவிக்குரிய யுத்தக்களத்தின் ஆயுதங்களை உபயோகியுங்கள்:

பாவம் ஆத்துமாவை தாக்குவதைப்போல், வியாதி சாத்தானுடைய சரீரத்திற்கான தாக்குதல் ஆகும் என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். ஆவிக்குரிய ஆயுதங்களோடு இதற்கெதிராக யுத்தம் செய்யுங்கள். (எபேசியர் 6:10-18). உங்களுடைய யுத்தங்கள் உபவாசத்தையும், ஜெபத்தையும் உள்ளடக்கும் (ஏசாயா 58:6-8). ஆவிக்குரிய போர்வியூகங்கள் குறித்து மேலதிகமாக படிப்பதற்கு, அறுவடைய நேர நிறுவனத்தின் பாடமான "*ஆவிக்குரிய போர்வியூகங்கள்: ஆவிக்குரிய போராட்டத்திற்கான கையேடு*" படிக்கவும்.

## மருத்துவ மற்றும் இயற்கை முறைகளை ஏற்றுக்கொள்ளுங்கள்:

தீ பற்றி எரியத்தொடங்கினால், தீ விபத்து பிரிவிற்கு அழைப்பை மட்டும் ஏற்படுத்த மாட்டீர்கள், தீயை அனைப்பதற்கான எல்லா விதமான காரியங்களையும் உபயோகிப்பீர்கள் (வாளி, நீர், கூரைகளை நனைத்தல் போன்றவை). நீங்கள் வியாதியடைந்தால், நீங்கள் தேவனை மட்டும் அழைக்க முடியாது, ஆனால் நீங்கள் வியாதியிற்கு எதிராக போராட கிடைக்கும் முறையான ஒவ்வொன்றையும் பயன்படுத்த முடியும்: வைத்தியர்கள், மருத்துவம், ஓய்வு, சாப்பாடு மற்றும் பயிற்சி. அனைத்தும் தேவனிடம் இருந்து வரும் நல்ல காரியங்கள். குணமாக்குதல் வரும் முறைகளை ஏற்றுக் கொள்ளுங்கள், ஆனால் தேவனுக்கு மகிமையை செலுத்துங்கள்!

இந்த இரண்டு முறைகளையும் தவிருங்கள்:

**1. குணமாக்கும் ஜெபத்தை மட்டும் நடத்துதல்:**

சில கிறிஸ்தவர்கள் குணமாக்கும் ஜெபத்தை மட்டும் நடத்துவார்கள், தேவனுடைய நன்மையின் விரிவாக்கம் அல்லவென நவீன மருத்துவத்திலான எல்லா உதவியையும் மறுப்பர். ஏசாயா குணமாக்குதலுக்கு அத்திப்பழத்து அடையை உபயோகித்தார் (ஏசாயா 38:10-21). இயேசு சொன்னார் "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல்" (லூக்கா 5:31) மற்றும் லூக்கா, வைத்தியர், பவுலின் குழுவில் ஒரு பகுதியாக இருந்தார் (கொலோசெயர் 4:14).

சில கிறிஸ்தவர்கள் 2 நாளாகமம் 16:12-13ஐ வைத்தியரிடம் செல்லாதிருப்பதற்கான ஆதாரமாக குறிப்பர், ஏனென்றால் ஆசா வைத்தியரை நாடி மரித்தான். ஆனால் இந்த பகுதியின் திறவுகோல் வார்த்தை "மட்டும்". ஆசாவினுடைய பாவம் தேவனை நோக்காதிருப்பதாகும். மாபெரும் தனிப்பட்ட தேவைக்கான தருணத்தில், அவன் மனிதனை மட்டும் பார்த்தான். அவனுடைய முதலாவதான நம்பிக்கை மனிதனே, இதுதான் அவனுடைய தவறாகும்.

தேவனுடைய நன்மைக்கான விரிவாக்கம் மருத்துவ வைத்தியர்கள் மட்டுமே. ஒரு வைத்தியரால் எலும்பை இணைக்க முடியும், ஆனால் அதை குணமாக்க தெய்வீக வல்லமைக்காக பொறுத்திருக்க வேண்டும். ஒரு அறுவை வைத்தியர் கடினமான அறுவையை திறமையாக செய்யலாம், ஆனால் அவன் செய்யும் வெட்டுக்களுக்கான உண்மையான குணமாக்குதலை தேவன் செய்கின்றார். அவர் ஒத்துழைப்போது கிரியை செய்கின்றார், ஆனால் எதிர்த்து அல்ல, தேவனால் என்றாலும் கூட அவர் அதை அறியார். வைத்தியர்கள் குணமாக்குதலுக்கான முட்டுக்கட்டையை நீக்கி, அதை குணப்படுத்தும் படியாக மருந்துக்களை வழங்குகின்றனர். கிறிஸ்தவ வைத்தியர்கள், விசேடமாக, தேவனுடன் ஒத்துழைத்து வல்லமையாக காரியங்களை செய்ய முடியும்.

அநேக மருந்துக்கள் இயற்கையான மூலிகைகள் மற்றும் தேவனால் முதல்தரத்தில் உருவாக்கப் பட்ட ஆதார பொருட்களால் தயாரிக்கப்படுகின்றன. மருந்துக்கள் மிகவும் அடத்தியான நிலையி லுள்ளவை. மருந்துக்களை எடுத்தலின் முன் ஜெபித்தலானது அதன் வல்லமையை அதிகரிக்கச் செய்யும். தேவன் கிருபையுடன் அளித்த மருத்துவ சேவை முறையை ஏன் ஒதுக்கி வைத்துள்ளீர்கள்? இருதயத்தில் இரத்த ஓட்டத்தை நிறுவத்துவதற்கு மறுத்து, தனியாக ஜெபிக்கும்படியாக செய்தல் அல்லது விரல்களுக்கு நடுவிலுள்ள முள்ளை நீக்குவதற்கு மறுத்து மூப்பர்களை அழைத்து ஜெபிக்க அழைத்தல் என இதைவிட விவேகமான காரியம் உள்ளதா? இயற்கை முறைகளை உபயோகிக்க மறுப்பது முட்டாள் தனமானது அல்லது முறையான மருந்துக்கள் என்பது வாழ்க்கை யையும் ஆரோக்கியத்தையும் கடைபிடிக்க தின உணவுகளை மறுத்தல் ஆகும்.

குறிப்பு: முக்கியமாக தீராத வியாதிகளில், வைத்தியர்களை தேர்ந்தெடுக்கும் விடயம் எச்சரிக்கை யானது. தெய்வீக தலையீட்டின் உண்மையை ஒருவர் வைத்தியத்தல் முக்கியமானதொரு காரியமா-கும் அத்தோடு மறையான சூழ்நிலைகளோடு வியாதியால் சூழப்பட்டிருத்தல்.

**2. நவீன வைத்திய முறையால் தேவன் குணமாக்கும் வழிமுறைகளுக்கு வரையறை செய்தல்:**

விசேட நோய்களை குணப்படுத்த, உணர்வு மற்றும் மன நிலைகளில் உதவ வைத்தியர்களாலும், மருந்துக்களாலும் முடியும், ஆனால் அவர்களால் ஆவிக்குரிய மற்றும் சாத்தானிய நிலைகளால் தொடர்புபட முடியாது. போதைப்பொருட்கள் சில சமயங்களில் உண்மையான பிரச்சனைகளை மறைத்து வைக்க மட்டும்தான் முடியும், ஆனால் அதனோடு சம்பந்தப்படாது. தெய்வீக குணப்படுத்-தலானது முழுமையோடு சம்பந்தப்படும்.

## சுய பரிசோதனை

1. குணமாக்குதலின் வாக்குத்தத்தத்தை மனனமாக எழுதவும்.

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

2. தெய்வீக குணமாக்குதலில் வாழ்வதற்கான இந்த பாடத்தில் கலந்தாய்வுற்குட்பட்ட வேதாகம வரையறைகளை சுருக்கமாக்குக.

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. இலவசமாக மக்களுக்கு ஆவிக்குரிய ரீதியாக குணமாக்குதலுக்கு பிரயோகிக்க கூடிய தீய ஆவிகளிலிருந்தான தேவனுடைய கிரியைகளுக்கான வேதாகம உதாரணங்கள் தரப்பட்டுள்ளன:

**தெய்வீக தலையீடு:** அப்போஸ்தலர்கள் தூதனால் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். இது தெய்வீக குணமாக்குதலுக்கு ஒத்தது: அப்போஸ்தலர் 5:17-21; 12:1-11

**தேவனால் ஆரம்பித்து வைத்த இயற்கையின் சக்திகளின் தலையீடு:** பவுலையும், சீலாவையும் சிறைச்சாலையில் இருக்கும்போது நிலநடுக்கம் விடுவித்தது. தேவனால் ஆரம்பித்துவைத்த இயற்கையின் செயல்முறையிலான குணமாக்குதலின் உதாரணமாக இதை கொள்ளலாம்: அப்போஸ்தலர் 16:25-40

**நிபுணர்களிலான தலையீடு:** சிறையிலிருந்தான விடுவித்தல் அதிகாரிகளின் மூலமாக வருகின்றது. இதை குணமாக்குதலுக்கு பிரயோகித்தல், இது விசேட மருத்துவ கவனிப்பிற்கு ஒத்தது: அப்போஸ்தலர் 16:35-39

**சாதலுக்கான குறித்த நேரம்:** கி. பி 67ல் பேதுருவும், பவுலும் ரோமில் சிறைவைக்கப்பட்டர்கள் என வரலாறு கூறுகின்றது. இந்த நேரம் தெய்வீக, இயற்கையிலான அல்லது நிபுணர்களிலான தலையீடு இருக்கவில்லை. அவர்கள் இரத்தசாட்சிகளானார்கள். இதை குணமாக்குதலுக்கு பிரயோகித்தல், இது வியாதியானது மரணத்திற்கேதுவாக மாறுதலை கொள்ளலாம்.

இந்த அனைத்து காரியங்களும் சமாந்திரமான உண்மையை அறிந்துகொள்ள உதவுகின்றது. தேவனுக்கு எப்பொழுதும் மக்களை சிறைச்சாலைகளிலிருந்து விடுவிக்க வேண்டுகின்றார், அத்தோடு குணமாக்குதலுக்கும் கூட. சில சமயங்களில் இது தெய்வீக குணமாக்குதலாக இருக்கலாம், தேவனால் ஏற்படுத்தப்பட்ட இயற்கையிலான செயற்பாடு, நிபுணர்களின் உதவி யிற்கூடாக, அல்லது எல்லையற்ற விடுதலை -- மரணம். மரிக்கும் விசுவாசம், வாழும் விசுவாசத்திற்கு இடையிலான முறைகளில் இதற்கிடையில் எவ்வித தாக்குதல்களும் இல்லை.

ஜெபத்தினால், மருந்துக்களினால் அல்லது இயற்கையினாலான செயற்பாட்டுக்கள் மூலம் எல்லா வகையான முறையான குணமாக்குதல்களும் தேவனிடமிருந்தே வருகின்றன. தேவன் அற்புதங்களை செய்யும்போது, குணமாக்கும் செயற்பாட்டில் சமனாக கிரியை செய்கின்றார், இதை நாம் விபரித்து, தீர்க்கதரிசனமாக கூறலாம் என வசனம் போதிக்கின்றது. (உலகத்தின் இயற்கையான செயற்பாட்டு கிரியையில் தேவனுடைய வல்லமையை விபரிக்கும் சங்கீதம் 65ஐ பார்க்க.) இதை அறிந்து அனைத்து குணமாக்குதல்களுக்கும் தேவனுக்கு மகிமையை கொடுத்தல் முக்கியமான காரியமாகும்:

**நான் தங்களைக் குணமாக்குகிறவரென்று அறியாமற்போனார்கள். (ஓசியா 11:3)**

2. இந்த பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள இராஜ்ஜியத்தின் ஜீவியத்தின் கொள்கைகளை மீள் பரீட்சிக்க. உங்கள் வாழ்க்கையில் செயல்படுத்தப்படும் தேவைகளின் வழிகளை பரீட்சிக்க:

......... இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளுதல்.
......... தேவனுடைய ஆலயத்தை அவருக்கு திருப்பி கொடுத்தல்.
......... தேவனுடைய இராஜ்ஜியத்தை முதலாவது தேடுதல்.
......... பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டிருத்தல்.
......... தேவனுக்கு பயப்படுதல்.
......... தேவனோடு நெருக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்ளுதல்.
......... உங்களுடைய வாழ்க்கையில் வசனத்திற்கு முன்னுரிமை கொடுத்தல்.
......... வசனத்திற்கு கீழ்ப்படிவுடன் நடத்தல்
......... உங்களுடைய இருதயத்தையும், ஆவியையும் பாதுகாத்தல்.
......... குணமாக்குதல்களில் இயற்கையான விதிகளை பின்பற்றுதல்.
......... கிறிஸ்துவின் சரீரத்தை சரியாக அறிதல்.
......... நீங்கள் வியாதியாய் இருக்கும்போது, தேவன் உங்களை குணமாக்க வேண்டுகிறார் என விசுவாசித்தல்
......... தேவனை இயேசு கிறிஸ்துவிற்கூடாக குணமாக்குபவராக ஏற்றுக்கொள்ளுதல்.
......... குணமாக்குதலுக்கு உங்களுடைய விசுவாசத்தை அறிதல்.
......... விசுவாசத்தில் கிரியை செய்தல்.
......... ஆவிக்குரிய போர்க்களத்தில் உங்களுடைய ஆயுதத்தை பயன்படுத்துதல்.
......... மருத்துவ மற்றும் இயற்கையிலான முறைகளை ஏற்றுக்கொள்ளுதல்.

3. நீங்கள் பரீட்சித்த ஒவ்வொரு வழிமுறைகளின் செயல்படுத்தும் திட்டத்தை எழுதுங்கள்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

# முடிவுரை

சரீரத்தின் யுத்தம் குறித்தான உங்களுடைய பாடத்தின் முடிவுரையை நீங்கள் எட்டியுள்ளீர்கள், ஆனால் இந்த யுத்தம் இந்த பாவமான, வியாதியுடைய உலகிலிருந்து நீங்கள் கடக்கும் வரை மற்றும் இயேசு இராஜாவின் பிரசன்னத்திற்குள்ளாக செல்லும் மரணம் வரை ஆக்ரோஷமாக இருக்கும்.

இந்த பாடத்தை நீங்கள் தொடங்கும்போது பௌதீக தாக்குதலுக்குள் நீங்கள் இருந்தால், உங்களுடைய குணமாக்குதலின் விளைவாக போதனையானது இருந்திருக்கும் என நாம் விசுவாசிக்கின்றோம். ஞாபகத்தில் கொள்ளுங்கள்: தேவனுடைய சமூகத்திற்குள் நீங்கள் பிரவேசிக்கும் பொழுது, நீங்கள் உடனடியாகவோ அல்லது படிப்படியாகவோ அல்லது எல்லையற்றதாகவோ குண-மாக்கப்படுவீர்கள்.

துன்பப்படும் உலகில் விடுதலை மற்றும் குணமாக்குதலின் ஊழியத்தில் இந்த வசனங்களானது உங்களை சவாலுக்குட்படுத்தியிருக்கும் என நாம் ஜெபிக்கின்றோம். குணமாக்குதலின் ஊழியத்தை தொடங்குவதற்கு முதலில் நீங்கள் தயங்கியிருக்கலாம் அல்லது பயந்திருக்கலாம், ஆனால் ஞாபகத்தில் கொள்ளுங்கள்: அவருக்கு பயப்பட்டு, அவிசுவாசத்தின் பாலத்தை எரிப்பவர்களுக்கே குணமாக்குதலின் ஊழியம் உரியதாகும்.

ஜுலியர் சீஷர் என அழைக்கப்படும் பிரபல தலைவரை குறித்தான ஓர் கதை உண்டு, அவர் பிரான்சிலிருந்து இங்கிலாந்தை நோக்கி அவருடைய படைகளோடு கப்பலில் பிரித்தானியாவை பிடிக்க சென்றான். அவர் இங்கிலாந்தை அடைந்ததும், இங்கிலாந்து கால்வாயை கடக்க பயன் படுத்தப்பட்ட அனைத்து கப்பல்களையும் எரித்தார். இங்கு பின்வாங்க முடியாது. இது வெற்றியை அல்லது சாவுதலுக்கு நேரான நகர்த்தலாகும். குணமாக்கும் ஊழியத்திலும் குறிக்கோளை நோக்கியே உங்களுக்கு இருத்தல் வேண்டும்.

இந்த பாடத்தில் நீங்கள் கற்றதிற்கு சம்பந்தமாக இரண்டில் ஒரு நிலைகளை நீங்கள் எடுப்பீர்கள்:

> -புதிய ஏற்பாட்டில் “பொறுத்திருந்து பார்ப்போம்” என சமய தலைவர்களுக்கு அறிவுறுத்தலை கொடுக்கும். தலைவர் கமாலியேலைப்போல எச்சரித்து வலியுறுத்தி ஒதுங்குபவராக இருக்-கலாம்.
>
> -அல்லது கிரியையின் ஆபத்து நடவடிக்கையை எடுத்த அப்போஸ்தலனாகிய பேதுருவைப் போல் இருக்கலாம். அவன் முடவனை குணமாக்கி, ஆவிக்குரிய தலைவர்களின் கோபத்தை குணமாக்கி, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் குணமாக்கவோ அல்லது போதிக்கவோ கூடாதென கூறிய அதிகாரிகளுக்கு எதிர்த்து நின்றான்.

எப்பொழுதும் ஞாபகத்தில் கொள்ளுங்கள்: நீங்கள் குணமாக்குதலை ஏற்படுத்துபவர்ரெயொழிக, குணமாக்குபவர் அல்ல. உங்களுக்கூடாக குணமாக்குபவர் ஊற்றப்படுவதற்கு நீங்கள் ஒரு பாத்திர-மாக இருக்கின்றீர்கள்....

> ......... மக்கள் எதிர்நோக்கும் புற்றுநோய்கள் மற்றும் தீராத கலங்குதலிலான வலி.
> ......... விரக்தியடைந்த, நம்பிக்கையிழந்த, விட்டுக்கொடுப்பதற்கு ஆயத்தமுள்ள மக்கள்.

......... அன்பான ஒருவரை இழத்தல் அல்லது மற்றவர்களால் தங்கள் இருதயத்தில் துன்பப்பட்ட மக்கள்.
......... வலியிலான உணர்வுகளினால் அழுதல்.
......... பாவத்தின் சங்கிலிகள் மற்றும் சாத்தானிய ஒடுக்குமுறைகளால் மக்கள் கட்டப்பட்டிருத்தல்
......... மரணத்தை எதிர்கொள்ளும் மக்கள்.

குணமாக்குதலின் ஊழியத்தில் எழும்பும் பதிலளிக்கப்படாத கேள்விகளுக்கும், கடினமானவற்றை விபரிக்கவும் நேரத்தை செலவிட நீங்கள் அழைக்கப்படவில்லை. நீங்கள் கேள்விகளுக்கு பதில் கொடுக்க அழைக்கப்படவில்லை, ஆனால் குணமாக்குதலின் ஊழியத்தில் அழைக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் இரட்சிப்பின் ஊழியம் செய்யும்போது, குணமாக்குதலின் ஊழியத்தின் விளைவை தேவ-னோடு விட்டுவிடுங்கள்.

சுவிசேஷகர் எப். எப். போஸ்வோர்த் கூறிய அதே குறிக்கோளை எடுத்துக்கொள்ளுங்கள்:

> *"நான் வாழும் ஜீவிய காலத்தில் இரட்சிப்பையோ அல்லது குணமாக்குதலையோ மற்ற மனி-தனிடம் காணாவிடத்து, நான் ஒருவன் மட்டுமே எல்லா சுவிசேஷத்தையும் போதிக்கின்றேன். நிகழ்வுகளின் மீது அல்லாமல் (அனுபவம்) என்னுடைய கொள்கையின் மாற்ற முடியாத தேவனுடைய வசனத்திற்கு மேலான அடிப்படையில் நான் தீர்மானிக்கின்றேன்."*

இந்த பக்கத்தின் கையேட்டிற்கூடாக, அற்புதத்திற்கான ஆற்றலை உமது கரத்தில் நாம் வைத்துள்ளோம். குணமாக்கும் விதையை உங்கள் இருதயத்தில் நாம் விதைத்துள்ளோம். இது இயற்கையான உலகத்தில் உள்ள விதையை போன்றது. விசுவாசத்தை கொண்டுவரும்பொருட்டு, இந்த விதைக்கானது உரமளிக்கப்பட வேண்டும்.

இந்த பாடத்தில் தேவனுடைய வசனத்தின் அற்புதத்தின் விதை உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இது குணமாக்குதலிற்கு தொடர்பான விதையாகும். இயற்கையான விதை எவ்வாறு முளைத்து வளரும் என்று நீங்கள் விபரிக்க முடியாதோ, அதேப்போல் குணமாக்குதலின் பொருளில் எல்லா வற்றையும் உங்களால் விபரிக்க முடியாது. ஆனால் உங்கள் ஆவி மற்றும் ஆத்துமாவில் விதைக்கப்பட்ட விதைக்க நீங்கள் உரமளித்தால், அது ஜீவனை கொண்டுவரும்.

முடிவுரையாக, இரண்டு இறுதி வினாக்கள் தரப்பட்டுள்ளது:

**நாம் கேட்கின்றோம்:** "இந்த விதையிற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்?"

**இயேசு கேட்கின்றார்:** "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நட-வென்று சொல்வதோ, எது எளிது?"

# பிற்சேர்க்கை அ

## ஓர் கண்டறிதலுக்கான பகுப்பாய்வு

கீழ்வரும் அட்டவணையானது வியாதியிற்கான சாத்தியமான காரியங்களோடு சம்பந்தப்பட்டு உங்களுக்கு ஆய்வு செய்து உதவும்பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஜெபத்தோடு ஒவ்வொரு கேள்விகளையும் அணுகவும். இந்த ஆய்வை பூர்த்தியாக்கும்பொருட்டு அறிதலுக்கும், வெளிப்படுத்தலுக்கும் தேவனிடம் கேளுங்கள்.

**ஆவிக்குரிய பகுப்பாய்வு:**

...... இயேசு கிறிஸ்துவை உங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளீர்களா?

...... இயேசு கிறிஸ்துவை உங்களுடைய குணமாக்குபவராக ஏற்றுக்கொண்டுள்ளீர்களா?

...... தேவன் உங்களை குணமாக்குவார், குணமாக்க சித்தமுள்ளவர் எனவும் விசுவாசிக்கின்றீர்களா?

...... ஒவ்வொரு நாளும் வேதாகமத்தை வாசிக்கின்றீர்களா?

...... உங்களுடைய விசுவாசத்தை வளர்க்கும்பொருட்டு குணமாக்குதல் தொடர்பான தேவனுடைய வசனத்தை படிக்கின்றீர்களா?

...... தேவனுடைய வார்த்தையின் குணமாக்கும் வாக்குத்தத்தத்தை உரிமை கோருகின்றீர்களா?

...... தேவனுடைய வாக்குத்தத்தத்தில் விசுவாசம் அல்லது சந்தேகத்தை காட்ட கிரியை அல்லது காட்புலனாகும் அறிக்கைகளை செய்கின்றீர்களா?

...... தேவனுடைய வாக்குத்தத்தத்தை அல்லது அவருடைய அடையாளத்தையா நோக்குகின்றீர்கள்?

...... நீங்கள் ஒவ்வொரு நாளும் ஜெபிக்கின்றீர்களா?

...... நீங்கள் ஒவ்வொரு நாளும் தேவனிடம் உங்கள் பாவத்தை அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்கின்றீர்களா?

...... நீங்கள் மற்றவர்களை மன்னித்து அவர்களுக்காக ஜெபம் செய்கின்றீர்களா?

...... ஜெபத்தின் பதிலுக்கான தடைகளுக்காக உங்களை நீங்கள் தினமும் பரிசோதிக்கின்றீர்களா? அவைகள்:

- ...... ஏதாவது வகை பாவம்.
- ...... இருதயத்திலுள்ள விக்கிரகம்.
- ...... மன்னிக்கமுடியாத ஆவி.
- ...... சுயநலம் மற்றும் தவறான எண்ணங்கள்.
- ...... வல்லமைக்கான பசி, சாதகமான ஜெபங்கள்.
- ...... வாழ்க்கை துணைவரோடான தவறான நடத்தை.

...... சுய நீதி.
...... அவிசுவாசம்.
...... கிறிஸ்துவிலும், அவருடைய வசனத்திலும் நடக்காமை.
...... அர்ப்பணிப்பு இன்மை.
...... பாசாங்குதனம், பெருமை, அர்த்தமற்றவற்றை திரும்பதிரும்ப கூறுதல்.
...... தேவனுடைய சித்தத்தின்படி கேட்காமை.
...... இயேசுவினுடைய நாமத்தினால் கேட்காமை.
...... சாத்தானுடைய தடைகள்.
...... தேவனுடைய இராஜ்ஜியத்தை முதலாவது கேட்காமை.

...... வேதாகமத்தின் ஏதாவது வழிகாட்டலை மீறியதாக அறிகின்றீர்களா?

...... இராப்போஜனத்திற்காக முறையாக பெற்று, முறையாக ஆயத்தப்படுகின்றீர்களா?

...... மற்ற விசுவாசிகளோடு உங்களில் விசுவாசத்தின் சூழலை ஏற்படுத்தி ஒழுங்குமுறையாக ஆராதிக்கின்றீர்களா?

...... உங்களுடைய பாட்டனார், உறவினர்கள் அல்லது உங்களில் ஏதாவது அமானுஷ்ய சக்தி-களோடு தொடர்புபட்டுள்ளீர்களா? இருக்குமாயின், இந்த தொடர்பை ஒழித்துவிட்டு, ஏதாவது சாபத்-தின் இருப்பை ஒழிக்கும்படி ஜெபம் செய்கின்றீர்களா?

...... ஆவிக்குரிய காரியங்களை விட உங்கள் சரீரங்களில் குணமாக்குதலுக்காக வலியுறுத்துகின்றீர்களா?

...... ஆவி, ஆத்துமா, சரீரம் என்பவற்றின் பூரணத்துவத்தை விட பௌதீக குணமாக்குதலை மட்டுமே எதிர்பார்க்கின்றீர்களா?

...... குணமாக்குபவரை விட உங்களில் குணமாக்குதலின் நோக்கம் அதிகமாக உள்ளதா?

...... குணமாக்குதலை தாக்கும் பல்வேறு காரியங்களோடு சம்பந்தப்படுகின்றீர்களா? அவைகள்

...... போதனையின்மை.
...... விசுவாசமின்மை.
...... நம்பிக்கையின்மை.
...... வல்லமையின்மை.
...... தனிப்பட்ட பாவம் அறிக்கையிடப்படாமை.
...... பூரணமாக்கப்பட மறுத்தல்.
...... தீர்மானங்கள் மற்றும் விருப்பங்கள் இன்மை.
...... விண்ணப்பங்களோடுள்ள பிரச்சனைகள்: கேட்காமை, குறிப்பிட்டு கேட்காமை, தவறான குறிக்கோளுக்காக கேட்டல்.
...... விடாமுயற்சி இன்மை.
...... குணமாக்கும் செயற்பாட்டில் கீழ்ப்படியாமை.
...... கிறிஸ்துவின் சரீரத்தை தவறாக விளங்குதல்: இரத்தம் மற்றும் மாம்சத்திற்கான அர்த்-தம், சரீரத்தின் பிரிவுகள், சரியாக சாப்பிடாமை.
...... விரட்டப்படமுடியாத தீய ஆவி.
...... தேவனுடைய கிரியைகளை எதிர்த்தல்.

...... இயற்கையிலான விதிகளை துஷ்பிரயோகப்படுத்தல்.

...... உங்களுடைய சரீரத்தை (தேவனுடைய ஆலயம்) அவருக்கு திருப்பி கொடுத்துள்ளீர்களா?

...... உங்களுடைய ஆவிக்குரிய "வீட்டை" பரிசுத்த ஆவியானவர் நிரப்பியுள்ளாரா? அதனால் சாத்தான் அங்கு வாசம் பண்ண முடியாது அல்லவா?

...... குணமாக்குதல் உங்களுக்கு ஏற்படும்பொருட்டு தேவனுடைய இராஜ்ஜியத்தை முதலாவது தேடுகின்றீர்களா?

...... சரீரத்திற்கான யுத்தத்தில் ஆவிக்குரிய யுத்தத்தை நீங்கள் உபயோகிக்கின்றீர்களா? அவைகள்:

...... தேவனுடைய வார்த்தை.
...... இயேசுவினுடைய இரத்தம்.
...... உங்களுடைய சொந்த சாட்சியின் வசனம்.
...... கட்ட மற்றும் கட்டவிழ்ப்பதற்கான அதிகாரம்.
...... ஜெபம் மற்றும் துதி.
...... ஆவிக்குரிய யுத்தத்தின் ஆயுதம்.
...... பரிசுத்த ஆவியானவதின் வல்லமை மற்றும் அதிகாரம்.
...... இயேசுவினுடைய நாமம்.

...... யாக்கோபு 5:13-18லுள்ள வழியின்படி ஜெபத்தை தொடருவதற்கு சபையின் மூப்பர்களை அழைத்தீர்களா?

மேற்கூறப்பட்ட பட்டியலில் அறியப்படும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான உங்களுடைய திட்டங்களை எழுதுங்கள்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

பௌதீக ஆய்வு:

...... பொருளாதார சாத்தியத்திற்கு ஏற்ப, சமநிலையான உணவை எடுக்கின்றீர்களா?

...... நீங்கள் ஒழுங்குமுறையாக அதிகமாக அல்லது குறைவாகவா உண்ணுகின்றீர்கள்?

...... உண்ணும்போதான தீவிரமான ஒழுங்கீனம் காணப்படுகின்றதா?

...... உங்களுடைய உணவு தொடர்பான போஷாக்கின்மை, ஒவ்வாமை மற்றும் ஆவிக்குரிய நிலைகளை பரீட்சிக்கின்றீர்களா?

உணவிலுள்ள பிரச்சினைகளை திருத்துவதற்கான உங்களுடைய திட்டங்களை எழுதுங்கள்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

...... நீங்கள் போதியளவு உறங்குகின்றீர்களா?

...... நீங்கள் சரியான பயிற்சி எடுக்கின்றீர்களா?

...... நீங்கள் புகைக்கின்றீர்களா?

...... நீங்கள் போதைபொருட்கள், தீங்கான பொருட்களை எடுகின்றீர்களா?

...... நீங்கள் தீங்கான போதைபொருட்களை எடுகின்றீர்களா?

...... நீங்கள் பாலியல் முறைகேட்டை செய்கின்றீர்களா (விபச்சாரம், ஓரினச்சேர்க்கை)?

...... நீங்கள் தியானம் செய்யும்போது, பரிந்துரைக்கப்பட்டப்படி எடுக்கின்றீர்களா?

...... குணமாக்குதலுக்கு இயற்கை மற்றும் மருத்துவம் ஆகிய இரண்டிற்கும் கதவை திறந்துள்ளீர்களா?

மேற்கூறப்பட்ட பட்டியலில் அறியப்படும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான உங்களுடைய திட்டங்களை எழுதுங்கள்:

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

## உணர்வு மற்றும் மனரீதியிலான ஆய்வு:

...... குணமாக்குதல் பெறுவதை தடுக்கும் "மனிதனுடைய பாரம்பரியங்களை" நீங்கள் நீக்கு கின்றீர்களா? (இந்த பாடத்தின் அதிகாரம் 11 மற்றும் 12ஐ பார்க்க). இது கீழ்வரும் விசுவாசத்தை அல்லது பதிலளிக்கப்படாத கேள்விளை உள்ளடக்கும்:

...... குணமாக்குதலும், அற்புதங்களும் இன்று இல்லை.
...... மரித்த அனைவர்களும் ஏன் எழும்பவில்லை?
...... தெய்வீக குணமாக்குதல் கிரியைசெய்யுமானால், கிறிஸ்தவர்கள் ஏன் மரிக்கிறார்கள்?
...... நவீன மருத்துவம் தெய்வீக குணமாக்குதலை தேவையற்றதாக்குகின்றது.
...... தெய்வீக குணப்படுத்தலானது தவறான உபதேசங்களால் போதிக்கப்பட்டுள்ளது.
...... ஆத்துமாவை விட சரீரமே முக்கியமானது.
...... உங்களுடைய பாவத்தினால் நீங்கள் வியாதியடைந்துள்ளீர்கள்.
...... நீங்கள் வியாதியடைவது தேவனுடைய சித்தம் ஆகும்.
...... நீதிமான்களுக்கு துன்பங்கள் உண்டு.
...... தெய்வீக குணப்படுத்தல் குறைவானது.
...... உங்களுடைய சிலுவையே உங்களுடைய வியாதி போன்றவற்றை அறிய முடியும்.
...... உங்களுடைய வியாதி மாமசத்திலுள்ள ஓர் முள் ஆகும்.

...... உங்களுடைய வாழ்க்கையில் மக்களை, இடங்களை அல்லது காலங்களை மறுத்து, புறக் கணித்துள்ளீர்களா?

...... குறித்த மக்கள், இடங்கள், நிகழ்ச்சிகளின் நினைவுகள் உள்ளதா? அல்லது அவமானம், குற்றவுணர்வு, பயம், காயம், கோபம், புறக்கணிப்பு, கசப்பு போன்ற உணர்வுகளில் உங்களுடைய வாழ்க்கையின் காலம் உள்ளதா?

...... உங்களை துன்புறுத்திய மற்றவர்களுக்கு நீங்கள் மன்னிப்பை கொடுத்துள்ளீர்களா?

...... பாவத்திற்காகவும், தோல்விகளுக்காகவும் உங்களை நீங்கள் மன்னித்துள்ளீர்களா?

...... உங்களுக்கு ஏதாவது கசப்புணர்வு உள்ளதா?

...... கடந்தகால நிகழ்ச்சி தொடர்பாக குறிப்பிட்டளவு இயலாமைகள் ஏதாவது உங்களில் உள்ளதா?

...... உங்களுக்கு அளவுமீறிய பயம் உள்ளதா?

...... தீங்கான காரியங்கள், கிரியைகள், உறவுகள் குறித்தான தாக்குதல்களின் தீமைகள் உள்ளதா?

...... உங்களிடம் வன்முறை ஊசலாடுகின்றதா?

...... நீங்கள் அதிக நேரம் மன அழுத்தம் மற்றும் ஊக்கமின்மையால் உள்ளீர்களா?

...... நீங்கள் தாழ்வு மனப்பான்மை கொண்டவரா?

...... நீங்கள் பொதுவாக மகிழ்ச்சியாய் உள்ளீர்களா?

...... உங்களுக்கு சமாதானத்தின் ஆவி உள்ளதா?

...... உங்களுக்கு திறமையோடு தொடர்புபடும்போது கடினத்தை உணருகின்றீர்களா?

...... நீங்கள் வாதாடுபவராக, கோபமுள்ளவராக அல்லது இலகுவில் சோதனைக்குட்படுபவராக உள்ளீர்களா?

...... நீங்கள் எதிர்காலத்தை குறித்து பயந்தவராக மற்றும் கவலையடைந்தவராக உள்ளீர்களா?

...... உங்களுடைய இருப்பு சலித்து மற்றும் உண்மையான அர்த்தமின்றி இருக்கின்றதா?

...... நீங்கள் பௌதீக ரீதியாக, பாலியல் ரீதியாக, மன ரீதியாக அல்லது உணர்வு ரீதியாக யாராவதால் துஷ்பிரயோகத்திற்குட்பட்டிருக்கின்றீர்களா? அவர்களுக்கு நேராக உங்களுடைய உணர்வுகளை எவ்வாறு நீங்கள் செலுத்தினீர்கள்?

மேற்கூறப்பட்ட பட்டியலில் அறியப்படும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான உங்களுடைய திட்டங்களை எழுதுங்கள்:

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

# பிற்சேர்க்கை ஆ

# குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான வேதாகம அடிப்படை

குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான வேதாகம அடிப்படைகளை நீங்கள் தொடர்ந்து படிப்பதற்கு இந்த பிற்சேர்க்கைகளை பயன்படுத்துங்கள்:

## பழைய ஏற்பாட்டில் தேவனுடைய பெயர்கள்

| | | |
|---|---|---|
| யேகோவாயீரே | தேவன் எமக்கு கொடுப்பார் | ஆதியாகமம் 22:14<br>புஏ: பிலிப்பியர் 4:19 |
| யேகோவாநிசி | தேவன் எமது பெலன் | யாத்திராகமம் 17:8-15<br>புஏ: யோவான் 15:13 |
| யெகோவா ஷாலோம் | தேவன் எமது சமாதானம் | நியாயாதிபதிகள் 6:24<br>புஏ: எபேசியர் 2:14 |
| யெகோவா ரா | தேவன் எமது மேய்ப்பர் | சங்கீதம் 23:1<br>புஏ: யோவான் 10:11 |
| யெகோவா டிக்கேனு | தேவன் எமது நீதி | எரேமியா 23:6<br>புஏ: 1 கொரிந்தியர் 1:30 |
| யெகோவா ஷம்மா | தேவன் இருக்கின்றார் | எசேக்கியேல் 48:35<br>புஏ: எபிரெயர் 13:5 |
| யெகோரா ரப்பா | தேவன் எமது வைத்தியர் | யாத்திராகமம் 15:26<br>புஏ: யாக்கோபு 5:15 |

## குணமாக்குதலுக்கான தேவனுடைய ஜெபம்

நீங்கள் ஜெபிக்கும்போது இயேசுவால் தரப்பட்டதாக அறியப்பட்ட மாதிரி ஜெபம் “தேவனுடைய ஜெபம்” எனப்படும், இது குணமாக்குதலுக்கான முறையீட்டையும் உள்ளடக்கியது:

**‘பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே’:** “எங்கள் பிதாவே” என நீங்கள் அழைக்கும்போது, அவருக்கு உள்ள அனைத்து பெயர்களின் அடிப்படையிலும் கூப்பிடுகின்றீர்கள், இது “தேவன் வைத்தியர்” என்பதையும் உள்ளடங்கும்.

**‘உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.’:** பரலோகத்தில் வியாதியோ அல்லது பாவமோ இல்லை. பரலோகத்தில் செய்யப்படுவதைப்போல பூலோகத்திலும் நாம் தேவனுடைய சித்தத்தை செய்ய வேண்டும். ஆகவே பாவத்திற்கெதிரானது போல் வியாதியிற்கு எதிராக போராட வேண்டும்.

**‘எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்’:** இயேசு சொன்னார் “அப்பம்” பிள்ளைகளுக்கு உரியது (விசுவாசிகளுக்கு). பௌதீக குணமாக்குதல் பிள்ளைகளுடைய அப்பத்தில் ஒரு பகுதியாய் இருக்கின்றது (மத்தேயு 15:21-28).

**‘எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்:’** இப்பகுதி ஆவிக்குரிய குணமாக்குதலை குறித்து பேசுகின்றது.

**எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்:’** சோதனையை எதிர்ப்பது போல வியாதியையும் எதிர்க்க வேண்டும்.

## அழிவின் வட்டம்

வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும் அழித்தவற்றை மீளளித்து குணமாக்குபவராக இயேசு சொன்னார் (யோவேல் 2:25). முசுக்கட்டைப்பூச்சு வெட்டுக்கிளியின் தொடர் வடிவமாகும். முசுக்கட்டைப்பூச்சியும் வெட்டுக்கிளியின் ஒரு வடிவமாகும்.

இம்மூன்றும் அளவில் சிறியதாகும், எண்ணிக்கையில் பெரியவையாகும், அவை மாபெரும் அழிவைதரும் பூச்சியினங்களில் மிகப்பெரிதான குடும்பத்தின் ஒரு பகுதியாகும். ஒவ்வொன்றும் முட்டை, குடம்பி, கூட்டுப்புழு, பூச்சி ஆகியவற்றின் நிலையிற்கூடாக செல்லுகின்றது. பெரியவைகள் அடுத்த பரம்பரையிற்காக முட்டையிடும். அழிவில் வட்டம் முடிவற்றது.

பாவத்தின் காரணமாக, உலகத்தின் கிரியையில் அழிவின் வட்ட முடிவற்றது. தேவனுக் கூடாகவே ஆவிக்குரிய தாக்குதலான வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும் குணமாக முடியும்.

## சரீரம், ஆவி, ஆத்துமாவில் சம்பந்தப்படுதல்

| **வியாதி** | **வேதாகம மருந்து** | **இயற்கை மருந்து** |
|---|---|---|
| ஆவி | அறிக்கையிடுதலும், மனந்திரும்புதலும்.<br>இயேசுவிற்கூடாக இரட்சிப்பை பெறலாம். | இல்லை |
| சரீரம் | பௌதீக குணமாக்குதலுக்கான விசுவாச ஜெபம்<br>சாத்தானிலிருந்தான விடுதலை | இயற்கையான<br>மருத்துவ குணமாக்கல் |
| உணர்வு | உள்ளான குணமாக்குதலுக்கான ஜெபம்<br>சாத்தானிலிருந்தான விடுதலை<br>தவறான உணர்வுக்கான அறிக்கையிடுதலும்<br>மனந்திரும்புதலும்<br>மற்றவற்றை மன்னித்தல்<br>தேவைப்படும்போது மற்றவர்களை கட்டுதல் | ஆலோசனை |
| மனது | குணமாக்குதலுக்கான ஜெபத்தில் உள்ளடக்கலாம்<br>உள்ளான அல்லது வெளிப்படையாக ஏற்படுதல் | ஆலோனை<br>சாத்தானிலிருந்தான<br>விடுதலை |

* பிரச்சனைகள் உறுப்பு அல்லது செயற்பாட்டு ரீதியாக இருக்கும்போது மட்டுமே மருந்து வல்லமையாக இருக்கும். மருந்துக்கள் வெளிப்படையாக சாத்தானிய அல்லது ஆவிக்குரிய பிரச்சனைகளின் தாக்கமாய் இராது.

சுருக்கம்: எல்லா முறையான குணமாக்குதல்களும் ஜெபம், மருந்து அல்லது இயற்கை யான செயற்பாடுகள் மூலம் தேவனிலிருந்து வருகின்றது. தேவன் அற்புதங்களின் கிரியை செய்யும்போது, நாம் விபரித்து தீர்க்கதரிசனம் சொல்லக்கூடிய தொடர்ச்சியான நிகழ்ச்சிகளால் அவர் சமமாக கிரியை செய்கின்றார். உதாரணத்திற்கு சங்கீதம் 65 ஆனது, தேவனுடைய வல்லமையானது உலகத்தில் "இயற்கையான" வல்லமையிற்கூடாக செயற்படுகின்றது என்பதை விபரிக்கின்றது. எந்த பாத்திரத்திற்கூடாக குணமாக்குதலை பெற்றாலும், குண மாக்குதலுக்கு தேவனுக்கு மகிமையை செலுத்தி இதை உணர்ந்துகொள்ளுதல் முக்கிய-மான காரியமாகும்:

**நான் தங்களைக் குணமாக்குகிறவரென்று அறியாமற்போனார்கள்... (ஓசியா 11:3)**

## குணமாக்கும் மரம்

வெளிப்படுத்தல் 22:2ல், தேசத்திற்கு குணமாக்குதலுக்கான இலையான புதிய எருசலேமின் மரத்தை குறித்து யோவான் விபரிக்கின்றார்:

-அது தூயது.
-அது பளிங்கை போல் தெளிவானது.
-தேவனிடமிருந்தும், ஆட்டுக்குட்டியானவரின் அரியணையிலிருந்தும் ஊற்றப்டுகின்றது.

மரத்தின் இருப்பிடம் தூய நகரம் ஆகும், நதியின் இருபக்கத்திலும், தெருவின் மத்தியில், அது விபரிக்கப்பட்டுள்ளதாவது:

-ஜீவனின் மரம்
-12 கனிகளை கொடுக்கும்
-ஒருபோதும் கனிகொடாது இராது, ஒவ்வொரு மாதமும் கனிகொடுக்கும்
-இலைகளை கொண்டிருத்தலானது ஜாதிகளுக்கான குணமாக்குதலுக்காகும்

மேலதிகமாக வருபவர்கள் இந்த மரத்தை சாப்பிட அனுமதிக்கப்படுவர் (வெளிப்படுத்தல் 2:7; 2:14). சாப்பிடுதலின் விளைவானது:

-சாபம் இல்லை: வெளிப்படுத்தல் 22:3
-ஜாதி தேவனை சேவிக்கும்: வெளிப்படுத்தல் 22:3
-உள்ளான காயங்கள், மரணம், துக்கம், அழுகை, பலி, கவலையான நினைவு இல்லை. (கடந்தவை ஒழிந்து போயின): வெளிப்படுத்தல் 21:4
-எல்லாம் புதியவை ஆயின: வெளிப்படுத்தல் 21:5

பல்வேறுப்பட்ட மற்ற வேதாகமத்தின் மொழிபெயர்ப்புக்கள் இந்த மரம் மருந்தாக குறிப்பி டப்படுகின்றது (Weymouth), குணமாக்குதலுக்கு (Moffat), குணமாக்குதலுக்கு தேவையான மருந்தை கொண்டுள்ளது (Williams).

## வசன படிப்பக்கள்

இந்த பாடத்தின் ஆய்வு மற்றும் ஆயத்தங்களை செய்யும்போது செய்யப்பட்ட வசனத்தின் படிப்புக்கள் கீழ்வருமாறு:

**ஆரோக்கியம்:**

புதிய ஏற்பாட்டில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. கிரேக்க சொல் "ஹுகிஆனியோ". 3 யோவான் 2ன்படி நல்ல ஆரோக்கியத்தின் சத்தம், ஆரோக்கியமான குறிப்பிடப்படுகின்றது. அப்போஸ்தலர் 27:34ல் இரட்சிப்பானது "ஆரோக்கியமாக" மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**குணப்படுத்தல், குணமாகுதல்:**

பழைய ஏற்பாட்டில், முதலாவது குணப்படுத்தலானது ஆதியாகமம் 20:17ல் அபிமலேக்கை தேவன் குணமாக்குதலோடு ஆரம்பமாகின்றது. பழைய ஏற்பாட்டில் ஏறத்தாள 65 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. குணப்படுத்தலானது சாதாரண நிலைக்கு மீள் கொணர்தல் என விபரிக்கப்பட்டுள்ளது.

குணமாக்குதலுக்கு தேவனிடம் முறையிடுதல் பொதுவானதாகும்:

-என்னைக் குணமாக்கும் கர்த்தாவே, என் எலும்புகள் நடுங்குகிறது: சங்கீதம் 6:2

-கர்த்தாவே, என்னைக் குணமாக்கும், அப்பொழுது குணமாவேன்; எரேமியா 17:14

-மனிதனுடைய வியாதிகள் மட்டும் குணமாக்கப்படவில்லை, அசுத்தமான நீர்களும் கூட குணமாக்கப்பட்டன: 2 இராஜாக்கள் 2:22; எசேக்கியேல் 47:8; எரேமியா 19:11

-ஜாதிகளுடைய மனந்திரும்புதலாலான தேவனுடைய மன்னிப்பு ஜாதிகளுக்கான குணமாக்குதலில் உள்ளடக்குகின்றது: ஓசியா 6:1; எரேமியா 30:17

-வெளி நகரங்கள் கூட மனந்திரும்பும்போது இந்த குணமாக்குதலை அறிய முடியும்: எரேமியா 51:8-9

-மக்களின் ஆழ்ந்த ஆவிக்குரிய துன்புறுத்தல்களை விட அடையாளங்களில் மட்டுமே அவர்கள் சம்பந்தப்பட்டதால் பிழையான தீர்க்கதரிசிகள் எச்சரிக்கப்பட்டார்கள்: எரேமியா 6:14; 8:11

**புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தைக்கான வினைச்சொற்கள் உள்ளடங்குபவை:**

-திராபுஎநோ: சேவிக்க அல்லது கலந்து கொள்ள. வியாதி, சிகிச்சை, குணப்படுத்தல், ஆற்றல் ஆகியவற்றிற்கான கவனிப்பு. பெரும்பாலும் மத்தேயு மற்றும் லூக்கா, யோவான் 5:10ல் ஒருதடவை, அப்போஸ்தல புஸ்தகங்கள், வெளிப்படுத்தல் 13:3 மற்றும் 12ல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

-லாஓமய்: குணமாக்க, ஆவிக்குரிய மற்றும் பௌதீக ரீதியாக இரண்டிலும் பூரணப்பட

-பௌதீக குணப்படுத்தலுக்கான உதாரணம்: மத்தேயு 15:28. இந்த அர்த்தத்தில் 22 தடவைகள் உபயோகிக்கப்பட்டுள்ளன.

-ஆவிக்குரிய குணமாக்குதலுக்கான உதாரணம்: மத்தேயு 13:15; யோவான் 12:40; அப்போஸ்தலர் 28:27; எபிரெயர் 12:13; 1 பேதுரு 2:24.

-சோசோ: வியாதியிலிருந்தும், அதனுடைய தாக்கத்திலிருந்தும் காத்தல். இதற்கான உதாரணமாக மாற்கு 5:23 மற்றும் லூக்கா 8:36ஐ பார்க்க.

-டியாசோசோ: இரட்சிக்கப்படுவதற்கு: லூக்கா 7:3ஐ பார்க்க.

**இந்த வார்த்தையின் பெயர்ச்சொல் உள்ளடங்குவது:**

-திராபியா: பாதுகாப்பு மற்றும் கவனத்தை குறிக்கின்றது (லூக்கா 12:42).
ஜீவ மரத்தின் இலைகளில் தாக்குதல்கள்: வெளிப்படுத்தல் 22:2

-லாமா: குணமாக்குதலின் ஓர் அர்த்தம். 1 கொரிந்தியர் 12:9,28,30ல் பன்மையாக உபயோகிக்கப்பட்டுள்ளது.

-லாசிஸ்: வினைச்சொல் #2ற்கு ஒத்தது. நிறைவை அடையும் செயற்பாட்டை வலியுறுத்துகின்றது. (லூக்கா 13:32; அப்போஸ்தலர் 4:22,30).

**நிவாரணி:**

பழைய ஏற்பாட்டில் இவ்வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் "இயாசியா" அர்த்தப்படுத்துவது குணமாக்குதல், ஓர் நிவாரணி: லூக்கா 13:32; அப்போஸ்தலர் 4:22; 4:30. வினைச்சொல்லான "திராபியோ" அர்த்தப்படுத்துவதானது சேவித்தல் அப்போஸ்தலர் 17:25; குணமாக்குதல், ஆரோக்கியத்தை மீள் அமைத்தல் மற்றும் நிவாரணி மத்தேயு 17:16,18; லூக்கா 7:21; 9:1; யோவான் 5:10; அப்போஸ்தலர் 28:9.

**நோய்:**

எபிரெயத்தில் பழைய ஏற்பாட்டில் இந்த சொல் 60 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது முதலில் ஆதியாகமம் 48:1ல் காணப்படுகின்றது. இங்கு பல்வேறுபட்ட அர்த்தங்கள் காணப்படுகின்றன, பலவீனம், சாதாரணம் இன்மை, மேலதிகமாக செய்தல், பலவீனமாகுதல் போன்றவற்றையும் உள்ளடங்கும். "நோய்" என்னும் பெயர்ச்சொல் பழைய ஏற்பாட்டில் 23 தடவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது அத்தோடு ஏசாயா 53:3-4ல் துன்புறுத்தலாக விபரிக்கப்பட்டுள்ளது. சிலர் இதை வருத்தம் மற்றும் பலவீனமாக மொழிபெயர்க்கின்றனர். உபாகமம் 7:15ல் நோயிற்கான அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

**புதிய ஏற்பாட்டில், நோய் வினைச்சொற்களாக பயன்படுத்தப்பட்டுள்ளது, இவை உள்ளடங்குபவை:**

-அஸ்தினியோ: பலவீனம், தளர்ந்த, இயலாத்தன்மை, நோயுற்ற நிலை

-கம்னோ: நிலையான வேலைகளின் விளைவுகளானது களைப்புத்தன்மையாயித்தல்

வேண்டும்: எபிரெயர் 12:3; யாக்கோபு 5:15. மனதின் களைப்பு பௌதீக குணமாக்குதலை தடுக்கும்.

-சுனிசோ: பீடித்தல் அல்லது வியாதியால் தாக்கம்பெறல், எடுக்கப்படுதல்.

**இது ஓர் பெயரிடைச்சொல்லாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது:**

-அஸ்தீனஸ்: பலம் இல்லாமல், தள்ளாடுதல், பலவீனம்

-அர்ஹொஸ்தோஸ்: தள்ளாடுதல், சுகவீனம், பலவீனம்

**பெயர்ச்சொல் உள்ளடக்குபவை:**

-அஸ்தீனியா: பலவீனம், வியாதி

-நோசோஸ்: வியாதி

**பலவீனம்:**

இந்த வசனம் பழைய ஏற்பாட்டில் உபயோகப்படவில்லை, ஆனால் புதிய ஏற்பாட்டில் இது உள்ளடங்குகின்றது:

-அஸ்தீனியா: பலத்தை வேண்டுதல், பலவீனம், விளைவுகளை உருவாக்க முடியாத இயலாமை: ரோமர் 8:26; 2 கொரிந்தியர் 11:30; 12:5,9,10. லூக்கா 13:11ல் இது "பலவீனத்தின் ஆவி" இது சாத்தானின் நேரடியான பலவீனத்தின் தன்மைகளை குறிப்பிடுகின்றது.

-அஸ்தீனிமா: விசுவாசத்தின் பலவீனம்: ரோமர் 15:1.

**வியாதி:**

பழைய ஏற்பாட்டில் கால்களின் வியாதி 1 இராஜாக்கள் 15:23 மற்றும் 2 நாளாகமம் 16:12ல் குறிப்பிடப்பட்டுள்ளது. குடல்களின் நோய்களை குறித்து 2 நாளாகமம் 21:15ல் குறிப்பி டப்பட்டுள்ளது. வியாதிகளின் குணாதிசயங்களானது:

| | |
|---|---|
| -அருவருப்பு: | சங்கீதம் 38:7 |
| -தீமை: | சங்கீதம் 41:8 |
| -பாரிய: | 2 நாளாகமம் 16:12 |
| -குணப்படுத்த முடியாதொன்று | 2 நாளாகமம் 21:18 |

புதிய ஏற்பாட்டில், கீழ்வரும் பெயர்சொற்களானது வியாதிக்காக உபயோகிக்கப்பட்டுள்ளது:

-அஸ்தீனியா: பலவீனம் இன்மை, பலவீனம், நோய், அல்லது தளர்ச்சி
-மலால்கியா: மென்மை, தளர்ச்சி, நோய்.

-நோசோஸ்: காயப்படுத்த, வியாதி, தளர்ச்சி.
-நோசிமா: பிரமையாக்க.

புதிய ஏற்பாட்டில், கீழ்வரும் வினைசொற்களானது உபயோகிக்கப்பட்டுள்ளது:

-அஸ்தீனியோ: பலம் இன்மை, பலவீனம், வியாதி.
-எகோ காகோஸ்: வியாதியாக, நோய்.

பல்வேறுப்பட்ட வியாதியின் வகைகள் காணப்படுகின்றன. மத்தேயு 4:24; 14:35; மாற்கு 1:32-34;
லூக்கா 4:40. மற்றவை அடையாளம் காண முடியும்: மத்தேயு 9:20. இயேசு எல்லா நோய்களையும் குணமாக்கினார்: மத்தேயு 4:23; 9:35; 14:35; மாற்கு 1:32; 10:1; லூக்கா 6:17; 9:1; யோவான் 5:4; 6:2

## உபத்திரவம்:

கிரேக்கத்தில் பயன்படுத்தப்பட்டதைபோல், இது பௌதீக இயலாமையை குறிக்காது. இது துன்புறுத்தல், கொடுமைப்படுத்தல், கஷ்டம், உபத்திரவம் போன்றவற்றை குறிக்கும்.

## யாக்கோபு 5:13-18

மக்கள் துன்புறுத்தலை இரண்டு வழிகளில் பிரதியுத்தரவு பண்ணுகின்றார்கள்:

**1. சிலர் துன்பத்தை உபத்திரவமாக காண்கின்றனர்:** நீங்கள் உபத்திரவப்பட்டால் (சோதனை, உபத்திரவம்) உங்களில் நீங்கள் ஜெபிக்க வேண்டும். நீங்கள் மற்றவர்களை உங்களோடு ஜெபிக்க அழைக்கலாம், ஆனால் அவர்கள் உங்கள் உபத்திரவத்தை நீக்க ஜெபிக்கும் படியாக அழைக்கப்படவில்லை. நீங்கள் உபத்திரவப்படும்போது நீங்கள் ஜெபிக்கவேண்டும் என வசனம் கூறுகின்றது ஏனென்றால் சோதனை, உபத்திரவத்திற்கூடாக நீங்கள் உங்களில் ஜெபிக்க பழகி அவற்றை மேற்கொள்ள வேண்டும்.

**2. சிலர் துன்பத்தை மகிழ்ச்சியாக காண்கின்றனர்:** அவர்களுடைய மகிழ்ச்சி துன்பத்தினால் அல்ல, துன்பத்தின் மத்தியிலும் கூட இன்னும் அவர்களால் தேவனை துதிக்க முடிகின்றது. அவர் அச்சூழ்நிலைகளுக்கூடாகவும் கிரியை செய்கின்றார் என அறிந்திருக்கின்றனர்.

வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்க மூப்பர்கள் அழைக்கப்படல் வேண்டும். இது ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். இதனால் மனிதனை விட தேவனுக்கே குணமாக்குதலின் மகிமை செல்லுகின்றது. ஜெபம் கிடைக்கும்படியாகவும், விசுவாசத்தின் கிரியையிற்காகவும் வியாதியஸ்தர் மூப்பரை அழைக்க வேண்டும். இது விசுவாசத்தின் ஜெபமாகவும், ஊக்கமுள்ளதாகவும், நீதியான மனிதனாலும் கொடுக்கப்படல் வேண்டும். ஊக்கத்துடன் விசுவாசத்தின் ஜெபத்தை எவ்வாறு ஜெபிப்பது என்பதை அறிந்த விசுவாசமுள்ள மனிதனிற்கான உதாரணமாக எலியா பயன்படுகின்றார். பின்புலத்திற்கு 1 இராஜாக்கள் 17:1; 18:1 மற்றும் லூக்கா 4:25ஐ பார்க்க. வியாதியஸ்தர் காக்கப்பட்டு (அவர்களுடைய பௌதீக வியாதியிலிருந்து), எழுப்பப்பட்டு (பலத்தை பெறுதல்), பாவத்திலிருந்து மன்னிக்கப்படல் (ஆவிக்குரிய குணமாக்குதல்) வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் பாவம் மற்றும் வியாதியிற்கு இடையிலான நேரடி தொடர்பு இருப்பதாக இந்த பந்தியில் காட்டப்படுகின்றது (சங்கீதம் 41:4 பார்க்க). குணமாக்குதலின் பரிமாணங்களாக ஆவிக்குரிய மற்றும் பௌதீகம் காணப்படுகின்றது. தேவனுடைய பங்காளர்களாக எவ்வாறு கிரியை செய்வது என்பதற்கும் பரிமாணங்கள் காணப்படுகின்றன. நாம் ஊழியம் செய்யும்போது, அவர் எழுப்புகின்றார்.

## இயேசுவினுடைய தனிப்பட்டவர்களுடைய குணமாக்குதல்

### சாத்தானுடைய செல்வாக்கு குறிக்கப்பட்டுள்ளவைகள்

| | மத்தேயு | மாற்கு | லூக்கா |
|---|---|---|---|
| கூனி பெண் | | | 13:10-17 |
| அசுத்த ஆவியை கொண்ட மனிதன் | | 1:23-25 | 4:31-37 |
| கதரேனிய சாத்தான் | 8:28-32 | 5:1-13 | 8:26-33 |
| இரத்தம் சம்பந்தான நோயுள்ள பெண் | 9:20-23 | 5:25-34 | 8:43-48 |
| சீரோபேனிக்கியா குமாரத்தி | 15:21-28 | 7:24-30 | |
| தீய ஆவியை கொண்ட பிள்ளை | 17:14-21 | 9:14-29 | 9:37-43 |
| செவிட்டான ஆவி | 9:32-33 | | |
| குருடும் செவிட்டான ஆவி | 12:22-30 | 3:22-27 | 11:14-26 |

## படிப்பிற்கான குறிப்பு:

சாத்தானுடைய செல்வாக்கை விசேடமாக அடையாளம் காணப்பட்ட தனிப்பட்டவர்கள் தொடர் பான குணமாக்குதலின் படிப்பிற்கான குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

**கூனி பெண்: லூக்கா 13:10-17**

இந்த பெண் கட்டப்பட்டிருந்தாள் அல்லது கூனியாயிருந்தாள்:

பௌதீக ரீதியாக: அவளுடைய பின்புறம் வளைந்திருந்தது (சாத்தான் இதை எமக்கு செய்துள்ளான், ஆகவே எமது பார்வை மேல்நோக்கியதற்கல்லாமல் கீழ்நோக்கியதாக உள்ளது.)

ஆவிக்குரிய ரீதியாக: எமது பார்வை மேல்நோக்கியதற்கல்லாமல் கீழ்நோக்கியதாக உள்ளது.

மனரீதியாக: நம்பிக்கை இல்லை என அவள் கூறப்பட்டாள்.

நிதி ரீதியாக: அவள் அனைத்தையும் செலவழித்து விட்டாள்.

இந்த பெண் ஞாயிறு கூட்டத்தை ஆசாரித்தாள், இயேசு அவளை “ஆபிரகாமின் குமாரத்தி” என அழைத்தார் (கலாத்தியர் 3:7). அவள் நீதியுள்ளவள் எனவும், தேவனுக்கு பயப்படுகின்றவள் எனவும் நாம் அறியலாம். ஆனாலும் பலவீனத்தின் ஆவி அவளை 18 வருடம் கட்டியிருந்தது.

இது குணமாக்குதலின் ஊழியத்தில் பகுத்தறியும் முக்கியத்துவத்தை காட்டுகின்றது. இது

சாத்தானால் ஏற்படுத்தப்பட்ட நோயாகும். இயேசு அவருடைய ஊழியத்தில், சாதாரன பௌதீக வியாதியிற்கிடையில் கைகளை வைத்தலின் மூலமான அல்லது எண்ணெய்யால் அபிஷேகம் பண்ணுதல் மற்றும் சாத்தானின் தாக்குதல்களினால நிலைமை போன்றவற்றில் வேறுப்படுத்தி காட்டினார்.

சாத்தானின் வெளியிலான விளைவின் காரணத்தினால் விசுவாசியானவர் கட்டப்படும் சந்தர்ப் பங்களில், கட்டப்படும் ஆவியானது இலகுவாக்கப்படும். ஒரு விசுவாசியானவர் சாத்தானின் செயற்பாட்டினால் பௌதீக பலவீனரானால், பிசாசின் ஆவி துரத்தப்படும். இயேசு கேட்டார் "இந்தக்கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டியதில்லையா?" (இயேசு எம்மின் இன்னும் கேட் கின்றார், "இந்த வியாதியிலிருந்து குணமாகவேண்டியதில்லையா?")

இந்த பெண்மணிக்கான விடுதலையானது சாதாரண சபை கூட்ட நேரத்தில் நடைபெற்றது. ஜெப ஆலயத் தலைவர் உட்பட, ஆவிக்குரிய தலைவர்களிலிருந்து இதற்கு எதிர்ப்பு எழுப்பப் பட்டது. சாத்தானுடைய வல்லமைகளோடு தொடர்புபடுதலுக்கு இன்னும் பல ஆவிக்குரிய தலைவர்களால் ஆட்சேபனைகள் எழுப்பப்படுகின்றது. சிலர் அதன் இருப்பை மறுக்கின்றனர். சிலர் அதன் வல்லமையான ஒடுக்கப்படுதல் அல்லது உடமையாக்கப்படுதல் மறுக்கின்றனர்.

இயேசு கட்டப்பட்ட பெண் மேல் கரங்களை வைத்தார். உடனடியாக, அவர் நிமிரப்பட்டு, தேவனுக்கு மகிமை செலுத்தினாள். சாத்தானால் உடமையாக்கப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட அனைத்து உண்மையான ஊழியத்திலும், விடுதலை செயற்பாட்டில் தேவன் பயன்படுத்திய நபருக்கு அல்ல, தேவனே மகிமையை பெற வேண்டியவராவார்.

**ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவியை கொண்ட மனிதன்: மாற்கு 1:23-28, லூக்கா 4:31-37**

கப்பர்நகும் ஜெப ஆலயத்தில் இந்த மனிதன் இருந்தாலும் கூட, இயேசு அவரை ஆபிரகா மின் மகன் அல்லது தேவனை பின்பற்றுபவர் என குறிப்பிடவில்லை. அவிசுவாசிகளும், சாத்தானின் பிடிக்கப்பட்டவர்களும் சபை ஐக்கியத்தில் பிரசன்னமாயிருக்க கூடும். மறுபடியும் பிறந்த அனுபவம் உடைய ஒருவரை அல்லது சாத்தானுடைய வல்லமையிலிருந்து விடுதலை பெற்ற ஒருவரை சபை அட்டவணை உத்தரவாதப்படுத்த போவதில்லை.

இயேசு அதிகாரத்துடன் போதிக்கும்போது ஆவிகள் "ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்" என்று சத்தமிட்டன. சாத்தான் உண்மையிலேயே ஒரு வசனத்தை குறிப்பிடுகின்றான், இது சங்கீதம் 16:10ல் காணப்படுகின்றது. இந்த சாத்தானின் உடமையானது பன்மையாகும். "எங்களை" என்பது குறிப்பிடுகின்றதாவது, ஒன்றுக்கு மேற்பட்ட சாத்தான்களின் பிரசன்னத்தை வெளிப்படுத்துகின்றது. சாத்தான்கள் குழுவாக கிரியை செய்கின்றது. எவ்வாறாயினும் ஒரு பிசாசே பேசுகின்றான், அவன் கூறுகின்றான் "அறிவேன்".

சாத்தான் பேச தொடங்கும்போது, "நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப் போ" என இயேசு அதனை அதட்டி கூறினார். அந்த சாத்தான்கள் அவனை அலைக்கழித்து, உரத்த சத்தமிட்டு, அவனை கீழே தள்ளி, வெளியேறின.

அசுத்த ஆவிகளோடு இயேசு சம்பந்தப்பட்ட அதிகாரமும் வல்லமையும் ஆச்சரியமான சாட்சியின் சம்பவமாகும். "இது என்ன?" என அவர்கள் ஆச்சரியப்பட்டு கேள்வி கேட்டனர், இதன் விளைவாக அறிக்கைகளும், வதந்திகளும் பரவின.

**கதரேனிய சாத்தான்: மத்தேயு 8:28-32, மாற்கு 5:1-13, லூக்கா 8:26-33**

மத்தேயுவின்படி, இரண்டு மனிதர்கள் சாத்தான்களால் பிடிக்கப்பட்டிருந்தனர், ஆகவே கடுமையாக எந்த மனிதராலும் கல்லறையில் வசித்த அவர்களை கட்டுப்படுத்த முடிய வில்லை. மாற்குவும், லூக்காவும் மோசமான நிலையை அழுத்தி, இருவரின் ஒருவரின் விடுதலையை பற்றி கூறுகின்றனர். இது இயேசுவின் ஊழியத்தின் போது சந்திக்கப்பட்ட எல்லாவற்றிலும் மோசமான நிலை ஆகும்.

பல பிசாசுகளினால் இங்கு இவர்கள் உடமையாக்கப்பட்டிருந்தனர். இருவரும் அதிகமாக தாக்கப்பட்டிருந்ததால், சாதாரண சமூகத்தால் அவர்களால் வழ முடியவில்லை. அவர்கள் கல்லறைகளில் வாழ்ந்தனர். ஒரு மனிதனில் இருந்த சாத்தான் தங்களை “லேகியோன்” என அழைத்தனர், இதன் அர்த்தமானது அவர்கள் அதிகம் ஆகும். சங்கிலியால் கட்டியிருந்த போதும், இந்த மனிதனை கட்டுப்படுத்த முடியாதபடி அவைகள் செய்தன.

பிசாசுகள் அவர்களை மோசமான அலைக்கழித்தால், அவர்கள் மிகவும் சத்தமிட்டு அழுதனர், கற்கலால் தம்மைத்தாமே வெட்டினர், ஆடைகளை அணியாதிருந்தனர். பிசாசின் மேல் அதி-காரம் செலுத்துவதற்கு அதன் பெயரை அறிந்திருத்தல் வேண்டியது அவசியம் இல்லை. இயேசுவின் நாமமே உங்களுடைய அதிகாரமாகும்.

இந்த சந்தர்ப்பங்களில் காணப்படும் கட்டுக்களின் வகைகளை குறித்துக்கொள்ளுங்கள்:

| | |
|---|---|
| பௌதீகம்: | சங்கிலிகளை உடைத்து, தம்மைத்தாம் வெட்டினர் |
| உணர்ச்சிகளும் மனமும்: | அழுதல் |
| சமூகம்: | சமூகத்திலிருந்து விலக்கப்பட்டு இருத்தல் |
| ஒழுக்கம்: | ஆடையற்றிருத்தல் |
| ஆவிக்குரிய ரீதி: | பிசாசின் கூட்டம் |

இந்த பிசாசுகள் இயேசு அறிந்து, அவைகள் காலத்தின் முன்னே தங்களை வேதனைப்படுத்த வந்தீரா என கேட்டன. “காலத்தின் முன்னே” என்பது அவைகளுடைய இறுதி நியாயத்தீர்ப் பான அக்கினிக்கடலை குறிக்கும்.

அவைகள் தங்களை நாட்டை விட்டு துரத்தாதப்படிக்கு வேண்டின, இது பிசாசுகளானது சாத்தானால் குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்றன என காட்டுகின்றது. இயேசு அவைகளை துரத்தியதும், அவைகளை பன்றியின் கூட்டத்திற்குள் போகும்படி அனும-தித்தார். இது பன்றிகளின் சாவிற்கு காரணமாயிருந்தது. இயேசுவை நகரத்தின் மக்கள் விலகி போகும்படி கூறினர். சாத்தானிய வல்லமையால் மனிதன் விடுதலையானான் என்பதை விட அவர்களுக்கு பன்றிகள் வாழ்வாதாரமாய் இருந்ததே அதிகம் முக்கியமானதாக இருந்தது.

**இரத்தம் சம்பந்தான நோயுள்ள பெண்: மத்தேயு 9:20-23, மாற்கு 5:25-34, லூக்கா 8:43-48**

இந்த பெண் இந்த நிலையை 12 வருடங்களாக கொண்டிருந்தாள். மருத்துவர்களின் அநேக காரியங்களால் அவள் துன்பப்பட்டு, அவளுக்கிருந்த அனைத்தையும் செலவிழித்தாள், ஆனால் நன்மைக்கு பதிலாக தீமையே வளர்ந்தது. அவள் குணமாகுவதற்கு விடாபிடியா யிருந்தால், ஏனென்றால் கூட்டத்தின் மத்தியிலும் கூட இயேசு தொட்டாள்.

அவள் தன்னில்தான் விசுவாதித்து, குணமாக்குவதற்கு மட்டுமல்ல, பூரணமடைய விரும்பினாள், அவள் சொன்னால், “நான் பூரணப்படுவேன்.” இதுவே அவளுடைய விசுவாசம், அவளுடைய தொடுதல் அல்ல, அது அவளை குணமாக்கியது. இயேசு “மகளே, திடன் கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்.”

அந்த பெண் இயேசுவை தொட்டவுடன், அவரிடமிருந்து வல்லமை புறப்பட்டதோடு இருவரும் அதை உணர்ந்தனர். அந்த நிமிடத்தில் அவள் குணமாக்கப்பட்டதோடு, அந்த வியாதியிலிருந்து குணமாக்கப்பட்டதாக அவளுடைய சரீரத்தில் உடனடியாக உணர்ந்தாள். அவளுடைய வேதனையிலிருந்து அவள் விடுதலை பெறும்போது உணர்வுரீதியாகவும் அவள் குணமடைந்தாள். இயேசு பகுத்தறிவை பொதுவாக உபயோகித்தாலும், இந்த சந்தர்ப்பத்தில் இயற்கையின் காரணிகளை உபயோகித்தார். அவர் “என்னைத் தொட்டது யார்” என்று கேட்டார்.

**சீரோபேனிக்கியா குமாரத்தி: மத்தேயு 15:21-28, மாற்கு 7:24-30**

இந்த வாலிபப்பெண் அசுத்த ஆவியை கொண்டிருந்தாள், இதை அவளுடைய தாய் வெளியக வெளிப்படுத்தலினூடாக அறிந்திருந்தாள். அவள் தன்னுடைய மகளை குறித்து விபரித்தாள் “என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள்.” அவளுடைய தாய் காட்டிய விசுவாசத்தின் காரணமாக இயேசு அந்த பெண்ணை குணமாக்கினார். இந்த குமாரத்தி ஒரு போதும் இயேசுவின் பிரசன்னத்தில் இருக்கவில்லை, இது சாத்தானால் ஒடுக்கப்பட்டு அல்லது உடமையாக்கப்பட்ட ஒருவரும் பொதுவாக விடுதலைக்கு பௌதீக ரீதியாக பிரசன்னம் அவசியம் இல்லை என உணர்த்துகின்றது.

இதுவும் கீழ்வரும் சம்பவங்களும் பிள்ளைகளும் சாத்தானால் தாக்கப்படுவார்கள் என்பதை குறிப்பிடுகின்றது. இந்த சம்பவங்கள் தொடர்ந்து நிலைத்திருத்தலின் முக்கியத்துவத்தையும், குணமாகுதல் “பிள்ளைகளுக்கான அப்பம்” என்னும் காரணியையும் எடுத்துக்காட்டுகின்றது. (இது தேவனுடைய பிள்ளைகளுக்கு சொந்தமானதாகும்.

**தீய ஆவியை கொண்ட பிள்ளை: மத்தேயு 17:14-21, மாற்கு 9:14-29, லூக்கா 9:37-43**

சீஷர்கள் தீய ஆவியை துரத்த முயன்றனர், ஆனால் இது தோல்வியடைந்தது. இது அவர்களுடைய அவிசுவாசத்தின் காரணம் எனவும், குறிப்பிட்ட வகையான சாத்தான் ஜெபத்தினாலும், உபவாசத்தினாலும் மட்டுமே வெளிவரும் என்னும் காரணியையும் இயேசு சொன்னார். இந்த சம்பவத்தில் சீஷர்கள் சமய தலைவர்களோடு சூழப்பட்டு விவாதம் செய்தபடியால், அவிசுவாசம் என்னும் சூழ்நிலை செல்வாக்கு செலுத்தியது.

இந்த கதையானது வித்தியாசமான சாத்தானிய வல்லமைகள் இருப்பதை காட்டுகின்றது, சில மற்றவை விட அதிகம் வல்லமையை கொண்டது. அனைத்து வேதாகம மொழிபெயர்ப்பிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ள தொடர்புள்ள விபரித்தல்கள்:

-அவன் ஒரு பைத்தியனாய் இருந்தான் (மனதளவில் பைத்தியம்)
-அவன் காயங்களால் நிரம்பியிருதான்.
-அவன் தீயிற்குள்ளும் நீருக்குள்ளும் விழுந்தான் (அழிக்கும் ஆவி)
-அந்த ஆவி அவனை புண்படுத்தியது அல்லது காணப்படுத்தியது
-அவனுக்கு ஊமையான ஆவி இருந்தது
-அவனுடைய ஆவி அவனை கிழித்தெடுத்தது

-அவன் அவனுடைய பல்லை கடித்தான்
-பௌதீக ரீதியை விடவும் அங்கு பொதுவான முள் காணப்பட்டது
-அவன் சிறுவயதுமுதல் இந்த நிலையில் இருந்தான்

பிசாசின் பிடியினால் வலிப்பு நோயை கொண்டோரையும் அல்லது அனைத்து செவிடர்கள் மற்றும் ஊமையர்களுக்கும் பாடம் நடத்துவதில் ஒருவர் கவனமாயிருத்தல் வேண்டும். சாத்தானால் பிடிக்கப்படாத பல செவிடர்களும், ஊமையர்களும் இருக்கின்றார்கள். அவர்களுடைய நிலையினால் வியாதிகளும், காயங்களும் உண்டாக்கப்பட்டு அவர்கள் துன்பப் படுகின்றனர்.

இயேசு அந்த சிறுவனிடம் வரும்போது, அந்த பிசாசு அவனை அலைக்கழித்தது என லூக்கா பதிவு செய்கின்றார். இயேசு ஆவியை கடிந்துகொண்டு சிறுவனை குணமாக்கினார். இயேசு பிசாசை கடிந்து விட்டு சென்றார், அந்த மணிநேரத்திலேயே அவன் குணமானான் என மத்தேயு பதிவு செய்கின்றார்.

மத்தேயுவையும், லூக்காவையும் விட இந்த சாத்தானின் தாக்கம் அதிகம் பரந்தளவில் இருந்தாக மாற்கு பதிவு செய்கின்றார். இந்த பையன் எவ்வளவு காலம் பீடிக்கப்பட்டிருந்தான் என அவனுடைய தந்தையிடம் இயேசு நேர்காணலை நடத்தி கேள்விகளை கேட்டார். அவனுடைய தந்தை சிறுவயது தொடக்கம் இந்த நிலை இருந்தது என கூறினார்.

இயேசு தந்தைக்கு விசுவாசத்தின் முக்கியத்துவத்தை அழுத்தி கூறினார், பிற்பாடு ஊமையும் செவிடுமான ஆவியோடு பேசி, அதை வெளியேறுமாறும், மீண்டும் ஒருபோதும் உட்புறாதவாறு கட்டளையிட்டார். அவன் இறந்துபோனான் என்று அநேகர் நினைக்கத்தக்கதான நிலையில் பிசாசு கதறி அவனை விட்டு வெளியேறியது, ஆனால் இயேசு தமது கைகளால் அவனை தூக்கி, எழுப்பினார்.

இந்த பிசாசை ஏன் துரத்த முடியவில்லை என சீஷர்கள் கேட்டதற்கு, இயேசு பதிலளித்தார்:

> **உங்கள் அவிசுவாசத்தினாலேதான், கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம், உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**
>
> **இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது என்றார். (மத்தேயு 17:20-21)**

சாத்தானுடைய வல்லமைகளோடு தொடர்புபடும்போது விசுவாசம், ஜெபம், உபவாசம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவருடைய பதில் வெளிப்படுத்துகின்றது. இது மற்ற பிசாசுகளை விட சில பிசாசுகளை வெளியேற்றுவது அதிகம் கடினம் என உறுதிப்படுத்துகின்றது, ஏனென்றால் இயேசு சொன்னார் ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி “இந்த ஜாதிப்பிசாசு புறப்பட்டுப்போகாது”. ஓர் சுவாரஸ்யமான குறிப்பு: மனிதர்கள் இயேசுவை புறக்கனித்தனர் (யோவான் 1:11) ஆனால் சாத்தான் அவரை ஏற்றுக்கொண்டன (லூக்கா 10:15)

**செவிட்டான ஆவி: மத்தேயு 9:32-33**

சாத்தானின் பிடியின் காரணமாக இந்த செவிடு மனிதனை இயேசுவிடம் கொண்டு வந்தனர். இந்த பிசாசு துரத்தப்பட்டது, பிற்பாடு இந்த மனிதனால் பேச முடிந்தது. கூட்டத்தின் மக்கள் ஆச்சரியப்பட்டு சொன்னார்கள், “இஸ்ரவேலில் இப்படி ஒருக்காலும் காணப்படவில்லை.” பரிசேயரோ இயேசு பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான் என குற்றம் சாட்டினர்.

**குருடும் செவிட்டான ஆவி: மத்தேயு 12:22-30, மாற்கு 3:22-27, லூக்கா 11:14-26**

பீடித்தனாலது குருடும் செவிடும் போன்ற பௌதீக தாக்குதல்களையும் குறிப்பிடும். இயேசு அவனிலிருந்து பிசாசை துரத்தி அவனை விடுவித்தார். விடுதலைக்குப்பின் அவன் பேசி, பார்க்க முடிந்தது. இயேசு கொடுத்த பிசாசுகளை துரத்துவது தொடர்பான அவருடைய மிகவும் பெரிதான போதனையானது விடுதலைக்கான தொடர்பாக இருந்தது. இந்த உபதேசத்தின் வெளிப்படுத்தும் சுருக்கமானது:

-பிரிக்கப்பட்ட வீடு ஒருபோது நிலையாக நிற்க முடியாது. பிசாசுகள் தாங்கள் வசிக்கும் அவர்களுடைய சரீரத்தின் புகலிடத்தை “வீடு” என அழைக்கின்றன. ஒரே வீட்டில் தேவனுடைய ஆவியும் சாத்தானும் இருத்தல் முடியாத காரியமாகும்.

-சாத்தானால் சாத்தானை துரத்த முடியாது.

-தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஊழியத்தின் ஒரு பகுதிய சாத்தான்களை துரத்துவ-தாகும்.

-பிசாசுகள் தேவனுடைய ஆவியினால் துரத்தப்படுகின்றன.

-பலமுள்ள மனிதனை (சாத்தானை) வெளியே துரத்துவதற்கு முயற்சிப்பதற்கு முன் அவனை முதலில் கட்ட வேண்டும். (அவனுடைய தீய கிரியைகள்).

-ஆவிக்குரிய யுத்தத்தில் நடுநிலை இல்லை. நீங்கள் இயேசுவோடு கூட இல்லாவிட்டால், அவருக்கு எதிராக இருக்கின்றீர்கள்.

-ஒரு நபரிலிருந்து அசுத்த ஆவி வெளியேறியப்பின், அது மனித சரீரத்திற்குள் புக விரும்புகின்றன.

-ஒரு நபரிடமிருந்து பிசாசுகள் வெளியேறியபின் அவனுடைய வீடு ஆவியினால் நிரப்பப் படாவிட்டால், அந்த பிசாசு மற்ற பிசாசுகளோடு திரும்பும். ஆரம்பத்தில் இருந்ததைவிட அந்நபரின் இறுதி நிலை மோசமானதாக இருக்கும்.

**மற்ற சம்பவங்கள்:**

இந்த விசேட வசனங்களுக்கு மேலதிகமாக, சாத்தானுடைய வல்லமைகளால் தாக்குதல் அடைந்தோருக்கு இயேசுவின் ஊழியம் தொடர்பான பொதுவான சம்பவங்களை வேதாகமம் கொடுக்கின்றது.

-கீழ்வரும் வசனங்களில் உள்ள பதமான "சொஸ்தமானார்கள்" என்பது இயேசு சாத்தானோடு எவ்வாறு சம்பந்தப்பட்டார் என்பதை விபரிக்க பயன்படுகின்றது: மத்தேயு 4:24; லூக்கா 6:18

-கீழ்வரும் வசனங்களில் உள்ள பதமான "துரத்திவிட்டார்" என்பது இயேசுவினுடைய உபாயத்தை விபரிக்க பயன்படுகின்றது: மாற்கு 1:32-34,39; 6:13

-லூக்கா 4:41 சாத்தான் "புறப்பட்டது" என சாதாரணமாக பதிவு செய்துள்ளது. லூக்கா 7:21 அவர் அவர்களை "குணமாக்கி" என குறிப்பிட்டுள்ளது. மத்தேயு 8:16 அவர் "அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி"யதாக பதிவு செய்துள்ளது.

-மாற்கு 16:9 மற்றும் லூக்கா 8:2-3 மகதலேனா மரியாளிடமிருந்து ஏழு பிசாசுகளை இயேசு துரத்தியதாக குறிப்பிடுகின்றது.

-மாபெரும் கூட்டங்களில் இயேசு பிசாசுகளை பேசுவதற்கு அனுமதிக்கவில்லை: மாற்கு 1:32-34

## இயேசுவினுடைய தனிப்பட்டவர்களுடைய குணமாக்குதல்

### சாத்தானுடைய செல்வாக்கு குறிக்கப்படாதவைகள்

| | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
|---|---|---|---|---|
| பேதுருவின் மாமி | 8:14-15 | 1:30-31 | 4:38-39 | |
| குஷ்டரோகி | 8:2-4 | 1:40-42 | | 5:12-13 |
| திமிர்வாதக்காரன் | 9:1-8:35 | 2:1-12 | 5:17-26 | |
| சூம்பின கையையுடைய மனுஷன் | 12:9-13 | 3:1-5 | 6:6-11 | |
| யவீருன் மகள் | 9:18-19 | 5:22-24 | | 8:41-42 |
| | 23-26 | 35-43 | | 49-56 |
| செவிடு மற்றும் ஊமையான மனிதன் | 7:32-37 | | | |
| குருடன் | | 8:22-26 | | |
| குருடன் பர்திமேயு | 20:30-34 | 10:46-52 | 18:35-43 | |
| நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் | 8:5-13 | | 7:1-10 | |
| இரண்டு குருடர் | 9:27-30 | | | |
| விதவையின் மகன் | | 7:11-15 | | |
| நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷன் | | 14:1-6 | | |
| பத்து குஷ்டரோகிகள் | | | 17:11-19 | |
| வேலைக்காரனை காது | | | 22:49-51 | |
| ராஜாவின் குமாரன் | | | | 4:46-53 |
| வியாதிஸ்தன் | | | | 5:1-47 |
| பிறவிக் குருடன் | | | | 9:1-14 |
| லாசரு | | | | 11:1-44 |
| விபச்சார ஸ்திரீ | | | | 8:1-11 |
| பாவியாகிய ஒரு ஸ்திரீ | | | 7:36-50 | |

## படிப்பிற்கான குறிப்பு:

சாத்தானுடைய விசேடமாக அடையாளமான செல்வாக்கு இன்றி காணப்பட்ட தனிப்பட்டவர்கள் தொடர்பான குணமாக்குதலின் படிப்பிற்கான குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

**பேதுருவின் மாமி: மத்தேயு 8:14-15: மாற்கு 1:30-31, லூக்கா 4:38-39**

அவர்கள் தேவையை குறித்து இயேசுவிடம் கூறினர். அவர் வந்து, அவளுடைய கரத்தை தூக்கினார், அவளை எழுப்பினார், அத்தோடு காய்ச்சல் அவளை விட்டு நீங்கிற்று. மற்ற சம்பவங்களில் அவர் அவளை தொட்டார், அவளை எழுப்பினார் அத்தோடு அவளுடைய காய்ச்சலை கடிந்து கொண்டார் என குறிப்பிடுகின்றது. அவள் எழுந்து அவர்களுக்கு ஊழியம் செய்தாள்.

**குஷ்டரோகி: மத்தேயு 8:2-4, மாற்கு 1:40-42, லூக்கா 5:12-13**

குஷ்டரோகி இயேசுவை கண்டதும், அவன் துதித்தலோடு வந்தான், ஆனாலும் கேள்வியோடும் வந்தான். அவன் கூறினான், “உமக்கு சித்தமானால்”. இயேசு சொன்னார், “எனக்குச் சித்தமுண்டு”. மட்டுமே என இயேசுவிடம் குணமாக்குதலுக்கான சித்தத்தை குறித்தான கேள்வை கேட்கும் ஒரு மனிதன் இவன் மட்டுமே என பதிவுசெய்யப்பட்டுள்ளது. இயேசு உடனடியாக அவருக்கு பதிலளித்தார், “எனக்கு சித்தமுண்டு”. இயேசு மனதுருகி, அவன் மேல் கையை வைத்து அவனை தொட்டார். சாட்சியாக ஆசாரியனுக்கு தன்னை சென்று காண்பிக்கும்படியும், மற்ற மனிதர்களுக்கு இதை சொல்ல வேண்டாம் எனவும் இயேசு அவனிடம் சொன்னார். அவன் புறப்பட்டான், அத்தோடு “உடனடியாக” அவன் குணமாகினான்.

**திமிர்வாதக்காரன்: மத்தேயு 9:1-8:35, மாற்கு 2:1-12, லூக்கா 5:17-26**

குணமாக்குதவதற்கு இயேசுவிடைய வல்லமை கொடுக்கப்பட்டுள்ளது ஏனென்றால் இயேசு அவர்களுக்கு தேவனுடைய வசனத்தை பேசினார். பரிசேயர், வைத்தியர்கள், பரிசேயர் கூட அங்கு இருந்தனர், படிப்பு மற்றும் சமயத் தலைவர்களுக்கூடாக அல்லாமல், குணமாக்குதல் வசனத்திற்கூடாக வருகின்றது.

இந்த வியாதியின் மனிதனை அவனுடைய நண்பர்கள் கூரையை கழற்றி இறக்கினர். இந்த நண்பர்கள் “விடுதலையின் பங்காளியாயிருக்கின்றார்கள்.” தேவையுள்ள ஒருவருக்கான “கூரையை கழற்றும்படியான” உதவியை செய்யும்படிக்கு உங்களை தேவன் பயன்படுத்த விரும்புகின்றார்.

இங்கு பல தடைகளை மேற்கொள்ள வேண்டி இருந்தது:

-கூட்டம்: இயேசுவினுடைய வழியை தடை செய்தது. உங்களுக்கும் விடுதலைக்கும் இடையிலுள்ள மனித தடைகள் என்ன?

-கூட்டத்தின் அமைப்பு: அவர்களுடைய கிரியை கூட்டத்தின் அமைப்பை உண்மையாகவே உடைத்தது. மனித தேவைகளை சந்திக்கும்படியல்லாத நிகழ்ச்சியையும் திட்டங்களையும் நாம் ஒருபோதும் கட்டப்படலாகாது

-பொருட்கள்: கூரை பெயர்க்ப்படவேண்டி இருந்தது. விடுதலையின் வழியை திறப்பதற்கு எமது தேசியம், தர்க்கங்கள், பொருட்கள் ஆகியவை தள்ளிவைக்கப்படல் வேண்டும்.

-முன் அறிந்திருத்தல்: அவர்கள் அவருடைய நண்பரை கொண்டுவந்திருந்தனர். இயேசு சொன்னார் "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது." அவர்களுக்கு என்ன தேவை அல்லது விடுதலை வருவதற்கு நடைபெற வேண்டிய சம்பவத்திற்கான எண்ணங்கள் ஆகியவற்றின் முன் அறிதலை அவர்கள் தள்ளி வைத்திருத்தல் வேண்டும்.

இயேசு நண்பர்களுடைய விசுவாசத்தை கண்டார், ஆனால் வியாதியஸ்தவனுடைய பாவம் அவனுடைய விசுவாசத்திற்கு தடையாக இருந்தது. இந்த மனிதன் பௌதீக ரீதியான வியாதியஸ்தனாக இருந்தான், ஆனால் பாவத்தின் மூலமான ஆவிக்குரிய வியாதிகளும் இருக் கின்றன. இயேசு பாவத்தோடு முதலில் சம்பந்தப்பட்டார். இயேசுவிற்கு இதை செய்வதற்கான இந்த அதிகாரம் உள்ளதா அல்லது இல்லையா என ஓர் கலந்துரையாடல் சுற்றுப்புறமும் இடம்பெறுகின்றது. இயேசு இந்த மனிதனை நோக்கி சொன்னார், "நான் உனக்குச் சொல்லுகிறேன்..." விடுதலையை பெறும்போருட்டு எம்மை சுற்றியுள்ள அவிசுவாசிகளின் கூட்டத்தின் தர்க்கத்தின் சத்தத்தைவிட இயேசுவின் சத்தத்தை நாம் கேட்டல் வேண்டும்.

இந்த மனிதனுடைய நண்பர்களின் விசுவாசம் குணப்படுத்தல் செயல்பாட்டை நடைபெற வைத்தது. நண்பர்கள் இயேசுவுக்கு உங்களை உதவலாம், ஆனால் உங்களுக்கான சொந்த நேரம் உங்களுக்குள்ளது. இந்த மனிதன் உடனடியான கீழ்ப்படிதலுக்கூடாக கடந்தகாலத்தின் உடைத்து தோற்கடிக்க வேண்டி இருந்தது. அவனுக்கு படுக்கையை எடுத்து நடக்க வேண்டி இருந்தது.

அவனை எழும்பும்படி இயேசு கூறியதும், அவன் உடனடியாக செய்து, தன்னடைய படுக்கை யை எடுத்து, தன்னுடைய வீட்டிற்கு சென்றான், அவன் தேவனுக்கு மகிமையை செலுத்தி புறப்பட்டான். இந்த குணமாக்குதலுக்கு சாட்சியாக ஆச்சரியங்களும் பயமும் பிரதியுத்தரவு பண்ணப்பட்டன.

**சூம்பின கையையுடைய மனுஷன்: மத்தேயு 12:9-13, மாற்கு 3:1-5, லூக்கா 6:6-11**

ஜெப ஆலயத்தில் ஓய்வு நாளில் இயேசு போதித்துக்கொண்டிருக்கும்போது இந்த குணமாக்குதல் நடைபெற்றது. இது ஓர் பரீட்சைக்கான காரியமாயிருந்தது. வேதபாரகரும், பரிசேயரும் அவர் என்ன செய்வார் என கவனித்துக்கொண்டிருந்தார்கள். இயேசு அவனிடம் "எழுந்து நடுவே நில்" என சொன்னார். இது குணமாக்குதலுக்கு வழிநடத்துவதற்கான கீழ்ப் படிதலுக்கான கிரியையாய் இருந்தது (லூக்கா 6:8). இந்த மனிதனுக்கு "எழுந்து நடுவில் நிற்கும்படி" கூறப்பட்டது, இதன் அர்த்தமானது நாம் கூட்டத்திலிருந்து எழுந்து வந்து, அவருடைய தேவையை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும் (மாற்கு 3:3)

அவனிடம் "உன் கையை நீட்டு" என கூறப்பட்டது. இது அவனுடைய சரீரத்தின் தாக்கப்பட்ட பகுதியில் விசுவாசத்தை உள்ளடக்கியதான கிரியையாய் இருந்தது (மத்தேயு 12:13). இயற்கை யான உலகில் இது முடியாத காரியம், ஆனால் அவன் விசுவாசத்தில் கிரியை செய்தான், அவனுடைய சூம்பின கை குணமாக்கப்பட்டது. தேவன் கேள்விகளோடு கேள்விகளுக்கு பதிலளித்தார் என்பதை கவனியுங்கள். இந்த குணமாக்குதல் சம்பந்தமாக ஆட்டினுடைய கதையை இந்த பகுதியில் சுட்டிக்காட்டுவதற்கு அவர் பயன்படுத்தினார். இயேசு அவரை சுற்றி இருந்த சமயத்தலைவர்களோடு "கோபமும், விசனமுமாய்" இருந்தார் என்பதை கவ னியுங்கள். குணமாக்குதலின் ஊழியத்தில் நீங்கள் இவ்விதமான உணர்வுளை கூட அனுப விக்கலாம்.

**யவீருன் மகள்: மத்தேயு 9:18-19, 23-26, மாற்கு 5:22-24, 35-43, லூக்கா 8:41-42, 49-56**

யவீரு ஜெப ஆலயத்தலைவனாயிருந்தான். அவன் வந்து இயேசுவின் கால்களில் விழுந்து, அவரை வந்து தன்னுடைய மகள் மேல் அவருடைய கரத்தை வைக்குமாறு "அவரை மிகவும் வேண்டிக் கொண்டான்" அத்தோடு "அவன் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியம் அடையும்படிக்கு" என கூறுகின்றார். மத்தேயு 9:18ல் --ஆகிலும்-- விசுவாசத்தின் திறவுகோல் வசனத்தை கவனியுங்கள்.

வேறு வசனங்கள் கூறுகின்றது அந்த குமாரத்தி "சாகின்றாள்" மற்றும் "மரணத்தின் விளிம்பில் இருக்கின்றாள்." அவர்கள் வீட்டிற்கு வரும்முன்பே, மரணத்தின் செய்தியோடு ஒருவர் வந்தார்: "இயேசுவை ஏன் வருத்தப்படுத்துகிறீர்கள்?" இந்த வசனங்கள் பயத்தினாலாகும், ஆனால் இயேசு யவீருவை பார்த்து "பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு. அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள்." என்றார்.

இயேசு வீட்டிற்குள் பிரவேசித்ததும், அவர் பிள்ளை மரிக்கவில்லை, நித்திரையாய் இருக்கிறாள் என அழுகிறவர்களை பார்த்து கூறினார். அவர்கள் அவரைப் பார்த்து நகைத்தார்கள். சத்தமிடும் மக்களையும், அழுபவர்களையும், துக்கப்பவர்களையும், அமளி பண்ணகிறவர்களையும் அவர் வெளியேற்றினார். அந்த அறையில் இருந்தவர்கள் பேதுரு, யாக்கோபு, யோவான் மற்றும் குழந்தையினுடைய உறவினர்களாவர்.

அவர் சிறு பெண்ணின் கையை பிடித்து, "சிறுபெண்ணே எழுந்திரு" என்று கூறினார். அவளுடைய உயிர் திரும்ப வந்தது, அவள் உடனடியாக எழுந்து நடந்தாள். மக்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டனர். இயேசு அவள் உணவை சாப்பிட கொடுக்கும்படி கட்டளையிட்டார்.

**செவிடு மற்றும் ஊமையான மனிதன்: மாற்கு 7:32-37**

அவர்கள் இயேசுவிடம் பேச தடையாகவுள்ள மற்றும் செவிடனான மனிதனை கொண்டு வந்தார்கள். இயேசு அவனை மக்கள் கூட்டத்திலிருந்து அப்புறப்படுத்தி, அவனுடைய கரத்தை அவன் காதில் வைத்து, துப்பி, அவனுடைய நாக்கை தொட்டார். அவர் வானத்தைப்பார்த்து, பெருமூச்சுவிட்டு, "திறக்கப்படுவதாக" என்று சொன்னார். உடனடியாக அவனுடைய காதுகள் திறக்கப்பட்டது, அவனுடைய நாக்கின் கட்டு தளர்த்தப்பட்டது, அவன் அதிகம் பேசினான்.

**பெத்சாயிதா ஊரிலிருந்த குருடன்: 8:22-26**

அவர்கள் ஒரு குருட மனிதனை இயேசுவிடம் கொண்டுவந்தனர், அவர் அவிசுவாசத்தின் சூழ்நிலைகளிலிருந்து அவனை விடுவிக்கும்பொருட்டு அவனை நகரத்திற்கு வெளியே அழைத்து சென்றார் (மாற்கு 8:23). அவனுடைய கண்களில் இயேசு துப்பி, அவன் மேல் தமது கரத்தை வைத்தார். இயேசு அவனிடம் பார்க்க முடிகின்றதா என கேட்டார். அவன் சொன்னான் "மனிதனும் மரங்களும் நடக்கின்றதை" காண்கின்றேன். அவர் தமது கரத்தை மீண்டும் அவன் கண்களில் வைத்தார், அவன் முற்றுமுழுவதும் குணமாகி, எல்லா மனிதர்களையும் தெளிவாக கண்டான். இது படிப்படியான குணமாக்குதலுக்கு ஓர் உதாரணமாக இருக்கின்றது.

**குருடன் பர்திமேயு: மத்தேயு 20:30-34, மாற்கு 10:46-52, லூக்கா 18:35-43**

பர்திமேயு திமேயுவின் மகன். எரிகோவில் இயேசு கடந்து செல்லும்போது வழியின் அருகே அவன் உட்கார்ந்து பிச்சையெடுத்துக்கொண்டிருந்தான். அவன் பௌதீக ரீதியாக மட்டும் பாதிக்கப்பட வில்லை, சமூகத்தினாலும் பாதிக்கப்பட்டிருந்தான், ஏனெனில் அவன் ஒரு பிச்சைக்காரன்.. பர்திமேயு திரளான ஜனங்களில் சத்தத்தை கேட்டு அவர்களிடம் அதின் அர்த்தத்தை கேட்டான். அவனுக்கு இயேசு வருகின்றார் என சொல்லப்பட்டது. அவனும் மற்று குருடனும் "தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்" என சத்தமிட்டனர். மக்கள் அவர்களை கடிந்து கொண்டனர், ஆனாலும் அவர்கள் இன்னும் அதிகம் சத்தமிட்டனர். பர்திமேயுவை இயேசு அவர் அருகே அழைத்தார், அவன் அவனுடைய பிச்சைக்காரனுடைய சட்டையை தூக்கியெறிந்து, இயேசுவிடம் வந்தார். அவனுக்கு இனி பிச்சைக்காரனுடைய உடை ஒருபோதும் அவசியமில்லை!

"நான் உனக்கு என்ன செய்யவேண்டும்?" இயேசு அவனிடம் கேட்டார். தேவன் எமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டு கேட்க விரும்புகின்றார். குருடனான மனிதர்கள் அவரிடம் பார்வையடையும்படி விண்ணப் பித்தனர். இயேசுவிடம் இரக்கம் காணப்பட்டது, அவர்களுடைய கண்களை தொட்டார், உடனடியாக அவர்கள் பார்வையை பெற்றனர். அவர் அவர்களிடம் "நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என கூறினார். அவர்கள் தேவனை மகிமைப்படுத்தி அவர்கள் வழியில் சென்றனர்.

இந்த மனிதனுடைய விசுவாசத்தின் குணாதிசயமானது:

-கண்டறிதலும், விடாபிடியாயிருத்தல்
-இயேசு உண்மையிலேயே யார் என பார்த்தல்: தாவீதின் குமாரன்
-தேவனுடைய இரக்த்தை விசுவாசித்தல்

**நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன்: மத்தேயு 8:5-13, லூக்கா 7:1-10**

இந்த வேலைக்காரன் அவருக்கு பிரியமானவன் என எமக்கு கூறுப்பட்டுள்ளது. இந்த மனிதன் கொடிய வாதத்தினால் பீடிக்கப்பட்டிருந்தான். முதலாவது, நூற்றுக்கு அதிபதி வயதான யூதரை ஒரு விண்ணப்பத்தோடு இயேசுவிடம் அனுப்பினார். அவர்கள் இயேசுவை சமாதானப்படுத்தி வர முயற்சித் தனர், ஏனென்றால் நூற்றுக்கதிபதி மதிப்புமிக்க ஒருவனும் தேசத்தை நேசித்து, ஜெப ஆலயத்தை கட்டியவனாய் இருந்தான்.

பிறகு நூற்றுக்கதிபதி ஒரு நண்பரை அவரிடம் அனுப்பி "என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல" என கூறினான். நூற்றுக்கதிபதி தான் பாத்திரன் அல்ல என தன்னைத்தான் காட்டினாலும், அவன் அதிகாரத்தை அறிந்திருந்தான். இயேசு வர சம்மதித்தார், ஆனால் நூற்றுக்கதிபதி "ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" என கூறினார்.

இயேசு சித்தமாயிருந்தார். இயேசு ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசவாசத்தைக் காணவில்லை என்றார். இயேசு சொன்னார் "நான்" பிற்பாடு வசனத்தை பேசுதலிற் கூடாக குணமாக்கினார். அவர் கூறினார், "நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்-கடவது." அந்த மணிநேரத்தில் வேலைக்காரன் குணமாகினான்.

**இரண்டு குருடர்: மத்தேயு 9:27-30**

இந்த இரண்டு குருடர்களும் இயேசுவை பின்தொடர்ந்து கதறினர், “தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும்.” இயேசு அந்த வீட்டிற்கு வந்து அவர்களிடம் கேட்டார், “இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா” அந்த மனிதர்கள் “ஆம் விசுவாசிக்கிறோம்” என கூறினார்கள். இயேசு அவர்களுடைய கண்களை தொட்டு கூறினார், “உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது”. அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது, அவர்கள் அந்த செய்தியை எங்கும் பரப்பினார்கள்.

**விதவையின் மகன்: லூக்கா 7:11-15**

நாயீன் ஊரில் வாழ்ந்த விதவையின் தாய்க்கு இந்த இறந்த மனிதன் ஒரே மகனாயிருந்தான். அநேக மக்கள் அவளுடைய மரன சடங்களில் இணைந்திருந்தனர். இயேசு மனதுருகி, அவளை அழவேண்டாம் என கூறினார். அவர் வந்து பாடையை தொட்டு, “வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்” என்றார். வாலிபன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். இயேசு அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார். மக்கள் தேவனை மகிமைப்படுத்தி இயேசுவை “மகா-தீர்க்கதரிசி” என அழைத்தனர்.

**நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷன்: லூக்கா 14:1-6**

பரிசேயர் ஒருவனுடைய வீட்டில் இந்த குணமாக்குதல் நடைபெற்றது. ஓய்வுநாளில் குணமாக்குவது கூடுமா அல்லது கூடாதா என்னும் கேள்விகள் மையப்படுத்தி இருந்தன. இயேசு அவருடைய நிலையை காட்டுவதற்கு கழுதையின் கதையை உபயோகித்தார். இயேசு அம்மனிதனை எழுப்பி, குணமாக்கி, அனுப்பிவிட்டார்.

**பத்து குஷ்டரோகிகள்: லூக்கா 17:11-19**

இந்த மனிதர்கள் கிராமத்திற்கு வெளியேயிருந்து “இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும்” என கதறினர். ஜெபத்திற்கு பின் அவர்கள் ஆசாரியரிடத்தில் தங்களை காண்பிக்கும்படி அறிவுறுத்-தப்பட்டனர். அவர்கள் உடனடியாக குணமாக்கப்படவில்லை, ஆனால் அவர்கள் சென்று பரிசுத்-தமாக்கப்பட்டார்கள். ஒருவர் மீண்டும் வந்து தேவனை மகிமைப்படுத்தினார், இயேசுவின் கால்களில் அவன் குப்புற விழுந்து நன்றி செலுத்தினான். இயேசு அவன் இரட்சிக்கப்பட்டான் என கூறினார். ஒன்பதுபேர் குஷ்டரோகத்திலிருந்து குணமானார்கள், ஆனால் ஒருவரே முழுமையாக்கப்பட்டார்.

**வேலைக்காரனை காது: லூக்கா 22:49-51**

இந்த மனிதனுடைய வலது காதானது பேதுருவினால் வெட்டப்பட்டது. இயேசு அவனுடைய காதை தொட்டு அவனை குணமாக்கினார் என இந்த குணமாக்குதலை குறித்து எமக்கு கூறப்பட்டுள்ளது.

**ராஜாவின் குமாரன் : யோவான் 4:46-53**

கப்பர்நகூமிலே இவனுடைய குமாரன் வியாதியஸ்தனாயிருந்தான். அந்த மனுஷன் தன்னுடைய

குமாரன் சாவின் விளிம்பில் இருக்கின்றான் எனவும், வந்து அவனை குணப்படுத்தும்படிக்கு இயேசுவிடம் கேட்டார். இயேசு “உன் குமாரன் பிழைத்திருக்கிறான்” என அவனிடம் கூறினார். அந்த மணித்தியாலத்தில் அவனுடைய குமாரன் குணமானான். படிப்படியான குணமாக்குதலுக்கு இது இன்னொரு உதாரணமாக இருக்கின்றது. காய்ச்சல் அவனைவிட்டு நீங்கிற்று. அவனுடைய வீட்டார் அனைவரும் விசுவாசித்தார்கள் (முழு வீட்டிற்கான இரட்சிப்பு).

**வியாதிஸ்தன்: யோவான் 5:1-47**

இந்த மனிதன் 18 வருடங்களாக பௌதீக வியாதியாயிருந்தான். அவன் நம்பிக்கை இழந்தவனாகவும், மற்ற மக்களோடு கோபமுள்ளவனாகவும் காணப்பட்டான். வியாதியிற்கு சில உணர்வுரீதியான பிரச்சனைகள் காணப்படுகின்றன. இந்த மனிதனுக்கு பௌதீக வியாதியோடு ஆவிக்குரிய வியாதியும் காணப்பட்டது (யோவான் 5:14).

நிகழ்காலத்தில் இயேசு ஒருவரை குணமாக்கினாலும், இந்த சந்தர்ப்பத்தில் அவர் ஒருவரையே குணமாக்குகின்றார், இயேசு ஊழியத்தில் அவரை சுற்றியுள்ள மக்களால் நடத்தப்படாமல், தேவனால் வழிநடத்தப்பட்டார். இயேசு இந்த மனிதன் உண்மையான பிரச்சனையை எதிர்நோக்குகிறவனாக அறிந்தார். அவர் அவனிடம் கேட்டார், “சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா?” நாம் இந்த வசனங்களை ஆய்வு படுத்துவோம்:

-“கிறாயா” என்பது தீர்மானத்தை அழைக்கின்றது. சில மக்களுக்கு குணமாக்குதல் வேண்டாதிருக்கின்றனர். வியாதியின் வேறு நன்மைகளையும் அல்லது அதன் நோக்கத்திலும் கூட சந்தோஷப்படுகின்றனர். அவர்கள் தேவனோடு கூட செல்லவும் தீர்மானிக்கின்றனர்.

-“விரும்பு” குணமாக்குதல் குறித்து தனிப்பட்டவரின் உள்ளடக்கத்தை நோக்குகின்றது. வியாதியஸ்தனின் விசுவாசமானது குணமாக்குதல் வருவதற்கான ஒரு பாத்திரமாயிருக்கின்றது.

-“வேண்டுமென்று” இது நிகழ்காலமாகும். இயேசு அவனிடம் “இப்பொழுது சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா?” கேட்டார்.

-“சொஸ்தமாக” மனிதனுடைய உண்மையான தேவையை நோக்குகின்றது. உங்களுடைய முன்னுரிமை என்ன, குணமாகுதலா அல்லது முழுமையாகுதலா? உங்களுடைய உண்மையான தேவை என்ன? மனிதனுக்கு குணமாக்குதல் தேவை, ஆனால் இயேசு முழுமையாகுதலில் கரிசனை செலுத்துகின்றார்.

இந்த மனிதனுக்கு தேவை சொஸ்தமாக்கப்படுதல். அவனுக்கு மற்றவர்களை குறித்து ஒரு கசப்புணர்வு இருந்தது, ஏனென்றால் அவன் “என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை” என கூறுகின்றான். இந்த கசப்புணர்வு தேவனுடைய வல்லமையை ஊற்றப்படுவதை தடுக்கின்றது. இந்த மனிதன் இறந்த காலத்தை உடைக்க வேண்டியவனாயிருந்தான். அவன் அந்த நோயில் முப்பத்தெட்டு வருடங்கள் இருந்தான். அவன் விசுவாசத்தின் பகுதிக்கு செல்ல வேண்டியவனாயிருந்தான். இயேசு அவினில் அவனுக்கு செய்யக்கூடாதிருந்த அவனுடைய நிலையிலிருந்து வெளியே அழைத்தார். அவன் தான் ஒருநாள் முதலில் செல்லுவேன் என்னும் நம்பிக்கையில் கடந்த முப்பத்தி எட்டு வருடங்களாக அங்கு தொடர்ந்து இருந்திருக்கலாம் அல்லது அவன் தனக்குத்தானே

செய்ய முடியாததொன்றை செய்யும்படியாக எழுந்திருக்கலாம். பௌதீக மீட்சிக்கான ஓர் ஏற்பாடு இந்த மனிதனின் இருந்திருக்கலாம். இது அவனுடைய படுக்கை. இதனாலேயே அதை எடுக்கும்படி இயேசு அவனிடம் கூறினார். அவனுக்கு அது இனி ஒருபோதும் தேவையில்லை.

**பிறவிக் குருடன்: யோவான் 9:1-14**

இந்த மனிதன் பிறவிக்குருடனாயிருந்தான். இயேசுவினுடைய நோக்கமானது காரியத்திலிருந்து (ஏன்) முக்கியத்துவமாக மாறியது (தேவனுடைய மகிமை). அவர் தரையில் எச்சிலை துப்பி, களிமண்ணாக்கி, அவனுடைய கண்ணை அபிஷேகித்து, சீலோவாம் குளத்தில் கழுவும்படியாக கட்டளையிட்டார்.

**லாசரு: யோவான் 11:1-44**

இயேசுவினுடைய உணர்வை கவனியுங்கள். இவ்வுலகத்திற்கு பாவத்தினால் கொண்டுவரப்பட்ட மரணம் மற்றும் வியாதியின் துயரத்தினால் நண்பராக மாத்திரமல்ல மனதுருகுபவராக அவர் அழுகின்றார்.

**விபச்சார ஸ்திரி: யோவான் 8:1-11**

இச்சந்தர்ப்பத்தில் ஆவிக்குரிய மற்றும் ஞாபகத்திற்கான குணமாக்குதல் உள்ளது. அவள் “கடந்த காரியங்களை (இறந்த காலம்) மறக்க” வேண்டியவளாகவும், “எண்ணங்களை விரட்ட” (தற்காலம்) வேண்டியவளாகவும் இருந்தாள்.

**பாவியாகிய ஒரு ஸ்திரீ: லூக்கா 7:36-50**

இந்த பெண் ஆவிக்குரிய வியாதியாயிருந்து, இயேசுவிடம் வெளிப்படையாக வந்தாள். அவளுடைய சமூக உறவில் உணர்வு ரீதியான குணமாக்குதலும் அவளுக்கு தேவையாயிருந்தது. அவளுடைய தியானத்தின் உடைந்த ஆவியானது மன்னிப்பின் விளைவால் வந்த விசுவாசத்தின் கிரியையாய் இருந்தது.

## எண்ணிலடங்காத மக்கள் இயேசுவால் குணமாக்குதல்

| | மத்தேயு | மாற்கு | லூக்கா |
|---|---|---|---|
| கலிலேயாவில் சகல ஜனங்கள் | 4:23-24 | 3:7-12 | 6:17-19 |
| சீமோனுடைய வீட்டு வாசல் | 8:16-17 | 1:32-34 | 4:40-41 |
| அநேக சாத்தான்கள் | | 1:39 | |
| குஷ்டரோகியை குணப்படுத்தியன் பின் சகல ஜனங்கள் | | | 5:14-16 |
| அநேக மக்கள் | | | 13:32 |
| திரளான மக்கள் | 9:35; 12:15-21 | 3:10-11 | |
| கேள்விகேட்ட யோவான் சீஷர்கள் | 11:2-6 | | 7:18-23 |
| 5,000 பேரை போஷிக்கும் முன் | 14:13-14 | | 9:11 |
| கெனேசரேத்து மக்கள் கூட்டம் | 14:34-36 | 6:53-56 | |

| | | |
|---|---|---|
| 4,000 பேரை போஷிக்கும் முன் | 15:19-31 | |
| யோர்தானில் சனக்கூட்டம் | 19:1-2 | |
| தேவாலயத்தில் இருந்த சப்பாணியும் குருடனும் | 21:14 | |
| நாசரேத்தில் வியாதியாயிருந்த சிலர் | 13:53-58 | 6:1-6 |

## படிப்பிற்கான குறிப்பு:

எண்ணிலடங்காத மக்கள் தொடர்பான குணமாக்குதலின் படிப்பிற்கான குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

**கலிலேயாவில் சகல ஜனங்கள்: மத்தேயு 4:23-24, மாற்கு 3:7-12, லூக்கா 6:17-19**

கலிலேயா முழுவதிலும் இருந்து ஜனங்கள் வந்து குணமாக்குதலையும், விடுதலையையும் பெற்றுக்கொண்டனர்.

**சீமோனுடைய வீட்டு வாசல்: மத்தேயு 8:16-17, மாற்கு 1:32-34, லூக்கா 4:40-41**

பேதுருவினுடைய மாமியை குணப்படுத்தியதின் பின், வீட்டு வாசலில் அநேக மக்கள் கூடினர், இயேசு அவர்களுக்கு ஊழியம் செய்தார்.

**அநேக சாத்தான்கள்: மாற்கு 1:39**

கலிலேயாவில் இயேசு பிரசங்கித்து, அநேக சாத்தான்களை துரத்தினார்.

**குஷ்டரோகியை குணப்படுத்தியன் பின் சகல ஜனங்கள்: லூக்கா 5:14-16**

குஷ்டரோகியை குணப்படுத்தியதால் வேறு அநேகர் குணமாக்குதலுக்காக வந்தனர்.

**அநேக மக்கள்: லூக்கா 13:32**

இந்த பந்தி இயேசு மக்களை குணப்படுத்தியதாக குறிப்பிடுகின்றது.

**திரளான மக்கள்: மத்தேயு 9:35, 12:15-21, மாற்கு 3:10-11**

தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக அவர்களை அவர் குணமாக்கினார்.

**கேள்விகேட்ட யோவான் சீஷர்கள்: மத்தேயு 11:2-6, லூக்கா 7:18-23**

அவருடைய மேசியத்துவத்தின் ஆதாரமாக என்ன நடைபெறுகின்றது என்பதை அவருக்கு சொல்லும்படி யோவானுடைய சீஷர்களுக்கு இயேசு சொன்னார்.

**5,000 பேரை போஷிக்கும் முன்: மத்தேயு 14:13-14, லூக்கா 9:11**

இயேசு தேவனுடைய இராஜ்ஜியத்தை குறித்து அவர்களிடம் பேசினார். அவர் மனதுருக்கத் தோடு அசைவாடி, அவர்களுடைய வியாதியை குணமாக்கினார்.

**கெனேசரேத்து மக்கள் கூட்டம்: மத்தேயு 14:34-36, மாற்கு 6:53-56**

இங்கு மக்கள் வியாதிபட்டவர்களையும், நோயாளிகளையும் படுக்கையில் கொண்டு வந்து, பாதையில் அவர்களை கிடத்தினார்கள்.

**4,000 பேரை போஷிக்கும் முன்: மத்தேயு 15:19-31**

வியாதியஸ்தர்கள் அவருடைய காலடியில் கிடத்தப்பட்டார்கள், அவர் அவர்களை குணமாக்கினார். முடவர்கள் நடந்தார்கள், குருடர்கள் பார்வையடைந்தனர், ஊமையர்கள் பேசினர், உடல் உறுப்புக்களை இழந்தவர்கள் முழுமையாக்கப்பட்டனர், மேலும் மற்றவர்கள் குணமாகினர். அவர்கள் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

**யோர்தானில் சனக்கூட்டம்: மத்தேயு 19:1-2**

திரளான ஜனக்கூட்டம் அவரை தொடர்ந்தனர், அவர் அவர்களை குணமாக்கினார்.

**தேவாலயத்தில் இருந்த சப்பாணியும் குருடனும்: மத்தேயு 21:14**

மேலதிக விபரங்கள் கொடுக்கப்படவில்லை. அவர்கள் தேவாலயத்தில் வந்தபோது அவர் குணமாக்கினார் என சாதாரணமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நாசரேத்தில் வியாதியாயிருந்த சிலர்: மத்தேயு 13:53-58, மாற்கு 6:1-6**

இந்த நகரத்தின் அவிசுவாசத்தின்நிமித்தம் இயேசு ஆச்சரியப்பட்டார். அவர் கிராமங்களிலும், ஜெப ஆலயங்களிலும் அவர் போதித்தார், ஆனால் அவர் சிலரை தொட்டு குணமாக்கியதை தவிர வேறு பெரிதான காரியங்களை செய்யவில்லை. அவரை குறித்து அறிந்திருந்தமையால் அவர்கள் அவரை குறித்து இடறல் அடைந்தார்கள்.

## இயேசு குணமாக்குபவர் என்னும் பொதுவான குறிப்புக்கள்

| | **மத்தேயு** | **மாற்கு** | **லூக்கா** |
|---|---|---|---|
| எல்லா வகையான வியாதியையும் நோய்களையும் குணமாக்குதல் | 4:23-24<br>9:35-6 | | |
| அவரை தொட்ட யாவரும் குணமடைதல் | | 6:56 | |
| பிசாசின் பீடிக்கப்பட்ட அனைவரும் குணமடைதல் | | | 10:38 |
| வேறு அநேக காரியங்கள் | | | 20:30-31 |

## படிப்பிற்கான குறிப்பு:

இயேசு குணமாக்குபவர் என்னும் பொதுவான படிப்பிற்கான குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

**எல்லா வகையான வியாதியையும், நோய்களையும் குணமாக்குதல்: மத்தேயு 4:23, 9:35-36**

அவர் ஜெப ஆலயங்களுக்கும், நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் போதித்து உபதேசித்து எல்லா வியாதிகளையும், நோய்களையும் குணமாக்கினார்.

**அவரை தொட்ட யாவரும் குணமடைதல்: மாற்கு 6:56**

இயேசு எங்கெல்லாம் பிரவேசித்தாரோ (கிராமங்கள், நகரங்கள், நாடுகள்), அவரை தொடும்படியாக வியாதியஸ்தர்களை பாதையில் கிடத்தினார்கள். அவரை தொட்ட யாவரும் சொஸ்தமாக்கப்பட்டார்கள்.

**பிசாசின் பீடிக்கப்பட்ட அனைவரும் குணமடைதல்: யோவான் 10:38 மற்றும் 20:30-31**

மேலதிக விபரங்கள் தரப்படவில்லை, ஆனால் பிசாசினால் பீடிக்கப்பட்ட எல்லாரையும் இயேசு குணமாக்கினார் என்று குறிப்பிடப்படுகின்றது அத்தோடு "வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவான் 20:30-31).

## இயேசுவும் மற்றும் அவருடைய சீஷர்களினுடையதுமான அற்புதங்களின் ஓர் ஒப்பீடு

குணமாக்குதலும், அற்புதங்களும் இயேசுவோடு நின்றுவிடவில்லை. இயேசுவின் கிரியைகளை சீஷர்களும் செய்தார்கள் என கீழ்வரும் அட்டணை குறிப்பிடுகின்றது.

| சம்பவம் | பேதுருவினுடைய கிரியை | பவுலினுடைய கிரியை |
|---|---|---|
| சப்பாணியான பிச்சைகாரனை குணப்படுத்தல் | வாசலில்<br>அப்போஸ்தலர் 3:1 | லிஸ்திராவில்<br>அப்போஸ்தலர் 14:8 |
| படுக்கையின் குணமாக்குதல் | ஐனேயா:<br>படுக்கையில் 8 வருடம்<br>அப்போஸ்தலர் 9:32 | புபிலியுவின் தகப்பன்<br>படுக்கையில் காய்ச்சல்<br>அப்போஸ்தலர் 28:7 |
| தொடர்பில் அசாதாரண சம்பவம் | வஸ்திரத்தின் நிழல்<br>அப்போஸ்தலர் 5:12 | கைத்துணி<br>அப்போஸ்தலர் 19:11 |
| குணமாக்கப்பட்ட கூட்டம் | அப்போஸ்தலர் 5:16 | அப்போஸ்தலர் 28:9 |
| உயிர்த்தெழும்பிய மரித்தவர்கள் | அப்போஸ்தலர் 9:36 | அப்போஸ்தலர் 20:7 |

## சீஷர்களால் குணமாக்கப்பட்ட தனிநபர்கள்

**சப்பாணியான பிச்சைக்காரனை குணப்படுத்தல்: அப்போஸ்தலர் 3:1-4:22**

குணமாக்கப்பட்ட நபர்: ஆலய வாசலில் பிச்சையெடுத்த சப்பாணிய மனிதன்.

நிலை: பிறவியிலிருந்து சப்பாணி

ஊழியர்(கள்): பேதுருவும், யோவானும்

முறை: பேதுரு கூறினான், “எங்களை நோக்கிப்பார்”. அவனிடம் கொடுக்கும்படியாக பொன்னோ, அல்லது வெள்ளியோ தங்களிடம் இல்லை என்று அவன் அவனுக்கு கூறி, தொடர்ந்து தங்களிடம் இருப்பது என்னவோ அதை தருகின்றோம் என பிரகனடம் செய்தனர். பேதுரு இயேசுவின் நாமத்தினால் எழுந்து நடக்கும்படி கட்டளையிட்டான். பேதுரு வலது கையை பிடித்து அவனை மேலே தூக்கினார், அப்பொழுது அவனுடைய கால்களும் கணுக்காலும் பலமடைந்தன. சப்பாணி மனிதன் எழுந்து, நடந்து, குதித்து, தேவனை துதித்தான். அவனுடைய குணமாக்குதலுக்கான காரணத்தை அப்போஸ்தலர் 3:16 மற்றும் 4:10ல் பார்க்க.

குறிப்புக்கள்: ஆராதனைகளும், துதிகளும், நாற்பக்கங்களிலும் செய்திகள் சென்ற ஆலயத்தின் வாசலில் தான் இந்த மனிதன் இருந்தான், ஆனாலும் இன்னும் அவனுடைய தேவை பூரணப்படவில்லை. இன்றைய எமது ஆயலங்களில் அநேக சமய ஆராதனைகளில் நிலைகளும் இதுதான். ஆலயங்களில் வெளிப்புறத்தில், மனிதர்களுடைய தேவைகள் பூர்த்தியாகாமல் உள்ளன.

**பவுலினுடைய கண்கள்: அப்போஸ்தலர் 9:10-19, 22:11-13**

குணமாக்கப்பட்ட நபர்: பவுல்

நிலை: தேவனுடைய மகிமையால் பவுலினுடைய கண்கள் குருடாக்கப்பட்டது

ஊழியர்: அனனியா, தேவனால் கட்டளையிடப்பட்டு வழிநடத்தப்பட்டு, தரிசனத்தின் விளைவால் அவனிடம் சென்ற ஒருவர்.

முறை: அனனியா அவர் மேல் கைகளை வைத்தார், அந்த மணித்தியாலத்தில் பவுல் கண்களிலிருந்து மீன் செதில்கள் போன்றவைகள் விழுந்து பார்வையடைந்தான். அவன் தன்னுடைய பாவத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்று, உணவறுந்தினான்.

குறிப்புக்கள்: அனனியா, தேவனால் உபயோகிக்கப்பட்ட மாபெரும் மனிதனான, இந்த மனிதனை குறித்து வேதாகமம் பல காரியங்களை சொல்லுகின்றது. தேவனிடமிருந்து தரிசனங்களை பெற்று, தேவனுடைய சத்தத்தை அறிந்த அவன் ஒரு சீஷனாயிருந்தான். அவன் குறிக்கோளின் நபராயிருந்தார், யார் அவனை அனுப்பியது என்றும், எந்த நோக்கத்திற்காக அனுப்பப்பட்டேன் என்னும் அவன் அறிந்திருந்தான். அவன் புகழோடு வாழ்ந்து, நியாயப்பிரமாணம் படி ஜீவித்த நல்ல பக்தியுள்ள மனிதனாயிருந்தான். அவன் கீழ்ப்படிதலாயிருந்தான், பவுலைக்குறித்து அவன் கேள்விப்பட்டவைகள் காரணமாக இயற்கையிலும் அவன் பயந்திருந்தான். மற்ற தலைவர்களை எழுப்பக்கூடின மனிதனாயிருந்தான். தேவனால் குணப்படுதலுக்கு பயன்படுத்தப்பட்ட தீர்க்கதரிசியாய் இருந்தான், சுவிசேஷத்தின் போதகராயிருந்தான், காலங்களை வீணடிக்கவிரும்பாத மனிதனாக இருந்தான். பவுலுக்கு அவனுடைய செய்தியை கொடுத்ததின் பின்பதாக, “இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன?” என அவன் கூறினான்.

**பேதுரு ஐனேயாவை குணப்படுத்தல்: அப்போஸ்தலர் 9:32-35**

குணமாக்கப்பட்ட நபர்: ஐனேயா

நிலை: அவன் எட்டு வருஷமாய்க் கட்டிலின்மேல் திமிர்வாதமுள்ளவனாய்க் கிடந்தான்.

ஊழியர்: பேதுரு

முறை: பேதுரு விசுவாசத்தின் அறிக்கை செய்தார், "இயேசுகிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்". பின் விசுவாசத்தின் கிரியை செய்யுமாறு அழைத்தார். "நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக்கொள்" என அவர் சொன்னார்.

குறிப்புக்கள்: ஐனேயாவை பேருது என்னும் மனிதன் "அவனுடைய வழியில் எதிர்கொண்டார்". நாம் சபையில் சாதாரண ஊழியம் செய்யும் ஊழியர்களாக இருந்தாலும் கூட, தேவையுள்ளோருக்கு "அவர்களுடைய வழியில் எதிர்கொள்ள" ஆயத்தமுள்ளவர்களாக வேண்டும். இந்த மனிதனின் குணமாக்குதல் காரணமாக லித்தாவிலும் சாரோனிலும் குடியிருந்தவர்களெல்லாரும் கர்த்தரிடத்தில் திரும்பினார்கள். தேவனுடைய வல்லமையின் வெளிப்படுத்தலே எமது நகரங்களில் சுவிசேஷத்தை அடைவதற்கு திறவுகோலாக இருக்கின்றது. பேதுரு ஐனேயாவின் படுக்கைக்கு முடிவு கட்டினார், அதனால் அவன் ஒரு சோதனை இல்லாமலும், தரிசனம் இல்லாமலும் அதில் திரும்பினார். அந்த படுக்கையானது எட்டுவருடங்களுக்கு செய்யப்படாத படுக்கையாயிருந்தது.

**பேதுரு தொற்காளை குணமாக்கினாள்: அப்போஸ்தலர் 9:36-43**

குணமாக்கப்பட்ட நபர்: தொற்காள் (தபீத்தாள்). அவள் சீஷியாக அழைக்கப்பட்டாள், அவள் நல்ல கிரியைகளை செய்தாள். அவள் கொடுக்கும் மனப்பான்மை கொண்ட பெண்ணாயிருந்து, விதவைகளுக்கு ஊழியம் செய்யும் தையற்காரியாய் இருந்தாள்.

நிலை: தெரியப்படாத நோய்க்காக அவள் மரித்தாள்.

ஊழியர்: பேதுரு

முறை: பேதுரு அந்த அறையில் அழுது, புலம்பும் விதவைகளை வெளியேற்றினார். அவர்கள் முழுவதும் அவிசுவாசத்தினால் இருந்தார்கள், "அவள் அவர்களோடு இருக்கும் போதான" குறித்து அவர்கள் தபித்தாளைக்குறித்து பேசினர். பேதுரு முழங்கால்படியிட்டு, ஜெபித்து, பின் கட்டளையிட்டான், "தபீத்தாளே, எழுந்திரு". அவள் அவளுடைய கண்களை திறந்து, பேதுருவை பார்த்து எழுந்தாள். பேதுரு அவனுடைய கைகளை அவளுக்கு கொடுத்து, அவளை எழுப்பி, உயிருள்ளவர்களாக மற்றவர்களுக்கு காண்பித்தான். இந்த அற்புதத்தி-னால் அநேகர் விசுவாசித்தார்கள்.

குறிப்புக்கள்: "தபீத்தாளே, எழுந்திரு" என்னும் இரு வார்த்தைகள் இந்த பெண்ணின் விதியை மாற்றியது. நாம் வெறும் வார்த்தைகளை மட்டும் பேசுகின்றவர்களாக இருக்கின்றோம், ஆனால் மற்றவர்களுடைய வாழ்க்கையில் எமது வசனங்கள் என்ன தாக்கத்தை உண்டுபண்ணுகின்றது?

**லிஸ்திராவில் சப்பாணி மனிதன்: அப்போஸ்தலர் 14:8-18**

குணமாக்கப்பட்ட நபர்: பெயர் கொடுக்கப்படாத குறித்த ஓர் நபர்

நிலை: அவருடைய காலில் பெலனில்லை, பிறந்தது முதல் சப்பாணி. அவர் ஒரு போதும் நடக்கவில்லை.

ஊழியர்: பவுல்

முறை: அந்த மனிதன் குணமாக்குவதற்கான விசுவாசம் உள்ளதென பவுல் உணர்ந்தார். அவனை பார்த்து "நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்துநில்" என கூறினார். அந்த மனிதன் எழுந்து நடந்தான்.

குறிப்புக்கள்: நடந்த சம்பவத்தை மக்கள் பார்த்த போது, பவுலையும் பர்னபாவையும் தேவர்களாக்க முயற்சித்தனர், ஆனால் அவர்கள் தங்கள் ஆடைகளை கிழித்து, தாங்கள் மனிதர்கள் தான் என சத்தமிட்டு, குணமாக்குதலுக்கு உண்மையான ஒரே தேவனே பொருப்பு என அறிக்கையிட்டனர். குணமாக்குதலில் ஒரு நபர் தேவனால் உபயோகிக்கப்படுவாராயின், தேவனை உயர்த்துவதற்கு பதில் மனிதனை உயர்த்தும் அநேகர் இருக்கின்றனர். நாம் அவர்களுடைய கவனத்தை திசைதிருப்பி, தேவனை துதிக்க வேண்டும்.

**லீஸ்திராவில் பவுல் எழும்புதல்: அப்போஸ்தலர் 14:19-20**

குணமாக்கப்பட்ட நபர்: பவுல்

நிலை: பவுல் அவனுடைய எதிரிகளால் கல்லெறியுண்டு, மரணத்திற்கேதுவாக விடப்பட்டார்.

ஊழியர்: சீஷர்கள்

முறை: அவர்கள் அவனை சுற்றி கூடினர், வல்லமையோடு சூழ்ந்து கொண்டனர். அவர்கள் ஜெபித்து இருக்கலாம், ஆனால் வசனத்தில் அது சொல்லப்படவில்லை. குறிப்புக்கள்: எமது அனைத்து ஜெபங்களிலும், கூட்டங்களிலும், அனைத்து ஊழியத்தீலும் விட அவர்களுடைய நிழல்கள், உடைகள், அவர்களுடைய அரவணைப்புகளிலும் கூட முதலாவது சீஷர்கள் அவர்களை சுற்றியிருக்கும்போது அநேக வல்லமையை கொண்டிருந்தனர் (அவர்களுடைய பிரசன்னததில்) (அப்போஸ்தலர் 20:7-12)

**பிலிப்பியில் அடிமைப்பெண்: அப்போஸ்தலர் 16:16-40**

குணமாக்கப்பட்ட நபர்: பெயர் தரப்படாத ஒரு பெண்

நிலை: சாத்தானின் பிடி. அவளுக்கு குறி சொல்லும் ஆவி இருந்தது, தனது எஜமானர்களால் குறிசொல்லி ஆதாயம் பண்ணும்படியாக உபயோகிக்கப்பட்டாள்.

ஊழியர்: பவுல்

முறை: பவுல் இயேசுவின் நாமத்தில் அந்த ஆவியை வெளியே வரும்படி கட்டளையிட்டார்

அப்பொழுது அந்த மணித்தியாலத்தில் அது வெளியே வந்தது.

குறிப்புக்கள்: இந்த சம்பவத்தில் பவுல் வருத்தத்தோடும் (சஞ்சலம்) மன இரக்கத்தோடும் ஊழியம் செய்தார். எமது எதிரி எம்மை சுற்றி கட்டுப்பாட்டின் கிரியைகளை செய்து ஒரு-வரை அவன் கட்டுப்பாட்டில் வைப்பதை நாம் பார்க்கும்போது, இந்த வல்லமைகளுக்கு எதிராக வருத்தமும் சஞ்சலமும் எம்மில் இருப்பதோடு மன இரக்கமும் எழுப்பப்பட வேண்டும்

**ஐத்திகு: அப்போஸ்தலர் 20:7-12**

குணமாக்கப்பட்ட நபர்: ஐத்திகு என்று அழைக்கப்பட்ட வாலிப மனிதன்

நிலை: பவுல் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில், மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான்.

ஊழியம் செய்யும் நபர்: பவுல்

முறை: பவுல் இறங்கிப்போய், அவன்மேல் விழுந்து, அவனை அணைத்துக் கொண்டு: கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்று விசுவாசத்திற்கான அறிக்கை ஒன்றை கூறினார். அந்த வாலிபன் உயிருள்ளவனாக எழுந்து வந்தான்.

குறிப்புகள்: இந்த வாலிபன் வசனத்தில் ஒருபோதும் மீண்டும் குறிப்பிடப்படவில்லை. அவனுடைய வாழ்க்கையில் அந்த இரவு என்ன தாக்கத்தை ஏற்படுத்தியது? அவன் மரணத்திலிருந்து எழுப்பப்பட முன்னர் அவன் பொதுவாக மந்தகுணமுள்ளவனாக இருந்தான் அத்தோடு தேவனுடைய காரியத்தில் கவனமில்லாதவனாக இருந்தான், ஆகவே பவுல் செய்தியை பிரசங்கிக்கும்போது ஆழ்ந்த தூக்கத்திற்கு சென்று விட்டான். பிற்பாடு, அவனுக்குள் ஓர் உற்சாகமும் பலமும் பிறக்க இராமுழுவதும் பவுலோடு உற்கார்ந்து பேசினான், ஏன் அடுத்த நாள் வரைக்கும் அவன் பேசிக்கொண்டிருந்தான்.

**பவுலினுடைய பாம்பு கடி: அப்போஸ்தலர் 28:3-6**

குணமாக்கப்பட்ட நபர்: பவுல்

நிலை: நச்சுப்பாம்பின் கடி

ஊழியர்: இல்லை

முறை: இல்லை

குறிப்புக்கள்: பவுல் சாதாரணமாக பாம்மை தீயிற்குள் இட்டார் அத்தோடு அவருக்கு ஒரு சேதமும் வரவில்லை. எமக்கு இதையொத்த தெய்வீக பாதுகாப்ப வேண்டும் அத்தோடு தேவனுடைய காரியங்களை செய்யும்போது குணமாக்குதல் ஊற்றப்படல் வேண்டும்.

**புபிலியுவினுடைய தகப்பன்: அப்போஸ்தலர் 28:8**

குணமாக்கப்பட்ட நபர்: புபிலியுவினுடைய தகப்பன், இவர் தீவிற்கு முதலாளியாயிருந்தார்.

நிலை: ஜுரம் இரத்தபேதி

ஊழியர்: பவுல்

முறை: பவுல் ஜெபிக்க சென்ற கைகளை அவன் மேல் வைக்க அவர் குணமானார்.

குறிப்புக்கள்: மற்ற தீவிலிருந்து வந்த அனைவரும் குணமானார்கள் (அப்போஸ்தலர் 28:9)

## சீஷர்களினால் குணமாக்கப்பட்ட குழுக்கள்

அநேக அற்புதங்களும் அடையாளங்களும்: அப்போஸ்தலர் 2:42-47

இந்த அற்புதங்களின் மற்றும் அடையாளங்களின் விளைவை தேவன் தினமும் எமது சபைகளுக்கு ஏற்படுத்துகின்றார். தேவனுடைய வல்லமையின் வெளிப்படுத்தலை அவர்களுக் கூடாக அடையப்பெற்ற விசுவாசிகளின் வாழ்க்கை முறையை கவனிக்க:

-ஐக்கியம்
-தேவாலயங்களிலும், வீடுகளிலும் தினந்தோறும் ஊழியம் செய்தல்
-ஒலியின் கொள்கைளை தொடருதல்
-தேவனுடைய பயம்
-ஐக்கியம்
-இராப்போஜனம்
-ஜெபங்கள்
-சாதாரண வாழ்க்கைமுறை
-தேவையுள்ளவர்களுக்கான கரிசனை
-நல்ல நற்பெயர்
-துதி
-இருதயத்தினுடைய தனிமை (தனிக்குறிக்கோள் மற்றும் தரிசனம்)

**விசுவாசம் மற்றும் குணமாக்கும் அடையாளங்களுக்கான ஜெபம்: அப்போஸ்தலர் 4:23-31**

குணமாக்கும் ஊழியத்தின் காரணமாக எழும்பும் உபத்திரவத்தின் விளைவிற்கு ஜெபிப்ப-தற்கான ஜெபம் இதுவாகும். சீஷர்கள் அவர்கள் இயேசுவின் நாமத்தினால் குணமாக்குதல், அடையாளங்கள், அற்புதங்களின் வசனத்தின் ஊழியத்தை உறுதிப்படுத்தி வசனத்தை தேவ-னுடைய கரத்தினால் தைரியமாக பேச முடியும் என கேட்டார்கள்.

**எருசலேமின் அநேகர் குணமாகுதல்: அப்போஸ்தலர் 5:12-16**

வியாதியஸ்தவர்களும், அசுத்த ஆவியினால் சஞ்சலப்படுகின்றவர்களும் கைகளை வைக்கும் போதும், சீஷர்களுடைய நிழலிலும் கூட குணமாக்கப்பட்டார்கள்.

**ஸ்தேவான் அநேக அற்புதங்களை நடத்தினார்: அப்போஸ்தலர் 6:8-15**

ஸ்தேவான் விசுவாசம், வல்லமை, மாபெரும் அறிவு, அவருடைய வசனத்தின் ஆவியினால்

நிரப்பப்பட்டார். தேவன் அவனுக்கூடாக அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தார்.

**சமாரியாவில் பிலிப்பு அநேகரை குணப்படுத்தல்: அப்போஸ்தலர் 8:5-8**

அற்புதங்களும் அடையாளங்களும் வெளிப்படுத்தப்பட்டது. அசுத்த ஆவிகளை கொண்டோரும், திமிர்வாதம் மற்றும் வாத நோய்களை கொண்டோர் குணமாக்குதலை பெறும்போது தெளிவாக குறிப்பிடப்பட்டனர். தேவனுடைய வல்லமையின் வெளிப்படுத்தலினாலும், சுவிசேஷத்தினாலும் நகரத்தில் மாபெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. குணமாற்குதல் மற்றும் அற்புதங்களின் பின்பாலும் பேதுரு மற்றும் யோவானால் தொடர் வரும் ஊழியம் அனுமதிக்கப்பட்டது.

**பவுலும், பர்னபாவும் அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்தல்: அப்போஸ்தலர் 14:3**

இந்த மனிதர்கள் தைரியமாக பேசி, அடையாளங்கள் மற்றும் அற்புதங்களோடு வார்த்தையின் சாட்சியை தேவன் கொடுத்தார்.

**பவுல் எபேசுவில் வியாதியை குணமாக்குதல்: அப்போஸ்தலர் 19:11-12**

பவுலால் விசேட அற்புதங்கள் எபேசுவில் செய்யப்பட்டன. அவன் உபயோகித்த உறுமால்களையும் கச்சைகளையும் வியாதியஸ்தர் உபயோகிக்க அனுப்பப்பட்டன, இதன் விளைவாக வியாதிகள் குணமடைந்தன, தீய ஆவிகள் துரத்தப்பட்டன. ஆரம்ப கால சபையில் அற்புதங்கள் சாதாரணமாக இருந்தன என்றும் எழுத்தாளர் இதனை “விசேட” அற்புதங்கள் என வேறுப்படுத்தி காட்டுகின்றார் என்பதையும் குறித்துக்கொள்ளுங்கள்.

**மால்டாவில் வியாதியுடைய மக்கள் குணமாகுதல்: அப்போஸ்தலர் 28:8-9**

புபிலியுவினுடைய தகப்பனுடைய குணமாக்குதலின் பின் குணமாக்குதலுக்கு வேறு அநேகர் வந்தனர். இந்த தீவில் சுவிசேஷத்திற்கு குணமாக்குதல் வல்லமையான கருவியாக இருந்தது.

**ஏனையவை: எபிரெயர் 2:4**

தேவன் அவருடைய வார்த்தையின் அடைளாயங்கள், அற்புதங்கள், வித்தியாசமான அற்புதங்களின் மூலம் சாட்சி கொடுக்கின்றார்.

## அப்போஸ்தலரில் பதிவுசெய்யப்பட்டுள்ள குணமாக்குதல்களிற்கான விளைவுகள்

-மாபெரும் மகிழ்ச்சி: 8:5-25

-பயம்: 2:43

-சபை வளர்ச்சி: 2:42-47; 5:14

-அற்புதங்களும் ஆச்சரியங்களும்: 3:10-11

-மாபெரும் தலைவர்கள் எழும்புதல் (பவுல்): 9:10-19

-சுவிசேஷம்: 4:4; 8:5-25; 9:35-43

-தொடர் வரும் ஊழியம்: 9:35

-தேவனுடைய வசனம் உறுதிப்படுத்தல்: 14:3

-தேவனுக்கு மகிமை: 4:21

-மனிதர்கள் படிப்பறிவற்றவர்களாயிருப்பினும் கூட ஊழியத்தை மதிப்பிடுதல்: 4:13

-சான்றுகளுக்கு எதிராக எந்த வாதங்களும் நிற்க முடியாமை: 4:14-16

-மந்திரவாதிகள் நீக்கப்படுதல்: 8:5-25

-மாபெரும் கூட்டத்திற்கான பெரிய ஊழியம்: 5:16; 28:8-9

-தவறான ஆராதனைகளம், திருத்தப்படவேண்டிய துதிகளும்: 3:12-13; 14:8-18

-தலைவர்களுக்கு வசனத்தை போதிப்பதற்கான வாய்ப்பு: அதிகாரம் 3, 4, 7

-உபத்திரவம்: பவுல், சீலா, ஸ்தேவான், பேதுரு, யோவான் மற்றும் யாக்கோபைப்போல் முழு சபைகளும் உபத்திரவப்பட்டன.

# பிற்சேர்க்கை இ

# பகுப்பாய்வுக்கான அட்டவணை

இயேசுவே மாபெரும் வைத்தியராக இருக்கின்றார், அவரே குணமாக்குதல் மற்றும் ஊழியத்தின் உதாரணமாக இருக்கின்றார். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை குறித்து மேலும் படிப்பதற்கு பிற் சேர்க்கை "ஆ"வில் கொடுக்கப்பட்ட வசனத்தையும் இந்த படிவத்தையும் உபயோகியுங்கள்:

**1. குணமாக்குதல் மற்றும் விடுதலை தேவைப்படும் நபரை விபரிக்க:**

-அவர்களுடைய பெயர் கொடுக்கப்பட்டிருந்தால், அது என்ன?

-அவர்களுடைய வயது என்ன?

-பால் என்ன?

-அவர்களுடைய சமூக நிலை என்ன?

-அவர்களுடைய தேசியம் என்ன?

**2. அவர்களுடைய தேவைகளை விபரிக்க:**

-அது மற்றவர்களால் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

-அது ஒரு மனிதரில் தனக்குதானே எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

**3. ஒரு நபர் இயேசுவிடம் என்ன செய்யும்படியாக கேட்கின்றார்?**

**4. குறிப்பிட்ட நபரின் நிலையை இயேசு சுட்டிக் காட்டினாரா?**

--------- ஆம் ---------- இல்லை. அவ்வாறாயின், அது என்ன?

**5. குணமாக்குதலில் யார் முயற்சி எடுக்க வேண்டும்:**

-ஒரு நபரின் தேவை? அவ்வாறாயின், அவர்கள் என்ன செய்ய வேண்டும்?

-மற்றவர்கள்? அவ்வாறாயின், அவர்கள் என்ன செய்ய வேண்டும்?

-இயேசு? அவ்வாறாயின், அவர் என்ன செய்ய வேண்டும்?

**6. ஊழியத்தின் நேரத்தில்:**

இயேசு என்ன கூறினார்?

-இயேசு என்ன செய்தார்?

-இயேசு வியாதியுடைய மனிதனுக்கு என்ன செய்ய கூறினார்?

-இயேசு மற்றவர்களுக்கு என்னசெய்ய சொன்னார்?

-குணமாக்குதலின் தேவைக்கு இயேசு சொன்ன நோக்கம் என்ன?

-விசுவாசத்தின் ஏதாவது வெளிப்படுத்தலை ஓர் நபர் கொடுக்க வேண்டியது அவசியமா?

-யாராவது விசுவாசத்தை வெளிப்படுத்தினார்களா? அவ்வாறாயின், எவ்வாறு?

**7. குணமாக்குதலின் ஆதாரம்:**

-பௌதீக அடையாளங்கள் என்ன?

-குறித்த நபர் குணமாக்குதலுக்கு எவ்வாறு கிரியை செய்தார்?

-மற்றவர்கள் குணமாக்குதலுக்கு எவ்வாறு கிரியை செய்தனர்?

**8. தொடர் குணமாக்குதல்:**

-குறித்த நபருக்கு இயேசு ஏதாவது செய்ய கூறினாரா? அவ்வாறாயின் என்ன?

-அந்த நபர் என்ன செய்தார்?

**மற்ற பின்னூட்டங்களும் அல்லது குறியீடுகளும்:**

# சுய பரீட்சைக்கான விடைகள்

## அதிகாரம் ஒன்று

1. நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன், நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார். (யாத்திராகமம் 15:26)

2. அனைத்து காரியங்களிலுமான பிரதான பிரிவுகளிலான இயற்கையான அல்லது ஆவிக்குரிய காரியங்கள். 1 கொரிந்தியர் 15:44-49ஐ பார்க்க.

3. சாத்தானுடைய இராஜ்ஜயம், தேவனுடைய இராஜ்ஜியம்.

4. சாத்தான், பிசாசு, உலகம், மாம்சம்.

5. பிதாவாகிய தேவன், இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர், தூதர்கள்.

6. "இராஜா" என்னும் வார்த்தைக்கு அர்த்தமானது மக்களை அல்லது எல்லையை ஆளுபவர்.

7. மக்களை அல்லது எல்லையை ஆளும் இராஜாவின் பிரதேசம் இராஜ்ஜியம் எனப்படும்.

8. காட்புலனாகாத ஆவிக்குரிய யுத்தத்தின் உள்ளக வெளியக இயங்கு சம்பந்தப்படுதலின் ஆய்வே ஆவிக்குரிய போராட்டமாகும். நல்ல தீய சேனைகளின் எதிர்நிலையையும், சாத்தானுடைய உபாயங்களையும், எதிரிகளை மேற்கொள்ளும் ஆவிக்குரிய உபாயங்களை போன்ற பாடங்களை இது உள்ளடங்கும். வாழ்க்கையிலும் ஊழியத்திலும் இந்த உபாயங்களை பிரயோகிப்பதற்கான போராட்டத்தை செயல்பட்டு பங்குபெறுவதை இது உள்ளடங்கும்.

9. இந்த மாபெரும் ஆவிக்குரிய போராட்டத்தின் பின்புலமான காரணமானது சாத்தான் சிறந்த ஆளுகை செய்ய ஆசைப்படுகின்றான். அவன் மனிதர்களின் ஆவி, ஆத்துமா, சரீரங்களுக்கான உள்ளான போராட்டத்தை ஏற்படுத்துகின்றான். அவனுடைய உபாயங்களானது தேவனால் அவருடைய திட்டத்தின்படி, அவருடைய மக்களுக்கு வழிநடத்தப்படுகின்றது.

10. அனைத்து வாழ்க்கையின் யுத்தங்களும் பௌதீக, ஆவிக்குரிய, உணர்வுரீதியான, மன ரீதியான, நிதி ரீதியிலான அல்லது ஆவிக்குரிய நிலையில் மனித குணாதிசயங்களின் வெளியக நிலையை மாத்திரமே வெளிப்படுத்துகின்றது. பௌதீக உலகில் நடைமுறை வாழ்க்கையில் பிரச்சினைகள் காணப்பட்டாலும், இந்த அடிப்படை பௌதீக யுத்தமானது ஆவிக்குரிய உலகில் உள்ளது.

## அதிகாரம் இரண்டு

1. உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள். அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன். (யாத்திராகமம் 23:25)

2. மன ரீதியான குணமாக்குதல்: ஓர் காரியத்திற்கு மேலான மனதின் நிலை, ஆவி நிலை, மாந்திரீகம், சாமானிசம், வேதாகமத்திற்கு சம்பந்தப்படாத குணமாக்குதல் போன்ற பதங்களை உபயோகித்தலை இது குறிக்கும்.

   இயற்கை சக்தியிலான குணமாக்குதல்: தேவனால் இல்லாத இயற்கை சக்தியிலான குணமாக்குதலுக்கு ஆதாரங்கள் உள்ளன, ஆனால் இந்த பதங்களை நாம் படிக்க மாட்டோம். சாத்தானால் இயற்கை சக்திகளிலான கிரியைகளை செய்ய முடியும் (யாத்திராகமம் 7:8-13)

   மருந்தின் குணமாக்குதல்: இந்த மாதிரியான குணமாக்குதலானது மருத்துவர்கள், தாதிகள், மருத்துவமனைகள் மற்றும் மருந்தக்களினால் குணமாக்கப்படுகின்றது. நாம் படிக்கும் விதமாக, முறையான மருத்துவ குணமாக்குதலானது தேவனுடைய வார்த்தையோடு அல்லது தெய்வீக குணமாக்குதலோடு போராடாது, இது அவருடைய நன்மையின் நீடிப்பாகும்.

   இயற்கையான குணமாக்குதல்: தேவனுடைய சாதாரண கிரியையின் செயற்பாட்டினால் இயற்கையான சரீர செயற்பாட்டின் மூலம் நடைபெறும் குணமாக்குதலாகும். மனித சரீரத்தில் நடைபெறும் இயற்கையான சரீர செயற்பாடானது தேவனுடைய இயற்கையையும் அவருடைய மிகப்பெரிதான கரத்தின் கிரியையையும் காட்டுகின்றது. "இயற்கையான குணமாக்குதலானது" இயற்கை முறையில் சரியான உணவருந்தல், இயற்கை விட்டமீன்கள் மற்றும் தாதுப் பொருட்கள், போதுமான ஓய்வு போன்றவற்றை பயன்படுத்துவதை உள்ளடக்குகின்றது.

   விசுவாசம் மூலம் குணப்படுதல்: இந்த பதம் தேவனுடைய குணமாக்குதலுக்கு கூட உபயோ-கிக்கலாம். நாம் அதை உபயோகப்படுத்துவதில்லை, ஏனென்றால் அது ஊழியம் செய்யும் ஒருவரது விசுவாசத்தினால் அல்லது ஊழியம் பெற்ற ஒருவரின் மேல் சார்ந்திருக்கும்.

3. "தெய்வீகம்" என்னும் பதம் தேவனை நோக்கி மையப்படுத்தும், மனிதனுடைய விசுவாச பிரதியுத்தரவு அல்ல. மன நடத்தை மற்றும் இயற்கை சக்திகளிலான குணமாக்குதலிலிருந்து இது கூட வேறுப்படுத்தும். ஒரே உண்மையான இறைவன் தனது கிரியைகளை வெளிப்படுத்தி, அவரது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி, இயேசு கிறிஸ்துவின் பரிகாரத்தினால் அவன் மேலுள்ள தரிசனத்திற்காக கிரியை செய்து, அவனை சரீரம், ஆத்துமா, ஆவியினால் முழுமையாக உருவாக்குதல் ஆகும்.

4. "குணமாக்குதல்" என்பது பௌதீக, உணர்வுபூர்வ, மனரீதியான வியாதிகளுக்கு பிரயோகிக் கப்படும். சாத்தானுடைய காரணத்தனாலான மனரீதியான மற்றும் பௌதீக நிலைகளை விடுதலை குறிக்கும்.

5. இயேசு ஊழியம் அறிவிக்கும்போது ஒருவரையும் ஒருபோதும் குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கான ஊழியம் கட்டளையிட்டதோடு அல்லாமல் அர்ப்பணிக்கவில்லை. இராஜ்

ஜியத்தின் சுவிசேஷம் வேகமாக பரவும்போதான விளைவின் வல்லமையை வெளிப்படுத்தி காட்டுகின்றது.

## அதிகாரம் மூன்று

1. உங்கள என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி, என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய். அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக, அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள். அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம். எல்லாக் காலலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும். (நீதிமொழிகள் 4:23)

2. அவர்கள் பாரம்பரியங்கள், அனுவங்கள், தவறானத மாதிரிகள் மற்றும் சமமற்ற காரணிகளால் புறக்கணிக்கின்றார்கள், மறுக்கின்றார்கள், சிக்கலாக்குகின்றனர், தாமதமாக்குகின்றனர்.

3. அதிகாரம் மூன்றில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

4. அதிகாரம் மூன்றில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

## அதிகாரம் நான்கு

1. மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார். (கலாத்தியர் 3:13)

2. முதல் மனிதனான ஆதாம் மற்றும் ஏவாளில் பாவத்திற்கூடாக உலகத்திற்குள் மரணமும், வியாதியும் வந்தது.

3. சாத்தான்.

4. அதிகாரம் நான்கில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

5. அதிகாரம் நான்கின் கலந்துரையாடலோடு உங்கள் பதிலை ஒப்பீடு செய்க.

6. இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளுவதின் மூலம் மரணம் மற்றும் வியாதியிற்கான சாபத்திலிருந்து நாம் தப்ப முடியும்.

## அதிகாரம் ஐந்து

1. நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பி நடந்தேன். இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன். நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது. அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன். நான் ஒருபோதும் உம்முடைய கட்டளைகளை மறக்கமாட்டேன். அவைகளால் நீர் என்னை உயிர்ப்பித்தீர். (சங்கீதம் 119:67,71,93)

2. இந்த பாடத்தில் கலந்துரையாடப்பட்ட வியாதியிற்கான ஐந்து காரணங்கள்:
   - -ஆவிக்குரிய பிரமாணங்களை துஷ்பிரயோகப்படுத்துதல்
   - -பௌதீக நியாயப்பிரமாணங்களை துஷ்பிரயோகம் செய்தல்
   - -சாத்தானுடைய தாக்குதல்கள்
   - -கர்த்தருடைய சரீரத்தை சரியான நிதானிக்காதிருத்தல்
   - -ஆவியை காப்பாற்றும் மாம்சத்திற்குரிய அழிவு

3. அதிகாரம் ஐந்தில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

4. அதிகாரம் ஐந்தில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

5. அதிகாரம் ஐந்தில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

6. அதிகாரம் ஐந்தில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

7. அதிகாரம் ஐந்தில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

## அதிகாரம் ஆறு

1. என்மேல் இரக்கமாயிரும் கர்த்தாவே, நான் பெலனற்றுப்போனேன். என்னைக் குணமாக்கும் கர்த்தாவே, என் எலும்புகள் நடுங்குகிறது. என் ஆத்துமா மிகவும் வியாகுலப்படுகிறது. கர்த்தாவே, எதுவரைக்கும் இரங்காதிருப்பீர். கர்த்தர் என் விண்ணப்பத்தைக்கேட்டார். கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளுவார்.(சங் 6:2-3,9)

2. ஆவிக்குரிய, பௌதீக, உணர்வுரீதியான, மன, சாத்தானால் ஏற்படும் வியாதி

3. ஆவிக்குரிய வியாதி என்பது பாவமாகும். இதனோடு சம்பந்தம் செய்யாவிட்டால், ஆவிக்குரிய பேசுதலின் முடிவு நிலையே பாவமாகும்.

4. பௌதீக வியாதியானது உடல் சார்ந்த வியாதிகளால் வருகின்றது இந்த பிரச்சினைகளை மருத்துவர்கள் விளங்கிக்கொண்டு அவதானிக்க முடியும். உடல் சார்ந்த வியாதிகளில் சரியான கட்டமைப்பு அல்லது சரீரத்திலுள்ள இழையங்கள் ஏதாவது ஒரு வழியில் பாதிக்கப்படலாம்.

   சரீரத்தின் ஒரு பகுதி அல்லது ஒரு உறுப்பின் கோளாறு காரணத்தின் விளைவாக செயற்பாட்டு வியாதிகள் ஏற்பட்டு பௌதீக வியாதியானது வருகின்றது. ஒரு பகுதியில் ஏற்படும் வியாதி முழு சரீரத்திற்கும் பாதிப்பை ஏற்பாடுத்தக்கூடியவாறு செயற்பாட்டு வியாதிகளானது பல நிலைகளை கொண்டிருக்கும். இருதய நோய், உயர் இரத்த அழுத்தம், நீரழிவு, சமிபாட்டு தொகுதி, ஒவ்வாமை ஆகியவை அதிகம் பொதுவானவையாகும்.

5. கோபம், வெறுப்பு, கசப்பு போன்ற தீமையான உணர்வுகளின் மூலம் உணர்வுரீதியான வியா-

திகள் ஏற்படுகின்றது.

6. சாத்தானுடைய தாக்குதலுக்கு நேரடியாக ஏற்படாத மறதி, மனநிலை பாதிப்பு, வியாதி, விபத்து, செயழிலப்பு, பிறப்பு குறைபாடுகள் மற்றும் உளவியல் நிலைகள் ஆகியவை மோசமான மன ஆரோக்கியத்தால் ஏற்படும் மன வியாதிகளாகும்.

7. சாத்தானால் ஏற்படும் நிலைகளானது சுவாதீனம், அடக்குமுறை, ஆவேசம் என்பவற்றை உள்ளடக்குவதோடு, மன மற்றும் பௌதீக நிலைகளால் ஏற்படுகின்றது.

## அதிகாரம் ஏழு

1. நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே. (எரேமியா 29:11)

2. தேவனுடைய மகிமைக்கான வியாதி, மரணத்திற்கு ஏதுவான வியாதி.

3. அகால மரணமானது, சாவிற்கேற்ற மரணமாகும்.

## அதிகாரம் எட்டு

1. நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.(ஏசாயா 53:5)

2. அதிகாரம் எட்டில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

3. அதிகாரம் எட்டில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

4. இயேசு கிறிஸ்துவினுடைய பரிகாரத்தின் நன்மையானது குணமாக்குதலே என நிரூபிக்கும் வசனங்கள்:

    -ஏசாயா 53:4-5
    -1 பேதுரு 2:24
    -சங்கீதம் 103:2-3
    -மத்தேயு 8:17

5. அதிகாரம் எட்டில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

6. குணமாக்குதல் மற்றும் விடுதலைக்கு அனைத்துவிசுவாசிகளும் உள்ளடக்கப்படவேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் வேதாகம வசனங்கள்:

-மத்தேயு 10:1-42; 16:17-19; 28:16-20
-மாற்கு 6:7-13; 16:14-20
-லூக்கா 9:1-6; 10:1-24; 24:44-53
-அப்போஸ்தலர் 1:1-11

7. -முதலாவது உங்களுடைய கரிசனை தேவனுடைய ராஜ்யமாய் இருந்தால் இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.
-பெறுவதற்காக நீங்கள் கொடுக்கவேண்டியது.
-தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

## அதிகாரம் ஒன்பது

1. அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார். அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. (மத்தேயு 8:16-17)

2. -தேவனுடைய குணாதிசயத்தை காட்டுகின்றது.
-தேவனை மகிமைப்படுத்துகின்றது.
-இயேசுவே மேசியா எனவும் இரட்சகர் எனவும் உறுதிப்படுத்துகின்றது.
-வார்த்தையையும் தூதுவரையும் உறுதிப்படுத்துகின்றது.
-சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள உற்சாகமளிக்கின்றது.
-தேவனுடைய இராஜ்ஜியத்தை நிறுவுகின்றது.
-எதிரிகளின் நியாயத்தீர்ப்பை உறுதிப்படுத்துகின்றது.
-ஆவிக்குரிய தலைவர்களை எழுப்புகின்றது.
-மாபெரும் சந்தோஷத்தின் விளைவு ஏற்படுத்துகின்றது.

## அதிகாரம் பத்து

1. ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்.. (1 கொரிந்தியர் 12:7-9)

2. திரித்துவ தேவனின் ஒரு பகுதியே பரிசுத்த ஆவியானவர் ஆவார்.

3. அதிகாரம் பத்தில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

4. ஆவிக்குரிய வரங்களானது கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு பகுதி என்ற வகையில் விசுவாசிகள் ஊழியம் செய்தவற்கு பரிசுத்த ஆவியானவரினால் தரப்படும் விசேட இயலுமைகளாகும்.

5. ஓர் குணமாக்கும் வரம் பெற்ற விசுவாசி இயற்கையான மாதிரிகளின் உபயோகத்திற்க

அப்பாற்பட்டு தேவனுடைய வல்லமையை அவனுக்கூடாக ஊற்றுவதினூடாக ஆரோக்கிய-த்தை மீள்கட்ட முடியும். எல்லா விசுவாசிகளும் வியாதியிற்கு ஜெபிப்பதற்கு அர்ப்பணிக்க-ப்பட்டுள்ளார்களாயினும், இந்த பகுதியிலான ஊழியத்தில் தேவனால் விசேடமாகவும் தொட-ர்ந்தும் குணமாக்கும் வரம்பெற்ற ஊழியர் ஒருவரே உபயோகிக்கப்படுவார்.

6. -போதித்தலும் புத்தி கூறுதலும்.
-தீர்க்கதரிசனம், அந்நியபாஷை, மொழிபெயர்ப்பு.
-ஆவிகளை பகுத்துணர்தல்.
-விசுவாசத்தின் வரம்.
-ஞானத்தின் வசனம்.
-ஞானத்தின் அறிவு.
-அற்புதங்களின் வரம்.

7. -போதகர்களும் மேய்ப்பர்களும் (ஆவிக்குரிய தலைவர்கள்): எசேக்கியேல் 34
-மூப்பர்கள் அல்லது கீழ் அதிகாரிகள்: யாக்கோபு 5:14
-சாதாரண விசுவாசிகள்: லூக்கா 16:15-18; யாக்கோபு 5:16
-குணமாக்கும் விசேட வரங்களை கொண்டவர்கள்: 1 கொரிந்தியர் 12:9
-முழு சபையும் (குணமாக்கும் மையமாக இருத்தல் வேண்டும்: லூக்கா 14:16-24

## அதிகாரம் பதினொன்று

1. என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது. உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்ப-ியும். என் வழிகளை நான் உமக்கு விவரித்துக் காட்டினபோது எனக்குச் செவி கொடுத்-தீர். உமது பிரமாணங்களை எனக்குப் போதியும். உமது கட்டளைகளின் வழியை எனக்கு உணர்த்தியருளும். அப்பொழுது உமது அதிசயங்களைத் தியானிப்பேன். சஞ்சலத்தால் என் ஆத்துமா கரைந்துபோகிறது. உமது வசனத்தின்படி என்னை எடுத்து நிறுத்தும். (சங்கீதம் 119:25-28)

2. இந்த அதிகாரத்திலுள்ள ஒவ்வொரு பாரம்பரியங்களிலும் உள்ள கலந்துரையாடலை மீள்பா-ீட்சிக்க.

## அதிகாரம் பதின்ரெண்டு

1. கர்த்தர் எகிப்தியரை வாதையினால் அடிப்பார். அடித்துக் குணமாக்குவார். (ஏசாயா 19:22)

2. அது ஓர் சாத்தானுடைய தூதன் என வேதாகமம் கூறுகின்றது.

3. பவுலின் மாம்சத்திலிருந்த முள்ளானது, சாத்தான் என்னும் தூதனிடமிருந்தென்று அவனை துன்பப்படுத்துவதற்காக கொடுக்கப்பட்டது.

4. இது மூன்று பிரதான காரணங்களுக்காக அனுமதிக்கப்பட்டது:
-அது பாவத்தை தவிர்க்கின்றது.

-அது தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுகின்றது.
-அது பலத்தை உண்டாக்குகின்றது.

5. அது அவனை துன்பப்படுத்தியது.

6. அதிகாரம் பன்னிரெண்டில் உள்ள பல்வேறு வெளிப்படுத்தல்களின் பட்டியல்களை பார்க்க.

7. பவுல் தன்னுடைய “பலவீனத்தை” பேசும்போது அதன் அர்த்தமானது “பலத்தை வேண்டுதல், பலவீனம், அவருடைய சொந்த இயற்கையான இயலுமைகளுக்கூடாக உருவாக்கக்கூடிய இயலாமைகளாகும். இந்த பலவீனத்திற்கூடாக, தேவனுடைய வல்லமையும், பலமும் வெளி-ப்படுகின்றது.

## அதிகாரம் பதின்மூன்று

1. மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள். வெளிப்படுத்-தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படி-க்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள். (உபாகமம் 29:29)

2. ஸ்திரமின்மை என்பது வேறுப்பட்ட நிலைகளிற்கான காரணிகளை ஏற்படுத்தல் அல்லது வி-த்தியாசமான விளைவுகளை ஏற்படுத்தல்.

3. அதிகாரம் பதின்மூன்றில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

## அதிகாரம் பதினான்கு

1. போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள். வியா-தியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தே-தாரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள். இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள். (மத்தேயு 10:7-8)

2. அதிகாரம் பதினான்கில் உள்ள கலந்துரையாடலை உங்கள் பதிலை ஒப்பிடுக.

3. அதிகாரம் பதினான்கில் உள்ள கலந்துரையாடலை உங்கள் பதிலை ஒப்பிடுக.

## அதிகாரம் பதினைந்து

1. நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.

ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை

அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (எபிரெயர் 4:15-16)

2. அதிகாரம் பதினைந்தில் உள்ள கலந்துரையாடலை உங்கள் பதிலை ஒப்பிடுக.

3. அதிகாரம் பதினைந்தில் உள்ள கலந்துரையாடலை உங்கள் பதிலை ஒப்பிடுக.

## அதிகாரம் பதினாறு:

1. ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.

   மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகைள நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.

   ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். (2 கொரிந்தியர் 4:16-18)

2. அதிகாரம் பதினாறில் உள்ள கலந்துரையாடலை உங்கள் பதிலை ஒப்பிடுக.

## அதிகாரம் பதினேழு

1. அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து... (லூக்கா 9:1)

2. பலவீனத்தின் ஆவிகள், ஏமாற்றும் ஆவிகள், அசுத்த ஆவிகள்.

3. ஆவிகளை பகுத்தறியும் வரமானது மற்றவர்களில் செயற்படும் ஆவிகளை அறிய விசுவாசிகளுக்கு இயலுமை அளிக்கின்றது. இது அவனை கண்டுபிடித்து, எடைபோட்டு, தீய ஆவிகளை இனம்காண அனுமதிக்கின்றது. இது ஏமாற்றும் அல்லது பொய்யின் ஆவிகளின் வஞ்சகத்தை தவிர்க்கின்றது. தீய உபாயங்களையும், சாத்தானிய வல்லமைகளின் குறிக்கோள்களையும் இந்த வரங்களில் ஒன்று அறிந்து விடும்.

4. சாத்தானுடைய ஒடுக்கப்படுதல் என்பது சாத்தானிய வல்லமைகளால் கட்டுண்டிருத்தல் அல்லது வெளியகத்திலிருந்து கட்டப்பட்டிருத்தல்.

5. அதிகாரம் பதினேழில் கொடுக்கப்பட்ட பட்டியலோடு உங்கள் பட்டியலை ஒப்பிடுக.

6. சாத்தானின் அலைக்கழிப்பு என்பது சாத்தானின் விருப்பங்களால் மற்றும் அமானுஷ்ய காரியங்களால் கட்டுண்டிருத்தல்.

7. அதிகாரம் பதினேழில் உள்ள கலந்துரையாடலை உங்கள் பதிலை ஒப்பிடுக.

8. சாத்தானின் உடைமை என்பது ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட ஆவிகளோ மனித சா-ரீரத்தில் வாசம் செய்து, குறிப்பிட்ட நபரை முழு கட்டுப்பாட்டில் எடுத்தலாகும்.

9. அதிகாரம் பதினேழில் உள்ள கலந்துரையாடலை உங்கள் பதிலை ஒப்பிடுக.

10. அதிகாரம் பதினேழில் உள்ள கலந்துரையாடலை உங்கள் பதிலை ஒப்பிடுக.

## அதிகாரம் பதினெட்டு

1. அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். (மத்தேயு 10:1)

2. எல்லா மறுபடியும் பிறந்த விசுவாசிகள்.

3. அதிகாரம் பதினெட்டில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

4. அதிகாரம் பதினெட்டில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

5. அதிகாரம் பதினெட்டில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

## அதிகாரம் பத்தொன்பது

1. வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரி-த்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள். இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள். (மத்தேயு 10:8)

2. அதிகாரம் பத்தொன்பதில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

3. அதிகாரம் பத்தொன்பதில் உள்ள கலந்துரையாடலை பார்க்க.

## அதிகாரம் இருபது

1. கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு. அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு-அருள்செய்வார். உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். (சங்கீதம் 37:4-5)

2. அதிகாரம் இருபதின் கலந்துரையாடலோடு உங்கள் பதிலை ஒப்பீடு செய்க.